# ஸ்ரீராம்சந்த்ரஜீயின் சுயசரிதம்

## பாகம் – 2, தொகுப்பு–2

## பொது அறிவிப்பு

(அக்டோபர் 1944 முதல் மார்ச் 1945 வரை)

உருதுமொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து தொகுத்தவர்

**S.P. ஸ்ரீவாஸ்தவா**

## பதிப்பாளர் குறிப்பு

வணக்கத்திற்குரிய ஸ்ரீபாபுஜி அவர்களின் குடும்பத்தாரின் சார்பில் ஸ்ரீராம்சந்த்ரஜியின் சுயசரிதம் பாகம் – 2ல் 'பொது அறிவிப்பு' எனப்படும் இந்த இரண்டாவது தொகுதியைப் பதிப்பித்து வெளியிடுவதில் பெருமிதமடைகிறேன். இதன் முதல் தொகுதியாகிய தகுதியாக்கம் / உருவாக்கம் வெளியிடப்பட்டு ஒரு ஆண்டிற்குள் இது வெளியிடப்பட்டிருக்கிறது. இதன் மூன்றாவது தொகுதியாகிய 'பங்களிப்பு' என்பதும் விரைவில் அச்சிடப்படும்.

இத்தொடர் வெளியீடுகளுக்கு அவர்கள் அளித்து வரும் உற்சாகமான வரவேற்புக்காக, சகஜ மார்க்க முறைப்படி ஆன்மீகப்பயிற்சி செய்து கொண்டிருப்பவர்களுக்கும், வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பக்தர்களுக்கும் நாங்கள் நன்றியுடையவர்களாக இருக்கிறோம். ஆன்மீக வரலாற்றில் முறைப்படி அமைந்த ஒரு ஒழுங்கமைப்பாக இது தனிச்சிறப்புடைய ஒரு அடையாளமாகும்.

இந்த இரண்டாவது தொகுதியின் சிறப்புத் தன்மை என்னவெனில், காலங்காலமாக நடைபெற்று வந்த ஆன்மீக ஆராய்ச்சியின் வழிமுறையின்படி ஆதிகுருவாகிய வணக்கத்திற்குரிய லாலாஜிசாகேப் அவர்களும், வணக்கத்திற்குரிய சுவாமி விவேகானந்தா அவர்களும் நமது மாஸ்டருக்கு அளித்த தனிக்கவனம் மிகுந்த பயிற்சியைப் பற்றிய வியப்புக்குரிய விவரங்களை இது உள்ளடக்கியிருக்கிறது என்பதேயாகும்.

இதுவே வணக்கத்திற்குரிய ஸ்ரீபாபுஜியை அவரது மாஸ்டரின் ஆன்மீகப் பிரதிநிதியாகவும், ஸ்ரீலாலாஜியை அடுத்து அப்பதவிக்கு உரியவராகவும், அறிவிப்பதற்கு வழிவகுத்தது. ஆன்மீக விஞ்ஞானம் மற்றும் பயிற்சியின் ஒழுங்கமைப்பின் வரலாற்றில் பிரதிநிதித்துவம் பற்றிய சர்ச்சைகள் மற்றும் மாறுபட்ட கருத்துக்களுக்குத் தீர்வு காண்பது ஆகியவற்றில் உண்மையாகவே இது ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கியுள்ளது.

வணக்கத்திற்குரிய மாஸ்டரினால் அவரது ஆயுட்காலத்தில் ஒப்படைக்கப்பட்ட பணியை நிறைவேற்றுவதில் முனைப்புடன் செயல்பட்ட பேராசிரியர் டாக்டர் S.P.ஸ்ரீவாஸ்தவா அவர்களுக்கும், இவ்விஷயத்தில் அவருக்கு உதவியாக இருந்த அனைவருக்கும் வெளிப்படுத்திச் சொல்ல இயலாத அளவுக்கு எங்கள் இதயம் நன்றியால் நிறைந்துள்ளது.

இத்தொகுப்பை அச்சிட்டு வெளியிடுவதில் செயல்திறன் மிகுந்த மிக உண்மையான முயற்சிக்காக குல்பர்காவைச் சேர்ந்த டாக்டர் S.B.ஷ்யாம்ராவ் அவர்களுக்கு எங்கள் நன்றிகளும் பாராட்டும் உரியவையாகின்றன.

கிருஷ்ண ஜன்மாஷ்டமி<br>
செப்டம்பர் 3, 1988

பிரகாஷ் சந்த்ர சாக்ஸேனா,<br>
வழக்குரைஞர்,<br>
ராய் பகதூர் பில்டிங்க்ஸ்,<br>
ஸ்ரீராம்சந்த்ர மிஷன்,<br>
ஷாஜஹான்பூர், (உ.பி.)

# தொகுப்பாசிரியரின் குறிப்பு

இத்தொகுப்புக்களை / விரிவான கருத்துக் குறிப்புக்களைப் படிக்கின்ற வாசகர்கள், இதன் முதல் தொகுப்பு ஸ்ரீபாபுஜிக்கும் அவரது குருநாதர் லாலாஜிசாகப்புக்கும் இடையே நிகழ்ந்த உள்முக, வெளிமுகத் தகவல் தொடர்புகளை உள்ளடக்கியதாக இருப்பதைக் காண்பார்கள். இந்த இரண்டாவது தொகுப்பு மிகப் பழங்காலத்திலிருந்து தொடர்ந்து வருகின்ற ஆன்மீக விஞ்ஞானத்தின் தொன்மையான நீண்ட வரலாற்றின் மேலான ஆதி காரணகர்த்தாக்கள் மற்றும் அவ்வப்போது அந்த வரலாற்றின் போக்கை நிர்ணயித்தவர்கள் ஆகிய போற்றத்தகுந்த பெரியோர்களுடன் பாபுஜி மேற்கொண்ட பெருவெள்ளம் போன்ற தகவல் தொடர்புகளைக் கொண்டுள்ளது. இதன் ஆசிரியராகிய பாபுஜி அம்மாதிரி மேன்மைமிக்க மகான்களோடு அவர் கொண்டிருந்த தொடர்பின் முக்கியத்துவத்தைப் பெரிதாகக் குறிப்பிடாமல், தன்னடக்கத்துடன் தான் செய்ய வேண்டிய பணிக்காக தொடர்ந்து அவர் பெற்ற பயிற்சியின் அம்சங்கள் பற்றியே அதிகமாக வலியுறுத்திச் சொல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்கும் மேலாக, அது பயிற்சியோ அவரது பணிக்கான பரிசோ எதுவாயினும், அது எவ்வளவு தான் மிக மேலான தெய்வாம்சத்திலிருந்து வந்திருந்தாலும், தன் குருவாகிய லாலாஜி ஒருவரிடம் மட்டுமே ஒருமுகப்பட்ட ஆழ்ந்த அன்பு உடையவராக இருந்தார் என்பது ஒரு ஆன்மீக சாதகர் தன் சொந்த வழிகாட்டுதலுக்காக ஏற்கத் தகுந்த குறிக்கோளாக இருப்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இம்மாதிரி ஒரே ஒருவர் மீது மட்டுமே பற்றுறுதியுடன் இருப்பது பொதுவாக ஆணவத்தையும், பண்பின்மையையும் உருவாக்கி, லட்சியத்தை நோக்கிய ஒருவரின் பாதையில் அகங்காரம் சார்ந்த தடைகளை உண்டாக்கும் அளவுக்கு வளர்ந்துவிடும். ஆனால் பாபுஜி விஷயத்தில் அவர் செய்த பயிற்சி சாதாரண மனிதப் பண்புகளுடன் ஒரு பணிபுமிக்க சாதகரை உருவாக்கி மிக உயர்ந்த தகுதி பெறச் செய்திருப்பது சிறப்பாக மதிக்கப்பட வேண்டியதாகும். எனவே, இந்த விதமாக ஒருவரை மட்டுமே

சார்ந்திருப்பது நாம் ஏற்றுக்கொண்டு பின்பற்ற வேண்டிய ஒரே வழிமுறையாக விளங்குகிறது. ஒரு விதத்தில் அனைத்து விஷயங்களும் ஒருவருக்கு உள்ளிருந்தேதான் வருகின்றன. ஆனால் அது மேலான உயர் நிலையிலுள்ள சக்திகளிடமிருந்து வருகின்ற ஒரு பரிசாக (வரமாக) அறியப்படுகிறது. இங்கே தான் விசேஷ மகாபுருஷரின் மகத்துவம் இருக்கின்றது. தனது உள்முக ஆற்றல்கள், உள்முகமாக செயல் தூண்டுதல்கள் ஆகியவை பற்றி பாபுஜிக்கு ஒருபோதும் சிறிதளவு கூட சந்தேகம் இருந்ததில்லை. அப்படியிருந்தும் அவருக்கு அனுபவத்தில் வருகின்றவை அனைத்தும் அவருடைய சொந்த, வினோதமான, தற்பெருமை நாடுகின்ற கற்பனைகளில் உருவாக்கப்பட்டவையோ என்று தகுதியுடைய மனிதர்களால் அவர் பரிசோதிக்கப்பட்டதைப் பற்றி அவர் எப்போதும் சொல்வார். இப்படி மிகவும் பணிவுடைய திறந்த மனப்பாங்கும், தனது சங்கல்ப சக்தியில் விடாப்பிடியான உறுதியும் கலந்த ஒரு இணைப்பாக, தன்னைப் பற்றிய எந்தத் தற்பெருமையும் கொள்ளாத, மிக உச்ச நிலையில் திகழும் மாமனிதராக அவர் இருந்தார். எந்த ஒரு துறையாக இருந்தாலும், அதில் தனிப்பெரும் சிறப்பு பெற்ற புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு, அவர்களின் உண்மையான பங்களிப்புக்கு இந்தக் குணம் தான் தேவைப்படுகிறது. மற்ற விஷயங்களைவிட, மனிதனின் எல்லையற்ற மகத்துவம் வெளிப்படுவதற்கான வழியாகிய ஆன்மீகத்தில் அல்லது பிரம்ம வித்யா எனப்படும் மிக உயர்ந்த விஞ்ஞான ஒழுங்கமைப்பில் இது மிகவும் தேவை. ஒரு மலரின் மணம் போன்ற அவ்வளவு நுட்பமான சூட்சுமத் தன்மையும், இடிவிழுந்தால் கூட பாதிக்கப்படாத பாறாங்கல் போன்ற உறுதியும் கொண்ட ஒரு தன்மை, ஸ்ரீராம்சந்த்ரஜியின் சுயசரிதம் - 2ம் பாகமாகிய இப்புத்தகத்தில் ஏராளமாக வெளிப்படுகிறது. அது இங்கே இனி பின்தொடர்கிறது.

குறிப்பு :- இந்தப் புத்தகத்தின் ஆங்கில மொழியாக்கத்தில் எப்படி இருக்கிறதோ அப்படியே தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இதைப் படிக்கிறவர்களுக்கு சில

இடங்களில் ‘‘இந்தக் குறிப்பை லாலாஜி யாரிடம் கூறினார்?’’ என்ற கேள்வி எழலாம். ஏனெனில் லாலாஜி நேரடியாக பாபுஜியிடம் ஏதாவது சொல்லும்போதே திடீரென்று வேறு யாரிடமோ அவர் பாபுஜியை பற்றிச் சொல்கின்ற வாக்கியங்கள் இடம் பெறுகின்றன. அதற்கான விளக்கம் தரப்படவில்லை. ஒரு சில குறிப்புக்களை, அவர் M1 - என்பவரிடம் சொல்வதாக ஊகிக்க இடமிருக்கிறது. வாசகர்கள் இதை கவனத்தில் கொள்ளவும்.

## நன்றி அறிவிப்பு

ஸ்ரீராம்சந்த்ரஜியின் சுயசரிதம் பாகம் – 2 இல் முதல் தொகுதியாகிய ‘தயாரிப்பு’ என்ற புத்தகத்தைப் போலவே, இந்த ‘பொது அறிவிப்பு’ என்ற இரண்டாவது தொகுதிக்காகவும் நான் உதவி பெற்றுக்கொண்ட எத்தனையோ மனிதர்களுக்கு நான் மிகுந்த நன்றியுடையவவாக இருக்கிறேன். அவர்கள் அனைவரின் பெயர்களையும் இங்கே குறிப்பிடுவது சாத்தியமில்லை. ஸ்வீடன் நாட்டின் தலைநகராகிய ஆம்ஸ்டர்டாமைச் சார்ந்த சகோதரிகள் ஹெடியான் போஷ் மற்றும் மேடா வான்டென் ப்ரோக் ஆகிய இருவரும் பல விதங்களில் மதிப்பிட்டுக் கூற இயலாத அளவுக்கு இதற்கு உதவி செய்தார்கள். இவர்கள் மட்டுமன்றி ரோஹ்டக்கைச் சார்ந்த டாக்டர் ப்ரேம் ஸாகர் மற்றும் அவரது மனைவி ஸ்ரீமதி ரஜனி ஷர்மா ஆகிய இருவருடைய அனைத்து விதமான சொந்த உதவி மற்றும் அறிவுபூர்வமான உதவி மற்றும் ஆதரவுக்காகவும் அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் பெருமளவுக்கு நம்மில் ஒருவராகவே இருந்தார்கள். சம்பிரதாயமான நன்றி கூறுதலும் பாராட்டும் சற்றும் தேவையில்லாதது மற்றும் அவர்களுக்கு தர்மசங்கடத்தை, கூச்சத்தை உண்டாக்குவதாக இருக்கும். மதுராவில் இருக்கும் சில குறிப்பிட்ட இடங்களைக் காண்பிக்கும் வரைபடங்களைத் தயாரிப்பதில், உருது மொழியில் இருக்கும் இதன் மூல கையெழுத்துப் பிரதியில் எப்படிக் கூறப்பட்டுள்ளதோ அதன்படியே அதை தயாரித்துக் கொடுத்ததில் அவருடைய அன்பு நிறைந்த உதவிக்காக, ஆம்ஸ்டர்டாம் நகரைச் சார்ந்த நண்பர் ஜெர்ட் டி க்ராஃப் அவர்களுக்கு மிகவும் நன்றி. இங்கே பெயர் குறிப்பிட முடியாமல் போன மற்ற அனைவருக்கும் உயர் மதிப்புடைய மாஸ்டரின் எந்நாளும் நிலைத்திருக்கும் அருள் கிடைப்பதாக.

கிருஷ்ண ஜன்மாஷ்டமி.

3/9/1988 S.P. ஸ்ரீவாஸ்தவா

## பொது அறிவிப்பு

## 1944 அக்டோபர் முதல் 1945 மார்ச் வரை

பூஜ்யஶ்ரீ ராம்சந்த்ரஜியின் நாட்குறிப்பு. (உருது மொழியில் உள்ள கையெழுத்துப் பிரதியின் மொழியாக்கம்.

ஶ்ரீராம்சந்த்ராவின் சுயசரிதம் - பாகம் 2, தொகுதி 1க்குப் பின் பாகம் 2, தொகுதி 2ன் தொடர்ச்சி.....

...............

**7-10-1944 காலை 10.15 மணி**

வணக்கத்திற்குரிய மாஸ்டர் (லாலாஜி) கூறியது :- "R2 - சரீர மண்டலத்தின் (சுக்ரா அல்லது பிண்டப் பிரதேசத்தின்) அனைத்துப் புள்ளிகளும் திறக்கப்பட்டுள்ளன என்பதற்காக R2 - வுக்கு என் பாராட்டுகளைத் தெரிவிக்கவும். M1 - உடைய கடவுள் பற்று (தெய்வீகபக்தி) மண்டலம் விழிப்புநிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. H3 - அவரது விதியின்படி போகவிடப்பட்டிருக்கிறார். ஆவரை இனிமேலும் உந்தித் தூண்டிவிடுவது அவசியமில்லை. R2 - அவருக்கு என்ன சொன்னாரோ, அதுவே போதுமானது. R2 - விரும்பினால் H3 - யிடம் இன்னும் ஒருமுறை பேசிப்பார்க்கலாம். அவரை அதிகம் தூண்டிக்கொண்டு இருக்க வேண்டியதில்லை. C1 - பற்றிய விஷயத்தில், M1 - இடம் நான் ஒப்படைத்த கடமையை இடையூறு இல்லாமல் அவர் தொடர்ந்து செய்ய வேண்டும். L1 - பற்றி அவர் அதிகம் தொல்லைப்பட வேண்டியதில்லை. M1 - சம்மந்தமாக ஒரு ஏற்பாட்டினை நான் யோசித்து வைத்திருக்கிறேன். வருடாந்திர விழா முடிந்து எனக்கு நேரம் கிடைக்கட்டும். பிறகு M1 - க்காகவும் நான் களத்தை தயார் செய்வேன். நான் என்ன செய்வதாக நினைத்திருக்கிறேனோ அதைத் தள்ளிப்போட முடியாது என்பதை அவருடைய மனத்திருப்திக்காகச் சொல்கிறேன். இப்போதைக்கு மிகவும் முதன்மையாக (உச்சத்தில்) இருக்கிற எதிராளி மட்டுமே நசுக்கி எறியப்பட்டிருக்கிறார்.

8-10-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் வெளிப்படுத்திக் கூறியது :- S5 - இன்று ப்ரம்மாண்ட (குப்ரா, KUBRA) மண்டலத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறார்.

9-10-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "எனது பிரியமான ராம்சந்த்ராவின் பயிற்சியின் வழியில், இன்று சற்று முன்பு R2 - பிரம்மாண்ட மண்டலத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறார். அவரது (ராம்சந்த்ராவின்) வழிமுறை மிகவும் புதியது. அதை நான் மிகவும் விரும்புகிறேன். இந்த வழிமுறையை பொதுவாக அனைவருக்கும் செயல்படுத்தலாம். ஆனால் ஒருவர் நம்பத்தகுந்தவர் அல்ல, என்று கருதப்பட்டால் அவர் விஷயத்தில் இதைப் பயன்படுத்தலாகாது. அந்தரங்கமான குறிப்புப் புத்தகத்தில் எழுதி வைக்கப்பட்டிருக்கும் இந்தக் கண்டுபிடிப்பு சாதாரணமான ஒன்று அல்ல; சாதாரண அறிவுக்கு அது புலப்படவும் முடியாது. தாங்கள் கண்டறிந்தவைபற்றிப் பெருமை சொல்லிக் கொள்கிறவர்கள் யாராயினும் அவருடைய மேலான திறமைகள், தகுதிகள் பற்றி அறிந்து கொள்வதற்கு, அன்பிற்குரிய ராம்சந்த்ராவின் கண்டுபிடிப்புகளை சற்றே பார்க்கட்டும். இப்படி நான் சொல்வதால் அந்தக் கண்டுபிடிப்புகள் பற்றி அவர்களுக்குச் செய்துகாட்டி விளக்க வேண்டும் என்று பொருளாகாது. இது என் பெரும் மகிழ்ச்சியின் ஒரு வெளிப்பாடுமட்டுமேயாகும். இப்பயிற்சி முறையில் இம்மாதிரி புதுமையான கண்டுபிடிப்புகள் நிகழும் என்று நான் முன்பே எங்கேயோ தெரிவித்திருக்கிறேன்.''

இறைதூதர் ஹஸ்ரத் முகம்மது (நபிகள் நாயகம்) பாபுஜியிடம் கூறியது :- "மனிதர்களை நேரான பாதையில் கொண்டு வருவதற்காக ஆயிரக்கணக்கான உருவச்சிலைகளை நான் உடைக்கச் செய்தேன். புனித குரானில் இருந்து சில குறிப்புகளை நான் கொடுத்திருக்கிறேன். அவற்றுடன் உங்களை ஒப்பிட்டுப் பார்த்து உங்கள் சிறப்புத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளட்டும். என்னுடைய தொடர்பினால் (நிஸ்பத் / NISBAT)

உங்களை நான் முழுமையாக நிரப்பியிருக்கிறேன். இது உங்கள் மாஸ்டரின் மீது உள்ள உங்கள் அன்பின் விளைவாகும். இதற்கு மேல் உங்கள் மாஸ்டர் இதைத் தொடர்வார்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் மூலமாக இறைதூதர் நபி கூறியது :- "இயற்கையின் சித்தம் மற்றும் திட்டத்தின்படி நீங்கள் வேலை செய்ய வேண்டும். உங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள புதிய செயல் நுட்பத்தின்படி வேலையைத் துவக்குங்கள். இந்தக் கடமையில் நானும் கூட உங்களோடு இணைக்கப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு எண்ணத்தின் மற்றும் புனிதமான எழுத்தின் பிரதிபலிப்பும் வெற்றிடத்தில் நிலை பெற்றிருக்கிறது. நான் (இறைதூதர் முகம்மது நபி அல்லது மாஸ்டர்) இந்த (எண்ணங்கள் அல்லது எழுத்துக்களில்) சிலவற்றை யாருக்காவது வெளிப்படுத்த வேண்டியிருக்கும் போது, அந்த மனிதரின் இதயத்தில் அந்த எண்ணத்துகள்களை ஊடுருவிச் செலுத்துகிறேன். அந்த மனிதரின் இதயத்திலுள்ள அந்த துகள்களுக்கு இசைந்தவாறு அவரது எண்ணத்துகள்கள் எண்ணங்களாக மாற்றப்படுகின்றன. அந்த எண்ணங்கள் அம்மனிதரின் தாய் மொழியில் மொழியாக்கம் செய்யப்படுகின்றன அல்லது அவர் பழக்கப்பட்டுள்ள அறிவுத்துறைக்கு இடம் மாறுகின்றன.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- உன் உடலென்ற திரைமறைவின் பின்னால், நீ முழுமையாக விடுதலை அளிக்கப்பட்ட, இந்தச் சிக்கல்களிலிருந்து பாதுகாக்கப்படுவது பற்றி சிந்திக்க வேண்டியிருக்கிறது, இதில் ஒரு முன்னெச்சரிக்கை தேவைப்படுகிறது. அதாவது இந்த நிலையிலிருந்து நீ யாருக்கும் ஒருபோதும் பிராணாஹுதி அளிக்கக்கூடாது. இது இறைதூதர் நிலையாகும்.

இறைதூதர் முகம்மதுநபி கூறியது :- "உங்கள் குருவைப்போல் நானும்கூட உங்களுடன் நேரடியாக உள்முகத் தொடர்பு கொண்டிருப்பேன். அந்தக் குறிப்பிட்ட மண்டலத்தின் கவுஸ் (பர்ஷத் GHOUS) ஞானி அங்கு செய்யப்பட்டுள்ள வேலையின் விளைவை கவனித்து அதைப் பற்றி விசாரித்தார்.

அதற்கான பதில் :- “இது இயற்கையின் ஒரு ரகசியம். அதைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.”

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “N1 - ஐவிட எனக்குப் பெரிய எதிரி யாருமில்லை. உன் வேலையின் விளைவினுடைய தெளிவான பயன் வெளிப்படத் துவங்கியிருக்கிறது. (நேரம் பிற்பகல் 1.50 மணி) R2 - வுக்கு தினந்தோறும் பிராணாஹூதி அளிக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான முன்னெச்சரிக்கைகளை அவர் எடுத்துக்கொள்ள வேண்டும். அது உணவு சம்பந்தமான விஷயம். மேலும் இந்த விசேஷ காலகட்டத்தில் அவர் யாருக்கும் பிராணாஹூதி அளிக்கக் கூடாது. சிந்தனை வழியில் (தியான முறையில்) அந்தப் புள்ளிகளை அவர் கடந்து செல்லுமாறு செய்யப்பட வேண்டும். அது குதுப் (துருவா அல்லது துருவ நட்சத்திரம் / QUTUB) என்ற பதவிக்கு அவசியமாகிறது. அவர் (R2) M1 - க்கு கீழ்ப்பட்டவராக வேலை செய்ய வேண்டும். இனி நான் கொடுக்கப்போகும் கட்டளைகளை அல்லது குறிப்புக்களை அவர் பின் பற்றி நடக்க வேண்டும். காரணமற்ற பிடிவாதம் மற்றும் கண்டிப்பு தன்னிடம் வளர அனுமதிக்க மாட்டேன் என்ற உறுதிமொழியை அவர் எடுத்துக் கொள்ள வேண்டும். மற்றும் அவருக்கு என்ன கட்டளை இடப்படுகிறதோ அதை (அது பற்றிய எந்த எண்ணமோ, அல்லது அதற்கு எதிரான, முரண்பாடான விருப்பமோ இல்லாமல்) அதன்படியே செய்ய வேண்டும். தேவைக்கு ஏற்றதான விதத்தில் அழிவு வேலையை அவரிடமும் கூட நீ ஒப்படைக்கலாம். அதற்கான உள் நிலையை அவரிடம் உருவாக்குவதற்கு முன் அது சம்மந்தமாக ஒரு வாக்குறுதியும் பெற வேண்டியிருக்கும். கட்டளைகளுக்கு எதிராக அவர் ஏதாவது செய்தால், அவருக்கு அளிக்கப்பட்ட சக்தியானது, எங்கிருந்து வந்ததோ அந்த இடத்திற்கே இழுத்துக் கொள்ளப்படும் என்ற ஒரு நிபந்தனையும் அதில் இருக்க வேண்டும். ஒரு வார காலத்திற்குள் பிரம்மாண்ட மண்டலத்துக்கு மேலாக அவரை (R2) ஐ முன்னேறச் செய்யவும். அதற்கு மேல் செய்ய வேண்டியதை நான் பிறகு சொல்கிறேன். இந்தக் காலகட்டத்தில் R2 - தனது உள்நிலையை மிகவும்

நுட்பமாகக் கவனித்தறிவதை பயிற்சி செய்யவேண்டும். இது - இப்படிக் கவனித்து அறிந்து கொள்வது - மற்றவர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் அவருக்கு உதவுவதற்கே ஆகும். அந்தக் குறிப்பிட்ட (பூஜாரிகளின்) ஜாதியிலிருந்து இந்த நிலையை அடையும் முதல் மனிதர் அவர் தான். இன்று அவரை (குதுப், QUTUB) துருவா என்ற பதவியில் நிலை பெறச் செய்ய நான் உத்தரவு அளித்திருக்கிறேன். அந்த ஜாதியிலிருந்து இதுவரையில் வேறு யாரும் இந்த குதுப் (QUTUB) நிலையை எய்தவில்லை. அவ்வகையில் இந்த ஒரு உதாரணம் தான் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இதன் காரணங்கள் மிகத் தெளிவானவை. R2 - வின் மனதிற்கு அமைதி தருவதற்காக நான் ஒரு விஷயம் சொல்கிறேன். அவர் உறங்கச் செல்லும் போது, அவருடைய தாயாரைச் சுற்றிலும் ஒரு வளையத்தை (மானசீகமாக) அவர் உருவாக்கி, அவ்வளையம் அப்பெண்மணியின் உட்புறம் மற்றும் வெளிப்புறத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது என்ற உறுதியான எண்ணத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். அவரது உயிர்வாழ்வு அல்லது மரணம் பற்றி தீவிர கவனம் இருக்கக்கூடாது. உரிய காலத்திற்கு முன்பு மரணம் வரமுடியாது. R2 - வை அவரது தற்போதைய நிலையாகிய பிரம்மாண்ட மண்டலத்தில் நிலை நிறுத்தி இருந்தேன். அவருடைய மாமா (அல்லது சித்தப்பா) அவரைக் கீழே இழுத்துவிட்டார். இப்போது நான் R2 - அங்கு நிலைத்திருப்பதற்கான திறனை உருவாக்கி இருக்கிறேன்."

இதையடுத்து இறைதூதர் முகம்மது நபியிடமிருந்து விளக்கமான குறிப்புரைகளும், ஆலோசனைக் குறிப்புகளும் கொண்ட இரண்டு நீண்ட உரைகள் கூறப்பட்டன.

அதுபற்றி வணக்கத்திற்குரிய மாஸ்டரிடமிருந்து வந்த குறிப்பான உத்தரவுகள் :- "மதிப்புயர்ந்த இறைதூதரிடமிருந்து வந்த இந்தக் கட்டளைகள் மற்றும் விளக்க உரைகள் மிகவும் ரகசியமாக வைத்திருக்கப்பட வேண்டும். கேப்ரியல் (GABRIEL) என்பது தவறுகள் இல்லாத அறிவுக் கூர்மையின் பெயராகும். உன் அலுவலகத்தில் உனக்குக் கிடைத்த ஞானோதயம் (அல்லது)

மெய்யறிவின் வெளிப்பாடு புதிய நேரப்படி (இது இரண்டாம் உலகப்போரின் போது இந்தியாவில் நிர்ணயிக்கப்பட்டது) பகல் 1 மணி 15 நிமிடத்தில் ஏற்பட்டது.”

இரவு 7 மணிக்கு R2 - பரப்பிரம்மாண்ட மண்டலத்திற்குள் (உலியா / ULIA) சென்றார். இரவு 8.20க்கு அவர் அதைக் கடக்கும்படி செய்யப்பட்டது. அடுத்து பணிவு (தன்னடக்கம், IBD 7) என்ற புள்ளிக்குச் சென்றடைந்தார். அதற்கும் அப்பால் உள்ள புள்ளியிலிருந்தும் கூட அவர் மீது ஒளிவீசப்பட்டது.

<u>**10-10-1944**</u>

அழிவு சம்மந்தமான ரகசியமான வேலைக்கு வணக்கத்திற்குரிய இறைதூதர் முகம்மதுவிடம் இருந்து வழிகாட்டும் ஆலோசனைகள் பெறப்பட்டன.

உயர்மதிப்புடைய மாஸ்டர் கூறியது :- ‘‘ஒரு அமைப்பினை மாற்றுவது சம்மந்தமான இந்தவிதமான வேலைக்கான ஒளி (அனுமதி மற்றும் சக்தி) முதன் முதலாக என் வணக்கத்திற்குரிய மாஸ்டருக்கு அளிக்கப்பட்டது.’’

இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 10.55 மணிக்கு பணிவு என்ற புள்ளியிலிருந்து (ஸ்தானத்திலிருந்து) மற்றவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான அனுமதி, வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்திரவின்படி R2 - வுக்கு கொடுக்கப்பட்டது. அதை M1 - சரிபார்த்துக்கொண்டார்.

இறைதூதர் முகம்மது என்னிடம் ஒப்படைத்த அழிவு சம்மந்தமான ரகசியமான பணிக்காக மிக விவரமான குறிப்பாணைகளும் விளக்கங்களும் கிடைத்தன. அதன் படியே வேலை செய்யப்பட்டது.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “சிருஷ்டி (பிரபஞ்சத்தின் படைப்பு) துவங்குவதற்கு முன்பாக, மிக மிக உச்சநிலையில் இருந்த இருப்பில் (ஜாட்) எனும் ஆதிமூலத்தில் வெறும் உத்தேச வடிவில் சில குறிப்பிட்ட தன்மைநிலைகள் இருந்தன. க்ஷோப் எனப்படும் சிருஷ்டியின் துவக்கத்தில் (ஆதிமுதலான எழுச்சி அல்லது சம நிலையின்மை அல்லது கிளர்ந்தெழும் ஆசை) அந்தத்தன்மை நிலைகள் (அதாவது

ஆதிமூலத்தின் / ULTIMATE BEING அசைவற்ற சமநிலையின் பூரணத்துவ நிலையில் வெறும் உத்தேச வடிவத்தில் இருந்தவை) ஒரு மெல்லிய அதிர்வைப் பெற்றன, இந்தத் திட்டம் (பாபுஜியின்) அகப்பார்வையில் (மனக்கண்களில்) தெரிந்தது. அந்த உலுக்குதலின் ( jerks) பெரியதொரு உந்துதலை அது பெற்ற பகுதியில், அந்தத் தன்மை நிலைகள் ஒரு தடித்த விசையின் வடிவத்தை அடைந்தன. அல்லது பிரபஞ்ச சிருஷ்டியின் செயல்முறைகளை நிகழ்த்துவதற்குத் தேவையான அத்துகள்கள் தடிமனாகவும் உறுதியோடும் இருந்தன. வேறு வார்த்தைகளில் சொன்னால் நான் இப்போது விவரித்துச்சொன்ன அந்த சக்திகள் பல்வேறுவிதமான குணாதிசயங்களை (உகந்த அடிப்படைத் தன்மைகளைத்) தூண்டுவதற்காக அங்கு இருந்தன என்றும் சொல்லலாம். இந்த ஆற்றல்கள் விவேக சக்தி எனப்படும் ஆராய்ந்து முடிவு செய்யும் சக்திகள் என்று பெயரிடப்பெற்றன. இந்த சக்திகள் சிலவற்றில் பெரும்பகுதி அறிவுத்திறன் இருந்தது. வேறு சிலவற்றில் ஒன்றோடு ஒன்றாக தாக்கிக் கொள்ளும் தன்மையும், மல்யுத்தம் போன்ற பலப்பரீட்சையில் வெல்லும் தன்மையும் கொண்ட மூலப்பொருள் அதிகமாக இருந்தது. மேலும் வேறு சிலவற்றில் அறியாமையின் இருண்டநிலை இருந்தது. இந்த மாதிரி சக்திச் சுழல்கள் கீழே இறங்கிய போது, அதே மாதிரியான ஒளித்துகள்களை (அணுக்களை) கவர்ந்து இழுக்கத் துவங்கின. இதனால் முற்றிலும் புனிதத்தன்மையை விட சற்று அடர்த்தியான ஒருநிலை உண்டாயிற்று. முனிவர்கள் இந்தத் தத்துவத்தைக் கண்டறிந்து ஆராய்ந்த போது, இந்த ஆதி முதலான சக்தி விசைகளுக்கு அவர்கள் வெவ்வேறு பெயர்களைக் கொடுத்தார்கள். இவையனைத்தும் மனித உடம்புடன் தொடர்புடையவையாக இருந்தன. கணேசர், கார்த்திகேயன் (முருகன்) (சிவன், பார்வதி பற்றிய புராணக்கதைகளின் படி அவர்களுடைய பிள்ளைகள்) பற்றிய குறிப்புக்கள் அனைத்தும் கற்பனையாக உருவாக்கப்பட்டவையே ஆகும். கணேசரின் (விநாயகரின்) பெருமையை நிலை நிறுத்துவதற்காகவே ஒரு கதை கட்டப்பட்டது. உண்மையில் அது மனித உடம்பில் மூலாதார சக்கரத்துடன் தொடர்புடைய ஒரு ஆற்றலேயாகும். இந்த

முக்கியமான சக்தியின் வீச்சு மனித மூளை வரையில் எட்டுகிறது. ஹடயோகத்தில் இதுவே ஏணியின் முதல்படியாக உள்ளது. இதன் கடைசிப்படி ராஜயோகத்தில் உள்ளது. இந்தப் புள்ளி மிகவும் அசுத்தமாக இருக்கிறது என்று சொல்லப்பட்டாலும், அது விழிப்பு அடையச் செய்யப்பட்டால் (இந்த நிலை பாபுஜியின் மனக்கண்ணுக்கு வந்தது) மற்ற அனைத்துப்புள்ளிகளும் அல்லது சக்கரங்களும் திறக்கப்பட்டு, சக்திகள் உருவாக்கப்படுகின்றன."

"காலங்கள் மாறிக்கொண்டே இருந்தன. இருண்ட தன்மை தொடர்ந்து நிலவியது. திடத்தன்மை அதிகரித்துக்கொண்டே இருந்தது. எனவே சத்தியநிலை படிப்படியாக, மேலும் மேலும் மறக்கப்பட்டது. தண்ணீர் பற்றிய எந்த சிந்தனையும் இன்றி அலைகளைத் தேடுவது இருந்தது. (மூலப்பொருளை மறந்துவிட்டு அதன் பலன்களை மட்டும் விரும்புவது இருந்தது). சத்தியநிலை (மெய்ஞ்ஞானம்) தொடர்ச்சியாக மேலும் மேலும் பல திரைகளால் மூடப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஒருவரின் சொந்த கௌரவத்தையும், (பெருமையையும்) திறமையையும் நிலைநிறுத்திக் கொள்வதற்காக புதிய கதைகள் கட்டப்பட்டன. இந்தக் கதைகளைப் படிக்கின்றவர்கள், அவற்றை உருவாக்கியவர்களின் கற்பனைத்திறனுக்கு ஏற்றவாறு அமைந்து இருப்பதை நிரூபணமாகக் காணலாம். இதன் விளைவாக கதைகள் மட்டுமே நிலைத்து நின்றுவிட்டன. அக்கதைகளே மாற்றப்பட்ட வடிவங்களில் வணங்கப்படுவதும், வழிபடப் படுவதும் துவங்கியது. இந்த அலைகளில் சத்தியநிலை தன் அடையாளத்தை இழந்துவிட்டது.

<u>12-10-1944</u>

இறைதூதர் முகம்மது கூறியது :- "அழிவு வேலைக்கான என் கட்டளை நன்கு சிந்திக்கப்பட்டது மற்றும் சரியானது. அந்த வேலையைச் செய்து முடிப்பதில் எந்தத் தாமதமும் தேவையில்லை. புதிய பயிற்சிமுறை அதன் இடத்திற்கு வரும் வரையில், இப்போதைக்கு, உங்கள் பயிற்சி முறையை மாற்றாமல் வைத்திருங்கள். இது சம்மந்தமான கடமையை உங்கள்

மாஸ்டரிடம் நான் ஒப்படைத்திருக்கிறேன். இப்போது உங்கள் மாஸ்டரை அழையுங்கள்.

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் குறிப்பான கட்டளை :- "இந்த அழிவு வேலை இன்றியமையாதது, இந்த வேலையை இன்றே செய்து முடித்துவிடு. தற்காலிகமாக ஒரே ஒரு பயிற்சி முறையை மட்டும் விட்டு வைக்கவும்."

அந்த வேலையைச் செய்து முடித்த பிறகு பகவன் ஸ்ரீகிருஷ்ணர் கூறியது என்னுள் வந்திறங்கியது. ''இன்று நீ அழித்த அமைப்புகள் அனைத்தும் என்னிடத்தில் ஐக்கியமாகி விடும். என்னுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரே ஒரு பயிற்சி அமைப்பு மட்டும் நிலைத்திருக்கும். இன்று நான் உன்னுடன் நேரடியாக இணைக்கப்பட்டவனாகி இருக்கிறேன். உன் மாஸ்டரின் மீது உனது அசையாத பற்றுறுதி பற்றி நான் மிகவும் அக மகிழ்ந்திருக்கிறேன். உன் தவறுகள் அனைத்தும் மன்னிக்கப்பட்டுள்ளன.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "மரியாதைக்குறைவு, அதிவேகத்தன்மை ஆகிய தவறுகளை நீ செய்திருந்தாலும் அதிலும் கூட என் மீதான அன்பு சேர்ந்திருந்தது என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. தனது சொந்த மாஸ்டருக்கு முன்பாக மிகப்பெரியதான ஒரு பரிசை (மிக உயர்ந்த வியக்கத்தக்க நிலை அல்லது அதிநுட்பமான நிலையை) ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாத அல்லது விரும்பாத ஒரு சீடனுக்கு இதுவே முதல் உதாரணம். இந்த நிலைக்காக மக்கள் ஏங்கியிருப்பார்கள். எனினும் இது உனக்குரியதாகவே நீடித்திருக்கும். மரியாதைப் பண்பு விதிமுறைகளை நீ அனுசரித்துள்ளதைக் கண்டுள்ளேன். அது ஒரு அவசியமான கடமை. நீ என் உருவத்தையே பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடைய உருவமாக எடுத்துக்கொண்டிருக்கிறாய். தனது சொந்த மாஸ்டருக்கு ஒரு காணிக்கையாக, தனக்குக் கிடைத்த மிக உரிய தெய்வீகப் பரிசையே (அதி நுட்பமான உயர்நிலையை அல்லது வியக்கத்தக்க ஒரு மிக உயர்ந்த நிலையை விட்டுக்கொடுத்து விடுகின்ற இம்மாதிரி ஒரு உதாரணத்தை, அன்புள்ள M1 - னால்

எங்காவது காணமுடியுமா? உன் பெயர் எந்நாளும் நிலைத்திருக்கும். ஒரு மிகப்பெரிய ரகசியத்தை நான் உனக்குச் சொல்கிறேன். அதாவது ஒரு விதத்தில் பகவான் கிருஷ்ணரின் ஐக்கியத்தை உன்னுள் அடைந்திருக்கிறாய். இது உனக்கு இன்று தான் தெரிய வந்திருக்கிறது. இது தானாகவே உனக்கு மாற்றப்பட்டுள்ளது. அதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி".

பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் கூறியது :- "என் வாழ்க்கைச் சரித்திரத்தில் பல மனிதர்கள் பதிவு செய்துள்ள சம்பவங்களில் பெருமளவு பிற்சேர்க்கைகள் உள்ளன. என் வாழ்க்கை மிக எளிமையாக இருந்தது. எனக்கு விளையாட்டுகளிலும், போட்டிகளிலும் பிரியம் இருந்தது. பகவத்கீதையிலும் மக்கள் நிறைய மாற்றங்கள் செய்து என் வார்த்தைகளைத் திரித்து எழுதியிருக்கிறார்கள். மாஸ்டர் என்றால் அவர் உன் மாஸ்டரைப் போல் இருக்கவேண்டும். உன் மாஸ்டரின் மீதான உனது விசுவாசத்தை நான் பாராட்டுகிறேன்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "பல்வேறு பயிற்சி முறைகளில் பயிற்சியளிப்பதற்கு நான் உனக்கு அனுமதி கொடுத்திருந்தேன். அந்தப் பயிற்சி முறைகள் அழிந்து போய் விட்டதால் இப்போது அந்த அனுமதியை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். ஒரே ஒரு பயிற்சி முறைக்கான அனுமதி மட்டுமே இப்போது இருக்கிறது. பல்வேறு குடும்பங்களின் சார்பாக M1 - க்கு அளிக்கப்பட்ட அனுமதி சம்மந்தமாக (உன் விஷயத்தில் செய்தது போல) ஒரே ஒன்றைத் தவிர இந்த அனுமதிகளையும் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். எனவே ஒரே ஒரு பயிற்சி முறை மட்டுமே எஞ்சியிருக்கும். பல குடும்பங்களின் சார்பாக B1 - க்கு, A1 - அளித்த அனுமதியும் கூட விலக்கிக் கொள்ளப்படுகிறது"

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறியது :- "இறைதூதர் முகம்மதுவினால் விளைவிக்கப்பட்ட பேரழிவின் மூலமாக என்னுடைய சங்கல்பம் (விருப்பம்) தான் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்போது இந்தப் பயிற்சிமுறை சாதுக்களின் (தவ முனிவர்களின்) பாதையாக (சாந்த மதம்)

இருக்கும். மக்கள் வேறுபட்ட முறைகளில் விழுந்துவிட்டார்கள். கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகவே இருக்கும் மார்கங்களைச் சேர்ந்த மக்களிடையில் இதனால் உறவுமுறை அற்றுப்போய்விட்டது. இனி தீட்சை (பயிற்சியின் துவக்கம்) அளிப்பதற்கு ஒரு புதிய வழிமுறை இருக்கும்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "இந்தக் குறிப்பான கட்டளைகளுக்கு எதிராக யாராவது தீட்சை கொடுத்தால் அது 'எதிர்மறையான தீட்சையாக' இருக்கும். அது சம்மந்தமாக நீ கட்டளைகளை அனுப்பு. பழம்பெரும் ஞானிகள் நீ வேலை செய்யும் பாங்கு முறையான எல்லைகளுக்குக் கட்டுப்படாததாக இருந்தாலும் கூட, உன் மாஸ்டரின் மீது பற்றுறுதியை ஏராளமாகப் பாராட்டுகிறார்கள். உன்னை எச்சரிக்கையாக இருக்கும்படி நான் செய்திராவிட்டால், ஆன்மீக வழிகாட்டுதலில் தலைமைப் பதவி சம்மந்தமாக ஒரு சச்சரவு ஏற்பட்டிருக்கும். இதனால் முக்கிய நோக்கம் பாதியளவே நிறைவேறியிருக்கும். கபீர் பந்த்திலிருந்து (கபீரின் பாதை) உனக்குக் கிடைத்த அனுமதி, பாதிக்கப்படாமல் அப்படியே இருக்கிறது. கபீர் பந்த், தாது பந்த் மற்றும் இதர மார்கங்களிலிருந்து உனக்காக நான் அனுமதி பெற்றிருந்தேன். அவையனைத்தும் அப்படியே நீடித்து இருக்கும். எல்லா தீட்சைகளும் என் பெயரால் நிகழ்த்தப்பட வேண்டும்; அவர்களுடைய தொடர்பு (மாற்றம் இன்றி) பகவான் ஸ்ரீகிருஷ்ணருடன் இருக்கும். தீட்சை அளிக்கும் சமயத்தில் நன்னெறிக் கோட்பாடுகள் சம்பந்தமாக பகவான் ஸ்ரீகிருஷ்ணர் சேர்த்துள்ள விதிமுறைகள் அனைத்தும் தீட்சை பெறும் மனிதரால் அனுசரிக்கப்பட வேண்டும் என்று வாக்குறுதி பெறப்படவேண்டும். இதை நான் வருங்காலத்திற்காக நியமிக்கிறேன். அதற்கான சந்தர்ப்பம் வரும் போது, அது பற்றி என்னிடம் விசாரித்து அறிந்துகொள். முன்னோர் பரம்பரை பற்றிய உருவகமாகிய வம்ச விருட்சம் (பல கிளைகள் கொண்ட மரம் போல, தனது முன்னோர் பரம்பரையைக் குறிப்பிடும் வரைபடம்) பற்றி நீ சரியான விஷயத்தைச் சொல்லியிருக்கிறாய். உரிய காலத்திற்கு

முன்னதாக இருந்தாலும், உண்மையில் மிகச் சரியாக அது அப்படித்தான் இருக்கிறது.''

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- "இன்று நடந்து விட்ட நிகழ்ச்சிகளுக்காக நீ மனம் வருந்தக்கூடாது. என்னுடன் ஆன சங்கிலித்தொடருடன் உன்னை நேரடியாக இணைத்துக் கொள்ள விரும்பினேன். ஏனென்றால் எனது சங்கிலித் தொடரானது உன்னிடமிருந்து புதிதாகத் துவக்கப்படும். அதில் உன் மாஸ்டரையும் நீ சேர்த்துக்கொண்டாய். அதை நான் விரும்பி மகிழ்ந்தேன். அதில் உனது பாணிதான் ஆட்சேபத்துக்கு உரியதாக இருந்தது. அதை நான் மன்னித்து விட்டேன்.''

(பாபுஜியின் குறிப்பு : இதில் என் அனுபவம் என்னவாக இருந்தது என்றால், என் உயர்மதிப்புடைய மாஸ்டருடையது அல்லாத ஒரு சக்தி என்னை பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடன் இணைத்துக் கொண்டிருந்தது; அதில் என் மாஸ்டர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இதனால் என் சொந்த குருவின் மூலமாகவே எதையும் பெற விரும்புகிறேன் என்று பணிவுடன் தெரிவித்தேன். அதற்கு பதில் வருவதற்குத் தாமதம் ஆனதால் கிருஷ்ணருடனான அந்த இணைப்பையே நான் அறுத்துவிடப்போனேன். அப்போது என் வணக்கத்திற்குரிய மாஸ்டரிடமிருந்து ஒரு கட்டளை வந்திறங்கியது. அது, ''அப்படிச் செய்யாதே. நானும் கூட அதில் சேர்க்கப்பட்டிருக்கிறேன்.'' என்று தெரிவித்தது.)

வணக்கத்திற்குரிய மாஸ்டர் இதற்குச் சொன்ன விளக்கம் :- ''தாமதம் ஏற்பட்டது ஏனென்றால், நீ கேட்டுக் கொண்டதால் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அந்த சக்தியை என் மூலமாக (உனக்கு) திசை திருப்ப விரும்பினார்.''

<u>13-10-1944</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "காலம் மற்றும் மகாகாலம் எனப்படும், அழிவை உண்டாக்கும் காலம் - பேரழிவை உண்டாக்கும் ஊழிக்காலம் என்ற நிலைகளிலிருந்து அவதாரங்கள் இறங்கி வருகிறார்கள். மிக அதிகமாகக் கடுமை தேவைப்படும் போது, மகாகாலம் என்ற நிலையிலிருந்து

அவர்கள் வெளிப்பட்டு வருகிறார்கள். குறைவான கடுமை தேவைப்படும் போது, காலம் என்ற நிலையிலிருந்து வருகிறார்கள். அவர்கள் எல்லா சக்திகளும் தொகுக்கப்பட்டு அடையப் பெற்றவர்களாக உள்ளனர். ஆக்கம், அழிவு ஆகிய இரண்டும் அவர்கள் கட்டுப்பாட்டில் உள்ளன. அவர்களின் உருவம் வணங்கத்தக்கதாகவும், அழிவின் வடிவமாகவும் இருக்கலாம். அவர்கள் ஒரு கையில் போர்வாளும் மறுகையில் புத்தகமும் உடையவர்களாக இருக்கிறார்கள். சத்யபதம் எனப்படும் தர்மநெறி நிலையிலிருந்து வருகிறவர்களுக்கு இம்மாதிரி உரிமைகள் இல்லை. அவர்களின் இயற்கையான சக்தி போரின் மீதும் மற்றும் கலவரங்களின் போதும் உதவி செய்வதில்லை.

வணக்கத்திற்குரிய இறைதூதர் முகம்மது கனிவான அன்பின் சேமிப்புக்கிடங்காக இருந்தார். மனித நிலைக்குக் கீழான (மீன், ஆமை, காட்டுப்பன்றி போன்ற) உருவங்களில் வந்ததாக புகழ் பெற்ற அவதாரங்கள் அனைத்தும் மனத்தின் கற்பனைகள் மற்றும் செவி வழியாகப் பரவிய கதைகளேயாகும். ராமன், கிருஷ்ணன் ஆகிய இருவர் மட்டுமே அவதாரங்களாவார்.''

''மத்ஸ்ய (மச்சம் அல்லது மீன்) அவதாரம் பற்றிய விளக்கம் :- ஹிந்துக்களுக்கு எதிராக காலம் மாறியபோது, அந்த மத ஞானிகளும் முன்பு அவர்களுக்கு இருந்த மதிப்புமிக்க நிலையிலிருந்து படிப்படியாக தாழ்வு நிலையை அடைந்தார்கள். இப்படி இழிந்தநிலை வந்து விட்டதால் கௌரவம் மற்றும் மரியாதையைத் தக்க வைத்துக் கொள்வதற்கான விருப்பங்கள் தோன்றின. இதனால் கொஞ்சம் கொஞ்சமாக, தன்னை அடுத்து வருகிறவர்களும், வருங்காலத் தலைமுறைகளும், அதை எழுதியவரை மரியாதையுடனும், கௌரவமாகவும் நினைத்திருக்க வேண்டும் என்பதற்காக, ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு கதையை உருவாக்கும் நிலைமை ஏற்பட்டது.''

''மச்ச அவதாரத்தின் அடிப்படையை உருவாக்கிய மனிதரைப் பற்றி நான் உனக்குச் சொல்கிறேன். அவர் பல ஆச்சார நியமங்களைக் கடைபிடித்து உள்ளார்ந்த புண்ணியப் பலன்களைப் பெற்றிருந்தார். [அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சி என் (பாபுஜியின்) பார்வையில் தெரிந்தது]. வளர்ச்சி பற்றிய

கருத்தும் கூட எங்கே ஆவியாகி மறைந்து விடுகின்றதோ, அது வரை அவர் சென்றடையவில்லை. அவருக்கு என்ன கிடைத்திருந்ததோ அதுவே போதுமானது என்று அவர் கருதினார். அவருக்கு ஆற்றில் குளிப்பது மிகவும் பிடிக்கும், மீன் பிடிக்கும் வழக்கமும் அவருக்கு இருந்தது. அவர் மீன்களைப் பிடித்து மீண்டும் அவற்றை ஆற்றிலேயே விட்டுவிடுவது வழக்கம். இது அவரது ரத்தத்திலும், எலும்பிலும் ஊறிப்போன ஒரு பழக்கமாகி விட்டது. தன்னுடைய இப்பழக்கம் குறித்து பொதுமக்கள், அவரைப்பற்றி மோசமான கருத்தைக் கொண்டிருந்ததர்கள். அதற்கு மாறாக நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக, மேலும் அடுத்து வருகின்ற தலைமுறையினர் அக்குறையைப் பெரிதுபடுத்தாமல் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அவரைப் பற்றி மரியாதையுடன் நினைத்துப் புகழ்வதற்காக ஏதாவது புதுமையான மற்றும் விசித்திரமான கதையை உருவாக்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. இது பற்றி மிகவும் சிந்தித்த பிறகு அந்த மீன் தனது சிந்தனையாகிய ஆற்றில் குதிப்பதாக ஒரு கற்பனை தோன்றியது. அதையடுத்து அவர் ஒரு சிறிய மீனை தன் கமண்டலத்தில் (சிறிய சொம்பு – நீர்வடியும் வளைந்த குழாயுடன் கூடியது) பிடித்து வைத்துக்கொண்டார். பிறகு அந்தக் கமண்டலத்தில் இடம்பெற முடியாத கொஞ்சம் பெரிய மீனைப் பிடித்தார். வழக்கம் போல் அந்த மீன்களை ஆற்றில் எறிந்தபிறகு தனது ஆசிரம குடிலுக்குத் திரும்பி வந்தார். உடனே அது பற்றிய ஒரு புத்தகத்தை எழுதினார். கமண்டலத்தில் இடம் போதாமல் மீன் ஆற்றில் விடப்பட்டதாக அந்த முனிவர் எழுதியதற்கு இப்படி நல்ல சான்று கிடைத்துவிட்டது! அந்த மீன் ஆற்றின் அளவையும் மீறி வளர்ந்துவிட்ட போது, அது கடலில் எடுத்துவிடப்பட்டது என்றும், அந்தக் கடலின் அளவையும் மீறி அது வளர்ந்த போது அது அந்த முனிவரிடம் பேசியது என்றும் அவர் எழுதினார். ஒரு ஆறு எப்போதுமே நேராக இன்றி வளைந்து வளைந்து தான் செல்லும். அதனால் விடப்பட்ட மீன் அதில் இடம் போதாதவாறு வளர்ந்தது என்றால் அதன் உடம்பில் எத்தனை வளைவுகள் உண்டாகி இருக்கும் என்பது கடவுளுக்குத் தான் தெரியும். அவ்வளவு பெரிய மீனைத் தூக்கிக் கடலில் விட

வேண்டுமென்றால் அவ்வளவு வலிமை உடையவர் யார் இருக்கிறார்கள்? அது அந்த முனிவரால் முடியுமா? இவ்விஷயத்தில் மக்கள் தங்கள் அறிவைப் பயன்படுத்துவதில்லை. எனவே, இந்தக் கதை, கற்பனையாக உருவாக்கப்பட்டது என்பதற்கு அதிலேயே சான்று இருக்கிறது.''

''என்னுடைய பதவியின் தன்மை வேறு விதமாக இருந்தது. உன்னுடைய பதவியின் அந்தஸ்து (உயர் நிலை) வேறு ஒன்றாக இருக்கிறது. பழங்காலத்தில் எழுதப்பட்ட எந்தப் புத்தகத்தையும் நான் ஒருபோதும் குறை சொன்னதில்லை; அதற்கு முரணாகப் பேசியதில்லை. ஆனால் எது சரியானதோ மற்றும் காரணத்தை உடையதோ அதை நீ சொல்லத்தான் வேண்டும். மிகவும் ரகசியமான ஒரு விஷயத்தை நான் உனக்குச் சொல்கிறேன். அதாவது காரண சரீரத்தை உடையவர்கள் யாரோ அவர்கள் அவதாரங்கள் அல்ல.''

''துர்வாச முனிவர் ஏன் ருத்ரனின் (கோபாவேசம் உடைய அழிக்கும் தெய்வமாகிய சிவனின்) அவதாரமாக நியமிக்கப்பட்டார் என்பது உனக்குத் தெரியுமா? எங்கேயிருந்து அழிவு சக்திகள் இறங்கி வருகின்றனவோ, அந்த மண்டலத்துடன் தன்னை இணைத்துக்கொள்ளும் முன்னேற்றத்தை தனது தவத்தினால் அவர் படிப்படியாக அடைந்தார். அங்கே அந்த மண்டலத்தில் அவர் பெருமளவு நீந்தி (அதாவது விரிவாகச் சுற்றித்திரிந்து) அந்த அழிவு சக்தியை தனக்குள் ஈர்த்துக்கொண்டார். இவ்விதமாக அது நிகழ்ந்ததால் அவர் எங்கே சென்றாலும் அவருக்குள் திணிக்கப்பட்டிருந்த அந்த அழிவு சக்தி அவர் மூலமாக வெளிப்பட்டது. அது அழிக்கும் சக்தியாகையால் மற்றவர்களுக்குப் பெரும் துன்பத்தை உண்டாக்கியது. துக்கத்தையும், வருத்தத்தையும் உண்டாக்கி அவர்களைக் கண்ணீர்விடச் செய்தது. கிட்டத்தட்ட முழு அளவுக்கு இந்த சக்தி அவருக்குள் ஈர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததால், அவருக்குள் அது வந்திறங்கி அவருக்கு உரிமையாகி இருந்ததால் அவரை சிவனின் அவதாரம் என்று நியமிக்கப்பட வேண்டியதாயிற்று. ஆனால் அவர் முக்தியடையவில்லை. அவரிடம் தெய்வீகமான அழிவு சக்தி இருந்ததால், சாதாராண ஞானிகளும், மக்களும் பயத்தினால்

அவருக்கு மரியாதை செலுத்தினார்கள். இந்த அழிவு சக்திக்கு எந்த எதிர்சக்தியும் இல்லாதிருந்தது.''

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- "முனிவர்களுடைய மதிப்பையும், கௌரவத்தையும் நிலை நிறுத்துவதற்காக நான் அவர்களை மதித்து நடந்தேன். திரௌபதியும், துர்வாசரும் சம்மந்தப்பட்ட என் வாழ்க்கைச் சம்பவம் சரியானதே. மக்களுக்கு ஒரு பாடம் கொடுப்பதற்காக நான் அதை நிகழ்த்தினேன். அவருக்கு எதிராக விரோத எண்ணம் எதுவும் எனக்கு இல்லை என்பதால், ஒரு முனிவர் என்ற நிலையிலிருந்து அவர் வீழ்ச்சியடையவில்லை. உன் மாஸ்டர் எட்டியிருக்கின்ற நிலை துர்வாசரின் நிலையை விடப் பலமடங்கு உயர்ந்தது.''

(ஸ்ரீ கிருஷ்ணர் குறிப்பிட்ட சம்பவம் இதுதான் : பாண்டவர்கள் வனவாசத்தில் இருந்த சமயத்தில் துர்வாசர் தனது சீடர்களின் பெருங்கூட்டத்துடன் அவர்களுடைய இருப்பிடம் சென்று தங்கள் அனைவருக்கும் உணவளிக்குமாறு கேட்டார். உணவளிக்கவில்லை என்றால் சாபம் கொடுப்பேன் என்று எச்சரிக்கை செய்தார். அத்தனை பேருக்கும் உணவு சமைப்பதற்கு வீட்டில் உணவுப் பொருட்கள் இல்லை. திரௌபதி வந்தவர்களைக் குளித்து விட்டு வாருங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டு, செய்வதறியாமல் தவித்தவளாக பகவான் ஸ்ரீகிருஷ்ணரை நினைத்து வேண்டினாள். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அங்கே வந்து, தனக்கு உணவு தருமாறு கேட்டார். திரௌபதி தன் சங்கடமான நிலையைப் பற்றி அவரிடம் தெரிவித்தாள். எனினும் கிருஷ்ணர் தனக்கு ஏதாவது சாப்பிடுவதற்குத் தருமாறு வற்புறுத்திய பின்னர் சமையலுக்குப் பயன்படுத்தப்பட்டு, இன்னும் கழுவப்படாமல் இருந்த பாத்திரங்களில் ஏதாவது இருக்கிறதா என்று தேட ஆரம்பித்தார். சாதத்தின் பருக்கைகள் சிலவற்றை அவர் கண்டறிந்து, ஆவலுடன் சாப்பிட்டார். அதே சமயம் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த துர்வாசர் மற்றும் அவருடைய சீடர்களுக்கு வயிறு நிரம்பிய உணர்வு ஏற்பட்டது. அதன் பிறகு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் முனிவரையும் சீடர்களையும் சாப்பிட அழைத்து வருமாறு பீமனை அனுப்பினார். அவர்களுக்குப் பசியே இல்லாமல் வயிறு நிரம்பியிருந்ததால் அவர்கள் சாப்பிட வருவதற்கு விரும்பவில்லை.

‘நீங்கள் கட்டாயம் வந்து சாப்பிட வேண்டும். இல்லையென்றால் சமைத்த உணவெல்லாம் வீணாகிப் போகும்’ என்று பீமன் வற்புறுத்தி அழைத்த போது, துர்வாசரும் அவரது கூட்டத்தாரும் அங்கிருந்து விரைந்து ஓடிப்போய் விட்டார்கள்.)

மனநோய்க்கு மருத்தவக்குறிப்பு ஒன்று (லாலாஜியால்) கூறப்பட்டது.

<u>14-10-1944</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “எனதருமை ராம்சந்த்ரா மிகவும் பயன் தரக்கூடியதான மேலும் ஒரு விஷயம் கண்டுபிடித்திருக்கிறார். மேலைநாட்டவர் (விஞ்ஞானிகள்) பருப்பொருளை (அதாவது திடப்பொருளை) பெரும்பாலும் அழிவுசார்பான நோக்கத்துடன் வழிப்படுத்தியிருக்கிறார்கள். பொது நன்மைக்காக அவர்கள் என்ன செய்தார்களோ அதிலும் கொஞ்சம் குறைபாடு இருந்தது. திடப்பொருளின் சக்தி அல்லது உலகியல் சக்தி ஆன்மீகத்தில் விளைவை ஏற்படுத்தும்படி செய்யக்கூடிய அம்மாதிரி ஒரு கண்டுபிடிப்பை அவர் (ராம்சந்த்ரா) செய்திருக்கிறார். இவ்விஷயம் சம்பந்தமாக மேலும் சிந்திப்பதற்கு நான் அவரை அனுமதிக்கிறேன்.’’

‘‘இந்தக் கண்டுபிடிப்பு கண்ணாடியாலான ஒரு முப்பட்டக சமகோண வடிவத்தின் (glass – prism) வழியாக மின்சார ஒளி கடந்து செல்லும்படி செய்வதால் உண்டாக்கப்படும் பல்வேறு நிறங்களைப் பயன்படுத்தி, வெவ்வேறு ஆன்மீக மண்டலங்களின் நிறங்களுக்குத் தக்கவாறு ஒரு குறிப்பிட்ட சாதகருக்கு நன்மை செய்வது சம்மந்தமானதாகும். அதில் நான் ஒரு திருத்தம் செய்கிறேன். அதாவது கண்ணாடி முப்பட்டத்தின் வழியாகக் கடந்து செல்லும் வண்ண ஒளி அந்த சாதகரின் மீது உண்டாக்கும் விளைவின் தீவிரம் அந்த மின் சக்தியின் தீவிரத்தன்மைக்கு ஏற்ற விகிதத்தில் இருக்கும். அடர்ந்த சாம்பல் நிறம் (கறுப்பும் வெளுப்பும் கலந்த நிறம்) பிரம்மாண்ட மண்டலத்துக்குப் பொருத்தமாக, சரியாக இருக்கும். உடல் கொண்ட உயிரினங்களின் மண்டலத்துக்கு சிவப்பு சாயலுடைய இளஞ்சிவப்பு நிறம் சரியாக இருக்கும். வெண்மஞ்சள் நிறம் பரப் பிரம்மாண்ட மண்டலத்துக்கு ஏற்றதாக இருக்கும். ஒருவர்

மோசமான குணம் உடையவராக இருந்தால் அவருக்கு அதை மாற்றுவதற்குத் தகுந்த ஒளியுடன், அதே மாதிரி பிராணாஹூதியும் சேர்த்து அளித்தால் நல்ல பலன் இருக்கும். இதே பயிற்சி தான் மதிப்புயர்ந்த இறைதூதர் முகம்மதுவுக்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அளித்தார். அதாவது ஸுலூக் (Sulook) என்ற நன்னெறி ஒழுக்கமுடைய நடத்தையால் ஆன சுயதன்மைக்கு [நான் எனும் (Majzoobiat ) உணர்வுக்கு] அப்பாற்பட்டதான மிகவும் லேசான லயித்தநிலையில் தோய்ந்திருந்தது. இந்தத் திருத்தம் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரால் அறிமுகப்படுத்தப்பட்டது. பகவான் ஸ்ரீ ராமனின் அவதாரத்தில் நன்னெறி ஒழுக்கமுடைய நடத்தை பற்றி மட்டுமே வற்புறுத்தப்பட்டது. இது ஒரு மிக முக்கியமான விஷயம். நீ முழுமையான அழிவை அறிமுக்கப்படுத்த வேண்டும்.''

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- "நான் பிறந்த போதே சங்கல்ப ரூபமாக சிந்தித்து திட்டமிட்ட வடிவத்தில் மகாபாரதமாகிய பெரும்போரைச் செய்து முடித்துவிட்டேன். உண்மையில் என் வாழ்க்கையின் கடைசிப் பகுதியில் தான் அது நிஜ ரூபத்தில் நிறைவேறியது. (Atmosphere) சூழ்நிலையில் பரவியிருந்த விஷத்தன்மையின் தீயவிளைவுகளை நீக்குவதற்காகவே என் அவதாரம் நிகழ்ந்தது. ஆனால் புத்தகங்களில் நிறைய பொய்க் கதைகள் கலக்கப்பட்டுவிட்டன. அவையனைத்தும் நீக்கப்படவேண்டும். அச்சமயத்தில் என் வயதைக்கூட கவனத்தில் கொள்ளாமல் புறக்கணித்து விட்டு, மாடு மேய்க்கும் பெண்களுடன் (கோபிகைகளுடன்) என் உறவு முறை பற்றி களங்கப்படுத்துகின்ற கற்பனைகளை மக்கள் உருவாக்கிச் சேர்த்துவிட்டார்கள். தங்கள் ஒழுங்கீனத்தில் திளைத்திருக்கும் சுயநலமிக்க பூஜாரி ஜாதியினரால் பொய்யாகக் கூறப்பட்ட இக்கதைகளை மூடர்கள் நம்பினார்கள். இது சம்மந்தமான ஏற்பாடுகளும் (அதாவது கதைகளை அடிப்படையாகக் கொண்ட உற்சவங்கள், பூஜைகள் முதலானவை) செய்யப்பட்டன. பிறகு மதத்தின் அமைப்பில் அவை முழுவதும் நிறைந்துவிட்டன. உன் குரு இது சம்மந்தமாக ஏராளமாகப் பேசியிருக்கிறார். அவையனைத்தும் மிகச் சரியானவை.''

சமுதாயக் கட்டமைப்பு பற்றி மேலும் சில கருத்துக்களும் தொடர்ந்து சொல்லப்பட்டன.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “உனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ள இந்த தெய்வீக ஞானம் அனைத்தையும் நீ ஒலிபரப்பவேண்டிய (எல்லோரும் அறியச்செய்ய வேண்டிய) அவசியம் இல்லை. அப்படிச் செய்தால் மக்கள் உன்மீது மிகவும் வெறுப்பையும் பகையையும் வளர்த்துக்கொள்வார்கள். ஒருக்கால் இந்த ரகசியங்கள் தற்செயலாக அல்லது தவறுதலாக உன் எதிரி என்று சொல்லக்கூடிய யாருடைய காதிலாவது விழுந்து விட்டால் அவர் அதைப் பயன்படுத்தமுடியாத படி ஒரு குறிப்பிட்ட ஆன்மீக வழிமுறை மூலமாக செய்துவிட வேண்டும். இந்த உலகில் நீண்ட காலம் நீ உயிர்வாழ வேண்டியிருக்கலாம். அது தேவையைப் பொருத்ததாக இருக்கும். எப்படி இருந்தாலும் முறைப்படி எது நடைபெற வேண்டுமோ அது நிகழும். அந்தக் குறிப்பிட்ட களத்தில் வேலை செய்வதற்கு உதவியாக R2 - வுக்கு சில விசேஷ சக்திகளை அளிக்க நான் விரும்புகிறேன்.’’

‘‘C1 - என்ற இந்த மனிதரின் ஒரு தலைமுறை கூட முக்தி அடைய இயலாது. உன் வீட்டுக்கு ஒருபோதும் அவரை அழைக்கவேண்டாம். S1 - ஐ நான் மன்னித்து விட முடியும். அவரிடம் நீ விரும்புமளவுக்குக் கடுமையாக மற்றும் இரக்கமின்றி நடந்து கொள்ளும் உரிமையை நான் உனக்குத் தருகிறேன். இந்த விஷயத்தில் M1 - வும் கூட அவரை எளிதாக விட்டுவிடக் கூடாது. இவ்விஷயமாக இனி என்னைக் கலந்து ஆலோசிக்க வேண்டிய தேவையில்லை.’’

‘‘ராம்சந்த்ரா எந்த மாதிரி ஒரு மகாபுருஷராக ஆகப்போகிறார் என்பதை N1 - கனவில் கூட நினைத்துப் பார்க்கும் எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை. அவர் அப்படி உருவாகுவதை எந்த சக்தியால் தடுத்திருக்க முடியும்? இது குறித்து (ராம்சந்த்ரா) தன்னுடைய அந்த சக்தியை பயன்படுத்துவதை நான் தடை செய்திருக்கிறேன். அவர் எந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு (ராம்சந்த்ரா) வந்திருக்கிறாரோ அதற்கு மட்டுமே அந்த சக்தியை அவர் பயன்படுத்த முடியும். இப்போது

அவர் சுதர்சன சக்கரத்தை வரவழைத்தால் (சுதர்சன சக்கரம் என்பது காக்கும் கடவுளாகிய விஷ்ணுவின் சக்தி வாய்ந்த ஆயுதம். அது எய்தவுடன் சென்று இலக்கைத் தாக்கி விட்டு மீண்டும் எய்தவரிடமே வந்து விடும்). அது உடனடியாக தன் செயலைத் துவக்கிவிடும். இந்த நிலைகளைப் பற்றி நான் அறிந்திருந்ததால், மிகவும் முன்னதாகவே இந்த விஷயங்களில் நான் அவரைத் தடுத்துவிட்டேன். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அழிவுகாலத் தோற்றத்தை (காலரூபத்தை) அவர் ஒருபோதும் அழைக்கக்கூடாது. தனது வதந்தி பரப்பும் பேராசையில் N1 - இதைப் பற்றி ஒரு சமயம் குறிப்பிட்டிருக்கிறார். அந்த மகாபுருஷர் எங்கிருக்கிறார், என்ன செய்கிறார் என்பதெல்லாம் அவருக்குத் தெரியாது என்றாலும், ஒரு விசேஷ மகாபுருஷர் உலகிற்கு வந்திருக்கிறார் என்னும் அவருடைய கருத்து சரியானதே. முந்தைய முனிவர்கள் விசேஷ மகாபுருஷர் பற்றி எழுதியிருப்பவை அனைத்தும் உருவகங்களே (கற்பனையான உதாரணங்களே). அவரைப் பற்றிய ஒரு ரகசியமாக மேலும் ஒரு விஷயமும் - அதாவது அவர் ஒரு கன்னித்தாய்க்கு மகனாகப் பிறந்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அது அவர்களின் சிந்தனைகளுக்கு – கருத்து வடிவங்களுக்கு ஒரு வெளிப்பாடாக இருந்தது.

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறியது :- “பலவாறாக சொல்லப்படும் மகாபாரதத்தில் திருத்தங்கள் தேவைப்படுகின்றன. பிரம்மாண்ட மண்டலத்தின் தன்மையை அதன் உச்ச நிலையில் நான் அர்ஜுனனின் காட்சிக்குக் கொண்டு வந்தேன். அதன் உச்ச கட்டத்தில் (செயல் வடிவத்தில்) நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு முன்பு சூட்சும வடிவத்தில் அவை எங்கே உதயமாகின்றனவோ அந்தப் புள்ளியை (சக்திமையத்தை) அவனுக்கு, உறுதிபட நான் காண்பித்தேன். நான் எதைக் கற்பிப்பதற்காக அவதரித்தேனோ அந்த பூரணமான சுயசரணாகதி நிலைக்கான வழியையும் அவனுடைய சிந்தனைக்கு நான் கொண்டு வந்தேன். பதஞ்சலி முதலானவர்களைப் பற்றி அதில் இருக்கும் குறிப்புகள்

தவறானவை. நான் கூறிய போதனைகள் இவ்வளவு தான்.’’ (அந்த நிகழ்வுகள் என் மனக்காட்சிக்கு வந்தன - பாபுஜி)

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் குறிப்பு :- “நீ கண்ட கணக்கிலடங்காத போர்படைகளின் இருண்ட காட்சியே அர்ஜுனனுடைய காட்சிக்குக் காண்பிக்கப்பட்டது.”

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தொடர்ந்து கூறியது :- “அர்ஜுனனுக்கு நான் செய்த ஞானப் பிரசங்கம் இவ்வளவு தான். மகாபாரதத்தின் இத்திட்டத்தை நான் சற்றுமுன் உனக்குக் காண்பித்தேன். அர்ஜுனனுடைய காண்டீவம் என்ற வில் பற்றி உன் குரு முன்பே உனக்குக் கூறியிருக்கிறார். அது மனோவசிய சக்தி உடையது என்பதற்கும் மேலாக, அது காலச் சக்கரம் எனப்படும் அழிவை உண்டாக்கும் சக்கரத்தடனும் இணைக்கப்பட்டிருந்தது. துரியோதனன் மிகவும் தன்னிச்சையானவன்; பொறாமை மிகுந்தவன். நல்லதற்கும், கெட்டதற்கும் இடையே வித்தியாசம் கண்டறிந்துகொள்ள இயலாத அளவுக்கு ஆராய்ந்தறியும் தன்மையை இழந்து குருடன் போலாகியிருந்தான். அதன் விளைவுகள் அவனைச் சுற்றி எல்லோரிடத்திலும் பரவியிருந்தன. கர்ணன் முதலானோர் அவனது செல்வாக்கின்கீழ், அவனுடைய கட்டுப்பாட்டில் இருந்தனர். பகையையும், போரையும் தவிர்ப்பதற்கு நான் அவனிடம் ஒரு தூதுவனாகப் போயிருந்த போது, என்னைக் கைது செய்யத் தயாராகும் அளவுக்கு அவன் அகங்காரம் வளர்ந்திருந்தது. நான் ஆயுதங்கள் ஏந்திப்போரிட விரும்பாததால், பாண்டவ சகோதரர்கள் ஐவரை நான் முன்னிறுத்தினேன். என்னுடைய சக்திதான் திரௌபதியின் வடிவத்தில் மகாபாரதப்போரை நடத்துவதற்காகவே அவதரித்தது. திரௌபதி என்ற ஒரு உயர்ந்த பெண்மணியை, ஒரு பதிவிரதையாக - தன் கணவனிடம் மட்டுமே முழுமையான பக்தியுடன் இருந்தவளை, ஐந்து கணவர்களுடன் ஒரே சமயத்தில் வாழ்ந்தவளாக இழிவுபடுத்தி மிகைப்பட்ட கற்பனைகளில் ஈடுபட்டுவிட்டார்கள். அவள் ஒருவரை மட்டுமே திருமணம் செய்து கொண்டு அவருக்கு மட்டுமே மனைவியாக வாழ்ந்தாள். மற்ற அனைவரும் அவளைக்

கண்டு பயந்திருந்தார்கள். அவள் தெய்வீக சக்தியின் அவதாரம் என்பதை தர்மராஜா (யுதிஷ்டிரர்) அறிந்திருந்தார். என்னைப் பற்றி எத்தனையோ கற்பனைக் கதைகளை உருவாக்கியது போலவே, திரௌபதியின் குணத்தையும் நடத்தையையும் பற்றி காட்டுமிராண்டித்தனமாகக் குறைகூறும் வகையில் சொல்லப்பட்டிருப்பவை யாவும் பொய்களே ஆகும்.''

''நியோகா என்ற பழக்கம் (அதாவது ஒரு கன்னிப்பெண்ணோ அல்லது விதவையோ குழந்தைப் பேற்றுக்காக ஒரு ஆணுடன் தற்காலிகமாக சேர்ந்து வாழும் முறை) சம்பந்தமாக குந்தியைப் (கர்ணனுக்கும், பஞ்ச பாண்டவர்களுக்கும் தாய்) பற்றிக் கூறப்பட்டுள்ள விஷயங்களில், அதன் உண்மை என்னவென்றால், அவள் தனது ஆன்மீக சக்தியினால் வெவ்வேறு தெய்வீக ஆற்றல்களை (இயற்கையின் சக்திகளை ஒரு விழிப்புற்ற தன்மையில் தனது கருப்பைக்குள் ஈர்த்துக் கொண்டாள் என்பதேயாகும். இயற்கையின் எந்த ஒரு சக்தியையும் மற்றும் அனைத்து சக்திகளையும் கூட, உயிருடன் மற்றும் விழிப்புடன் இருக்கின்ற ஒன்றாக மாற்றிக்கொள்ளும் அளவுக்கு ஆன்மீக சங்கல்ப சக்தி அக்காலங்களில் முன்னேற்றமடைந்த நிலையில் இருந்தது. கர்ணனுடைய (மற்றவர்களுடையதும்) பிறப்பு பற்றிய கதை உண்மையானதே ஆகும்.

எனினும், குழந்தை பெற விரும்பிய பெண்கள் எளிதான (அல்லது பொதுவான) நியோகா வழியில் செல்ல இணங்கவில்லை. இரண்டாவது கணவனை அடைவது எந்த ஒரு சூழ்நிலையிலும் ஒரு பெண்ணுக்கு மதிக்கத்தகாததாக இருந்தது. அதனால் வர்ணக்கலப்பு (வம்சங்களின் கலவை) ஏற்பட்டு விடும் என்பதால் அப்போதைய சமுதாய ஒழுங்குமுறை அப்படி இருந்தது. அந்தச் சமயத்தில் பெண்கள் விதவைகளாக ஆகவில்லை. ஏதோ ஒரு காரணத்தால் ஒரு ஆண் போரிலோ அல்லது ஏதோ ஒரு காரணத்தாலோ இறக்க நேரிட்டால் இறந்த கணவருடனே இறப்பதையே (உடன்கட்டை ஏறுதல் போன்ற முறையில்) வலியுறுத்தப்பட்டார்கள். ஆண், பெண் இருவருமே பிரம்மச்சரியத்தை அனுசரித்தார்கள். இதனால் மட்டரகமான காம

இச்சை இல்லாதிருந்தது. அது மட்டுமன்றி அனைத்து இடங்களிலும் பள்ளிகள் (குருகுலப் பள்ளிகள்) இருந்தன. இவை குழந்தைகளுக்கு முதலிலிருந்தே நற்பண்புகள் உடைய நன்னடைத்தைக்குப் பயிற்சி அளித்தன. ஆரம்பத்திலிருந்தே தர்மநெறி சார்ந்த சிந்தனைகளை வளர்த்துக் கொள்வதற்கு அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. குழந்தைகளுக்கு நல்ல கல்வியளிப்பது மற்றும் நன்னெறிகளில் பயிற்சியளிப்பது தன் கடமை என்று ஒவ்வொரு முனிவரும் கருதினார். சட்டங்களை மீறுகின்றவர்களுக்கு அரசனால் உறுதியாக தண்டனை கிடைக்கும் என்ற விதிமுறைகள் இருந்தன. அரசனின் கருவூலம் பொதுமக்களுக்காகவே இருந்தது. அது மக்களின் நலத்துக்காகவே செலவிடப்பட்டது. மண் வளமாக இருந்தது. பயிர்கள் நன்றாக விளைந்தன. மக்கள் செல்வச் செழிப்புடன் இருந்தார்கள். அவர்களின் தேவைகள் குறைவாக இருந்தன. அவர்களின் பெரும்பகுதி நேரம் கடவுளின் நினைவிலேயே செலவிடப்பட்டது. நான் (ஸ்ரீ கிருஷ்ணர்) பிறந்த அந்த இனம் செழித்து வளர்வதைக் காண விரும்புகிறேன். அந்த இனம் ஒரு பயங்கரமான வீழ்ச்சியினால் துன்புற்றது, அதற்கு பூஜாரிகளே பொறுப்பாளிகள். அவர்கள் நரகத்தை அடையுமாறு விதிக்கப்பட்டார்கள். அவர்களில் சிலர் பூஜாரிகளாக இருந்தாலும், தங்களை ஒருநாளும் அவ்வாறு கருதாமல் நடந்துகொண்டவர்களை ஒரு பக்கமாக ஒதுக்கிவிட்டேன். மிருகங்களை விட மேலானவர்களாக இல்லாத மூடர்களாக இருந்தாலும், மற்றவர்கள் தங்கள் பாதங்களில் பணிந்து வணங்க வேண்டுமென்று விரும்பி, அதற்காக எப்போதும் தயாராக இருந்தவர்களைத்தான் நான் தண்டித்தேன். அது போன்றவர்களில் பெரும்பாலோர் சிறையில் இருப்பது போன்றே நரகத்தில் அவர்கள் இருப்பார்கள்.

‘‘நியோகம் என்ற வார்த்தைக்கு ஒருவருடன் சேர்ந்து வாழ்வதன் மூலம் குழந்தைகளைப் பெறுவது என்பது பொருள் அல்ல. எனக்கு எட்டுராணிகள் (மனைவிகள்) இருந்தார்கள். ருக்மினி தான் அவர்களில் மிக மேலானவளாக இருந்தாள். ராதா என் மனைவி அல்ல. அவள் என்னைவிட வயதில் மிகப்பெரியவள். அவளுடன் பழகிய காலத்தில் நான் ஒரு

குழந்தையாகத் தான் இருந்தேன். என்னை அவளுடைய கணவன் என்ற உணர்வுடன் அவள் நேசித்தாள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவளுடைய எண்ணங்கள் எப்போதும் புனிதமாகவே இருந்தன. மகாபாரதத்தில் பிறகு சேர்க்கப்பட்டவை அனைத்தும் ஒரு குறிப்பிட்ட இனத்து மக்களின் சுயநலமான, அறிவாற்றல் உடைய செயல்பாடுகளின் விளைவுதான். அவர்களின் அழிவும் கூட அவசியமேயாகும். வேறு ஒரு சக்தி அவர்களுக்கு நாசத்தை உண்டாக்கும்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் என்னவெல்லாம் வெளிப்படுத்திச் சொன்னாரோ, அவை அத்தனையும் வார்த்தைக்கு வார்த்தை சரியானது. திரௌபதிக்கு ஐந்து கணவர்கள் என்பது வாமாசார போதகர்களின் கற்பனை.''

''இப்போது எங்களது உணர்வுகள் உன்னுள் இறங்கி வருவதைப் போன்றே தங்களுக்குள் இறங்கிய வேதங்கள் வேதகால ரிஷிகளால் உணரப்பட்டன. கால வேற்றுமைகளுக்குத் தக்கபடி அதன்வடிவம் மட்டுமே சற்று வேறுபட்டிருக்கிறது. உனது உள்முகத் தொடர்பு அந்தப் பழைய வழிக்கு இசைந்ததாக இருந்திருந்தால், இப்போது உன்னால் எதையும் கேட்டுணர்ந்து புரிந்து கொண்டிருக்க முடியாது. தலைமுறை தலைமுறையாக பிரம்மச்சரியத்தை அனுசரித்து வந்ததன் காரணமாக, உள்முகத் தொடர்பு இயற்கையின் குரலுக்கு ஒத்திசைவு உடையதாகவும், அதே மாதிரியாகவும் இருந்ததனால், அம்மாதிரி ஒரு திட்டத்தை (அதாவது கேட்டுணரும் தன்மையை உடைய தகவு அமைப்பை) மக்கள் இயற்கையாகவே பெற்றிருந்தார்கள். அதை லேசாகத் தூண்டித் துவங்க வைப்பது மட்டுமே தேவையாக இருந்தது. இந்தக் காரணத்தினாலேயே உள்ளுணர்வின் மூலமாகக் கேட்டுணர்வது (ஸ்ருதி) இப்போது வேறு வடிவத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. உனக்கு வந்து கொண்டிருப்பது எதுவோ அதுவும் அனைத்தையும் கடந்ததான (அறிய இயலாத) ஒன்றின் குரல் தான்.''

R2 - விடமிருந்து வந்த ஒரு கேள்விக்குப் பதிலளித்து வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "ஒரு மனிதனின்

ஒவ்வொரு செயலும் அவன் மனதில் ஒரு பதிவை விட்டுச் செல்கிறது. அது அவனது காரண சரீரத்துடன் எப்போதும் தொடர்பில் இருக்கிறது. அவன் ஒரு இடத்திலிருந்து கிளம்பி (உடலைவிட்டு உயிர்பிரிந்து) மற்றொரு இடத்தில் மீண்டும் பிறக்கும்போது (சேர்த்து வைக்கப்பட்ட பதிவுகளாகிய) அந்த மூலப்பொருள் அப்படியே நிலைத்து இருக்கிறது. அது அவனால் (முந்தைய பிறவியிலிருந்து புதிய பிறவிக்கு) எடுத்துச் செல்லப்படுகிறது. இப்போதைய பிறவியில் ஒருவன் நற்செயல்களைச் செய்யவில்லையென்றால், முன்பிறவியிலிருந்து எடுத்து வரப்பட்ட பதிவுகள் அவைகளின் வளர்ச்சியாக (போகமாக) மலர ஆரம்பிக்கின்றன. அதாவது, அவை பலனளிப்பதற்கு சாதகமான சூழ்நிலை கிடைக்கும் போது அவை வாழ்வின் இன்பங்களாக அனுபவிக்கப்படுகின்றன அல்லது துன்பங்களாக கஷ்டப்படுத்துகின்றன. இப்போதைய பிறவியில் நிகழ்த்தப்பட்ட செயல்கள் எதுவாயினும், அவற்றின் தொடர்ச்சியாக பெரும்பாலும் உடனடியான தண்டனையை அல்லது வெகுமதியைப் பெறச் செய்கின்றன; அவற்றில் சில, இனி வருங்காலத்தில் பிறகு பலன்தரும் வகையில் எடுத்துச் செல்லப்படுகின்றன. பிரபஞ்ச சிருஷ்டியின் அனைத்தும் முடிவில் கரைந்து அழியும் வரையில் இது சங்கிலித் தொடராக நிகழ்ந்து கொண்டே இருக்கும். தங்கள் பலனைத் தருவதற்காக (இன்பமாகவோ, துன்பமாகவோ அனுபவிக்கப் படுவதற்காக) இப்பதிவுகள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக வந்து கொண்டே இருக்கும். இது ஒரு முடிவுக்கு வந்தாலன்றி இந்தச் சங்கிலித் தொடர் இடையறாமல் தொடரும். இந்தப் பலனளிக்கும் செயல்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவது எப்படி என்ற கேள்வி இப்போது தோன்றுகிறது. யாரிடமாவது சரணடைந்து இப்பதிவுகளின் பலன் பற்றிய சிந்தனை இல்லாதிருப்பதுதான் இதற்கு மிகச் சிறந்த சாதனம். இயற்கையில், இதற்கென்று ஒரு கணக்குப் புத்தகம் கிடையாது (செயல்கள் மற்றும் அதற்கான பலன்கள் குறித்து பற்று, வரவு நிலுவையை எழுதும் கணக்கு ஏடு ஏதும் இல்லை); ஒரு மனிதன் தனது சொந்த விதியை அவனே

உருவாக்கிக்கொள்கிறான். அந்தப் பதிவுகள் பலனளிக்கும் விதம் பற்றிய வடிவமைப்பையும் அவனே உருவாக்கிக்கொள்கிறான்.''

வேறு ஒரு கேள்விக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து பதில் கூறினார் :- "அதற்கான சூழ்நிலை சாதகமாக அமையும்போது, அந்தப் பதிவுகள் பலனளிக்கும் முறையானது வடிவம் பெறுகிறது என்று இந்தக் கேள்விக்கு நான் முன்பே பதில் சொல்லிவிட்டேன். இதில் கூட்டு வட்டி போல் பதிவுகள் பெருகுக என்ற (பதிவுகள் மேலும் பதிவுகளை உண்டாக்குவது பற்றிய) கேள்வியே இல்லை. மூன்றாவது அல்லது நான்காவது இடம் பெறும் மெய்யுணர்வு நிலை என்பதும் இல்லை. (அதாவது ஒரு போட்டியில் நாம் காண்பது போல முதலிடம், இரண்டாம் இடம் என்பது போன்ற தரவரிசைக் கிரமம் இல்லை. மெய்யுணர்வு அடைதல், இன்னும் அடையவில்லை என்பது தான் உண்டு) அனைத்து விஷயங்களும் வெப்பத்தின் மூலமாகவே முளைவிடுகின்றன மற்றும் வளர்கின்றன. முன் பிறவியிலிருந்து கொண்டுவரப்பட்ட பதிவுகள் பலனளிப்பதற்கான தகுந்த பழுத்த தன்மையானது, இப்பதிவுகள் சத்தியத்தின் மீது கொண்ட அன்பின் வெப்பத்தில் எந்த அளவுக்கு தொடர்பிலேயே இருக்கிறதோ அந்த அளவுக்கு வேகமாக வளர்ச்சியடையும்; இந்த விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். மற்றும், அப்பதிவுகள் உடனடியாக பலன் தருவதற்கு ஏற்றதாக ஒரு சாதகனின் சக்தி இருந்தால், அவை வருங்காலத்திற்குக் கொண்டு செல்லப்படுவதை அது தடுக்கிறது. (அதாவது சாதகனின் தற்போதைய சக்தி, பதிவுகள் வருங் காலத்திற்குப் போகாதபடி தடுத்து, இப்போதே பலன் தரும்படி செய்ய முடியும்.) நமது மார்கத்தில் சாதகனுக்கு இறுதி இலட்சியத்தின் மீது உண்மையான அன்பு வளர்ச்சி அடைந்திருந்தால் அவனது இப்போதைய செயல்கள் பதிவுகளை உருவாக்குவது நிறுத்தப்படுகிறது. கடந்தகாலச் செயல்களின் பதிவுகள் மட்டுமே எஞ்சியிருக்கின்றன. இது ஒரு தத்துவ ஞானம்; இதை விளக்கமாகச் சொல்ல முடியும் என்றாலும், அதைப் பல பக்கங்களுக்கு எழுதிக்கொண்டே இருக்க வேண்டியிருக்கும். எந்த ஒரு இடைமனிதரின் மூலமாக, இந்த அனைத்து விஷயங்களையும் பற்றிய ஞானம் வந்திறங்குகிறதோ,

அம்மனிதரின் மனம் இந்தப் புதிரான விஷயங்களை அவ்வளவு அதிகமான நேரத்துக்கு வெளிப்படுத்துவதில் தொடர்ந்து வேலை செய்ய இயலாது. அது மட்டுமன்றி, இவையனைத்தையும் கிரகித்து அறிந்து கொள்வது அவ்வளவு தேவையும் இல்லை. ஒரு சில வார்த்தைகளில் ஏராளமான ஞானத்தை நீ புரிந்து கொள்வதற்காகக் கூறியிருக்கிறேன். அதை நீ (R2) நடைமுறையில் காண விரும்பினால், அது சாத்தியமாக முடியும். அதற்கு நேரமும் குறைவாகத் தான் ஆகும். ஆயினும் ஒரு விஷயம் நிச்சயமானது; அதாவது ஒரு பதிவு வந்திறங்கிவிட்டால் அது பலன் தருவதற்கான செயல்வடிவம் உடனே துவங்கிவிடும். அது முற்றிலும் ஏற்கத்தக்கதாக (விரும்பக்கூடியதாக) இருக்க வேண்டியதில்லை. தனது இதயத்தில் ஒரு பெரும் தொகுப்பாக பதிவுகள் இறங்கியது பற்றி பிரியமான ராம்சந்த்ரா தனது நாட்குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறார், அதனால் கடந்த பதிமூன்று ஆண்டுகளாக அவர் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்.''

<u>15-10-1944</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் குறிப்பான கட்டளைகள் :- "எனக்கு மேலாக இருக்கும் அனைத்து இணைப்புக்களையும் வெட்டிவிடு; இதைத்தவிர வேறு கட்டளை எதுவும் இருக்க முடியாது. இதைத்தவிர வேறு எந்த உபாயமும் (வழியும்) இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு சிந்தனையில் வரவில்லை. கடவுளின் கட்டளை பற்றிய விஷயத்தில் நான் எதுவும் செய்ய இயலாதவனாக இருக்கிறேன். என் மதிப்புயர்ந்த மாஸ்டரின் கையால் தீட்சை அளிக்கப்பட்டவர்களுக்கு, மீண்டும் என்னால் தீட்சை அளிக்கப்பட வேண்டியிருக்கும். வேறு வார்த்தைகளில் சொன்னால் என் கையால் தீட்சை பெறாதவர்கள் அனைவருக்கும் அவர்கள் முன்பு பெற்ற தீட்சை நீக்கப்படும். இதில் நான் ஏதும் செய்ய இயலாது. என் மாஸ்டரின் சார்பாக நான் யாருக்கெல்லாம் தீட்சை அளித்தேனோ அவர்கள் புதிதாக தீட்சை பெறத் தேவையின்றி என்னுடன் தொடர்பில் நீடித்திருப்பார்கள். அப்போது கிடைத்த என் மாஸ்டரின் சக்தியை அல்லது தீட்சையின் பலனை என்னிடம் இழுத்துக் கொள்வேன்.

என்னுடைய மதிப்புயர்ந்த மாஸ்டர் அவருடைய மாஸ்டரின் சார்பாக யாருக்கு தீட்சை அளித்தாரோ அவர்களின் விஷயத்தில் தான் சிக்கல் தோன்றுகிறது. எனது ஆதிகுரு (குருவின் குரு) தன் குருவின் சார்பாக யாருக்கு தீட்சை அளித்தாரோ அவர்களின் விஷயத்திலும் இதே சிக்கல் தான். இது இப்படியே தான் போகும்.''

"J…வின் K1 - க்கு இந்தப் பயிற்சி முறை இப்போது மீண்டும் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்பு இதனுடன் இணைக்கப்பட்டிருந்த பயிற்சி முறைகள் அனைத்தும் முடிந்துவிட்டன என்ற மெய்யறிவைக் கொடுக்கவும் நிச்சயமாக ஒரு அடையாளம் (குறிப்பு) காட்டுவதன் மூலமாக இந்த வேலையைச் செய்ய முடியும்; ஆனால் இதை வருடாந்திர விழாவுக்குப் பிறகு நீ செய்ய வேண்டும். உனது மதிப்புக்குரிய மாமிக்கு (லாலாஜியின் மனைவி) ஆன்மீகப் பயிற்சியளிப்பதற்கான அனுமதியை நீ கொடுக்கும் போது, அப்படி அனுமதியளிப்பதற்கு முன்பாக என்னோடு அவளுக்குத் தொடர்பு உண்டாக்கி நிலைநிறுத்த வேண்டும். அந்த வகையில் என்ன விதமான சிரமங்கள் வந்தாலும் அவையனைத்தையும் பற்றி என்னிடம் ஆலோசனை கேட்கவும்.''

மாலை 5 மணிக்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- "இறைச்சி உண்பது பற்றி மகாபாரதத்தில் சாந்திபர்வத்தில் பீஷ்ம பிதாமகர் சொன்னதாகக் குறிப்பிடப்பட்டிருப்பது பிறகு அதில் சேர்க்கப்பட்டதாகும். இறைச்சி உண்பது நிச்சயமாக உடலின் ஆரோக்கியத்திற்கு நல்லது. அர்ஜுனனின் மூத்த சகோதரன் பீமன் மாமிச உணவு சாப்பிடுகிறவனாக இருந்தான். கடவுளை மெய்யுணரும் பாதையில் பயணம் செல்கிறவர்கள் மாமிச உணவில் விருப்பம் கொள்ளக்கூடாது. அவர்களுக்கு அத தீமையானது. உன் ஆன்மீக குரு இந்தக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டவர். உனது ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு உனக்கு இது அனுமதிக்கப்பட்டுள்ளது.''

''ராதாவை விட மேலான அளவுக்கு வேறு யாரும் என்னை நேசிக்கவில்லை. இரண்டாவது இடத்தில் கோபிகைகள் இருந்தார்கள். ராஸலீலை (ராதா உள்பட அனைத்து

கோபிகைகளும், எல்லாக் கட்டுப்பாடுகளையும் கைவிட்டு இரவு முழுவதும் கிருஷ்ணனுடன் நடனமாடிக் கொண்டாடியது) மற்றும் ஒவ்வொரு கோபிகையும் கிருஷ்ணனை தனது நடனத்துணையாக ஒரேசமயத்தில் கருதியிருந்தது.) பற்றிய வர்ணனை காதல் கேளிக்கைகளில் விருப்பம் மிகுந்த, காதலுணர்வு மிக்க கவிஞர்களின் கற்பனையாக (என் வாழ்க்கைச் சரித்திரத்தில்) பின்னால் சேர்க்கப்பட்டதாகும்.''

''க்ஷத்திரியர்கள் (போர்வீரர்கள்) வேட்டையாடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். இப்போதும் கூட அது அனுமதிக்கப்படுகிறது. ஆயினும் அவர்கள் அபாயகரமான விலங்குகளை மட்டுமே வேட்டையாட வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. வீரத்தில் பீஷ்ம பிதாமகருக்கு இணையானவர் வேறு யாரும் இல்லை. அவருடன் ஒப்பிடும் போது அர்ஜுனன் வெறும் பள்ளிச் சிறுவன். அக்காலத்தில் சூதாடுவது மிகவும் பரவியிருந்தது. பிரபலமாகவும் இருந்தது. அதைத் தடை செய்யும் சட்டங்கள் அப்போது இல்லை. இந்த விஷயத்தில் பீமனின் சங்கல்ப சக்தி அந்தப் பகடையில் அவன் விரும்புவது போல எண் விழும் அளவுக்கு அவ்வளவு வலிமை மிக்கதாக இருந்தது. ஆகையால் தான் அவன் நேரடியாக விளையாடாதபடி ஒதுக்கப்பட்டான். அர்ஜுனன் பட்ட கஷ்டங்கள், அவன் சந்தித்த பிரச்சனைகள் பற்றிக் கூறப்பட்டுள்ள விஷயங்கள் முற்றிலும் சரியானவை. பீமன் கீசகனைக் கொன்றதும் உண்மை.''

கங்கையிடமிருந்து பீஷ்ம பிதாமகர் பிறந்தது பற்றிய கேள்விக்கு ஸ்ரீ கிருஷ்ணர் கூறிய பதில் :- "கங்கை ஒரு பெண் தெய்வம் அல்ல, அது மருத்தவத் தன்மைகள் உடைய ஒரு பெரிய நதி. இந்தக் கதை கங்கையின் பெருமையை நிலைநிறுத்தும் கண்ணோட்டத்தில் உருவாக்கப்பட்டது. பீஷ்ம பிதாமகர் பாண்டுதேசம் என்று கூறப்பட்ட ஒரு ராஜ்ஜியத்தின் இளவரசியின் மகன் ஆவார். அவள் மிகவும் துணிவும் வீரமும் உடையவள். ஈடு இணையற்ற ஒரு மாவீரனை மகனாகப்பெற விரும்பி அதற்காக விரதநெறிகளைப் பயிற்சி செய்தாள். இந்த எண்ணத்தையே மனதில் கொண்டு கணவனுடன் வாழ்ந்தாள்.

இது சம்மந்தமான மற்ற விஷயங்கள் அனைத்தும் மிகைப்படுத்தப்பட்டவை. படகோட்டியின் (மீனவனின்) மகள் சம்மந்தமான கதை தவறானது. அவள் க்ஷத்திரியப் (அரச வம்சத்துப்) பெண். குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் அவள் (சாந்தனு மகாராஜாவை) திருமணம் செய்து கொள்ள ஒப்புக்கொண்டாள். க்ஷத்திரிய தர்மத்தை (அதற்குரிய கட்டாயக் கடமைகளை) சிறப்பான விதத்தில் அனுசரிப்பதில், அதன் கௌரவத்தை மேலாகக் காப்பதில் பீஷ்ம பிதாமகரை விடச் சிறந்தவர் யாருமில்லை. அயோத்தியின் (தசரதர் மகன்) ராமனுக்குப் பிறகு பீஷ்மர் மட்டுமே அதற்கு சிறந்த உதாரணமாக இருந்தார். பழமையான நூல்கள் பலவற்றில் தவறாகச் சேர்க்கப்பட்டவைகள் அனைத்தும் உன் மூலமாகத் திருத்தம் செய்யப்படவேண்டுமென்று நான் விரும்புகிறேன். மகாபாரதத்தைத் திருத்தி சரிசெய்வது முடிந்த பிறகு ராமாயணம் பற்றி என்னிடம் நீ கேட்கலாம். வேதங்களிலேயே கூட நிறைய பிற்சேர்க்கைகள் செய்யப்பட்டுள்ளன. இன்று இருப்பதுபோல வேதங்களின் தொகுப்பின் அளவு ஆரம்பத்தில் அவ்வளவு பெரியதாக இருக்கவில்லை. உனக்கு சமஸ்கிருத மொழி தெரியாமல் இருப்பது வருந்தத்தக்கது. அதனுடைய மொத்தக் கருத்தும் சாராம்சமும் ஆக வேதங்களின் சரியான விளக்கத்தை உன் குருவிடமிருந்து நீ தெரிந்து கொள்.''

“தீட்சை அளிக்கும் சமயத்தில் (பின்பற்ற வேண்டிய முறைகள்) என் ஆயுட்காலத்தில் என் கோட்பாடுகள் எப்படி இருந்ததோ அதே விதமாகவே இருக்கும். இது சம்பந்தமாகவும் மாறியிருக்கும் காலத்துக்குத் தக்கவாறு (புறக்கோட்பாடுகளில்) திருத்தங்கள் தேவைப்படும் என்பதால், அதில் உன் குரு உனக்கு உதவி செய்வார். மேலாதிக்கம் செய்யும் அந்த ஜாதி இப்போதும் அப்படியே இருக்க முடியாது. அதன் காலம் முடிவுக்கு வந்துவிட்டது. உன்னுடைய வாழ்க்கை வேலை செய்வதிலேயே செலவிடப்படும். என்னுடைய கௌரவத்தை புதிதாக மீண்டும் நீ நிலைநிறுத்த வேண்டியிருக்கும். உன்னுடைய குரு உன் கூடவே இருப்பார். அவர் உனக்கு உத்தரவுகள் இடுவார். அவை என் உத்தரவுகளாகவே இருக்கும். என்னுடன் உனது இணைப்பு

நேரடியாகவும், அதேபோல உன் குருவின் மூலமாகவும் இருக்கும். சூழ்நிலைகளுக்கு என்னவிதமாகத் தேவைப்படுமோ (அது நேரடியான இணைப்பினால் அல்லது குருவின் மூலமாக – எப்படி வந்தாலும்) அதற்கேற்றபடி வேலைசெய். உன் குருவின் மூலமாக என் சக்திகள் அனைத்தும் உனக்கு வரும். தவிர நேரடியான கட்டளைகளும் வரலாம்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "உயர் மாண்புடைய பகவான் ஸ்ரீகிருஷ்ணர் உனக்காக ஒரு பெரும் புதையலை ஒதுக்கி வைத்திருக்கிறார். உன்னுடைய உடம்பு என்ற திரைமறைவில் இருந்து கொண்டு வேலை செய்வதற்கு நான் நியமிக்கப்பட்டிருக்கிறேன். இது கடவுளின் கட்டளை. அதனால் அதிலிருந்து விடுபடுவது முடியாது. இவ்விஷயம் சம்மந்தமாக பல ஆலோசனைகள் சிந்திக்கப்படுகின்றன என்பதைப் பற்றி முன்பே நான் அறிகுறியான குறிப்புகள் கொடுத்திருக்கிறேன். உன்னிடம் காண்பது போல இந்தப் பூரணமான ஐக்கிய நிலையை வேறு யாரிடத்திலும் பார்க்க முடியாது.''

M1 - இடமிருந்து வந்த ஒரு கேள்விக்குப் பதிலாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "இறைதூதர் என்ற தன்மை நிலைக்கு சற்றுக்குறைந்த எல்லை வரையில் சீடர்கள் உன்னுடன் ஐக்கியம் அடைய இயலும். இறைதூதர் என்ற ஸ்தானத்தின் புள்ளியில் இருந்து (சக்தி மையத்திலிருந்து) யாருக்கும் பிராணாஹூதி அளிக்க வேண்டாம். அது வேறு ஒருவருக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் முடிச்சு (இதன் ரகசியம்) பிறகு உனக்கு வெளிப்படுத்தப்படும். உன்னை ஒருவரும் புரிந்து கொள்ளவில்லை.''

<u>16-10-1944</u>

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- "மகாபாரதப் போர் 18 நாட்கள் தொடர்ந்து நடந்தது. வேறு நாட்டு மக்களும் அதில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்களில் பலர் சுமை தூக்குகிறவர்களாக வேலை செய்தார்கள். பப்ருவாகனன் கதை (அஸ்ஸாமிய ஆதிவாசி இளவரசிக்கும் அர்ஜுனனுக்கும் பிறந்த மகன். பிறகு அவன் தனது தந்தையையும் அவரது

சகோதரர்களையும் சண்டையில் தோற்கச் செய்தான்) சரியானதே. அதன் பிறகு அம்மாதிரி ஒரு துணிச்சலான மனிதன் இதுவரையில் பிறக்கவில்லை. குரு துரோணருக்கு மிகவும் அரிதான திறமை இருந்தது. வில்வித்தையில் அவர் மகா நிபுணராக இருந்தார். அந்தக் கலையை அவரிடம் எல்லோரும் கற்றுக்கொண்டார்கள். ஆயினும் அவருடைய நடத்தையில் ஒரு பெரிய குறைபாடு உண்டாகி அவர் மதிப்பைக் குறைத்தது. மலைஜாதி (பில்) இனத்தைச் சேர்ந்த இளைஞன் காரணமாக அது நேர்ந்தது.''

(குறிப்பு : இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பில் இனத்து மலைஜாதி இளைஞனின் பெயர் ஏகலைவன் என்பதாகும். அவன் குலத்தில் தாழ்ந்த மலைஜாதி இனத்தவன் என்பதால் துரோணரிடம் வில்வித்தை கற்பதற்குத் தகுதியற்றவன் என்று விரட்டப்பட்டான். எனவே அவன் திரும்பிச் சென்று களிமண்ணினால் குரு துரோணரின் சிலையைச் செய்து, அதன் முன்னால் நின்று பயிற்சி செய்யத் துவங்கினான். அதில் மிகச் சிறந்த தேர்ச்சியை, நிபுணத்துவத்தை அடையப்பெற்றான். துரோணரிடம் பயிற்சி பெற்ற (பாண்டவ, கௌரவ) இளவரசர்கள் ஒரு சமயம் காட்டிற்குள் வேட்டையாடவும், மற்ற விளையாட்டுகளுக்காகவும் சென்றார்கள். அவர்கள் அழைத்துச் சென்ற நாய் ஒன்று, அங்கே சிறிது தூரத்தில் தனியாகப் பயிற்சி செய்து கொண்டிருந்த ஏகலைவனைப் பார்த்து குரைத்தது. இதனால் இடையூறு செய்யப்பட்ட ஏகலைவன் அந்த நாயைக் காயப்படுத்தாமல் – அது குரைப்பதை மட்டும் நிறுத்துவதற்காக அதன் திறந்த வாயை கச்சிதமாக அடைக்கும்படியாக அம்புகளை எய்தான். இந்த அதிசயத் திறமையைக் கண்டு குரு துரோணரின் சீடர்கள் அனைவரும் வியப்பினால் திகைத்து நின்றார்கள். அதிலும் குறிப்பாக ஏகலைவன் தன்னை துரோணரின் சீடன் என்று கருதியிருப்பதை அறிந்த அர்ஜுனன் அதிர்ச்சியுற்றான். துரோணரிடம் சென்று தன்னையே மிகச் சிறப்பான திறமை உடைய சீடன் என்று அவர் அறிவித்திருந்தாலும், துரோணரை தன் குரு என்று சொல்லிக்கொள்கின்ற ஏகலைவன் தன்னைவிட மிக மேலான திறமை பெற்றிருக்கிறான் என்று குறைப்பட்டு வருந்தினான். அதன் பிறகு துரோணர் ஏகலைவனிடம் சென்றார்.

தன்னை அவன் குரு என்று சொல்வதால், தனக்கு குருதட்சணை தரவேண்டும் என்று கேட்டார். தன்னிடமிருந்து அவர் பெற விரும்பும் குருதட்சணை என்ன என்று ஏகலைவன் கேட்ட போது, ஒரு வில்லாளியாக அவன் அடைந்திருந்த நிபுணத்துவத்தையும், மிகச்சிறந்த தகுதியையும் அழித்து விடுவதற்காகவே, துரோணர் அவனுடைய வலதுகை கட்டைவிரலை அறுத்துத் தரும்படி கேட்டார். ஏகலைவன் உடனே தன் வலதுகை கட்டை விரலை அறுத்தெடுத்து குருவுக்குக் கொடுத்துவிட்டான். எனினும் ஏகலைவன் தொடர்ந்து தனது அரிய திறமையையும், மேலான தகுதியையும் தக்க வைத்துக் கொள்வதற்காக இடதுகையினால் பயிற்சி செய்தான் என்று இக்கதை முடிவடைகிறது.)

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- "இது க்ஷத்திரிய தர்மத்தின் (போர்வீரர்களுக்குரிய கட்டாயக் கடமைகளின்) கோட்பாடுகளுக்கு எதிரானது. பிராமணர்கள் ஆயுதங்களைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டிருந்தது. (துரோணர் பிராமணராக இருந்தும் க்ஷத்திரியர்களுக்கு உரிய செயல்களைச் செய்தார்) இதுவும், ஏகலைவனுக்கு அவர் செய்த துரோகமும், தர்மநெறிக் கோட்பாடுகளுக்கு எதிராக இருந்தன.

பரசுராமர் மற்றும் பீஷ்ம பிதாமகர் பற்றிய கதையும் உண்மை. அவருக்கு நீண்ட ஆயுள் இருந்தது. சிகண்டி என்பவன் அலியாக இருந்தான். அது பற்றிய கதையும் உண்மை.

(இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கதை : பரசுராமர் ஸ்ரீராமனுக்கு அடுத்து வந்த அவதாரமாகக் கருதப்பட்டிருந்தார். பீஷ்மர் பரசுராமரிடம் வில்வித்தை கற்றுக்கொண்டார். பீஷ்மரின் தந்தை சாந்தனு மகாராஜா மச்சகந்தி அல்லது சத்தியவதி என்ற பெண்ணை மணந்துகொள்ள விரும்பியபோது, அத்திருமணத்திற்கு முன் நிபந்தனையாக தன் வயிற்றில் பிறப்பவன் மட்டுமே அடுத்து அரசனாக வேண்டும் என்று அவள் (சத்தியவதி) வாக்குறுதி கேட்டாள். இதனால் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, தான் ஒருபோதும் திருமணம் செய்து கொள்ளமாட்டேன்; தனக்குக் குழந்தைகள் பிறந்தால் ஒருவேளை அவர்கள் அரசுரிமை கோரலாம், என்பதால் "தான் ஆயுள் முழுவதும் பிரம்மச்சாரியாகவே இருப்பேன்" என்று பீஷ்மர்

சபதம் செய்தார். சத்தியவதிக்கும் சாந்தனுவுக்கும் இரண்டு மகன்கள் பிறந்தார்கள். அதில் மூத்தவன் திருமணத்துக்கு முன்பே இறந்துவிட்டான். காசிராஜாவின் மூன்று பெண்களுக்கு சுயம்வரம் நடைபெற்ற போது, பல்வேறு இளவரசர்கள் வந்து கூடியிருந்த சபையில், தனது சகோதரன் சார்பில் பீஷ்மர் அங்கு வந்து, அந்த மூன்று இளவரசிகளையும் தூக்கிச் சென்றார். இரண்டு இளைய சகோதரிகளை தனது சகோதரன் விசித்திர வீரியனுக்கு (சத்தியவதியின் இரண்டாவது மகன்) மணமுடித்தார். ஆனால் காசிராஜாவின் மூத்த மகள் அம்பை, தான் ஒரு குறிப்பிட்ட மன்னனைத் தன் கணவனாக வரித்திருப்பதாக (மனதில் உறுதிசெய்து கொண்டிருப்பதாக) கூறி, வலுக்கட்டாயமாக தன்னை குரு ராஜ்ஜியத்துக்கு அழைத்து வந்துவிட்டதால், தன் மனவிருப்பம் ஈடேறுவதை பீஷ்மர் தடுத்துவிட்டார் என்று குறை கூறினாள். அதைக்கேட்ட பீஷ்மர் அந்த மூத்த இளவரசியாகிய அம்பையை, சீர்வரிசைகளுடன் மரியாதையோடு அம்பை திருமணம் செய்து கொள்ள விரும்பிய அரசன் சால்வனிடம் அனுப்பிவைத்தார். அவளை காசிராஜன் மகளாக மட்டும் அல்லாமல் குரு வம்சத்தின் மகளாகவும் கருதி சால்வன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆனால் சால்வன் “பீஷ்மரால் ஜெயிக்கப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது தனது வீரத்துக்கு இழுக்கானது’’ என்று சொல்லி திரும்பி அனுப்பிவிட்டான். அம்பை பீஷ்மரிடமே திரும்பி வந்து தன் ராஜ குல வழக்கப்படி இயற்கையான, கௌரவமான முறையில் தன் மனம் விரும்பியவனை திருமணம் செய்து கொள்வதைத் தடுத்து, வலுக்கட்டாயமாக தன்னை அவர் அழைத்து வந்து விட்டதால் பீஷ்மரே தன்னைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினாள். தனது சிற்றன்னைக்குத் தான் அளித்த வாக்குறுதியினால், இதில் தன்னால் எதுவும் செய்ய இயலாது என்பதை பிஷ்மர் அம்பையிடம் தெளிவாகக் கூறினார். மேலும் தனது சிற்றன்னையின் மகனுக்கு அல்லது அவளே தேர்ந்தெடுக்கும் வேறு யாருக்காவது மிகவும் கௌரவமான முறையில் திருமணம் செய்விப்பதாகவும் கூறினார். ஆனால், அம்பை மிகவும் சீற்றத்துடன், இப்போதைய சூழ்நிலையில்

பீஷ்மர்தான் தன்னைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும்; வேறு எதுவும் சாத்தியமில்லை என்று வற்புறுத்தினாள். பீஷ்மர் மீண்டும் தன் நிலையை எடுத்துச் சொல்லி அதை மறுத்த போது அம்பை பரசுராமரிடம் சென்று தனக்கு உதவியும் நியாயமும் கேட்டாள். பீஷ்மரிடம் பேசி அவரை சம்மதிக்க வைப்பதற்கு மற்றும் வற்புறுத்துவதற்கு பரசுராமர் அம்பையுடன பீஷ்மரிடம் வந்து ‘அவளைத் திருமணம் செய்துகொள். இல்லாவிடில் நான் உன்னுடன் போர் செய்வேன்’ என்றார். பீஷ்மர் தனது சபதம் பற்றி அவருக்கு நினைவூட்டி, இதில் தான் ஒன்றும் செய்ய இயலாது என்பதைத் தெரியப்படுத்தினார். தன் வேண்டுகோளை மறுத்ததற்காக கோபம் கொண்ட பரசுராமருக்கும் பீஷ்மருக்கும் இடையே பல நாட்கள் சண்டை நடந்தது. அதில் பரசுராமர் பீஷ்மரை வெல்ல முடியவில்லை. எனவே, பரசுராமர் மனம் வெறுத்து “இனி க்ஷத்திரியர் யாரையும் தன் சீடனாக ஏற்றுக் கொள்ளப் போவதில்லை” என்று சபதம் செய்தார். அம்பை கடுமையான பல விரதங்களை மேற்கொண்டு பிறகு தீ மூட்டி அதில் விழுந்து தன்னை எரித்துக்கொண்டு இறந்து போனாள். பீஷ்மரால் தனக்கு நேர்ந்த அவமானத்துக்குப் பழி வாங்குவேன் என்று சபதம் எடுத்துக்கொண்டு உயிர் நீத்த அம்பை, துருபத மன்னனின் (திரௌபதியின் தந்தை) பெண் குழந்தையாகப் பிறந்தாள். பிறகு சிகண்டி என்ற பெயரில் ஒரு ஆணாகி, போர் வீரனாக மாறி வாழ்ந்தாள்.’’

‘‘மகாபாரதப் போரின் போது பீஷ்மர் துரியோதனனுடைய படைக்கு தலைமை தளபதியாக வந்த போது, அவரை ஜெயிப்பது சாத்தியமில்லை என்ற நிலைமை ஏற்பட்டபோது, கிருஷ்ணனும், அர்ஜுனனும் அவரிடமே சென்று மரியாதை செய்து அவரை வீழ்த்துவதற்கு வழி என்ன என்று கேட்டார்கள். அவர் அம்பை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியை விவரமாகக் கூறி, அம்பையின் மறுபிறவியாக இப்போது ஒரு அலியாக இருக்கும் சிகண்டிக்கு எதிராக (அவள் பெண் என்பதால்) நான் ஆயுதங்களைப் பயன்படுத்தமாட்டேன் என்று சொன்னார். பீஷ்மரின் மரணத்துக்குக் காரணமாக இருந்து, தன் அவமானத்திற்குப் பழி வாங்குவேன் என்று அம்பை (இப்போதைய சிகண்டி) சபதம்

செய்திருப்பது பற்றிச் சொன்னார். அடுத்தநாள் ஸ்ரீ கிருஷ்ணர் சிகண்டியை முன்னிறுத்திக்கொண்டு பீஷ்மருடன் போர் செய்யுமாறு அர்ஜுனனிடம் சொன்னார். அர்ஜுனனுக்கு முன்னால் நிற்கும் சிகண்டி மீது அம்பு எய்ய விரும்பாமல் பீஷ்மர் ஆயுதங்களை எடுக்காமல் தலைகுனிந்து இருந்தார். உடனே பீஷ்மரின் உடல் முழுவதும் அர்ஜுனன் அம்புகளை எய்தான். முடிவில் பீஷ்மர் தேரிலிருந்து விழுந்து அம்புகளாலாகிய படுக்கையில் பல மாதங்களாக கிடந்தார். தான் விரும்பும் போது சாகும் வரத்தை அவர் பெற்றிருந்ததால் உத்தராயணம் எனப்படும் (தைமாதம் முதல் ஆனி மாதம் முடிய) சூரியன் பூமியின் வடபகுதியைக் கடக்கும் காலம் வரையில் அவ்வாறு கிடந்தார். இவ்விதமாக அம்பை பீஷ்மரின் மரணத்திற்குக் காரணமாகி தன் பழியை தீர்க்க முடிந்தது. )

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- ஒரு க்ஷத்திரியனாக வாழும் கோட்பாடுகளிலிருந்து பீஷ்ம பிதாமகர் துளியளவும் பிசகியதில்லை. (பாண்டவ சகோதரர்களின் சார்பாக) மகாபாரத யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர நான் பற்பல தந்திர முறைகளைப் பின்பற்ற வேண்டியிருந்தது. ‘அஸ்வதாமா’ என்ற பெயரில் ஒரு யானை இருந்தது உண்மைதான். யுதிஷ்டரன் அப்போதும் கூட பொய் சொல்லவில்லை. அஸ்வத்தாமா என்ற யானை இறந்தது உண்மைதான் என்று அவர் சொன்ன வாக்கியத்தின் ஒரு பகுதி துரோணரின் காதுகளில் விழாதபடி முரசுகள் அடிக்கும் ஓசை, சங்குகள் ஊதப்படும் ஒலி மற்றும் பிற சப்தங்களுடன் அது கலந்துவிடும் படியாக நான் செய்தேன். ஒருமுறை இப்படிப் பொய் சொன்னதால், யுதிஷ்டிரன் ஒருமுறை நரகத்திற்குப் போக வேண்டியிருந்தது என்பது தவறானது.

(இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் சம்பவம் : போர்க்களத்தில் பீஷ்மர் வீழ்ந்த பிறகு துரியோதனின் படைக்கு குரு துரோணர் தலைமை தளபதியாக நியமிக்கப்பட்டார். அவர் போரில் ஆயுதங்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் நேரத்தில் அவரை யாராலும் ஜெயிக்க முடியாது. அவருக்கு தன் மகன் அஸ்வத்தாமனின் மீது மிகவும் பாசம் உண்டு. ‘தன் மகன் இல்லையென்றால் (இறந்து போனால்) உயிர்வாழ மாட்டேன்’

என்று அவர் சபதம் செய்திருந்தார். எனவே அவரைக் கொல்லும் திட்டத்தில், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தந்திரத்தின் படி துரோணரின் மகன் அஸ்வத்தாமன் சண்டையிட்டவாறே வெகுதூரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தான். அச்சமயத்தில் அஸ்வத்தாமன் என்ற பெயருடைய ஒரு யானையை பீமன் கொன்றான். அஸ்வத்தாமன் கொல்லப்பட்டான் என்ற கோஷம் உரத்தகுரலில் எங்கும் ஒலித்தது. இது குரு துரோணருக்கு மிகப் பெரிய அதிர்ச்சியையும் மனச்சோர்வையும் அளித்தது. அவர் சந்தித்த அனைவரும் அதைச் சொன்னபோதும், அச்செய்தியை அவர் நம்பத்தயாராக இல்லை. யுதிஷ்டிரன் எப்போதும் உண்மையே பேசுகிறவன் என்பது அவருக்குத் தெரியும். எனவே அவர் யுதிஷ்டிரனிடம் சென்று இதைப் பற்றிச் சந்தேகமில்லாமல் தெரிந்துகொள்ள விரும்பினார். பகவான் ஸ்ரீகிருஷ்ணர் சொன்ன அறிவுரையையும் மீறி யுதிஷ்டிரர், ‘‘ஆம். அஸ்வத்தாமா கொல்லப்பட்டான்; அது மனிதனாகவும் இருக்கலாம் அல்லது யானையாகவும் இருக்கலாம்’’ என்று சொன்ன ஒரு பாதியைத் தான் துரோணரால் கேட்க முடிந்தது. மறு பகுதியாகிய ‘‘அது மனிதனோ, யானையோ’’ என்பது ஸ்ரீ கிருஷ்ணருடைய ஏற்பாட்டின் படி வாத்தியங்களின் ஓசையில் அமுங்கிவிட்டது. உடனே துரோணர் ஆயுதங்களை எறிந்துவிட்டு ஒருவிதமான மன அழுத்தத்தில், யோகமுறையின் மூலமாக தன் ஆயுளை முடித்துக் கொள்வதற்காக தியானத்தில் உட்கார்ந்து விட்டார். அப்போது திரௌபதியின் சகோதரனாகிய த்ருஷ்டத்யும்னன், அவன் முன்பே செய்திருந்த சபதத்தின் படி துரோணரின் தலையை தன் வாளினால் வெட்டி எறிந்தான். சிரஞ்சீவியான (சாகா வரம் பெற்ற) அஸ்வத்தாமா தன் தந்தையை இப்படி வஞ்சகத்தால் கொன்றதற்குப் பழி தீர்ப்பதற்காக திரௌபதியின் ஐந்து புதல்வர்கள் உட்பட துருபத மன்னனின் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரையும் கொன்றான். பொய்க்கலப்பில்லாத உண்மையைப் பேசுவதில் யுதிஷ்டிரர் சற்றே தடுமாறிவிட்டதால் அவர் நரகத்தின் வழியாக அழைத்துச் செல்லப்பட்டு பிறகு சொர்க்கம் சென்றார் என்று மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது. நல்லவர்களும், நன்னெறியுடன் வாழ்ந்தவர்களும் ஆகிய பலர்

அங்கே நரகத்தில் இருப்பதைக் கண்டு வியப்படைந்தார். ஆனால் சிறு பாவங்களின் காரணமாக அவர்களின் பங்குக்கு வந்த சில துன்பங்களை அனுபவித்து முடித்தபிறகு அவர்கள் சொர்கத்துக்கு அனுப்பப்பட்டார்கள். அதே போல துரியோதனன் முதலான பாவிகள் தாங்கள் செய்த சிறிய புண்ணியச் செயல்களின் பயனாக சிறிது காலம் சொர்க்கத்தில் இருந்த பிறகு நரகத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.)

ஸ்ரீகிருஷ்ணர் கூறியது :- "திரௌபதியை அவமானப்படுத்தும் தன் முயற்சிகளில் இடைவிடாமல் தொடர்ந்து ஈடுபட்டதன் காரணமாக துரியோதனன் நீண்ட காலம் நரகத்தில் வசித்திருக்க வேண்டியிருந்தது. அந்தப் போர்க்களத்தில் இறந்தவர்கள் எல்லோருமே சொர்க்கவாசத்தைப் பெறவில்லை. சரியான காரணத்துக்காக வீரமரணம் அடைந்தவர்களும், நடத்தையில் களங்கமில்லாதவர்களும் தான் சொர்கத்தை அடைய முடியும்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் விளக்கம் :- "துரியோதனன் பற்றி ஸ்ரீ கிருஷ்ணர் உன்னிடம் சொன்னதெல்லாம் உண்மை."

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தொடர்ந்து கூறியது:- ''அஸ்வமேத யாகம் பற்றிய செய்தி சரியானது. ஒரு குதிரை (அஸ்வமேத யாகம் செய்யப்போகும் மன்னனின் சார்பாக) கட்டவிழ்த்து விடப்படும். அதை யார் பிடிக்கிறார்களோ அவர்கள் அந்த மன்னனுடன் போர் செய்ய வேண்டும். அந்த யாகக்குதிரை போன நாடுகள் யாவும் அம் மன்னனால் வெல்லப்பட்டதாக அறிவிக்கப்படும். அந்த யாகக்குதிரை புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்தபிறகு இப்படி அறிவிக்கப்படும். அதன் பிறகு யாகம் தொடங்கி அதில் அந்தக்குதிரை பலியிடப்படும். ஆனால் கோமேத யக்ஞம் என்பது பின்பு இடைச் செருகலாக புகுத்தப்பட்டது, அதற்குப் பொறுப்பாளிகள் வேறு. உனது விவாதங்களில் குறிப்பிடப்பட்ட எருது பற்றிய கதை தவறானது. (குறிப்பு: ஒரு குறிப்பிட்ட அரசன் ஒவ்வொரு நாளும் ஆயிரம் எருதுகளை (காளை மாடுகளைக்) கொன்று விருந்து வைக்கும் பழக்கம் உடையவனாக இருந்தான் என்று மகாபாரதக் கதையில் ஒரு இடத்தில் குறிப்பு இருப்பது

பற்றி விவாதம் நடைபெற்றது.) இப்படி எத்தனையோ கிளைக் கதைகள் அதில் சேர்க்கப்பட்டுள்ளன. ஹிந்துக்களின் சம்பிரதாயங்கள் மற்றும் பழக்கங்களில் அவை தீய விளைவை உண்டாக்கின. இவையெல்லாம் கற்பனையாக உருவாக்கப்பட்டவை. அதில் எழுதப்பட்டள்ள வேறு பல விஷயங்கள் புரிந்துகொள்ள முடியாதவை. அறிவுடைய மனிதர் யாரும் அதனை நம்பமாட்டார்கள். மகாபாரதப் போரைத் தொடர்ந்து ஹிந்துக்களின் வீழ்ச்சி ஆரம்பமாயிற்று. பிராமணர்கள் தங்கள் விருப்பம் போல அதில் பொய்க்கதைகளை நிறையப் புகுத்தினார்கள். இதனால் மற்றவர்களும் ஹிந்து மதத்திலிருந்து வேறு மதங்களுக்கு மாறும்படியாக நிர்பந்திக்கப்பட்டார்கள். இப்படி கண்மூடித்தனமாக மக்கள் தங்கள் வம்சத்தின் கழுத்தை அறுப்பதில் ஈடுபட்டார்கள். இம் மக்கள் எது சரியோ, எது உண்மையோ அதற்காக உயிரையும் விடும் மனப்பாங்கு இல்லாதவர்கள். வீழ்ச்சியடைந்த காலத்தின் (காலம் கெட்டுப்போனதன்) நிலை இது தான். தர்மத்திற்காகவும், உண்மைக்காகவும் உயிரை விடுவது க்ஷத்திரிய (போர்வீரர்களின்) வம்சத்தின் குணமாக இருந்தது. என் காலத்திலும் கூட இந்த பூஜாரிகள் (பிராமணர்கள்) தீய நோக்கங்களை வளர்த்துக் கொண்டிருந்தார்கள்.''

வணக்கத்திற்குரிய இறைதூதர் முகம்மது (நபி) கூறியது :- “மத அமைப்புகளின் சக்தி துண்டிக்கப்படுவதற்கு நான் கட்டளைகள் கொடுத்திருக்கிறேன். அவற்றிலிருந்து ஆன்மா (மூல சக்தி) விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதனால் காட்டுத்தனமான ஒரு சூழ்நிலை இடம் பெற ஆரம்பித்திருக்கிறது. ஆயினும் அவற்றின் அழிவு இன்னும் துவங்கவில்லை. அதற்கு அறிகுறிகள் தோன்றிவிட்டன என்பதில் சந்தேகமில்லை. வேலை செய்து முயற்சித்துப் பார்க்கவேண்டிய ஒரு தேவை இருக்கிறது. உண்மையாகவே மதிப்புயர்ந்த பெரியோர்கள் பரம்பொருளில் ஐக்கியமடைந்து தங்கள் (மதங்களுடன் அல்லது அமைப்புக்களுடன்) தொடர்பை விலக்கிக் கொண்டு விட்டார்கள்.''

இரவு 10 மணிக்கு மீதமிருந்த கடைசி மத அமைப்பும் தகர்க்கப்பட்டது. புதிய ஒன்று ஆரம்பமாகியது.

<u>17-10-1944</u>

வணக்கத்திற்குரிய இறைதூதர் முகம்மது கூறியது :-

" நேற்று இரவு நீ நன்கு வேலை செய்தாய்.''

கேப்ரியல் என்ற தேவதையின் குறிப்பு :- "மத அமைப்புக்கள் முடிந்து விட்டன. இந்த மக்கள் பயங்கரமான கொடுமைகளில் ஈடுபட்டார்கள். இந்தப் பகுதி முழுவதும் முழுமையாகச் சுத்தமாக்கப்பட வேண்டும்."

அக்டோபர் 16ந் தேதி காலை R2 - வுக்கு குதுப் என்ற தன்மை விழிப்பு அடையச் செய்யப்பட்டது. 17ஆம் தேதி காலையிலும் கூட அதே புள்ளியில் (விழிப்படையச் செய்வதற்கு) பிராணாஹூதி அளிக்கப்பட்டது.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜி சாகேப் கூறியது :-

''எப்போதாவது அவர் என் கட்டளைக்கு எதிராக நடந்து கொண்டால், அவரிடமிருந்து அனைத்து சக்திகளையும் நான் எடுத்துக் கொள்வேன், என்று R2 - விடம் எச்சரிக்கை செய்யவும். என் பெயரால் தீட்சை கொடுத்திருப்பவர்கள் மற்றும் என்னுடன் நேரடித் தொடர்பு இல்லாதவர்கள் யாரோ, அதாவது என்னிடம் தீட்சை பெறாதவர்கள் அனைவரின் தீட்சைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன. N1 - இதை மிக அதிகமாகச் செய்திருக்கிறார். என் பெயரால் N1 - கொடுத்த தீட்சைகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளன. இனி வருங்காலத்தில் எல்லா தீட்சைகளும் இந்தப் புதிய மார்கத்தின் கீழ் செய்யப்படும். ஸந்த் மத் என்ற இந்தப்புதிய முறைக்குள் வருகின்றவர்கள் காயத்ரி மந்திரத்தை ஓதுவது கட்டாயமாக இருக்கும்.''

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- (மாலை 5 மணி)

''அர்ஜுனனின் புகழ்பெற்ற வீரச்செயல் எதுவாயினும் அது என் உதவியால் தான் நிகழ்ந்தது. பீமன் சண்டையிடுவதற்கு ஒருபோதும் தயங்கியதில்லை. அவன் அவ்வளவு புத்திசாலியல்ல. ராஜா யுதிஷ்டிரனின் விவேகத்துக்கு அவனைவிட மேலான வேறு உதாரணம் கிடையாது. பீஷ்ம பிதாமகர் போல பேராற்றல் மற்றும் சரியான நோக்கங்கள் கொண்ட சங்கல்ப சக்திக்கு வேறு உதாரணம் காண்பது அரிது. இந்த விஷயத்தில் ராம

அவதாரத்திற்குப் பிறகு அவர் தான் இரண்டாவது இடத்தில் இருக்கிறார். தன் தந்தைக்குக் கீழ்ப்படிந்து நடப்பது மற்றும் சேவகனாக நடந்து கொள்வது ஆகியவற்றில் அவரைவிட மேலான ஒருவரைக் காணமுடியாது.''

<u>13-10-1944</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- (இரவு 8.30 மணி) ''அரசியல் மாற்றத்தை உண்டாக்குவதற்காக இன்று ஒரு நாள் மட்டும், அகஸ்திய முனிவரை அனுப்பு, அதற்குப் பிறகு இந்த வேலையை நான் M1 - இடம் கொடுப்பேன். B1 - மீதான என் பார்வையின் கோணம் இப்போது ஒரு மாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறது. இந்த மனிதர் சிக்கல்களை (குழப்பங்களை) உண்டாக்கிக் கொண்டிருக்கிறார். நீ அவருக்கு சலுகைகளை அளிக்கிறாய். இதை அறிந்து தடுக்கும் இந்த சக்தி எனக்கு இல்லாமல் போயிருந்தால், இவர்கள் எனது ஆன்மீகக் கூட்டத்தையே (சத்சங்கத்தையே) ஒழித்திருப்பார்கள். நான் அந்தச் சிக்கல்களை நீக்கிவிட்டேன். A1 - ஐப் பொறுத்த வரையில் நான் இவ்விஷயத்தை மென்மையாகக் கையாள்கிறேன்.

M1 - பணிவோடு கூறியது :- A1 - நம்மீது அக்கறையில்லாத வராக இருக்கிறார்.

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில் :- "நல்லவர்களுக்கு நன்மை உண்டாகும், தீயவர்களுக்குக் கெடுதல் வரும்.'' (இது ஒரு பாரசீகப் பொன்மொழி)

இரவு 9.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் எனக்குக் கூறிய தகவல் :- "எல்லாம் வல்ல கடவுளின் நீதிமன்றத்திலிருந்து R2 - வுக்கு குதுப் என்ற தகுதிநிலை அருளப்பட்டிருக்கிறது. கடவுளின் கருணையும் கனிவும் அவர்மீது எப்போதும் திகழ்வதாக. ''ஓ சகோதரரே, உன்னுடைய வழிபாட்டு மண்டபம் மிகச் சிறப்பானது.'' (பாரசீகமொழி இரண்டுவரிப் பாடலில் பாதி).

அகஸ்திய முனிவரிடமிருந்து வந்த தகவல் :- "ஆங்கிலேயே அரசாங்கத்தின் நட்சத்திரம் (ஆதிக்கநிலை) கீழே இறங்கி விட்டது. இது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அதற்காக எனக்கு பாராட்டும்

கிடைத்தது. உங்களுக்கு ஒரு விசேஷமான கடமைப் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது எனக்குத் தெரியவந்தது. உங்களுக்காகவும் நான் பிரார்த்தனை செய்தேன். கடவுள் அதை ஏற்றுக்கொண்டார். இனி உங்களுக்கும் எனக்கும் இடையே நட்பு இருக்கும். நாம் ஒருவருக்கொருவர் உதவியாக இருப்போம். காலம் பெருமளவு மாறியிருக்கிறது. நீங்கள் என்ன நிலையை எய்தியிருக்கிறீர்களோ அதை ஹிந்துக்களில் யாருடைய அதிர்ஷ்டத்தாலும் அடைய இயலாது. ஸ்ரீராம அவதாரத்திறகுப் பிறகு இதுவரை இம்மாதிரி ஒரு மகாபுருஷர் தோன்றியதில்லை. இவையனைத்தும் உங்கள் குரு செய்த அற்புதமேயாகும். அவரளவு தகுதியும் மேன்மையும் உடைய ஒரு சமர்த்த குரு இதுவரையில் ஒருபோதும் பிறந்ததில்லை. நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். என் வேலையில் உங்களை இணைத்துக் கொள்கிறேன். இந்தியாவின் பழமையான சிறந்த நூல்கள் எங்கும் காணாமல் போய்விடவில்லை. ஒரு பெரிய புதையலே என்னிடம் இருக்கிறது. அதற்குரிய சரியான நேரத்தில் அது கிடைக்கும். கடவுளிடமிருந்து கட்டளை கிடைக்கும் வரையில்தான் தாமதம் இருக்கும். நீங்கள் முழு நம்பிக்கையோடு இருங்கள். பழமையான வில்வித்தை பற்றிய விளக்கமான இலக்கணம் கூட தொலைந்து போகவில்லை. அது பற்றிய விவரங்களும் என்னிடம் பத்திரமாக உள்ளன. அத்ரி முனிவருக்கு நான் குறிப்பான உத்தரவுகள் கொடுத்திருக்கிறேன். அவருக்கான வேலை எதுவாயினும் நீங்கள் அதை அவருக்குக் கொடுங்கள்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - க்கு கூறியது :- “அன்புள்ள ராம்சந்த்ராவைப் போல் ஒருவர் என் மூலமாக உருவாக்கப்பட்டது பற்றி இன்று நான் மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறேன். முழு ஆற்றலையும் செயல்படுத்துமாறு நான் அவருக்கு அனுமதியளித்தால் அவர் இந்த உலகம் முழுவதையும் திசை திருப்பமுடியும். ஆயினும் அப்படிச் செய்வதற்கான எண்ணங்களை ஆதரிக்கும் விதத்தில் அவரது மனப்பாங்கை நான் உருவாக்கவில்லை. அப்படி ஒரு மகாபுருஷர் இனி இப்போது வரமாட்டார். அவரது முந்தைய வாழ்க்கை மற்றும் சூழ்நிலைகளை யாராவது ஆராய்ந்து பார்த்தால், சில மகத்தான

பெரியோர்களின் வரலாறுகளில் இம்மாதிரி பல விஷயங்கள் ஏதோ ஒரு வடிவத்தில் இருப்பதைக் காண்பார்கள். மகத்தான பெரியோர்களின் மேன்மையை வெளிப்படுத்தவதற்காக நிகழ்ந்தது போலவே, அவர் அவ்வளவு துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டிருந்தார். அவரால் அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ள முடிகின்ற மற்றும் அவரது இப்போதைய நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளவும் முடிகிற அவரது ஆரம்பகால உள்நிலையானது, எல்லா நிலைகளையும் கடந்து சென்ற பிறகே முனிவர்களுக்குக் கிடைத்த நிலையாகும். (அதாவது முனிவர்கள் அடையப்பெற்ற உச்சநிலை, அவரது ஆரம்ப நிலையாக இருந்தது.) ஆயினும் காலம் அந்த நிலையைத் தக்க வைத்துக் கொள்ளவில்லை. யாருடைய வாழ்க்கை வரலாறு எழுதிவைக்கப்பட வேண்டுமோ அந்த மனிதர் இங்கிருக்கிறார். அழிக்கும் வேலையிலிருந்து அவரை நான் வேண்டுமென்றே நீக்கியிருக்கிறேன். அவரது வழக்கமான பாணியில் தேவையற்ற அவசரம் கூடாது. அது இயற்கையின் போக்குக்கு எதிராக இருக்கும் என்பதால் இயற்கையின் கட்டளைப்படியே, அவரிடம் பணி ஒப்படைக்கப் பட்டுள்ளது.''

"R2 - விடம் இது ஒரு உயர்ந்த நிலை என்பதைச் சொல்லவும். அவர் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.''

## 19-10-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "அந்தச் சமயத்தில் நான் மிகவும் உற்சாகத்துடன் இருந்தேன். R2 - க்கு உடனடியாக குதுப் – உல் – அக்தாப் என்ற நிலையை விழிப்படையச் செய்யுமாறு முன்பே அன்புள்ள ராம்சந்த்ராவுக்கு நான் உத்திரவிட்டேன். ஆயினும் அவருடைய (ராம்சந்த்ராவின்) கருத்தே சரியானது என்பது நிரூபணமானது. R2 - வை நான் அழைத்தேன். உண்மையில் அந்த நிலையை அடைய அவர் இன்னும் தகுதி பெறவில்லை என்பதைக் கவனித்து அறிந்தேன். அவர் இது பற்றி நம்பிக்கையுடன் இருக்கவேண்டும். அன்பின் காரணமாக அவரைப்பற்றி சரியான மதிப்பீட்டை என்னால் செய்ய முடியவில்லை. இன்று நான் மிகவும் உற்சாகத்தில்

இருப்பதைக் கண்டேன். அதனால் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. எனவே R2 - வுக்கு, குதுப் – உல் – அக்தாப் (துருவாதிபதி) என்ற பதவி அளிக்கப்பட்டது. M1 - கவுஸ் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார். அவர்கள் என் பெயரை விளங்கச் செய்வார்களாக. வேறுயாரும் கிடைக்காத பொழுது, எனது பொங்கி எழும் உற்சாகத்தை வேறு வழியின்றி ராம்சந்த்ராவுடன் அமைதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. நான் இப்போது அமைதியாக இருக்கிறேன். அன்புள்ள ராம்சந்த்ராவின் நிலைபற்றி நான் சொல்வதைக் கேளுங்கள். அதைப்பற்றி ஒரு மதிப்பீடு செய்வதற்கு கற்பனை மற்றும் யூகத்தினால் முடியாது. காக்கும் கடவுளின் சக்தியினால் (விஷ்ணு சக்தியால்) அவருடைய நிலை நேற்று இரவு மேலும் உயர்த்தப்பட்டது. அந்த சக்தி அவருக்குள் ஊடுருவிப் பரவியிருக்கிறது. அதற்குக் கீழான நிலையில் உள்ள சக்திக்கு அவருடைய (ராம்சந்த்ராவின்) உத்திரவின்படி வேலை செய்யுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. அகஸ்திய முனிவர் நேற்றிரவு இத்தகவலை அவருக்குத் தெரிவித்தார். எனது உற்சாகம் அதிகரித்திருப்பதன் காரணத்தை அன்புள்ள ராம்சந்த்ரா சரியாகப் புரிந்து கொண்டார். பிரியமான ராம்சந்த்ராவின் நிலையை நான் கவனித்து அறிந்து கொண்டதுதான் அந்தப் பெருமகிழ்ச்சிக்குக் காரணம். நேற்று இரவிலிருந்து எனது நிலை இப்படியாகவே இருக்கிறது. நேற்று இரவு சீக்கிரமாக சென்று விட்டதால் V1 - ஒரு தவறு செய்துவிட்டார்.’’

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- (ஆன்மீக ஒழுக்கத்தில் புதிய பயிற்சி முறையின் கீழ் வாழ்வதற்கான கோட்பாடுகள் பற்றியது) “வாழ்க்கையின் கோட்பாடுகள் மிக எளிமையாக இருக்கவேண்டும். உண்மையே பேசும் பழக்கம் வளர்த்துக் கொள்ளப்பட வேண்டும். பயனற்ற காட்சி இன்பங்கள், காதால் கேட்டு ரசிக்கும் விஷயங்களிலிருந்து விலகியிருக்க வேண்டும். குழந்தைகளின் மீது பிரியமாக இருக்கவேண்டும். பெரியவர்களை மதித்து நடத்தல் வேண்டும். பெற்றோருக்கு சேவை செய்யவேண்டும், நேர்மையான வழியில் வாழ வேண்டும், நல்ல

நோக்கங்களுடன் இருக்கவேண்டும், வேறு ஒருவருக்கு உரிமையான பொருளைக் கவர்ந்து கொள்ளும் எண்ணம் இருக்கக்கூடாது, மற்றவர்களை அச்சுறுத்தும் மனப்பான்மை தவிர்க்கப்பட வேண்டும், அமைதியாகவும், சாந்தமாகவும் இருப்பதற்கு முயற்சி செய்யவேண்டும், பிறர் உள்ளத்தைப் புண்படுத்தக் கூடிய வார்த்தைகளைக் கூறுவதைத் தவிர்க்க வேண்டும், இந்தக்கோட்பாடுகள் அனைத்தையும் பின்பற்றினாலும் எதிரியைக் காணும் போது வாளேந்துவதில் தடையில்லை. ஆனால் இப்படி வாளெடுப்பது தன்னையோ மற்றவர்களையோ பாதுகாத்துக் கொள்வதற்காகத் தான் என்பதை நினைவில் வைத்திருக்கவேண்டும். பிரார்த்தனையும் பூஜையும் (சந்தியா எனப்படும் வழிபாட்ட முறை) தினமும் இரண்டு முறை செய்யப்பட வேண்டும். காலம் மாறிவிட்டதைக் கருத்தில் கொண்டு மூன்றாவதாக ஒரு முறையும் சந்தியா செய்யவேண்டும் என்று நான் கட்டளையிடவில்லை. காயத்ரி மந்திரம் மிகவும் அவசியமானது. இவையனைத்தும் அனைவரும் கட்டாயம் அனுசரிக்க வேண்டிய சாதாரண கோட்பாடுகள்.''

''என் காலத்தில் சடங்குகளை நான் ஒதுக்கித் தள்ளி விட்டேன். சிந்தனையை (எண்ணத்தை) உயர்வாக்கிக் கொள்வதையே முக்கியமாக வற்புறுத்தினேன். (உயர்ந்த எண்ணங்களுடன் இருப்பதை வலியுறுத்தினேன்.) அன்பு தான் அதன் முக்கியமான மூல அம்சமாக இருந்தது. கலியுகம் (திறன் குறைந்த காலம்) நெருங்கி வருவதால் சரணாகதி வழி அல்லது சரணாகதியை நாடுதல் இவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தேன். மனோசக்தி விடை பெற்று விலகிச் செல்வது தொடங்கிவிட்டது. பிரம்மச்சரியம் என்ற பயிற்சி அழியத் துவங்கி விட்டது. என்னால் முன்பு அறிவிக்கப்பட்ட கோட்பாடுகள் இப்போதும் அனுசரிக்கக் கூடியவையாகவே உள்ளன. இந்த விஷயத்தை சுலபமாகவும், எளிமையாகவும் ஆக்குவதற்காகவே என் அவதாரம் நிகழ்ந்தது. கடவுளுடன் ஒன்று கலப்பதற்காக என்னென்ன வழிமுறைகள் சாத்தியமோ அவற்றைத்தான் அல்லது ஒரு தேர்ந்த குருவினால் கூறப்பட்ட வழிமுறைகள் எதுவோ அவற்றைத்தான் சந்தியா என்ற சொல்லின் மூலமாக நான்

குறிப்பிடுகிறேன். இன்னொரு விதமான சந்தியா ஆகிய, அதாவது சடங்கு ரீதியாக மந்திரத்தை ஓதுதல் என்பதும் கூட மொத்தமாகத் தவிர்க்கப்பட வேண்டியதில்லை. (ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம், தேவ சமாஜம் எனப்படும் பல சங்கங்களில் மக்கள் இவ்வாறு செய்கிறார்கள்.)

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்திரவு :- ‘‘பரம்பரை மரம் பற்றி வரைபடத்தில் முதல் ‘ஓம் தத் சத்’ என்று எழுத வேண்டும்.’’

## 20-10-44

இரவு 8.20 மணிக்கு M8 - க்கு மற்றவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, நிபந்தனையுடன் கூடிய அனுமதியை M1 - அளித்தார். ஷாஜஹான்பூர் ஸ்ரீ ராம்சந்த்ரஜி அதற்கான சான்றிதழ் கொடுத்தார்.

இரவு 8 மணிக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “B1 - ஒரு குறிப்பிட்ட பயிற்சியை ஆரம்பித்திருக்கிறார். உன்னுடைய எழுத்துக்கள் (கட்டுரைகள், கடிதங்கள்) பெரும் குழப்பத்தையும், விவாதங்களையும் உண்டாக்கி யிருக்கிறது. தேவையின்படி (தேவைக்கேற்ப) B1 - இன் சக்தி அவரிடமிருந்து தவிர்க்கப்பட்டிருக்கிறது.’’

## 21-10-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறிய மேற்கண்ட கோட்பாடுகள் முக்கியமாக பயிற்சியுடன் சம்மந்தப்பட்டவை. கடவுளின் தனித்துவமான இருப்பு (ஜீவித நிலை) ஒன்றே என்பதாக எடுத்துக்கொள்ள வேண்டும். பயனற்ற பலவிதமான வழிபாடுகளிலிருந்து விலகி இருக்க வேண்டும். மதவாதம் ஒழிக்கப்படவேண்டும். கடவுள் ஒருவர் மட்டுமே வழிபாட்டுக்குத் தகுதியானவர். எனவே கடவுளை மட்டுமே வணங்க வேண்டும். குருவுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். மற்றவர்களுக்கு நன்மைதரக் கூடிய கோட்பாடுகளையே பின்பற்ற வேண்டும். மக்கள் அதைக் காணும் போது அவர்களுக்கு நல்ல எண்ணங்களின் ஒரு பதிவு ஏற்படும் படியாக அவ்வளவு எளிமையாக வாழ வேண்டும். நான் எப்போதும், இப்போதும் கூட

உருவ வழிபாட்டை எதிர்ப்பவனாகவே இருக்கிறேன். அதன கடினத்தன்மை இதயத்தைக் கெடுத்து விடுகிறது. பயிற்சியில் சேருகிறவர்களுக்கு தீட்சை அளிக்கும் போது இந்த விஷயத்தில் ஒரு உறுதிமொழி பெற வேண்டும். அது மட்டுமின்றி நன்னடத்தைக்கான இந்தக் கோட்பாடுகள் அனைத்தையும் பின்பற்றி நடப்பதும் கூட அவசியமானது. உருவ வழிபாடு கண்டிப்பாகத் தடை செய்யப்பட வேண்டும்''.

''அரேபிய பீடபூமியின் நஜ்டாவைச் சேர்ந்த கவுஸ் இந்தப் புதிய மார்க்கத்தில் சேரவிரும்பினால் அவரும் கூட இந்தக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதாக ஒப்புக்கொள்வது தேவையாகும். இந்தப்புதிய வழிமுறைக்கு 'சகஜமார்க்கம்' என்று பெயரிடுவது நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். மாயை (இயற்கையின் செயல்பாடு பற்றிய நியதி) சார்ந்த மூலகங்கள் அதில் கலப்பதை நான் விரும்பவில்லை. இது அந்தப் பயிற்சி வழிமுறையில் பாதகமான நிலவரங்களை உண்டாக்கி விடலாம். மற்றும் ஜாதிகள், இனங்கள் சார்ந்த முரண்பாடுகளை மற்றும் தகராறுகளை ஏற்படுத்தி விடலாம். இந்தப் பயிற்சி முறைக்குப் பெயர் இடுவது சம்மந்தமாக M1 - கூறிய 'சத் பத் பந்த்' என்பதும் கூட சரியாகவே இருக்கும். ஆயினும் இப்போது நாம் பெயரை மாற்ற வேண்டியதில்லை. இப்போது இருப்பது போல சகஜமார்க்கம் என்ற பெயரே இருக்கட்டும்.''

''பிராணாஹுதி அளிக்கும் வழிமுறை மாற்றப்படாமல் அப்படியே நீடித்திருக்கும். (மந்திரங்களை உச்சரிப்பது மற்றும் இதுபோன்ற சடங்கு ரீதியான நடைமுறைகளில் பழமையான ஹிந்து சம்பிரதாயங்களைக் கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட மனப்பான்மைகளுக்கு ஏற்றவாறு மாற்றங்களைப் புகுத்தலாம். அது அதற்கேற்ற சரியான சமயத்தில் தெரிவிக்கப்படும். இந்தவிதமான புதிய வழிமுறைகளை அன்புள்ள ராம்சந்த்ராவுக்கும் அவ்வப்போது சொல்வேன். எதையாவது ஒதுக்கித் தள்ளுகின்ற அல்லது திருத்திச் சரிப்படுத்தும் விசேஷ நோக்கத்திற்காக, விசேஷப் பயிற்சி யாருக்காவது தேவைப்படுமானால் அவர் ராம்சந்த்ராவைக் கலந்து ஆலோசிக்கலாம். ராம்சந்த்ராவைப் போல ஒரு வியக்கத்தக்க

மகாபுருஷரை சரியான முறையில் அக்கறையுடன் கவனித்துக் கொள்ளவில்லையென்றால் (திடீரென்று) என்ன நிகழும் என்று யாருக்குத் தெரியும்? முன்தினம் நடந்த நிகழ்ச்சி பற்றி M1 - இடம் நான் சொல்லிக்கொண்டிருந்தேன். ராம்சந்த்ராவுக்கு புதியதாக ஏதோ ஒன்றைக் கண்டுபிடிக்கும் மனப்பாங்கு இருப்பதால், ஏராளமான முனிவர்களிடமிருந்து அவர்களின் ஆன்மீக நிலையை நீக்கிவிடுவதற்கு, குறைந்த உழைப்பின் மூலமாகவே, சிறந்த பலனளிக்கும் முறை என்ன என்று ஒரு சிந்தனையை அவர் மேற்கொண்டார். இதன் பலனாக நேற்று இரவு ஒரு கனவில் அந்த வழிமுறையை அவரால் உணர்ந்து அறிய முடிந்தது; உடனே அவர் அதை செயல்படுத்த ஆரம்பித்தார். நான் உடனடியாக அதற்கு எதிரான மாற்று முறையை செயல்படுத்தி அந்தத் தீமைக்கு ஈடு செய்து விட்டேன். அந்த வழிமுறை எழுதிவைக்கத் தகுந்தது மற்றும் மிக விசேஷமானது. (ஆயினும் அது மிகவும் ரகசியமாக இருக்கவேண்டும்.)''

## 22-10-1944

பகல் 12 மணிக்குச் சற்று முன்பு வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்தரவின்படி M1, V1 - க்கு தீட்சை அளித்தார்.

## 24-10-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "இன்று காலை 10 மணிக்கு, V1 - குப்ரா (KUBRA – COSMIC REGION) என்ற மண்டலத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார். சுக்ரா (SUGHRA – ORGANIC REGION) என்பது பிண்டதேசம் (உடல் சார்ந்த மண்டலம்) எனப்படும்; குப்ரா என்பது பிரம்மாண்டம் (அண்டவெளி / COSMIC REGION) உலியா (ULIA) என்பது பரப் பிரம்மாண்ட மண்டலம் (பேரண்ட வெளி மண்டலம் / PARA COSMIC REGION) அதற்கு அப்பால் சத்பத் (ஜீவனின் தூய்மை மண்டலம் / REGION OF PURITY OF BEING) ஆரம்பமாகிறது. க்யுட்ஸா (புண்ணிய மண்டலம் / QUDSA REGION OF PIETY) சத்தியபாத்தின்(SATPAD) உச்ச நிலையாகும்.''

''நட்ஜாவின் கவுஸிடமிருந்து பதில் வருவதற்கு காத்திருக்கும் காலமாக மூன்று நாட்கள் அனுமதிக்கலாம்.''

''ஆன்மீக நிலையைப் பறிப்பதற்கான உனது வழிமுறை மிகச் சிறந்தது.''

சகஜ மார்க்கப் பயிற்சி முறையின் கீழ் சாதகர்களுக்கான கோட்பாடுகளை வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறி எழுதிக்கொள்ளச் சொன்னவை :

1) நமது மார்க்கத்தில் பற்றுறுதி (நம்பிக்கை)க்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. உயர்நிலைக்கான படிகளில் அதுவே முதல்படியாகும். அதை நன்கு முதிர்ச்சியடைய வைப்பது ஒவ்வொரு சாதகனின் கடமையாகும். இது இல்லாமல் பயிற்சியின் சரியான பலனைப் பெறமுடியாது.

2) ஒவ்வொரு சாதகரும் இந்தக் குறிப்பிட்ட வழிமுறை தனக்கு நன்மை செய்யுமா என்பதை முதலில் தன் இதயத்தில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இது நன்மை செய்யுமா என்பது அவரவருடைய சொந்த அனுபவத்தில் தெரியவரும். அதன்பிறகு நம்பிக்கையை முழுமையடையச் செய்வதற்கு ஒரு நாட்டம் இருக்க வேண்டும். மேலும் குருவின் கட்டளைக்கு இசைந்து நடப்பதும் கடமையாக நினைக்கவேண்டும்.

3) சாதகர்களுக்கு பிராணாஹுதியின் மூலமாகத் தான் எல்லாம் செய்யப்படுகிறது. அது மெஸ்மரிசம் அல்லது ஹிப்னாடிசம் அல்ல என்பதை சாதகர்கள் புரிந்து கொள்ளுமாறு செய்யவேண்டும். இது சாதகரை பரம்பொருள் தன்மையோடு (பரமாத்மாவுடன்) இணைக்கின்ற ஒரு வழியாகும்; மற்றும் சகஜ மார்க்கம் என்ற இந்தப் புதிய முறையில் இதுவே முக்கியமான விஷயம் என்பதையும் அவர்கள் உணரும்படி செய்யவேண்டும். இது பற்றி சாதகர் தன் உள்ளத்தில் நன்றாக முடிவு செய்து கொண்டு, குருவின் மீது நம்பிக்கையுடன் வரும் வரையில் அவருக்குப் பயிற்சியை ஆரம்பித்து வைக்கவேண்டியதில்லை.

4) நன்னெறி ஒழுக்கம் உடைய நற்பண்பில் கவனத்துடன் இருப்பது முக்கியமாகும். பிரம்மச்சரியமும் கூட கண்டிப்பாகத் தேவை. பக்தியை வளர்த்துக் கொள்வதற்கும், அதனுடன் சேர்ந்து

அடையக்கூடிய வேறு நன்மை எதுவாயினும் அதற்கு இதுவே வழியாகும்.''

25-10-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "நான் முயற்சித்துச் செயல்படுத்தியதாகிய என்னை உனக்குள் ஐக்கியமாக்கிக் கொண்டசெயல், இதுவரையில் வேறு எந்த குருவினாலும் அவருடைய ஆன்மீகப் பிரதிநிதி மற்றும் அவரையடுத்து அப்பதவிக்கு உரியவராக்கப்பட்ட ஒருவருக்கு ஒருபோதும் செய்யப்பட்டதில்லை. உனது மேல் நோக்கிய வளர்ச்சி இன்னும் மேலே போயிருக்கிறது. இந்தக் காரியம் நடைபெற்றுவிட்டது. உனது மேல் நோக்கிய நகர்தலுக்கான உத்தேசம் (நோக்கம்) என்னவென்றால் உன்னை சமஸ்காரங்களிலிருந்து முழுமையாக விடுதலை பெறச்செய்வதுதான். பௌதீக வாழ்க்கையைத் தொடரும் பொருட்டு இந்தப் பிரபஞ்சமே உன் உருவமாக எடுத்துக் கொள்ளப்படலாம், எனினும் இந்த விஷயம் முழுமையாக என்னிடம் விடப்பட்டுள்ளது. என் வேலை பற்றி நான் மிகவும் கவலையுடன் இருக்கிறேன். உனக்கு வயது இன்னும் அதிகமாகி விடவில்லை. ஆயினும் இதெல்லாம் மாஸ்டருடைய அன்பின் (மாஸ்டர் மீதான அன்பின்) அற்புதம், என்பதை வருங்காலத்தில் தெரிந்து கொள்வதற்காக சில விஷயங்கள் சொல்கிறேன். இன்றைய தேதி வரையில் உலகில் இப்படி ஒரு உதாரணம் ஒருபோதும் இருந்ததில்லை என்று நான் அறிகிறேன்.''

M1 - விடம் சொல்லப்பட்டது :- "நீ (M1) உன் நிலையைப் பற்றி அறியாமலிருக்கிறாய். அன்புள்ள ராம்சந்த்ராவைத் தவிர்த்து உன்னுடைய வளர்ச்சி நிலையும் கூட ஒரு விசேஷமான உதாரணம் தான். இந்த ரகசியம் பற்றிய முடிச்சு பின்னர் அவிழ்க்கப்படும். கடவுளின் அருளினால் உனக்கு நீண்ட ஆயுள் இருக்கட்டும். உனக்காக ஒரு மகிழ்ச்சியான செய்தி கொண்டு வந்திருக்கிறேன். இன்றைய தேதியில் இருந்து அவர் (ராம்சந்த்ரா) யாருக்குப் பிராணாஹூதி அளித்தாலும் சரி, அவர் அல்லது அப்பெண்மணி பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடன் இணைக்கப்படுவார். இதுவே முதல்

இணைப்பு. இது அவரிடம் (ராம்சந்த்ராவிடம்) இருந்து தொடங்கும். இந்த ஆன்மீக நிலையானது சாம்பல் நிறம் கலந்த பச்சை நிறச் சாயல் உடையதாக இருக்கும். நீங்கள் இருவரும் (ராம்சந்த்ரா மற்றும் MI) நன்மையடைய வேண்டுமென விரும்பினேன்; எனவே தான் உனக்கு கட்டளைகள் கொடுத்தேன்.

அன்புள்ள ராம்சந்த்ராவின் உள்நிலை அதி அற்புதமான முறையில் சாராம்சமே மாற்றத்துக்கு உள்ளாகும். செயல்முறைக்கு ஆளாகியிருக்கிறது. அதன் அதிகபட்ச உச்சநிலை இன்னும் வந்தடையவில்லை. பிராணாஹூதி எங்கிருந்து வருகிறதோ அந்த மூலஸ்தானம் ரகசியமாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். (ராம்சந்த்ராவுக்கு) அந்த இந்த அதீத தன்மை மாற்றத்தின் வேரில் (மூலத்தில் இருக்கிறது) என்னையும் பகவான் ஶ்ரீ கிருஷ்ணரையும் இணைக்கும் தொடர்பு அவரிடத்தில் தான் தொடங்கிவிட்டது.''

''என் ஆயுட்காலத்தில், என் பிரதிநிதிகளை அடிக்கடி என் அருகில் வைத்துக்கொண்டேன். இன்று அன்புள்ள ராம்சந்த்ராவை என் அருகே வைத்திருக்கிறேன். என்னுடைய இந்த சுதந்திர நிலையில் (முக்தியடைந்த நிலையில்) என் அருகே அவர் இருப்பதைத் தாங்கும் சக்தி வேறு யாருக்கும் இருக்க முடியாது. யாரையாவது என் அருகே வைத்துக் கொள்வது என்பதற்கு ஒரு பொருள் உண்டு. அதாவது (யாரையாவது என் பக்கத்தில் வைத்துக் கொண்டால்) என்னால் அவருக்குக் கொடுக்கப்படாத செல்வம் ஏதும் என்னிடம் இல்லை என்று அர்த்தம். என்னிடம் உள்ள எதையும் அவருக்குக் கொடாமல் நிறுத்திக் கொள்ளவில்லை என்று பொருள். அவர் (ராம்சந்த்ரா) தெய்வீகமாகிய செல்வத்தினால் உச்சி முதல் பாதம் வரை நிரம்பி வழியச் செய்யப்பட்டிருக்கிறார். அவருடைய பாதங்களின் தூசியில் கூட ஒரு பலன் இருக்கிறது என்று முன்பு ஒரு முறை நான் சொன்னேன். அவர் நடந்து செல்லும் இடத்தில் உள்ள தூசியும் மண்ணும் கூட ஒரு பழமொழி சொல்வது போல தூர் மலையின் சாம்பலைப் போன்ற விசேஷத் தன்மையை அடையும் என்று இப்போது நான் சொல்வேன். [தூர் மலையின் மீது மோசஸ் (கிறிஸ்தவ மத நூல்களில் குறிப்பிடப்படும் மகான்) தெய்வீக

ஒளியின் காட்சியைப் பெற்றார். அந்த ஒளி அந்த மலையை சாம்பலாக்கி மோசஸை மூர்ச்சை அடையச் செய்தது]. அன்புள்ள ராம்சந்த்ரா நடந்து செல்லும் இடத்தின் தூசு மற்றும் மண் பரம்பொருளின் காட்சியைப்பெறும் வகையில் விழிப்பைத் தரும் பயனுடையதாக இருக்கும். இதனால் அவர் நடந்த இடத்தின் மண்ணை கண்களில் தூவிக் கொள்ள வேண்டும் என்று அர்த்தமில்லை. அவருடைய அதி மேன்மையான புண்ணியத் தன்மையைத் தெரிவிப்பதற்காகவே இப்படிக் கூறப்பட்டது.

அன்புள்ள ராம்சந்த்ராவிடமிருந்து ஒரு புதியவிதமான பிராணாஹூதி ஆரம்பமாகும். அதற்கு ‘கங்கா யமுனா’ அதாவது என்னுடைய மற்றும் பகவான் ஸ்ரீகிருஷ்ணருடைய பிராணாஹூதிகளின் இணைப்பு (குறிப்பு : வணக்கத்திற்குரிய ஸ்ரீ லாலாஜி இந்தியாவின் வடபகுதியில் உத்திரப் பிரதேசத்தில் ஃபருக்காபாத் மாவட்டத்தில் ஃபடேகர் என்ற ஊரில் வசித்தார். அது கங்கை நதிக்கரையில் அமைந்துள்ளது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்ததும், அவரது முக்கியமான தீரச்செயல்கள் நடந்ததும் மதுரா மற்றும் அதன் சுற்றுப்புறத்து ஊர்களில் நிகழ்ந்தவை. அது வட இந்தியாவில் உத்திரப்பிரதேசத்தில் யமுனை நதிக்கரையில் உள்ளது. இதன் காரணமாக இந்த இரண்டு புனித நதிகளும் ‘கங்கா யமுனா’ என்று சேர்ந்தே சொல்லப்பட்டன.)

## 26-10-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “அவர் (ராம்சந்த்ரா) ஒரு அதிஅற்புதமான கண்டுபிடிப்பைச் செய்து, வேலையை மிகவும் சுலபமாக்கியிருக்கிறார். ஆனால் இந்த வேலை அவருக்கு மட்டுமே சாத்தியமாகும். இந்த வழிமுறை மிகச் சரியானது. மக்கள் இதனால் மிகச் சிறந்த பலனைப் பெறுவார்கள். அது மட்டுமன்றி இதைப் பின்பற்றுவதனால் எந்தத் தீமையும் கிடையாது.

அந்தப் புதிய வழிமுறை இதுதான் :- “முதலில் சங்கல்ப சக்தியினால் மனித உடலில் (சரீர மண்டலத்தில்) உள்ள அனைத்து புள்ளிகளும் சுத்திகரிக்கப்படவேண்டும். அதன் பிறகு அந்த சாதகரை பிரம்மாண்ட மண்டலத்தில் எதுவரையில்

கொண்டு செல்ல வேண்டுமோ அதுவரையில் இடையில் உள்ள பகுதிகளையும் புள்ளிகளையும் எடுத்துக்கொண்டு சுத்திகரிப்பு செய்யவேண்டும். அதன்பிறகு சரீர மண்டலத்தில் உள்ள புள்ளிகள் இயற்கையான வழியில் திறக்கப்படவேண்டும். அது போலவே பிரம்மாண்ட மண்டலத்திலும் அதற்கு அப்பாலும் இருக்கின்ற புள்ளிகள் யாவும் இயற்கையான வழியில் திறக்கப்பட வேண்டும். இந்த இரண்டுக்கும் ஒரே சமயத்தில் பிரணாஹூதி அளிக்கப்பட்டால் சரீர மண்டலத்தின் பூரணத்துவமும் கூட எய்தப்படும். கூடவே அதற்கு மேலே உள்ள நிலைகளும் தூய்மையாகி பூரணத்துவம் (முழுமைநிலை) எய்தும். எனினும் இந்த முறையை செயல்படுத்துவதற்கு பிரம்மச்சரியம் நிச்சயமாகத் தேவை. அவருடைய மூளையும் போதுமான அளவுக்கு வலிமையுடன் இருக்கவேண்டும்.''

''இதற்காக பயன்படுத்தக்கூடிய இரண்டாவது செயல்நுட்பம், ஒரு சாதகரின் இதயம் மற்றும் மூளையின் வலிமைக்கு ஏற்றவாறு புள்ளிகளையும் ஆன்மீக நிலைகளையும் திறப்பதை தூண்டிச் செயல்படுத்துவதை உள்ளடக்கியதாகும். ஆனால் இப்படி (சாதகரின் இதயம் மற்றும் மூளையின் வலிமையை) மதிப்பீடு செய்யும் திறன் எல்லோரிடத்திலும் இருக்க முடியாது. இதனால் எல்லோருமே இந்த செயல்நுட்பத்தைப் பயன்படுத்தத் துவங்கக்கூடாது. அது ராம்சந்த்ரா ஒருவரிடம் மட்டுமே இருக்கும்.

M1 - க்காக சொல்லப்பட்டது :- "வேறு எங்கேயாவது இப்படி ஒரு உதாரணத்தைக் காணமுடியுமா? அவர் (ராம்சந்த்ரா) தன் மனதில் இன்னும் பல யோசனைகளை வைத்திருக்கிறார். அதாவது சாதகரை, அவரது புள்ளிகளை சுத்திகரிக்கும் போது கூடவே அதன் எல்லா நிலைகளையும் கடந்து செல்ல வைப்பது, மற்றும் இதுபோன்ற சிந்தனைகள் அவை. ஆனால் இம்மாதிரி ஒரு பயிற்சியை எடுத்துக்கொள்வதற்கு பொதுவாக யாரும் வரமாட்டார்கள். இந்த எல்லா விஷயங்களுக்கும் உரியதான (குறித்துக்கொள்ள வேண்டிய) குறிப்பான உத்திரவுகள் இவை : ஒரு சாதகருக்கு, அவர் ஆணோ அல்லது பெண்ணோ அன்பு செலுத்துவது தான் முக்கியமான நிபந்தனை. ஏனெனில் அவர் முழுமையாக வளர்ச்சி அடைவதற்கு அதுவே வழி. முழுமையான,

குறையற்ற அன்பு அவரிடத்தில் நீடித்திருக்க வில்லையென்றால் அவர் குருவுக்கு எதிராகப் போய்விடும் அபாயம் இருக்கிறது.''

வழக்கம்போல் அவர் மேலும் தொடர்ந்து கூறியது :- "உன்னுடைய உயர் தகுதியை மற்றும் அரிய திறமையை நான் மட்டுமே அறிவேன். ஆரம்பத்திலிருந்தே உனது பயிற்சி இப்படித்ததன் இருந்தது. அதாவது நீ அனைத்தையும் உன்னுள் கிரகித்துக் கொண்டாய். மேலும் உன் மதிப்பீடு எப்போதுமே சரியாக இருந்தது. நானும் கூட உன்னிடமிருந்து எதையும் மறைத்து வைத்துக் கொள்ளவில்லை. இனியும் எப்போதும் எதையும் தராமல் நிறுத்தி வைத்துக்கொள்ள மாட்டேன். இருந்தாலும் நான் இந்த விசேஷமான உத்திரவை உனக்குத் தெரிவிக்கிறேன். அதாவது உனக்கு எவ்வளவு கடுமையான இடையூறுகள் வந்தாலும், எத்தனை சிரமங்களுக்கு ஆளாக வேண்டியிருந்தாலும், மகாபாரதப் போரில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் செய்தது போல அந்தக் கண்ணை நீ திறக்கக் கூடாது. (அதாவது அந்த சக்தியை நீ பயன்படுத்தக் கூடாது.) அந்த சக்தி தானாகவே இந்த அளவுக்குச் செயல்படுகிறது. அது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் வரம். பகவான் ஸ்ரீகிருஷ்ணர் ஏதாவது வேலைக்காக அதைப் பயன்படுத்துமாறு உத்திரவிட்டால் நீ அந்தக் கண்ணைத் திறக்கலாம். ஆனால் அது அந்த வேலைக்காக மட்டுமே இருக்க வேண்டும்; வேறு எந்த வேலைக்காகவும் பயன்படுத்தக்கூடாது. அழிவு வேலையைச் செய்வதற்கு நான் உனக்கு ஏராளமான சக்தியை அளித்திருக்கிறேன். அதை நீ எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்.''

இரவு 9மணிக்கு M1 - க்காக சொல்லப்பட்ட தகவல் :- "யாரையாவது அவரது ஆன்மீக நிலையை இழக்கச் செய்கின்ற அம்மாதிரி ஏதாவது கண்டுபிடிப்பு சாத்தியமா? அது உடனடியாக உனக்குத் தெரியவருமா? என்பது பற்றி நீ மிகவும் கவலைப்பட்டு, அதற்காக முயற்சி செய்தாய். அவர் (ராம்சந்த்ரா) அம்மாதிரி ஒரு வழியைக் கண்டுபிடித்திருக்கிறார். அதாவது ஒருவரது ஆன்மீக நிலையைப் பறித்துக் கொள்ள வேண்டிய தேவை இல்லாமலே,

அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வழி அது. சம்மந்தப்பட்ட அந்த மனிதரின் ஆன்மீக முயற்சிகளின் விளைவாக அவரது ஆன்மீக நிலை எங்கு (எந்தப் புள்ளியில்) இருந்தாலும், சப்தம் எனப்படும் ஒலி அல்லது அதிர்வு நிலை வரையில் அவர் உயர்வடைந்திருந்தாலும், அதன் பயனை தனது சங்கல்ப சக்தியின் மூலமாக நிறுத்தி வைப்பது, மற்றும் திடத்தன்மை அடையச் செய்வது (செயலற்றுப் போகச் செய்வது) ஆகியவை அந்த செயல்நுட்பத்தில் அடங்கியுள்ளன. இது சம்மந்தப்பட்ட அந்த மனிதரின் உள்நிலையை ஒரு கல்போல் மாற்றி விடும். இது அந்த மனிதருக்கு ஒரு பாடம் கற்பிப்பதற்கான வழியாகும். ஆனால் வேறு வழியில்லாமல் போனாலன்றி இதைப் பயன்படுத்தக்கூடாது. (சிறிது இடைவெளி) இப்போது அவர் அதில் ஒரு திருத்தத்தைச் செய்திருக்கிறார். அது என்னை மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்க வைக்கிறது. கடவுள் அவருக்கு மேலும் உயர்ந்த நிலையை அளித்து என் பெயரை எந்நாளும் விளங்கச் செய்யட்டும். இந்தத் திருத்தம் மிகவும் இயற்கையானது. முன்பே இத பற்றி நான் எங்கோ குறிப்பிட்டிருக்கிறேன். (யாரையாவது அப்படி திடத்தன்மை அடையச் செய்ய விரும்பினால்) அவரது இடது பக்கத்திலிருந்து அந்த சக்தியை திடத்தன்மை பெறச் செய்துவிட்டு, அதை மீண்டும் திறப்பதற்காக (செயல்படத் தூண்டுவதற்காக) வலப்புறத்தில் உள்ள சக்தியை அப்படியே தக்க வைத்திருப்பது அந்தத் திருத்தப்பட்ட வழிமுறையாகும். இப்போது அந்த வழிமுறை முழுமையாகி இருக்கிறது. (சற்று இடைவெளி) சகஜ மார்க்கம் என்ற இந்த முறையை அவர் உருவாக்கியிருக்கிறார். பெருமளவு நேரம், உழைப்பு மீதமாகும் படியாக இது அவ்வளவு சுலபமாக இருக்கிறது. ஆனால் அந்தோ! இதனால் நன்மை அடைவதற்கு சாதகர்கள் எங்கே இருக்கிறார்கள்? இதை ஏற்றுக்கொள்ளும் தகுதியை அவரிடம் உருவாக்காமல் யாருக்காவது இந்த முறையில் பயிற்சியளித்தால் அவரால் / அப்பெண்மணியால் அதை அறிந்து ஏற்றுக்கொள்ள இயலாது, அந்தப் பயிற்சியாளர் அல்லது வழிகாட்டியின் சக்தியின் மூலமாக முன்னேறவும் முடியாது.’’

‘‘நான் உடலை விட்டு மறைந்து பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் ஆகிறது. இந்தக் காலகட்டத்தில் நமது சகோதரர்கள், அதாவது சீடர்கள் பட்ட துன்பங்கள் கடவுளுக்கும், என் இதயத்துக்கும் மட்டுமே தெரியும். இதன் காரணம் என்னவெனில், என் ஆயுட்காலத்தில் எனது சூட்சும சரீரம் அவர்கள் அனைவரிடமும் பிரசன்னமாக இருந்தது. அது அவர்களுடைய பாதுகாப்புக்கு உறுதியளித்தது. அவர்களுக்கு ஆன்மீக முன்னேற்றமும் அளித்தது. என் உடல் மறைந்தபிறகு சூட்சும சரீரங்களுடன் என்னோடு சென்று விட்டன. எனவே அவர்களுக்கு அந்த நல்லாசி கிடைக்காமல் போயிற்று. இதனால் இந்தக் கால கட்டத்தில் (பன்னிரண்டு வருடங்களுக்கும் மேலாக) யார் வேண்டுமானாலும் அந்தச் சீடர்களுக்குத் துன்பங்களை உண்டாக்கினார்கள். ஏதாவது ஒரு வழியில் அவர்களைத் தவறாக வழிநடத்தி என்னிடமிருந்து அவர்களை விலக்கி வைத்துவிட முயற்சி செய்தார்கள். அந்த இடைவெளிக் காலம் முடிவுக்கு வந்த போது எல்லாம் வல்ல இயற்கை பொங்கியெழுந்து தானாகவே ஒரு தகுதியான மகாபுருஷராக மீண்டும் உருவெடுத்து வந்தது. அவருடைய சூட்சும சரீரம் இப்போது அவர்களுக்குள் விளங்குகிறது. எனவே சீடர்களுக்கு மீண்டும் பாதுகாப்பு எல்லாவிதங்களிலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்விதமாக எப்போதுமே மாஸ்டர் என்ற கட்டுப்படுத்தும் முகமைக்கான (இடைமனிதர்) தேவை இருக்கிறது. மாஸ்டரின் வாரிசு / பிரதிநிதி என்பதன் பொருள் இதுதான்.’’

‘‘அசாதாரணமான குறிப்பிடத்தக்க நிலைமை ஏதாவது ஏற்பட்டால் உடனே மாஸ்டர் என்ற கட்டுப்படுத்தும் முகமையை ஒருவர் சார்ந்திருக்கவேண்டும்.’’

## 27-10-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “மிகவும் குறிப்பிடத்தக்கதான ஒரு விஷயத்தை நான் உனக்குச் சொல்கிறேன். உண்மையாகவே குறையற்றவராக, முழுமை பெற்றவராக இருக்கக் கூடிய யாருடனாவது, எப்போதாவது, கடுமையான முரண்பாடு மற்றும் மோதல் ஏற்பட்டால் அப்போது ஒருவர் தன்னை (மாஸ்டர் ஆகிய) கட்டுப்படுத்தும் முகமையோடு

ஒன்றுபடுத்திக் கொள்ள வேண்டும். அப்போது என்னுடைய சக்தி தானாகவே செயல்படத் துவங்கும். குருநாதருக்கும் அவரது வாரிசு மற்றும் பிரதிநிதியாக இருப்பவருக்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லை. முன்பொருநாள் உன்னை ஏதோ ஒரு உருவில் உள்ள வசு என்று குறிப்பிட்டுச் சொன்னேன். இவை யாவும் இயற்கையின் சக்திகள். சூரியமண்டலம் மற்றும் அதன் எல்லைக்குள் இருக்கும் அனைத்தும் அவர்களைச் சார்ந்தே இருக்கிறது. இவ்வாறு எட்டு வசுக்கள் இருக்கிறார்கள்.''

''நான் இப்போது அவரைப் பற்றி (ராம்சந்த்ரா பற்றி) ஒரு விஷயம் சொல்கிறேன். அவர்தான் வசுக்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார். சிருஷ்டி தொடங்கிய காலம் முதல் இந்தப் பதவி அவரைத் தவிர வேறு யாருக்கும் கிடைத்ததில்லை. இது ஒரு மிகப்பெரிய ரகசியம். அதை நான் வெளிப்படுத்தியிருக்கிறேன். அவருடைய நிலையான வசிப்பிடம் (அதாவது ஆன்மீக உயர்நிலைகளில் அவர் நிலையாகத் தங்கியிருக்கும் இடம்) எந்த இடத்திலும் இல்லை, என்பது பற்றி நானும் கூட வியப்பு அடைந்திருக்கிறேன். அவரது எந்த ஒரு செயலும் அங்கு இருந்தாலும் அது முன்னோக்கியே இருக்கிறது.''

''நீ (ராம்சந்த்ரா) இறைதூதர்களிடையே (நபிகள் இடையே) ஒரு இடம் பெற்றிருக்கிறாய், கேப்ரியல் தேவதை இப்போது அந்தச் செய்தியைக் கொண்டு வந்தார். வணக்கத்திற்குரிய ஸ்ரீ கிருஷ்ணருக்குப் பிறகு உன்னுடைய இடம் இரண்டாவதாக இருக்கிறது. அது ஆரம்பம், இதன் முடிவான நிலை இன்னும் வெகுதூரத்தில் உள்ளது. கடவுள் விரும்பினால் எனக்குப் பிரியமான ஒருவர் இன்னும் மேலான வெற்றியும் அடைந்து கௌரவிக்கப்பட இருக்கிறார். உன்னுடைய வார்த்தைகள் கட்டளைகளாக செயல்படட்டும். இறைதூதர் என்ற பதவி மதம் சார்ந்த தலைமைப் பதவியிலிருந்து (இமாம் / IMAM) தொடங்குகிறது. அதற்கான உள்நிலை அதற்கு முன்பே தொடங்குகிறது. அதுவும் கூட இறைதூதர் நிலையின் தன்மை (நபூவத் / NABOOAT) என்றே கூறப்படுகிறது. நான் அந்த நிலையில் இருந்தேன். என் ஆயுட்காலத்தில் அதை உனக்கு மாற்றிக்கொடுத்தேன்.

M1 - க்காக சொல்லப்பட்டது :- ”என் ஆயுட்காலத்தில் யாருமே என்னைப் புரிந்து கொள்ளவில்லை. மக்கள் என்னை அறிந்து, என் பணியை ஏற்றுக் கொண்டிருந்தால், நான் மேலும் அதிக காலம் வாழ்ந்திருப்பேன். மக்களுக்கு நான் தேவைப்படவில்லை என்று சமாதானம் செய்து கொண்டேன். என்னுடைய திறமைகள் அனைத்தும் மற்றும் என் மாஸ்டரிடமிருந்து நான் பெற்ற வரங்கள் எதுவாயினும் அவை அனைத்தையும் ராம்சந்த்ராவுக்கு நான் மாற்றிக்கொடுத்து அதை உறைநிலையில் (DORMANT STATE) வைத்தேன். அன்புள்ள ராம்சந்த்ராவின் மூளையின் நுட்பமான திறனைக் கவனி, அதை மனதில் குறித்துக்கொள். அவர் அதற்கான செயல்நுட்பத்தை (வழிமுறையை) உடனடியாகத் தெரிந்து கொண்டு விட்டார்.’’

‘‘வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் என்னுடன் சேர்ந்து வந்து அன்புள்ள ராம்சந்த்ராவுக்கு பிராணாஹூதி அளித்தார். நீயும் கூட (M1) ஓரளவுக்கு அதன்பலனைப் பெற்றாய். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் எனக்குப் பிரியமான ராம்சந்த்ராவை ஆன்மீகத்தினால் முழுவதும் நிரப்பும்படி ஆசீர்வதித்தார். மேலும் வெண்ணையும் இனிப்பும் (உணவு மற்றும் பிற தேவைகள்) அவருக்குக் கிடைக்கவும், அவர் மூலமாக யாருக்கு வேண்டுமானாலும் அது சென்றடைவதற்கும் வழிவகை செய்தார். அதில் பஞ்சமோ, பற்றாக்குறையோ இருக்காது. (வெண்ணையும், இனிப்பும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு மிகவும் பிடிக்கும், அவரும் அதை உண்பார். தன் விளையாட்டுத் தோழர்களுக்கும் பகிர்ந்தளிப்பார்). அன்புள்ள ராம்சந்த்ரா எண்ணத்தினால் (நினைவினால்) என் ஒருவனுடன் மட்டுமே இணைந்திருந்தார். அது (மற்ற பெரியோர்களுக்கு) ஓரளவுக்கு மரியாதைக்குறைவான செயல்தான். அது மன்னிக்கப்பட்டது. வருங்காலத்தில் அவர் இது பற்றி கவனமாக இருக்கவேண்டும், மேலும் ஒரு முன்னேற்றமும் அவரிடம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. (செல்வச் செழிப்புக்கு உரிய தெய்வமாகிய) குபேரனை அவருடைய பொறுப்பின் கீழ் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் நியமித்திருக்கிறார். இந்த மார்க்கத்தில் செல்வவளம் மேலும் மேலும் அதிகரிக்கும். (அந்த செயல்திட்டம் என் (பாபுஜியின்) மனக்காட்சியில் தெரிந்தது.)

இரவு 9 மணி, M1 - பணிவோடு கூறியது :- “மாஸ்டர் ஒரு சீடரிடத்தில் நிலைபெற்றுத் தங்கிவிடும்போது மற்றவர்கள் ஏமாற்றமடைகிறார்கள். மற்றும் மனநிறைவில்லாமல் இருக்கிறார்கள்..... இப்படியெல்லாம் ஆகிறது.

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பதில் :- “நீ பூகோள சாஸ்திரம் (புவியியல்) படித்திருக்க வேண்டும். சூரியனுடைய ஒளிக்கதிர்கள் பூமத்திய ரேகையின் மீது நேரடியாகவும், கூர்மையாகவும் (வலிமையாக) விழுகின்றன. ஒரு குறிப்பிட்ட கோணத்திற்கு அப்பால் அந்த ஒளிக்கதிர்கள், தூரம் மற்றும் சில காரணங்களினால் அந்த அளவு வெப்பத்தை உண்டாக்குவதில்லை. எனினும் அந்தப் பகுதிக்கு தொடர்ந்து ஒளியைக் கொடுத்துக் கொண்டு தான் இருக்கின்றன. ஏன் என்னுடைய சக்தி ஒரு இடத்தில் நிலைபெறுகிறது மற்றும் ஏன் நேரடியாக ஒவ்வொருவருக்கும் செல்கிறது என்பதற்கு இதுதான் பதில். வேறு வார்த்தைகளில் சொன்னால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு என்னுடைய நெருங்கிய தன்மையை யாராவது பெற்றிருந்தால் அதே அளவுக்கு என் கதிர்களும் அந்த மனிதர் அல்லது அப்பெண்மணியின் மீது நேராக வலிமையாக விழுகின்றன எனலாம். ஒளிவீசும் சக்தியானது ஒரேவிதமாகவே மற்றும் ஒன்றாகவே இருக்கிறது. அதேபோல என் பார்வை எல்லோரையும் ஒரே விதமாகவே காண்கிறது. நான் அனைவரையும் எனக்குச் சொந்தமானவர்களாகவே கருதுகிறேன்.

## <u>28-10-1944</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “அவருடைய உண்மையான வீடு எங்கே இருக்கிறதோ, அந்த பரமாத்மா மண்டலத்தில் (Ultimate Being) அவர் மேலேறிச் செல்வதை நிறுத்துவது இப்போது மிகவும் சிரமமான காரியமாக இருக்கிறது. அதற்கு ஒரு வழி என் சிந்தனையில் தோன்றுகிறது. அதாவது அப்படி ஒரு உள்நிலை தோன்றும் போது அவர் எனக்கு அதை பிராணாஹூதி அளிக்கத் துவங்கலாம். அப்போது உடனே நான் அந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவேன். அங்கே போதுமான

அளவுக்கு தன் நிலையை (பதவியை) அவர் உருவாக்கி வைத்திருக்கிறார். அதில் மிகப்பெரிய அளவில் விரிவாக்கம் ஆரம்பமாகியிருக்கிறது.''

''அவர் பிறந்தபோது அவர் தன்னுடன் கொண்டுவந்த நிலையை உங்கள் இருவருக்கும் (M1 மற்றும் R2) இப்போது நான் வெளிப்படுத்தினேன். அவருடன் சேர்ந்து வந்த ஆன்மீக உள்நிலை (உச்ச நிலைத்தன்மையின்) அதே பிராணாஹூதியாக இருந்தது. இந்த உள்நிலையானது முற்றிலும் ஜாட் (Zaat – Ultimate Being) என்பதாக (உச்சநிலைத் தன்மையாக) மாயையின் சாயல் சிறிதளவு கூட இல்லாமல் இருந்தது. நானும் கூட பிறந்தபோது அதைப்போலவே ஒரு தன்மையுடன் இறங்கி வந்தேன்.''

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- "மதுராவுக்குப் பிறகு, நீ நைமிசாரணியம் போகவேண்டும் என்பது என் கட்டளையாகும். அயோத்தியாவுக்கு இப்போது போக வேண்டிய தேவை இல்லை. அங்கே (நைமிசாரண்யத்தில்) யாத்ரிகர்களுக்கு இடமளித்து உபசரிக்கும் பூஜாரிகள் நிறையத் தீமைகளைச் செய்திருக்கிறார்கள்.''

''K - ஐ அழித்துவிடு. என்னை இழிவுபடுத்துவதற்காக, தாந்திரீக வழிபாடு செய்யும் வாம மார்க்கத்தினர் (இடது வழி என்ற பாதையைப் பின்பற்றுகிறவர்கள்) உருவாக்கியுள்ள, P - என்ற இடத்தில் உள்ள கோயிலை உடனே அழித்துவிடு. அதற்கு அருகே ஒரு இடம் இருக்கிறது. அது புண்ணியப்பலன் மிகுந்தது.

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்திரவு :- "K - என்ற இடத்தை நீ அழிக்கும் போது அழிக்கப்பட வேண்டியவர்கள் யாரும் தப்பிச்சென்று விட இயலாதபடி அந்த இடத்தைச் சுற்றிலும் மானசீகமாக ஒரு தடுப்பு வளையத்தைப் போட்டுவிட வேண்டும். அந்த இடத்தில் உயிர்த்தியாகம் செய்தவர்களின் ரத்தம் இப்போதும் கூட அதன் அழிவை நாடுகின்றது. அவர்களுடைய கடைசி விநாடிகளின் வேதனையும் பரிதவிப்பும் நிறைந்த காட்சி என் கண்களுக்கு முன் இப்போது நடப்பது போலத் தெரிகிறது. இம்மாதிரி புனிதமான இடங்களில் திட்டமிடப்பட்டு ரத்தம் சிந்துதல்

நிகழ்ந்தது. அரசர்களின் ரத்தம் கூட அங்கே சிந்தப்பட்டது. இந்த உலகம் முழுவதையும் பராமரிப்பது தங்கள் பொறுப்பு என்பது போல அவர்கள் இப்படி ரத்தம் சிந்தச் செய்தார்கள்.''

''அந்தக் குறிப்பிட்ட கோயிலில் நடந்த நிகழ்ச்சிகள் படச்சுருள் போல என் கண்களின் முன் ஓடுகின்றன. தாய்மார்களையும், சகோதரிகளையும் அவமானப்படுத்திய காட்சி, நான் உடல்சார்ந்த பந்தத்திலிருந்து விடுதலை பெற்றிருந்தாலும் கூட, என் கண்களில் ரத்தக் கண்ணீர் வழியச் செய்கிறது. கொடுங்கோல் மன்னர்களிடையே கூட காணப்படாத அளவு கொடூரம் நிறைந்த இம்மாதிரி மனிதர்களை சரியானபடி தண்டிக்க வேண்டும். மற்றவர்களின் ரத்தத்தை உறிஞ்சுவதைத் தவிர வேறு வேலை எதையும் தங்களுக்கு நியமித்துக் கொள்ளாத அடிப்படை குணங்களைக் (elements) கொண்ட அந்த இனம் முழுமையாக அழித்து ஒழிக்கப்படுவதற்குத் தகுதியானது. அந்த இனம் அதன் ஆன்மீக சாதனைகள், சித்திகள் என்ற அமிர்தத்தைப் பெற்ற மிகப் பெரியோர்களாகிய, மிகச் சிறந்தவர்களாகிய மக்களால் நிரம்பியதாக, உலக முழுவதும் கொடிகட்டிப் பறந்த இனம். அவர்கள் வசித்த இடத்தின் காற்றின் ஒவ்வொரு அணுவும் அதன் நறுமணத்தை வெளியிடும் அளவுக்கு புனிதத்தன்மை நிறைந்த இடம் அது. இப்போது அதன் இழிவுநிலை இப்படி இருக்கிறது. உள்ளுணர்வின் காட்சித் திறனுடன் நீ அதை கவனித்தால் இப்போது அம்மனிதர்களின் ஒவ்வொரு அணுவும் நரகத்தை நோக்கி இழுக்கின்ற ஒரு தன்மை நிறைந்ததாக இருப்பதைக் காண்பாய். ஒரு பெரிய ரகசியத்தை உனக்குச் சொல்கிறேன். யாருடைய விஷயத்திலாவது அல்லது யாருக்காவது, அவரது உள்நிலை முன்னேறுவதற்கான எந்த ஒரு சாத்தியத்திற்கும் அறிகுறி காண்பிக்கவில்லையென்றால், யாருடைய செயல்களாவது அம்மனிதனை / அப்பெண்மணியை நரகத்துக்குக் கொண்டு போவதாக இருந்தால், அதற்கான திட்டம் அவரவருடைய ஆயுட்காலத்திலேயே நரகத்தில் உருவாகி வளரத் துவங்கிவிடுகிறது.''

''பிருந்தாவனத்தில் செய்ய வேண்டிய வேலையை M1 - க்குக் கொடுக்கவும். அவர் அதை முழு விசையுடன் செய்ய வேண்டும்.

நல்லவர்களாக, கடவுளை வணங்குகிறவர்களாக இருப்பவர்களை விட்டுவிட்டு, மற்ற அனைவரிடமிருந்தும் உயிரை எடுத்து விடுவதை R2 - செய்து கொண்டிருக்க வேண்டும். P - என்ற இடத்தின் வேலையை நீயும் (பாபுஜி) M1 - உம் சேர்ந்து செய்ய வேண்டும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- “பிருந்தாவனத்தில் L.B - என்ற கோயில் இருக்கிறது. அதில் ஊழல், ஒழுங்கீனம் ஆரம்பித்திருக்கிறது. அந்தத் தீமையை நீக்க முயற்சிக்கவும். அது முடியாது, என்று நீ கண்டறிந்தால், அதைத் தரைமட்டமாக்கிவிடவும். நீ முதலில் அந்தக் கோயிலுக்குள் போகவேண்டியிருக்கும். அங்குள்ள நிலைமையை கவனித்தறிய வேண்டும். அதற்குப் பிறகு தான் அதை அழிப்பது பற்றி இறுதியான முடிவு எடுக்க வேண்டும். யமுனை ஆற்றின் மீது நான் மிகவும் பிரியம் உடையவனாக இருந்தேன் என்பது உண்மை. அதன் கரையில் நான் நிறைய விளையாடி மகிழ்ந்திருக்கிறேன். அது ஒரு நதி என்பதற்கு மேல் தனிப்பெருமை ஏதும் உடையது அல்ல என்றாலும் அதைப் பார்க்க விரும்புவதே எங்களை மதுராவில் வசிக்க கட்டாயப்படுத்தியது. அந்த ஆற்றின் போக்கை திசை திருப்ப முயற்சிக்கவும். கோயில்களில் உன்னுடைய பெருமதிப்பை அறிந்தவர் யாரும் இருக்கமாட்டார்கள் என்பதை நான் அறிவேன். நீ ஒரு சாதாரண, வசீகரமற்ற மனிதனாகவே கருதப்படுவாய். ஒளியைக் கண்டறிவது எல்லோராலும் முடியாது. அங்கே என்னுடைய முழு சக்தியும் உன்னோடு இருக்கும். ஏனெனில் உன்னிடம் நான் ஒப்படைத்திருப்பது மிகப்பெரிய ஒரு வேலையாகும்.

புனிதமான தலங்களில் (மதம் சார்ந்த) சில குறிப்பிட்ட கட்டிடங்கள் எழுந்துள்ளன. ஏதோ ஒரு சமயத்தில் அவை தரைமட்டமாக்கப்பட வேண்டும். யமுனை நதிக்கு அருகே உள்ள ஒரு கட்டிடம், ஒரு புனிதத்தலத்தைக் கைப்பற்றுவதற்கும், பெண்களை அவமதிப்பதற்கும் கட்டப்பட்டது. அந்தப் பெரிய கட்டிடத்தில எத்தனையோ உருவச்சிலைகள்

புதைக்கப்பட்டுள்ளன. உன் எண்ணத்தில் அந்த சிவப்பு மசூதி தோன்றுகிறது. நான் பிறந்த இடம் அதற்கு அருகில் தான் இருக்கிறது. கம்சனின் காலத்தில் அது ஒரு சிறைக்கூடமாக இருந்தது. (கம்சன் என்பவன் பகவான் கிருஷ்ணனின் தாய்மாமன். கிருஷ்ணனுக்கு முன்பிறந்த ஏழு குழந்தைகளையும், அவர்கள் பிறந்த உடனேயே அவன் கொன்றான். கிருஷ்ணனைக் கொல்வதற்கும் அவன் பற்பல முயற்சிகள் செய்தான். ஆனால் முடிவில் கிருஷ்ணரால் கொல்லப்பட்டான்.) என் அம்மா அங்கே சிறை வைக்கப்பட்டிருந்தார். நந்தகாவோன் (நந்த கிராமம்) என்ற கிராமத்திலும் ஆற்றங்கரையில் இப்போது சலவைத் தொழிலாளர்கள் தங்கள் வேலையைச் செய்யும் இடத்தில் ஒரு புனிதத்தலம் உள்ளது. (நந்தகாவோன் என்ற இந்த ஊர் ராதா வசித்து வந்த பர்ஸானா என்ற கிராமத்திற்கு அருகில் உள்ளது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் வளர்ப்புத் தந்தை - தாய் ஆகிய நந்தரும் யாசோதையும் முன்பு வசித்து வந்த கோகுலம் என்ற ஊரில் இருந்து, பிறகு ஏற்பட்ட கஷ்டங்களினால் இடம் பெயர்ந்த ஊர் இது.) உன்னுடைய (ராம்சந்த்ராவின்) மாமனார் வீட்டின் அருகே ஒரு மண்மேடு இருக்கிறது. அந்த மேட்டின் கீழ் குப்ஜா என்ற கிணறு உண்மையாகவே பூமிக்குள் புதையுண்டுள்ளது. இப்போது குப்ஜா கிணறு என்ற பெயரில் குறிப்பிடப்படும் இடம் சரியானதல்ல.''

(குறிப்பு :- கம்சனுடைய பணிப்பெண் ஒருத்தி அழகாக இருந்தாலும், முதுகில் கூன் விழுந்தவளாக இருந்தாள். அதனால் அவளை குப்ஜா (கூன் முதுகு உடையவள்) என்று கேலியாக அழைத்தார்கள். பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் மதுரா நகருக்குச் சென்ற போது ஒரு கிணற்றின் அருகில் அவளைப் பார்த்தார். அவளுக்குக் கிருஷ்ணன் மீது மிகவும் அன்பு ஏற்பட்டது. எனவே கம்சனுக்காக எடுத்துச்சென்ற சந்தனக் குழம்பை கிருஷ்ணனுக்குக் கொடுத்தாள். கம்சன் குளிப்பதற்கு முன்பு உடம்பு முழுவதும் சந்தனக் குழம்பு பூசிக்கொள்வது வழக்கம். அந்தப்பெண் தந்த சந்தனத்தை கிருஷ்ணன் தன் உடம்பில் பூசிக்கொண்டார். பிறகு அவளுடைய பாதங்களைத் தன் பாதத்தினால் மிதித்துக் கொண்டு, அவளுடைய தாடைக்குக் கீழே

தன் கையைக்கொடுத்து அவளை நிமிரச் செய்தார். உடனே அவளுடைய கூன்முதுகு நேராகிவிட்டது. அவள் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனை தன் வீட்டுக்கு வருமாறு அழைத்தாள். கம்சன் கொல்லப்பட்ட பிறகு அவள் வீட்டுக்கு அவர் சென்றார்.)

‘‘வைசிய சமூகத்தைச் சேர்ந்தவளும், தத்தெடுத்த பிள்ளை தன்கூட உயிர்வாழாமல் போன துயரத்தில் இருப்பவளும் ஆகிய அந்தப் பணக்காரப் பெண்மணி, உன் கோரிக்கைகளுக்கு ஏற்ப இந்த இடங்களை உனக்குத் தெரிவித்தால், இனி அவளுடைய பரம்பரைத் தொடர்ச்சி நின்று போகாமல் இருக்கும். (இது ஏதோ ஒரு சபிக்கப்பட்ட குடும்பம் பற்றிய குறிப்பு). இந்தப் பெண்மணியும், கணவன்மார்களை இழந்த மருமகள்களும் உன்னை மதித்து, உன் உத்தரவுகளின்படி நடந்தால் அவர்களுக்கு மோட்சத்தை அருள்வேன் என்று நான் வாக்குறுதியும் தருகிறேன். அவள் எத்தனையோ சன்னியாசிகளுக்கு உணவளித்து, அவர்களுடைய பாதங்களைக் கழுவிய நீராகிய அமிர்தத்தை (சரணாம்ருதம்) பருகியிருக்கிறாள் ஆயினும் பயன் கிடைக்கவில்லை. இப்போது அதற்கான சந்தர்ப்பம் வந்திருக்கிறது. அவள் உண்மையாகவே பார்க்க விரும்பினால் என் உருவத்தின் சாயலை உன்னிடத்தில் காண்பாள். எந்த அளவுக்கு முடியுமோ அவ்வளவு முழுமையான தன்னம்பிக்கையுடன் இந்தச் செய்தியை அவளுக்கு நீ அனுப்பலாம். எந்த வடிவத்தில் இச்செய்தி தெரிவிக்கப்பட வேண்டும் என்பதை உன் குருநாதர் குறிப்பிட்டுச் சொல்வார். இந்த விஷயங்கள் அனைத்திலும் உன் குருவிடமிருந்து நீ ஒளியை, (ஞான வழிகாட்டுதலை) பெறுவாய்.’’

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- ‘‘பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உன்னிடம் என்ன சொல்கிறாரோ, அதைத் தவற விடும் வாய்ப்பு இல்லாமல் போவதற்காக, அதை என்னிடமும் கேட்டு சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.’’

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தொடர்ந்து கூறியது :- “பொல்லாதவர்களின் (போக்கிரிகளின்) கூட்டம் ஒன்று, D.D - என்ற கோயிலுக்குப் பின்னால் இருந்து கொண்டு

இயங்குகிறது. இந்த விஷயங்களிலெல்லாம் உன் குருவின் வழிகாட்டுதலின்படியே செய். அவரைவிட மேலான ஒரு வழிகாட்டி கிடைக்க முடியாது. மகாபன் என்ற இடத்தில், ஒரு மண்மேட்டின் கீழே ஒரு புனிதமான இடம் மறைந்து இருக்கிறது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் கட்டளைகள் :- " H.G - யில் உள்ள கோயிலை இன்றே அழித்துவிடு. சற்று முன்பு அங்கே ஒரு நிகழ்வு நடைபெறாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. தன் கணவன் மீது பக்தியுடைய ஒரு உத்தமமான பெண்மணி அங்கே வர நேர்ந்தது. அவளை மானபங்கம் செய்வதற்கு ஒரு முயற்சி நடந்தது. தன் மானத்தைக் காக்கும்படி கடவுளிடம் அவள் பிரார்த்தனை செய்தாள். இயற்கை உடனே கையசைத்தது. அதனால் அவர்கள் அவளுக்கு எந்தத் தீங்கும் செய்ய முடியவில்லை. அவள் உடல் ஊனமுற்ற ஒருவனின் மனைவி. அவனால் அவளைக் காப்பாற்ற முடிந்திருக்காது. அந்தக் கோயில் தீயில் எரிய வேண்டும். மற்ற எல்லாவற்றையும் விட மேலாக இந்த வேலை மிக அவசியமானது. உனது இப்போதைய நிலையின் விசேஷ சக்திகளைப் பயன்படுத்து. இந்த இரவு முழுவதும் நீ தூங்காமல் உட்கார்ந்திருக்க வேண்டியிருந்தாலும்கூட இந்த வேலையை நிறுத்தக்கூடாது. நான் வேறு உத்தரவு தரும் வரையில் இந்த அழிவு வேலை வேகம் குறையாமல் தொடர வேண்டும். இந்த வேலை உனக்கு மட்டுமே தரப்பட்டுள்ளது. (தற்சமயத்துக்கு) மற்ற அனைத்துவேலைகளையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிடு. இன்னொரு விஷயமும் முக்கியமானது. அந்தப் பெண்மணியை மானபங்கம் செய்ய நினைத்த கூட்டத்தில் இருந்த அனைவரின் வீடுகளும் நாளை காலைக்குள் ஒளி இழக்கும்படி (வம்சம் விளங்காதபடி) செய்யப்பட வேண்டும்.''

<u>29-10-1944</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "சக்திகளை தன் வயப்படுத்திக்கொண்ட பிறகு வேலை செய்யாமல் உட்கார்ந்திருப்பதற்காக நான் அந்த சக்திகளை உனக்குக் கொடுக்கவில்லை. இவை தேவையான சமயத்தில் பயன்படுத்தவதற்குத்தான் அளிக்கப்பட்டன. பொறாமையும் இது என் சொந்தம் என்ற எண்ணமும் ஒரு மனிதனின்

வாழ்விலிருந்து நீங்கிப்போய்விடும் போதுதான் மனிதன் விடுதலை பெற்றவனாகிறான். அந்த நிலையை உருவாக்க ஏராளமான நேரம் தேவைப்படுகிறது. கவனமாக சிந்தித்தால் தங்களின் இயக்கங்களை (செயல்களை) உண்டாக்குகின்ற அதே ஆற்றலை எல்லோருமே பெற்றிருப்பதைக் காணலாம். இதில் அவ்வப்போது மாறுகின்ற பழக்கங்களை மற்றும் சம்பிரதாயங்களை ஏற்றுக் கொள்ளவும் மதிக்கவும் வேண்டும். இந்தப் பண்பு என்னிடம் அதன் அதிமேலான நிலையில் இருந்தது.''

''பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்தான் இப்போது உண்மையான பரமாத்மாவாக (அஸல் ஜாட்) இருக்கிறார்.''

''கங்கா யமுனா பிராணாஹூதி என்று பெயரிட்டதில் என் நோக்கம் இந்த இரண்டு அம்சங்களும் ஒன்று சேர்ந்து தொடர்ந்து முன்னேறும் என்பதும் ஆகும்; அல்லது என்னுடைய மற்றும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடைய சக்தியானது கலந்து இருக்கும் என்றும் நீ சொல்லலாம். இதனால் இந்த உலகம் முழுவதும் உன்னால் ஒளியூட்டப்படும். உனது உடல் மறைந்த பிறகு அதன் மகத்துவம் மக்களைச் சென்றடையும்.''

''மதுராவில் யமுனை ஆற்றின் ஊற்றை எங்காவது தடுத்து நிறுத்த விரும்பினால் அகஸ்திய முனிவரிடமிருந்து உதவி பெற்றுக்கொள். அன்பு என்றால் குருநாதரால் இடப்படும் கட்டளை எதுவாயினும், அதை அப்படியே செய்கின்ற தன்னிச்சையான மனநாட்டம் என்று பொருளாகும். அதாவது அந்தக் கட்டளையைப் பின்பற்றுவதில் தயக்கமே கூடாது. மதுராவில், யாத்ரிகர்களை மொட்டையடிப்பதற்கு (முடிந்தவரை பணம் பறிப்பதற்கு) அவர்களை வரவேற்று தங்க இடமளிக்கும் பூஜாரிகளுக்கு, எவ்விதத்திலாவது உன்னைப் பற்றிய ரகசியம் வெளியாகி அவர்கள் உன்னை எதிர்க்கும் பட்சத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை அவரது சுதர்சன சக்கரத்தோடு வருமாறு அழைக்க பிரார்த்தனை செய்வாயாக.''

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- "அதற்கு நான் அனுமதி தருகிறேன். என் சக்தி எப்போதும் உன் பின்னால் இருக்கும். அதற்கான பிரார்த்தனை ஆகிய இதெல்லாம் செய்யத்

தேவையில்லை. ஒரு பெரிய கடமையை உன்னிடம் ஒப்படைத்திருக்கிறேன். அதில் யாரெல்லாம் உனக்கு உதவி செய்கிறார்களோ அவர்களின் நோக்கம் ஈடேறாமல் போகாது. அதற்காக பதட்டப்பட வேண்டிய தேவை இல்லை. தேவைப்படும் போது எனது முழு சக்தியும் உன்னோடு இருக்கும். மேலும் உனது மாஸ்டரும் எந்த நேரத்திலும் உன்னை அப்படித் தனியாக விட்டுவிட மாட்டார். சமர்த்தகுரு என்று சொல்லப்படுவதின் பொருள் அதற்கு தான். அவருடைய காலத்தில் அவரே அதற்கு உதாரணமாக இருந்தார். உன் மாஸ்டரின் மீதான உன் அன்புக்காக இன்று நான் முழுமையான பலனை அடைய செய்திருக்கிறேன். உன் உடம்பின் ஒவ்வொரு நுண்ணிய ரோமமும் கூட தெய்வீக நறுமணத்தை வெளியிடத் துவங்கியுள்ளன, இதற்கு மேலும் உன்னுடைய எதிர்பார்ப்புகளைப் பெறுவாயாக.''

M1 - இடம் வணக்கத்திற்குரிய மாஸ்டர் வியப்புடன் தெரிவித்தது :- "என்னுடையவர்களாகிய உன்னையும் R2 - வையும் தெய்வீக அருளில் சேர்த்துக்கொண்டுவிட்ட என் புத்திசாலித்தனத்தைப் பார்.''

## 30-10-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "இன்று காலை 9.45 மணிக்கு K2 - பிரம்மாண்ட மண்டலத்தில் பூர்ணத்துவம் பெறச் செய்யப்பட்டார். அன்புள்ள ராம்சந்த்ரா அவரை பரப்பிரம்மாண்ட மண்டலத்துக்கு இழுத்துக்கொண்டார். இப்போது அவர் (K2) அந்த மண்டலத்தின் ஆன்மீக ராஜ்ஜியத்தில் நடைப்பயணம் செய்வார்.''

''உன்னைவிட (ராம்சந்த்ரா) மேலான ஒரு பாத்திரத்தை (தகுதி உடையவரை) நான் ஒரு போதும் பார்த்ததில்லை. நேற்று இரவு உனக்குக் கொடுக்கப்பட்டது போல, அம்மாதிரி ஒரு நிலையில் இருக்கும் அப்படி உயர்ந்த மகாபுருஷரின் பிராணாஹூதியை ஜீரணித்துக் கொண்டது (உள்வாங்கிக் கொண்டு தன்வயப்படுத்திக் கொண்டது) உன்னுடைய (தனிச்சிறப்புடைய) காரியமாக இருந்தது! 'ஒருமுறை கூட ஏப்பம் விடாமல், அப்படியே முழுமையாக ஜீரணம் செய்து கொண்டு

விட்டான்' என்று பழமொழி சொல்வது போல அது இருந்தது. அதன் தடயத்தை எந்த இடத்திலும் விட்டுவிடாதபடி அந்தப் பிராணாஹூதி ஊடுருவிச் சென்றது.''

''என் அன்புள்ள M1, அச்சமயத்தில் அன்புள்ள ராம்சந்த்ராவின் (இதயமாகிய) பாத்திரத்தின் கொள்ளளவை கணக்கிட்டுப் பார்க்க வேண்டுமென்ற ஒரு உந்துதல் எனக்கு ஏற்பட்டது. தொடர்ந்து பதினைந்து நிமிடங்களுக்கு நான் அவரை பிராணாஹூதியால் நிரப்பிக் கொண்டே இருந்தேன். ஆனால் அப்பாத்திரம் நிரம்புவதற்கு எந்த ஒரு அறிகுறியும் காணப்படவில்லை. வேறு யாராக இருந்தாலும் அந்த மாதிரியான பிராணாஹூதியை, அதில் பாதியளவு நேரத்துக்குக் கொடுத்தால் கூட அவருடைய இதயம் வெடித்திருக்கும். ஆனால் அவர் என்னிடமிருந்து அம்மாதிரி ஒரு பிரவாகமான (வெள்ளம் போன்ற) பிராணாஹூதியை பெரும்பாலும் அறியாமலே இருந்தார். வழக்கமாக சத்சங்கத்தில் இருப்பது போல ஏதோ மிக லேசானதாக அவருக்குத் தோன்றியது. அந்தப் பாத்திரத்தை நிரப்புவது என் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. கடவுள் அவருக்கு மேலும் உயர்ந்த நிலையை அளிக்கட்டும்.''

''காலை 10.35 மணிக்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து ஏழு நிமிடங்கள் பிராணாஹூதி கிடைக்கும்படி ஏற்பாடு செய்தேன். அப்போதும் கூட அப்பாத்திரம் நிரம்பவில்லை.''

அந்தப் பிராணாஹூதி அளித்தபோது பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் குறிப்பிட்டுச் சொன்னது :- "இந்தப் பாத்திரம் உன் மாஸ்டரினால் உருவாக்கப்பட்டது, அதை நிரப்புவது சிரமம்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் குறிப்பு :- "பல்வேறு மனிதர்களிடமிருந்து அவர் (ராம்சந்த்ரா) எடுத்துக் கொண்டது எதுவாயினும், அவை யாவும் இங்கே என்னிடம் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன யாருக்காவது அதை மீண்டும் கொடுக்க வேண்டியிருந்தால், அது என்னிடமிருந்து திருப்பிக்கொடுக்கப்படும். அந்த மனிதரின் உள்நிலையின் வரம்புக்கு உட்பட்டு நான் மீண்டும் புதிதாக அவரை நிரப்புவேன்.''

‘‘ஒரு மனிதரின் இதயமாகிய ஏற்புக்கலனை (பாத்திரத்தை) பெரிதாகக்குவதற்கான வழி : முதலில் அந்த சாதகர் தன்னுள் ஈர்த்துக் கொள்ளக்கூடிய அளவை விட சற்று அதிக அளவு பிராணாஹூதியை அவருக்குக் கொடுக்க வேண்டும். அது அந்த சாதகரால் ஜீரணித்துக் கொள்ளப்பட வேண்டும். அதிக ஏற்புத்திறன் கொண்ட பாத்திரத்தை உருவாக்குவதற்காக இதே முறையை இப்படியே தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். சில சமயம் அவருடைய தகுதிக்கு (ஏற்கும் திறனுக்கு) மேலாக உள் நிலை உயர்த்தப்பட்டால் அதை அவர் ஜீரணித்துக் கொள்வதில் உதவி செய்யவேண்டிய தேவையும் இருக்கிறது. எந்த ஒருவரிடத்திலும் அவரது இதயத்தின் மீது அழுத்தம் (நிர்பந்தம்) ஏற்படுத்தக்கூடாது. அப்படிச் செய்தால் சாதகரின் உற்சாகம் எதிர்மறையாகப் பாதிக்கப்பட்டு விடும். (இதில் ஆர்வம் இல்லாமல் போகும்.)

‘‘மதுராவில் யமுனை ஆற்றின் கரையில் நான்கு முதல் ஆறு மைல் தூரம் வரை ஆன்மீக ஒளியூட்டவும். அந்தப் பகுதி முழுவதும் உன் காலடிகள் படுவது நல்லது. பிருந்தாவனத்திலும் கூட உன் வேலை இதே விதமானது தான். அது ஒரு மிகப் புனிதமான இடம். பூஜாரிகள் அதைக் கெடுத்திருக்கிறார்கள், அவர்களை முழுமையாக அழிப்பதில் இருந்து உன் வேலையைத் துவக்கு. அங்கிருந்து முடிக்கப்படாமல் எடுத்துவரும் வேலையை உன் வீட்டில் இருந்தபடி தொடர்ந்து செய்ய வேண்டியிருக்கும். பிருந்தாவனத்தில் இருக்கும் யமுனையின் காட்சி என் பார்வையில் தெரிகிறது. அது ஓரளவுக்கு இன்னமும் புனிதத்தன்மையின் விளைவைத் தக்க வைத்திருக்கிறது. ஏனென்றால் மதுராவைப்போல மக்கள் புழக்கம் இங்கு அதிகமில்லை. H4 - இன் சகோதரர் தன் உடலை நீத்த அந்த இடத்தைப் பற்றி ஏதாவது கட்டளை வரக் கூடிய சாத்தியம் இருக்கிறது. பகவான் கிருஷ்ணரின் மீதான உற்சாக போதையில் அவர் இறந்து போனார்.’’

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- “உன் மாஸ்டர் குறிப்பிட்ட அந்த மனிதருக்கு நான் நேரடியாக ஒளி (மெய்யறிவு) கொடுத்து விட்டேன். அவர் என்னுடன் இருக்கிறார். அவருடைய பெயரை

உனது மார்க்கத்தின் வம்சாவளி சங்கிலியில் பொன் எழுத்தக்களால் எழுது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது :- "இதோ ஒரு வியப்புக்குரிய கண்டுபிடிப்பு. இதயத்துக்கு ஒவ்வொரு புள்ளியுடனும் இணைப்பு இருக்கிறது. சாதகனை மிக மேல் உள்ள புள்ளியின் உச்சநிலைக்கு (துரா / Dhura) எடுத்துச்செல்லும் வழியாக இருப்பது இதயம் தான். இந்த எண்ணத்தைக் கருத்தில் கொண்டு அன்புள்ள ராம்சந்த்ரா ஒரு அற்புதமான கண்டுபிடிப்பைச் செய்திருக்கிறார். எல்லாக் கஷ்டங்களும் இப்போது சுலபமானதாக ஆக்கப்பட்டு விட்டன. வீழ்ச்சியடையும் வாய்ப்பு குறைந்துவிட்டது. முன்னேற விடாமல் செய்யும் தடைகளும், இடையூறுகளும் நீங்கிவிட்டன. அதற்கான வழி இதுதான். இதயத்தக்குப் பிராணாஹூதி அளிக்கும்போது பிரம்மாண்ட மண்டலம் அல்லது பரப் பிரம்மாண்ட மண்டலம் விழிப்படையச் செய்யப்படுவதாக ஒரு எண்ணத்துடன் அதைச் செய்யவேண்டும். இதயம் தன் அதிகபட்ச எல்லை வரையில் சென்று அதை எட்டுவதால், எந்த ஒரு புள்ளி அல்லது மண்டலம் எண்ணத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறதோ, அதன் புனிதத் தன்மை மலர்ச்சி அடைந்து பாதை தடை நீங்கியதாக ஆகும். உதாரணமாக பிரம்மாண்ட மண்டலத்தைத் திறப்பதற்கான (அந்த சாதகர் பிரம்மாண்ட மண்டலத்தை அடைவதற்கான) எண்ணத்தை மனதில் கொண்டிருந்தால், அந்த எண்ணம் அதற்குக் கீழே உள்ள புள்ளிகள் அனைத்தின் மீதும் ஒளிவீசிக்கொண்டே சென்று அந்த எல்லை வரையில் சென்றடையும். இது அந்தப் பாதையை எப்போதும் தடையில்லாமல் வைத்திருக்கும். பயிற்சியளிக்கும் ஒவ்வொருவரும் தன் குறிப்புப் புத்தகத்தில் முதல்பாகத்தில் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். இந்த வழிமுறை சாதகரை மிக உயர்ந்த புள்ளி வரையில் எடுத்துச் செல்லும். அதற்கு அடுத்ததாகக் கையாள வேண்டிய வழிமுறை என் கண்டுபிடிப்பாகும். அது ரகசியமாக வைக்கப்பட வேண்டும். ராம்சந்த்ரா இதை அறிந்து கொண்டிருக்கிறார். ஆனால் அதை முழுவதும் வெளிப்படுத்த நான் அனுமதிக்கவில்லை. அனைவருக்கும் இதை அவர் தெரிவித்துவிடக் கூடாது என்பதால், இப்படி நான் செய்தேன்.

அது ஒவ்வொரு புள்ளியையும் முழுமையாகத் திறப்பதில் உதவியாக இருக்கக் கூடிய ஒரு வழிமுறையாகும். அதைப் பயன்படுத்துகின்றவர் அந்தக் குறிப்பிட்ட புள்ளிக்கு அப்பால் விழிப்பு ஏற்படாதபடி தன் உள்ளத்தில் அதற்கு ஒரு தடையான எண்ணத்தை உண்டாக்கிக்கொள்ளவேண்டும். அது பயிற்சியளிப்பவர் என்ன நிலையை அடைந்திருக்கிறாரோ அந்த எல்லைவரையில் உதவி செய்யும். அன்புள்ள ராம்சந்த்ராவுக்கு என்னவிதமான ஆன்மீகக் கட்டமைப்பு உருவாகியிருந்தாலும், அது என் வேலையினால் மட்டுமின்றி அவருடைய சொந்த உழைப்பினாலும் கிடைத்த பலனேயாகும். (இடைவெளி) நான் ஒரு விசேஷமான செயல்திறனைப் பெற்றிருக்கிறேன். அதாவது ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்காக எனது விழிப்பு நிலையிலிருந்து கனவு நிலைக்கும் கூட அந்த வேலையைக் கொண்டு செல்வது வழக்கம். அதாவது எனது விழிப்பு நிலையில் செய்து முடிக்க இயலாத வேலை எதுவாயினும், அதை என் கனவு நிலையில் செய்வேன்.''

## 31-10-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் வெளிப்படுத்திய விஷயங்கள் :- “இன்று காலை 9-25 மணிக்கு K2 - பரப்பிரம்மாண்ட மண்டலத்தை எய்துமாறு செய்யப்பட்டார். பிரார்த்தனை நிறைந்த பணிவுக்கான புள்ளி (Prayerful Humility / IBD) திறக்கப்பட்டது. (செயல்படுமாறு தூண்டப்பட்டது). காலை 10.35 மணிக்கு அதற்கு அடுத்ததாக உள்ள புள்ளியின் ஒளி தூண்டப்பட்டது. காலை 10.50 மணிக்கு விசேஷப் பணிகளுக்கான அனுமதி அளிக்கப்பட்டது. காலை 11.55 மணிக்கு குதுப் (Qutub) என்ற பதவிநிலை அவருக்கு அருளப்பட்டது. கடவுள் அவருக்கு நல்லாசிகளைப் பொழிவாராக.''

நஜ்டா (அரேபியாவில் இருக்கும் ஒரு ஊர்) வின் கவுஸ் இடமிருந்து நேற்றிரவு அவரது ஆன்மீக உள்நிலை முழுவதும் எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்போதும் அவருக்கு இருந்த தீவிர மத அபிமானத்தின் பயனாக இது நிகழ்ந்தது. பெண்களுடன் பழகுவதைத் தவிர்க்குமாறு K2 - வுக்கு

உத்திரவிடவேண்டும். அவரிடம் பயிற்சி பெறுவதற்காக யாராவது வந்தால், அந்தக் குறிப்பிட்ட மனிதருக்குப் பயிற்சியளிக்கலாமா?, கூடாதா? என்று என்னிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும். என் வார்த்தைகள் அவரைச் சென்றடையத் தவறினால், அவர் ராம்சந்த்ராவிடம் அது பற்றி விசாரித்து அறிய வேண்டும். வருகின்ற ஒவ்வொரு மனிதரையும் நிரப்பி அனுப்ப வேண்டிய தேவை இல்லை. இந்த உத்திரவு R2 - க்கும் சேர்த்துத்தான். பயிற்சி அளிக்கும் அதிகாரம் பெற்றுள்ள அனைவருக்கும் இதை நான் சொல்கிறேன்.''

மாலை 5 மணிக்கு M1 - க்காக சொல்லப்பட்டது :- "நான் விழிப்பு நிலையிலிருந்து கனவு நிலைக்கும் என் வேலையை எடுத்துச் செல்வேன் என்று நேற்று நான் சொன்னேன். உண்மையாகவே அதில் நான் ஒரு நிபுணனாக இருந்தேன். ஆயினும் (நேற்று அது பற்றிக் கூறிய) அந்தச் சமயத்தில் அன்புள்ள ராம்சந்த்ராவை சோதிப்பதற்கு நான் விரும்பினேன். அவரை இபப்டி நான் சோதித்தது இதுவே முதல்தடவை. அவர் மனதில் புலன்கள் சார்ந்த ஏக்கம் இன்னும் எவ்வளவு மீதியிருக்கிறது என்று கண்டறிய விரும்பினேன். அந்த சோதனையை அவர் வெற்றிகரமாகக் கடந்து விட்டார். இதில் விசேஷம் என்னவென்றால் (என் சொந்த உள்நிலையை நான் விவரித்துக் கொண்டிருந்த போது) நான் அவரை சோதிக்க நினைக்கிறேன் என்பதையும் அவர் புரிந்து கொண்டு விட்டார். அம்மாதிரி ஒரு மனிதரிடமிருந்து எதையாவது மறைப்பது – ரகசியமாக வைப்பது – எனக்கு சிரமம் தான். இந்த விஷயம் மிகவும் ஆழ்ந்தது. ஆனால் அவருக்கு அது நீர்மட்டத்தில் மிதந்து செல்வது போல இருந்தது. அது அவரது தனிப்பட்ட திறமை மற்றும் கடவுள் தந்த வரம். அவர் பார்ப்பதற்கு மட்டுமே எளிமையாக இருக்கிறார். அன்புள்ள M1, அது என்ன அப்படி ஒரு எளிமை? அது ஏன் அப்படி இருக்கிறது?'' (M1 - இன் பதிலுக்காக சற்று இடைவெளி) ஆம், நீ சொல்வது சரிதான், அதனால் அதில் மிகவும் சூட்சுமமான மற்றும் ரகசியமான ஒருவிஷயம் இருக்கிறது. அதாவது என்னுடைய நினைவிலேயே அவரை எப்போதும்

ஒட்டியிருக்கச் செய்யும் அப்படி ஒரு தேர்ச்சித்திறனை அடைவதற்கு அவர் படிப்படியாக முன்னேறியிருக்கிறார். இதன் காரணமாகவே அவர் எதையும் தவற விடுவதில்லை. மனத்தின் பலவீனம் காரணமாக ஏதோ ஒன்று மறக்கப்படும் சாத்தியமும் உண்டு. ''

''இதய மண்டலத்தில் இடம் பெற்றுள்ள இந்த ஐந்து உயர்ந்த புனிதநிலைகள், அந்த மண்டலத்துக்கு மேலும் ஒவ்வொரு நிலையிலும் சேர்க்கப்பட்டுள்ளன. அந்த வடிவம் மாறிக்கொண்டே போகிறது. தெய்வீக நிலை (க்யுட்ஸா / Qudsa / Piety) என்ற மண்டலத்துக்கு அப்பால் இவை உதிர்ந்து விடுகின்றன. அதன்பிறகு தூய்மை (குலூஸ் / Khuloos) நிலை ஆரம்பமாகின்றது.''

''இன்று மாலை 5.35 மணிக்கு அன்புள்ள ராம்சந்த்ராவின் கடைசி முடிச்சையும் நான் உடைத்தெறிந்தேன். ஆனால் அது என்னவென்று சொல்வதற்கு இன்னமும் நான் விரும்பவில்லை. அவருடைய உணர்ந்து கொள்ளும் திறனுக்குப் பாராட்டுக்கள்! அவர் அதைப் புரிந்து கொண்டு விட்டார்! அந்த நிலை இதுதான். அதாவது தனது உடலை உதறிவிட்டு பரம்பொருளை உடனே சென்றடையும் திறனை இன்று அவர் பெற்றுவிட்டார். இதைத் தாமதப்படுத்த நான் விரும்பினேன். ஆனால் எனது உள்ளார்ந்த தூண்டுதல் இதில் என்னை செயலாற்றவனாக்கிவிட்டது. அது அவருடைய அதிர்ஷ்டம். ஆயினும் அவர் தன் உடம்பை நீத்துச்சென்று விட முடியாது; அந்த அளவுக்கு இப்போதும் அதை என் கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்கிறேன். அதைக் கடைசி வினாடியில் நான் வெளிப்படுத்துவேன். எனது உள்முகமான தூண்டுதல் இதில் என்னை செயலற்றவனாகச் செய்துவிட்டால் அது வேறு விஷயம். இந்த நிலையில் நீடித்திருக்கும் போது குறித்த காலத்துக்கு முன்பாக அவர் உடலை நீத்துச் சென்றுவிடமாட்டார்.''

<u>1-11-1944</u>

காலை 11.35 மணிக்கு உயர்மதிப்புடைய மாஸ்டர் கூறியது :- "வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மதுராவில் செய்யவேண்டிய வேலைக்காக ராம்சந்த்ராவை மற்ற

வேலைகளிலிருந்து விடுவித்துவிடு என்று கேட்டிருக்கிறார். அதனால் அந்த வேலைக்குத் தேவையான அனைத்து சக்திகளையும் உனக்கு நான் மாற்றிக் கொடுக்கிறேன்.''

''மண்டன மிஸ்ரரின் மனைவிக்கு ஆதிசங்கரர் செய்த கொடுமைக்கு நிகராக வேறு உதாரணம் எதுவுமில்லை. அந்தப் பாவத்தின் விளைவிலிருந்து அவர் ஒருபோதும் விடுபட இயலாது. அவள் தன் கணவனுக்கு முற்றிலும் விசுவாசமாக இருந்த ஒரு குடும்பப்பெண். தனது கடமைகளைச் செய்வதில் அவள் முழு உறுதியுடன் இருந்தாள். அவளுடன் வாதம் செய்த பிறகு ஆதிசங்கரர் பெண்கள் கல்வி கற்பதைத் தடை செய்தார். இதுவே ஹிந்துக்களின் குலம் (பரம்பரைத் தொடர்) தவறாக வழிகாட்டப்பட்டு திசைமாறிப் போவதற்குக் காரணமாயிற்று. இதனால் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு சரியான கல்வியளிக்க முடியவில்லை. இந்தப் பாவத்தின் கனமான பளு இன்னும் அவர் கருத்தில் தொங்குகிறது. இதனால் ஒரு மக்கள் கூட்டம் முழுவதையும் அவர் கொன்றுவிட்டார். அவர்களின் முன்னேற்றத்துக்கான வாயிலை மூடிவிட்டார். அவர் உருவாக்கிய மத அமைப்பும் அதன் விதிமுறைகளும் அவராகவே செய்தவை. இயற்கையின் எந்த இடத்திலும் அதற்கான (கடவுளின்) கட்டளை இல்லை. ஒருவிதத்தில் உடலின் நிறத்தின் தரம் இயற்கையின் தரத்துக்கு எதிராக இருக்கிறது. ஒருவரது உடம்பின் மீது அதன் பிரதிபலிப்பு நல்ல நிறமுடையதாக இருப்பது நிறமற்ற தன்மைக்கு பாதகமாவது, மண்டன மிஸ்ரரின் மனைவியை இழிவு படுத்துவதற்கு ஆதிசங்கரர் தனது சங்கல்ப சக்தியைப் பயன்படுத்தினார். அதனால் அவளுக்கு அவரால் எந்த தீங்கும் செய்ய முடியவில்லை. ஹிந்து சமுதாயத்தின் சிகரம் போன்றவரின் யாருக்கு எதிராகப் பேச வாய்திறந்தால் மக்கள் மிகவும் கோபம் கொள்வார்களோ அவரின் நிலை இது. காவி உடை அணிவது அவர்களின் வரம்புக்குட்பட்ட விதத்தில் மட்டுமே நல்லது. ஆதிசங்கரர் பிரம்மச்சாரியாக வாழ்ந்தவர். மிகவும் கற்றறிந்தவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஆன்மீகச் செல்வம் அவருக்குக் கிடைக்கவில்லை. மண்டன மிஸ்ரருடைய மனைவி முக்திநிலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆதிசங்கரர்

அதற்கு அறிமுகமில்லாதவராகவே நின்று விட்டார். இதற்கு மேல் சொல்லும்படி என்னைக் கட்டாயப்படுத்த வேண்டாம்.''

''உண்மையான சேவையை சுவாமி தயானந்தா (ஆரிய சமாஜத்தின் ஸ்தாபகர்) செய்தார். ஆனால் அவரது ஆயுள் போதுமான அளவு நீடிக்கவில்லை. தன் திட்டம் முழுவதையும் தன் நெஞ்சுக்குள்ளேயே வைத்துக்கொண்டு சென்று விட்டார். அவர் இறந்தபோது அவருடைய திட்டம் சரியானபடி வெளியிடப்படவில்லை.''

''சங்கராச்சாரியார் புனித நூல்களில் இடைச் செருகல்களையும் புகுத்தி விட்டார். எப்படியிருந்தாலும் உன் அறிவை அதிகரிப்பதற்காக ஒரு விஷயம் சொல்கிறேன். பால கங்காதர திலகர் பெற்றிருந்த அளவு ஞானத்திறனைக் கூட சங்கரர் பெற்றிருக்கவில்லை. (பால கங்காதர திலகரும், ஆதி சங்கரரும் பகவத் கீதைக்கு எழுதிய விரிவுரைகள் சிறப்பானவையாகக் கருதப் படுகின்றன.) பழைமையான அந்த நூல்களின் மூல வடிவத்தை திலகரை விட சிறப்பாகப் புரிந்து கொள்ளும் தன்மை சங்கரருக்கு இருக்கவில்லை. அந்தப் புனிதமான புத்தகங்களில் தன் (பிராமண) சமூகத்தின் கௌரவத்தை மேம்படுத்துகின்ற அம்மாதிரி கருத்துக்களை அவர் இடைச்செருகலாகப் புகுத்திவிட்டார். சமூகம் என்று நான் ஹிந்து சமுதாயத்தைச் சொல்லவில்லை; அவர் பிறந்த ஜாதியைச் சொல்கிறேன். சன்னியாசிகள் ஆன்மீகத்தில் ஞானத்தகுதி பெற்றிருப்பதைக் காண்பது மிக அரிது. அந்த அரிதான மனிதர்களிடம் கூட, அது (ஞானத் திறன்) அந்த சன்னியாசத்தின் காரணமாக ஏற்பட்ட தகுதியாக இருப்பதை விட, அவர்களின் சொந்தப் பண்பு மற்றும் திறமையால் வந்ததாகவே இருக்கிறது. இதன் காரணம் என்னவெனில் சன்னியாசம் என்ற இந்த அமைப்பு எந்த அடித்தளத்தின் மீது கட்டப்பட்டுள்ளதோ, அந்த அடித்தளமே பலவீனமானது. உதாரணமாக மணலை மையொற்றும் தாளினால் மூடி அதன்மீது கட்டிடம் எழுப்புவது போன்றது. அது அந்த மையொற்றும் தாளின் காரணமாக கட்டிடத்தின் குறைபாடு மறைக்கப்பட்டிருக்கிறது. சங்கராச்சாரியார் இயற்றியுள்ள நூல் எதையும் அது சரியாகவே இருந்தாலும் கூட நீ

அதை நம்பக்கூடாது என்று உனக்குக் கட்டளை இடுகிறேன். ஏனென்றால் சம்ஸ்கிருத மொழி உனக்குப் பழக்கமில்லை என்பதால், அதைப் பற்றி அது சரியா? துவறா? என்று மதிப்பிடுவதற்கு உன்னால் இயலாது. பரம்பொருள் பற்றிய விஞ்ஞானத்தில் (பிரம்மவித்யா) நிபுணராக இருப்பதற்கு சம்ஸ்கிருத மொழியை அறிந்திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. நானே அதற்கு உதாரணமாக இருக்கிறேன். இதனால் சம்ஸ்கிருதம் கற்றுக்கொள்ளக் கூடாது என்று அர்த்தமில்லை. மேலே கூறியுள்ள வாக்கியத்தின் அர்த்தம் என்னவென்றால் சம்ஸ்கிருதம் படிக்காததால் ஒருவர் பிரம்மவித்யையை அடையாமல் போவதில்லை என்பதுதான். பிரார்த்தனையைப் பொறுத்த வரையில் அந்தச் சமயத்தில் என்னமொழி பரவலாக விளங்குகிறதோ, அந்த மொழியில் பிரார்த்தனை இருக்கலாம். அந்தப் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக, இதில் தேவைப்படுவது, அதற்கான சரியான உணர்வும், மனப்பான்மையும் தான்.

தொகுப்பாசிரியர் குறிப்பு :- தற்கால ஹிந்துமதம் மற்றும் தத்துவ ஞானத்தின் மூலகர்த்தாவாக பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பவரும், 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் ஆகிய ஆதிசங்கராச்சாரியார் பற்றிய குறிப்பு இது. இந்திய தத்துவ ஞானத்தின் அத்வைத வேதாந்தத்தை உருவாக்கியவர் அவரே. மனித கலாச்சாரப் பண்பாட்டிற்கும், ஒட்டுமொத்தமாக தத்துவ ஞானத்துக்கும் இந்தியா அளித்த மிகவும் ஆழ்ந்த கருத்துடைய, மற்றும் மதிக்கத்தக்க பங்களிப்பாக இருபதாம் நூற்றாண்டில் அது (அத்வைதம்) போற்றப்பட்டது. ஆதிசங்கராச்சாரியார் கேரள மாநிலத்தில் கௌரவமும், குலப்பெருமையும் மிகுந்த ஒரு நம்பூதிரி பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். அவருடைய தந்தை இவருடைய குழந்தைப் பருவத்திலேயே இறந்த பிறகு தாயும் மகனும் மட்டுமே உடைய எளிய குடும்பமாக அது இருந்தது. ஐந்து வயதிலேயே மதம் மற்றும் தத்துவஞானம் சம்பந்தமான பழைமையான நூல்களின் அனைத்து ஞானத்தையும் பெற்றுவிட்டதாக மதிக்கப்பட்ட அவர், அந்த இளம் வயதிலேயே துறவு மேற்கொள்வதற்கு தாயாரின்

அனுமதியைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவருடைய எட்டாம் வயதில் ஆற்றில் குளிக்கச் சென்ற போது ஒரு முதலையின் வாயில் அகப்பட்டுக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. அப்போது அதிலிருந்து விடுபட வேண்டுமானால் அவர் துறவியாகப் போவதற்கு தாயார் அனுமதிக்க வேண்டும் என்ற நிலையில் அவருடைய சம்மதத்தைப் பெற்றார். தாயின் இறுதிச்சடங்கைச் செய்வதற்காக அவளின் உயிர் நீங்கும் தருணத்தில் வந்துவிடுவதாக வாக்குறுதி அளித்து அவர் வீட்டைத் துறந்து வெளியேறினார். அவர் பல அதிசயங்களை நிகழ்த்தினார். தன்னைவிட அதிக வயதும், கல்வியறிவும் உடையவர்களை சீடர்களாகப் பெற்றார். அந்தச் சமயத்தில் இந்தியாவில் மதம் மற்றும் தத்துவ ஞானத்தில் மிகச் சிறந்தவர்களாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தவர்களையும், மற்றும் அதில் மேதைகளாக நிலை பெற்றிருந்தவர்களையும், சாஸ்திர பூர்வமான விவாதங்களுக்கு அழைத்து வெற்றிகொண்டார். அம்மாதிரியான ஒரு வாதத்திற்காக குமாரிலபட்டர் என்பவரை சந்திப்பதற்காக அவர் காசிக்கு (வாரணாசிக்கு) வந்தார். குமாரிலபட்டர் பூர்வ மீமாம்சம் (வேதத்தின சடங்கு முறைகளை தீவிரமாக அனுசரிப்பவர்கள்) என்ற கொள்கைவழிமுறையில் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாக இருந்தார். சங்கரர் அவரைக் காணச்சென்ற சமயத்தில் குமாரிலபட்டர் அவரே ஏற்றுக்கொண்ட வேதனைமிகுந்த தற்கொலைக்கு உட்படுத்துகின்ற ஒரு பரிகாரத்தை நிறைவேற்றும் முயற்சியில் இருந்ததால், அவரை தனது மிகச்சிறந்த சீடாராகிய மண்டன மிஸ்ரருடன் வாதிடும்படி அனுப்பி வைத்தார். எனவே மண்டன மிஸ்ரருக்கும் சங்கரருக்கும் இடையே வாதப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் தோற்றவர் ஜெயித்தவருக்கு சீடராகி அவருடைய வழிமுறையைப் பின்பற்றவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. அதாவது சங்கரர் தோல்வியடைந்தால் அவர் இல்வாழ்வை ஏற்றுக்கொள்ள வேண்டும்; மண்டன மிஸ்ரர் தோல்வியடைந்தால் சங்கரருக்கு சீடராகி துறவறம் ஏற்கவேண்டும். சாரதா அல்லது பாரதி என்ற பெயருடையவளாகிய மண்டன மிஸ்ரரின் மனைவியே இந்தப் போட்டிக்கு நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அவர் அக்காலத்தில்

திறமைமிக்க தர்க்கஞானியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தார். மண்டன மிஸ்ரர் தோல்வியடைந்தார். அதன்பிறகு, தன் கணவனின் பாதியாக அவள் இருப்பதால் மண்டன மிஸ்ரர் துறவியாவதையும், சங்கரருக்கு சீடராவதையும் மறுத்து, தன்னோடு வாதம் செய்யும்படி சங்கரரிடம் கூறினாள். ஞானிகள் பெண்களோடு வாதம் செய்வதில்லை என்று கூறி அதைத் தவிர்ப்பதற்கு சங்கரர் முயற்சி செய்தார். ஆனால் வேதகாலத்தில் யாக்ஞவல்கியருக்கும் மற்றும் கார்கி என்ற பெண்மணிக்கும் இடையே வாதம் நடந்த பழைய நிகழ்ச்சியை சாரதா நினைவுபடுத்திய பிறகு, சங்கரர் விருப்பமில்லாமல் சாரதாவின் கேள்விகளுக்கு மட்டும் பதிலளிக்க ஒப்புக்கொண்டார். பதினெட்டு நாட்களுக்கு இந்தக் கேள்வி பதில்கள் தொடர்ந்து நடந்தன. கடைசியில் சாரதா சங்கரரை குழப்பத்தில் சிக்க வைப்பதற்காக ஒரு வினோத வழியைக் கையாண்டாள். காமசாஸ்திரம் பற்றி அதில் மிக நெருக்கமான மானிட நடத்தைகள் பற்றிய கேள்விகளைக் கேட்டாள். சங்கரர் அதற்குப் பதில் கூறியிருந்தால் அவர் எட்டு வயதிலேயே துறவியானவர் என்பது பொய்யாகி, அவர் போலித்துறவி என்று ஆகிவிடும், பதில் சொல்லத் தவறினால் அவர் எல்லாம் அறிந்தவர் (சர்வக்ஞர்) பூர்ண ஞானம் பெற்றவர் என்பது பொய்யாகி விடும். எனவே இதற்குப் பதில் கூறுவதற்கு சிறிது கால அவகாசம் தேவை என்று சாரதாவிடம் சங்கரர் கேட்டுக்கொண்டார். அதன்பிறகு தன் உடலை தன் சீடர்களின் பொறுப்பில் ஒரு குகையில் மறைத்து வைத்து, அப்போதுதான் இறந்து போன, மூன்று மனைவிகளை உடைய இளம் வயதுடைய மன்னன் ஒருவனின் உடம்புக்குள் தனது சூட்சும சரீரத்துடன் புகுந்தார். அதன்பிறகு காமசாஸ்திரம் பற்றி தேவையான ஞானம் பெற்றவராகி, மீண்டும் சென்று வாதத்தில் வென்று, மண்டனமிஸ்ரரை தன் சீடர் சுரேஸ்வராச்சாரியாக மாற்றினார். குஜராத்தில் சாரதாபீடம் என்று சாரதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மதம் மற்றும் தத்துவஞான மடமாக அதை நிறுவினார். அவளுக்காக ஒரு பீடத்தை (மடத்தை) நிறுவி அவளை அதில் கோயில் கொள்ளச் செய்தபிறகு உண்மையான சாரதாவுக்கு என்ன நிகழ்ந்தது என்பது பற்றி யாருக்கும் தெரியவில்லை.

சங்கரர் தன் 32ஆம் வயதில் இமயமலையில் கடல் மட்டத்தில் இருந்து 12000 அடி உயரத்தில் உள்ள கேதார்நாத் என்ற இடத்தில் உயிர்நீத்தார். நன்னெறி ஒழுக்கத்தில் அவரது தளராத வலிமையும், தன் ஞானத்திறனில் பயனுறுதி மிக்க திட சங்கல்பமும், அவருடைய வாழ்வில் மிகவும் புகழ்பெற்றவையாக இருந்தன. அவருடைய தாயின் உயிர்நீங்கும் தருணத்தில் அவளைப் பார்க்க வந்து, அவளது இறுதிக் கடன்களைச் செய்வதாக அளித்த வாக்குறுதியை அவர் நிறைவேற்றினார். இல்வாழ்வில் இருப்பவர் போல இப்படி இறுதிக்கடன் செய்வது சம்பிரதாயமான துறவுமுறைக்கு எதிரானது என்று அவரது உறவினர்கள் அவர்மீது கோபம் கொண்டார்கள். அவருடைய தாயாரின் உயிரற்ற உடலை எரிப்பதற்கு உதவி செய்ய யாரும் வரவில்லை. எனவே அவரே தன் வீட்டை இடித்து அதிலிருந்த மரத்துண்டுகளையும் எரியக்கூடிய மற்ற பொருள்களையும் சேகரித்தார். தாயின் உடம்பை மூன்று பகுதிகளாக வெட்டி ஒன்றன்பின் ஒன்றாக எரியும் நெருப்பில் இட்டார். சாம்பலை ஆற்றில் கரைப்பது உள்பட இறுதிச் சடங்குகள் யாவும் செய்தபிறகு, நம்பூதிரி பிராமண குலத்தாருக்கு அவர்களின் வீட்டு வாசலிலேயே சுடுகாடு அமையட்டும் என்று சபித்தார். இப்போதும் கூட ஆசாரம் மிக்க நம்பூதிரியார்களிடம் இந்தப்பழக்கம் இருக்கிறது.

ஹிந்து மதத்திற்கு சங்கரருடைய பங்களிப்பு பற்றி பலவிதமான கருத்தக்கள் உள்ளன. அவருடைய ஞானத்திறனும் அதில் அவரது மனோதிடமும் பெரும்பாலும் உலகளாவிய நன்மதிப்பையும் புகழையும் பெற்றுள்ளன. புத்த மதத்திற்கு அவர் சாவுமணி அடித்து கிட்டத்தட்ட இந்தியாவை விட்டே தூக்கியெறிந்ததாகக் கூறப்படுகிறது. அவருக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்ட ஹிந்து மதத்தை அதன் உச்சநிலையை அடையும்படியாக அவர் புத்துயிர் கொடுத்தார். புத்தமதத் துறவிகளையும், போதகர்களையும் அவர் உயிரோடு எரியச்செய்ய வைத்ததாக சுவாமி விவேகானந்தா குறிப்பிட்டிருக்கிறார். ஆயினும் சங்கரருடைய முழுமையான அத்வைதமே இந்தியாவில் மிகவும் ஆதரிக்கப்பட்ட தத்துவஞான

வழிமுறை என்று அதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து, இந்திய கலாசாரத்தின் மற்றும் தத்துவஞானத்தின் இன்றைய புது எழுச்சியையும், விவேகானந்தரே துவக்கி வைத்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் அப்போது உலகம் முழுவதும் பரவியிருந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஆங்கிலேயே தத்துவஞானியாகிய ப்ராட்லீயின் ''முழுமைக் கொள்கை'' மிகவும் ஆதிக்கம் கொண்டிருந்த பின்னணியில் அதற்கு எதிராக இது இருந்தது. பெரும்பாலும் இருபதாம் நூற்றாண்டு முழுவதிலும் இந்திய பல்கலைக்கழகங்களில் சங்கரரின் சிந்தனைகளை மேலைநாட்டு தத்துவ ஞானிகளாகிய ப்ளாட்டோ, ஸ்பினிசா, காந்த், ப்ராட்லி போன்றவர்களின் சிந்தனைகளோடு ஒப்பீடு செய்து ஆராய்கின்ற நிலவரம் தொடர்ந்தது. ஆயினும் பழைமை சம்பிரதாயங்களை ஆதரிக்கும் ஹிந்துக்கள் சங்கரரை மாறுவேடத்தில் வந்த புத்தர் என்று கருதினார்கள். அவருடைய மாயாவாதக் கொள்கையை அர்த்தமற்ற கொள்கை (அஸத் சாஸ்திரம்) என்றும் உலகையும், மனிதனையும் பற்றிய எதிர்மறையான, நாத்திகமான, வேதத்துக்கு மாறான புத்தமதக் கண்ணோட்டத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது என்று கூறினார்கள். கடவுளை அணுகுவதற்கு இந்தியாவில் அப்போது பரவலாக விளங்கிய மதநம்பிக்கைகளின் பல்வேறு விதமாக இருந்த வழிமுறைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து இணைத்ததன் மூலமாக நாட்டில் கலாசார ஒற்றுமையை உண்டாக்குவதற்கு சங்கரர் முயற்சி செய்து பெருமளவு வெற்றியடைந்தார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவருடைய முயற்சிகளும் கூட சமரசங்கள் செய்து கொள்வதிலும், மறைமுகமான (சிலருக்கு மட்டுமே தெரிவிக்கப்பட்ட) மார்க்கங்களுக்கும் பண்படாத, கடுமையான நடைமுறைகளுக்கும் சலுகைகள் அளிப்பதிலும் சென்று முடிந்தன. பரம்பொருளைப் பற்றிய அவரது கருத்து நன்கு புரிந்து கொள்ளக்கூடியதாக மற்றும் தர்க்கரீதியாக மிகவும் வலுவாக இருந்தாலும், பிற்கால வேதாந்த ஆசாரியர்கள் கொண்டிருந்த பணிவும், இளகி இணங்கும் தன்மையும், இல்லாதிருந்தது. அவர்கள் பரம்பொருளாகிய சத்தியநிலையை அதன் முழுமையான தன்மையில் உணர்ந்து

அறிவதற்கு தர்க்கவாதம் மற்றும் காரண காரியவாதத்தைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. சங்கரருக்குப் பிறகு சுமார் ஆயிரம் வருடங்கள் இந்திய தத்துவஞானம் மற்றும் கலாசாரத் துறையில் இருண்டநிலையும், எதுவுமே நிகழாத நிலையும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. சங்கரருடைய அறிவுக் கூற்றும், புகழின் வலிமையுமே ஒருவிதத்தில் அதன் (இந்திய தத்துவ ஞானத்தின்) முதிர்ச்சிக்குத் தடையாக இருந்தன.

ஸ்ரீ பாபுஜியிடம் சங்கரரையும், மண்டன மிஸ்ரரையும் பற்றி நான் பேசிய போது அவர் தனக்கே உரிய நறுக்கான விதத்தில், ‘‘எல்லாம் அறிந்தவர் (சர்வக்ஞர்) என்று அவர் தானே கொண்டிருந்த கருத்தை நிலைநாட்டுவதற்காக, தன் தகுதிக்குக் குறைவான ஒன்றில் அவர் ஈடுபட்டதற்குப் பதிலாக பாலுறவு பற்றிய தனது அறியாமையை அவர் நேர்மையுடன் ஒப்புக்கொண்டிருக்க வேண்டும்.’’ என்று சொன்னார். மனிதனின் வரம்புகள் பற்றிய மதிப்பையும், மேதாவியாக (மேதையாக) இருப்பதன் கவர்ச்சி மற்றும் பிரகாசத்தை விட எளிமையாக இருப்பதே மேன்மையானது என்பதையும், தோல்வியின் கருவிலிருந்து தான் வெற்றி மலர்கிறது என்பதையும் வணக்கத்திற்குரிய பாபுஜி இப்படி வெளிப்படுத்துகிறார்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறுவது தொடர்கிறது :- “இயற்கையில் இரண்டு கோட்பாடுகள் உள்ளன. ஒன்று நேர்மறையானது, இன்னொன்று எதிர்மறையானது (ஆஸ்பாத் மற்றும் நஃபீ / Asbaat and Nafe) நஃபீ என்பது வெளியேற்றுதல் அல்லது நீக்குதலுக்கான பதவி நியமனம். ஒரு புண்ணில் சீழ் அதிகமாகி விடும்போது (தீமை அதிகரித்து விடும் போது) இந்த சக்தியின் மூலமாக அது அழிக்கப்படுகிறது. ஆஸ்பாத் என்பது இழப்பை ஈடுகட்டும் செயல்முறையின் பெயர். இந்தக் கோட்பாடுகள் பிரபஞ்ச சிருஷ்டியின் துவக்கத்திலிருந்து தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எதெல்லாம் உண்மையாகவே இல்லாமற் போயினவோ அவை பக்தர்களால் மீண்டும் ஈடு செய்யப்படுகின்றன. அதிகப்படியாக இருப்பதும் கூட அவர்களாலேயே இயல்புநிலைக்குக் கொண்டுவரப் படுகின்றன.

இயற்கைக்கு கைகளும், கால்களும் இல்லை. அது தொடர்ந்து வேலை செய்து கொண்டிருக்கும் ஒரு இயந்திரம். பரம்பொருளின் மீது பக்தியுடைய மனிதர்களாகிய நீங்கள் தான் அதை பலவீனப்படுத்துகிறவர்கள். இயற்கையாகிய இயந்திரத்திற்கு வலிமை சேர்ப்பவர்களும் நீங்களே. இயற்கையாகிய இயந்திரம் நல்ல வலிமையோடு நன்றாக இயங்கும் போது அது நல்ல காலம் என்று நியமிக்கப்படுகிறது. அது பலவீனமாகி பழுதடையும் அளவின் விகிதத்துக்கு ஏற்றபடி காலம் வீழ்ச்சி நிலையடைகிறது. சத்யயுகம், திரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் ஆகிய பிரிவுகள் இயற்கையாகிய இயந்திரத்தின் வலிமை அல்லது பலவீனத் தன்மைக்குத் தக்கவாறு தான் அமைகின்றன. இப்போதைய காலகட்டத்தில் இந்த இயந்திரம் இப்போது தாறுமாறாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் பல்வேறு பகுதிகள் மிகவும் பலவினமாகியுள்ளன. இதனால் இயற்கையின் கவனம் இந்த விஷயத்தை நோக்கித் திரும்பியுள்ளது. இதன்பலன் தெளிவாகத் தெரிகிறது. உண்மையில் இயற்கையில் எந்த ரகசியமும் இல்லை. அது மிகவும் எளிமையாக இருக்கிறது. மாஸ்டருடைய பூர்ணத்துவத்துக்கு அதுவே சான்றாக இருக்கிறது. ஒரு சேவகருக்கு (குருவின் அல்லது கடவுளின் சேவகருக்கு) கவனித்து அறியும் திறன் (ஒரு விஷயம் சம்பந்தப்பட்டவற்றை மற்றும் உண்மையை கிரகித்துக் கொள்ளும் திறன்) ஒரு அவசியமான உள் நிலையாகும். உனக்குக் கீழே பணியாற்றும் ஒவ்வொரு குதுப்பிற்கும் (உயர்நிலை பெற்ற சீடருக்கும்) சத்சங்கத்தின் போது என்ன சிரமங்கள் தோன்றினாலும் அவை இங்கேயிருந்து (உன்னிடமிருந்து) தீர்த்து வைக்கப்படும் என்று உத்தரவளிக்கவும். அதேபோல சொல்லப்படும் கட்டளை எதுவாயினும் அதை கடவுளின் ஆணையாகவே கருதி அதன்படி நடக்கவேண்டும்.''

''அன்புள்ள ராம்சந்த்ரா மிகவும் அதிநுட்பமான ஒரு வழிமுறையை என்னிடம் ஆலோசனையாகத் தெரிவித்தார். பிராணாஹூதி குறைவாகி மற்றும் அதிகமாகிப் போவது போன்ற பல பிரச்சனைகளுக்கு அது ஒரு தீர்வைக் கொண்டு வந்திருக்கிறது. ஒவ்வொரு 'குதுப்பும்' (Qutub) (பயிற்சி

அளிப்பவரும்) அல்லது உயர்நிலை அடைந்த ஒவ்வொருவரும், ஒரு சாதகரின் தகுதிக்கு அதிகமாக அல்லது ஏற்கும் திறனுக்கு அதிகமாக அளிக்கப்பட்டது எதுவாயினும் அது பிரியமுள்ள ராம்சந்த்ராவுக்கு மாற்றிக் கொடுக்கப்படவேண்டும் என்ற உறுதியான எண்ணத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அது சரியான அளவில் அளிக்கப்பட்டிருந்தால் அது அந்த சாதகரால் ஈர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் நினைக்க வேண்டும். இந்த இரண்டு எண்ணங்களுமே ஒன்று சேர்ந்து இருக்கவேண்டும். அதே போல ஒவ்வொரு குதுப்பும், கூருணர்வுத் திறனை அதிகரித்துக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். (இதுதான் அந்த ஆலோசனை) அவரது உள்ளுணர்வு மிக்க இந்த அகப் பார்வையைக் கண்டு சந்தோஷமான வியப்பில் துள்ளிக் குதித்தேன். அன்புள்ள ராம்சந்த்ரா தெரிவித்த இந்த ஆலோசனையே உண்மையில் நமது வழிமுறையாக இருக்க முடியும். (நட்ஜாவின் கவுஸினுடைய) ஆன்மீகநிலையைப் பறிக்கும் போது எந்த மாமனிதரிடம் அவர் இணைக்கப்பட்டிருந்தாரோ, அம்மனிதருக்கு அதைத் தன்னிடம் ஈர்த்துக் கொள்ளவும் சக்தி உண்டு என்பது புலனாகியது. பிரியமுள்ள ராம்சந்த்ரா தெரிவித்த ஆலோசனை எதுவாயினும் அதை அவர் அபிவிருத்தியும் (வளர்ச்சி பெறவும்) செய்திருக்கிறார். கவுஸ் (Ghous) என்ற நிலை துவங்கும் போது தானாகவே அவர் விரும்பும் பலனைப் பெறுவதற்காக, அவருடன் தனது மாஸ்டரின் இணைப்பை ஏற்படுத்தி நிலை நிறுத்துவது முற்றிலும் சரியானது.

<u>2-11-1944</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்தரவுகள் :- R2 - க்கு மிக எளிதான வேலை கிடைக்கும்படியாக மதுராவில் உன் வேலையைப் பகிர்ந்து கொடு. ஏதாவது அதிக சிரமமான வேலையில் உதவி தேவைப்படுமானால், அந்த வேலைக்காக R2 - க்கு சக்தியைக் கொடு, அந்த வேலை செய்யப்பட்டதும் அந்த சக்தியை திரும்பப் பெற்றுக்கொள். ஜாமா மசூதி சம்பந்தப்பட்ட வேலையை M1 - க்குக் கொடு, நானும் மதுராவில் முனைப்பாக

என் வேலையைச் செய்து கொண்டிருப்பேன் என்றாலும், அந்த வேலையில் அவர் தான் ஈடுபட்டிருப்பதாக நினைக்கும்படி அவரிடம் சொல், மற்ற வேலைகளில் காலப்போக்கில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் என்பதால் அது பற்றி நான் உனக்குத் தெரிவித்துக் கொண்டே இருப்பேன். மதுரா முழுவதையும் நீ ஒளிபெறச் செய்வாயாக. பிருந்தாவனத்தில் வேலை அதிகமில்லை. மதுராவில் தான் மிகப்பெரிய வேலை இருக்கிறது. நந்த கிராமம் போன்ற இடங்களுக்கு உன் குறிப்புப் புத்தகத்தை தவறாமல் எடுத்துச்செல். எந்த ஒரு உத்திரவு இடப்பட்டாலும் அதைக் குறித்துக்கொள். யமுனை நதியை திசை திருப்புவது அவசியமாக இருக்கலாம். ரயில்வே பாலத்தின் அருகே (மறைந்து கிடக்கும்) வெந்நீர் ஊற்று ஆற்றிலிருந்து உருவாகிறது. ஒரு வேலையை செய்து முடித்த பிறகுதான் நீ அடுத்த வேலையைத் துவங்க வேண்டும். உன் உடல் நலத்தை கவனித்துக் கொள். உனக்குக் கடுமையாக சிரமம் ஏற்படும் அளவுக்கு ஒரே நாளில் எல்லா வேலைகளையும் செய்து முடிக்க வேண்டிய தேவையில்லை. உனக்கு நேரம் ஏராளமாக இருக்கிறது. ஒன்றோ அல்லது இரண்டோ கட்டிடங்களை இடிந்துவிழச் செய்துவிட்டு நீ திரும்பி வந்தால் நான் மகிழ்ச்சியடைவேன். R2 - உம் இதில் பங்கேற்கலாம். அவருடைய திறனை சற்று அதிகரிக்கச் செய். ஏதாவது ஒரு கட்டிடத்தின் மீது ஆறு மணி நேரம் நீ மனம் ஒருமுகப்படுத்தினால் அது இடிந்து விழாமலிருக்க முடியாது. ஒவ்வொரு படியிலும் உனக்கு ஒளி (வழிகாட்டும் குறிப்பு) கிடைக்கும். அதன் சுற்றுப்புறங்களில் வேலையை முடித்த பிறகு மதுராவுக்குள் நுழைவது என்ற உன் கருத்து சரியானது.

M1 - க்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "சற்று முன்புதான் அன்புள்ள ராம்சந்த்ராவின் மூலாதார சக்கரத்தை விழிப்படையச் செய்தேன். அது அற்புத சக்திகளுக்கான இடம். ஆன்மீகத்துக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. நான் அதை ஒரு அவசர நிலைக்காக விட்டு வைத்திருந்தேன். ஆனால் இந்தப் புள்ளி அவருடைய சிந்தனையில் பல நாட்களாக துடித்துக் கொண்டிருந்தது. அவரிடம் அது விழிப்பு அடையச் செய்யப்படவில்லை என்பது அவருக்குத் தெரியும். அதை

ஆன்மீகக் கண்ணோட்டத்தில் அவர் எடை போட்டுக் கொண்டிருந்தார். எந்த உயர்நிலை இலக்குடன் அது தொடர்பு உடையதாக இருக்கிறது என்பதை அறிய அவர் ஆவலுடன் இருந்தார். பொதுவாக அதை விழிப்படையச் செய்ய வேண்டிய அவசியமே கிடையாது. ஆயிரம் இதழ் தாமரை (ஸஹஸ்ரதள கமலம்) என்ற புள்ளி விழிப்படையச் செய்யப்பட்டு அதன் மெய்யான நிலை எய்தியிருக்கிறது. இந்தப் புள்ளி தலையில் இருக்கிறது. அது மூலாதார சக்கரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. சுஷூம்னா நாடி (நடுவில் உள்ள நரம்பு) மூலாதாரத்திலிருந்து முதுகெலும்பின் வழியாக தலையை நோக்கிச் செல்கிறது. அதை நான் நேராக்கியிருக்கிறேன். இப்போது அதில் (மேலேறும், கீழிறங்கும்) இரண்டு வழிகளும் தடையில்லாத படி ஆகியுள்ளன. இனி அவர் (ராம்சந்த்ரா) தன் விருப்பப்படி (ஹடயோக முறையின்படி நரம்புகளை சுத்திகரித்தல், சக்கரங்களைக் கடக்கச் செய்தல் இதுபோன்ற வழிகளில் அல்லது தூய்மையான ராஜயோக தியானவழியில் உடல்சார்ந்த, பிரம்மாண்டம் மற்றும் பரப் பிரம்மாண்ட மண்டலங்களின் வழியாக முன்னேறும் வழியில்) பயிற்சியளிக்கலாம். இதற்காக மக்கள் கடுமையான தவமுறைகளில், விரும்பிய பலன் எதையும் அடையாமலே எத்தனையோ ஆண்டுகளை செலவழித்திருக்கிறார்கள். அவர்களுள் அநேகமாக யாருக்குமே, தேர்ச்சி பெற்ற ஒரு குருவினால் கூட இந்த முடிச்சு தளர்த்தப்படவில்லை. ராம்சந்த்ராவும் கூட இதை செய்யக்கூடாது என்று நான் உத்திரவிடுகிறேன்.''

''அன்புள்ள M1, எல்லோரும் பல்வேறு புள்ளிகளிலிருந்து பிராணாஹூதி கொடுக்கிறார்கள். ஆனால் பிரியமுள்ள ராம்சந்த்ராவுக்கு உடம்பின் எந்த ஒரு பகுதியின் ஒரு குறிப்பிட்ட அசைவின் மூலமாகவும் விரும்பிய பலனை அடையப் பெறுவதற்குத் தேவையான நிபுணத்துவத்தை நான் கொடுத்திருக்கிறேன். அதாவது, சம்பிரதாயமான சக்கரங்களிலிருந்து மட்டுமன்றி, அவருடைய உடம்பின் எந்த ஒரு ரோமத்தின் வேரிலிருந்தும் கூட, அந்தக் குறிப்பிட்ட சக்கரங்களிலிருந்து பிராணாஹூதி அளிக்கையில் உண்டாகும்

அதே பலனைத் தரும்படியாக, அவர் பிராணாஹூதி அளிக்க முடியும். இதன் காரணம் என்னவெனில், தலை முதல் பாதம் வரையில் அவரே பிராணாஹூதியின் மூலஸ்தானமாக (உற்பத்தியாகும் இடமாக) மாறியிருக்கிறார் என்பதேயாகும். அது அவருடைய இதயம், அவரது ஒவ்வொரு தமனி மற்றும் சிரையிலும் (ரத்தக்குழாய்கள்) அதேபோல நரம்புகளிலும் பரவியிருக்கிறது. இது அவரிடத்தில் திகழ்கின்ற மிக விசேஷமான ஒன்றாகும். அவர் தன் ஒரு விரலை அசைத்தால், பிராணாஹூதி பெருகிவருவது தொடங்கும். அவரைப்புகழ்ந்து சொல்வதற்கு இன்னும் எவ்வளவோ இருக்கிறது. அவருடைய உயர்நிலைகளை வெளிப்படுத்தும் நோக்கத்தில் நான் சிறிதளவு சொல்கிறேன். வருங்காலத் தலைமுறைகள் அவரை லட்சியமாகக் கொண்டு, அவரைப் பற்றிப் பெருமிதம் அடையவேண்டும். ''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது :- "ஈட்டிகள் போன்ற கடினத்தன்மை அடைந்து விட்ட முட்களை சங்கராச்சாரியார் விதைத்திருக்கிறார். பூஜாரிகளின் ஜாதியைக் கெடுத்தவர் அவர் தான். கடினத் தன்மைக்கு அவர் தான் அடித்தளங்களை அமைத்தார். அவருடைய காலத்தில் தான் உருவ வழிபாடு செழித்து வளர்ந்தது. அதை அவர் புத்த மதத்திலிருந்து எடுத்துக் கொண்டார். ஹிந்துக்களிடையே பிராமணர்கள் என்ற ஒரு குறிப்பிட்ட ஜாதியை உயர்வு பெறச் செய்வதற்கு சாத்தியமான எல்லா முயற்சிகளையும் செய்தார். இதன் விளைவாக தாங்கள் மிகவும் புண்ணியம் பெற்றவர்கள் என்ற தவறான கருத்தை அவர்கள் வளர்த்துக் கொண்டார்கள். ஆனால் ஞானிகள் அவர்களை மூடர்களாகவே மதிக்கத் துவங்கினார்கள். ஆனால் பிராமணர்கள் மற்ற அனைவரையும் தாழ்வாக நினைக்கும் அளவுக்கு தங்கள் புண்ணித் தன்மை பற்றிய தவறான எண்ணத்தை மனதில் நிலைக்க வைத்துக் கொண்டார்கள். இந்த தற்பெருமையின் பழக்கம் அவர்களின் மனங்களை திடத்தன்மை அடையச் செய்துவிட்டது. இதனால் கடவுளை அடைவதற்கான வழியை தடையற்றதாக்கும் சாராம்சம் (அவர்கள் அறிந்திருந்தும்) பயன் தராமல் போயிற்று. இப்படி உன் (M1ன்) சொந்த ஜாதியிலேயே ஒருவரிடம் அதைப்போல பலமடங்கு பாவங்கள்

இருக்கும் போது நஜ்டாவின் கவுஸ் மீது, நீ என்ன புகார் கூற முடியும்? எந்த உழைப்பும் இல்லாமல் தங்கள் வயிறுகளையே வழிபடும் வாய்ப்பளிக்கின்ற அம்மாதிரி பதவிகளில் பிராமண பூஜாரிகளை அவர் நியமித்தார். இதனால் மற்றவர்களின் மனதில் அவர்களின் முக்கியத்துவத்தை குறையச் செய்தார். உன் பூஜாரி, ஒரு கிளியைப் போல (பொருளறியாமல்) வேதம் ஓதுவது சங்கராச்சாரியாரின் காலத்தில் தான் அல்லது அதையடுத்து சிறிது காலத்தில் தான் வளர்ச்சி அடைந்தது. பிராம்மணர்கள், பிரம்மனின் வாயிலிருந்து பிறந்தவர்கள் என்பதெல்லாம் அபத்தமானவை. இம்மாதிரி விஷயங்கள் வேதத்திலிருந்து வந்திருக்க முடியாது. வேதத்தில் இருந்த ஒரு உருவகம் இம்மாதிரி பொருள் தரும்படியாக திரிக்கப்பட்டது.''

''என்னிடம் உண்மையைக் கூறச் சொன்னால் இப்போது இருக்கும் ஹிந்து மதத்தை விட புத்தமதம் ஆயிரம் மடங்கு மேலானது என்பேன். ஹிந்து மதத்தில் புதுமையை அறிமுகப்படுத்தியதன் விளைவாக சங்கராச்சாரியார் எல்லாவற்றையும் கெடுத்துவிட்டார். அந்த மத அமைப்பு முழுவதும் தலைகீழாக மாற்றப்பட வேண்டியதாக இருக்கிறது.''

''மதுராவுக்குப் போவது தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. வேலைக்கான களத்தைத் தயாரிக்க முடியவில்லை என்பதே காரணம். ஜமா மசூதி சம்பந்தமாக வேலை வழக்கம் போல M1 - இடம் ஒப்படைக்கப்படும். எனினும் ஷாஜஹான்பூரில் அதிக காலம் தங்க வேண்டாம். R2 - உம், பிரியமுள்ள ராம்சந்த்ராவும், எந்த நேரத்திலும் போவதற்குத் தயாராக இருக்கவேண்டும். இந்த வேலைக்கு மிகப்பெரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. புனிதமான கடமைகள் அனைத்திலும் இது மிக இன்றியமையாதது. தற்சமயத்துக்கு அங்கிருக்கும் பூஜாரிகளை அழிப்பது சம்மந்தமாக வேலையை ஆரம்பிக்கவும். இந்த வேலையை R2 – விடம் ஒப்படைக்கவும். ஏனென்றால் பல்வேறு முக்கியமான வேலைகள் ராம்சந்த்ராவிடம் கொடுக்கப்பட்டுள்ளன. நம்மிடம் திறமையும் தகுதியும் மிக்க மனிதர்களுக்குப் பஞ்சம் இருக்கிறது. அதிக முக்கியத்துவம்

இல்லாத ஏதாவது நிரந்தரமான வேலையை, K2 – இடம் கொடுக்கலாம். தனக்குக் கீழே வேலை செய்யும் குதுப்களுக்கு கடமைகளைப் பிரித்துக் கொடுப்பது என்ற இந்த வேலை உண்மையில் R2 – உடையது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மதுராவில் உள்ள நிலைமையை ஆய்வு செய்வதற்காகப் போயிருக்கிறார்.

<u>3-11-1944</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “மிக உயர்நிலை எய்திய பெரும் முனிவர்களின் அறிவைக் குழப்படையச் செய்யப்போகிறது என்பதை அறிந்தே இப்போது நான் ஒரு காரியம் செய்திருக்கிறேன். அம்முனிவர்கள் இது சாத்தியமில்லை என்றே கருதுவார்கள். தனது சீடரிடத்தில் இதுவரை ஒருவரும் எப்போதும் கையாண்டிராத ஒரு செயல்நுட்பம் அது. இதைச் செய்வதற்கான திறமையும் யாருக்கும் இருக்கவில்லை. சாத்தியமில்லாத ஒன்றினை சாத்தியமாகும் என்ற நிலைகளுக்கு நான் கொண்டு வந்திருக்கிறேன். எல்லோரும் பரம்பொருளை நாடிச் செல்வார்கள். அந்தப் பரம்பொருளே முழுவீச்சுடன் அவரை (ராம்சந்த்ராவை) நாடி வருமாறு நான் செய்திருக்கிறேன்.

M1 – உம் கூட இதனால் நன்மையடைந்திருக்கிறார். இந்த விஷயம் விவரித்துச் சொல்லவும் மற்றும் அதைக் கவனித்துக் கேட்கவும் மிகவும் சிரமமாக இருப்பதாகும். இந்த தனித்துவமான முறையை நான் மட்டுமே பெற்றிருக்கிறேன். என் இதயத்தின் உள் நிலையை நான் உணர்கிறேன். என் இந்த விடுதலை பெற்ற நிலையில் கூட, பிரியமுள்ள ராம்சந்த்ராவின் அன்பின் காரணமாக அதிக அமைதியற்ற நிலை உண்டாகியிருக்கிறது. ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துவதில், என்னைப்போலவும் அவரது அன்பைப் போலவும் வேறு உதாரணம் எதுவும் கிடைக்காது.’’

‘‘மதுராவில் வேலைக்கான களம் தயாரிக்கப் பட்டுள்ளது. அதற்காக நாளை அங்கே புறப்பட வேண்டும்.’’

இரவு 8 மணிக்கு வந்த உத்திரவு :- “மதுராவில் வேலைக்கான களம் முற்றிலும் தயாராக இருக்கிறது. இனி தாமதம் செய்யத் தேவையில்லை. நாளை நீ மதுராவுக்குப் புறப்படுவதற்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே உத்திரவிட்டிருக்கிறார்.

பிரியமான ராம்சந்த்ராவுக்கு தனது விசேஷமான சக்திகளை அளித்திருக்கிறார்.

4-11-1944

மதுராவுக்கு பயணம் ; மாலையில் அங்கு சிறிது வேலை செய்யப்பட்டது.

5-11-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "பிருந்தாவனத்தில் உள்ள ஒவ்வொரு இடத்தையும் ஒளி பெறச்செய்ய வேண்டும். ராதாகுண்டம் பிருந்தாவனத்தில் ஒரு விசேஷமான இடம். நீ அங்கே சென்று அதைப் புனிதமானதாக ஆக்கு. இந்த வேலையில் R2 - இடமிருந்தும் உதவி பெற்றுக்கொள்.''

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- "நேற்று மாலை நான் பிறந்த ஊரில் நீ அடியெடுத்து வைத்தாய். உன் குருநாதர் மட்டுமன்றி நானும் கூட உனக்கு எதையும் தராமல் விடவில்லை. எனவே வெற்றி நிச்சயம் என்று உறுதிகொள். இன்று உனக்கு ஓய்வு நாள். இரவு முழுவதும் கண் விழித்திருந்ததால் உன் மனம் குழம்பியிருக்கிறது. நீ அங்கு எந்த புனிதமான இடத்தைத் தேடிக் கண்டுபிடித்தாலும், அங்கு எந்த ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டாலும், அங்கே உன் குரு என்ன உத்திரவிடுகிறாரோ அதை அப்படியே செய்யவும். குப்ஜா கிணறு பற்றிய ஆராய்ச்சி சரியாகச் செய்யப்பட்டுள்ளது. கம்சனின் காலத்தில் சிறைக்கூடமாக இருந்த இடத்தின் வாசல், உனக்கு சுட்டிக்காட்டப்பட்ட அதே இடத்தில் தான் இருந்தது.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "உன்னுடைய ஆன்மீக நிலை பற்றி மதிப்பீடே செய்ய இயலாது. நான் சொன்னாலன்றி யாருக்கும் பிராணாஹூதி அளிக்க வேண்டாம். பொறுமையாகவும், சகிப்புத்தன்மையுடனும் இருந்து கொண்டிரு. இந்த வேலையைச் செய்து முடிக்கும் வரையில் நீ இந்த இடத்தை விட்டுப் போக முடியாது.''

''குப்ஜா கிணற்றின் அருகே நிகழ்ந்த ஆன்மீக உள்நிலை பற்றி உயர்மதிப்புடைய மாஸ்டர் தொடர்ந்து கூறியது :- நீங்கள்

இருவரும் (R2 மற்றும் ராம்சந்த்ரா) குப்ஜா கிணற்றின் அருகே மண்டியிட்டு அமர்ந்திருந்த போது அந்த இடத்தின் புனிதத்தன்மையின் விளைவாக, அனுபவத்திற்கு வந்த ஆன்மீக உள் நிலையே, அந்த இடம் சரியாகக் கண்டறியப்பட்டது என்ற உறுதிப்பாட்டை அளித்தது. அது ஒரு உணர்ச்சிகரமான உள் நிலையாக இருந்தது; மற்றும் அங்கு அனைத்து எண்ணங்களும் ஒரே திசையை நாடியிருந்தன. இதயம் அன்பினால் நிரம்பித் ததும்பிக் கொண்டிருந்தது. அந்த இடம் தியானப்பயிற்சிக்குச் சிறந்த இடம். அந்த மாதிரி பற்பல இடங்கள் உள்ளன. அதைப் பற்றி இதுவரையில் மக்களுக்கு எதுவும் தெரியாது. அங்கே ஒவ்வொரு அடியிலும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடைய அருள் பாய்ந்து கொண்டிருக்கிறது. அந்த இடத்தின் பூமி அந்த அருளை வெளியிடத்துவங்கியுள்ளது.''

R2 – க்காகச் சொல்லப்பட்டது :- "சற்று முன்பு தான் உன் சகோதரர் (ராம்சந்த்ரா) எனக்கு அளவற்ற மகிழ்ச்சியளித்த ஒரு சிறந்த கண்டுபிடிப்பைச் செய்தார். அந்த மகிழ்ச்சியில் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் கிட்டத்தட்ட ஓடிவந்தேன். அந்தக் கண்டுபிடிப்பு இதுதான். ஏதாவது உணவுப் பண்டத்தில் யாருக்காவது விசேஷ (தீவிர) விருப்பம் இருந்தால், அதன் விளைவை - அதாவது அவர் விரும்பிய அந்தச் சுவையின் சாராம்சத்தை அவரது நாக்கைத் தொடுவதன் மூலம் உருவாக்க முடியும். அது சம்மந்தப்பட்ட அம்மனிதரால் உள்ளிழுத்துக் கொள்ளப்படும். இப்படிப் பலமுறை செய்தால் அம்மனிதருக்கு அந்த உணவுப் பண்டத்தின் மீது உள்ள விருப்பம் நீங்கிவிடும்.''

''அவர் (ராம்சந்த்ரா) இந்த காலகட்டத்தில், பலரை (ஆன்மீகத்தில் உயர்நிலை பெறும்படி) உருவாக்கி யிருக்கிறார். ஆனால் அவரின் கீழ் பணியாற்றி, அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்வதற்கும், பிரியமான ராம்சந்த்ராவை அந்த சில வேலைகளிலிருந்து விடுவிக்க எனக்கு உதவியாகவும் இன்னமும் யாரும் வரவில்லை. ஏதோ ஒருவிதத்தில் ராம்சந்த்ரா அவர்களுக்குத் தேவையாக இருக்கிறார். நாங்கள் எதிரே இல்லாத போதும் என் மூலமாகவோ, ராம்சந்த்ரா விடமிருந்தோ நேரடியாக

கட்டளைகளைப் பெற்று வேலையைத் துவங்கும் திறமையை அந்த உதவியாளர்கள் இன்னும் வளர்த்துக் கொள்ளவில்லை. அவருக்காக மட்டுமே வரும் அம்மாதிரி பணிகளைச் செய்வதற்காக வேறு வேலைகளிலிருந்து விலக்களித்து அவரைத் தயாராக வைத்திருக்க நான் விரும்பினேன். சகஜ மார்க்கம் என்ற இந்தப் பயிற்சி முறையின் முடிச்சுக்களை விடுவித்து விளக்குவதற்கும், அதை எளிமையாக்குவதற்கும் அவருக்குப் போதுமான நேரம் தர விரும்பினேன். எப்படியோ, எது சாத்தியமாகி இருக்கிறதோ, அதில் திருப்தியுடனும், நன்றியுடனும் இருக்கவேண்டியது தான்.'' (பின் இணைப்பில் உள்ள வரைபடம் எண்.1 - ல் காண்க).

## 6-11-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “D.D - கோயிலின் பின்புறத்தில் ஒரு இடம் இருக்கிறது. அதை அழிக்கும் வேலையை இப்போதே துவங்கு. பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அதைப் போக்கிரிகளின் குகை என்று குறிப்பிட்டிருக்கிறார். நீ இப்போது இருக்கும் இடத்திலும் கவனம் செலுத்து.''

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறியது :- நீ அந்த இடத்தை சரியாகக் கண்டறிந்திருக்கிறாய். நீ இப்போது உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு சற்று முன்புறத்தில் மேற்கு நோக்கி சுமார் பதினெட்டு அங்குல தூரத்தில் எனது தொப்புள்கொடி புதைக்கப்பட்டது. உனது வணக்கத்திற்குரிய மாஸ்டர் மிகச்சரியான வழிகாட்டுதலை உனக்குத் தந்திருக்கிறார். நீயும் சரியான இடத்தில் உட்கார்ந்திருக்கிறாய்.''

(பின் இணைப்பில் உள்ள வரைபடம் 2- ல் காண்க).

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “இந்த இடத்தைப் பற்றி நீ சரியான ஆய்வு செய்திருக்கிறாய். உன் கைத்தடியினால் சுட்டிக்காட்டிய இடம் உயர் மாண்புடைய பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தொப்புள்கொடி புதைக்கப்பட்ட இடத்துக்கு மிக அருகில் உள்ளது. அதற்கு மிக அருகே ஒரு புதையல் இன்னமும் மறைந்து கிடக்கிறது. இது பற்றிப் பேசுவதற்கு ஏதாவது

சந்தர்ப்பம் கிடைத்தால் அப்போது அந்தப் புதையல் மிகச்சரியாக எந்த இடத்தில் இருக்கிறது, என்பதை நான் உனக்குச் சொல்வேன். மதுராவில் இப்படிப் பல இடங்களில் புதையல்கள் மறைந்திருக்கின்றன, யாருக்கும் அதைப் பற்றித் தெரியாது.''

R2 – க்கு மாஸ்டர் கூறியது :- "பிரியமான ராம்சந்த்ராவுக்கு எவ்வளவோ பாராட்டுகளைப் பொழிய வேண்டும்! மிகப்பெரியவர்களை விடப் பெரியோர்களுக்கே சிரமமாக இருக்கக்கூடிய வேலையை அவர் சில நிமிடங்களில் செய்து முடிக்கிறார். அந்த மண்மேட்டினைத் தூய்மையாக்கும்படி (சுத்திகரிக்கும்படி) சற்று முன்பு தான் அவருக்குச் சொன்னேன். இப்போது யாராவது கூர்ந்து கவனித்துப் பார்த்தால் அது ஒளியூட்டப்பட்டிருப்பதை அவர் காணலாம். அரக்கத்தனமான இயல்புடைய சிறிது விளைவு இன்னமும் இருக்கிறது. அதையும் நீக்கு. வேலையைச் செய்து முடிப்பதற்கு சில நிமிடங்கள் ஆகும். (சற்று இடைவெளி) இப்போது அந்தச் சூழ்நிலை தெய்வீக சக்தியின் துடிப்புகளை வெளியிடத் துவங்கியுள்ளது. இந்த வேலை நிறைவு பெற்றுவிட்டது.

## <u>7-11-1944</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "L.B - என்ற கோயில் சம்மந்தமாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஏற்கனவே வேலையை ஒதுக்கியிருக்கிறார். அங்கு புகழ்பெற்ற ஒவ்வொரு கோயிலுக்கும் நீ போகவேண்டும். தவறாமல் யமுனை ஆற்றின் கரைக்குச் செல்லவும். அந்தக் கோயில்களின் நிலைமையை முதலில் படித்தறிந்துகொள். (மனதால் கணித்து அறிந்து கொள்) அதன்பிறகு அதற்கான உத்தரவுகளைச் சொல்கிறேன். இப்போது உனக்கு கனமான வேலை அட்டவணை இருக்கிறது.''

R.J - கோயில் சம்மந்தமான ஆய்வில் கவனித்து அறிந்த விஷயங்கள்; பூஜாரிகள் குடும்பத்தோடு வசிக்கும் கிழக்குப் பகுதி இருளாக இருந்தது. கோயில் கட்டிடம் அடைந்துள்ள நடுப்பகுதி ஏதோ கைவிடப்பட்ட இடம் போலக் காணப்படுகிறது. பிரதான கோயிலின் வடக்குப் பகுதியில் ஒரு சிறிய கோயில் இருக்கிறது.

அதன் பின்னர் பக்தியுடன் சுற்றி வந்து வணங்குவதற்கு (பரிக்ரமம் – வலப்புறமாக சுற்றி வந்து வணங்குவதற்கு) ஒரு இடம் இருக்கிறது. அது மிகவும் இருட்டாக இருக்கிறது. கோயிலின் மேற்குப் பகுதியில் யானையும், முதலையும் சிலையாக இருக்கும் குளம், மிகவும் கவர்ச்சியாக இருக்கிறது. அங்கிருக்கும் சிலைகள் எந்த வசீகரத்தன்மையும் இல்லாமல் இருக்கின்றன.

(பின் இணைப்பில் வரைபடம் 3 – ல் காண்க.)

பிருந்தாவனத்தில் உள்ள L.B - கோயில் பற்றி கவனித்து அறிந்தவை : கோயில் முழுவதுமே தீமையை முன்னறிவிப்பதாக, பயமூட்டும் தன்மை மிகுந்திருந்தது. உடல் சம்பந்மான காம எண்ணங்களே எங்கும் பரவியிருந்தன.

G.K - கோயில் பற்றி கவனித்து அறிந்தவை : அது கவர்ச்சியுடன் இருந்தது.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “பிருந்தாவன பயணம் முடிந்துவிட்டது. நாளை பிருந்தாவனத்தை விட்டுப் புறப்படு, க்வாலியரின் (ஒரு நகரம்) பக்கத்தில் இரண்டு அல்லது மூன்று கோயில்களை கவனித்துத் தெரிந்துகொள். சில இடங்களில் உன் பாதங்கள் படுவது நல்லது. அந்த இடங்களில் ஒளியூட்ட வேண்டிய தேவை இருக்கும். அதில் மிகச் சிறந்தது, நீ உட்கார்ந்திருக்கும் இந்த சுருள் வடிவத் தூண்களை உடைய கோயில்தான். காலிதஹா என்ற இடத்தின் அருகே G.J -கோயில் இருக்கிறது. அங்கே உயிருக்கே ஆபத்தான நிலைமை இருந்தது. கொலை செய்யப்பட்ட யாத்ரிகர்களின் எலும்புகள் இன்னும் அங்கே இருக்கின்றன.

கேள்வி : நான் (ராம்சந்த்ரா) கவனித்து அறிந்த இடங்கள் ஒளியூட்டப்பட வேண்டுமா?

பதில் : இங்கிருக்கும் ஒவ்வொரு மூலை முடுக்கும் சுத்திகரிக்கப்பட வேண்டும்.

## 8-11-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்திரவுகள் :- "முக்கியமான கோயில்கள் அனைத்திற்கும் பொறுப்பாளராக உன்னைக் கருது. அவற்றை அருளினால் நிரப்புவதைத் தொடர்ந்து செய். அங்குள்ள ஊழலை நீக்குவதற்கு முயற்சி செய். அதில் வெற்றி கிடைக்கவில்லை என்றால் அந்த ஊழலுக்குப் பொறுப்பானவர்களை அழிக்கத் துவங்கு. பிருந்தாவனத்தில் எவ்வளவு அதிக இடங்களுக்கு நேரடியான உன்னால் போக முடிகிறதோ அந்த அளவுக்கு நல்லது. அந்த இடங்களின் நிலமும் கூட அதன் விளைவை ஈர்த்துக்கொள்ளும், கொலை செய்யப்பட்ட யாத்திரிகர்களின் எலும்புகள் கிடக்கும். அந்தப் பகுதி அழிக்கப்பட வேண்டும். இன்னமும் அங்கே வசிக்கின்ற தீமையான மனிதர்கள், அக்கோயிலுடன் சேர்ந்து ஒளியிழக்கும்படி (நாசம்) செய்யப்பட வேண்டும். G.J - கோயிலில் இருந்து மேற்கு நோக்கி பழைய யமுனை நதிக்கரையோடு செல்லும் அந்தப் பகுதி முழுவதும் சிதிலமாகியிருக்கிறது. அதை முற்றிலும் அழிப்பதே தகுந்தது. யமுனை ஆற்றின் கரையில் நீ உட்கார்ந்திருந்த போது, அங்கே மனிதர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை உன்னிடம் சொன்னேன்.''

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- "உன் வேலையில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருக்கிறேன். உன்னால் போக முடியாமல் இருந்த, இன்னும் சில இடங்கள் உள்ளன. அந்த இடம் முழுவதையும் ஆன்மீக அருளால் நிரப்ப வேண்டிய தேவை இருக்கிறது. அதை அப்பகுதிகளில் நடந்து சென்றபடியே நீ செய்யலாம்; அல்லது ஒரு இடத்தில் உட்கார்ந்தும்கூட செய்யலாம்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பாராட்டு :- "என் பிரியமான ராம்சந்த்ராவின் துணிவு வாழ்க! இப்போது மதுரா முழுவதும் ஒரு மகானுடைய தன்மையில் (ஆன்மீக உயர்நிலையில்) விளங்குகிறது. ஆனால் அந்தோ! அதைக் கண்டறிந்து பாராட்டுகின்ற மனிதர்கள் மிகச்சிலரே இருப்பார்கள்.''

மதுராவின் இயற்கையின் தெய்வீக ஒழுங்கைப் பராமரிக்கும் பொறுப்பில் உள்ள (கண்ணுக்குப் புலப்படாத) முனிவரின் பாராட்டு: “இப்போது மதுரா முழுவதையும் அருளினால் நீங்கள் நிரப்பியிருக்கிறீர்கள். (ஆரிய சமாஜத்தின் ஸ்தாபகர் ஆகிய) சுவாமி தயானந்தாவின் நூற்றாண்டு விழா சமயத்தில் முன்பொரு முறை இதே மாதிரி நடந்தது. அந்த உள்நிலை எந்த ஒருவருடைய சிந்தனா சக்திக்கும் கற்பனைக்கும் அப்பாற்பட்ட ஒன்று.’’

R2 - வுக்காக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “சற்று முன்பு பிரியமுள்ள ராம்சந்த்ரா பகவான் கிருஷ்ணருடைய ஸ்தூல மற்றும் சூட்சும ரூபங்களை உன் காட்சிக்குக் கொண்டு வந்தார். இதன் காரணம் தெளிவானது. முந்தைய குறிப்புக்களைப் பார். மக்களின் அறியும் திறனுக்கும், கற்பனைக்கும் கூட சிறிதும் எட்டாத அம்மாதிரி சக்திகளினால் அவர் (ராம்சந்த்ரா) நிரப்பப்பட்டிருக்கிறார். அவையனைத்தையும் அவர் தன்னுள் ஈர்த்துக் கொண்டு ஜீரணித்திருக்கிறார். (அவற்றின் தன்மையை தனதாக்கிக் கொண்டிருக்கிறார்.) இதன் காரணமாக ஏற்படும் பெருமகிழ்ச்சியையும் உற்சாகத்தையும், தன் கட்டுப்பாட்டில் எவ்வளவுக்கு (எந்த அளவுக்கு) முடியுமோ, அந்த அளவு அவர் வெளிக்காட்டாமல் மறைத்துக் கொண்டிருக்கிறார். அப்படி ஏதாவது சிறிதளவு இருந்தால் அது என்னுடையதாகவே இருக்கிறது. அவருடைய வாழ்க்கைக் கதையில் மிக விசேஷமான ஒரு விஷயம் என்னவெனில், அவருக்கு அளிக்கப்படும் சக்திகள் எதுவாக இருந்தாலும், அவையனைத்தையும் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொள்கிறார். இதுவரையில் வேறு யாரும் ஒருபோதும் செய்திராத விஷயம் இது. அது அவரிடத்தில் உடனமைந்த (உடன்பிறந்த) சுபாவம். அதாவது எதையும் தனக்குள் ஈர்த்துக் கொள்கிற மூலமான தன்மை அவரிடம் ஒரு உயர்ந்த நிலையில் விளங்குகிறது. அந்த மூல அம்சத்தை அவருக்குள் அதிகபட்ச அளவுக்கு நான் எடுத்துச் சென்றிருக்கிறேன். அவர் நீண்ட ஆயுளுடன் வாழ்வாராக!”

வழக்கமாக அவர் கூறுவது தொடர்கிறது :- “கடம்பமரம் நிச்சயமாக அங்கே இருந்தது. இதுதான் பழைய காலிதாஹா

இருந்த இடம். (யமுனை ஆற்றில் இருந்த ஆழமான குகை போன்ற மடுவில் வசித்த காளிங்கன் என்ற மிகப்பெரிய பாம்பு சிறுவனாகிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணரால் வதம் செய்யப்பட்ட இடம்). பிருந்தாவனத்தில் யமுனை ஆற்றங்கரையில் நீ இப்போது உட்கார்ந்திருக்கும் இடத்தில் மார்வாடி வியாபாரி ஒருவனை, உள்ளூர் பூஜாரிகள் கொன்றார்கள். அந்த வியாபாரி தன்னந்தனியே பிரயாணம் செய்த ஒரு சாதாரண மனிதன். கோயில் பூஜாரிகளினால் உருவாக்கப்பட்ட ஒரு சதியினால் அவன் கொல்லப்பட்டான். அவர்களின் அழிவு நிகழவேண்டும்.''

அப்போது மதுராவின் அப்தல் (மதுராவின் ஒரு பகுதியைப் பராமரிக்கும் பொறுப்பில் இருக்கும் கண்களுக்குப் புலனாகாத முனிவர்) குறுக்கிட்டுச் சொல்கிறார்: "எனக்கு வேறு கடமை அளிக்கப்பட்டுள்ளது. எனவே உங்கள் சம்பந்தப்பட்ட வேலையை நிறுத்திக் கொள்கிறேன்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்தரவு :- "நீ எங்கிருந்தாலும் சரி. மூன்று மாதங்களுக்கு உன்னைப் பாதுகாக்கும்படி அப்தலுக்கு கட்டளையிடு, இதற்கு மாறாக ஏதாவது செய்தால் அவரிடமிருந்து அனைத்தையும் நான் பறித்துக் கொள்வேன் என்று சொல். எல்லாத் தடைகளையும் நீக்கி ஷாஜஹான்பூர் வரையில் வழியை எளிதாக்கும்படி சொல். எனினும் இந்த ஏற்பாடு தற்காலிகமாகத் தான் இருக்கும். நான் உன்னுடன் தொடர்பில் இருக்கும் இந்தச் சமயத்திலேயே அவருக்குக் கட்டளை இடு.''

அப்தல் : "சற்று காத்திருங்கள்''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- "நான் சற்று அவரை சோதித்துப் பார்க்கிறேன்.''

அப்தல் : "நான் ஒரு பெருந்தவறு செய்துவிட்டேன். என் குருவிடம் இதுபற்றி ஆலோசனை கேட்டேன். உங்கள் மன்னிப்பைக் கோருகிறேன்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- ஒருமுறை இட்ட கட்டளையை மாற்றமுடியாது. (அப்தல் இவ்வாறு தண்டிக்கப்பட்டார்).

ஏனென்றால் என்னையும் (ராம்சந்த்ராவையும்) R2 - வையும் காலராவிலிருந்து இரண்டு நாட்கள் பாதுகாக்கும்படி அவருக்குக் கட்டளை இடப்பட்டிருந்தும், குறித்த காலத்திற்கு முன்பே அந்த வேலையை அவர் நிறுத்திவிட்டார்.)

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறுவது தொடர்கிறது :- “அப்தலை தண்டனை நீக்கி சரிசெய்து விட்டேன். அவர் இன்னும் கொஞ்சம் தவறு செய்திருந்தால் அவருடைய ஆன்மீக நிலையைப் பறித்துக்கொள்ளுமாறு உனக்கு நான் சொல்லியிருப்பேன். மதுராவில் செய்ய வேண்டிய வேலை கிட்டத்தட்ட நிறைவடையும் நிலைக்கு வந்திருக்கிறது. இன்னும் சிறிதளவு தான் பாக்கி இருக்கிறது.’’

‘‘பிருந்தாவனத்தில் அழிவு வேலைக்கான திட்டத்தை உன் சிந்தனையில் நான் வெளிப்படுத்துவேன். அங்கு அபாயமான பல இடங்களுக்கு நீ போக நான் அனுமதிக்கவில்லை. பர்சானாவுக்கு (ராதாவின் கிராமம்) போக வேண்டிய தேவை இல்லை. ஆயினும் எல்லா இடங்களுமே ஒளியூட்டப்பட வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள மற்ற இடங்களுக்கு மட்டும் செல். உன் சிந்தனையில் இருக்கின்ற, S.J - கோயில் சம்மந்தப்பட்ட அந்தக் குறிப்பிட்ட இடம் அழிக்கப்பட வேண்டும். நேரம் கிடைத்தால் நீ அங்கு போகலாம். நந்த கிராமத்திற்கு அவசியம் போக வேண்டும். வேறு யாரும் ஆய்வு நடத்த முடியாத சில இடங்கள் உனக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. மிகப்பெரிய ரகசியம் ஒன்றை உனக்குச் சொல்கிறேன். வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வுலகிலிருந்து மறைந்தபோது அவருடைய கட்டளைகளை நிறைவேற்றக்கூடிய தகுதியுடையவர் யாரும் இருக்கவில்லை. இப்போது தெய்வீக சக்தி ஒரு திருப்பத்தை அடைந்திருக்கும்போது அது சம்பந்தமாக (அதாவது ஸ்ரீ கிருஷ்ணரின் கட்டளைகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக) ஒரு துவக்கம் ஏற்படுத்துவது அவசியமாக இருக்கிறது. அவருடைய பிரதிநிதியாக உன்னை நீ கருதுவதால், இப்போதைய சூழ்நிலைகளில் அவரது முறையான வாரிசாக நீ இருக்கும் ஒரு நிலையை அது அளிக்கிறது. இன்னொரு விதத்தில் உன்னை அவ்விதமாகவே கருதி

நடக்கிறாய் என்பதால், இவ்விஷயத்தில் அவரிடமிருந்தே நீ ஒளியை (துணையை, வழிகாட்டும் குறிப்புகளை, அருளைப்) பெற முடியும். நானும் அதில் சேர்க்கப்பட்டிருப்பதால், அதில் உனக்கு நிறைய சௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன. இல்லாவிட்டால் அது உன்னை எதிர்பார்த்திருக்கும் மிகவும் கடினமான பணியாக இருந்திருக்கும். இதன் ஒவ்வொரு படியிலும் (நிலையிலும்) உனக்கு ஒளி கிடைக்கும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் ஆன்மீக பரம்பரை உன்னிடமிருந்து ஆரம்பமாகும்.''

உன் வேலையில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். உன்மீது பாசம் நிறைந்த பாராட்டுகளைப் பொழிகிறேன். மதுராவின் பொறுப்பாளராக உன்னைக் கருது. இந்த வேலையில் உன்னுடன் உதவியாக இருப்பதற்கு யார் வந்தாலும், தான் செய்த உதவியின் அளவுக்கு அவர் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்குப் பிரியமானவராக இருப்பார். யமுனை ஆற்றின் நீரோட்டத்தை திசை திருப்பும் விஷயம் சம்பந்தமாக இப்போது அதற்கு ஆதரவான எண்ணம் எதுவும் எனக்கு இல்லை. ஏனென்றால் அந்த இடம் அழிவின் சுற்று வட்டத்திற்குள் வந்திருக்கிறது. அதில் சம்மந்தப்பட்டுள்ளவர்கள் (அதாவது தங்கும் விடுதிகளை நடத்தும் பூஜாரிகள்) தங்கள் வீடுகளில் ஒளியிழக்க (பரம்பரைத் தொடர்ச்சியை இழக்க) வேண்டியவர்கள் ஆவர். இந்த இடங்களுக்கு ஒளியூட்ட வேண்டிய அவசியமில்லை. இந்த இடங்களைத் தவிர்த்துவிடு. மதுராவில் யமுனையின் நீரோட்டத்தை திசைமாற்றுவது சம்மந்தமாக ஏற்கனவே இப்போதைய நிலையை உண்டாக்குவதற்கு முன்பாகவே தேவையானதைச் செய்துவிட்டாய்.''

## <u>9-11-1944</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "உன் பங்குக்கு ஏதாவது வேலை வரலாம் என்பதால், அப்போது அந்த இடத்திற்குப் போகாமலே வேலை செய்யும் போது, அந்தக் குறிப்பிட்ட இடம் உன் மனக்கண்களில் வரும் என்பதால், நீ இங்கு எல்லா இடங்களிலும் சுற்றித்திரிவதை நான் விரும்புகிறேன். நீ இப்போது கோவர்த்தன மலைக்குப் போய்க் கொண்டிருக்கிறாய்.

வருணன் மற்றும் இந்திரனின் சீற்றத்திலிருந்து நந்த கிராமத்தின் மக்களையும், மற்ற பிராணிகளையும் பாதுகாப்பதற்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் குடையாகத் தூக்கியதாகப் போற்றப்படுகிற சிறு குன்று கோவர்த்தன மலை என்று சொல்லப்படுகிறது. அங்குள்ள இடங்களைக் கவனித்து அறிந்தபின் தேவைக்கு ஏற்றபடி அங்கு ஒளியூட்டவும். அந்தக் குன்று மண்ணில் புதைந்துபோவது இதனால் தானாகவே தடுக்கப்படும்.

நிறைய நேரத்தை வீணாக்கி நீ ஒரு தவறு செய்து விட்டாய். கோவர்த்தன மலையின் அருகே நடந்து செல்வது தேவைப்படுகிறது. ராதா குண்டத்துக்குச் செல்ல அதிக நேரம் ஆகும். நேரம் இருந்தால் அங்கு போவதில் தவறில்லை. அதை நான் உன் முடிவிற்கு விட்டு விடுகிறேன். இந்த இடம் நிச்சயமாக நன்றாக இருக்கிறது. நீ எங்கெல்லாம் நடந்து செல்கிறாயோ, அங்கெல்லாம் ஆன்மீகப் பயன் நிறைந்ததாகச் செய்துகொண்டே செல். இதில் சிறந்த வழி அந்தக் குன்றின் மீது ஏறி ஒரு இடத்தில் உட்கார்ந்து அதை முழுப்பயன் உடையதாகச் செய்வதேயாகும். ராதாகுண்டத்தை முழுப்பயன் உடையதாகச் செய்யும் படி R2 - க்கு உத்திரவு கொடு. இதுவரையில் நீ பார்த்த இடங்கள் அனைத்தும் செயற்கையானவை. அவற்றில் சத்தியம் இல்லை. ஹர்தியோ கோயில் இன்னமும் நல்ல நிலையிலேயே இருக்கிறது. இங்கே நீ பார்த்துள்ள கோயில்கள் மகத்துவத்தை முற்றிலும் இழந்துவிடவில்லை. உண்மையான மகத்தவம் உடைய ஒரு இடத்தை நீ காண விரும்பினால், நீ இருக்கும் இடத்திலிருந்து மூன்று மைல்தூரம் போ. அங்கே இயற்கையின் காட்சியைக் காண்பாய். அது ஒரு புனிதமான இடம், ஆனால் அங்கே சுற்றிலும் காடுதான் இருக்கிறது.''

(பின் இணைப்பில் வரைபடம் 4 – ல் காண்க.)

''இப்போது என் பிரியமான ராம்சந்த்ரா, அதற்கு ஈடான உதாரணமே இருக்கமுடியாத அம்மாதிரி வேலை செய்திருக்கிறார். இந்த வேலையின் பயன் ஒருபோதும் தீர்ந்து காலியாக முடியாது. அதைப் பார்க்க ஞானக் கண்கள் வேண்டும். R2 – பற்றியும் நான்

மகிழ்ச்சியடைந்திருக்கிறேன். இப்போது அந்த மலையின் மீது காலணியுடன் நடப்பது அவமரியாதை ஆகும். இப்போது அதை யாராவது கூர்ந்து கவனித்தால், துர் என்ற மலையின் மீது மோசஸ் காண நேர்ந்ததைப் போல தெய்வீக மின்னொளியின் காட்சியைக் காண்பார். அந்த விசேஷ நிகழ்வைக் கவனித்தறிய விரும்புகிறவர் யாராயினும் இந்தக் கோவர்த்தன மலையின் மீது சற்று நடந்து பார்க்கலாம். உண்மையைச் சொல்வதானால் இந்தக் குன்று இப்போது மின்சக்தியால் நிரப்பப்பட்டுள்ளது. அது பரமாத்மாவுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளப்போகிறது. எனவே நான் சந்தோஷத்தினால் விம்மிப் பெருத்திருக்கிறேன். இது அனைவருக்கும் கிடைத்துவிடாத ஒரு இறைத் தூதராகிய தன்மையாகும்.’’

(R2 - இன் குறிப்பு : கோவர்த்தன மலைக்கு பிராணாஹூதி அளித்து அதை ஆன்மீகப் பயனால் சக்தியூட்டிய பிறகு சகோதரர் ராம்சந்த்ரா, அது பற்றி நான் கவனித்து அறிந்தது என்னவென்று என்னிடம் கேட்டார். எங்கிருந்து வருகிறது என்று வெளியே சொல்ல இயலாத மூலப்பொருளின் வலுவான தெய்வீக ஒளி ஒன்று மதிப்பிற்குரிய சகோதரர் ராம்சந்த்ராவுக்கு வந்து பின்னர் அது அவரிடமிருந்து வெளிப்பட்டு அந்த மலையின் உள்ளும் புறமும் ஓங்கிப் பரவுவதை நான் உணர்ந்தேன் என்று அவரிடம் சொன்னேன். அந்த மண்ணிலிருந்து கிளம்பிய எத்தனையோ ஆன்மாக்கள் அந்த ஒளிக்கடலில் தங்களை மறந்து மூழ்கியநிலையில் பூரண அமைதி வெள்ளமாகப் பாய்கின்ற நிலையில் அங்கு திளைத்திருந்தன. கோவர்த்தனமலையில் எந்த ஒரு பகுதி அல்லது எந்த ஒரு பாறை மீது கவனம் செலுத்தினாலும் அங்கே ஒரு விதமான ஆழ்ந்து மனம் லயித்த நிலை திகழ்கின்றது.)

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்திரவு :- “B.J - க்கு நிச்சயமாகப் போ. இன்னமும்கூட மிக விருப்பத்துடன் யாத்ரிகர்கள் போகின்ற அந்த இடத்தின் விசேஷ விசித்திரங்கள் அனைத்தும் உன் கவனத்துக்கு வரும். அந்த இடம் பெண்மணிகள் போகத்தகாத இடமாகும். உன்னோடு சேர்ந்து அவர்கள் வந்தால்

பாதகமில்லை. இதை நான் கட்டாயத்திற்கு உட்பட்டு உத்திரவிட்டிருக்கிறேன், எனினும் அங்கு சென்று திரும்பி வந்தபிறகு, அந்தப் பெண்கள் எக்காரணம் கொண்டும் அங்கே செல்லக்கூடாது, என்று நீ எச்சரிக்கை செய்ய வேண்டும். அந்தப் பகுதி முழுவதையுமே நீ தலைகீழாக மாற்றவேண்டும். பல குடும்பங்களை வாரிசற்றுப்போகுமாறு செய்ய வேண்டியிருக்கும். அதற்கு சிறிது காலம் தேவைப்படும் என்பது உண்மைதான். நீ இங்கிருந்து ஒரு மிகப்பெரிய வேலையை எடுத்துக்கொண்டிருக்கிறாய். அதை உன் சகாக்களுடன் பகிர்ந்து கொள். ஆக்கபூர்வமான வேலை உன்னிடம் மட்டும் நீடித்திருக்கும். அந்தக் கடமையை வேறு ஒருவருக்கு மாற்றித்தருவது முடியாது. யமுனா பாலம் சம்பந்தமான வேலையை தற்காலிகமாக ஒத்திவைத்து விடு; அதைப்பிறகு பார்த்துக் கொள்ளலாம். மதுராவின் அப்தலுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமையில் அவர் தவறினால், அந்தத் தவறுக்காக என்ன தண்டனை தீர்மானிக்கப் பட்டிருக்கிறதோ, அதை அவர் பெற வேண்டி வரும் என்று ஒரு முன்னெச்சரிக்கையாக நினைவுபடுத்து. மதுராவில் யமுனை நதிக்கரையை இன்று கோவர்த்தன மலையில் நீ செய்தது போலவே, தெய்வீகப் பலன் தரும் விளைவினால் போதுமான அளவு நீ முன்னமே நிரப்பியிருக்கிறாய்.''

ராதாகுண்டத்திற்கு ஒளியூட்டுப்படி கூறிய உத்திரவு ஏற்கனவே இருந்தது. நான் (ராம்சந்த்ரா) அந்த வேலையில் மனம் செலுத்த விரும்பினேன். அந்த வேலையில் அப்போது ஈடுபட்டிருந்த R2 - விடமிருந்து வேலையை நான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வணக்கத்திற்குரிய மாஸ்டரிடமிருந்து உத்திரவு வந்திறங்கியது, அந்த இடம் ஒளியூட்டப்பட்டதாக மாறியது. சக்தியின் மிகையான நிலையிலிருந்து மின்சாரத் தன்மையின் விளைவு அத்தண்ணீரில் கரைந்து விடும் படியாக என் கால்களை அதில் கழுவிக்கொள்ளுமாறு உத்திரவு இடப்பட்டது. முகம், வாய் இதெல்லாம் அதில் கழுவ வேண்டியதில்லை. எனக்கு இடப்பட்ட கட்டளையின் படி, மதுராவில் அப்தலுக்குத் தகவல்

தெரிவிக்கப்பட்டது. வேலையை ஏன் அவர் நிறுத்தினார் என்று கேட்கப்பட்டது. அவர் மன்னிப்பு கேட்டுக்கொண்டு என் பாதுகாப்பைக் கவனித்துக்கொள்ளத் துவங்கினார்.

## 10-11-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “ கோவர்த்தன மலையில் உன் வேலையை நான் மேலாய்வு செய்தேன். அதை நீ பெருமளவு மனோவசப்படுத்தியிருக்கிறாய். நீ உட்கார்ந்திருந்த இடமும்கூட ஒளியூட்டப்பட்டதாகியிருக்கிறது. நீ ஏற்கனவே செய்து முடித்துள்ள வேலைக்காக (உயர்ந்த முனிவர்களிடமிருந்து) மிகவும் பாராட்டுக்கள் கிடைத்துள்ளன. இன்னும் சிறிதளவு வேலை இருக்கிறது. அதையும் முடித்த பிறகு ஷாஜஹான்பூருக்குத் திரும்பிப்போ. இரண்டு நாட்கள் ஓய்வு எடுத்துக் கொள். கோவர்த்தன மலையில் இதைவிட அதிகமான கவனத்தை நீ அளித்திருந்தால், மக்கள் அங்கு சென்ற உடனேயே மயங்கி விழத் துவங்கியிருப்பார்கள். அதனால் நான் உன்னைத் தடுத்துவிட்டேன். இது உன்னுடைய வேலையாக மட்டுமே இருந்தது என்பதை நான் முழு அத்தாட்சியுடன் சொல்ல முடியும். ஆராய்ந்து கண்டறியும் பார்வையுடன் யாராவது இதை கவனித்தால், உன்னையன்றி வேறு யாரிடமும் எங்கும் இதைக் காண இயலாது. கோவர்த்தன மலையின் ஒவ்வொரு பாறையும் இதன் பயனை ஈர்த்துக்கொண்டிருக்கின்றன. அங்கே தெய்வீக ஒளிக்கு ஒரு சொந்த இடம் (இல்லம்) கிடைத்திருக்கிறது. இது உனக்கு ஒரு நினைவுப் பரிசாகவே இருக்கும்.’’

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “மதுராவில் இனிமையான தன்மை மேலோங்கியிருக்கத் துவங்கியுள்ளது. அங்கே எத்தனையோ மிகச்சிறப்பான காரியங்களை நீ செய்திருக்கிறாய். யமுனை நதிக்கரை மிக நன்றாக ஒளியூட்டப்பட்டுள்ளது. அங்குள்ள சூழ்நிலை தூய்மையாகியிருக்கிறது. அருள் மணத்தினால் மதுராவின் நிலப் பகுதியை மெதுவாக நிரப்பிக்கொண்டே இரு. நாளை புறப்படுவதாக நிர்ணயிக்கப்பட்டிருந்த பயணத்தைத்

தள்ளிப்போடு. உனது உடல் நிலை பயணம் செய்யத் தகுந்ததாக இல்லை. இன்னும் ஒன்றிரண்டு நாட்கள் பயணத்தை ஒத்திவைப்பது தேவைப்பட்டால், அதனால் தவறு ஒன்றும் இல்லை. உன் உடல் நலத்தைக் கவனித்துக்கொள்.''

**13-11-1944**

மகாவனம் பற்றிய வணக்கத்திற்குரிய மாஸ்டர் வெளிப்படுத்திக் கூறியது :- "மாடு மேய்க்கும் தோழர்களுடனும் மற்ற நண்பர்களுடனும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஓய்வாக இருந்த இடம் இதுதான். பசுக்கள் அவரைக் சுற்றிலும் ஒரு வட்டமான அமைப்பில் படுத்திருக்கும்.''

''உன்வேலையைப் பற்றி பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் தெரிவித்தேன், பாராட்டைப் பெற்றேன்.''

பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் கருத்து :- "மதுரா ஒளியூட்டப்பட்டதாக மாறியிருக்கிறது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்தரவு :- ''நாளை மகாவனம் செல்வதற்குப் புறப்படு. யாத்திரை ஸ்தலங்கள் பலவற்றுக்கு நீ போய், அந்த இடங்களுக்கு ஒளியூட்ட வேண்டியிருக்கும். (மதுரா, மகாவனம் ஆகிய) இந்த இடங்களுக்குப் பிறகு நீ நைமிசாரண்யம் செல்வதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. "A.....இடமிருந்து உயிர் முழுவதையும் எடுத்துவிடு.''

இதற்கு முன்பு நடந்த நிகழ்ச்சி : என்னை (ராம்சந்த்ரா) சோதித்துப் பார்க்கும் எண்ணத்துடன் இன்று மாலை எனக்கு யாரோ (A....) பிராணாஹுதி கொடுத்தார்கள். அது சூடான எரிச்சல் உணர்வைத் தருவதாக இருந்தது. அவரது (A .....) சோதனை முயற்சியை முடிந்த பிறகு, எனக்கு மாஸ்டர் உத்திரவிட்டபடி நான் வேலையை ஆரம்பித்தேன். வணக்கத்திற்குரிய மாஸ்டரின் கட்டளைக்கு இணங்கி இதயமண்டலத்தின் மூன்றாவது புள்ளியிலிருந்து அக்னி சக்தியை அவரது இதயத்திற்குள் பல எண்ணிக்கையில் சுற்றி அறிமுகம் செய்தேன். கடைசியில் அவர் (A....) மன்னிப்பு

கேட்டுக்கொண்டார். கைகளைக் குவித்தபடி எழுந்து நின்றார். நான் இப்படி அவருக்கு பிராணாஹூதி அனுப்பிய போது அவர்,(A....) ''ஐயோ, நான் செத்தேன், சாகப்போகிறேன்.'' என்று கதறுவதை நான் கேட்க முடிந்தது. வணக்கத்திற்குரிய மாஸ்டர் கண்டறிந்து சொன்னது. ''இம்மனிதன் இல்வாழ்வில் இருப்பவன், சன்னியாசிகள் போல காவி உடையை அணிய ஆரம்பித்திருக்கிறான். மதுரா ஒளி பெற்றிருப்பதை அவன் கவனித்து அறிந்த போது, அதனால் அவனது மனதில் அரிப்பு ஏற்படத் துவங்கியது. எனவேதான் உன்னைப் பரிசோதிப்பதற்காக உனக்கு அவன் பிராணாஹூதி அளிக்க ஆரம்பித்தான்.''

அதன்பிறகு என்னைப் பாதுகாக்க வேண்டும் என்று உத்திரவிடப்பட்டிருந்த மதுராவின் அப்தல், இப்படி அவமரியாதையான நடத்தையில் ஈடுபட்ட அந்த மனிதரை என்ன செய்வது என்று என்னிடம் கேட்டார். அந்த மனிதர் அவரது சோதனையை முடித்துக்கொண்டார், பிறகு மன்னிப்பும் கேட்டுக்கொண்டார் என்று அப்தலிடம் நான் சொன்னேன்.

<u>14-11-1944</u>

மகாவனம் பற்றி வணக்கத்திற்குரிய மாஸ்டர் குறிப்பிட்டுச் சொன்னது :- "மாடு மேய்க்கும் தோழர்களுடன் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் வழக்கமாக உட்கார்ந்திருந்த மேடு இதுதான். அப்போது இந்த மேடு இன்னும் பெரிதாக இருந்தது. அந்த மேட்டின் தென்புறத்தில் ஆறு பிஸ்வாஸ் அளவுடைய (ஒரு ஏக்கரில் சுமார் ஐந்தில் ஒரு பகுதி) வயல் அதன் பகுதியாக இருந்தது. அந்த இடத்தின் எல்லைகள் விவரம் :-

கிழக்கே சாலை; தெற்கில் வயல்வெளி; மேற்கில் யமுனை நதியை நோக்கிய வயல்; வடக்கில் வயல்வெளி''

நான் (ராம்சந்த்ரா) அந்த மேட்டின் மீது சென்றபோது பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு சிறுவனாக அந்த மேட்டின் நடுவே உயரமான இடத்தில் இப்போதும் கூட புல்லாங்குழல்

வாசித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதாகவும், மாடு மேய்க்கும் சிறுவர்கள் அவரைச் சுற்றிலும் உட்கார்ந்திருப்பதாகவும் மனதில் உணர்ந்தேன். அந்த மேட்டின் கீழிருந்த பகுதியில் பசுக்கள் நின்றிருந்தன. அவை மிக ஆரோக்கியமாகவும், வலிமை உடையதாகவும், இருந்தன. இந்த இடத்தில் சூழ்நிலை முழுவதுமே மிகவும் இனிமையாக இருந்தது. அந்தப் பசுக்கள் அந்தச் சூழ்நிலையை அனுபவித்துக் கொண்டிருந்ததுபோலத் தோன்றியது.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- “நீ அந்த இடத்தை சரியாகக் கண்டறிந்திருக்கிறாய். அந்தக் காலத்தில் என் தினசரி வழக்கம் இதுவாகத்தான் இருந்தது. இதே மேட்டின் மீது நான் தினமும் வந்து உட்கார்ந்திருப்பது பல வருடங்களுக்கு வழக்கமாக இருந்தது.’’

எங்கள் எண்ணங்கள் அனைத்தும் அங்கே நின்று போய்விட்டன. நாங்கள் முயற்சி செய்தும் கூட எண்ணங்களின் ஓட்டம் தொடரவில்லை. அந்த மேட்டில் சற்று உயரமாக இருந்த அந்த நடுப்பகுதி மிகப்பெரிய தெய்வீகப் பயன் மிகுந்ததாக இருந்தது.

அன்றிரவு தூங்கிக்கொண்டிருந்த போது C1 – இன் சீடர்களுடைய ஆன்மீகத் தொடர்புகளை (இணைப்புக்களை) துண்டித்து விடுமாறு உத்திரவுகள் வந்தன. அந்தச் சமயத்தில் நான் வேறு ஒரு வேலையின் முனைப்பாக இருந்ததால் அதை முடித்த பிறகு நான் கண் விழித்தேன். 15ஆம் தேதி காலையில் மேற்கண்ட உத்திரவு நிறைவேற்றப்பட்டது.

(பின் இணைப்பில் உள்ள வரைபடம் 5ஐக் காண்க).

## 15–11–1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “உனக்கு உடல் நலமில்லையென்பதால் இன்று பயணத்தை ஒத்தி வைத்திருக்கிறேன். மேலும் உன் மனைவியும் உன்னோடு நந்த கிராமம் வர விரும்புகிறாள். உன்னோடு சேர்ந்து அங்கு போகவேண்டும் என்பதற்காக அவள் உள்ளுக்குள்

எண்ணங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறாள். இதனால் தான் உன்னைப் பேருந்திலிருந்து இறங்கச் செய்தேன்.

**16-11-1944**

நந்த கிராமத்தில் வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- ''எந்தக் குளத்தின் கரையில் நீ உட்கார்ந்திருக்கிறாயோ அதையே தான் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் குறிப்பிட்டுச் சொன்னார். இது மிகவும் புனிதமான ஒரு இடம். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இங்கே தான் ராதாவை முதன் முறையாகச் சந்தித்தார். இதன் அருகே ஒரு காடு இருக்கிறது. அங்கே தான் அவர்கள் விளையாடுவது வழக்கம்.

பகவான் கிருஷ்ணர் உறுதிப்படுத்திக் கூறியது :- "நீ சரியான இடத்தைக் கண்டறிந்திருக்கிறாய். எந்தக் கிணற்றின் மீது உட்கார்ந்திருக்கின்றாயோ அந்தக் கிணறு அப்போது இருக்கவில்லை.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது :- "யாரோ உனக்கு தவறாக வழிகாட்டியிருக்கிறார்கள். நீ எங்கேயிருந்து திரும்பி வருகிறாயோ அந்தக் குளத்தைப் பற்றி தான் சொல்கிறேன். துணி வெளுப்பவர்கள் பயன்படுத்தும் அந்தக் குளத்தை யார் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தாலும் சரி, அது வெறும் குளம் என்பதற்கு மேல் அங்கு ஒன்றுமில்லை. இந்த விஷயத்தில் சந்தேகத்திற்கு இடம் கொடுக்கவேண்டாம். நீ அந்த இடத்தை சரியாகத்தான் கண்டறிந்திருக்கிறாய்.''

(பின் இணைப்பில் உள்ள வரைபடம் 6 – ஐக் காண்க.)

நந்த கிராமத்திலிருந்து திரும்பி வரும் போது வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "நீ ராமேஸ்வரம் வரையில் போக வேண்டியிருக்கும். காலம் திசை மாறிக்கொண்டிருக்கிறது. இந்தக் கடமை உன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உன் ஆயுட்காலத்திலும் அதற்குப் பிறகும் அது செய்யப்பட வேண்டும். இந்த வேலையிலிருந்து நீ விடுவிக்கப்படவில்லை. ஒரு வழிகாட்டியாக நானிருந்து உதவி செய்து கொண்டிருப்பேன்.

இவ்வுலகில் என்ன மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமோ அவையெல்லாம் உன் மூலமாக மட்டுமே செய்யப்பட வேண்டும். உனது இந்த நிலைக்குச் சமமாக வேறு யாருமே இருப்பதாகத் தெரியவில்லை. இயற்கையினுடைய அனைத்து சக்திகளும் உனக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படியாக நியமிக்கப்பட்டுள்ளன. நீ அந்தப் பயணம் செல்லும் போது அது பற்றிய விவரங்கள் பின்னர் தொடர்ந்து அறிவிக்கப்படும்.”

‘‘இந்த பூமியின் உயிர்ப்புத்தன்மை (தாவரங்களுக்கு செழிப்பைத் தரும் உரத்தன்மை) குறைந்துவிட்டது. யாத்திரை ஸ்தலங்கள் (புண்ணியத்தலங்கள்) தாழ்மை நிலை அடைந்திருக்கின்றன. மக்களின் பண்புகள் சீர் கெட்டுப்போய் விட்டன. மக்கள் கீழான உணர்ச்சிகளுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறார்கள். உயர் ஜாதியில் பிறந்திருப்பது பற்றிய கர்வம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இரக்கம், அனுதாப உணர்வு ஆகியவை கற்பூரம் போல ஆவியாகிக் கொண்டிருக்கின்றன. சுயநலத்தன்மை பெருகிக் கொண்டேயிருக்கிறது. ஏமாற்றும் குணமும், போலித்தனமும் மக்களின் இதயங்களில் புகுந்துவிட்டன. இப்படி உள்ளே நுழைந்து விட்ட எல்லாக் குறைபாடுகளும் நீக்கப்பட வேண்டும். இது சம்மந்தமாக அவ்வப்போது உனக்குக் குறிப்புகள் வந்து கொண்டே இருக்கும்.’’

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- “உன் வேலையில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருக்கிறேன். மதுரா பயணம் இப்போது முடிவுக்கு வந்திருக்கிறது. தட்சிணப் பீடபூமியில் இருந்து தான் இந்திய நாகரீகம் துவங்கியது. கடலில் இருந்து இந்தப் பகுதி தான் முதலில் வெளிப்பட்டது. அதனால் அங்கிருந்தே உன் வேலையைத் தொடங்கு.’’

## 19-11-1944

(பின் இணைப்பில் வரைபடம் 7ஐக் காண்க.)

இந்த வரைபடத்தில் யமுனை நதியின் மீது அமைந்துள்ள ரயில்வே பாலம் காண்பிக்கப்பட்டுள்ளது. பாலத்தின் கிழக்குப்

பகுதியிலிருந்து பாலத்தை தாங்கி நிற்கும் மூன்றாவது தூணின் அருகே P - என்று குறியிட்டுக் காட்டப்பட்டுள்ள பகுதியில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் உடம்பு எரியூட்டப்பட்ட புனிதமான இடம் இருப்பது கண்டறியப்பட்டது. பாலத்தின் மீது செல்லும் போது P - என்று குறிப்பிட்டுள்ள இந்த இடத்தில் ஒரு விசேஷமான, சூட்சுமமான நிலை உருவாக்கப்பட்டது. பாலத்திலிருந்து இறங்கி யமுனை நதியின் மணற்பாங்கான கரையை அடைந்த பிறகு, என் உறவினர்களில் ஒருவரை அந்த இடத்திற்கு அனுப்பி வைத்தேன். அங்கு சென்ற அவர் எவ்வளவு முயற்சி செய்தும் அவரது எண்ணங்கள் வேறு விஷயங்களில் அலைபாய முடியாதவாறு அவருடைய உள்நிலை அமைந்தது. அதாவது (ஆன்மீக நிலைகளைப் பற்றிய) இந்த விஷயங்கள் எதுவும் அறியாத ஒரு மனிதரின் உள்நிலை (அந்த இடத்தின் புனிதத் தன்மையினால்) இப்படி இருந்தது. காலணிகள் இல்லாமல் வெறுங்காலுடன்கூட அந்த இடத்திற்குச் செல்ல நான் அனுமதிக்கப்படவில்லை. இந்த இடம் அந்த மாதிரி ஒரு அதிசய பரிமாணம் கொண்ட புனிதமான இடமாக இருந்தது. மதுரா பயணம் இன்று முடிவடைந்தது.

## 21-11-1944 (ஷாஜஹான்பூர்)

A1 - இடமிருந்து வந்த ஒரு கடிதம் சம்மந்தமாக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “வணக்கத்திற்குரிய மாஸ்டருடன் நான் விபரமாக எல்லாம் பேசிவிட்டேன். எல்லா நிகழ்ச்சிகளையும் அவரிடம் தெரிவித்தேன். A1 - என்னை விட, வயதில் மூத்தவர் என்பதாலும், எனது இயல்பானப் பண்பின் காரணத்தாலும், நான் இதில் ஏதும் செய்ய இயலாதவனாக இருக்கிறேன். ஆனால் என் இணைப்பு, பயிற்சி முறையோடு அவர் கொண்டிருந்த அவரது தொடர்பு சிதைக்கப்பட்டு விட்டது; ஆனால் அதுபற்றி அவர் அறியாமலிருக்கிறார்.’’

## 22-11-1944

M1 - க்காக மாஸ்டர் கூறியது :- “யாருக்கும் சாத்தியமற்றதாக இருந்த மிக முக்கியமான காரியங்களை எனக்குப் பிரியமான

ராம்சந்த்ரா மதுராவில் நிகழ்த்தியிருக்கிறார். ரோஜாமலர்கள் பூத்திருந்தும் உணராமலிருப்பது போல் தன்னிடம் வளர்ந்து உள்ள ஆன்மீகத் தன்மையை, B - யைச் சார்ந்த நமது மதிப்பிற்குரிய A1 - உணரவில்லை.'' என் பிரியமான ராம்சந்த்ராவுக்கு நான் அனுமதி கொடுத்தால், A1 - உடைய ஆன்மீக நிலையை ஒரு நொடியில் பறித்தெடுத்துக்கொள்ள முடியும். மூத்தநிலை (முதிர்ச்சி) என்பது வயதினால் அல்ல, அறிவுத்திறனைக் கொண்டே கணக்கிடப்படுகிறது என்னும் பாரசீகப் பொன் மொழியை நான் மேற்கோளாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. என்னுடைய ஆயுட்காலத்தில் அவரை (A1ஐ) என் ஆதி குருவின் சீடர் என்பதால் என் மூத்த சகோதரராகக் கருதி நடத்தினேன். அவரை கவனித்துக் கொள்ளும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது, ஆனால் அதை ஒரு போதும் அவர் அறியுமாறு விடவில்லை. அதே முறையின்படி தான் இப்போதும் அவரைப் பார்த்துக் கொள்வது ராம்சந்த்ராவிடம் விடப்பட்டுள்ளது. என்னுடைய ஆயுட்காலத்தின் போது அவருக்கு ஆபத்து ஏற்படாமல் தடுக்கும் பாதுகாப்புக் கருவியாக இருக்கும், இந்த அக்கறையை நான் எடுத்துக் கொண்டேன். எப்படியோ நான் அவரை சகித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் எல்லாவற்றுக்கும் ஒரு எல்லை இருக்கிறது. தன்னைத் திருத்திக்கொள்வதற்கு அவருக்கு இன்னும் ஒரு வாய்ப்பு அனுமதிக்கப்பட்டுள்ளது. உயர்ந்த மேல் உலகம் முன்னமேயே அவர் கைகளிலிருந்து நழுவிப்போய் விட்டது. சொர்க்கத்தில் இருப்பதாகக் கூறப்படுகிற இன்பங்கள் பற்றிய எண்ணம் (ஆசை) இன்னமும் அவர் மனதில் இருக்கிறது. அதுவும் கூட ஒரு சமயத்தில் முடிந்து போகும். அவரைப் பற்றி (A1) எனது வணக்கத்திற்குரிய மாஸ்டரிடம் விரிவாக விவாதித்தேன். கடைசியில் அவரை உயர் மதிப்புடைய ஆதி குருவின் இரக்கம் மற்றும் கருணைக்கே விட்டு விடுவதாக தீர்மானிக்கப்பட்டது. அவரது உள்நிலை மிகவும் தாழ்ந்து போய்விட்டது. அவர் இதை அறிந்து கொண்டு தன்னைச் சரிப்படுத்திக் கொள்வது மிகவும் சிரமம் என்று தான் தோன்றுகிறது.''

‘‘ஒரு பெரிய தப்பான எண்ணம் உலகில் பரவியிருக்கிறது. அதாவது தன்னைவிட வயதில் சிறியவரான ஒருவரிடமிருந்து ஒரு விஷயத்தைக் கற்றுக் கொள்வது, தன் கௌரவத்துக்குக் குறைவானது என்று நினைப்பதைப் பற்றிச் சொல்கிறேன். ஆன்மீகத்தில் வயது பற்றி மதிப்பிடும் சிந்தனை கிடையாது. அது ஒரு தீவிர ஏக்கமாக (பெரும் தாபமாக) அது விரும்பும் யாரிடத்திலும் எந்த ஒரு சமயத்திலும் உண்டாகக் கூடிய பெரும் தீயாக இருக்கிறது. அது பெரும்பாலும் ஒருநிலைப்படுத்தப்பட்ட மனதில் உள்ள ஏக்கத்தின் பதிவுகள் மற்றும் அன்பைச் சார்ந்தே இருக்கிறது. அவர் (A1) குலிஸ்தானின் கதைகளை (பாரசீக மொழியில் ஷேக் ஸாதி என்பவர் எழுதிய புகழ்பெற்ற புத்தகம்) நிறையப் படித்து அதிக அனுபவம் பெற்றிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.’’

‘‘பிரியமான ராம்சந்த்ரா இந்த வேலையை மிகச் சரியாகப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்; அதை நான் மீண்டும் சொல்கிறேன். பிரியமுள்ள R2 , G.J. கோயிலின் வரைபடங்களை தயாரித்திருக்கிறார். அங்கே வசிப்பவர்கள் யாத்ரிகர்களை பல கொடுமைகள் செய்து, அதிகார வரம்பு மீறல்களும் செய்திருக்கிறார்கள். R2 – க்கு மற்ற கடமைகளுடன் கூடவே அவர்கள் அனைவரையும் அழிக்கும் வேலையும் தொடர்ந்து அளிக்கப்படும். அவரிடம் ஒப்படைத்துள்ள வேலைகளில் சிகப்பு மசூதியும் கூட சேர்க்கப்படுகிறது. M1 - க்கு அவருடைய இதரக் கடமைகளின் கூடவே இரண்டு மசூதிகளின் வேலையும் கூடுதலாக அளிக்கப்படுகிறது. D.J - கோயிலை அழிக்க வேண்டிய தேவை இல்லை. அது சம்பந்தமான வேலையை அது எதுவாக இருந்தாலும் பிறகு நான் அதற்காக உத்திரவு தரும் போது கவனித்துக் கொள்ளலாம். மதுராவில் இருப்பவர்களையும் சேர்த்து பூஜாரிகளின் இனத்தை அழிப்பது R2 – வினால் செய்யப்பட வேண்டும். இந்த வேலையை விரைவுபடுத்த வேண்டிய தேவை ஏற்பட்டால், அதில் ராம்சந்த்ராவையும் நான் சேர்த்துக்கொள்வேன். இந்த அழிவிலிருந்து P2 - ஐத் தவிர்க்கவும். பிரியமான ராம்சந்த்ரா மதுரா சம்பந்தப்பட்ட ஒரு உருவாக்கத்

திட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொள்வார். மிகப்பெரிய பரிமாணங்களை உடைய இரண்டு வேலைகள் அவருககு ஏற்கனவே சுமையாக இருக்கின்றன. அதில் ஒட்டு மொத்தமாக ஹிந்து மதத்தை மறு உருவாக்கம் செய்யும் வேலையும் உள்ளடங்கி இருக்கிறது. இந்த வேலையைச் செய்து முடிப்பதற்காகவே அவரை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பயணம் செய்யவைக்கிறேன். இப்படி ஒரு மிகப்பெரிய வேலையில் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியவராக இருக்கிறார். இதனால் தான் இம்மாதிரி மற்ற வேலைகளை உங்களுக்குள் (M1 மற்றும் R2) கொடுத்திருக்கிறேன். நல்லகாலம் விரைவில் வருவதற்கு நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதன் வருகையை மேலும் விரைவானதாக ஆக்குவது ராம்சந்த்ராவின் கைகளில் இருக்கிறது.''

''இங்கிருந்து நான் சென்ற பிறகு A1 - இன் கடிதம் சம்பந்தமான எல்லா உண்மைகளையும் என் வணக்கத்திற்குரிய மாஸ்டரிடம் தெரிவித்தேன். உடனடியாக A1 - இன் ஆன்மீக நிலையை முழுமையாகப் பறித்துக் கொள்ளும்படி அவர் உத்திரவிட்டார். அந்த உத்தரவை நிறைவேற்றுவதை தற்காலிகமாக நான் நிறுத்தி வைத்திருக்கிறேன்.

## 23-11-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்திரவுகள் :- "சங்கராச்சாரியாரின் பரம்பரை பீடத்தை கவிழச்செய். இந்த வேலையை இன்றே செய். சன்னியாசிகள் நன்னெறி ஒழுக்கத்தில் சீர்கேடு அடைந்துவிட்டார்கள். அதன் பூர்வீகப் பெருமை மட்டும் தான் எஞ்சியிருக்கிறது. காவி ஆடைகளை அணிந்திருப்பதாலேயே அவர்கள் அறிவில் உயர்ந்திருப்பதாகக் கருதும் தற்பெருமை அதிகமாகி இருக்கிறது. தங்களைக் கடவுளின் வடிவமாகக் காட்டிக்கொண்டு, - கடவுளால் வடிவமைக்கப்பட்டவர்களாகக் காட்டிக்கொண்டு எல்லாச் செல்வங்களையும் தங்களுடையதாகவே நினைத்துக்கொண்டு மனிதர்களை மனிதர்களாகக் கருதாமல் நடந்து கொள்கிறார்கள்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் குறிப்பு :- “சாரதா பீடத்துக்கு நான் போயிருந்தேன். (இது குஜராத்தில் இருக்கும் சங்கரமடம்) அந்தப் பரம்பரைப் பீடம் கவிழ்க்கப்பட வேண்டியது தான்.’’

## 24-11-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “ராமேஸ்வரத்துக்கும் மற்றும் வேறு எங்கெல்லாம் போகும்படி நான் குறிப்பிடுகிறேனோ அந்த இடங்களுக்கும் நீ செல்ல வேண்டியது உனது அவசியமான கடமையாக இருக்கிறது. நீயும் அதற்கேற்றவாறு உன் மனதைத் தயார் செய்து கொண்டிருக்கிறாய். இது ஏதோ ஒரு சமயத்தில் மிக நல்ல பயன்களை அளிக்கும். உன் ஆயுட்காலத்திற்குப் பிறகு இந்த வேலை மேலும் சுலபமாக இருப்பதை நீ காண்பாய். உன் உடல் நலம் பற்றி எனக்கு நிச்சயமாகக் கவலை, அக்கறை இருக்கிறது. ஆனால் இந்த விஷயத்தில் நான் ஏதும் செய்ய இயலாதவனாக இருக்கிறேன். நீ எதை நிறைவேற்றுவதற்காக வந்திருக்கிறாயோ அந்த இயற்கையின் கட்டளையை நிச்சயமாக நிறைவேற்றியாக வேண்டும். எனினும் நான் ஒரு நிமிடம்கூட உன்னைத் தனியாக விட்டுவிடமாட்டேன். இதனால் இங்கே நான் வருவதைக் குறைத்துக்கொள்ள வேண்டியிருக்கலாம். உன் வீட்டையும், குழந்தைகளையும் நான் பார்த்துக் கொள்வேன். அது நீடித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. உன்னுடைய உடல் நலம் சம்பந்தமாக சில முன்னெச்சரிக்கைகளை நான் இப்போது சொல்கிறேன். ஏதோ ஒரு பயணத்தின் காரணமாக, எப்போதாவது நீ மிகவும் களைப்பாக உணர்ந்தால், உன் சக்தி குறைந்து விட்டதாகத் தெரிந்தால் உடனடியாக உடம்பின் அணுத்துகள்களைத்திறந்து அவற்றை பிரபஞ்ச சக்தியுடன் கலந்துவிடு. ஒன்று அல்லது இரண்டு நிமிடங்களுக்கு அதிகமாக இதைச் செய்ய வேண்டிய தேவை இருக்காது. இந்த வழிமுறையை செயல்படுத்துவதில் ஏதாவது தவறு நேர்ந்தால் நான் உன்னிடம் தெரிவிப்பேன். ஏதாவது நோய் வந்து விட்டால் (அப்படி நேராமல் கடவுள் தவிர்ப்பாராக) உடனடியாக அதற்கான சிகிச்சையை நான் அளிப்பேன். எப்போதும் தண்ணீர் தயாராக வைத்திரு. அது

மட்டுமன்றி நீயாகவே என்ன செய்ய முடியும் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன்.''

''உனக்கு ஜீரண மண்டலத்தில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால், அல்லது வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் (அப்படி நேராமல் கடவுள் தவிர்ப்பாராக) அப்போது, நீ நிழலில் (அதாவது, வெயில்படாத இடத்தில்) இருந்தால்கூட, மனதில் சூரியனை உறுதியோடு கற்பனை செய்து கொண்டு, அதிலிருந்து சிவப்பு ஒளியை (மின்சக்தியை) உன் ஜீரண மண்டலத்துக்குள் இழுத்துக்கொள். இந்தப் பயிற்சியை ஐந்து நிமிடம் வரை செய்யலாம். அதற்கு மேல் அதிக நேரம் இதைச் செய்தால் அது வெப்பத்தின் அனுபவத்தை உண்டாக்கும். இருமல், மூக்கடைப்பு, ஜலதோஷம் போன்ற பிரச்சனைகள் ஏற்பட்டால் (அப்படி நேராமல் கடவுள் தவிர்ப்பாராக) அப்பொழுது சூரியனின் நீலநிற (ஊதா) கதிர்களை உன் நெஞ்சுக்குள் இழுத்துக்கொள். இந்தப் பயிற்சியை பத்து நிமிடம் வரை செய்யலாம். உன் உடம்பில் களைப்பு அதிகம் ஏற்பட்டால் முதல் காரியமாக அதை நானே நீக்கிவிடுவேன். ஆனால் நீயாகவே அதை நீக்கிக் கொள்ள விரும்பினால், அதற்கான வழிமுறை என்னவெனில், பிரம்மாண்ட மண்டலத்திலிருந்து (அண்டவெளியிலிருந்து) மிக மிருதுவான (மென்மையான) வாசனை உடைய சிறு தூரல் உன் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் விழுவதாகவும், புத்துணர்வு அதிகரிப்பதாகவும் ஒரு உறுதியான எண்ணத்தை ஏற்படுத்திக்கொள்வதேயாகும். நீண்ட தூரம் நடக்க வேண்டியிருந்தால், அப்போது நீ நடந்து செல்லும் தரைப் பகுதி பின்னோக்கிச் செல்வதாகவும், உன் காலடிகள் முன்னோக்கிப் போவதாகவும் ஒரு உறுதியான எண்ணத்தை ஏற்படுத்திக்கொள். இது அந்த தூரத்தைக் குறைக்கும். இந்த உறுதியான எண்ணத்தை மனதில் கொள்வதில் நீ எவ்வளவு மேலே ஏறி, அந்த உயர்ந்த உள் நிலையை அடைய முடிகிறதோ அவ்வளவு விரைவில் அந்த தூரம் கடக்கப்படும். இவையெல்லாம் அதிசயமான சாதனைகள் (சித்திகள்). சாதாரண நிலைகளில் பொதுவாக இவை தடுக்கப்பட்டுள்ளன. நீண்ட தூரம் நடந்து செல்வதில் உனக்காக

மட்டுமே இன்னும் ஒரு செயல்முறை இருக்கிறது. அதற்கான சரியான நேரத்தில் உனக்கு நான் அதைச் சொல்வேன். உனக்காக மேலும் ஒரு வழிமுறையும் இருக்கிறது. ஆனால் அது உனக்காக, நீ பயன்படுத்ததற்கு மட்டுமே ஆகும். நீ எந்த சக்தியைப் பயன்படுத்த வேண்டியிருந்தாலும் அந்த சக்தியின் பொறுப்பாளியாக இருக்கின்ற தெய்வத்தின் உதவியைக் கேள். சம்மந்தப்பட்ட அந்த வேலை அதைச் செய்ய வேண்டிய கடமை யாருடையதோ அந்தத் தெய்வத்தினாலேயே செய்யப்படும். இந்த வழி மிகச் சுலபமானது.''

''ஆன்மீகம் பற்றி பல்வேறு விளக்கங்கள் இருக்க முடியும். மக்கள் வெவ்வேறு நிலைகளில் அதற்கு வெவ்வேறு விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தனது சொந்த உள் நிலைக்குத் தகுந்தவாறு அதற்கான விளக்கத்தை உருவாக்கியிருக்கின்றார்கள். ஆனால் ஆன்மீகம் என்பது மனத்தைவிட்டு அனைத்து குப்பைகளும், ஓசைகளும், முட்களும், புதர்களும் நீங்கிப் போனபிறகு, எதையும் உணராத அளவுக்கு மனம் அதில் உறுதியாக நிலை பெறுவதற்காக, எண்ணங்கள் அவ்விதமாக திசை திரும்பிய பிறகு, கடந்து செல்லப்படுகிற எளிமையான பாதையாகும். அப்போது சூட்சுமமான ஒரு புள்ளிகூட காட்சியில் நிலைப்பதில்லை. தன்னைப் பற்றிய விழிப்புணர்வும் அப்போது இல்லை. குடும்பம் பற்றி எந்த சிந்தனையும் இல்லை. பரம்பொருளை அடைவதற்கான ஏக்கம் கூட இல்லை. இது மிக மிக அற்புதமான ஒன்றாக, உண்மையில் மிக அரிதாகவே கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. இது மட்டுமே உண்மையான ஆன்மீகம் ஆகும். இதை அடைந்த பிறகு ஐந்து விதமான புலன் உணர்வுகளாகிய ராணுவப்படை முழுவதும் அதனதன் இடங்களில் ஐக்கியமாகி விடுகின்றன. இந்த நிலையை எய்திய மனிதர் தன்னுடைய தன்மை ஒரு உயிரற்ற சவம் போல் இருப்பதைக் காண்கிறார். செல்வ வளம் அனைத்தும் அங்கு இருந்தாலும் அது பற்றிய உணர்வு அவருக்கு இருப்பதில்லை. வேறு வார்த்தைகளில் சொன்னால் பிரபஞ்ச சிருஷ்டி துவங்கிய சமயத்தில் முடிவற்ற

நிலையிலிருந்து அப்போதுதான் புதிதாக வந்திறங்கிய ஒரு ஜீவனைப்போல் இருப்பதாகச் சொல்லலாம்.

<u>25-11-1944</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “இப்போது V1 - பிரம்மாண்ட மண்டலத்தில் செல்லும் நிலையை அடைந்துள்ளார். M1 - க்கு என் பாராட்டுக்களைத் தெரிவிக்கவும். ராமேஸ்வரத்தில் மூத்த முனிவர்கள் வேலையை ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த இடம் மிகவும் இருளடைந்து கொண்டிருக்கிறது. எனவே, அங்கே ஒரு பெரிய மகாபுருஷர் செல்ல வேண்டியது இன்றியமையாததாகி இருக்கிறது. என் பிரியமான ராம்சந்த்ரா வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் விருப்பத்தின்படி துவாரகைக்குக் கூடப் போக வேண்டியிருக்கும். இந்தப் பயணத்தின் போதே துவாரகையின் வேலையைச் செய்து முடித்துவிடு. அதை அவசரமாக செய்ய வேண்டுமென்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் விரும்புகிறார். சிறிது காலத்திற்கு நீ நிஜாமின் ராஜ்ஜியத்தில் (ஹைதராபாத் டெக்கான் மாகாணம்) தங்கியிருக்க வேண்டியிருக்கும். அங்கிருந்து தான் இந்தியாவின் மேன்மை மற்றும் நல் வாழ்வுக்கான உனது வேலை ஆரம்பமாக வேண்டும். நிஜாம் மன்னரின் ஆக்கிரமிப்பை அங்கிருந்து நீ அகற்ற வேண்டியிருக்கும். இதுபற்றி அந்தக் குறிப்பிட்ட தருணத்தில் உனக்குச் சொல்வேன். நேரமும் சூழ்நிலையும் அனுமதித்தால் துவாரகாவிலிருந்து சிந்து மாகாணம் வழியாக நீ திரும்பி வரலாம். அங்கே (துவாரகையில்) மதம் சார்ந்த துறவிகள் மிகவும் கெடுதலைச் செய்திருக்கிறார்கள். அவர்களை அழிப்பதற்கான உத்தரவுகள்கூட வரலாம். இறைதூதர் (நபூவத்) என்ற நிலையில் நீ நிலைத்திருப்பதற்கும், இந்தப் பயணத்தின் போது அனைத்து இடங்களிலும் அதே நிலையிலிருந்து நீ வேலை வாங்கவும் நான் அனுமதிக்கிறேன். சத்சங்கம் நடத்துவதற்கு ஏதாவது வாய்ப்பு கிடைத்தால், அந்த நேரத்துக்கு மட்டும் அந்த இறைதூதர் நிலையிலிருந்து இறங்கி வந்து இரு. நீ பிரயாணம் போகும் வழியில், நீ விரும்பினால் மற்றும் விரும்பும் போது ஆங்கங்கே செயல்படும் ஆன்மீக

சங்கங்களுடன் அல்லது மூத்த மகான்களுடன் நீ பழகுவதற்கும் அனுமதிக்கிறேன். அதற்கு உனக்கு எப்போதுமே அனுமதி உண்டு. அதற்கான சந்தர்ப்பம் வந்தால் நீ என்னுடைய ஆன்மீகப் பிரதிநிதியும் மற்றும் வாரிசுமாக ஆக இருக்கிறாய் என்ற ரகசியத்தைத் தெரிவிப்பதில் தவறில்லை. உன்னுடன் ஒப்பிடும் போது மிகப்பெரிய முனிவர்களை விடப்பெரிய பெரிய முனிவர்களும் (ரிஷிகள்) கூட வெறும் பள்ளிக்கூடப் பிள்ளைகள் போலத்தான் என்பதை நான் முழு ஆதாரத்துடன் சொல்ல முடியும். ஹிந்துக்களை, இஸ்லாம் மதத்துக்கு மாற்றுவதில் ஈடுபட்டிருக்கின்ற ஹைதராபாத் நிஜாமுடைய முகமையை அழிக்கும் வேலையை M1 - இடம் ஒப்படைக்கவும்.''

''நேற்று செய்தது போலவே இன்றும் ராம்சந்த்ராவுக்கு நான் நீண்டநேரம் பிராணாஹூதி அளித்தேன். அவருடைய ஜீவனின் ஒவ்வொரு அணுவையும் பரமாத்மாவின் (ஜாத்) முழுமையான சக்தியால் நிரப்புவதே அந்த பிராணாஹூதியின் நோக்கமாக இருந்தது. அவர் ராமேஸ்வரத்துக்குப் போய்ச் சேருவதற்கு முன்பாக ஜாத் – இன் (பரம்பொருளின்) முழுப் பயனையும் அவருடைய ஜீவனின் ஒவ்வொரு அணுத்துகளும் உறிஞ்சிக் கொள்வதற்காக, அவர் அங்கு சென்றடையும் நேரம் வரையில் இதை நான் செய்துகொண்டிருப்பேன். இவையனைத்தும் நான் கண்டறிந்தவை. இதற்கு மேலும் அவருக்கு வர இருக்கும் எதுவாயினும் அதுவும் கூட என் கண்டுபிடிப்பாகவே இருக்கும். பௌதீக உடலை விட்டுச் சென்ற பிறகே (இறந்தபிறகே) கிடைக்கக்கூடியதாக இதுவரையில் இருந்த அந்த அதிர்ஷ்டத்தை மனித உடம்புடன் இருக்கும்போதே பெறமுடியும் என்று நான் சாத்தியமாக்கியிருக்கிறேன்.''

பெண்களுக்கு ஆன்மீகப் பயிற்சியளிப்பது பற்றி வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய விளக்கமான குறிப்புக்கள் :- “முதலில் அவர்களை தனக்கு முன்னே நேருக்கு நேராக உட்கார வைக்காமலிருப்பதே பெண்களுக்குப் பயிற்சியளிப்பதில் சிறந்த வழிமுறையாகும். நேர் எதிரே இல்லாமல் பக்கவவட்டில் ஒருபுறமாக உட்கார வைப்பதே சிறந்தது. இடையே ஒரு திரை

இருப்பது பயனுடையதாக இருக்கும். பிராணாஹூதியை ஆரம்பிக்கும்போது கடவுள் இயற்கையைப் படைத்தார். இயற்கையில் இருக்கின்ற மூல அம்சங்கள் பரமாத்மாவாக (பரம்பொருள் தன்மையாக) மாற்றமடைந்தன என்று ஒரு தடைவ நினைக்கவும். அதன்பிறகு பிராணாஹூதியை ஆரம்பிக்கவேண்டும். பிராணாஹூதி அமைதியாக, லகுவாக, மற்றும் ஏற்றுக்கொள்ள உகந்ததாக இருக்கவேண்டும். ஒரு பெண்ணுக்கு பிராணாஹூதி அளிக்கும்போது, ஒரு ஆணுக்குச் செய்வதுபோல, அவளை இதயப்புள்ளியில் அதிக காலம் வைத்திருக்கக்கூடாது. ஆனால் இப்படிச் சொன்னதால், தேவைப்படும் காலம் வரையில் அவளை இதயப்புள்ளியில் (ஆன்மீகப் பயணத்தின் முதல் புள்ளியில்) வைத்திருக்கக்கூடாது என்று அர்த்தமில்லை. அவளுடைய பயிற்சி அனுமதிக்கக்கூடிய அவ்வளவு விரைவில், தாமதமின்றி, அவளை ஆன்மாவின் புள்ளிக்குக்கொண்டு சென்றுவிடணேடும். ஒருபோதும் கூர்மையான (தீவிர முனைப்புடைய) பிராணாஹூதியை ஒரு பெண்ணுக்குக் கொடுக்கக்கூடாது. ஒரு பெண் எந்த ஆன்மீகப் படியில் இருந்தாலும், அவளுக்குப் பிராணாஹூதி கொடுக்கும்போது, இந்தக் குறிப்பை எப்போதும் மனதில் நினைவு வைத்திருக்கவேண்டும். குடும்ப வாழ்வில் முன்னேற்றத்துக்கான பாடங்களையும், கணவன் இருந்தால் அவனை நேசிப்பதற்கும், அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். அவள் விதவையாக இருந்தால் கடவுளின் மீது அன்பை வளர்த்துக் கொள்வதற்கான கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டும். அவளுடைய பற்றுறுதி (நம்பிக்கை) மிகவும் திடமாக இருந்தால், மற்றும் பயிற்சியளிப்பவரும் மிகவும் திறனுடையவராக, நல்ல மன உறுதி கொண்டவராக இருந்தால், தனது குருவின் ஆன்மாவே, கடவுளின் உடம்பாக இருப்பதாகக் கருதி அந்த எண்ணத்துடன் தியானம் செய்யலாம். (இதை நான் பொதுவாகத் தடுத்து விடுகிறேன்.) மாஸ்டரின் உருவத்தை தியானம் செய்வதை பெண்கள் யாருக்கும் பரிந்துரைக்கக்கூடாது. அந்த முறையைப் பின்பற்ற பெண்களை அனுமதிக்கவே கூடாது. அதைத் தடை கூட செய்துவிடலாம். கணவன் இருந்தால் ஒரு மனைவி இப்பயிற்சியைச் செய்யலாம்.

அது அனுமதிக்கக் கூடியது. ஒரு பெண் தன்மீது வெறித்தனமாக அன்பு கொண்டுவிடாமல் தடுப்பதில் ஆன்மீக குரு முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இதனால் அவர்களுக்குப் பயிற்சியளிப்பது சிரமமானதாகிறது. எவ்வளவு தேவையோ அதற்கு அதிகமாக இந்த விஷயங்களில் பெண்களுக்கு இயற்கை பங்களிக்காமல் இருப்பதற்கு அதுவே தான் காரணம். மிக விசேஷமான சூழ்நிலை இருந்தாலன்றி, திருமணம் ஆகாத ஒரு பெண்ணுக்கு இந்தப் பயிற்சியை பரிந்துரைக்கவே கூடாது. அவர்களுக்கு பிரார்த்தனை மற்றும் ஒரு எளிமையான வழிபாட்டமுறையை குறிப்பிட்டுச் சொல்வதில் தவறில்லை. எனக்குத் தெரிந்த வரையில் திருமணமாகாத பெண்கள் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை வழிபடச் செய்வதுமேலானது. ஆனால் இந்த வழிபாட்டுடன் சேர்ந்து பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மிகவும் போற்றி வணங்கத்தக்க, புனிதமான ஆன்மா என்பதை அவர்கள் மனதில் உறுதியாகப் பதிய வைக்கவேண்டும் மற்றும் அவரது குணாதிசயம், நடத்தை ஆகியவை பற்றி புராணங்களில் எழுதப்பட்டிருப்பவை அனைத்தும் முற்றிலும் தவறாகக் கற்பிக்கப்பட்டவை மற்றும் பொய்யானவை என்பதைத் தெரிய வைக்கவேண்டும்.

‘‘சாதகர் நேரில் இல்லாது, வேறு இடத்தில் இருக்கும் போது, பிராணாஹூதி அளிப்பதில் சிறிதும் தீங்கில்லை. பெண்களுக்குப் பயிற்சியளிப்பதில் மற்றும் பிராணாஹூதி கொடுப்பதில் N1 - பரிந்துரைத்திருக்கும் வழிமுறையும் சரியானதாகவும், ஓரளவுக்கு சிறந்ததாகவும் இருக்கிறது. ஆனால் அவராலேயே இந்த முன்னெச்சரிக்கையைப் பின்பற்ற முடியவில்லை. குருவின் உருவத்தை தியானம் செய்யும் வழிமுறையை யாருக்கோ கற்பித்துவிட்டார். B1 - க்கு பயிற்சியளிப்பதற்கான அனுமதி கொடுத்த பிறகு அவரது மனம் கெட்டுவிட்டது. அதற்கு முன்பு அப்படி இல்லை. ’’

இன்று சிலருடன் பேசிக்கொண்டிருந்தபோது, உள்ளுணர்வுத்திறன் சம்பந்தமாக பேச்சு வந்தது. அப்போது வணக்கத்திற்குரிய மாஸ்டர் குறுக்கிட்டுக் கூறியது :- “இதற்குக் கூட

நான் பதில் சொல்கிறேன். என் பிரியமான ராம்சந்த்ராவின் மூடத்தனத்தினால், மற்றும் N1 - உடைய சொந்த அனுபவத்தினால், உள்ளுணர்வுத் திறனைப் பொறுத்த வரையில் ராம்சந்த்ராவுக்கு ஈடு இணை யாருமே இல்லை என்பது N1 - க்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது. எனவே அதைக் குறைத்துவிட வேண்டுமென்று N1 - பரிதவித்தார். இதனால் ராம்சந்த்ராவின் எண்ணத்தின் செயல்முறையில் முடிவுப்புள்ளியில், (அவரது எண்ணம் செயல் வடிவம் பெற்று நிறைவேறும் இடத்தில் அதைத் தடுப்பதற்கு) ஒரு கனமான உறுதி மிக்க பாறை போன்ற தடுப்பு ஒன்று நிலை நிறுத்தப்படவேண்டும் என்ற திட சித்தத்துடன் அதை அவர் (N1) உருவாக்கினார். அடிக்கடி இந்தச் சிந்தனைக்கு வலிமையூட்டினார். எனது பிரியமான ராம்சந்த்ராவும் தனது உள்ளுணர்வுத்திறனுக்கு ஏதோ ஒரு தடை அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டார். நான் இதை தொடர்ச்சியாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். பல தடவைகளில் அந்தத் தடையை பல துண்டுகளாக உடைத்துச் சிதறவைத்தேன். இப்படி அந்தப் பாறையை அமைத்ததன் நோக்கம் என் பிரியமான ராம்சந்த்ராவின் கூரிய நினைவுத்திறனின் (ஞாபகசக்தியின்) வளர்ச்சியைத் தடுப்பதாகவும் இருந்தது. இப்படி ஒரு பயங்கரமான எதிரியிடமிருந்து என் பிரியமான ராம்சந்த்ராவை பத்திரமாகப் பாதுகாத்தது என் துணிவேயாகும். என்னுடைய ஆயுட்காலத்தில் ராம்சந்த்ரா என்னுடன் போதுமான அளவுக்கு நுட்பமான ஐக்கியத்தை அடையாமல் இருந்திருந்தால், நானும் அவருக்குள் முழுவதும் ஊடுருவிப் பரவாமல் இருந்திருந்தால், இப்படி அவரைப் பாதுகாப்பது சாத்தியமில்லாமல் போயிருக்கும். தன் பயிற்சியினால் அவருக்கு வலுவான எண்ண ஆற்றல் (எண்ணத்தின் சக்தி) இருந்தது. நமது வட்டத்தில் (சாதகர் கூட்டத்தில்) மாஸ்டர் மீதான அன்புக்கு வேறு யாரும் முக்கியத்தவம் தரவில்லை.''

அடுத்துவரும் வேலைக்காக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கொடுத்த மேலும் சில உத்திரவுகள் : “இயற்கையின் வெவ்வேறு சக்திகளிடமிருந்து வேலை வாங்கிக்கொள். உன் கட்டளைகளை

மீறி அவர்கள் வேலை செய்தால் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கவும் உனக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் அப்படி நிகழும் பட்சத்தில், அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ள அந்த வேலையை நீயே செய்ய வேண்டியிருக்கும்.

இயற்கையின் சக்திகள் கீழ்க்கண்டவை ஆகும்.

1) **இந்திரன்:** தேவர்களின் அரசன். கிழக்குத் திசையின் பொறுப்பாளி. பகல் நேரத்தில் (வேலை செய்யும் நேரத்தில்) புலன்களுக்குத் தேவையான சக்தியை அளிப்பவர்.

2) **அக்னி :-** நெருப்பு. தென்கிழக்கு திசைக்குப் பொறுப்பாளி. உலகிற்கு நிலைத்தன்மையைக் கொடுப்பவர். உணவு ஜீரணமாவதற்கு உதவுகிறார்.

3) **யமன்:-** மரணதேவன். தெற்குத் திசைக்குப் பொறுப்பாளி. அழிவுக்காக வேலை செய்கிறவர்.

4) **நிருதி:-** ராட்சசன் அல்லது தட்சகன். தென்மேற்கு திசைக்குப் பொறுப்பாளி. (நைருதி) இடையூறுகளைக் குறைப்பதற்கு வேலை செய்கிறவர்.

5) **வருணன்:-** நீர் தெய்வம். மேற்குத்திசையின் பொறுப்பாளி. நீர் என்ற மூலப்பொருளின் அரசன். நதிகள், சமுத்திரங்கள் முதலிய அனைத்து நீர்நிலைகளையும் கவனித்துக்கொள்கிறார்.

6) **மாருதம் அல்லது வாயு:-** காற்று. வடமேற்கு திசையின் பொறுப்பாளி. இன்றியமையாத ஒரு சக்தி. உணர்வுறு நிலையைக் கொடுக்கிறார்.

7) **குபேரன்:-** செல்வ வளத்தின் தெய்வம். வடக்குத் திசையின் பொறுப்பாளி. செல்வவளம் மற்றும் சொத்துக்கள் சம்பந்தமான விஷயங்கள் அனைத்தையும் கவனிக்கிறார்.

8) **ஈசன்:-** தெய்வீகப் பிரகாசம் அல்லது வசீகரம். சிவன் என்றும் சொல்லப்படுகிறார். வடகிழக்குத் திசைக்கு (ஈசானியம்) பொறுப்பாளி.

9) **பிரம்மன்:-** உருவாக்கும் சக்தி. படைப்புத் தெய்வம். மேல்நோக்கிய திசைக்கு (ஆகாசம்) பொறுப்பாளி.

10) **அனந்தன் அல்லது சேஷன்:-** ஆயிரம் தலை உடைய நாகம். கீழ்நோக்கிய திசைக்கு (பாதாளம்) பொறுப்பாளி.

11) **ஆதித்யன் அல்லது சூரியன்:-** ஒளியையும் வெப்பத்தையும் அளிப்பவர். நிறங்களை உருவாக்குகிறவர்.

12) **சந்த்ரமா அல்லது நிஷாபதி:-** சந்திரன் அல்லது இரவின் தலைவன் அல்லது கணவன். குணங்களை அளிப்பவர். குளுமையை அதிகரிப்பவர். இரவு நேரத்தில் புலன்களுக்கு காம உணர்வைக் கொடுப்பவர்.

M1 - பணிவுடன் கேட்டது :- "மகாபாரதம் தேன் பயன்படுத்துவதைத் தடை செய்வது பற்றிக் கூறுகிறதே?

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் விளக்கம் :- "எத்தனையோ தேனீக்களின் ரத்தமும் கூட அதில் இருப்பதால் ஜைன முனிவர்கள் தேன் உபயோகிப்பதைத் தடை செய்திருந்தார்கள். எனினும் உண்மையில் அதன் பயன்மிகு தன்மையைப் பொறுத்த வரையில் தேன் அமிர்தத்துக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் இருக்கிறது. சத்தியத்தைக் காக்கவும், மனிதகுலத்தின் நலனுக்காகவும் ஆயிரக்கணக்கான மனிதர்கள் ரத்தம் சிந்திய கதை தான் மகாபாரதம். அதேபோல ஒரு மனிதனின் நலத்துக்காக சில தேனீக்கள் கொல்லப்படுவதால் தீமை ஏதும் இல்லை.''

<u>26-11-1944</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "B1 - முதலியவர்களால் இதுவரையில் H3 - மிகவும் ஏமாற்றப்பட்டு கஷ்டப்பட்டிருக்கிறார் என்பதை அவரிடம் சொல்லவும். இப்போது

B1 - பிரம்மாண்ட மண்டலம் வரையில் மட்டுமே செல்ல முடியுமாறு நிலை இறக்கப்பட்டிருக்கிறார். ஆனால் தனது மேலான நிலையை அவரிடம் உறுதிப்படுத்துவதற்காக சாதாரண சக்தியால் சரிப்படுத்த இயலாத அளவுக்கு H3 - க்கு பிராணாஹூதிகளை செலுத்தியிருக்கிறார். இப்படி அவருக்குள் அடைபட்டிருந்த எல்லாக் குறைபாடுகளையும் நீக்கிய பிறகு H3 – ஐ இப்போது தான் நான் இதயப்புள்ளியில் நிறுத்தியிருக்கிறேன். இதன் பலன் என்னவென்பதை அவர் என் பிரியமான ராம்சந்த்ராவிடம் அல்லது M1 - இடம் தனிமையில் கேட்டு அறியலாம். என்னோடு மட்டுமே உள்முகமாக இணைக்கப்பட்டுள்ள யாருடனாவது இயன்ற அளவு விரைவில் தன்னைக்கொண்டு சேர்க்குமாறு H3 - என்னிடம் மிகவும் பிரார்த்தனை செய்தார். அந்தப் பிரார்த்தனைக்கு நான் பலனளித்தேன். மேலும் மிகத் தெளிவாக ஒரு முறை பதிலும் சொன்னேன். மிகப்பெரிய முனிவர்களைவிட மிகப்பெரியவர்களும்கூட யாருடன் ஒப்பிட்டால் வெறும் பள்ளிக் குழந்தைகள் போலத் தோன்றுவார்களோ, அந்த மனிதரிடம் (ராம்சந்த்ராவிடம்) இன்று அவரை நான் சமர்ப்பிக்கிறேன். அந்த மனிதரின் கட்டளைகளிலிருந்து அவர் (H3) திசை திரும்பாமலிருந்தால் அவரை பூர்ணத்துவ நிலை வரை கொண்டு செல்வதாக நான் வாக்குறுதி அளித்தேன். எனது ஆன்மீகப் பிரதிநிதி மற்றும் என்னையடுத்து என் பதவிக்கு வந்திருப்பவர் பற்றி இதுவரையில் B1 – உம் மற்றவர்களும், அறியாமையின் மயக்கத்தில் இருந்திருக்கிறார்கள். இந்த விஷயமும் கூட தெரிந்த விஷயமாக மாறப்போகின்ற காலம் வந்து கொண்டிருக்கிறது. B1 - க்கும் கூட, அவர் இன்னொரு முறை என்னிடம் வந்து நான் உத்திரவிடும் வரை, இந்த ரகசியத்தை யாருக்கும் சொல்வதில்லை என்று வாக்குறுதியளிக்கும் பட்சத்தில் இதைப் பற்றிச் சொல்வேன். என் அனுமதி இன்றி அவர் அதை யாருக்காவது வெளிப்படுத்தினால் அவருடைய ஆன்மாவை சிறைப்படுத்தும்படி ஒரு விசேஷ மனிதருக்கு நான் கட்டளை இடுவேன். என் ஆன்மீகப் பிரதிநிதி மற்றும் பதவிக்கு வாரிசாக இருப்பவரை

உணர்ந்தறிவதற்கான சோதனைகள் செய்யும் திறமை H3 - க்கு இருக்கலாம் என்பது முக்கியமில்லாத விஷயம்.

இன்று உலகிற்கு நான் ஒரு அறைகூவல் (சவால்) விடுகிறேன். மக்கள் தங்கள் மனங்களுக்கு எவ்வளவு அதிக தூரம் செல்வதற்கு சுதந்திரம் கொடுத்தாலும், (அதாவது தங்கள் சிந்தனா சக்தியை எவ்வளவு தூரம் போகவிட்டாலும்) என்னுடைய பிரதிநிதியும், வாரிசுமாக இருப்பவரின் உண்மையான உள் நிலையாகிய மாபெரும் ஏணியின் முதல் படி வரையில் மட்டும் தான் அவர்களின் எண்ணம் எட்ட முடியும். என் பிரியமான ராம்சந்த்ராவுக்கு உரியதான அந்த ஆன்ம ஜீவித நிலையின் முடிவான எல்லை எனக்கு மட்டுமே தெரியும். எனது பிரதிநிதியும் வாரிசுமாக இருப்பவர் பற்றிய இந்த அறிவிப்பை நான் உடலை விட்டுச்சென்று பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது ஏன் சொல்ல விரும்புகிறேன் என்ற கேள்வி எழுகிறது. அந்தச் சமயத்தில் (நான் உயிர்நீத்த போது) அதைச்சொல்லாமல் மறைத்து வைக்க வேண்டிய தேவை இருந்தது என்பதே இதற்கு பதிலாகும். அது அவருடைய உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும் ஒரு விஷயமாக இருந்தது. இப்போதும் கூட N1 - முதலிய சிலருக்கு இந்த விஷயம் தெரியவந்தால், அவர்கள் அவரை, உலகைவிட்டு அனுப்பி விடுவதற்கு முயற்சி செய்வார்கள். அவர்கள் தங்கள் திட்டங்களில் வெற்றியடையவில்லை என்பது வேறு விஷயம். ஒரு சிறிய மன வேறுபாட்டினால் அவருக்கு விஷம் கொடுப்பதற்கு அவர்கள் விரும்பினார்கள் (திட்டமிட்டார்கள்) ஆனால் சூழ்ச்சிக்கு பலியாகிவிட்ட அந்த மனிதனின் (M3) உள்ளத்தில் இந்த எண்ணம் வலிமை பெற்று நீடிக்க நான் விடவில்லை. இந்த முன்னெச்சரிக்கையால் தான் இவ்விஷயம் முழுவதையும் நான் ரகசியமாக வைத்திருந்தேன். எனது ஆன்மீக வாரிசும் பிரதிநிதியும் ஆகிய அவரை, யாரெல்லாம் நேசிக்கிறார்களோ, அவர்கள் என் அன்பினில் நனைத்திருப்பார்கள். ஏனென்றால் அவர் (ராம்சந்த்ரா) தன் ஜீவனின் ஒவ்வொரு அணுவையும் எனக்குள் லயம் (ஐக்கியம்)

அடையச் செய்திருக்கிறார். நானும் எனது முழு ஆற்றலுடன் அவரிடத்தில் ஐக்கியமாகி இருக்கிறேன்.''

பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டரின் கண்டிப்பான உத்திரவுகள் என்னிடம் வந்திறங்கின. ''இனியும் எனக்கு சகிப்புத்தன்மை இல்லை. A1 - ன் அழிவைத் துவங்கு. அவனது வம்ச விளக்கு அணைக்கப்பட வேண்டும். இந்த வேலையை உங்கள் மூவரிடமும் (ராம்சந்த்ரா, M1 மற்றும் R2) ஒப்படைக்கிறேன். கீழ்க்கண்ட விதத்தில் அந்த வேலையை உங்களுக்குள் பகிர்ந்து கொள்ளுங்கள். M1 - அவரை (A1ஐ) முழுவதும் ஸ்தூலத்தன்மை (கடினத்தன்மை) உடையவராக ஆக்க வேண்டும். அவருடைய மூளைக்கு சிந்திக்கும் திறனை விட்டு வைக்கக்கூடாது. A1 - உள்பட அவருடன் தொடர்புடைய அனைவரின் உயிர்களை நீக்கவேண்டும். நீ (ராம்சந்த்ரா) இறைதூதர் தன்மைக்கு மேலேறிச்சென்று அங்கிருந்து இந்த அழிவைத் துவங்கவேண்டும். மிகப் பயங்கரமான ஒரு பயிற்சியை அவர் ஆரம்பித்திருக்கிறார். இதனுடன் கூடவே நீங்கள் மூவரும் உங்கள் குடும்பத்தையும், குழந்தைகளையும், அவர்கள் எங்கிருந்தாலும் பாதுகாக்க வேண்டும். நான் இப்போது M - என்ற இடத்துக்குப் போகிறேன். பிறகு Kh - க்கும் போவேன். மற்றும் உன் (ராம்சந்த்ராவின்) பெண்கள் (மகள்கள்) எங்கே தங்கியிருக்கிறார்களோ அங்கேயும் போவேன். (A1 - தீமையுடன் ஐக்கியமடையும் பயிற்சியை ஆரம்பித்திருக்கிறார்.)

சிறிது நேரத்திற்குப் பின் வணக்கத்திற்குரிய மாஸ்டர் மேலும் கூறியது :- "நேற்றும் அதற்கு முன் தினமும் குறிப்பிட்டபடி ராமேஸ்வரம் பயணத்திற்கும், அங்கு செய்ய வேண்டிய வேலைக்கும் சம்மந்தப்பட்ட முன் ஏற்பாடுகளை நான் செய்து முடித்துவிட்டேன். என் பிரியமான ராம்சந்த்ராவுடன் தரகர்கள் உழவுமாடுகளை விற்பது பற்றிப் பேசிக்கொண்டிருந்ததால் அவருக்கு சுத்திகரிப்பு செய்து முடிக்கப்படாமல் இருந்தது. அதை நான் நாளை செய்வேன். பரம்பொருளாகிய, பரம்பொருளின் சக்தி ராம்சந்த்ராவின் ஜீவனின் ஒவ்வொரு அணுவிலும் பூரண

வடிவில் காணப்படும். டிசம்பர் 10ம் தேதி அல்லது ஒன்றிரண்டு நாட்களுக்குப் பிறகு புறப்படுவதற்கு முயற்சி செய். அங்கே ராமேஸ்வரத்தில் சுற்றித்திரியும் சில பரதேசிகள் குறிப்பிட்ட சில விஷமத்தனங்களை செய்யத் துவங்கியிருக்கிறார்கள். அதுவே அவர்களை அழிப்பதை அவசியமாக்கியிருக்கிறது. நேரடியாகவே அழித்துவிடுவது தான் சிறந்த வழி என்று இப்போது நான் நினைத்தேன். ஆனால் என் உத்திரவின்படி அங்கே சரியான இடத்தைச் சென்றடைந்த பிறகு நீ வேலையைத் துவங்கு.''

''நிஜாமின் ராஜ்ஜியம் கவிழ்க்கப்பட வேண்டும். அது தீர்மானிக்கப்பட்டு விட்டது. இங்கே துவாரகாவில் மிக வினோதமான விஷயங்களை நான் காண்கிறேன். போலி வேடங்களின் விசித்திரமான வடிவங்களை பூஜாரிகளின் கூட்டம் உருவாக்கியிருக்கிறது. யாத்ரிகர்களின் பணம் ஏராளமாகப் பறிக்கப்படுகிறது. இந்தப் புனிதமான இடம் மிகவும் தூய்மையற்றுப் போகச் செய்யப்பட்டிருக்கிறது, தவறான (ஒழுக்கமற்ற) நடத்தைகளும் தாராளமாக நடக்கின்றன. இவையனைத்தும் அழிக்கப்பட வேண்டியிருக்கும்.

இதற்குப் பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :-

“M5 - ஐ பிரம்மாண்ட மண்டலத்திலிருந்து பரப்பிரம்மாண்ட மண்டலத்திற்கும், அங்கிருந்து பணிவான நடத்தையின் (தன்னடக்கத்தின்) மண்டலத்திற்கும் நான் மேல் நோக்கி இழுத்திருக்கிறேன். ஆனால் ‘அதிர்ஷ்டம் இல்லாத ஒருவர் பரிபூரணமான ஒரு குருவிடமிருந்து என்ன நன்மையை அடைய முடியும்? என்ன இருந்தாலும் அலெக்ஸாண்டரை அமிர்தத் தடாகத்திலிருந்து கிஜ்ரா, தாகம் தீராமல் தான் அழைத்து வந்தார்!” (பாரசீக மொழியில் உள்ள இரண்டு வரிக் கவிதை)

(இது பாரசீக இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள ஒரு புகழ் வாய்ந்த ஒரு சம்பவத்தைக் குறிக்கிறது. வழி தவறி விட்டவர்களுக்கு வழிகாட்டி அழைத்துச் செல்லும் தேவதையாகிய கிஜ்ரா, ஒரு சமயம் கிரேக்க மாவீரர் அலெக்ஸாண்டரை, சமுத்திரத்தில் உள்ள அமிர்தத் தடாகத்திற்கு அழைத்துச் சென்றது.

அத்தடாகத்தில் தவறி விழுந்து உறுப்புகளை இழந்துவிட்ட சிறு பூச்சிகளும், பிராணிகளும், அந்த வலி மற்றும் துன்பத்தினால் மரணத்தை விரும்பி வரவேற்கும் ஏக்கத்துடன் தவிப்பதையும், ஆனால் அந்த அமிர்தத்தை கொஞ்சம் சுவைத்து விட்டதால் இறக்கவும் முடியாமல் இருப்பதை அவர் பார்த்தவுடன் அதை அருந்த மறுத்துவிட்டார்)

அவர் (M5) உன்னிடம் வந்து அப்படி ஒரு ஏமாற்றும் தொனியில் பேசியபோது, அவருக்கு பிராணாஹுதி கொடுத்ததற்காக நான் வருத்தம் அடைந்தேன். நான் அவருக்கு அவ்வளவு நலம் செய்யும் அளவுக்கு அவரது விதி என்னவாக இருந்தது என்பது எனக்குத் தெளிவுபடவில்லை. இனி இதற்குமேல் அவருக்கு எதுவும் கிடைக்காது. நிலையான துருவ நட்சத்திரப் பதவியை (குதுப்) அவருக்குக் கொடுக்கலாம் என்று நினைத்திருந்தேன். இனி அவருக்கு எந்த ரகசியத்தையும் தெரிவிக்க வேண்டியதில்லை.

<u>27-11-1944</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “H3 – ஐ பௌதீக (உடல் சார்ந்த) மண்டலத்திலிருந்து நேற்று வெளியே கொண்டு வந்துவிட்டேன். இன்று இப்போது பிரம்மாண்ட மண்டலத்தில் அவர் பயணித்துக் கொண்டிருக்கிறார். கடவுள் அவருக்கு மேலும் அதிக வெற்றியை அளிப்பாராக. இது ஆன்மீக யாத்திரைக்கான முன் தயாரிப்பு ஆகும்.

மாலை 7 மணி 2 நிமிடம் ஆனபோது வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “A1 - இடமிருந்து தீட்சை பெற்றவர்கள் அனைவருக்கும் அவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாயினும் இப்போது அந்த இணைப்பு துண்டிக்கப்பட்டது. B1 - ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் அழிக்கப்படவேண்டும். S8 - சரியான பாதைக்கு வரத்தவறினால் நவம்பர் 29ம் தேதி அந்த எல்லோருடைய ஆன்மீக நிலைகளையும் பறித்துவிடு.’’

சற்றுநேரத்திற்குப் பின் வணக்கத்திற்குரிய மாஸ்டர் இதை வெளிப்படுத்தினார். ‘‘இப்போது இந்த 9 மணிக்கு H3 - பரப்பிரம்மாண்ட மண்டலத்தில் சென்று கொண்டிருக்கிறார்”.

## 28-11-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “வேறு யாராலும் அளிப்பது சாத்தியமில்லாத அப்படி ஒரு பிராணாஹூதி சற்று முன் M5 - க்கு செலுத்தப்பட்டுள்ளது. அவரது பௌதீக, பிரம்மாண்ட, பரப்பிரம்மாண்ட மண்டலங்கள் போதுமான அளவு மலர்ச்சி அடைந்துள்ளன. இப்போது அவர் (மற்றவர்களுக்கும் பயிற்சியளிப்பதற்கான) அனுமதிக்க தகுதியாக இருக்கிறார். ஆனால் அதில் ஏதும் செய்ய இயலாதவராக இருக்கிறார்.’’

“R2 - க்கு இந்த ஒரு தியானப் பயிற்சி மிகவும் நன்மையளிக்கும். அவர் ஒரு கட்டிலின் மீது அல்லது வேறு எதன் மீதாவது மல்லாந்து படுத்துக்கொண்டு சிறிது நேரம் அசையாமல் முழு விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும். பிற அனைத்து ஆன்மீகப் புள்ளிகளும் அவரது குருவினால் விழிப்பு நிலைக்குக் கொண்டு வரப்படுகின்றன என்ற உறுதியான எண்ணத்துடன் இருக்க வேண்டும். மற்றும் அவர் ஆன்மீகத்தில் மலர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். அவரது குருவின் சக்தி அந்த ஆன்மீகப் புள்ளிகள் மற்றும் சக்திகள் அனைத்திலும் ஊடுருவிக்கொண்டிருக்கிறது என்றும் உத்தேசம் (மனதில் ஊகித்துக் கொள்ளுதல்) கொள்ளவேண்டும். இந்தப் பயிற்சியைச் செய்யும்போது இதில் ஒரு சமநிலை உருவாகியிருக்கும் சமயத்தில், அதே எண்ணத்தில் அவர் நிலைத்து நின்று அதே மாதிரி அசையாமல் படுத்திருக்க வேண்டும். இது மிகவும் நன்மையளிப்பது நிச்சயம். M1 - க்கு இது தேவையில்லை. K2- க்கும் இந்தத் தியானத்தை பயிற்சி செய்யும்படி சொல்லலாம்.’’

‘‘N1 - இனால் தீட்சை அளிக்கப்பட்ட அனைவருடைய ஆன்மீக இணைப்புகளையும் துண்டித்துவிடு.’’ (இந்தக் கட்டளை நிறைவேற்றப்பட்டது நேரம் காலை11 மணி 44 நிமிடம்). A1

உடன், B1 உடைய இணைப்பு ஏற்கனவே நேற்றிரவு துண்டிக்கப்பட்டது. A1 - உடைய இணைப்பும் கூட சற்று முன்பு (காலை 11.49 மணிக்கு) என் மாஸ்டரினால் துண்டிக்கப்பட்டது.

‘‘A2 - இன் ஆன்மீக நிலையைப் பறித்துவிடு. (அவரது கட்டளை நிறைவேற்றப்பட்டது) A1 - இடமிருந்து நமக்கு வந்த அனைத்துக் கடிதங்கள் மற்றும் இங்கிருந்து அவருக்கு அனுப்பப்பட்ட கடிதங்களின் பிரதிகளை எடுத்து, B1 – க்கு அனுப்ப வேண்டும். C1 - உடன் எந்தத் தொடர்பும் கொள்ளாதபடி M1 - மூலமாக, M5 - முழுவதும் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று நான் முடிவு செய்திருக்கிறேன். என் பிரியமான ராம்சந்த்ராவுக்கு C1 - எழுதிய கடிதத்தை M5 - க்குக் காண்பித்து, இந்த மாதிரி எழுத அவருக்கு (C1 - க்கு) என்ன உரிமை இருக்கிறது என்று கேட்டு, இதனால் தான் C1 – ஐ என் சீடர் என்ற நிலையிலிருந்து மொத்தமாக நீக்கிவிட்டேன், என்பதைச் சொல்ல வேண்டும். M1 - இந்த வேலையை இன்று மாலைக்குள் செய்து முடித்து, நான் இன்று மாலை இங்கே இருக்கும் போது என்னிடம் தெரிவிக்கவேண்டும். A1 - ஐயே நான் விட்டு வைக்கவில்லை என்னும்போது C1 - எம்மாத்திரம்?”

C1 - உடனான தனது தொடர்பை M5 - விட்டுவிட்டது பற்றி வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “M5 - உடைய சுத்திகரிக்கப்பட்ட கீழ்படிதல் மற்றும் நம்பிக்கை பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். மேலும் ஒரு விஷயம் இருக்கிறது. M5 - அவரது அனுபவத்தின் மூலமாக, ஆதாரபூர்வமாக அவருக்கே தெரிந்தால் அவர் தனது சஞ்சலத்தை (ஆன்மீக பிரதிநிதித்துவம் – வாரிசுரிமைப் பற்றிய அவரது அலைபாயும் தன்மையை) விட்டுவிடக்கூடும். அதன் பிறகு என் தாராள குணத்தைப் பாருங்கள்.

இரவு 7.45 மணிக்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- “என்னுடைய சக்கரம் (சக்ராயுதம்) இப்போது அதன் சுழற்சியைத் தொடங்கியிருக்கிறது. A1 - உடைய தைரியம் இப்போது

சோதனைக்கு உள்ளாகியிருக்கிறது. அவர் என்ன கருத்தை மனதில் உருவாக்கிக் கொண்டிருக்கிறாரோ, அது கடவுளுக்குத் தான் தெரியும். இப்போது இந்த அநாதைகளுக்கு (அதாவது ராம்சந்த்ரா, M1 மற்றும் R2 க்கு) பாதுகாப்பாளனாக என்னை மட்டுமே கருதவும். A1 - உடைய சக்தியை ஒரு தூசுக்கு சமமாகக் கூட நான் மதிக்கவில்லை. உங்கள் மூவருக்கும் சிறிதளவு தீமை செய்வதற்குக் கூட அவருக்கு சக்தி கிடையாது. அவருடைய அனைத்து (ஆன்மீக, தெய்வீக சக்திகளின்) இணைப்புகளும் துண்டிக்கப்பட்டு விட்டன. அவர் தெய்வீகத்தின் பெரும் கோபத்துக்கு ஆளாகியிருக்கிறார். அவரைப் பாதுகாக்கக் கூடிய, எந்த சக்தியும் இப்போது அவரிடம் இல்லை. நான் ஒரு மிக முக்கியமான விஷயத்தை உனக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. எவ்வளவு விரைவில் சாத்தியமோ, அவ்வளவு விரைவாக உன் வீட்டை விட்டு வெளியேறி ராமேஸ்வரத்துக்குப் போய்விடு. நீ அங்கு சென்ற பிறகு அந்த இடத்தின் உண்மை நிலையை உனக்குத் தெரிவிப்பேன். உன் மாஸ்டர் உன்னை எந்தச் சமயத்திலும் தன்னந்தனியே விடமாட்டார் என்பதில் நிச்சயமாக இரு. நானும் அதே மாதிரி உன்னுடன் இருப்பேன். ஐயாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு காலம் இப்போது திசை திரும்பியிருக்கிறது. மகாபாரத யுத்தத்தின் போர்க்களத்திட்டம் இன்னமும் என் மனக் காட்சியில் இருக்கிறது. அந்தப் பெரும் போருக்குப் பிறகு தான் ஹிந்துக்களின் வீழ்ச்சி ஆரம்பித்தது. இப்போது அந்த ஹிந்துக்கள் தங்கள் பழைய நிலைக்கு முன்னேறும் காலம் நெருங்குகிறது. உன் விருப்பம் போல் எவ்வளவு விரைவில் அதை மீட்டுக் கொண்டுவருவது என்பது முற்றிலும் உன் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அதற்காக கடவுளின் கட்டளை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒரு மாஸ்டராக உனது வேலை தட்சிணப் பீடபூமியிலிருந்து தான் ஆரம்பிக்கவேண்டும் என்று உன் மாஸ்டர் மிகச் சரியாகச் சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு இடத்திற்கும் – அனைத்து இடங்களுக்கும் நீ ஒளியூட்டுவாய். அதனோடு கூடவே அழிவு வேலையும் இருக்கும். அவ்வப்போது அது பற்றி நான் உனக்குத் தெரிவித்துக் கொண்டிருப்பேன்.’’

‘‘இனிமேலும் நிஜாமின் ராஜ்ஜியம் நீடிக்க முடியாது. அவர் திரைமறைவில் ஹிந்துக்களின் ரத்தத்தை உறிஞ்சியிருக்கிறார். அவருடைய எண்ணங்களை செயல்படுத்துவதற்காக ஒரு அமைப்பே வேலை செய்து கொண்டிருக்கிறது. எத்தனையோ பெண்களின் கற்பு பறிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பயணத்தில் நீ பூனாவின் வழியே சென்று பம்பாயில் தங்க வேண்டியிருக்கும். அரசியல் சம்பந்தமான சில வேலைகள் உனக்கு அளிக்கப்படும் வாய்ப்பு அங்கு உண்டு. அதற்குப் பிறகு துவாரகைக்குப் போகவேண்டிய தேவை இருக்கிறது. ஸார் ஹிந்துக்கும் (ஒரு ஊர்) கூட நீ போகவேண்டியிருக்கும். இந்தப் பயணத்தின் போது, அதற்கான சந்தர்ப்பங்களில் உனக்கான வேலைகள் வந்து கொண்டிருக்கும். ஒரு விஷயத்தை நீ விசேஷ கவனத்தில் வைத்திருக்க வேண்டும். இந்தப் பயணத்தின்போது அல்லது எங்காவது தங்கியிருக்கும்போது யார்மீதும் உன் பெரும் கோபத்தைக் காட்டிவிடக்கூடாது. நீ இறைதூதர் என்ற நிலையில் இருப்பாய் என்பதால், உன் கோபத்தை உன் மாஸ்டரினாலோ, என்னாலோ தாங்கிக் கொள்ள முடியாது. தற்செயலாக உனக்கு வழித்துணையாக யாராவது கிடைத்தால் உன்னை (சாந்தமாக) அமைதியாக வைத்திருக்க முயற்சி செய்வதே அவருடைய கடமையாக இருக்கும். உன்னை எதிர்கொள்ளும் (சமாளிக்கும்) சக்தி யாருக்குமே இருக்காது. இங்கே (உன் சொந்த ஊரில்) உன் வேலைகள் உனது ஆன்மீக சகோதரரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவர் மிக மேன்மையானவராக இம்மாதிரி வேலைகளைக் கையாள்வதற்குத் தேவையான அனுமதி பெற்றவராக இருக்க வேண்டும். இந்த உனது பயணம் எவ்வளவு காலம் தொடர்கிறதோ அது வரையில், நீ எந்த வேலைக்காக அனுப்பப்பட்டிருக்கிறாயோ, அந்த வேலைகளில் மட்டுமே – அதில் நாட்டம் கொண்டதாக – உனது ஒருமுனைப்பட்ட கவனம் இருக்கவேண்டும். மதுராவில் உன்னுடைய அரிய செயல்திறனை நான் கண்டு அனுபவித்திருக்கிறேன். கோவர்த்தன மலை நிகழ்ச்சி என் கண்களில் தெரிகிறது. மதுரா முழுவதையும் அவ்விதமாகவே ஆக்குவதற்கு நீ நினைத்திருந்தாய். ஆயினும் அங்கு மக்கள் வசித்துக் கொண்டிருப்பதால், அது முறையல்ல

என்று விடப்பட்டது, எதைப் பற்றியும் ஒரு சரியான மதிப்பீட்டைச் செய்வதற்கான உன் திறமையை உன் மாஸ்டர் நீக்கியிருந்தார். அதன் காரணமாக இம்மாதிரி வேலையில் உனக்கு வழிகாட்டுதல் தொடர்ந்து தேவையாக இருக்கிறது.

‘‘மதுராவில் நீ கண்டறிந்த புனிதமான இடங்கள் உன்னுடைய வழிகாட்டுதல் இல்லாமலும், உன்னைக் கேட்காமலும் வேறு யாராலும் அறியமுடியாதவையாக உள்ளன. இதனால் இந்தப் பெரும் பயணம் சென்று வந்த பிறகு, சாத்தியமான அளவுக்கு அந்த இடங்களை வெளிப்படுத்துவதற்கு நீ முயற்சி செய்யலாம். அதை நீயாகவே வெளிப்படுத்திச் சொல்ல முயற்சிப்பாயானால் (அதாவது வேறு யாரிடமிருந்தும் உதவி எதிர்பார்க்காமல் உன் சொந்தப் பொறுப்பில் செய்தால்) அதற்குத் தேவையான பணம் மதுராவிலேயே இருக்கிறது. அதை உனக்குக் கிடைக்கச் செய்ய முடியும். அங்கே மேலும் அதிக தூய்மையை உண்டாக்குவதற்கு அவ்வப்போது பிருந்தாவனத்தின் மீதும் கவனம் செலுத்து. G.J - கோயில் இனியும் எந்த விதத்திலும் நீடித்திருப்பதை நான் விரும்பவில்லை. உன் குருவின் மூலமாக உன் காட்சியில் கொண்டு வரப்பட்டுள்ள திட்டத்தின்படி அங்கு அழிவு வேலையைத் துவங்கு. ஈனமான காரியங்களில் ஈடுபட்டவர்கள் எவரேனும் அங்கிருந்தாலோ, அங்கு அப்படி இருப்பவர்களின் விபரங்கள் கிடைத்தாலோ, அவர்களுடைய வம்ச ஒளியை அணைத்துவிடு. (அவர்கள் குலம் தழைக்காமல் செய்.)’’

‘‘உனக்குத் தெரிந்த அந்த கடம்ப மரத்துக்கு அருகே உள்ள யமுனை நதியின் நீரோட்டத்தை மாற்ற வேண்டிய அவசியமில்லை. தீய சக்திகள் அங்கே ஆட்சி செய்து கொண்டிருக்கின்றன. அதன் அருகிலேயே சில அபாயகரமான இடங்கள் உள்ளன. சில குறிப்புக்களின் மூலமாக உன் மாஸ்டர் அதைப்பற்றி உனக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறார். உயிருக்கே ஆபத்து விளையும் என்பதால், உன்னை அந்த வழியாகப் போக அவர் அனுமதிக்கவில்லை. அந்த இடங்கள் அனைத்தும் இந்த அழிவு வேலையில் உட்படுத்தப்பட வேண்டும். G.J – கோயிலின் வடகிழக்கு மூலையில் நின்று பார்த்தால் அங்கிருந்து முக்கோணம்

போன்ற ஒரு தோற்றம் வெளிப்படும். அவையனைத்தும் இந்த அழிவு வேலையில் சேர்க்கப்பட வேண்டும்.''

''யமுனை நதிக்கரையை நீ மிகவும் நன்றாக ஒளியூட்டியிருக்கிறாய். உன் மாமனாரின் வீட்டுக்கு அருகில் அந்த மேட்டின் மீது தீய சக்தியின் (பிசாசின்) விளைவு இப்போது முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. அங்குள்ள சூழ்நிலையில் ஆன்மீக மணம் பரவத் துவங்கியிருக்கிறது. ஆனால் அந்த ஆன்மீக நிலை நீடித்து உறுதியாக இருக்கச் செய்வதற்கு அவ்வப்போது அங்கு கவனம் செலுத்துவது தேவையாக இருக்கும். நந்த கிராமத்தில் ராதாவை நான் முதன்முதலில் சந்தித்த அந்த இடத்தை நீ பார்த்திருக்கிறாய். நீ உட்கார்ந்திருந்த அந்த கிணற்றின் விளிம்பு தான் அந்த இடம். என் உடலை எரித்த இடம் என்று புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இடம் முற்றிலும் தவறானது. நீ தயாரித்தருக்கும் வரைபடத்தில் நீ சரியாகக் குறிப்பிட்டுள்ளபடி, அந்த ரயில்வே பாலத்தில் கிழக்குப் பக்கத்திலிருந்து மூன்றாவது தூணின் அருகில் தான் உண்மையில் இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டன. என் தந்தை வசுதேவர் நள்ளிரவில், என்னை கோகுலத்துக்கு எடுத்துச் சென்றபோது இந்த இடத்திலிருந்து ஒரு பர்லாங் (சுமார் 200 மீட்டர்) தூரத்தில் உள்ள வழியில் சென்றார். கோகுலம் மதுராவிலிருந்து அதிக தூரத்திலில்லை. எப்போதாவது மதுராவுக்கு மறுபடியும் நீ சென்றால் என் தந்தை என்னைத் தூக்கிக்கொண்டு நதியைக் கடந்து சென்ற அந்த இடத்தையும் உனக்குத் தெரிவிப்பேன்.''

## 29-11-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "ராம்சந்த்ராவின் ஜீவனின் ஒவ்வொரு அணுவையும் நான் ஒளிபெறச் செய்திருக்கிறேன். அவரது ஒவ்வொரு அணுவிலும் பரம்பொருளின் முழு ஆற்றல் திகழ்கிறது. M1 - உடைய சீடர், M8 – ஐ இன்று நான் முழுமையடையச் செய்து, பிராணாஹூதி கொடுக்கவும், பயிற்சியளிக்கவும் அனுமதி அளித்திருக்கிறேன்

என்பதைத் தெரிவித்து வாழ்த்துக்களைக் கூறவும். அவருக்கு கிராமங்களில் பயணம் செய்யும் வேலையைக் கொடுக்கலாம். எனது பிரதிநிதியும், வாரிசும் ஆகிய பாபு ராம்சந்த்ராவின் மூலமாக இன்று அவருக்கு அனுமதியளித்தேன் என்பதை நோட்டுப்புத்தகத்தில் குறித்து வைக்கலாம். M8 – உடைய வழிகாட்டியாகிய M1 - இதை சரிபார்த்துக் கொண்டார். அவரிடமிருந்து M1 - வேலை வாங்கிக் கொள்ள வேண்டும்.’’

‘‘எனது பிரியமான ராம்சந்த்ராவுடன் நான் பூரணமாக இணைந்திருப்பதாலும், அவர் உணர்வு பூர்வமாக மிகவும் கூர்மையாக (அதிக திறனுடன்) இருப்பதாலும், அவர் பிராணாஹூதி அளிப்பது பற்றிய விஷயத்தில் நான் கட்டுப்படுத்திக் கொண்டே இருக்கிறேன். இப்போது இது சம்மந்தமாக அவர் சரியான பாதைக்கு வந்திருக்கிறார். ஆனால் அவரது எண்ணத்தில் அவசரத்தன்மை இன்னும் நீடிக்கிறது. அடுத்தடுத்து வரும் அவரது எண்ணங்களை (விருப்பங்களை) நான் நிறைவேற்றுவதற்கு அதுவே காரணம். இவ்விதமாக அவரது அவசர குணத்தின் பலனாகவே, குதுப், குதுப் – உல் – அந்தப், மற்றும் கவுஸ் ஆகிய பதவிகள் உருவாக்கப்பட்டன. ஒன்றிரண்டு பேரின் விஷயத்தில் நானே அவசரப்பட வேண்டியிருந்தது. அவரிடம் எந்த எண்ணம் தோன்றினாலும் அதன் ஒத்ததிர்வு பரமாத்மாவில் இடம் பெற்று விடுகிறது. (அதாவது அவர் நினைப்பது பரம்பொருளில் எதிரொலிக்கிறது.) இதன் காரணமாக அவருடைய அந்த ஒத்ததிர்வுக்கு இசைந்து செயல்படுவதைத் தவிர எனக்கு வேறு வாய்ப்பில்லை. ஆரம்பத்திலிருந்து இதுவரையில் அவரது பயிற்சியின் வழி அப்படியே இருந்திருக்கிறது. தன் சொந்த விஷயத்தில் (தன் பயிற்சிக் காலத்தில் ஆன்மீக முன்னேற்றமடைய விரும்புவதில்) அவர் மிகவும் வேகமாக இருந்திருக்கிறார். மற்றவர்களுக்கும் அதே மாதிரியாகவே செய்ய விரும்புகிறார். நீண்ட காலமாக வளர்த்துக்கொண்டு விட்ட பழக்கத்தை விரைவில் விட்டுவிட அவரால் முடியவில்லை. இப்போது இவ்விஷயத்தில் அவர் கடவுளின் சித்தத்தை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார். அது

எந்த அளவுக்குத் தேவை என்பதை சிந்தித்து, அதன்படி அதைச் சரிப்படுத்தியிருக்கிறேன். இன்னும் மிகச் சரியான அளவுடையதாக அதை நான் ஆக்குவேன்.''

## 1-12-1944

வணக்கத்திற்குரிய ராதா கூறியது :- "நீ கண்டறிந்த அந்த இடத்தில் தான், அதாவது அந்தக் கிணற்றின் அருகில் (பழங்காலத்தில் அந்தக் கிணறு இல்லை) பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடன் என் முதல் சந்திப்பு நிகழ்ந்தது, பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடைய நல்ல குணங்கள் பற்றி நான் கேள்விப்பட்டேன். நாங்கள் சந்திப்பதற்கு முன்பே அவரது அன்பாகிய மின்சக்தி என்னுள் பாயத் தொடங்கிவிட்டது. நாங்கள் சந்தித்த உடனேயே அவரது கறுத்த உருவம், நேராக என் இதயத்தினுள் வந்திறங்கி அதைத் தன்னுடைமையாக்கிக் கொண்டு விட்டது. அவரையே நான் தியானம் செய்ய ஆரம்பித்தேன். அன்று முதல் எப்போதும், எந்த நேரத்திலும் அந்த தியானத்திலிருந்து நான் விலகவேயில்லை. அவரைப் பற்றிய எண்ணத்திலேயே என் மனம் ஆழ்ந்து மூழ்கியிருந்ததால், வேறு அன்றாட வேலைகள் எதிலும் நான் சிறிதும் ஒட்டாமலே இருந்தேன். இதுவே என் மனநிலையாக இருந்தது. இது வெறும் ஆரம்பம்தான், படிப்படியாக உலகியல் நடவடிக்கை எதிலும் எனக்கு ஈடுபாடு இல்லாமல், காரியங்கள் நின்றுபோயின. அவரது உருவம் என்ற ஒரே புள்ளியில் என் மனம் ஒருமுகப்பட்டதாக மாறியது. இந்த மனோபாவம் தொடர்ந்து நிலைப்பெற்று நின்று அதன் பலனாக எங்கெங்கு நோக்கினாலும் அங்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மட்டுமே இருப்பதாக நான் காட்சியில் கண்டேன். என் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் ஸ்ரீகிருஷ்ணரின் பிம்பமே இருப்பதாகத் தோன்றியது. அதன்பிறகு என்னையே நான் கிருஷ்ணராக பாவிக்கும் (பாவனையில் கருதும்) ஒரு நிலையை எய்தினேன். இதன் விளைவாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தன்னையே ராதாவாகக் கருதும் நிலைத் துவங்கியது. நீ உருவாக்கப்போகின்ற ஆன்மீகப் பயிற்சி முறையில் இந்த அன்பு வழியை நீ அறிமுகப்படுத்த விரும்பினால், அதற்கு நான்

பின்பற்றிய முறை மட்டும்தான், ஒரே வழியாக இருக்கும். இதில் ஒரே வித்தியாசம் நான் அவரை என் கணவராகக் கருதி நேசித்தேன் என்பது தான், மற்றபடி வழிமுறை ஒன்றே தான். அன்பை ஒருவர் தான் விரும்புகிறபடி எந்த ஒரு கருத்துருவத்திலும் (சிந்தனை வடிவத்திலும்) மாற்றிக் கொள்ளலாம். இந்த விஷயம்பற்றி நீ என்னைக் கேட்கும் போதெல்லாம் சொல்வேன். உன்னைச் சந்திப்பதற்கு பகவான் ஸ்ரீகிருஷ்ணர் எனக்கு அனுமதியளித்திருக்கிறார். உன் வசதிக்காக மேலும் ஒரு விஷயத்தைச் சொல்கிறேன்; என்னுடைய அன்பின் வழியின் பெரும்பகுதி உன்னுடைய வழியைப் போன்றதேயாகும். உன் குருநாதரை, நீ அவரைக் காதலிப்பவனாகவும், அவரே காதலிக்கப்படுகிறவராகவும் கருதி இந்த உணர்வுடன் இருந்தாய்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “ஆன்மீகத்தில் மிகவும் உயர்ந்த முன்னேற்றமடைய விரும்புகிறவர் யாராயினும் அவருக்கு, வணக்கத்திற்குரிய ராதா குறிப்பிட்டுச் சொன்னதற்கு மேலான வழிமுறை ஏதும் இருக்க முடியாது. நமது மார்க்கத்திலும் யாராவது முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்றால் அது இந்த இன்றியமையாத உள் நிலையின் மூலமாகத் தான். என் உதாரணமும் இதில் உள்ளடங்கும். உனது புதிய மார்க்கத்தில் இதை அறிமுகப்படுத்து. எல்லாவற்றுக்கும் முதலில் ஆன்மீக சாதகர்கள் தங்கள் மாஸ்டரின் மீதான பாச உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும். பாச உணர்வு என்றால் சீடர்கள் தங்கள் மாஸ்டரின் மீது அன்பு வளர்ச்சியடையும் படியாக அப்படி ஒரு உறவுமுறையை உருவாக்கிக் கொள்வது என்ற பொருளில் சொல்கிறேன். அதன் பிறகு அவர்கள் தங்கள் மாஸ்டரைப் பின்பற்றி நடக்க ஆரம்பிப்பார்கள். இதில் மிகச் சிறந்தது நீ என்னோடு ஏற்படுத்திக் கொண்ட உறவு முறையாகத்தான் இருக்க முடியும். எனினும் இது ஒருவர் மற்றவர் (மாஸ்டர்) மீது கொண்டிருக்கும் மனோபாவத்தின் நாட்டத்தைப் பொறுத்தது. வணக்கத்திற்குரிய ராதா இந்த உறவு முறையை வேறு வடிவத்தில் எடுத்துக் கொண்டிருந்தார். நானும் அதற்கு ஒரு உதாரணம். ஆயினும் இந்த மாதிரி உறவுமுறையை ஏற்றுக் கொள்ளுமாறு

வற்புறுத்துதல் கூடாது. யாருக்காவது இம்மாதிரி மனநாட்டம் ஏற்படாமல் போவதும் சாத்தியம் தான். இந்தப் பரிந்துரை அவர்களுக்குப் பயனளிக்காமல் போகலாம். இது பெரிய உள்ளம் கொண்ட மனிதருக்கு உரிய செயலாகும். எல்லோருடனும் பகிர்ந்துகொள்கிற விஷயமல்ல. மிக அரிதாக சிலர்தான் இதை ஏற்றுக்கொள்வார்கள். ஆன்மீக சத்சங்கங்களில் இதைப் பற்றி முக்கியத்துவம் தந்து சொல்லலாம். இவ்வகையில் ஏற்றுக்கொள்ள வேண்டிய உருவம் எதுவாகவும் இருக்கலாம்.''

(குறிப்பு : ஸ்ரீ ராம்சந்த்ரஜி (பாபுஜி) தன் மாஸ்டரையே நாயகனாகக் (காதலிக்கப்படுகிறவராகக்) கருதி நேசித்தார். லாலாஜியும் தன் மாஸ்டரின் மீது இதே உணர்வைத் தான் கொண்டிருந்தார். இதன் பலன்கள் ஒரே மாதிரியாகவே இருந்தன. M1 - இந்த மாதிரி உணர்வை தனது தந்தை மீது வைத்திருந்தார்.)

சுவாமி விவேகானந்தர் கூறியது :- "பிரியமான ராம்சந்த்ராவை கவனித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவருடைய மாஸ்டரை நான் பாராட்டுகிறேன். இவ்வுலகம் இதுவரையில் இம்மாதிரி ஒரு சமர்த்த குருவைக் கண்டதில்லை. நான் பின்பற்றிய அன்புவழி எப்படி இருந்ததென்றால் என் மாஸ்டரின் வடிவத்தில் அனைத்து சக்திகளும் ஒன்று சேர்ந்து இடம் பெற்றிருப்பதாக நினைத்து, அவரது அந்த வடிவத்தில் மனம் ஈடுபட்டதாக இருந்தது. அவரது உருவம் தவிர வேறு எதுவும் என் காட்சியில் வராது. ஒவ்வொரு அணுவும் என் குருதேவர் கோயில் கொண்டிருக்கும் இடமாகவே தோன்றியது. நான் எப்படி அந்த மனோநிலைக்கு வந்தேன் என்ற கேள்வி எழலாம். அவரிடம் வந்துசேர்ந்து, நாத்திகத்திலிருந்து இறை நம்பிக்கைக்குத் திரும்பிய போது, அச்சமயத்தில் என்னை ஆதரிக்கப்போகிறவர் அவரைத் தவிர யாரும் இல்லை என்ற நம்பிக்கை உண்டாயிற்று. ஆயினும் ஒரளவுக்கு என் மாஸ்டருடன் எதிர்வாதம் செய்யும் மனப்பான்மையும் நிச்சயமாக என்னிடம் இருந்தது. ஆனால் என் மாஸ்டரின் உருவத்தை என் இதயத்தில் உறுதியாக நிலைநிறுத்திக் கொண்டு, அதிலேயே கவனம் கொண்டிருந்தேன். இந்த உள்நிலை மேலும் முன்னேற்றம்

அடைந்தபோது மாஸ்டரின் உருவம் என் இதயத்திலிருந்து மறையத் துவங்கியது. அதன்பிறகு மாஸ்டரின் உருவம் எனக்கு வெளியே எங்கும் இருப்பதாகக் கருதி தியானம் செய்ய ஆரம்பித்தேன். இந்த உள் நிலை அதற்கு மேலும் முன்னேற்றம் அடைந்த போது மாஸ்டரின் உருவம் மொத்தமாக மறைந்து (எண்ணத்தில் எந்த விதத்திலும் வராமல் மறைந்தது), அதற்குப் பிறகு என் உருவமே, மாஸ்டரின் உருவமாக இருப்பதாகக் கருதி தியானம் செய்யத் துவங்கினேன். போகப்போக அங்கிருந்த அனைத்து அணுக்களிலும் அவருடைய உருவத்தை மட்டுமே பார்க்கின்ற ஒருநிலையில் வந்து நின்றது. அவரை நான் ஒரு குருநாதராக மட்டுமே, பாசம் வைப்பதற்கு வேறு எந்த உறவு முறையையும் மேற்கொள்ளாமல் மாஸ்டராகவே நேசித்தேன். ஆயினும் அவரையே என் அன்பின் இலக்காக எடுத்துக் கொண்டிருந்தேன். என் கண் பார்வை எங்கே சென்றாலும் (நான் எங்கே பார்வையைச் செலுத்தினாலும்) அது அவர் மீது மட்டுமே படிந்தது. வேறு வார்த்தைகளில் சொன்னால் நான் அவரைக் காதலிப்பவனாக மாறியிருந்தேன். அவரே என் காதலுக்கு உரிய லட்சியமாக இருந்தார். உங்கள் மாஸ்டர் இப்போது குறிப்பிட்டது போல அதே நோக்கத்தை இது இயற்கையாக நிறைவேற்றியது. (நானும் அவரும் ஒன்றாக இணைந்து விட்டோம் என்ற) அந்த வார்த்தையைச் சொல்ல நான் விரும்பவில்லை. சமஸ்கிருத மொழி அதைத் தடைசெய்கிறது. முன்னேற்றத்துக்கு வழி அதுவேயாகும். நான் இப்போது போகிறேன், இனி அவ்வப்போது வந்து செல்வேன்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "நான் எதைச் சொல்லாமல் நழுவிக்கொண்டிருந்தேனோ, அதை வெளிப்படுத்தாமல் தவிர்க்க முடியவில்லை. அதனால் தெய்வீகக் கட்டளை இதுவே என்பதால் அதைச் சொல்லும் கட்டாயம் உண்டாகியிருக்கிறது. தனது மார்க்கத்தின் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு, பிரியமுள்ள ராம்சந்த்ராவுக்கு சுவாமி விவேகானந்தாவே நேரடியாக அனுமதியளிக்க முன் வந்திருக்கிறார். ஆயினும் ராம்சந்த்ரா தன்னிச்சையாக அதை

ஏற்றுக்கொள்ளாமல், அதைப் பற்றி என்னிடம் கூறியபோது, ஸ்வாமி விவேகானந்தா என்னை வற்புறுத்தினார். இதனால் ராமகிருஷ்ண பரமஹம்சரிடமிருந்து தோன்றிய, ஆன்மீக மார்க்கத்துக்குப் பொறுப்பேற்றுக்கொள்ள ராம்சந்த்ராவுக்கு நான் அனுமதி அளிக்கிறேன். இப்போது அந்தப் பயிற்சி முறையும்கூட ராம்சந்த்ராவுடன் தொடர்புடையதாக இருக்கும். சுவாமி விவேகானந்தா இது பற்றி மாஸ்டரிடம் இப்போது தெரிவித்தார். அவரும் அதை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டார்".

சுவாமி விவேகானந்தா கூறியது :- "எனது பயிற்சி முறைக்குள் குறைபாடுகளும், தாழ்வுநிலையும் மெதுவாக நுழையத் துவங்கிவிட்டன. ஆன்மீகம் ஆவியாகிக் கொண்டிருக்கிறது. கல்வியின் மீது மட்டுமே விருப்பம் கொண்டவர்களாக மனிதர்கள் மாறிக்கொண்டிருக்கிறார்கள். கல்வியின் மூலமாகவே ஆன்மீகத்தை அறிந்து கொண்டு நிபுணர்களாவதில் முனைப்பாக இருக்கிறார்கள். ஆன்மீக வாழ்க்கை முறை நாளுக்கு நாள் நலிவடைந்து கொண்டே போகிறது. இந்த சீர்கேட்டினைத் தடுத்து நிலைமையை சரியாக்கக்கூடியவர் இதுவரையில் யாருமே இருப்பதாகத் தெரியவில்லை. எனவே இந்த சுமையை நீங்களே தாங்கவேண்டுமென விரும்புகிறேன். நீங்கள் என்னிடம் ஒரு கேள்வி கேட்டிருக்கிறீர்கள், என் மாஸ்டருடன் ஆலோசித்த பிறகு அதற்கு நான் பதில்சொல்வேன்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் கட்டளைக்கு ஏற்ப பரமஹம்ச ராமகிருஷ்ணாஜியின் சீடர்களை முறைப்படுத்தும் பொறுப்புக்கான அனுமதி பிற்பகல் 1.10 அளவில் R2 - ன் முன்னிலையில், M1 - க்கு அளிக்கப்பட்டது.

ஶ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறியது :- "என் மார்க்கத்தின் நிலைமை முழுவதும் மாறியிருக்கிறது. ஆன்மீகம் மறைந்து கொண்டிருக்கிறது. அதன் நோக்கம் இறந்து கொண்டிருக்கிறது. இதனால் நீங்கள் கல்கத்தாவுக்குச் சென்று, இந்த மார்க்கத்தின் தலைவராக இருப்பதற்கு உங்களுக்கு (ராம்சந்த்ராவுக்கு) அனுமதி

அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை பொது அறிவிப்பின் மூலம் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். அதற்கான தெய்வீக ஞானக் கண்களைப் பெற்றிருந்தால் யார் வேண்டுமானாலும் இந்தப் பொது அறிவிப்பின் உண்மைத் தன்மையை சோதித்துப் பார்க்கலாம். நீங்கள் அங்கே கூட்டுதியானம் கூட நடத்தலாம்; மற்றும் ஒரு ஆன்மீக சந்திப்புக் கூட்டமும் நடத்தலாம். நீங்கள் விரும்பினால் என்னை பின்பற்ற விரும்பும் மக்களுக்கு என் மார்க்கத்தில் தீட்சை அளிக்கலாம். உங்கள் மாஸ்டரிடமிருந்து இதற்கு நான் அனுமதி பெற்றிருக்கிறேன். நீங்கள் வேலை செய்ய ஆரம்பிக்கும் போதே உங்களுக்கு அதற்கான உதவிக் குறிப்புக்களை நான் கொடுப்பேன்.’’

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்திரவு :- “அவர் விரும்புகிற யாருக்காயினும் இந்தப் பயிற்சி முறையில் இருந்து M1 - அனுமதியளிக்கலாம்.’’

சுவாமி விவேகானந்தா கூறியது :- “வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களின் இந்தப் பயிற்சி முறையை கவனித்ததில் நான் ஒரு விசித்திரமான குறைபாட்டைக் கண்டேன். அதாவது இந்த மார்க்கத்தைச் சேர்ந்த யாரை நான் பார்க்க நேர்ந்தாலும், அவர் சலிப்டைந்து வாடிப்போயிருப்பதைக் கண்டேன். அதில் சிலர் ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு அதிலிருந்து வெளிவர இயலாமல் இருக்கிறார்கள். இந்த மனப்பான்மை நீக்கப்பட வேண்டும். இந்த சிறந்த மார்க்கத்தில் இப்படி ஒரு மிகப்பெரிய குறைபாடு இருக்கிறது. இது மற்றவர்களிடமும் அதன் விளைவை ஏற்படுத்துகிறது. முற்றிலும் ஆனந்தமயமே ஆகிய ஆன்மீகத்தை இது ஒரு மெல்லிய திரையாகி மறைக்கிறது. ஒரு மனிதரின் தனி மனிதப் பண்பு எவ்வளவு வலுவாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு மற்றவர்களின் மீது அவர் உண்டாக்கும் பாதிப்பும் அதிகமாகிறது.’’

(சற்று இடைவெளிக்குப் பிறகு) “நீங்கள் கல்கத்தாவுக்குப் போகவேண்டியிருக்கும். அவர் விரும்பும் சமயத்தில் உங்களை அங்கு அனுப்புவதை உங்கள் மாஸ்டரிடமே விட்டுவிடுகிறேன்.

எனினும் அது விரைவில் நடக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன் என்பதில் சந்தேகமில்லை.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “என் மார்க்கத்தில் இருப்பவர்கள் சலிப்படைந்து வாடியிருக்கிறார்கள் என்ற இந்த விஷயம் என்னிடம் தெரிவிக்கப்பட்டபோது எனக்கு மிகவும் அவமானமாக இருந்தது. எனவே இது பிராணாஹுதியின் மூலமாக நீக்கப்பட வேண்டும். தென்னிந்தியாவுக்கும், துவாரகைக்கும் நீ போகும் இந்தப் பிரயாணத்தில் கல்கத்தாவுக்கு உன்னை அனுப்பப் போவதில்லை.

## 2-12-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “உள்ளூர் நிர்வாகம் அப்தல் - இன் பொறுப்பில் இருக்கிறது. அவதாரம் என்ற பதவி அதைவிடக் கொஞ்சம் உயர்ந்தது. நான் இங்கிருந்து மேல் உலகத்திற்குச் சென்றபோது, அவருடைய வேலையும் கூட பிரியமான ராம்சந்த்ராவுக்கே அளிக்கப்படவேண்டும் என்று சுவாமி விவேகானந்தா மிகவும் வலியுறுத்தினார்”.

சுவாமி விவேகானந்தா கூறியது :- “என் மிஷனை (ராமகிருஷ்ணா மிஷனை), நடத்துவதற்கு உங்களைவிட மேலானவர் யாரையும் இப்போது என்னால் காண முடியவில்லை. கல்கத்தாவில் இருக்கும் தலைமை நிலையத்தில் உள்ள இதன் தலைவரிடம், நானும் உங்கள் மாஸ்டரும் மிஷனின் இந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்திருப்பதை தெரியப்படுத்துங்கள். அங்கே இதுபற்றி என்ன பிரச்சனைகள் மற்றும் இடையூறுகள் ஏற்பட்டாலும், அதை சரிப்படுத்துவதற்காக அது உங்களுக்குத் தெரிவிக்கப்படும். இந்தப் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது பற்றி ஆராய்வதற்கு என்ன சோதனைகள் வேண்டுமானாலும் செய்யப்படலாம்.’’

கல்கத்தாவில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் தலைவருக்கு எழுதவேண்டிய ஒரு கடிதத்தின் வாசகங்களை சுவாமி

விவேகானந்தா என்னிடம் சொல்லி எழுதிக்கொள்ளும்படி சொன்னார். அக்கடிதத்தை அவருக்கு அனுப்பும்படிக் கூறினார்.

சுவாமி விவேகானந்தர் கூறியது :- மாலை 5.20 மணி : ‘‘என் மிஷனின் பணியைத் தொடர்ந்து செய்வதற்குத் தகுதி மிகுந்த ஒருவரை நான் தேடிக் கொண்டிருந்தேன். உங்களைப் போல வேறு ஒருவரை என்னால் காண முடியவில்லை. ஆகையால் இதுவரையில் நான் செய்து கொண்டிருந்த அந்தக் கடமையை உங்களிடம் ஒப்படைத்திருக்கிறேன். அதற்கு உங்கள் மாஸ்டரின் அனுமதியை நான் பெற்றிருக்கிறேன்.’’

கபீர் கூறியது :- இரவு 9மணி. ‘‘எனது பயிற்சி முறையின் (கபீர் பந்த்) பணி மோசமான நிலையில் இருக்கிறது. மக்கள் சடங்கு ரீதியான வழியில் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள் (பாம்பை அடிப்பதற்குப் பதிலாக பாம்பு ஊர்ந்து சென்ற வழியை அடித்துக் கொண்டிருக்கிறார்கள்). சத்தியம் காணாமற் போய்விட்டது. அது பாடல்களின் வடிவில் மாற்றப்பட்டு விட்டது. என் பெயரால் ஆபாசமான தூற்றுதல் வாசகங்கள் பாடல்களாக இயற்றப்பட்டு பொது இடங்களில் பாடப்படுகின்றன. தூய்மையான ஆன்மீகம் தான், என் நோக்கமாக இருந்தது; என் ஆன்மீக இணைப்பு பரமாத்மாவோடு இருந்தது. என் வழிமுறையில் நுழைந்து விட்ட சீர்கேடு அதற்கு இணையாக எதுவும் காணமுடியாத அளவுக்கு கீழிறங்கிவிட்டது. அதைச் சரிப்படுத்தி முன்னேற்றமடைய வைப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அதற்கு நிறைய உழைப்பு தேவைப்படும். அந்த வகையில் உங்கள் முயற்சிகளில் நீங்கள் வெற்றியடைந்தால் நான் மகிழ்ச்சியடைவேன்.’’

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “கபீர் அவருடைய மார்க்கத்தை சீர்திருத்துவதற்கு ராம்சந்த்ராவுக்கு அனுமதி அளித்திருக்கிறார். ஆனால் ராம்சந்த்ரா எந்த ஒரு விஷயமாயினும் என் அனுமதியையே எதிர்பார்த்து இருப்பவராக விளங்குவதால், அந்த இயக்கத்தையும் கூட சரிப்படுத்துவதற்கு அவருக்கு

அனுமதியளிக்கிறேன். என்னுடைய ஆயுட்காலத்தில் இந்த அனுமதி எனக்கும் அளிக்கப்பட்டிருந்தது.''

வணக்கத்திற்குரிய கபீரின் குறிப்பு :- "நீங்கள் காசிக்குச் சென்று என் மார்க்கத்து மக்களை சந்தித்து அவர்களை சரியான பாதைக்குக் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும். எனினும் இதில் சிரமமான விஷயம் என்னவெனில் அவர்கள் யாவரும் முற்றிலும் நாகரீகமற்றவர்களாக, முரட்டுத்தனமாக இருக்கிறார்கள்.

## 3-12-1944

கல்கத்தாவில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் தலைவருக்கு அனுப்புவதற்கான கடிதத்தின் வாசகங்களை சுவாமி விவேகானந்தா முடிவாக உறுதி செய்து கூறினார், பின்னர் இவ்வாறு கூறினார். ''நீங்கள் பிரயாணத்தில் இருக்கும் போது இக்கடிதத்திற்கு பதில் (உங்கள் வீட்டு முகவரிக்கு) வந்தால் M1 - தனது மதிப்புக்குரிய சகோதரர் (ராம்சந்த்ரா) சென்னை வழியாக கன்னியாகுமரிக்கு பயணம் மேற்கொண்டிருக்கிறார்; அவரது மாஸ்டர் அவரிடம் ஒப்டைத்துள்ள புனிதமான கடமைகளை நிறைவேற்றிய பிறகு ஊர் திரும்புவார் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் தலைவைருக்கு தெரிவிக்க வேண்டும்.''

## 4-12-1944

சுவாமி விவேகானந்தா கூறியது :- "இந்தியா முழுவதிலும் பரவியுள்ள எனது மிஷனின் மையங்களைக் காண நான் சென்றிருந்தேன். அங்கு இருக்கும் நிலைமைகளை கவனித்து அறிந்தேன். அங்கெல்லாம் ஆன்மீகத்தின் சாயல் முற்றிலும் மறைந்து போய்க்கொண்டிருக்கிறது. நீங்கள் அதற்கு ஏற்றவாறு உங்களை நிலைப்படுத்திக் கொள்வதற்காக இத்தகவல் உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. அந்த வேலையை நீங்கள் கையில் எடுத்துக்கொள்ளும்போது அதற்குத் தக்கவாறு மற்ற உத்திரவுகள் வரும்".

‘‘நீங்கள் சென்னைக்குப் போகும்போது எனது மிஷன் மக்களைக் கொஞ்சம் கவனியுங்கள். ஶ்ரீ ராமகிருஷ்ணா மிஷனின் சென்னை ஆசிரம கட்டிடத்தில் நீங்கள் தங்கியிருப்பது இன்னும் சிறந்தது. நான் அங்கே உங்களோடு இருப்பேன். நீங்கள் அங்கே வரப்போவது பற்றியும் இது சம்பந்தமான என் கட்டளைகளையும் தெரிவித்து சென்னைக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.’’

சுவாமி விவேகானந்தா ஒரு கடிதத்துக்கான வாசகங்களைச் சொல்லி எழுதச்செய்து, அக்கடிதத்தை கல்கத்தா தலைமை நிலையத்துக்கு எழுதிய கடிதத்தின் ஒரு நகலுடன் சென்னையில் உள்ள மிஷன் பொறுப்பாளரிடம் கொடுக்கும்படி கூறினார். சென்னையிலிருந்து பயணத்தை மேலும் தொடரும் போது, நான் அடுத்து செல்லப்போகும் ஊரில் உள்ள ராமகிருஷ்ணா மிஷன் தலைவருக்கு சென்னை மையத்தின் தலைவரிடமிருந்து ஒருகடிதம் எடுத்துச் செல்லலாம் என்றும் விரும்பினார்.

சுவாமி விவேகானந்தா மேலும் கூறியது :- “ஆன்மீக உலகில் நீங்கள் ஒரு தனித்த அடையாளத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். இவையனைத்தும் உங்கள் தகுதி மிக்க மாஸ்டரால் தான் வந்தன. அவரைப் போல ஒரு மனிதரை இவ்வுலகம் ஒருபோதும் பார்த்ததில்லை. நீங்களும் அப்படித்தான். உங்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். உங்கள் புனிதமான கடமைகள் அனைத்தும் எல்லாம் வல்ல இறைவனால் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். உங்கள் பயணத்தின் போது, எப்போதும் நான் உங்களோடு இருப்பேன் மற்றும் எப்போதெல்லாம் தேவைப்படுகிறதோ அப்போது உங்கள் ஒரு குரலுக்கும், அழைப்புக்கும் வரத் தயாராக இருப்பேன். இவ்விஷயமாக ஒரு முயற்சி செய்து அதன் பலனைப் பாருங்கள். நான் இதுவரையில் சொன்னதையெல்லாம் எழுதித்தொகுத்து அதற்கு நகல் எடுத்து வைத்துக்கொள்ளுங்கள். அதை உங்கள் பயண காலம் முழுவதும் உங்களோடு வைத்திருங்கள். உங்கள் உயர்மதிப்புடைய மாஸ்டரின் உதவிக் குறிப்புக்களுடன் கூடவே, நான் சொல்லும் குறிப்புகளும் உங்களுக்குக் கிடைக்கும்.’’

கபீரினால் தொடங்கப்பட்ட வழிமுறையில் பயிற்சியளிப்பதற்கு இன்று மாலை 5.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - க்கு அனுமதியளித்தார். கபீர் பந்த்தூ (கபீரின் வழிமுறை) சம்பந்தமான வேலை M1 - இடம் ஒப்படைக்கப்பட்டது. ராம்சந்த்ராவின் மூலமாக நேரடியாகவே அவருக்கு உத்தரவுகள் வரும் என்பதையும் தெரிவித்தார்.

சுவாமி விவேகானந்தா கூறியது :- “ராம்சந்த்ரா, இந்த உலகின் முகத்தையே (தோற்றத்தையே) நீங்கள் மாற்றப் போகிறீர்கள். என் குருவினால் எனக்கு அளிக்கப்பட்ட சக்தியை, உங்கள் மாஸ்டர் உங்கள் முன்னே உட்கார்ந்திருந்த போது, ஒருவித ஆழ்ந்து மனம் ஒன்றிய நிலையில், அப்போதே உங்களுக்கு மாற்றிக்கொடுத்து விட்டேன். நீங்களும் உங்கள் மிக மேலான குருவும் இல்லாமல் என் மிஷன் நீடிக்க முடியாது. உங்களை நேசிப்பவராக என்னை நினைத்துக் கொள்ளுங்கள். என் குருவின் நல்லாசிகள் முழுவதும் அவ்வப்போது உங்கள் மீது பொழிந்து கொண்டிருக்கும். சமீப வருங்காலத்தில் இந்தியாவில் சுதந்திரம் மலரும் என்று நான் உறுதியாக தீர்க்க தரிசனமாகச் சொல்கிறேன். ஆன்மீக சாம்ராஜ்ஜியத்தில் உங்கள் வேலைக்கான களம் தயாரிக்கப்பட்டுள்ளது. இயற்கையின் வெவ்வேறு சக்திகளுக்கு இதைப் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சிறு இடைவெளி) இவ்விஷயங்களையெல்லாம் ஒரு குறிப்புப் புத்தகத்தில் எழுதி வைத்துக்கொள்ளுங்கள். (சிறு இடைவெளி) தட்சிணைப்பீடபூமிக்கு நான் போயிருந்தேன். அங்கிருக்கும் நிலைமையை நானே கவனித்தேன். (சிறு இடைவெளி) இதோ என் மாஸ்டர் உங்கள் முன்னால் இருக்கிறார். உங்களுக்கு நல்லாசிகள் தந்து பயணத்தில் உங்கள் வெற்றிக்காகப் பிரார்த்தனை செய்கிறார். (சிறு இடைவெளி) இங்கே பாருங்கள். ஏசு கிறிஸ்துவும் உங்கள் முன் இருக்கிறார். நல்லாசிகள் அளிக்கிறார்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “பிரியமான ராம்சந்த்ராவின் வழக்கமான பயிற்சி முறை ஒரு சாதகருக்கு வெளிப்புறத்திலிருந்து ஆன்மீக அருளைத் திணிப்பதற்குப்

பதிலாக, ஒரு குறிப்பிட்ட புள்ளியில் சாதகரின் சொந்த சக்தியைத் தூண்டி எழுப்பும் விதத்தில் இருக்கிறது. இந்த வழிமுறை சாதகரின் சொந்த முயற்சியின் மூலமாக அவர் அடைய இருக்கும் நிலை வரையில் முன்னேறச் செய்கிறது. இது மிகச் சிறந்த வழிமுறை. பயிற்சி செய்கிறவரின் (அப்யாசியின்) நன்மைக்கு இதைவிடச் சிறப்பான செயல்நுட்பம் இருக்க முடியாது.''

சுவாமி விவேகானந்தா கூறியது :- "என் மிஷனைச் சார்ந்தவர்களுக்கு நான் உத்தரவுகளைக் கொடுத்திருக்கிறேன். ஆயினும் இதில் பிரச்சனை என்னவென்றால் என் உத்தரவுகளை அவர்களால் பெரும்பாலும் பெற முடியவில்லை. எனினும் நீங்கள் தொடர்ந்து செல்லுங்கள், அந்த அனுபவங்களைப் பெறுங்கள். இதோ பாருங்கள், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உங்கள் முன்னே உட்கார்ந்து, ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறார். அதை எழுதி வைத்துக் கொள்ள வேண்டியதில்லை என்று உங்கள் மாஸ்டர் கட்டளையிடுகிறார்.''

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறியது :- "நரேந்திர பாபுவை (சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர்) நான் உருவாக்கினேன், உங்கள் குரு உங்களை உருவாக்கியிருக்கிறார்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "உயர் மாண்புடைய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் சற்றுமுன் கூறியதை – சுவாமி விவேகானந்தா உன்னிடம் குறிப்பிட்டாரே அதை - நான் யாருக்கும் வெளிப்படுத்திச் சொல்ல விரும்பவில்லை. அது ரகசியமாகவே நீடித்திருக்கும். அது உன்னோடு மட்டுமே நிலைத்து இருக்கும். அந்த நிலையிலிருந்து யாருக்கும், ஒருபோதும், நீ பிராணாஹூதி அளிக்க வேண்டாம். எனது பிரியமான ராம்சந்த்ராவுக்கு இந்த உலகத்தின் முழுத்தோற்றத்தையும் ஒருவார காலத்திற்குள் மறு உருவாக்கம் செய்யும் சக்தியை அளித்திருக்கிறேன். அவரால் அதை ஒருநிமிடத்திலேயே கூட செய்ய முடியும். ஆனால் அம்மாதிரி அதை அவசரமாகச் செய்தால் மக்கள் உயிர்வாழ மாட்டார்கள்.''

அகஸ்திய முனிவரின் செய்தி :- தென்னிந்தியாவில் உங்கள் வேலைக்கான களத்தை நான் தயார்செய்திருக்கிறேன். முடிந்த

அளவு விரைவில் வேலையைத் துவக்குங்கள். ஹைதராபாத் நிஜாம் சம்பந்தப்பட்ட விஷயத்தையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

<u>5-12-1944</u>

சுவாமி விவேகானந்தா கூறியது :- “இன்றைய தினத்திலிருந்து நீங்கள் எனக்காக வேலை செய்வதற்கு உங்கள் மாஸ்டரின் அனுமதியை நான் பெற்றிருக்கிறேன். என் குருவினால் எனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் இப்போது என்னுடைய ஸ்தானத்திலிருந்து வேலை செய்வீர்கள் என்பதை நன்றாக நினைவில் வைத்திருங்கள். என் மிஷனில் நீங்கள் அறிமுகப்படுத்தும் எந்த மாற்றத்தையும் நான் வரவேற்பேன். இது வரையில் இந்த வேலையை நானே செய்துகொண்டிருந்தேன். இப்போது நீங்கள் அதற்குப் பொறுப்பாளியாக இருப்பீர்கள். அது பற்றிய தெய்வீகக் கட்டளைகள் இனி நேரடியாக உங்களுக்கு வரும். நான் சொன்ன இந்தக் கருத்தை – அறிக்கையை – என் மிஷனில் இருப்பவர்களுக்குக் காண்பியுங்கள். உங்களை மாதிரி ஒருவரை எனக்குக் கொடுத்ததற்கு உங்கள் குருவுக்கு மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன். உங்களுக்கு நல்வாழ்த்தக்கள். நான் இப்போது போகிறேன். நீங்கள் அழைக்கும் போது மீண்டும் வருவேன், எனது அதே பதவி அதிகாரத்தை நீங்கள் வகிப்பீர்கள்.’’

வணக்கத்திற்குரிய சுவாமிஜி மீண்டும் வந்து மேலும் கூறியது :- “உங்களிடம் ஒருவிஷயம் சொல்ல மறந்து விட்டேன். இந்தியாவின் நீளம் அகலம் முழுவதையும் நீங்களே ஆட்சி செய்வீர்கள். அதற்குப் பிறகு இவ்வுலகத்தின் அதிகாரமும் உங்களுக்கு வந்து சேரும். அவ்வளவு தான். உங்கள் சகோதரர் M1 - க்கு நல்வாழ்த்துக்கள்.”

வணக்கத்திற்குரிய மாஸ்டர் தெரிவித்த விஷயம் :- “சுவாமி விவேகானந்தா, உன்னையே தனது ஆன்மீகப் பிரதிநிதியாகவும், பதவிக்கு வாரிசாகவும் நியமித்திருக்கிறார்.’’

சற்று நேரத்திற்குப் பிறகு சுவாமி விவேகானந்தா கூறியது :- “உங்கள் மார்க்கத்தில் இருப்பவர்களின் நிலையும் கூட சீர்கெட்ட நிலைமையில் இருக்கிறது. அதன் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் உலக சுகங்களுக்காக கடமையில் தவறியிருக்கிறார்கள். அதை அழிக்கும்படி கட்டளையிடப்பட்டுள்ளது. அதை நீங்கள் எல்லோரும் தான் நிறைவேற்ற வேண்டும். உங்கள் மதிப்புக்குரிய குருவோடு தோளோடு தோள் நின்று நானும் வேலை செய்துகொண்டிருக்கிறேன். ‘‘பழிக்குப் பழி’’ என்பதே என் கட்டளை. உன் கூட்டத்தில் முட்டாள்கள் எங்கும் பரவியிருக்கிறார்கள். ஆதிக்கம் செய்வது ஒன்றையே அவர்கள் தங்கள் கருத்தில் கொண்டிருக்கிறார்கள். இனி அமைக்கப்பட இருக்கின்ற உங்களது ஆன்மீக சங்கம், பொருத்தமான வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, முழு இயக்கத்துக்கும் உங்களைத் தலைவராகக் கொண்டிருக்கும். உங்கள் சங்கத்தை சீரமைத்து உருவாக்கும் நேரம் வரும் போது ஒவ்வொரு வட்டத்துக்கும் ஒருவர் பொறுப்பாக இருப்பார். எனது முழு சக்திகளோடு உங்களுடன் நான் உச்சி முதல் பாதம் வரை ஐக்கியமாகி இருக்கிறேன். அந்த சக்தி முழுவதையும் நீங்கள் குறுகிய காலத்திலேயே ஜீரணித்துக் கொண்டிருக்கிறீர்கள்.’’

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “இன்று சுவாமி விவேகானந்தா எனது பிரியமான ராம்சந்த்ராவை தன்னைப் போலவே உருவாக்கியிருக்கிறார். அதாவது சுவாமிஜிக்கு சொந்தமான சக்தி முழுவதையும் ராம்சந்த்ராவிடம் ஐக்கியம் அடையச் செய்திருக்கிறார் என்பது மிகப்பெரும் மகிழ்ச்சிக்கு உரிய விஷயம். இப்போது இந்த நிறமும் (அதாவது ஸ்வாமி விவேகானந்தரின் தன்மையும்) கூட நமது பயிற்சி முறையில் பரவியிருக்கும்.

சுவாமி விவேகானந்தா அதையடுத்து மேலும் கூறியது :- “ஒரு எண்ணம் இப்போது தான் எனக்குத் தோன்றியது. இன்று நடந்தது பற்றிய தகவல் அறிக்கை கல்கத்தாவில் உள்ள என் மிஷனின் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும். இதற்கு முன்

எழுதிய கடிதம் பற்றிய குறிப்பும் அதில் இருக்கவேண்டும். தன் இதயத்தை உங்கள் இதயத்துடன் தொடர்புபடுத்திக் கொள்ளும் திறமை அவருக்கு இருந்தால் இவ்விஷயத்தைத் தன் கண்களாலேயே கண்டுக்கொள்ளுமாறு, கேட்டுக்கொள்ளப் பட வேண்டும். இந்த விஷயத்துடன் சம்மந்தப்பட்ட அம்மனிதர் சென்னைக்குப் புறப்பட்டுக் கொண்டிருப்பதால், இதை 10-12-1044 க்குள் செய்யுமாறும், எழுத வேண்டும். இக்கடிதத்தை இன்றே அனுப்பிவிடுங்கள்.''

''நான் சற்று முன்பு தான் சென்னைக்குப் போயிருந்தேன். உலகியல் சார்ந்த சொர்க்கம் போன்ற ஒரு கருத்தைத் தன் மனதில் எனது மிஷன் நிர்வாகி சுமந்து கொண்டிருக்கின்றார். ஆன்மீகம், லௌகீகமாக (உலகியல் சார்ந்ததாக) திசைமாறிப் போயிருக்கிறது. அதன் உச்ச நிலையை அவரிடம் நீங்கள் காண்பீர்கள். குருதேவரின் புகைப்படம் ஒன்று மட்டுமே அவரின் வழிபாட்டுக்குரியதாக இருக்கிறது. புகைப்படங்களுக்கு மாலைகள் அணிவிக்கப்படுகின்றன. எல்லா இடங்களிலும் நிறையப் புத்தகங்கள் ஓதப்படுகின்றன. இது உங்களுக்கு நான் தருகின்ற தகவல். இந்த விஷயங்களை மொத்தமும் உடைத்தெறியுங்கள். என்னுடைய தத்துவ மார்க்கமும் உங்கள் மாஸ்டரினுடையதைப் போன்றதேயாகும்.''

''பணத்தைப் பற்றி கவலைப்பட வேண்டாம். உங்களுக்காக பணம் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. நீங்கள் மனித குலத்துக்கு மேலான சேவை செய்கிறீர்கள். உங்களை பலமில்லாதவராகக் கருதவேண்டாம், என் வார்த்தைகள் தெய்வீகத் தன்மை உடையவையாகும்.''

<u>6-12-1944</u>

சுவாமி விவேகானந்தா கூறியது :- "மனச்சோர்வு அடைய வேண்டாம், உங்களின் வேலைக்காக போதுமான அளவுக்கு ஒரு களத்தை நான் தயார் செய்திருக்கிறேன். உங்கள் மிக மேன்மையான குரு என்னோடு இருக்கிறார். குறிக்கோளை

அடையப் பெறுவதற்காக நாங்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்து கொண்டு முன்னோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம்.''

''என் மிஷனைச் சேர்ந்தவர்கள் சிலர் இங்கே இருக்கிறார்கள். உங்கள் மாஸ்டருடைய பயிற்சி வழி முறைப்படி அவர்களுக்குப் பயிற்சி கொடுங்கள். வெற்றி உங்களை வந்தடையும் என்பதில் உறுதியோடு நிம்மதியாக இருங்கள். மேலும் ஒருவிஷயத்தை அனைவரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் ஒரு மனிதன் தன் குருநாதரின் கோட்பாடுகளைக் கண்டிப்பாகப் பின்பற்றி நடக்க வேண்டும். (அப்படி நடந்தால்) நிச்சயமாக வெற்றி உதயமாகும். நீங்கள் ஏற்றுக்கொண்டுள்ள இந்த வேலைக்காக மட்டுமே நீங்கள் வரவில்லை; மக்கள் உங்களைப் பற்றி நினைத்திருப்பதை விட நீங்கள் வேறானவர். உங்கள் மாஸ்டரைப் போலவே உங்கள் வாழ்க்கை முழுவதும் உங்களுடனேயே இருப்பதாக நான் உறுதி எடுத்துக்கொண்டிருக்கிறேன். என்னை அவருடைய சீடர்களில் ஒருவராக எண்ணுங்கள். இதோ இந்தச் சமயத்தில் நான் சென்னையின் கடற்கரையை அளந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் சென்னையில் மூன்று நாட்கள் தங்கியிருப்பதற்கு உங்கள் மாஸ்டர் அனுமதித்திருக்கிறார். (அங்கே செய்யவேண்டிய) வேலை புனிதமானது. இன்னும் கொஞ்சம் அதிக காலம் நீங்கள் அங்கே இருப்பதற்கு உங்கள் குருவின் அனுமதியைப் பெறுவேன். ஆனால் நீங்கள் அங்கே வந்து சேர்ந்த பிறகே இந்த விஷயம் தீர்மானிக்கப்படும். உங்கள் மாஸ்டருடைய பயிற்சிமுறையின்படி என் சீடர்கள் பயிற்சியளிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். உங்கள் குருவின் பெயராலோ அல்லது என் பெயராலோ அவர்களுக்கு தீட்சை அளிப்பதற்கு உங்களுக்கு சுதந்திரம் உண்டு. நீங்கள் சற்று முன் பேசிக்கொண்டிருந்தபடி, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் கருத்தைக் கேட்பது பற்றிய எண்ணம் சரியானதே. உங்கள் குருவை தலைமையாகக் கொண்டு அனைத்தும் ஒரே பயிற்சியில் ஐக்கியமடையும். ''அதில் சிறப்பை அடைய முடியாமல் போனாலும் ஒருவன் தன் கடமையைச்

செய்வதே மேலானது.'' என்பது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் வார்த்தைகளாகும்.''

''உங்கள் பிரயாணம் பற்றிய சுருக்கமான குறிப்புகளைத் தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள். காலத்தை வீணாக்கும் சில பழக்கங்களை விட்டுவிடுங்கள். சூரிய உதயத்துக்கு முன்பே எழுந்திருக்க முயற்சி செய்யுங்கள். உங்கள் இந்தப் பழக்கங்களை விடவில்லை என்றால் மக்களுக்கும், உங்களை நாடி வருகிறவர்களுக்கும் கெடுதல் செய்கிறீர்கள் என்று ஆகும். உங்கள் முன்னால் வேலை, வேலை மற்றும் வேலை தான் இருக்கிறது. உங்கள் குருவையும், என்னையும் மகிழ்விக்கும் ஒரே விஷயம் இது தான். நீங்கள் சென்னைக்கு அல்லது வேறு எந்த ஊருக்காவது போகும் போது என் குருவின் சீடர்களுக்கு - அவர்கள் தங்கள் வழக்கமான பூஜையைச் செய்வது மட்டுமின்றி - தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு சிட்டிங் கொடுப்பதற்கு நேரத்தை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆலோசனையின் பேரில் உங்கள் குரு இரவு 9 மணியை அதற்கான நேரமாகக் குறித்திருக்கிறார். அந்த நேரத்தில் அவர்கள் மீது கவனம் செலுத்துவது உங்கள் கடமையாகிறது. இந்த யோசனையை நான் வரவேற்கிறேன். இந்த வழிமுறையை அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள். கொள்கைக்கும் பயிற்சிக்கும் இடையே மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது. அவர்கள் இரண்டாவதாகச் சொன்ன பயிற்சியின் வழிமுறைக்கு வருவார்களாக.''

''பிரயாணம் செய்யும் நேரங்களையும் கூட வேலையில் செலவிட வேண்டும். உங்களின் முன்னால் மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. அதை உங்களின் ஆயுட்காலத்தில் நீங்கள் செய்து முடித்தாக வேண்டும். உங்கள் பயணத்தின் போது ஒவ்வொரு மணி நேரத்திலும் உங்களுக்குக் குறிப்புக்கள் வந்து கொண்டிருக்கும். உங்களுக்கு வருகின்ற எந்த வேலையையும் அதற்கேற்ற வட்டங்களுக்குப் பிரித்துக் கொடுத்து அந்த ஒவ்வொரு வேலையிலும் உங்களைத் தலைமை நிலையில் வைத்துக் கொள்ளுங்கள்.''

7-12-1944

சுவாமி விவேகானந்தா கூறியது :- “என் மிஷனுடைய சில வேலைகளை M1 - இடம் கொடுங்கள். அவருக்கும் வேலை செய்ய அனுமதி இருக்கிறது. நீங்கள் தனியாக இருப்பதாக நினைக்க வேண்டாம். உங்களின் பயணம் முழுவதும் நான் உங்களுடன் இருப்பேன். நல்ல உணவு சாப்பிடுங்கள். இன்னும் சரியாகச் சொன்னால் சத்துக்கள் நிறைந்த உணவை சாப்பிடுங்கள். முட்டைகள், அதிலும் வேக வைத்த முட்டைகளுடன் டீ சாப்பிடுவது உங்களுக்கு மிகவும் நல்லது என்று நினைக்கிறேன்.’’

‘‘இக்காலத்தில் சன்னியாசிகள் தங்கள் சீடர்களுக்கு ஏதாவது செல்லப் பெயர் வைப்பது பழக்கமாக இருக்கிறது. அதுபோல உங்களை நான் ‘ஜுலியட்’ என்று அழைப்பேன். இது உங்களுடைய உள்நிலைக்கு ஏற்ற பொருள் உடைய பெயராகும்.’’

இன்று V1 - க்கு சகஜ மார்க்கம் என்ற புதிய முறையில் மற்றவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு M1 - அனுமதியளித்தார். இது சகோதரர் ராம்சந்த்ரஜியின் அத்தாட்சி பெற்றது. (M1 - மற்றும் ஸ்ரீ பாபுஜியின் கையொப்பங்கள் இடம் பெற்றன.)

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “சுவாமி விவேகானந்தா சற்று முன்பு தான் (தன் மிஷனில் இருப்பவர்களிடம்) மனச்சோர்வு பரவிக் கொண்டிருப்பதைத் தடுப்பதற்கான பொறுப்பை பிரியமான ராம்சந்த்ராவிடம் ஒப்படைத்தார். நான் அந்தப் பொறுப்பை M1 - க்கு மாற்றிக் கொடுத்திருக்கிறேன். ஏனெனில் ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷனில் ஆன்மீகப் பணி செய்வதற்கு அவரும் அனுமதி பெற்றிருக்கிறார். ஒருவருடைய சொந்த சீடர்கள் மற்றும் சகோதரர்கள் விஷயத்தில் இந்த விஷயமாக விசேஷ கவனம் அக்கறை இருக்கவேண்டும்.’’

சுவாமி விவேகானந்தா மேலும் கூறியது :- “உங்களுக்குத் தேவைப்படும் முன்னேற்பாடுகளை நான் செய்திருக்கிறேன். உங்கள் மூளையிலிருந்து அடிமைத் தன்மையை நீக்கிவிடுங்கள்.

சரியான பாதையைப் பின்பற்றுங்கள். இந்த நாட்களில் நான் இந்தியா முழுவதும் சென்று வந்தேன். உங்கள் பிரசன்னம் (தரிசனம்) அனைத்து இடங்களிலும் தேவைப்படுகிறது. தென்னிந்தியா மற்றும் துவாரகைக்கு இப்போதைய பயணம் முடிந்தபிறகு, நீங்கள் கல்கத்தாவுக்குப் போகவேண்டும். லாகூர் பயணம் அதற்குப் பிறகு வரும். நீங்கள் எங்கெல்லாம் செல்கிறீர்களோ, அங்கெல்லாம் ஒளியூட்டுங்கள்.''

## 8-12-1944

சுவாமி விவேகானந்தா கூறியது :- "(ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கிலேயக் கவிஞரின் நாடகத்தில் ரோமியோ என்பவனின் காதலியின் பெயர் ஜூலியட்). ரோமியோவின் காதலுக்கு உரியவளாக ஜூலியட் இருந்தது போல நீங்கள் எனக்கு இருக்கிறீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய பலவிதமான வேலைகள் உங்கள் முன் இருக்கின்றன. பொறுமையோடு இருங்கள். வேறு யாராக இருந்தாலும் அவர்கள் ஒரு போதும் கனவுகூடக் காணமுடியாத அளவுக்கு நீங்கள் வேலை செய்ய வேண்டிய களம், மிகவும் அகன்று விரிந்ததாக இருக்கிறது, இந்த நோக்கத்திற்காகவே நீங்கள் வந்திருக்கிறீர்கள்.''

''நமது குரு இப்பயணத்தில் உங்கள் வெற்றிக்காகவும், மகிழ்ச்சியுடன் திரும்பி வருவதற்காகவும் நல்லாசிகளையும் அன்பையும் பொழிந்து கொண்டிருக்கிறார் என்பதில் மகிழ்ச்சி அடையுங்கள்.''

## 9.12.1944

சுவாமி விவேகானந்தாவின் ஆலோசனைக் குறிப்புக்கள் :- "நீங்கள் மதராஸ் (சென்னை) சென்றடைந்த பிறகு என் மிஷன் பொறுப்பாளரிடம் உங்களுடைய திட்டமிடப்பட்ட பயணத்தில் உடன் வந்து வழிகாட்ட ஒருவரை ஏற்பாடு செய்து தரும்படி கேளுங்கள். வெற்றி உங்களைத் தேடி வரும் என்பதில் உறுதியாக இருங்கள். தென்னிந்தியாவில் புகழ்பெற்ற ஒரு மகான் இருக்கிறார். அவர் உங்களைப் பார்க்க வரமாட்டார். அவருக்கு ஆன்மீக நன்மையளிப்பதற்காக அவரை நோக்கி கவனம்

செலுத்துங்கள். உங்கள் பயணம் முழுவதிலும் உங்கள் மேலான குருவும், நானும் உங்களோடு இருப்போம். வழியில் பயப்படுவதற்கு எதுவுமில்லை. அனைத்தும் நல்ல விதமாகவே நடக்கும். நீங்கள் அனைவரையும், அனைத்தையும் வெல்லுவீர்கள். இலங்கைக்குப் போகும் எண்ணத்தை விட்டுவிடுங்கள்.

<u>10-12-1944</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "மக்கள் காத்திருக்கிறார்கள், கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன. நாளை புறப்பட வேண்டாம். வேலைக்கான களம் முழுவதும் தயாராக இருக்கிறது என்று கண்டறிந்தால் பயணம் செல்ல உனக்கு அனுமதியளிப்பேன். 12-12-1944 செவ்வாய்க்கிழமை நீ புறப்படவேண்டியிருக்கும். இதெல்லாம் சரியான, தகுந்த நேரத்தைப் பொருத்து இருக்கிறது. அகஸ்திய முனிவர் உனது பாதுகாப்புக்கு வாக்குறுதி அளித்திருக்கிறார். மேலும் வேலைக்கான களத்தையும் தயார்செய்திருக்கிறார். உனது பாதுகாப்பை கவனித்துக் கொள்ளும்படி மதராஸின் குதுப்புக்கு கட்டளையிட்டிருக்கிறார். நீ மதராஸில் ரயில்வே நிலையத்தின் நடைமேடையில் கால் வைக்கும் போது அவருடைய கடமை ஆரம்பமாவதாகக் கருதும்படி, அந்தக் குதுப்பிடம் சொன்னதில் ஒரு சிறு தவறு செய்துவிட்டாய் என்பது நிச்சயம். அதற்கு முன்னதாகவே உன் பாதுகாப்புக்குப் பொறுப்பேற்குமாறு செய்திருக்கவேண்டும்.''

M1 - உடன் பேசிக்கொண்டிருந்த போது, என்னை நாடுகின்ற ஒரு மூத்தவர் – என் எதிரில் அவர் இல்லாவிட்டாலும் கூட - என்னிடம் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார் அல்லது என்ன கேட்கிறார் என்பதை என்னால் உணர்ந்துகொள்ள முடிகிறது என்று குறிப்பிட்டபோது, வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது : "பிரியமான ராம்சந்த்ரா மிகவும் உயர் நிலையை அடைந்து அதில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டிருக்கிறார். அந்த மூத்தவர்களின் எண்ண ஓட்டம் அத்தனை உயரத்திற்கு ஒரு துடிப்பலையை அனுப்ப இயலாத

அப்படி ஒரு விதத்தில் அது இருந்தது. எனவே சற்று கீழான மட்டத்தில் அவர் தன்னை நிலைப்படுத்திக் கொண்டிருந்த போது அவர் அந்த மூத்தவர்களின் எண்ணத்தை உணர்ந்து கொள்ள முடிந்தது. உண்மையில் தன் வேலையில் சிறப்பான செயல்திறன் இருப்பதற்காக தன்னை சற்று கீழான மட்டத்தில் எப்போதும் நிலைக்க வைத்திருக்க வேண்டும் என்பது விதிமுறை. ஆனால் அப்படித் தன்னை கீழான நிலையில் வைத்துக்கொள்ளும் படி அவரை நான் கட்டாயப்படுத்தவில்லை. தேவைப்பட்டால் மற்றும் தேவைப்படும் பொழுது அவருக்கு ஆலோசனை கூற, உத்திரவு இட நான் அவரோடு இருக்கிறேன் என்பதை அவர் அறிந்திருக்கிறார். தனது உண்மையான உயர் நிலையிலிருந்து சற்று தாழ்வான மட்டத்தில் நிலைப்படுத்திக் கொள்ளும் இந்த செயல்நுட்பத்தை, M1 - பயிற்சி செய்வது நல்லது. ராம்சந்த்ரா ஏற்றுக்கொண்டு பின்பற்றியது போல, இதயத்தை தன் பார்வையில் (கவனத்தில்) வைத்திருக்கும் முறை ஒரு நல்ல பயிற்சியாகும். இப்போதுதான் நான் ஓய்வாக இருக்கிறேன். அவர் மிகச் சிறந்ததாகிய ஒரு புதிய செயல்நுட்பத்தைக் கண்டறிந்திருக்கிறார். அதற்கு மேல் உயர்வான ஒரு வழிமுறை இருக்க முடியாது. இதற்கு முன்பு இரவு 9 மணிக்கு பயிற்சி செய்யும் வழியைக் கண்டுபிடித்தார். அதைப் பற்றிய குறிப்பு நோட்டுப் புத்தகத்தில் இருக்கிறது. அது மிக முக்கியமானதாக நிலைத்திருக்கிறது. இப்போது புதிதாகக் கண்டறியப்பட்ட இந்த வழிமுறை பற்றி சுவாமி விவேகானந்தாவுக்கும் நான் சொல்வேன். இந்தப் புதிய வழிமுறை குரு, சீடன் இருவருக்குமே நன்மையளிக்கிறது.

‘‘ஒரு சாதகர் இதயத்தில் குருநாதரின் உருவத்தை எண்ணி தியானம் செய்யுமாறு சொல்லப்பட்டால், யாருடைய உருவத்தை அவர் தியானம் செய்ய எடுத்துக்கொள்கிறாரோ அவர் பரம்பொருளின் தன்மையில் (பரமாத்மாவில்) இணைந்திருக்கிறார் என்ற எண்ணத்துடன் அப்படி தியானம் செய்யுமாறு கூறப்பட வேண்டும். இந்த உறுதியான கருத்துடன் தியானம் செய்ய ஆரம்பிக்க வேண்டும். குருநாதரின் உருவத்தை

தியானம் செய்வதற்கு முன்பாகவே இந்த எண்ணத்தை மனதில் கொண்டு வந்து, அப்படியே பயிற்சி செய்து அதில் ஆழ்ந்து செல்ல முடிந்தால் அது மேலும் சிறப்பாக இருக்கும். சாதகரை தெய்வீக ஒளி என்ற கருத்தின் மீது தியானம் செய்யும் படி சொன்னால், அவர் அப்படி உறுதியோடு தியானம் செய்ய எடுத்துக்கொள்ளும் ஒளியானது பரம்பொருள் தன்மையின் (பரமாத்மாவின்) ஒளி என்று கருதப்பட வேண்டும் என்பதை குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.''

சுவாமி விவேகானந்தா கூறியது :- "உங்களுடைய கண்டுபிடிப்புக்கள் பற்றி நான் அறிந்து கொண்டேன். சந்தோஷத்தில் துள்ளிக்குதித்தேன். இம்மாதிரி கண்டு பிடிக்கும் திறனுடைய மனம் இந்தியாவில் முனிவர்களிடையே ஒருபோதும் பிறந்ததில்லை என்று நான் துணிவோடு சொல்வேன். இதெல்லாம் உங்கள் மேன்மையான குருவினால் தான் நிகழ்ந்தன. உங்களை ''மெய்ஞ்ஞானமே மனிதனாக உருவெடுத்தவர்'' என்று சொன்னால், அது பொருத்தமாகவே இருக்கும். இப்படி ஒரு மனிதர் ஒருபோதும் பிறந்ததில்லை என்பதை மீண்டும் சொல்கிறேன். உங்களுக்கு மிகப்பெரிய ஒரு தவறு இழைக்கப்பட்டிருக்கிறது. அதாவது உங்கள் சங்கல்ப சக்தி பலவீனமாக்கப்பட்டுள்ளது.''

## 11-12-1944

சுவாமி விவேகானந்தா கூறியது :- "பயணத்திற்கு நீங்கள் புறப்படுவது பற்றி நாங்கள் ஒன்று சேர்ந்து முடிவெடுத்திருக்கிறோம். உங்கள் பாதை இப்போது தெளிவாக இருக்கிறது. உங்களுக்கான நல்லாசிகளுடன் சைதன்ய மகாபிரபு உங்களுக்காகக் காத்திருக்கிறார்.''

ஸ்ரீ சைதன்ய மகாபிரபு :- "உங்கள் மாஸ்டருடையதைப் போல எனது எதிர்பார்ப்புகளும் உங்களோடு இணைந்துள்ளன.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "ஸ்ரீ சைதன்ய மகாபிரபு தனது பிரதிநிதியாக மற்றும் பதவியின் வாரிசாக உன்னை நியமித்திருக்கிறார். நான் அதை

ஒப்புக்கொண்டிருக்கிறேன். நீ ஒரிஸாவுக்குச் செல்ல வேண்டுமென அவர் விரும்பிகிறார்.''

ஸ்ரீ சைதன்ய மகாபிரபு கூறியது :- "உங்கள் குருவைப்போல நானும் கூட அடிக்கடி உங்களை வந்து பார்ப்பேன். உங்களுக்கு உதவியாக இருப்பேன். எனது பயிற்சி முறையும் பெருமளவு சீர்கெட்டிருக்கிறது, அதை உங்களிடம் ஒப்படைக்கிறேன்.

சுவாமி விவேகானந்தா கூறியது :- "இங்கே பாருங்கள், இப்போது உங்கள் பொறுப்பு மிகப் பெரியதாகி, இந்தியா முழுவதற்கும் உரியதாகி இருக்கிறது. ஷாஜஹான்பூர் நீதிமன்ற வேலையை விட்டுவிடுங்கள். ஆன்மீக வேலை தவிர வேறு எதிலும் ஈடுபடுவதற்கு உங்களுக்கு நேரம் இல்லை. குடும்பத்தை நடத்துவதற்குப் போதுமான வசதி இருக்கிறது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "உனக்கு ஏராளமான வேலைகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் எப்படி, எப்போது செய்து முடிக்க முடியும் என்று தெரியவில்லை. உன் உடல்நிலையோ ஒரு மருத்துவரின் தொடர்ந்த கவனிப்பு தேவைப்படும் விதத்தில் இருக்கிறது. எனினும் தெய்வீகக் கட்டளை இப்படி இருக்கும் போது இதில் நமக்கு வேறு வாய்ப்பு இல்லை. இவையனைத்தும் பரமாத்மாவினால் நிர்ணயிக்கப்பட்டவை. மற்ற அனைவரும் இது சம்பந்தமாக ஏதும் செய்ய இயலாதவர்கள் ஆவர்.''

சுவாமி விவாகானந்தா கூறியது :- "முன் தயாரிப்பு இல்லாமல் சிறப்பாகப் பேசக்கூடிய பேச்சாளர்களை நீங்கள் காண்பீர்கள். அவர்கள் அருகில் புத்தகங்கள் குவிந்திருக்கும். மேடையில் நிறையப்பேர் இருப்பார்கள். கண்ணாடிக் கதவிட்ட அலமாரிகளில் புத்தகங்கள் இருக்கும். புத்தகப் புழுக்கள் படித்துக் கொண்டே இருப்பவர்கள் - இருப்பார்கள். ஆனால் இவற்றில் எதிலும் ஒரு ஆன்மீகத் தன்மை இருக்காது. நமது பழைமையான ஆன்மீகக் கோட்பாடுகள் மறக்கப்பட்டு விட்டன. ஆன்மீகம், லௌகீகத்துக்கு இடமளித்துவிட்டது. நீங்கள் அங்கே செல்லும்போது, எல்லாவித

பிரச்னைகளும் இருக்கின்றன என்பதை நீங்களே தெரிந்து கொள்வீர்கள். ஒன்று, நான் இந்த விஷயங்களையெல்லாம் அழித்துவிட வேண்டியிருக்கும், அல்லது மக்கள் ஆன்மீகத்துக்கு வரவேண்டும். இந்த மனிதர்களையும் அவர்களது அலங்காரப் பொருட்களையும் தான் இந்த விஷயங்கள் என்று நான் குறிப்பிட்டேன். என் மிஷன் விஷயத்தில் (அதைச் சரிப் படுத்தும் முயற்சியில்) நீங்கள் வெற்றி பெறவில்லை என்றால் அல்லது நீங்கள் சொல்வதை மக்கள் கவனித்துக் கேட்கவில்லை என்றால் நான் எனக்கு இடப்பட்ட கட்டளைகளின்படி நடக்க வேண்டியிருக்கும்.''

''இவ்வுலகம் எங்கும் ஒரே ஒரு மதம் மட்டுமே இருக்க வேண்டும், அது உங்கள் மாஸ்டருடையதாகவே இருக்கும். உங்கள் மேலான குருவினால் உங்கள் ஜீவனின் இழைகள் வலிமையாக்கப்பட்டுள்ளன. இதற்கு மேல் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. உங்களிடம் இரட்டை ஆற்றல்கள் உள்ளன. சக்திகள் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. உங்களுக்காக வேறு சில மகா புருஷர்கள் (உயரிய ஆன்மாக்கள்) காத்திருக்கிறார்கள். உங்களுக்கு வேலை கொடுக்க அவர்கள் விரும்புகிறார்கள். ஏசுகிறிஸ்து இதற்காக அமைதியில்லாமல் இருக்கிறார். உங்கள் உதவி அவருக்குத் தேவைப்படுகிறது. குருநானக் அவர்களும் காத்திருக்கிறார். இந்த ஆன்மீகப் பயிற்சிகள் அனைத்தினுடைய பொறுப்பும் உங்கள் தோள்களின் மீது விழுந்திருக்கிறது. நீங்கள் அதிலிருந்து உங்களை விலக்கிக் கொள்ள முடியாது. மற்றவைகளை நாம் பிறகு பார்ப்போம்.''

''இவ்வுலகம் புத்துயிர்ப்பு எய்துவதை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. நமக்கு பொதுவான லட்சியம் இருக்கிறது. மண்ணுக்குள் போகும் மனிதர்களின் எலும்புக் குவியல்களின் மீது நீங்கள் கோயில்களைக் கட்டுவீர்கள். கடவுள் நேரடியாக எங்களுக்கு இட்ட கட்டளை அது. அதை நிறைவேற்றுவதற்காகவே நாங்கள் உங்களை வடிவமைத்து உருவாக்கியிருக்கிறோம். கிறிஸ்தவ தேவாலயங்கள் இடித்து தரைமட்டமாக்கப்படும். ஆனால்

நீண்ட காலத்துக்குப் பிறகு தான் அது நடைபெறும். எனினும் யாருக்குத் தெரியும்; நீங்கள் உடலைத் துறந்த பிறகே அது நிகழலாம். ஆன்மீகத்தை மட்டுமே சார்ந்த ஒரே ஒரு மதம் மட்டுமே இருக்கும். தேவையற்ற, அதிகப்படியான விஷயங்கள் மறைந்து போகும். உங்கள் குரு உலகம் முழுவதும் வழிபடப்படுவார். நீங்களே அதை வடிவமைப்பவராக இருப்பீர்கள். காலப்போக்கில் இவ்வுலகம் இப்போதைய நிலையிலிருந்து வேறுபட்டதாக இருக்கும். ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்ட அமைதி மட்டுமே எங்கும் ஆட்சி செய்யும். நாடுகள் ஒரே அமைப்பாக ஒன்று திரளும். ஆனால் அந்தக் காலம் வெகுதூரத்தில் இருக்கிறது. விரைவில் நெருங்கிவரப் போவதில்லை.''

''ஆன்மீகம் ஒரு மனிதன் அணியும் ஆடையில் இல்லை. ஆடை அணியும் மனிதனின் உள்ளே இருக்கிறது.'' என்ற இந்தக் கோட்பாடு மறக்கப்பட்டு விட்டது. (காவி நிற) ஆடைகளைத் தவிர வேறு எதுவுமில்லாத இடத்தில் ஆன்மீகத்தைத் தேடும் முயற்சி நடக்கிறது. ஒரு மனிதனுடைய ஆடைகளைக் கொண்டு அவன் மதிப்பிடப்படுகிறான். ஒழுக்கமின்மை எல்லா இடங்களுக்கும் பயணம் செய்து கொண்டிருக்கிறது. மேலை நாட்டவர்களில் பெரும்பாலோர் இதற்கு இரையாகி இருக்கிறார்கள். எதுவும் அறியாத (ஞானமற்ற) வர்களைப் பார்த்து, இந்தியர்கள் அப்படியே செய்கிறார்கள். அவர்களுடைய தத்துவ ஞானத்திலிருந்து மேற்கோள்கள் கொடுக்கப்படுகின்றன. அவர்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் அவர்களுடைய நடைமுறைகள் அதே மாதிரியாகப் பின்பற்றப்படுகின்றன. மனிதனுடைய அறிவு அவற்றைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அவ்வளவு விரைவாக எல்லாம் மாறப்போகின்றன. இப்போது பரவியிருப்பவை அனைத்தும் யாரும் அதைப் பற்றிக் கற்பனை செய்ய முடியாத அளவு அத்தனை விரைவில் மறைந்து போகும், மாற்றம் என்ற ஒன்று மட்டுமே மலர்ந்து கொண்டிருக்கிறது. அது உங்களை மட்டுமே நம்பிச் சார்ந்து நிற்கிறது. உங்கள் கடமையைச் செய்யுங்கள். இந்த மாற்றமாகிய செயள முறையில் நாங்கள் உதவியாளர்களாக இருக்கிறோம்.

உங்களுக்கு வழிகாட்டும் குறிப்புகளாக இந்த உண்மைகள் அனைத்தையும் உங்கள் முன் வைக்கிறேன். வேலை, வேலை என்று அதை மட்டுமே செய்யுங்கள். அதைத் தவிர வேறு எதுவும் செய்யாதீர்கள். உங்கள் மாஸ்டருடைய கட்டளைகளைப் பின்பற்றுங்கள்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “பயணத்திற்கு ராம்சந்த்ரா புறப்படுவது பற்றி நான் தீர்மானித்திருக்கிறேன். நாளை புதன்கிழமை அல்லது மறுநாள் வியாழக்கிழமை அவர் புறப்படலாம் என்ற கருத்து எனக்கு இருந்தது. இந்த இரண்டு நாட்களில் எந்த நாளில் புறப்படுவது என்று தேர்வு செய்வதை அவரிடம் விட்டிருந்தேன். வியாழக்கிழமை புறப்படுவதில் அவருக்கு விருப்பம் இருந்தது. இதனால் சுவாமி விவேகானந்தா வியாழக்கிழமை புறப்படுவது என்று நிர்ணயித்தார். இனிமேலும் ஒத்திவைக்க முடியாது. வெள்ளிக்கிழமை மதுராவுக்கு அவர் சென்றடைந்த பின் அவருக்கு ஓய்வு தேவைப்பட்டால் சனிக்கிழமை அவர் தென்னிந்தியாவுக்கு புறப்படலாம். இல்லையென்றால் வெள்ளிக்கிழமை புறப்படுவது நல்லது. இந்த அளவுக்கு அவருடைய விருப்பத்திற்கு நான் விட்டிருக்கிறேன். அவருக்கு வசதியாக இந்த இரண்டு நாட்களிலும் ரயில்களில் அவருக்கு ஒரு காலிஇடம் இருக்கும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகள் சம்பந்தமாக மாறுதல் ஏதாவது தேவைப்படும் என்று M1 – இன் இதயம் ஆலோசனை கூறினால் அதற்கு உரிய கவனம் அளிக்கப்பட வேண்டும்.''

சுவாமி விவேகானந்தா தொடர்ந்து கூறியது :- “கீழை நாட்டு மக்களுக்கும், மேலை நாட்டு மக்களுக்கும் இடையே ஒரு மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது. இந்த இரண்டு நாகரீகங்களும் பெருமளவு வேறுபடுகின்றன. நம் நாட்டு மக்கள் ஒருவருக்கொருவர் சண்டைச்சச்சரவுகளில் ஈடுபட்டிருந்த காலத்தில் 18ஆம் நூற்றாண்டில் அவர்களின் நாகரீகம் துள்ளி எழுந்தது. நமது எளிமையை அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். நம் மக்களை எதையும் சுலபமாகக் கருதும் உல்லாச வாழ்க்கைக்கு அறிமுகப்படுத்தி அதற்கு அடிமையாக்கும்

எண்ணம் மேலைநாடுகளிலிருந்து வந்த வியாபாரிகளின் மனதில் தோன்றியது. பளபளப்பாக மின்னும் பொருட்களும், பெண்களும் இங்கு கொண்டு வந்து குவிக்கப்படுவது தொடங்கியது. நம் மக்களுக்கு அதன் மீதான ஆர்வமும், அந்த மேலைநாட்டு வாழ்க்கை முறைகளை அதேமாதிரி அனுசரிக்கும் நாட்டமும் தோன்றின. இந்தியாவில் இதனால் நிலைமை மிகவும் மாறி நாமனைவரும் மேற்கத்திய மக்களின் நிலைக்கு வந்துவிட்டோம். இவ்விஷயங்கள் யாவும் மறைய வேண்டும். இந்த உலகம் மேலாதிக்க நிலைக்கு மாறிக் கொண்டிருக்கிறது. ஆனால் நீங்கள் வேலையை இன்னும் ஆரம்பிக்கவில்லை. அது உங்களைத் தான், உங்களை மட்டும் தான் நம்பியிருக்கிறது.''

## 13-12-1944

சுவாமி விவேகானந்தா கூறியது :- 11, 12ம் தேதிகளில் சுவாமி விவேகானந்தா சொல்லியவற்றின் தொடர்ச்சி :- "அளவில்லாத வேலைகள் உங்கள் முன்னே உள்ளன. மற்றவைகளை நாய்களுக்குப் போடுவது போல் தூக்கிப்போடுங்கள். ஒரு ஒளியுலகத்தை நீங்கள் கட்டமைக்க வேண்டியிருக்கிறது.''

''உங்களைப் பற்றி பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் கருத்து இது, ராம்சந்த்ராவின் குருவாகிய, ஃபதேகரைச் சார்ந்த மகான் ராம்சந்த்ரஜீ அவர்கள் உலகில் உள்ள மக்கள் அனைவரும் ராம்சந்த்ராவை (ஷாஜஹான்பூர்) பின்பற்றி அவரைப் போலவே வாழும் தகுதி உள்ளவராகவே உருவாக்கியிருக்கிறார். அவருடைய வாழ்க்கைச் சரித்திரம் தங்க எழுத்துக்களால் எழுதப்படும். தன் சீடர் மீது, வேறு எந்த குருவும் செலுத்தும் அன்பை விட, ராம்சந்த்ரா மீது அவர் செலுத்திய அன்பு மிக அதிகம். அவருடைய விரைவான முன்னேற்றத்துக்கு இதுவே காரணம். அவரது முன்னேற்றத்துக்கு எல்லையே இல்லை. ஆனால் சங்கல்பம் (எண்ணத்தின் உறுதி) அவரிடம் இன்னும் அதிகம் தேவைப்படுகிறது."

11,12 தேதிகளில் சொல்லத் துவங்கியதை முடிப்பதற்காக சுவாமி விவேகானந்தா மேலும் கூறியது :- "இது சம்பந்தமாக உங்களுக்கு நான் வழிகாட்டியாக இருப்பேன். ஒரு பாறையைப் போல உறுதியாக இருங்கள். இரும்பு போன்ற உறுதியான சங்கல்பம் (ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற மனோபலம்) உங்களுக்குத் தேவைப்படுகிறது. பலவீனப்படுத்தும் எந்த எண்ணத்தையும் உங்கள் மனதில் வருவதற்கு அனுமதிக்க வேண்டாம். உங்களைப் போன்ற ஒருவர், இப்போது உங்களிடம் உள்ளதைப் போன்ற பலகீனமான கருத்துக்களுக்கு இடமளித்தால் அது மிகவும் வெட்கப்பட வேண்டியதாக இருக்கும். உண்மையில் பலவீனம் எதுவும் உங்களிடம் இல்லை. ஒவ்வொரு விநாடியும் உங்களுக்கு நாங்கள் அனைவரும் சக்தி கொடுப்போம். நீங்கள் உங்கள் மாஸ்டருடன் கலந்திருக்கிறீர்கள். அவர் உங்களுடன் ஐக்கியமாகி இருக்கிறார். தன்னையே உங்கள் சீடராகக் கருதும் அளவுக்கு அவர் உங்கள் மீதான அன்பில் மூழ்கிப் போயிருக்கிறார். என் ஆயுட்காலத்தில் இம்மாதிரி ஒரு உதாரணத்தை நான் கண்டதில்லை. இது ராதாவின் அன்புக்கு அடுத்ததாக இருக்கிறது. அப்படியிருந்தும் உங்கள் மனதில் பலவீனம் பற்றிய எண்ணம் நீடிப்பது புதுமையாக இருக்கிறது. அனைவரும் பின்பற்றத் தகுந்த ஒரு உதாரணத்தை நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள். இவ்வுலகில் எந்த ஒரு சக்தியும் உங்களுக்கு இணையாக முடியாது. முக்தி பெற்ற எந்த ஒரு ஆன்மா உங்களிடம் வந்தாலும் அது உங்களை நேசிப்பதாக மாறிவிடும். நான் உங்களிடம் உண்மையைச் சொல்கிறேன்! அதாவது என் குருவை விட்டால், உங்களையன்றி வேறு யாரையும் நான் நேசித்ததில்லை. அதேமாதிரி, என் குருவும், மரியாதைக்குரிய அவரும் என்னைவிட்டால் உங்களையன்றி யாரையும் நேசித்ததில்லை. எல்லா நேரங்களிலும் நான் உங்களைத் தான், உங்களை மட்டும் தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்."

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "சுவாமி விவேகானந்தா கூறியவை யாவும் விலைமதிப்பற்ற உயர்ந்த விஷயங்கள்.

சுவாமி விவேகானந்தா கூறியது :- "மூல்சங்கரை (சுவாமி தயானந்தாவை) பாரதவர்ஷம் (இந்தியா) சம்பந்தமான வேலைக்காக நான் வடிவமைத்து உருவாக்கினேன். ஆனால் அவரது ஆயுள் போதுமான அளவுக்கு நீடித்திருக்கவில்லை. எனவே அந்தப் பணி பாதியில் நின்றுவிட்டது. எனது வேலையின் பாணி வேறு விதமானது. யோக முறைப் பயிற்சிகளில் நான் மிகுந்த விருப்பத்துடன் இருந்தேன். அந்த யோக முறைகளினாலேயே ஆன்மீக நிலைகளைக் கடந்தேன். ஆனால் உங்களுடைய இந்த வழிமுறை - பிராணாஹூதி வேறுவிதமாக இருக்கிறது. இதுவும் கூட அதே நோக்கத்தை நிறைவேற்றுகிறது. எனவே இதிலேயே தொடர்ந்து முன்னோக்கிச் செல்லுங்கள். இப்போது யோகமுறைப் பயிற்சிகளை செய்யுமளவுக்கு மக்களின் உடல் நலம் தகுதியுடையதாக இல்லை. பாரத வர்ஷத்திலிருந்து (இந்தியாவிலிருந்து) பூஜாரிகள் குலத்தின் (பிராமணர்களின் மீதான மரியாதையை நீக்கி, வெறுப்பை ஏற்படுத்துவதற்கு சுவாமி தயானந்தாவிடம் நான் ஒரு வாக்குறுதி பெற்றிருந்தேன். அவர்கள் (பிராமணர்கள்) எனக்கு பெரும் கவலையளித்திருக்கிறார்கள். ஹிந்து சமுதாயத்தைச் சீர்திருத்துவதை தடை செய்தவர்கள் அவர்கள் தான். அதனால் தான் சுவாமி தயானந்தாவுக்கு அப்படி ஒரு கட்டளையிட்டேன். இந்த மனிதர்கள் தங்களை மிக உயர்ந்தவர்கள் என்ற நினைப்பில் கட்டுப்பட்டிருக்கும் வரையில் அவர்கள் ஆன்மீக முன்னேற்றமடைவது சிரமம் தான். இப்போது என் வேலையை உங்களிடம் சமர்ப்பிக்கிறேன். இந்த பாரதநாடு தனது பெருமதிப்பை மறு உருவாக்கம் செய்துகொள்வதற்கு உதவியாக நீங்களும் கூட அந்த வாக்குறுதியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என நான் விரும்புகிறேன். நான் இப்போது போகிறேன், தேவை ஏற்படும் போதெல்லாம் வருவேன்.''

சுவாமி விவேகானந்தாவின் குறிப்பு :- "இங்கே பாருங்கள் ராம்சந்த்ரா, சுவாமி தயானந்தாவின் குரு சுவாமி

விரஜானந்தாவின் பார்வை உங்கள் மீது நிலை பெற்றிருக்கிறது. உங்கள் பொறுப்பை உணர்ந்து, உங்களை வேலையில் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். உலகம் மாறிக்கொண்டிருக்கிறது. என்னிடம் இருப்பது எதுவாயினும் உங்கள் தேவைக்கு ஏற்றபடி அதைக்கொடுப்பேன். உங்கள் சங்கல்பம் வலிமையாக்கப் பட்டுள்ளது. இப்போது தயாராகி பயணத்தைத் தொடருங்கள். தாமதம் வேண்டாம்.’’

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “A3 – இன் கடிதம் சம்பந்தமாக, ஃபடேகரில் உள்ளவர்களுக்கு ஷாஜஹான்பூரி லிருந்து, என்ன வந்தாலும் ஏற்றுக்கொள்ளும்படி கட்டளை இட்டிருக்கிறேன். இதைச் சொல்ல வேண்டிய தேவை இருந்தது. நிச்சயமாக இது பற்றிய செய்திகள் அவர்களை எட்டியிருக்கும். இப்போது அவர்களுக்கு உதவி செய்து கொண்டிருப்பவர்கள் காலப்போக்கில் அவர்களோடு சேர்ந்து இருக்கமாட்டார்கள். கடைசியில் நீ தான் தேவையானதைச் செய்ய வேண்டியிருக்கும். அவர்கள் என்ன ஆசைப்படுகிறார்களோ அது நடப்பது சாத்தியமில்லை. அவள் (லாலாஜியின் மனைவி) உன் மதிப்பை இன்னமும் உணர்ந்து கொள்ளவில்லை. எல்லோர் மீதும் அவள் கொண்டுள்ள பாசம் பெரும்பாலும் சமமாகவே இருப்பதால் அது பாராட்டத்தக்கது என்பதில் சந்தேகம் இல்லை. ஆயினும் பொதுவாக பெண்களுக்கு தகுதியை மதிப்பிடும் திறன் இருப்பதில்லை. வெளிப்படையாகக் கூறும் பாராட்டையும் முகஸ்துதியையும் அவர்கள் விரும்புகிறார்கள். அதனால் தான் இம்மாதிரி தந்திரங்களை யார் செய்தாலும் அவர்கள் நம்புகிறார்கள். என்னுடைய நோக்கத்தை அது பலவீனப் படுத்துவதற்கு அது காரணமாக இருக்கும் என்றால் அவள் சொற்படி கேட்க வேண்டிய தேவை இல்லை. அதாவது வருடாந்திர விழாவில் செய்யப்பட இருக்கும் பொது அறிவிப்பு பற்றி நான் குறிப்பிடுகிறேன். அதையடுத்த பின் விளைவுகள் எதுவாக இருந்தாலும் அந்தப் பொது அறிவிப்பை கட்டாயம் செய்ய வேண்டும்.’’

சுவாமி விவேகானந்தா கூறியது :- "மரணமடையும் தருவாயில் (ஏற்கனவே ஒருவர் அடைந்துள்ள) ஆன்மீக நிலைகள் எதுவும் செய்வதில்லை. அங்கே நிதானத்தன்மை (நடுநிலை) தேவைப்படுகிறது. அது எல்லா இடங்களிலும் குறைவாகவே இருக்கிறது. ஆன்மீகம் மட்டுமே எதையும் செய்ய முடியாது. அது நன்னெறி ஒழுக்கத்துடன் இணைந்து செல்ல வேண்டும். உங்கள் குணாதிசயத்தை நான் இப்போது விவரிக்கிறேன். உங்கள் குருவிடம் நீங்கள் சென்ற அந்த விநாடியில் இருந்தே அவரை இந்தப் பிரபஞ்சத்துக்கே மாஸ்டராக நினைத்தீர்கள். உங்களுக்கு அனைத்தும் அவரே என்று ஏற்றுக்கொண்டீர்கள். உங்களைப் பற்றி போதுமான அளவுக்கு சிறப்பாக உங்கள் குரு நோட்டுப்புத்தகங்களில் எழுதியிருக்கிறார். அது மிகச் சரியாக அப்படியே இருக்கிறது. உங்கள் ஜீவனின் ஒவ்வொரு அணுவும் உங்கள் மாஸ்டருக்குள் மூழ்கியிருக்கிறது. இந்தச் செயல் முறையை முழுமையாக்க (ஈடுகட்ட) அவருடைய ஜீவனின் ஒவ்வொரு அணுவும் உங்களுடன் ஐக்கியமாகி இருக்கிறது. இந்த வகையில் உலகிற்கே நீங்கள் ஒரு உதாரணத்தை உண்டாக்கியிருக்கிறீர்கள். இப்படி ஒருவரோடு மற்றவர் முழுமையாக ஐக்கியமடைவது அல்லது ஆழ்ந்திருக்கும் தன்மைக்கு ஒரு உதாரணத்தை வேறு எங்கும் காண்பது அரிது. உங்கள் ஆன்மீக விரிவாக்கம் பற்றி நான் விவரித்தால், இந்த வெளிப்புறச் சூழ்நிலையின் ஒவ்வொரு துகளிலும் நீங்கள் பரவியிருக்கிறீர்கள் என்பேன். நீங்கள் அனைத்திலும் இருக்கிறீர்கள். M1 உங்கள் மீது அன்புடன் இருக்கிறார். அவருக்கு நீங்கள் நன்றியுடன் இருக்கவேண்டும்."

## Om

14-12-1944 (தென்னிந்தியப் பயணம் ஆரம்பம்.)

M1 – ன் குறிப்பு : இன்று ஷாஜஹான்பூர் ஸ்ரீமான் ராம்சந்த்ரஜீ தென்னிந்தியாவுக்குப் புறப்பட்டார்.

## 17-12-1944

சென்னை வந்து சேர்ந்தேன். சென்னை வரும் வழியில் (புகை வண்டியில் இருந்த போது) சுவாமி விவேகானந்தா கூறியது :- "தாராகோ ரயில் நிலையத்திலிருந்து வேலையை ஆரம்பித்து தக்ஷிணப் பீடபூமியையும் தென்னிந்தியாவையும் ஒளியூட்ட வேலை செய்யுங்கள். அந்த புகைவண்டி நிலையத்திலிருந்து வரிசையாக குகைப் பாதைகள் வரும். நீங்கள் சென்னை சென்றடைந்ததும் அதை ஒளியூட்டுங்கள். பூஜாரி இன மக்களை ஒதுக்கிவிட்டு, பொதுமக்களுக்கு லேசாக ஆன்மீக உணர்வு அளியுங்கள். நீங்கள் போகும் இடங்களில் இதே செயல் முறையை மீண்டும் செய்யுங்கள். நானும் உங்கள் மாஸ்டரும் சேர்ந்து பிரபஞ்சத்தின் மாஸ்டராக உங்களை உருவாக்கியிருக்கிறோம். இவ்வுலகம் எந்நாளும் உங்களை நினைவில் வைத்திருக்கும். இந்தப் பொறுப்பு எவ்வளவு பெரியது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் அப்படித் தான் (பிரபஞ்சத்தின் மாஸ்டராக) இருக்கிறீர்கள் என்பதை உணருங்கள். உங்கள் வார்த்தைகள் வீணாகிப் போகாது. எனவே பேசும்போது அதற்குரிய கவனத்துடன், பேசும் வார்த்தைகளில் பண்புடன் இருங்கள். ஆன்மீகத்தில் உச்சநிலைப் பதவியை நீங்கள் வகிக்கிறீர்கள்.''

## 18-12-1944 (சென்னையில்)

சென்னையில் இருக்கும் ராமகிருஷ்ணா மிஷன் ஆசிரமத்துக்கு நான் சென்றபோது அதன் தலைவர் தியானத்தில் இருப்பதாக என்னிடம் சொன்னார்கள். அந்தச் சமயத்தில் அங்கு ஏற்கனவே பலர் காத்திருந்தார்கள். எனவே தலைவரை சந்திப்பதற்கு மறுநாள் காலை வரச் சொன்னார்கள். அந்த மிஷன் கட்டிடத்தின் நிலத்தில் சில குலுக்கல்களை நான் உணர்ந்தேன். ஒரு சத்திரத்தில் தங்குவதற்கு இடம் தேடுவதற்காக நான் வெளிவந்தேன்.

சுவாமி விவேகானந்தா கூறியது :- "மரியாதைப் பண்பில்லாத இந்தச் செயலினால் நான் ஆழ்ந்த வருத்தம்

அடைந்தேன். இந்த ஆசிரமத்தின் பொறுப்பில் இருப்பவர் எனது நேரடி உத்திரவுகளைப் பெற முடியாதவராக இருக்கிறார். நான் இதில் மிகவும் முனைப்பாக இருந்தேன். சரி, நீங்கள் உங்கள் வேலையைத் தொடர்ந்து செய்யுங்கள்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "இங்கே உன் வேலையை நீ செய்து முடித்துவிட்டாய். நாளை ராமேஸ்வரத்துக்குப் புறப்படு. நீ பரமாத்மாவுடன் ஐக்கியம் அடைந்திருக்கும் நிலையில் நானாக எதுவும் உனக்குச் செய்ய முடியாமலிருப்பதால், எனக்கு சிரமத்தைக் கொடுக்கிறது.''

சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டுச் சொன்னது :- "இந்த விஷயத்தில் நீங்களும் (லாலாஜி) நானும் ஒரே நிலைமையில் தான் இருக்கிறோம்".

## 21-12-1944

சுவாமி விவேகானந்தா கூறியது :- "நான் ஒருபோதும் உங்களை அலட்சியம் செய்ய முடியாது என்று எது எனக்குப் புனிதமானதோ அதன் பெயரால் சத்தியம் செய்கிறேன்.''

சென்னையின் நிலையான துருவாதிபதியின் (குதுப்) பதவிக்குரிய வரம்பின் எல்லையிலிருந்து நான் வெளிவந்து விட்டதால் அவர் இயங்கும் எல்லை பின்தங்கிவிட்டதையும், அவருடைய கடமை முடிந்து விட்டதையும் எனக்குத் தெரிவித்தார்.

## 22-12-1944 (ராமேஸ்வரம்)

சுவாமி விவேகானந்தா கூறியது :- "உங்களுடைய வேலை முழுவதும் பாராட்டத்தக்கதாக இருந்தது. எங்கள் நம்பிக்கையுடன் கூடிய எதிர்பார்ப்புகள் உங்கள் மீதுதான் உள்ளன.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "இங்கே ராமேஸ்வரத்தில் நீ பெருமளவு வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இந்தக் கோயில் முழுவதற்கும் ஒளியூட்டு. அந்தக் குளத்தின் தண்ணீரில் உன் பாதங்களின் மின்சக்தி பரவுவதற்கு உதவியாக சிவகுண்டத்தில் (குளம்) உன்

கால்களைக் கழுவ வேண்டும் என்பது என் கட்டளை. இங்கே வரும் யாத்திரிகர்கள் பயன் பெறுவதற்காக இங்கே ஒவ்வொரு மூலை முடுக்கும் ஒளிபெறச் செய்யவேண்டும். யாத்ரிகர்களுக்கு தங்க இடமளித்து சடங்குகள் செய்விக்கும் பண்டாக்கள் எனப்படும் பூஜாரிகளை அழிக்கும் வேலையைத் துவங்கு. நீ சந்திக்க நேரும், முதல் பூஜாரியிடமிருந்து அதை ஆரம்பம் செய். தனுஷ்கோடிக்குப் போகவேண்டிய தேவையில்லை. மற்ற எல்லா இடங்களுக்கும் போக வேண்டும். நீ இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்தாய். அதனால் ஓய்வெடுத்துக் கொள். சென்னையில் உனது வேலை நன்றாக இருந்தது. அது எனக்குத் தெரியும். அவற்றை எப்படி எய்துவது என்பது உங்களிடம் மட்டுமே விடப்பட்டுள்ளது. நாங்கள் வெறும் உதவியாளர்கள் தான். நீங்கள் உங்களுடைய சொந்த அடித்தளத்தில், சொந்தக் கால்களில் நிற்கவேண்டும். மீண்டும் பாருங்கள். உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் கடவுளின் நல்லாசிகள் உங்கள்மீது பொழிந்து கொண்டிருக்கும். உங்கள் ஜீவனின் ஒவ்வொரு இழையும் அதே விதத்தில் வளர்க்கப்பட்டுள்ளன. இது நல்லது என்று நீங்கள் எதையாவது நம்பினால் அதில் எப்போதும் உறுதியாக இருங்கள்.''

## 23-12-1944

சுவாமி விவேகானந்தா கூறியது :- "உங்கள் பாதுகாப்புக்கு யாராவது தேவையென்றால், இலங்கையின் முனிவரை (குதுப்பை) அழையுங்கள். இது அவருடைய பொறுப்பில் உள்ள மண்டலத்தில் இருப்பதால், இங்கே ராமேஸ்வரத்தில் நீங்கள் இருக்கும் வரையில், உங்களை கவனித்துக்கொள்ளச் சொல்லுங்கள். (சற்று இடைவெளி) நாங்கள் உங்களை கவனித்துக்கொண்டே இருப்பதால் அது தேவையே இல்லை. ஆயினும் நீங்கள் அவர்களுடைய (குதுப்கள் அனைவருக்கும்) மாஸ்டராக இருப்பதால் நீங்கள் விரும்பினால், இந்தக் கடமைக்கு அவரை அழைக்கலாம்.''

ராமேஸ்வரம் கோயில் அங்கே ஏதோ அச்சமூட்டும் மரணம் நிகழ்ந்திருப்பது போல சோகமான தோற்றத்தில் இருந்தது.

லக்ஷ்மிகுண்டம், சீதாகுண்டம், ராமாகுண்டம் (குளங்கள்) ஆகியவை ஒளியூட்டப்பட்டன.

ராமேஸ்வரத்தில் பகவான்தாஸ் பக்ளா எனப்படும் தர்மசத்திரத்தில் தங்கினேன். நிறையப் பணம் என்னிடம் இருந்ததால், அங்கு எனக்காக ஒதுக்கப்பட்ட ஒரு சிறிய அறைக்குள் தூங்குமாறு எனக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. கொசுக்களின் தொல்லையால் நான் அங்கே தூங்க முடியவில்லை. எப்படியோ நேற்றிரவு அந்த அறைக்குள்ளேயே படுத்திருந்தேன். இனி தாங்கமுடியாது என்ற நிலையில், வராந்தாவில் தூங்குவதற்கு வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அனுமதியை கேட்டுப்பெற்றேன். அச்சமயத்தில் சிலோனின் (இலங்கையின்) முனிவர் அவருக்கு வந்த உத்திரவின்படி நான் ராமேஸ்வரத்தில் தங்கியிருக்கும் காலம் வரையில் என் பாதுகாப்பை கவனித்துக்கொள்ளும் கடமையைச் செய்ய அவர் ஆரம்பித்திருப்பதாகத் தெரிவித்தார்.

## 24-12-1944

சுவாமி விவேகானந்தாவின் குறிப்பு :- “ராமேஸ்வரம் கோயிலில் இன்னும் நூறு வருடங்களுக்குத் தீர்ந்து போகாமல் நீடிக்கும்படி சக்தியை நிலைப்படுத்தியிருக்கிறீர்கள்.’’

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் கருத்தைக் கேட்டபோது அவர் கூறியது :- “ராமேஸ்வரத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கும் ஒளியூட்டப்பட்டிருக்கிறது. இனியும் அதை நிரப்புவது அங்கிருக்கும் மக்களுக்கு சிரமத்தை உண்டாக்கும். உங்கள் வேலை செய்து முடிக்கப்பட்டு விட்டது. இனி நீ அங்கே தங்க வேண்டிய தேவை இல்லை. இலங்கையின் முனிவர் உன்னை அங்கு வரச்சொல்லி அழைக்கிறார். இங்கே ராமேஸ்வரத்தில் இருந்தவாறே இலங்கையின் வேலையை நாளை எடுத்துக்கொள். நாளை மறுநாள் இங்கிருந்து புறப்படு.

## 25-12-1944

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் குறிப்புக்கள் :- “நீ மதுரைக்குப் போய்க்கொண்டிருக்கிறாய். அங்கேயும் உனக்காகவே வேலை

இருக்கிறது. பூஜாரிகள் குலத்தாரை அழிக்கும் வேலையோடு கூடவே, அந்த இடத்திற்கு ஒளியூட்டுவாயாக. அங்கே என் பக்தர்கள் எத்தனையோ பேர் இருந்திருக்கிறார்கள். ஆனால் யாராலும் இந்த வேலையைச் செய்ய முடியவில்லை. அது உனக்காகவே ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. இனிமேலும் இலங்கை மீது கவனத்துடன் இருக்க வேண்டிய தேவை இல்லை.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- (மாலை 4.15 மணி) ''இலங்கையில் நீ பெரும் தீமை ஏற்படுத்திவிட்டாய். சரியான சமயத்தில் நான் வந்திராவிட்டால் (வராமல் இருந்திருந்தால்) அங்கே எத்தனையோ பேர் உயிரிழந்திருப்பார்கள். பரம்பொருள் தன்மையின் (பரமாத்மாவின்) முழு ஆற்றலையும் இலங்கையின் மீது திருப்பிவிட்டுவிட்டாய். அதில் கொஞ்சம் திரும்ப எடுத்துக்கொள். மக்களின் மனங்கள் சாதாரண செயல்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையை அடைந்து சிரமப்படுகின்றன. அதிகப்படியான ஆற்றலை திரும்ப எடுத்துக்கொள்வதை சற்று விரைவாகச் செய்.'' (உடனடியாக அந்த உத்திரவு நிறைவேற்றப்பட்டது.) ''இப்போது இலங்கையின் பக்கம் கவனமே செலுத்தாதே. நாளை இங்கிருந்து புறப்படு.''

இலங்கையின் முனிவர் தொடர்பு கொண்டு கூறியது :- "இச்சமயத்தில் இலங்கையில் நிலவுகின்ற ஆன்மீக உள்நிலை, மக்கள் அதற்காக ஏங்கியிருக்க வேண்டிய ஒன்றாகும். இப்போது இங்கிருக்கும் அனைவரும் ஒரு மகான் போன்ற துறவு நிலையில் இருக்கிறார்கள். அவர்களின் மனத்தின் தன்மை நிறுத்திவைக்கப்பட்ட ஒரு நிலையில் இருக்கிறது. யாரைப் பார்த்தாலும் ஒரு சிலையைப் பார்ப்பது போலிருக்கிறது. எண்ணங்கள் முழுமையாக நின்று போய்விட்டன, பாராட்டுக்கள். உங்களை இந்தவிதமாக உருவாக்கியுள்ள அந்த மாஸ்டருக்கு என் நன்றிகளைத் தெரிவிக்கிறேன். இம்மாதிரி ஒரு மகாபுருஷரை ஒருபோதும் நான் கண்டதில்லை. (சற்று இடைவெளி) நான் வயது முதிர்ந்தவன். இந்தக் காலத்தை திசைமாற்ற வேண்டுமென்று நான் உங்களைப் பிரார்த்திக்கிறேன். இது

உங்கள் ஒருவரால் மட்டுமே முடியும். இலங்கையில் ஒரு குறிப்பிட்ட பகுதியை நீங்கள் முழுவதும் திசைமாற்ற வேண்டும் என விரும்புகிறேன். இந்தப் பகுதி C - என்று கூறப்படுகிறது. எத்தனையோ யாத்ரிகர்கள் இங்கே வந்து ஒழுக்கமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். நீங்கள் இதைச் செய்யாவிடில், இந்த நோக்கத்திற்குத் தேவைப்படுகின்ற சக்தியை எனக்குக் கொடுத்தால், நானே அந்த வேலையைச் செய்வேன். வணக்கத்திற்குரிய உங்கள் மாஸ்டருக்கு மீண்டும் என் நன்றிகள். என் கடமையில் நான் இணைக்கப்பட்டிருக்கிறேன். இந்தக் கடமை எனக்கு அளிக்கப்பட்டதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் கிட்டத்தட்ட என்னை இதில் சேர்த்துக்கொள்ளாமலே விட்டிருந்தீர்கள். உங்களுக்கு சேவைசெய்யும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது என் அதிர்ஷ்டம் தான்".

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "அவர் ஒரு மிகப்பெரிய முனிவர். இலங்கையில் அவருக்கு நிகராக யாரும் இல்லை. C - என்ற இடம் முற்றிலும் மாற்றப்பட வேண்டும் என்று அவர் கேட்கிறார். ஆனால் இதுவரையில் அதற்கு கடவுளின் கட்டளை வரவில்லை.''

சுவாமி விவேகானந்தா கூறியது :- "இலங்கையில் உங்கள் வேலை அசாதாரணமானது. உலக சாதனைகள் அனைத்தையும் நீங்கள் முறியடித்திருக்கிறீர்கள். இலங்கையில் இரண்டு நிமிடங்களில் உங்களால் செய்ய முடிந்திருக்கும் இந்த வேலையை மற்றவர்கள் செய்வதானால் அதற்கு நூறு ஆண்டுகள் தேவைப்படும். அங்குள்ள மக்கள் அனைவரும் ஒருவர் கூட பாக்கியில்லாமல் (மீதமின்றி) ஒரு ஆன்மீக மயக்க நிலையில் இருக்கிறார்கள்.

<u>27-12-1944</u>

சுவாமி விவேகானந்தாவிடமிருந்து வந்த உத்திரவுகள் :- "மதுரை நகரத்துக்கு முழுமையாக ஒளியூட்டுங்கள். பூஜாரிகள் இனத்தாரை அழிக்கும் வேலையைத் தொடருங்கள். நாளை காலை, மதுரையிலிருந்து திருவனந்தபுரத்துக்குப் புறப்படுங்கள்.

வேறு புகைவண்டிக்கு மாற வேண்டிய தேவை இல்லாமல் நீங்கள் நேரடியாகவே திருவனந்தபுரம் போகலாம். அங்கே (திருவனந்தபுரத்தில்) கன்யாகுமரிக்கு பேருந்தில் போகலாம். மைசூர் செல்வதற்கு மிகச் சுருக்கமான வழியை அங்கே நான் சொல்வேன். எர்ணாகுளத்துக்குப் போவது மிகவும் அலுப்பூட்டுவதாக இருக்கும். அங்கே நீங்கள் பார்க்கவும், செய்யவும் ஏதுமில்லை.''

''நீங்கள் என் இதயத்தை வென்றுவிட்டீர்கள். அங்கே ஆழ்நத அன்புடன் உங்களுக்கு இடமளித்திருக்கிறேன். நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். அது உங்களுக்காக என் பிரார்த்தனை. உங்களுக்கு வேறு ஏதாவது தேவையா?''

நான் (பாபுஜி) பணிவோடு கூறியது :- "இன்னும் அதிகமாக வேலை இருந்தால் அதை எனக்குத் தரவேண்டும்."

சுவாமி விவேகானந்தாவின் பதில் :- "எப்போதும் உங்களுக்கான கட்டளைகளை நிறைவேற்றுங்கள் என்று நாங்கள் கேட்டுக்கொண்டே தான் இருக்கிறோம். நீங்கள் செய்வதற்குப் போதுமான அளவு வேலை இருக்கிறது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "மூத்த முனிவர்களிடையே எனக்கு ஏராளமாக பாராட்டுக்கள் உள்ளன. எல்லோருடைய கண்களும் உன் மீதே நிலைத்திருக்கின்றன. உன் காலத்திற்குப் பிறகு வரும் மக்களும், இந்த மங்களகரமான நேரத்தை நினைவில் வைத்திருப்பார்கள். இந்த வேலையை செய்து முடித்த பிறகு தெய்வீக அருள் உன்மீது இன்னும் அதிகமாகப் பொழியும். இந்த வேலைக்கு அதுவே பரிசாகும். இங்கே இருக்கும் வேலைகளை உன் மூலமாகச் செய்து முடித்தபிறகு உன்னைத் தங்களுடைய இடத்திற்கு (ஒளியுலகிற்கு) திரும்ப அழைத்துக்கொள்ளவேண்டும் என்ற கருத்து மூத்த முனிவர்கள் சிலருக்கு இருக்கிறது. ஆனால் நான் இக்கருத்தை ஆதரிக்கவில்லை. அப்படிச் செய்வதற்கு நான் விடவும் மாட்டேன்.''

சுவாமி விவேகானந்தாவின் குறிப்பு:- “உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலையை இங்கே மதுரையில், இப்போது ஒரு புதிய கண்டுபிடிப்பின் மூலமாகச் செய்து முடித்திருக்கிறீர்கள். இங்கே செய்யவேண்டிய வேலை எதுவும் மீதமில்லை.’’

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்திரவு :- “ஷாஜஹான்பூர் போய்ச் சேர்ந்தவுடன் இந்தக் கண்டுபிடிப்பை நோட்டுப்புத்தகத்தில் எழுதிவைத்துக் கொள். ’’

மதுரையில் பயன்படுத்திய வழிமுறை :- “சூட்சும வடிவத்தில் மதுரை முழுவதிலும் என்னைப் பரவியிருக்கச் செய்து கொண்டேன். அதன் எல்லாப் பக்கங்களையும் ஆன்மீக சக்தியால் நிரப்பி அது நிலத்திற்குள் மற்றும் அதன் அணுக்களுக்குள் ஊடுருவும்படி செய்தேன்”.

<u>29-12-1944</u>

சுவாமி விவேகானந்தாவின் உத்தரவுகள் :- (திருவனந்தபுரத்தில்) உங்களுக்கு வலி ஆரம்பித்து விட்டதனால், பயணத்தைச் சுருக்கிக்கொள்ளுங்கள். இந்தியாவின் தென்கோடியாகிய கன்யாகுமரிக்கு உங்கள் பயணத்தை முடித்தபிறகு மைசூருக்குச் செல்லுங்கள். நீங்கள் விரும்பினால் ஹாசன் மற்றும் பேளூர் செல்லலாம். அதன்பிறகு ஹைதராபாதுக்குப் புறப்படுங்கள். பூனாவுக்குப் போகவேண்டியதில்லை, அதை விட்டுவிடலாம்.’’

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் விரிவான உத்தரவுகள் :- “நாளை கன்யாகுமரி சென்று, அங்கு மிக நன்றாக ஒளியூட்டவும். ஆனால் இலங்கைக்கு செய்தது போலச் செய்ய வேண்டாம். திரும்பி வரும்போது ஒரு நாள் இங்கே (திருவனந்தபுரத்தில்) தங்கியிரு. மறுநாள் காலை புகைவண்டியில் மைசூருக்குப் புறப்படு. பெங்களூரில் தங்க வேண்டிய அவசியமில்லை. பேளூர் போன்ற சில இடங்களை நீ பார்க்கலாம். அதற்குப் பிறகு ஹைதராபாதுக்குப் போ. உனக்காக அங்கே வேலை காத்திருக்கும். அங்கிருந்து பம்பாய்க்குப் போ. வழியில் தௌலதாபாத் மற்றும்

அஜந்தாவுக்கும் போ. அங்கே (பம்பாயில்) எவ்வளவு நாள் தங்க வேண்டியிருக்கும் என்பதை அப்போது நான் சொல்வேன். பூனாவுக்குப் போக வேண்டிய தேவை இல்லை. பம்பாயிலிருந்து துவாரகைக்குப் புறப்படு. திருவனந்தபுரத்தில் உன் வேலையும் மிகச் சிறப்பாக நிலைத்திருக்கிறது. திருவனந்தபுரத்தின் மீது போதுமான அளவு கவனத்துடன் இருந்திருக்கிறாய். இனிமேல் அது தேவையில்லை என்பதாகத் தோன்றுகிறது. ஆயினும் மிக லேசான நினைவை அதன் மீது வைத்திரு. பத்மநாபசுவாமி கோயில் மிக நன்றாக ஒளியூட்டப்பட்டிருக்கிறது. ஹிந்துக்களின் ஒட்டுமொத்த அழிவை உண்டாக்கிய பூஜாரி இனத்தின் அழிவில் (பூஜாரி இனத்தை அழிப்பதில்) மட்டுமே இன்றிரவு கவனம் செலுத்து. சற்றும் தாட்சண்யம் (அனுதாபம்) இல்லாத அழிவு தேவைப்படுகிறது.''

## 31-12-1944

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- ‘‘நேற்று (30-12-1944) நீ கன்யாகுமரிக்குச் சென்றாய். போகும் வழியிலேயே வேலையைச் செய்து முடித்துவிட்டாய். அந்தச் சூழ்நிலை முழுவதும் மாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறது. (சூழ்நிலை முற்றிலும் மாற்றப்பட்டிருக்கிறது.) இங்கிருந்து (திருவனந்தபுரத்திலிருந்து) நாளை காலை புறப்படு. திருவாங்கூர் ராஜ்ஜியத்தில் (இப்போது கேரளா என்று பெயர் மாறியுள்ளது.) இனிமேலும் தங்கியிருக்க வேண்டிய தேவை இல்லை”.

சுவாமி விவேகானந்தா கூறியது :- “உங்கள் பிரபுவுக்காக (குருநாதருக்காக) இந்த நிலைமாறும் உலகில் அனைத்தையும் துறந்துவிட்டீர்கள். அவரும் உங்களுக்காக அப்படியே செய்திருக்கிறார். ஒரு உதாரணமாகக் கூறத்தகுந்த விதத்தில் உண்மையான துறவு என்ற அந்த சக்தியை உங்களுக்குள் வளர்ச்சியடைய வைத்திருக்கிறீர்கள். இந்த உண்மைக்கு மதிப்பளித்து நீங்கள் ஒரு ராஜவாழ்க்கை நடத்த வேண்டும். நீங்கள் அப்படி ஒரு அரசனைப்போல வாழ்க்கை நடத்தினால் அது

எனது மற்றும் உங்கள் குருவின் இதயங்களுக்கு ஆனந்தமளிக்கும். மிக மேலான தெய்வமாகிய உங்கள் மாஸ்டரின் காலடிச்சுவடுகளைப் பின்பற்றி அனைவரும் நடக்கும் காலம் விரைவாக நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. காலப்போக்கில் சன்னியாசம் – துறவு மேற்கொண்டு தனித்து வாழும் முறை – என்ற மார்க்கம் மறைந்து போகும். அதனால் தான், மற்றவர்களுக்கு ஒரு உதாரணத்தை ஏற்படுத்துவதற்காக (பொருள் வளம் நிறைந்தவராக வசதிகளோடு வாழ்ந்தாலும் உள்ளத்தில் துறவு நிலையோடு இருக்க முடியும் என்று காண்பிப்பதற்காக) அப்படி ஒரு ராஜ வாழ்க்கையை நீங்கள் நடத்த வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம். மகிழ்ச்சியோடு இருங்கள்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய விளக்கம் :- "நீ ஜனக மகாராஜா போல ராஜரிஷியாக வாழ வேண்டும் என்பதைத் தான் சுவாமி விவேகானந்தா சொல்ல நினைத்தார்.'' (இங்கு மிதிலையின் மன்னர் ஜனக மகாராஜாவைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் ராமாயண காவியத்தில் சீதாதேவியின் தந்தை. அவர் ஒரு மன்னனாக, குடும்ப வாழ்வை மேற்கொண்டவராக இருப்பினும் பூரணமான துறவி போல வாழ்ந்தவராக போற்றப்படுகிறார்.)

## <u>3–1–1945 (பெங்களூர்)</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் குறிப்பிட்டுச் சொன்னது :- "இங்கே பெங்களூரில் உன்னை ஒரு நாள் தங்கச் சொல்லி உத்திரவிட்டேன். ஏனென்றால் நீ மிகவும் களைத்திருந்தாய். தொடர்ந்து பயணம் செய்ய உன்னால் முடியாமலிருந்தது. இல்லையென்றால் இங்கே நீ தங்கியிருப்பதை நான் விரும்பியிருக்க மாட்டேன்.''

சுவாமி விவேகானந்தா கூறியது :- "மற்றவர்கள் வேலையைத் தொடர்ந்து செய்வதற்கு ஏற்ற களத்தை நீங்கள் தயார் செய்திருக்கிறீர்கள். வேறு யாராலும் இதைச் செய்திருக்க முடியாது. இன்றிரவு மைசூருக்குப் புறப்படுங்கள். நீங்கள் ஷாஜஹான்பூருக்குத் திரும்பிச் சென்ற பிறகு மைசூர் ராஜ்ஜியத்தில்

(தற்போது கர்நாடகா) வேலை செய்வதற்கு பட்டதாரிகள் சிலரைத் தயார்படுத்துங்கள். கர்நாடகா மாநிலத்தில் ஆன்மீகப் பணிக்கான மிகப்பெரிய களம் இருக்கிறது என்பதை நீங்கள் சரியாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள். ஹைதராபாதிலும் கூட நிறையப்பேர் அதற்குத் தகுதியாக இருப்பதை நீங்கள் காண்பீர்கள். ஆனால் இந்தத் தெய்வீகக் கடமையில் ஈடுபடுவதற்கு ஏற்ப அவர்களுடைய விதியை வடிவமைப்பதற்கு சிறிது காலம் தேவைப்படும். எதிர் நோக்கியிருக்கும் பணிக்காக அவர்களைத் தயார் செய்யப் போவது நீங்கள் தான். மற்றவர்கள் பின்தொடர்ந்து வருவதற்காக களத்தைத் தயார் செய்யுங்கள். உங்களுடைய ஒரு கடமை எல்லா இடங்களுக்கும் பொதுவானதாகிய பூஜாரிகள் இனத்தை அழிக்கும் வேலை தான் அல்லது எல்லா இடங்களிலும் பொதுவாக உங்கள் வேலை, பூஜாரிகள் இனத்தை அழிப்பதுதான்.''

## <u>4-1-1945</u>

சுவாமி விவேகானந்தா கூறியது :- “ நீங்கள் விரும்பினால் மைசூரில் பிரபலமான மனிதர்கள் சிலரை சந்தியுங்கள். இதில் உங்களை கட்டாயப்படுத்த எண்ணவில்லை. அது உங்கள் ஆசையாக இருந்ததால் நான் உங்களுக்கு அனுமதி தான் தந்திருக்கிறேன். ஆன்மீகக் களத்தில் பணியாற்றுவதற்கு நல்ல மனிதர்களைத் தேர்ந்தெடுங்கள். அவர்களுக்குக் கல்வியறிவு இருப்பது அவசியம். உங்களிடமிருந்து ஒரு பெரிய மகாபுருஷர் பிறக்கப் (தோன்றப்) போகிறார். அது ஏற்கனவே உருவாகிக் கொண்டிருக்கிறது. அந்த விஷயத்தில் உங்கள் வேலைக்கான நாட்கள் நெருங்குகின்றன.

## <u>7-1-1945</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “இப்போது நீ ஹாசனுக்குப் போய்க் கொண்டிருக்கிறாய். பேளூர் கோயிலை ஆன்மீகப்பயன் நிறைந்ததாகச் செய். உன்னுடைய வேலை மிகச் சிறப்பாக இருந்திருக்கிறது. மைசூர் மிக நன்றாக ஒளியூட்டப்பட்டிருக்கிறது, இங்கிருந்து நாளை புறப்படு.''

10-1-1945

ஹைதராபாத் (டெக்கான்) நகருக்கு இன்று வந்து சேர்ந்தேன்.

11-1-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் தெரிவித்த தகவல் :- “இன்று இரவு 11.30 மணிக்கு ஒரு மிக விசேஷமான சக்தியை இயற்கை உனக்கு அளித்திருக்கிறது. அது இங்கே செய்ய வேண்டிய வேலையில் பயன்படுத்திக் கொள்வதற்காக அளிக்கப்பட்டது. இப்போது அதை நான் உனக்கு மாற்றிக் கொடுத்திருக்கிறேன். இந்த சக்தி இறைதூதர்களுக்கு அளிக்கப்படுவது. இன்றுவரையில் எந்த ஒரு பக்தருக்கும் இது ஒருபோதும் அளிக்கப்பட்டதில்லை.’’

14-1-1945

சுவாமி விவேகானந்தா கூறியது :- “பாராட்டுக்கள், உங்கள் வேலை முழுவதும் முதல் தரமான சிறப்புடையதாக இருந்தது. இந்தக் காற்று மண்டலத்தை எதிர்ப்பு மற்றும் போராட்ட உணர்வினால் நிரப்பியிருக்கிறீர்கள். எனவே உரிய நேரத்தில் நிஜாமின் ஆட்சி முடிந்து போகும். அது நடந்தேயாக வேண்டிய ஒரு விஷயம். அதில் மனம் வருந்த வேண்டாம். இதுவரையில் நீங்கள் செய்த உழைப்பின் பயன்களை உங்கள் தலைமுறை அடையப்பெறும். மேலும் இந்த உலகம் இருக்கின்றவரை நினைவுகூறப்படும். தென்னிந்தியாவின் எல்லாப் பகுதிகளுக்கும் நீங்கள் ஒளியூட்டியிருக்கிறீர்கள். இப்போது வட இந்தியாவின் முறை வருகிறது. தென்னிந்தியா மற்றும் துவாரகா (குஜராத்) செல்லும் இப்போதைய பயணத்தை நிறைவேற்றிய பிறகு அதற்கான ஒரு ஆரம்பமாக நீங்கள் டெல்லிக்குப் போக வேண்டும். நம்பிக்கை இழக்கவோ அல்லது காலம் போதுமா, என்று பயப்படவோ வேண்டாம். அது விரைவிலோ அல்லது தாமதமாகவோ வரும். தாமதமாக என்றால் நீங்கள் உடலை நீத்துச் சென்ற பிறகு என்ற பொருளில் சொல்கிறேன். எல்லாம் வல்ல கடவுளின் சித்தத்தினால் காலமே இல்லாமற் போனபிறகும் கூட இந்த விளைவு நீடித்திருக்கும். உங்கள் வாழ்க்கை உங்கள் நாட்டிற்கும் உலகத்திற்கும் ஒரு பொன்னான சந்தர்ப்பமாகும்.

உலகின் அனைத்து மதங்களையும் நீங்கள் உங்களுக்குள் ஈர்த்துக்கொண்டு புதியதான ஒன்றைத் தோற்றுவிப்பீர்கள்.''

''அஜந்தாவை நீங்கள் பார்க்க விரும்புவதால் அங்கே செல்லுங்கள். பிறகு பம்பாய்க்கும் துவாரகாவுக்கும் செல்லுங்கள். துவாரகாவில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உங்களுக்காக காத்திருப்பார், ஒரு புனிதமான பணியைக் கொடுப்பார்.''

## 19-1-1945 (ரயில்பயணம்)

மன்மாட் நகரிலிருந்து பம்பாய்க்கு ஒளியூட்டும்படி உத்தரவுகள் வந்தன.

## 21-1-1945 (ரயில்பயணம்)

சூரத் ரயில் நிலையத்தைக் கடந்து போகும் போது குஜராத்துக்கு ஒளியூட்டத் துவங்கும்படி உத்தரவுகள் வந்தன.

## 23-1-1945 (துவாரகா)

பகவான் கிருஷ்ணர் கூறியது :- "துவாரகாவுக்கு ஒளியூட்டு. என் மண்ணுலக வாழ்க்கையில் நீண்டகாலம் நான் வசித்த இடம் இது. அந்தப் புனிதமான மண் இதுவே தான். அதில் ஒரு பகுதியில் கடல் புகுந்து மூழ்கடித்து விட்டது. அதுவும் என் கட்டளையை நிறைவேற்றத்தான் நிகழ்ந்தது. இங்கே ஒக்கா கோட்டைக்குப் போ. அந்தப் பகுதிக்கு ஒளியூட்டு. அங்கே உன்னால் போக முடியவில்லை என்றால், இங்கே இருந்தபடியே அதற்கு (ஆன்மீக) ஒளியூட்டு. எனினும் எல்லா வகையிலும் நீ அங்கு போவதே நல்லது. இங்கிருக்கும் மக்கள் மிகவும் சுயநலமிகள். அன்பில்லாமை எங்கும் பரவியிருக்கிறது. இங்கு கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் அதே நிலைமை தான் பெரும்பாலும் காணப்படுகிறது. உலகியல் தன்மை (மாயை) யின் வலையில் அனைவருமே சிக்கியிருப்பது போலத் தோன்றுகிறது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்தரவுகள் :- "இங்கே வேலையை செய்து முடித்தபிறகு சொந்த ஊருக்குத் திரும்பிப்போ. வழியில் மதுராவில் ஒரு நாளோ அல்லது இரண்டு நாட்களோ

தங்கலாம். ஷாஜஹான்பூருக்கு உன் மனைவியை உன்னுடன் இப்போது அழைத்துச் செல்ல வேண்டாம். வருடாந்திரவிழா (பண்டாரா) துவங்கும் வரையில் இந்தத் தடை நீடிக்க வேண்டியிருக்கிறது. அவள் தானாகவே புறப்பட்டு ஷாஜஹான்பூர் வந்தால் அது பரவாயில்லை. ஆனால் சில காரணங்களைக் கருத்தில் கொண்டு, இப்போதைக்கு நீ அவளை அழைத்துச் செல்வது சரியானது என்று நான் நினைக்கவில்லை. துவாரகாவில் ஒக்கா கோட்டைக்கு நீ போவது அத்தியாவசியமானது.''

## 24-1-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்தரவு :- "(துவாரகாவில்) இந்தக் கோயில் போதுமான அளவுக்கு ஒளியூட்டப்பட்டிருக்கிறது. இப்போது இந்த நகரின்மீது கவனம் செலுத்து.

## 26-1-1945

சுவாமி விவேகானந்தாவின் குறிப்பு :- "இங்கே இனிமேலும் தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. நாளை இங்கிருந்து புறப்படுங்கள்.

## 27-1-1945

துவாரகாவை விட்டுக் கிளம்பினேன். ரயில்வே நிலையம் போய்ச் சேருவதற்கு முன்பு தென்னிந்தியா முழுமையும் - ஏற்கனவே முழுமையாக ஒளியூட்டப்பட்ட அதனை, ஒரே துண்டாக (ஒரே தனிப்பகுதியாக) எடுத்துக்கொண்டு பிராணாஹூதி அளிக்குமாறு உத்தரவுகள் வந்தன.

## 28-1-1945

மேஹ்சானா என்ற ஊரின் வழியே புகைவண்டி செல்லும் போது ராஜபுதனத்தின் (இப்போது ராஜஸ்தான் மாநிலம்) இரண்டு மக்கள் கூட்டத்தாரை அழிப்பதற்கு உத்தரவுகள் பெறப்பட்டன.

## 29-1-1945

மதுரா வந்து சேர்ந்தேன்.

## 31-1-1945

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- "(மதுராவில்) தென்னிந்தியா முழுவதும் ஒளியூட்டப்பட்டிருக்கிறது. துவாரகாவும் ஒளியூட்டப்பட்டுவிட்டது. இப்போது உன் முகத்தை வட இந்தியாவின் பக்கம் திருப்பு. காலங்கள் மாறிக் கொண்டிருக்கின்றன. அது விரைவில் மாற வேண்டிய தேவை இருக்கிறது. மாற்றத்தை உண்டாக்குவதில் உன் முயற்சிகளில் தயக்கம் எவ்வளவு இருக்கிறதோ அந்த அளவுக்கு காலங்கள் மாறுவதில் தாமதம் உண்டாகும். இயற்கை இந்த வேலையை முழுமையாக உன்னிடம் ஒப்படைத்துள்ளது. எனவே உன் குருவின் உத்தரவுகளுக்கு ஏற்றவாறு வேலை செய்துகொண்டே இரு. வட இந்தியாவுக்கு ஆன்மீக ஒளியூட்டிய பிறகு இந்தியா முழுவதையும் ஒரே அமைப்பாக எடுத்துக்கொண்டு பிராணாஹுதி கொடு. அதற்குப் பிறகு மேலும் வேலைகள் அளிக்கப்படும். அது பற்றிய குறிப்புக்கள் ஏற்கனவே உனக்குக் கிடைத்துள்ளன. உன் வேலையில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருக்கிறேன்.''

சுவாமி விவேகானந்தாவின் குறிப்பு :- "பாருங்கள், இவை பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே சொன்ன வார்த்தைகள். நீங்கள் வேலை, வேலை என்று வேலையில் மட்டுமே ஒட்டியிருக்க (நிலைத்திருக்க) வேண்டும்."

## 2-2-1945 (ஷாஜஹான்பூர்)

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "என்னால் செய்ய முடியாத வேலையை நீங்களெல்லாம் செய்ய முடிந்தால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். ஆன்மீக இயக்கம் ஒவ்வொன்றுக்கும் ஒரு முறையான சங்கம் இன்றியமையாதது. என் காலத்தில் மக்கள் அனைவருடைய எண்ணங்களும் என் மீது கவனம் குவிந்திருந்தன. அவர்கள் யாரிடமிருந்தும் பயிற்சியை எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் என் மீது மரியாதையும்,

அக்கறையும் கொண்டிருந்தார்கள். இதே முறையை நீங்களும் எடுத்துக்கொள்ளலாம்; அதாவது மக்கள் யாரை மிக உயர்ந்தவர் என்று கருதுகிறார்களோ அல்லது கடவுள் யாரை மிகவும் உயர்ந்தவராக உருவாக்கியிருக்கிறாரோ, அந்த ஒரு மனிதரிடத்தில் மக்கள் எல்லோருடைய எண்ணத்தின் சக்திகளும் ஐக்கியமடைய வேண்டும். நான் யாரை என்னுடையவர்களாகக் கருதுகிறேனோ, அவர்கள் சமீபத்தில் வடிவமைத்து உருவாக்கப்பட்ட விசேஷமான மனிதர்கள், தங்களைச் சார்ந்த மக்களை தனித்தனியாக தங்களை நோக்கி ஈர்த்துக்கொண்டு, அதன் பிறகு அவர்கள் யாரை மகத்தானவராகக் காண்கிறார்களோ மற்றும் கருதுகிறார்களோ அவருடன், அந்த மக்களுடைய இணைப்பை நிலை நிறுத்துவதாகிய இதுவும் கூட சாத்தியம் தான். இதனால் தங்களைச் சார்ந்து இருக்கின்ற சீடர்களை அவர்கள் கைவிட்டு விடவேண்டும்; அவர்களைப் பற்றிய பொறுப்பு, அவர்கள் யாரை மிக உயர்ந்தவர், மகத்தானவர் என்று கண்டறிந்தார்களோ அவரிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று அந்தப் பொருளில் நான் அப்படிச் சொல்லவில்லை. தங்கள் குருநாதருடைய - மாஸ்டருடைய பிரதிநிதியும், பதவியின் வாரிசும் ஆக இப்போது யார் இருக்கிறாரோ அவர் மூலமாகவே கட்டளைகள் வந்திறங்குகின்றன என்ற உறுதியான நம்பிக்கையை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்; அந்தக் கட்டளைகளை பின் பற்றி நடப்பது அவர்களுடைய கடமை என்பதை உணரச் செய்யவேண்டும் என்பதைத் தான் சொல்ல விரும்பினேன். அதாவது அந்தக் குறிப்பிட்ட நபரை என்னுடைய பிரதிநிதியாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும்.''

''ஒரு சங்கத்தை உருவாக்கி ஆரம்பிக்கின்றவர்கள், அவர்கள் யாரை முன் மாதிரியாகக் கொண்டிருக்கிறார்களோ, யாரைப்போல மற்றவர்களை உருவாக்க விரும்புகிறார்களோ, அவரைப் போல முதலில் தங்களை உருவாக்கிக் கொள்வதற்குப் பயிற்சி செய்ய வேண்டும். உதாரணமாக ஒருவருக்கு இனிப்புப் பண்டங்கள் சாப்பிடும் பழக்கம் இருக்கிறது; அவர் மற்றவர்கள் இனிப்பு சாப்பிடுவதை விட்டுவிடச் செய்ய வேண்டும் என்று

விரும்புகிறார் என்றால், முதலில் அவர் இனிப்பு சாப்பிடும் பழக்கத்தை விட்டுவிடவேண்டும். பிறகு தான் மற்றவர்களுக்கும் அப்படியே செய்யும்படி ஊக்கமளிக்க வேண்டும். மற்றவர்கள் எதைப் பயிற்சி செய்ய (பின்பற்ற) வேண்டும் என்று நான் விரும்புகிறேனோ அதை முதலில் நான் பயிற்சி செய்வேன். (பின்பற்றி நடப்பேன்). அதுவே என் வாழ்க்கை முழுவதிலும் எனக்குப் பழக்கமாக இருந்தது. இந்தக் கோட்பாட்டினை கருத்தில் வைத்துக்கொண்டு நீங்கள் யாவரும் இந்த சங்கத்தை அமைப்பதைத் தொடருங்கள். ஒரு விஷயத்தை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். அதாவது பயிற்சியளிப்பவரிடம் எந்த ஒரு குறைபாடு வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ இருந்தாலும், அது நெடுந்தூரம் சென்று (அதன் விளைவு விரைவில் போகாமல நீடித்து) தனது குருவின் உருவத்தை தியானம் செய்வதைப் பின்பற்றுகின்ற சாதகரிடத்தில் விரைவாக ஊடுருவிப் பரவிவிடும். யாருடைய ஆன்மீக உள்நிலை சமநிலை பெற்ற தன்மையை அடைந்திருக்கிறதோ, எந்த ஒருவர், ஆன்மீக மார்க்கத்தின் தகுதி நிலைகளில் தடை செய்யப்பட்டுள்ள குறைபாடுகளிலிருந்து விடுபட்டிருக்கிறாரோ, அல்லது நன்னெறி ஒழுக்கத்தின் புனிதத்தன்மை மிகுந்த நிலைக்கு மாறியிருக்கிறாரோ அம்மாதிரி ஒரு குருவின் உருவத்தை மட்டுமே தியானம் செய்ய மேற்கொள்ள வேண்டும் என்று கூறப்படுவதற்கு அதுவே காரணம். எனவே பயிற்சியளிக்கின்றவர் அந்த மாதிரி ஒரு உயர்நிலையை எய்தியவராக இருந்தாலன்றி, இப்படி தனது உருவத்தை தியானம் செய்யும் பயிற்சியை பயிற்சியளிக்கும் எல்லோருக்கும் சொல்லக்கூடாது என்று நான் நினைக்கிறேன். இதனால் பயிற்சியளிப்பவர் ஒவ்வொருவரும் தனது சீடர்கள் தன் உருவத்தை தியானம் செய்வதற்கு ஏற்றுக்கொள்ளத் தகுந்தவாறு தன்னை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.''

<u>4-2-1945</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :-
"நான் இப்போது ஃபடேகரிலிருந்து வருகிறேன். அந்த முதிய பெண்மணி (லாலாஜியின் மனைவி) யும் கூட பேராசைக்கு

பலியாகிவிட்டாள். சுவாமி விவேகானந்தாவிடம் அறிவுரை தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்.''

சுவாமி விவேகானந்தா கூறியது :- “முன்னேற்றத்தின் பாதையில் தடையாக வரும் அம்சங்கள் அனைத்தும் அழிக்கப்படவேண்டும். இங்கே பாருங்கள். உங்கள் முன்னால் இருக்கும் செயல்களம் மிகப்பெரியதாகும். ஆனால் அது நாம் தக்க வைத்துக்கொள்வதற்கு விரும்பாத அம்சங்களால் குறுகியதாக ஆக்கப்பட்டிருக்கிறது. இன்று முதல் உங்கள் வேலையில் நான் உங்களுக்கு உதவியாக இருப்பேன். அதை என் வேலை என்றும் கடமை என்றும் நான் கருதுகிறேன். உங்கள் குரு இன்று அவருடைய வேலையை என் பொறுப்பில் கொடுத்திருக்கிறார். அவர் நம்மை வழிநடத்திச் செல்லும் சக்தியாக இருப்பார். இந்த வேலை சம்பந்தமாக நீங்கள் என்னிடமிருந்து நேரடியாக உத்தரவுகளைப் பெறுவீர்கள். நான் கூறுவது போல உங்களுக்குக் கீழ் இருப்பவர்களை நீங்கள் வழிகாட்டி அழைத்துச் செல்வீர்கள். எதிர்மறை எண்ணங்களை ஒட்டுமொத்தமாக மறந்துவிடுங்கள். அவர்கள் வகித்துவரும் உயர்ந்த பதவிகளின் காரணமாக உங்கள் சகோதரர்களைப் பற்றி மதிப்பிடுவது எனக்கும் பெரிய சிரமமாக இருக்கிறது. நீங்கள் முதலில் அவர்களைச் சரியான வழிக்குக் கொண்டு வந்து, பிறகு வேலையில் ஈடுபடுத்த வேண்டும். வெற்றியடையும் பாதையில் சஞ்சல புத்தி (நிலையான முடிவெடுக்க இயலாமல் அலையும் மனம்) ஒரு விஷத்தைப் போன்றது. இந்த வேலையைச் செய்வதற்காக உறுதியான சங்கல்பம் கொண்ட, திட சித்தமுடைய மனிதர்கள் எனக்குத் தேவை.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “(நமது சங்கத்தை சரிப்படுத்துகின்ற) இந்த வேலையின் பொறுப்பை சுவாமி விவேகானந்தாவிடம் ஒப்படைத்திருக்கிறேன். இப்போது அதற்கு முறைப்படி என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வார். நீங்கள் அனைவரும் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். அவருடைய கட்டளைகளுக்குப் பணிந்து நடப்பதில் நீங்கள் கொஞ்சம் தயக்கம் காட்டினாலும் என் கோபம்

முழு வேகத்துடன் இறங்கும். ஓரளவுக்கு நான் M1 - மீது அதிருப்தி அடைந்திருக்கிறேன். அவர் தனது முந்தய மனநிலைக்கும் பழக்கத்திற்கும் திரும்பியிருக்கிறார். அப்படி ஒரு உயர்ந்த தரத்தில் இருக்கின்ற மனிதர் மக்கள் தன்னை நாடி வரும்படி செய்யத் தவறியிருப்பது எத்தனை வருந்தத்தக்க ஒரு விஷயம். இதைப் பற்றி என் பிரியமான ராம்சந்த்ராவிடம் சொன்னேன். ராம்சந்த்ரா இதை அவர் மீது (M1 மீது) இருக்கும் மரியாதையினால் மற்றும் தன்னைவிட வயதில் மூத்தவர் என்பதால் அவரிடம் சொல்லவில்லை. இப்போது நான் அதைச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. முதலில் என் சொந்த மக்களோடு நான் கடுமையாக (கண்டிப்புடன்) இருக்க ஆரம்பிக்கப்போகிறேன். லேசாகக் காற்று அடித்தாலும் முழுவதும் நடுங்குகிற அளவுக்கு அவர் (M1) தன்னைத் தளர்ந்து போக விட்டுவிட்டார். நிலை மாறும் இந்த உலகில் எந்த ஒருவரையும் கவலைகள் விடுவதில்லை. கவலைகளின் வடிவம் மட்டும் தான் மாறிக்கொண்டிருக்கிறது. சிலருக்கு ஒருவிதமான கவலையால் துன்பம்; வேறு சிலருக்கு வேறுவிதமான கவலையால் துன்பம். நான் மட்டும் கவலைகள் இல்லாமல் இருந்தேனா? ஆயினும் எவ்வளவு கவலைகள் இருந்தாலும், எப்போதாவது என் கடமைகள் எதையாவது நான் செய்யாமல் தவறினேனா? (M1 போன்ற) அவ்வளவு ஆன்மீகத் தகுதிபெற்ற ஒரு மனிதர், அவர் எவ்வளவு தான் சுத்திகரிப்பு செய்யப்பட்டிருந்தாலும், அவருடைய சொந்த விருப்பத்தின் பழக்கதோஷத்தின் காரணமாக, அதன்போக்கில் இழுத்துச் செல்லப்பட்டு விடுவார். ஆகையால் (M1) - அவர் தன் சங்கல்ப சக்தியை வேலை செய்யவிட்டு, தன்னை சீரழிக்கும் இந்த எண்ணங்களுக்கு இடமளிப்பதைத் தவிர்க்க வேண்டும். காலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு தன்னை அவர் வடிவமைத்துக் கொள்ளவேண்டும். பழைய தந்திரங்கள் இப்போது முடிவுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அவர் (M1) ஏராளமாக வேலை செய்யவேண்டியிருக்கிறது. ஆனால் அவருடைய மனப்போக்கு அதில் நாட்டம் கொண்டதாக இல்லை; வெற்றியின் வடிவத்தைக் காண்பிக்கக் கூடிய அம்மாதிரி

வழிகளையோ, ஊடகத்தையோ அவர் கட்டமைத்துக் கொள்ளவும் இல்லை.’’

‘‘அவருடைய (M1 உடைய) நன்மைக்காக ஒரு சுலபமான வழியை நான் சொல்கிறேன். அவர் தவறாமல் தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அதைச் செய்யவேண்டும். அது பிரார்த்தனை தான். எண்ணங்களின் வடிவில் அவருடைய பார்வையில் வருகின்ற அவருடைய குறைபாடுகளை கடவுளின் முன்வைத்து, அவற்றிலிருந்து விடுபடுவதற்காகப் பிரார்த்தனை செய்யவேண்டும். அவரது வழக்கமான தியானப் பயிற்சியையும் செய்துவர வேண்டும். குளிர்ச்சி தரும் சந்தனமரத்தில் நெருப்பை உண்டாக்க முடியும் அல்லவா? உலர்ந்து வளைந்து போன மரத்தை வெப்பமூட்டும் செயல் முறையினால் நேராக்க முடியும் அல்லவா? M1 - மக்கள் அவரை நோக்கிக் கவர்ந்து இழுக்கப்படும்படியாக இயல்பூக்கம் (இயல்பு ஊக்கம்) பெறுமாறான வகையில் தன்னை உருவாக்கிக் கொள்ளவேண்டும். இந்த விஷயம் சம்பந்தமாக அவர் எதைப்பற்றி அறிந்துகொள்ள விரும்பினாலும், அவர் எப்போது வேண்டுமானாலும் என்னைக் கலந்து ஆலோசிக்கலாம். நான் பதில் சொல்வேன். அவரிடம் (M1 - இடம்) வந்து விட்ட இந்த விஷம் அவருடைய சீடர்களிடையே பரவிவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். அந்தக் காரணத்துக்காகவே நான் எச்சரிக்கை செய்கிறேன். விசேஷமாக உத்தரவுகள் இடுகிறேன். வெறும் ஆன்மீகம் மட்டும் பயன்தராது. வெகு சிலர் தான் அதை உண்மையாகப் புரிந்து கொள்ளும் திறமை உடையவர்களாக இருக்கிறார்கள். பொதுவாக மக்கள் வெளிப்புறத்தில் காணப்படுவதின் அடிப்படையில் தான் உள்முகமான திறமையைக் கண்டறிகிறார்கள். எனவே பேசுவதில் மென்மையும், புனிதமான நெகிழும் தன்மையும், கவரும் தன்மையும் இருக்கவேண்டும். இதை அனைவருக்காகவும் நான் சொல்கிறேன். ஆன்மீகத்தைப் பொறுத்தவரையில் ஒருவருக்கு எந்த குறைபாடும் இல்லையென்றாலும், அதன் வெளிப்பாடு (ஆன்மீகப் பண்புகள் நடத்தையில் தெரிவது) போதுமான அளவுக்கு இல்லையென்றால்

அவரை பூரணமானவர் (முழுமை பெற்றவர்) என்று நான் சொல்லமாட்டேன். தனது செயலை வெற்றிகரமாக செய்வது என்பது வேறு விஷயம். ஆயினும் இப்போது இரண்டாவது முக்கியமான கருத்துக்கு வருகிறேன். அதாவது ஒருவர் தன் சொந்த நோக்கத்திற்காக வேலை செய்கிறார்; ஆனால் மற்றவர்களை உருவாக்குவதற்கான தகுதி பெற்றவராக, தன்னை அவர் உருவாக்கிக் கொள்ளவில்லை என்றால் அவரை சுயநலக்காரர் என்றே குறிப்பிட நான் தயாராக இருக்கிறேன். இந்த வார்த்தைகள் கடுமையாக இருப்பதாகத் தோன்றலாம். ஆனால் இந்த வார்த்தைகளால் அவர் தன்னை தயாராக்கிக்கொள்வதற்குத் தூண்டப்படுவாரானால், இந்த வார்த்தைகளில்தான் மிகவும் இனிப்பு அடங்கியிருக்கிறது என்பேன். M1 - க்காக நான் கூறியிருப்பதை நீயும் (ராம்சந்த்ரா) குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். இதை அடிக்கடி மற்றும் பல சமயங்களில் படித்து இதை நினைவில் பசுமையாக வைத்திருக்கவேண்டும்.''

தென்னிந்தியப் பயணம் பற்றிய சுருக்கமான மதிப்புரை :- வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “என் பிரியமுள்ள ராம்சந்த்ரா தென்னிந்தியாவில் சுமார் ஒன்றரை மாதம் பயணம் செய்து திரும்பி வந்தார். அவர் செய்த முக்கியமான காரியங்களைக் காண ஞானக்கண்கள் வேண்டும். அவருக்கு இடப்பட்ட ஒவ்வொரு கட்டளையையும் அவர் முழுமையாக நிறைவேற்றியிருக்கிறார். அவருடைய வேலையில் ஒரு மிக விசேஷமான அம்சம் இருந்தது. அது அவரது மூளையின் திறன் பற்றி ஏராளமாகச் (பல தொகுதிகள் புத்தகம் எழுதும் அளவுக்கு) சொல்கிறது. அதாவது அதற்கு உரிய பொருத்தமான இடங்களில், தன்னுடைய வேலையை (அதையடுத்து) யாராவது வந்து கெடுத்துவிடாமல் இருக்கும் வகையில், அச்செயலை தடுக்கும் நுட்பமான முடிச்சுசுளைப் போட்டுவிட்டார். அவருடைய வேலையின் மற்றொரு சிறப்பம்சம் என்னவெனில் அவர் அந்த நிலத்தின் தரைமட்டத்துக்குக் கீழே பல கஜங்கள் (3 அடி நீளம் – 1 கஜம்) ஆழம் வரையில் ஒளியூட்டியிருக்கிறார். அவர்

வேலை செய்யும் வழிமுறை மிகச் சிறந்த ஒன்றாக அமைந்திருந்தது. ஒரு குறிப்பிட்ட இடத்தை – ஊரைச் சென்றடைவதற்கு முன்பு, முதலில் அங்குள்ள நிலப்பகுதியில் என்னென்ன குறைபாடுகள், தீமைகள் ஊடுருவியிருந்தாலும், அதை வெளியே இழுத்து எடுத்து விடுவார். அதைவிடச் சிறப்பானது என்னவெனில், அவர் அந்தத் தீமை சுற்றுப்புறச் சூழ்நிலையில் பரவ அனுமதிப்பதில்லை. அவர் வெளியேற்றிய மற்றும் பொறுக்கியெடுத்த அந்தக் குறைபாடுகள் மற்றும் தீமைகள் அபாயகரமான தொற்று நோயின் தன்மை போல் மாற்றமடையாத வகையில் அதன் நச்சுத் தன்மையை (விஷத்தை) நீக்கி சுத்திகரிப்பும் செய்யப்பட்டன. ஒரு இடத்தில் அவர் ஒரு சிறு குறும்பு (விஷமம்) செய்தார் என்பதில் சந்தேகமில்லை. அதாவது துவாரகைக்குப் போய்ச் சேர்ந்தவுடன் அங்கிருந்த குறைபாடுகளினால் உண்டாக்கப்பட்ட விளைவை அவர் வெளியே எடுத்து, அதை சுத்திகரிப்பு செய்வதற்குப் பதிலாக, அதை அப்படியே மேற்கு நோக்கி திசை திருப்பிவிட்டார். இந்தச் செயலை நான் விஷமம் (குறும்பு) என்று குறிப்பிட்டேன்; ஆனால் உண்மையில் அச்சமயத்தில் என் விருப்பமும், அதுவாகத் தான் இருந்தது. (சற்று இடைவெளி) அடுத்த நூறு ஆண்டுகளுக்கு ஆன்மீக சக்தியினால் அவற்றை சக்தியூட்ட வேண்டிய தேவையில்லாத படி, அம்மாதிரி ஒரு விளைவினால் கோல்களை அவர் நிரப்பித் திணித்திருக்கிறார். இன்னும் சிறப்பான விதத்தில் அவர் எங்கெல்லாம் செல்ல வேண்டியிருந்ததோ அந்தத் தெருக்களையும் குறுகிய பாதைகளையும், தியானம் செய்வதற்குப் பொருத்தமான இடங்களாக மாற்றும்படியாக அவர் ஆன்மீக சக்தியினால் நிரப்பியிருக்கிறார். சில நகரங்களில் அங்கு ஒவ்வொரு சுவரும் கதவும் அதன் விளைவைப் பெறும் விதத்தில் ஒளியூட்டப்பட்டுள்ளது. அதன் சுற்றுப்புறச் சூழ்நிலை முழுவதிலும் அதன் பரமணுக்கள் ஒளியூட்டப்பட்டிருக்கின்றன. யாராவது அந்தப் பரமணுக்களை அசுத்தப்படுத்திவிடாமல் தடுப்பதற்குத் தகுந்த தடைகளை அவர் ஏற்படுத்தியிருக்கிறார். பல சமயங்களில் அது சில நகரங்கள் முழுவதிலும் அப்படி நிகழ்ந்திருக்கிறது. அதாவது அங்கு வசிக்கும் மக்கள் ஆன்மீகத்தில் அனைத்து

நிலைகளையும் கடந்திருப்பார்கள். ஆயினும், அது என் நோக்கமாக இருக்கவில்லை. ஏனெனில் அது அப்போது இயற்கையின் வேலைக்கு ஒரு முடிவை ஏற்படுத்தியிருக்கும்; வேற்றுமை மற்றும் ஒன்றுக்கொன்று முரண்படுதல் என்ற இயற்கையின் ஜீவனே மறைந்து போயிருக்கும். இவ்வளவு செய்தும் அவருக்கு நியமிக்கப்பட்ட ஏதாவது வேலையை நிறைவேற்றி முடிப்பதில் குறை ஏற்பட்டுவிடக்கூடாது என்று எப்போதும் சற்று பய உணர்வுடன் இருந்தார். இம்மாதிரி ஒரு கனமான பணியில் முனைப்புடன் ஈடுபட்டாலும், தன் கையில் உள்ள காரியம் செய்து முடிக்கப்பட்டு விட்டதா இல்லையா என்பதில் அவர் நிச்சயமில்லாமல் இருந்தார். இதன் காரணம், அவரது எண்ணம் சாதகமாயிற்று என்பதை அறியும் எல்லையைத் (விளிம்பைத்) தொடாதிருக்கும் அந்த அளவுக்கு அவர் தன்னையே அங்கு இல்லாமல் செய்திருந்தார் என்பதேயாகும். அது என்னுடைய தவறு தான்.''

''இந்தப் பயணத்தின்போது ஒரு ஆசை அவருக்கு வந்தது. அதாவது கன்யாகுமரிக்கப் போய்ச் சேர்ந்தவுடன், இதற்கு முன்பு ஒருபோதும் நடந்திராத விதத்தில் கடற்கரை அருகே கடலில் இருந்த ஒரு பாறையை மனோவசிய சக்தியுடையதாகச் (மன சக்தியுடையதாக) செய்ய விரும்பினார். சுவாமி விவேகானந்தா அதற்கு அனுமதியளித்து, அவருடைய பாறைக்கு அருகிலிருந்த ஒரு பாறையை அதற்காகச் சுட்டிக்காட்டினார். ஆயினும் மக்கள் அவரது அந்தப் பணியை உணர்ந்தறிவதும், என் பெயரோடு சம்பந்தப்படுத்தி (விவேகானந்தர் பாறை என்பது போல) அதை நினைப்பதும் கிட்டத்தட்ட சாத்தியமில்லை என்று எண்ணி அம்முயற்சியை விட்டுவிட்டார். ஒரு விதத்தில் அதுவும் சரியாகவே இருந்தது. ஏனென்றால் தனது அளவற்ற வலிமை உடைய விருப்பத்திற்கு ஏற்ப அவர் அப்படி ஏதாவது செய்திருந்தால், அந்த வழியாகப் போகும் பாதையே தடை பட்டுப்போயிருக்கும் என்பதும் சாத்தியம் தான். அலெக்ஸாண்டிரியாவின் எல்லை என்ற பழமொழி போல ஆகியிருக்கும்."

(குறிப்பு : இங்கே எகிப்தில் இருக்கும் அலெக்ஸாண்டிரியா என்ற நகரம் குறிப்பிடப்படுகிறது. அது மகா அலெக்ஸாண்டர் என்ற கிரேக்க மன்னனால் உருவாக்கப்பட்டது. அலெக்ஸாண்டருக்குப் பிறகு ஏதன்ஸ் (கிரீஸ் நாட்டின்) நகரின் கலாசாரத்திற்கு அது பிரதிநிதியாக, தலைமையிடமாக விளங்கியது. அது மதம், தத்துவஞானம், சமுதாய வாழ்க்கை, விஞ்ஞான அறிவு, வர்த்தகம், மற்றும் அனைத்து விஷயங்களுக்கும் மையமாக இருந்தது. இதனாலேயே பிறநாட்டவர்கள் அதில் ஊடுருவி ஆக்கிரமித்து அந்த கலாசாரத்தை அழித்துவிட்டு, வேறு கலாசாரத்தை உருவாக்கினார்கள். இப்படிப் பல முறை நிகழ்ந்தது. இவ்வாறாகவே அலெக்ஸாண்டிரியாவின் வலிமையே அதன் பலவீனத்துக்கும், வரம்புக்கு உட்பட்ட நிலைக்கும் மீண்டும் மீண்டும் காரணமாகியது. அதுவே பழமொழியாகிவிட்டது. அங்கு மிகப்பெரிய ஒரு நூலகம் இருந்தது. ரோமானிய சக்கரவர்த்தி ஜூலியஸ் சீஸர் கிறிஸ்து பிறப்பதற்கு 47 ஆண்டுகளுக்கு முன்பு முதல் முறை தீயிட்டு நாசம் செய்தார். பிறகு இரண்டாவது முறை, கிறிஸ்து பிறந்து 4ஆம் நூற்றாண்டின் முடிவில் கிறிஸ்தவ தலைமைப் பாதிரியார் ஒருவர் அதை அழித்தார். 7ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரேபியர்களால் அது மீண்டும் அழிக்கப்பட்டது. அதாவது அலெக்ஸாண்டிரியாவின் மைய நூலகத்தில் மீதமிருந்த பகுதிகளை கி.பி.641 – ஆம் ஆண்டு காலிப் ஓமர் என்பவர் தீயிட்டு எரித்தார் என்று கூறப்படுகிறது.

இது அலெக்ஸாண்டரின் சுவர் என்று (ஸாத் – ஏ – சிக்கந்தரி) மத வரலாறுகளில் கூறப்படும் சுவர் பற்றிய குறிப்பாகவும் இருக்கலாம். இஸ்லாமிய மதநூல்களில் இதைப்பற்றி நிறைய முரண்பட்ட கருத்துக்கள் உள்ளன. அது புதிராக, மர்மமாக இருக்கிறது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி ஒரு சுவர் எங்கிருக்கிறது? அதன் அடையாளம் என்ன? அதை எப்படிக் கண்டறிவது என்பதையெல்லாம் தீர்மானிப்பது மிகவும் சிரமமானது. எனவே இங்கே லாலாஜி கூறிய உதாரணத்துக்கு அலெக்ஸாண்டிரியாவின் எல்லை என்ற இதுவே மிகப் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.)

‘‘முடிவாக ராம்சந்த்ரா எனது பெயரை நித்தியமாக நிலைக்கச் செய்திருக்கிறார் என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன். மரியாதைக்குரிய முனிவர்களின் பார்வையில் அவரது மதிப்பு மிக விசேஷமான பரிமாணங்களை அடைந்திருக்கிறது. மிக உயர்நிலை பெற்ற முனிவர்களுடைய தனி அமைப்பில் ஏதோ ஒரு இடத்தில் அவரைப் பற்றிய பதிவு தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதும் சாத்தியமே. இந்த வேலையின் காரணமாக அவர் மீது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் பார்வையில் ஒரு மிக விசேஷமான நிலைப்பாடு ஏற்பட்டுள்ளது. அவர் ஊரில் இல்லாத (தென்னிந்தியப் பயணம் சென்றிருந்த) அந்தக் காலம் முழுவதிலும், பகவான் ஸ்ரீகிருஷ்ணருடைய சக்ராயுதம் அவருடைய வீட்டைச் சுற்றி வந்து கொண்டிருந்தது என்பது மிகவும் பெருமைப்படத் தகுந்த விஷயம். ஸ்ரீ கிருஷ்ணரே தன் கைகளால் அவருடைய வீட்டுக்குப் பாதுகாப்பு கொடுத்திருக்கிறார். அவரது மகனை ரயில் தண்டவாளத்திலிருந்து நீக்கியதும் ஸ்ரீகிருஷ்ணருடைய வேலை தான். (இது ஃபருக்காபாத் மாவட்டத்தில் குடாகஞ்ச் ரயில் நிலையத்தில் நடைபெற்ற சம்பவத்தைக் குறிப்பிடுகிறது. அங்கே பாபுஜியின் இரண்டாவது மகனாகிய தினேஷ் சந்திரா ரயில் தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தார். அவர் ஒரு தடைவ அங்கிருந்து அகற்றப்பட்டார். ஆனால் மறுபடியும் அவர் அங்கேயே போய் உட்கார்ந்து கொண்டார். அப்போது யாரோ ஒரு சிறுவன் அவர் கையைப் பிடித்து, அந்தத் தண்டவாளத்தில் ரயில் வருவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பு, வெளியே இழுத்து வந்து விட்டார்.) இந்தப் பயணத்துக்கு அவர் நாள் குறித்த உடனேயே பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவருடைய குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை எடுத்துக்கொண்டார். அதன்படி அவர் ஊரில் இல்லாத சமயத்தில் அவரது சக்ராயுதம் செயல்படுவதற்குத் தூண்டப்பட்டது. பிப்ரவரி 2 – ஆம் தேதி காலை 9.30 மணிக்கு அவர் தூக்கத்திலிருந்து விழித்தெழும் வரையில் அந்தச் சக்கரம் இயங்கிக் கொண்டிருந்தது. ராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்ட பிறகு அவர் செய்த வேலைகள் அனைத்தையும் வயிற்று வலியின் வேதனையுடன்தான் செய்தார்.’’

## 5-2-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "சுவாமி விவேகானந்தாவுடன் சேர்ந்து, என் சகாக்களாகிய எனது செயல் களம் முழுவதையும் மிகவும் கவனமாகக் கவனித்தறிந்தேன். அவர்களில் பெரும்பாலோர் சீழ் நிரம்பிய பழுத்த வேனல்கட்டிகளின் தன்மையை அடைந்திருக்கிறார்கள். நிறையப்பேர் தலை முதல், கால் வரை முழுவதும் சீழ் நிரம்பிய மனித உருவங்களாக மாறிப்போயிருக்கிறார்கள்; மற்றும் எனக்கு எதிரானவர்களாகவும் போய் விட்டார்கள். இதனால் என்னை அவர்கள் குருவாக ஏற்றுக்கொள்ளவில்லை என்று அர்த்தமில்லை. ஆனால் அவர்கள் மற்றவர்களை நம்பிச் சார்ந்திருக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுடைய சீழ் இவர்களுக்குள் பெருகத் துவங்கிவிட்டது. சீழ் நிரம்பி விட்டதால் உண்டாகும் வலியின் துடிப்பை தெய்வீகத்தின் மீதான கவர்ச்சியின் அடுத்தடுத்து வரும் வேதனை என்று சிலர் நினைத்திருக்கிறார்கள். இந்தச் சீழ் நிரம்பிய தன்மை எத்தனையோ பேருடைய ஒவ்வொரு நரம்பு மற்றும் தசை நாரிலும் பரவும்படி ஆழமாகப் போயிருக்கிறது. இந்தச் சீழை வெளியே எடுப்பது ஒரு சாதாரண மனிதரால் ஆகாத காரியம். இந்தச் சமயத்தில் அவர்களிடையே எந்த ஒருவரும் இதை நீக்கக்கூடிய தகுதியுடையவராக இல்லை. இந்த மக்கள் என் பிரியமான ராம்சந்த்ராவின் மீது தங்கள் நம்பிக்கையை நிலைக்க வைத்துக்கொண்டாலன்றி அந்தத் தீமையை நீக்க முடியாது. அவர்களில் சிலருடைய நரம்பு மண்டலம் உலகியல் தன்மையின் (லௌகீக விஷயங்களின்) நெருப்பும், புகையும் தவிர எதுவும் விட்டுச் செல்லாத அளவுக்கு கெட்டுப்போயிருக்கிறது. என் கட்டளையின்படி இந்த நிலைமை ஒரு சமயம் சுத்திகரிப்பு செய்யப்பட்டது. ஆனால் அவர் அதில் அலட்சியமாக இருந்தபோது – அதுவும் என் கட்டளைப்படி தான் – அந்த மனிதர்கள் தங்கள் பழைய கெட்டுப்போன நிலைமைக்கே திரும்பிப் போய்விட்டார்கள். இதன் காரணம் மிக வெளிப்படையானது. அதாவது ஆன்மீக ரீதியாக அவர்களுக்குத் தீமையே

ஏற்படுத்துகின்ற அந்த மனிதர்களின் சகவாசத்தை அவர்கள் கைவிடவில்லை.’’

வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - க்காகக் கூறியது :- “இந்த நிலைமையை மருத்துவக் கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு பொருள் கூறினால், அவர்களிடம் உடல் அழுகி சிதையும் நிலை வந்துவிட்டது என்று சொல்லலாம். இப்படி உருக்குலைந்து போன பொருளை கெட்டு அழுகிப்போன தன்மை என்று லூயிஸ் கோஹென் பெயரிட்டிருக்கிறார். இந்த நிலைமையை ஆன்மீகப் பார்வையிலிருந்து வேறு ஒரு விதத்தில் கெட்டு அழுகிப்போன தன்மை என்று நான் சொல்கிறேன். ஒளியூட்டப் பெற்ற இதயம் கொண்ட ஒரு மனிதர் இந்த மக்களின் முன் உட்கார்ந்தால் அவர்களிடமிருந்து ஒரு துர்நாற்றம் வெளிப்படுவதை உணர்வார். இப்போது இந்த நிலைமைக்கு நிவாரணம் தரக்கூடியது அறுவைசிகிச்சை மருத்துவரின் கத்தியைப் பயன்படுத்துவது தான். சில மனிதர்களுக்கு அறுவை சிகிச்சை தேவைப்படலாம்; வேறு சிலர் இந்த மார்க்கத்தை விட்டு வெளியேறிவிடலாம். இவ்விரண்டுமே சாத்தியம் தான், மார்க்கம் என்றால் இப்போதைய பயிற்சி முறையைச் சொல்கிறேன். இதற்கு முந்தியவை அனைத்தும் ஏற்கனவே உடைத்து நொறுக்கப்பட்டுவிட்டன. உங்கள் முன்னே காணப்படுகின்ற இந்த நிலைமையைத் தான் நான் தெரிவித்திருக்கிறேன். எனக்குக் கிடைத்த வார்த்தைகளின் அளவுக்கு அவர்களின் நிலைமை பற்றிய மிகச்சரியான விளக்கம் இது. சிலர் நல்ல மனிதர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் மற்றவர்களுடைய மேலாதிக்கம் அவர்களில் பலரிடத்தில் ஆழமாகப் பதிந்திருக்கிறது.’’

<u>6-2-1945</u>

சுவாமி விவேகானந்தா கூறியது :- “நானே இந்த நிலைமையை கவனித்துப் பார்த்தேன். இப்போது சீரழிவுக்குக் காரணமாகி வேலை செய்து கொண்டிருக்கின்ற கெடுதலான அம்சங்கள், நீக்கப்படத் தான் வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்திருக்கிறேன். இப்போது உங்கள் மாஸ்டருடன் தொடர்பு

இல்லாத ஆன்மாக்களால் - கருப்பான அதாவது ஒளியற்றவர்களாகிய மனிதர்களால் - உங்கள் மாஸ்டரின் (லாலாஜியின்) பணிகள் சுமூகமாக நடத்திச் செல்லப்பட வேண்டும் என்ற கருத்து உங்கள் சகோதரர்களிடையே (லாலாஜியின் சீடர்களிடையே) பரவி உள்ளது. உங்கள் குருவையே நானும் என்னுடைய பிரபுவாக (தலைவராக) ஏற்றுக்கொண்டிருக்கிறேன். குள்ளநரிகளின் பழக்கத்தைப் போலவே அவர்களின் கருத்து பொருத்தமாக உள்ளது. (நரிகளில் ஒன்று முதலில் ஊளையிட்டாலும் மற்ற நரிகளும் ஊளையிடத் துவங்கும்). இந்த மனிதர்களும் அது போல சிந்திக்காமலே சத்தம் போடுகிறார்கள். தற்சமயத்துக்கு நாங்கள் எதைத் தவிர்த்துக் கொண்டிருக்கிறோமோ அதை நோக்கி எல்லாம் வல்ல இறைவனின் சித்தம் நகர்ந்து கொண்டிருக்கிறது. (சற்று இடைவெளி) உங்கள் குருவின் முன்னால் நீங்கள் எப்படி உட்கார்ந்திருப்பீர்களோ அப்படி என் முன்னால் உட்கார்வதற்கு உங்களை அனுமதிக்கிறேன்.''

''தெய்வீகப் பணியைச் செய்வதில் M1 – இடத்தில் மந்தநிலை இருக்கிறது. அந்த மாதிரி ஒரு உயரிய தரத்தில் (அல்லது நிலையில்) இருக்கும் மனிதர் வேலையில் அலட்சியம், மந்த நிலை இதுபோன்ற விஷயங்களைத் தவிர்க்க வேண்டும். அவருடைய சங்கல்பம் (மனோசக்தி) பலவீனமாகியிருக்கிறது. அதை அவர் மொத்தமாக மறந்துவிட வேண்டும். வெல்ல முடியாத அளவு தைரியமும், அசைக்க முடியாத சங்கல்பமும் அவருக்கு இருந்திருக்க வேண்டும். பிரியமான ராம்சந்த்ராவைத் தவிர இவ்வுலகில் ஒரு உயர்ந்த தரமுடைய வேறு ஒருவர் கிடையாது என்பதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும். அவர் (M1) இந்த (சாதாரண) விஷயங்களுக்காக வரவில்லை. இவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு உங்களைத் தனிமைப் படுத்திக்கொள்ளுங்கள். அவர் உண்மையான விதத்தில் ஒரு சன்னியாசி போல வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதே என் நோக்கம். உங்கள் குருவை அன்பின் அவதாரம் என்றே நான் சொல்வேன். உண்மையாகவே அவர் அப்படித் தான் இருக்கிறார். பிரியமான ராம்சந்த்ரா தன்

சங்கல்பத்தை முழு அளவுக்குப் பயன்படுத்தி தன் கடமைகளை நிறைவேற்றியிருக்கிறார். அவருக்கு நியமிக்கப்பட்ட கடமைகள் சம்பந்தமான முழு நிகழ்ச்சிகளையும் அவரே திட்டமிட்டார். பிரயாணம் செய்யும்போது அவருக்கு வந்த வயிற்றுவலியையும் தாங்கிக்கொண்டு தென்னிந்தியா முழுவதையும் அவர் ஒளியூட்டியிருக்கிறார். அவரிடமிருந்து என்ன விரும்பப்பட்டதோ அவை அத்தனையையும் அவர் செய்து முடித்தார். அவர் உலக சாதயையை முறியடித்திருக்கிறார். அவருடைய குருவினால் அவருக்கு அளிக்கப்பட்ட தெய்வீக ஞானத்திற்காக அவரைப் பாராட்டுகிறேன். சுருக்கமாகச் சொன்னால் அவருடன் ஒப்பிட்டுச் சொல்லக் கூடியவராக அல்லது அவரது வேலையில் அவருடன் போட்டியிடக் கூடியவராக, இப்போது இவ்வுலகில் ஒருவரும் கிடையாது. நமது தலைவராகிய அவருடைய தகுதிமிக்க மாஸ்டரினால் தான் இவையாவும் நிகழ்ந்தன என்பதை நான் மீண்டும் மீண்டும் சொல்வேன். இனி எந்நாளும், குறிப்பாக முனிவர்களிடையே அவர் நினைவு கூறப்படுவார் என்பதை தீர்க்க தரிசனமாகவே சொல்கிறேன்."

<u>7-2-1945</u>

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- "உனது பயணத்தைப் பற்றி மகாத்மா ஃபடேகர் ராம்சந்த்ரஜி ஏற்கனவே நிறையச் சொல்லிவிட்டார். அவர் சொல்லியிருப்பவை அனைத்தும் வார்த்தைக்கு வார்த்தை சரியானதே. ராம்சந்த்ரா ஆன்மீக உலகை அதிசயிக்க வைத்துவிட்டார். இம்மாதிரி விலைமதிக்க முடியாத ஒப்பற்ற ஒரு மனிதர் அங்கேயும் (மேல் உலகிலும்) தேவைப் படுகிறார். இந்த உலகம் மிக விரைவான மாற்றத்தை விரும்பிக் கேட்கிறது. தர்ம சிந்தனையும் ஒழுக்கமும் அற்ற மனிதர்கள் இவ்வுலகிலிருந்து நீக்கப்பட வேண்டும். அவர் (ராம்சந்த்ரா) மேல் உலகிற்குச் சென்றடைந்தால் இந்த வேலையை மிக விரைவில் செய்து முடிக்க முடியும். ராம்சந்த்ராவை மேலுலகத்திற்கு அழைக்கும் இந்தத் தூண்டுதல் பரமாத்மாவிடமிருந்தே (பரம்பொருளின் தன்மையிலிருந்தே) நேரடியாக பல முறை வந்திருக்கிறது. ஆயினும் ராம்சந்த்ராவை சிரமப்பட்டு

உருவாக்கியிருக்கும் மரியாதைக்குரிய ஆன்மா (லாலாஜி சாஹேப்) தனது உழைப்பின் பயன்களை இன்னமும் சுவைக்கவில்லையே என்ற கேள்வி எஞ்சியிருக்கிறது. இந்த விஷயத்தைக் கருத்தில் கொண்டுதான் ராம்சந்த்ராவை இன்னும் இங்கேயே நிறுத்தி வைத்துக்கொள்வதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர் பரமாத்மாவுடன் அதிகபட்சமான நெருக்கத்தை எய்தியிருக்கிறார்; மற்றும் அதனுடன் மிக ஆழ்ந்த உறவையும் நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார்."

## 8-2-1945 (மதிய வேலை)

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "ஒருவேளை பண்டாராவில் (வருடாந்திர விழாவில்) வெற்றி கிடைக்கவில்லை என்றால் - அப்படி நேராமல் கடவுள் தவிர்ப்பாராக - கடவுளின் அருளினால் அது அப்படி நேர்ந்து விடக்கூடாது என்றாலும் – அப்படி நேரும் பட்சத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் சக்ராயுதத்தின் முழு சக்தியையும் அங்கே திரளச் செய்வதற்கு நான் உனக்கு அனுமதியளிக்கிறேன். அங்கே இருப்பது யாராக இருந்தாலும் சரி அவர்களுக்கு அழிவு உண்டாவது பற்றி கொஞ்சமும் கவலைப்படத் தேவையில்லை. அப்படி நடந்து விட்டால், ஷாஜஹான்பூரிலிருந்து வந்திருக்கும் உங்கள் மனிதர்கள் அனைவரும் உடனடியாக அந்த இடத்தை விட்டுப் போய்விடவேண்டும். நான் மற்றொரு கட்டளையும் இடுகிறேன். எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கே பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை உடனே அழைக்கவேண்டும். நீ என்ன விரும்புகிறாயோ அதைத் தராமல் இருக்க அவரால் முடியாது என்று நான் உறுதியளிக்கிறேன். நானும் சுவாமி விவேகானந்தாவும் அங்கே முழு ஆற்றலுடன் வந்து இருப்போம். முழு இதயத்துடன் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் நீ எதையாவது கேட்டுக்கொண்டால் அந்த அமைப்பு முழுவதும் தலைகீழாகக் கவிழ்க்கப்பட்டுவிடும். மேலும் ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். பரமாத்மாவுடன் (பரம்பொருள் தன்மையுடன்) உனது அதிகபட்சம் நெருங்கிய தன்மை எந்த அளவுக்குச் சென்றிருக்கிறது என்றால் அதையும் கூட சுழலும் சக்கரம் போன்ற (அனைத்தையும்

அழிக்கும்) நிலைக்குக் கொண்டு வர முடியும், பிரளயம் எனப்படும் இறுதியான பேரழிவுக் காட்சி அங்கே நிலவ வைக்கப்படும் என்ற நிலையைப் பெற்றுள்ளது. இந்தப் பேரழிவு சக்திகளைப் பற்றி நீ அறியாமலிருக்கிறாய். இதன் காரணம் வெளிப்படையானது. இந்த விஷயங்களெல்லாம் உன் கவனத்துக்கே வராத அளவுக்கு உன்னை என்னுடன் ஐக்கியம் அடையச் செய்திருக்கிறாய். இதனால், உன்னுடைய மனோநிலை எந்தச் சமயத்திலும் கோபத்தில் பொங்கிவிடக்கூடாது என்று விரும்புகிறேன். அப்படிக் கோபம் வந்துவிட்டால் அதைத் தடுப்பதற்கு விசேஷ உத்தரவு கொடுத்தாலன்றி மொத்த அமைப்பும் சீர்குலைந்து போகும். உன்னை கிட்டத்தட்ட அவ்விதமாகவே நான் உருவாக்கியிருக்கிறேன். எது தேவையோ அதைவிட அதிகமான எதுவும் உன்னால் செய்யப்படுவது கூடாது என்று நான் விரும்புகிறேன்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து இப்போது M1 - க்காக கூறியது :- அவர் கடுமையான கோபம் கொண்ட நிலைக்கு வந்தால், அதனால் உண்டாகும் அழிவு இயற்கையின் விதிக்கு எதிராக இருந்தாலும் கூட, அந்தக் கோபம் முழுமையான அழிவை ஏற்படுத்திவிட முடியும் என்ற அந்த சக்தியை ராம்சந்த்ராவுக்கு நான் கொடுத்திருக்கிறேன். ஆனால் அதற்கான காலம் பழுத்து வரும் வரையில் அவருடைய செயலின் காரணமாக இது ஒருபோதும் நிகழ முடியாது. ஏனெனில் அவருடைய கடிவாளம் என் கையில் இருக்கிறது. இந்த மாதிரிச் சக்திகள் வேறு யாரிடமாவது நிரப்பப்பட்டிருந்தால், அவர் (அனைத்தையும் அழிக்கிறேன் என்று) கொதித்து எழுந்திருப்பார். ஆனால் ராம்சந்த்ராவுக்கு அது இயற்கையிடமிருந்து வந்த ஒரு கட்டளை. அதற்கேற்றவாறு தன்னை அவர் கட்டமைத்துக் கொண்டிருக்கிறார். இந்த சக்திகள் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கப்படுகிறவையல்ல. பிரதிநிதி (வாரிசு) களுக்கும் கூட இந்த சக்திகள் கொடுக்கப்படுவதில்லை. உண்மையாகச் சொல்லப்போனால் மிக உயர்ந்த தகுதிச் சிறப்புடைய மாஸ்டர்களிடம் கூட இந்த சக்திகள் காணப்படவில்லை.

பிரபஞ்சத்தின் துவக்கத்திலிருந்து இதுவரையில் இந்த சக்திகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பாதுகாக்கும் கிடங்காக நான் மாறியிருந்தேன் என்பதில் சந்தேகமில்லை. அத்தகைய சக்திகளின் சுமையைத் தாங்க ராம்சந்த்ராவின் உடல் நலத்தைப் போன்ற ஒன்றால் தாங்க இயலாது. அப்படி சாத்தியமில்லாததை சாத்தியமாக்கியிருப்பது என் திறமை தான். இந்த எல்லாவற்றிலும் அதிசயம் என்னவெனில், உடலின் ஆரோக்கிய நிலை இந்த சக்திகளைப் பயன்படுத்துவதற்குத் தடையாக இருக்காது என்பதே. என் ஆயுட்காலத்தில் பரம்பொருள் தன்மையின் (பரமாத்மாவின்) அதிகபட்ச நிலை வரையில் நான் எட்டியிருந்தேன். அதே அளவுக்கு அவருக்கு அதை நான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன்.''

''இப்போது M1 - உடைய பிரச்னை பற்றி சுருக்கமாகச் சொல்கிறேன். அவருடைய மாமா (அல்லது சித்தப்பா) (R1) அதற்குத் தடையாக இல்லாதிருந்தால் அவரும் (M1) காலத்தின் (உலகின்) கஷ்டங்களை மகிழ்ச்சியோடு தாங்கிக்கொண்டு இருந்திருந்தால், என்னிடமிருந்து ஏராளமாகப் பெறுவதற்கான உரிமையை அவரும் சம்பாதித்திருப்பார். எப்படி இருந்தாலும், இப்போதும் கூட, என் பிரியமான ராம்சந்த்ரா ஒருவரைத் தவிர, அவருக்கு இணையாக யாரும் கிடையாது. வேறு எங்கும் காணமுடியாத ஒரு விஷயம் என்னவெனில், இந்த ஆசாமி (M1) எல்லை கடந்த விதத்தில் என்னை நேசித்தார் என்பதே. அதன் பலனாக இந்த உயர்ந்த நிலையில் என் கண்குளிர அவரைப் பார்க்கிறேன். உண்மையான சத்தியமான ஒரே விஷயம் இந்த அன்பு தான். நீங்கள் இருவரும் (M1 மற்றும் ராம்சந்த்ரா) உங்கள் சீடர்களிடத்தில் இதை (அன்பை) உருவாக்கவேண்டும் என்பதே என் அறிவுரை. இந்த அன்பு தான் அனைத்திலும் அனைத்துமாக இருக்கிறது. அதன் மூலமாக அனைத்தையும் சாதிக்க முடியும். அதற்கு மாறானதாக இருந்தால் வெளி முகமாகவும் உள் முகமாகவும் செய்கின்ற அனைத்துப் பயிற்சிகளும், தியானங்களும் ஒரு பயனும் தராது. பிரியமான ராம்சந்த்ரா கண்டிப்பான விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றின்

எல்லைகளுக்கு உட்பட்டு, எந்த விதத்திலும் ஒருபோதும் சிரமப்பட்டதே இல்லை. (தீவிரமாக ஆன்மீகப் பயிற்சி செய்ததில்லை). ஆனால் இந்த விஷயத்தில் மற்றவர்கள் அவரை உதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அவர் ஒரு விசேஷமான பாத்திரம். அவருடைய இந்த குணத்தின் மீது மக்களின் கவனம் செல்லவும் கூடாது. இந்த இருபது அல்லது இருபத்திரண்டு ஆண்டுகளில் (பயிற்சி விஷயத்தில்) அவரது உழைப்பு சராசரியாக ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் தான். அதையும் கூட ஒரு சம்பிரதாயத்தை நிறைவேற்றும் எண்ணத்தில் மட்டுமே செய்தார். ஆனால் இது மற்றவர்களுக்கு ஒரு உதாரணமாக ஆகிவிடக்கூடாது. இன்று நான் வெளியே சொல்லிவிட்ட இவ்விஷயங்கள் மிகப்பெரிய ரகசியமாகும். அவர் விரும்பினால், அவர் விருப்பத்திற்கு ஏற்ப இயற்கைக்கு கட்டளைகள் பிறப்பிக்கப்படும் அளவுக்கு இயற்கையை அவர் தன்னை நோக்கி ஈர்த்துக்கொண்டிருந்தார். ஆனால் என்னை ஒரு போதும் ஒதுக்கிவிடாமல் இருந்தது அவரது பெரும் பண்பாகும். நாங்கள் ஒருவருக்கொருவர் இயற்கையாகவே தேவையானவர்களாக மாறியிருக்கிறோம். இது பின்பற்றத் தகுந்த ஒரு உதாரணமாகும்.’’

M1 - கேட்ட ஒரு கேள்விக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் வெளிப்படுத்திக் கூறியது :- “B1 - பிரம்மாண்ட மண்டலத்தில் இருந்து கீழ் நோக்கி தன் முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கிறார். அங்கே அவரிடம் வறண்ட தன்மை விளங்குகிறது. உடல் சார்ந்த மண்டலத்திலிருந்தும் (சரீர மண்டலத்திலிருந்தும்) கூட பொழிவான தன்மை விலகிப்போக ஆரம்பித்துள்ளது. அவர் அனுபவத்தையும் சுயமாக முடிவெடுக்கும் தன்மையையும் சார்ந்திருக்கிறார். பிரம்மாண்ட மண்டலத்தின் களத்தை இன்னமும் மொத்தமாக அவர் கைவிடவில்லை. அவருடைய உதவியாளர்கள் அவரை மகராஜ் (புனிதம் மிகுந்தவர்), ஹூஸூர் (மரியாதைக்குரிய மாஸ்டர்) என்றெல்லாம் கூறி அவர் மனதில் உயர்வான கர்வத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். (சற்று இடைவெளி) R7 - மனத்தின் துள்ளாட்டத்தை ஆன்மிகம் என்று

சொல்லிக்கொண்டிருக்கிறார். அங்கே நிஜமான நெகிழ்வுத் தன்மையும், மென்மையும் முற்றிலும் காணாமற்போயிருக்கின்றன.''

9-2-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் விளக்கம் : " M1 - விவரித்துள்ள பிராணாஹூதியின் விளைவு, பிரியமான ராம்சந்த்ராவின் மரியாதைக்குரிய தந்தையிடமிருந்து வந்து கொண்டிருந்தது. இச்சமயத்தில் ராம்சந்த்ராவுக்கு சமமாக தன்னை யாராவது சொல்லிக் கொள்ளமுடியுமா? நிச்சயமாக முடியாது. இது தன் தந்தைக்கு ராம்சந்த்ரா (பாபுஜீ) மூன்று நிமிடங்கள் அளித்த பிராணாஹூதியின் விளைவு. இப்போது அவருடைய தந்தையிடம் அமைதித் தன்மை பெருமளவு அதிகரித்துள்ளது. அவரது உள் நிலை காதுகேளாத, வாய் பேச இயலாத நிலையைப் போல் உள்ளது. (அதாவது ஆழ்ந்த நிலையில் - அந்த அனுபவத்தைக் கூற இயலாத, வெளியில் உள்ள எதுவும் அதை பாதிக்காத நிலையில் இருப்பது) ராம்சந்த்ரா தன் தந்தையிடத்தில் திடீரென்று ஒரே சமயத்தில் எல்லையற்ற தன்மையை நிரப்பிவிட்டார்.''

ராம்சந்த்ராவிடம் (பாபுஜீயிடம்) கூறியது :- ''இப்போது நான் அதற்கு உத்தரவளிக்கும் வரை, உன் தந்தைக்கு மீண்டும் பிராணாஹூதி அளிக்க வேண்டாம்.''

M1 - க்குச் சொன்னது :- ''ராம்சந்த்ரா தன் தந்தையை குதுப் (துருவா), குதுப் – அல் – அக்தப் (துருவாதிபதி) ஆகிய ஆன்மீக நிலைகளைக் கடந்து, கவுஸ் – அல் – ஆஸம் (மகா பரீசத்) என்ற பதவியில் நிலை நிறுத்தியிருக்கிறார்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் விளக்கம் தொடர்கிறது :- ''பிரியமான ராம்சந்த்ரா அவருக்கு மட்டுமே அல்லது என் இதயத்துக்கு மட்டுமே தெரிந்த வரை வயிற்று வலியினால் சிரமப்பட்டுக் கொண்டிருந்த போதும் தன் வேலையை அவர் தவிர்க்கவேயில்லை. இந்த விஷயம் பின்பற்றி நடக்கத் தகுந்தது. அதேபோல இருப்பதற்கு எல்லோரும் விருப்பம் கொள்வார்களாக.

அது அப்படியே ஆகுக. M1 – உடைய பதிவுகளை (சம்ஸ்காரங்களை) அனுபவிக்கத் தொடங்குமாறு பிரியமான ராம்சந்த்ராவுக்கு நான் உத்திரவிட்டிருக்கிறேன். அதில் ஒரு பகுதியை அவர் ஏற்கனவே தனதாக எடுத்துக்கொண்டிருக்கிறார். இதற்காக தேவை ஏன் வந்தது என்றால் ராம்சந்த்ராவின் அனுபவத்திற்கு வரவேண்டிய பதிவுகள் - அவரது சொந்த சம்ஸ்காரங்கள் மிகச்சில மட்டுமே எஞ்சியுள்ளன என்பது தான். ராம்சந்த்ரா தானே அனுபவித்துத் தீர்ப்பதற்கு எடுத்துக் கொண்டுள்ள M1 - உடைய அந்தப் பதிவுகளுக்கு, அவற்றின் பலன் விரைவாக உருவாகும் படி வடிவமைப்பதற்காக, நான் சக்தியளித்திருக்கிறேன். இதன் மூலமாக அதிலிருந்து ஏதோ ஒரு வகையில் M1 – உம் கூட விடுதலை பெறலாம். அவர் (M1) குடும்பம் மற்றும் பிற விஷயங்கள் சம்பந்தமாக ஏராளமான கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்.

## 10–2–1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது :- “அவருடைய வழிகாட்டியாக (குருவாக) M1 - மீது எனக்கு அன்பு இருக்கிறது. மேலும் என் வேலையில் அவர் உதவியாக இருந்திருக்கிறார். வருங்காலத்திலும் அப்படியே இருப்பார் என்று எதிர்பார்க்கிறேன். மேலும் சொன்னால், பிரியமான ராம்சந்த்ராவுக்கு உரியதான என் அன்பே, M1 - ஐ அதிலிருந்து விடுவிக்கச் சொல்லி என்னைக் கட்டாயப்படுத்துகிறது. ஆகையால் அவருடைய (M1 – உடைய) ஆயுட்காலத்தில் அவை தீர்ந்துபோகும் வரையில் சுலபமாக அனுபவித்துத் தீர்க்க முடிகிறவாறு அந்த அளவு பதிவுகளை மட்டும் அவருக்கு (M1 - க்கு) விட்டுவைக்குமாறு பிரியமான ராம்சந்த்ராவுக்கு நான் உத்திரவிட்டேன். மீதியிருக்கின்ற M1 - உடைய பதிவுகளை ராம்சந்த்ரா அனுபவித்துத் தீர்க்கவேண்டியிருக்கிறது. நான் அவர் மீதான அன்பின் தாக்கத்தில் இல்லாதிருந்தால், அவருடைய (ராம்சந்த்ராவின்) பதிவுகளை நானே ஏற்றுக்கொண்டு அனுபவித்திருக்கும்போது, என் பிரியமான ராம்சந்த்ராவை வேறு

ஒருவருடைய பதிவுகளை ஏற்றுக்கொண்டு அனுபவிக்குமாறு உத்திரவிட்டிருக்க மாட்டேன் என்பது M1 – க்குத் தெளிவாகப் புரியட்டும்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஒரு கேள்வி எழுப்பினார். ''நமது மார்க்கத்தில் இருப்பவர்களிடத்தில் மெதுவாகப் புகுந்து விட்ட குறைபாடுகளை வருங்காலத்தில் தவிர்ப்பதற்கு உரிய சாதனம் (வழிமுறை) என்னவாக இருக்க முடியும்?'' நான் (பாபுஜி) அதற்கு ஒரு பதில் சொன்னேன். அதற்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய கருத்து :- "மிகச்சரியான வடிவமைப்பில் அமைக்கப்பட்ட இம்மாதிரி ஒரு மூளை, இதற்கு முன் ஒருபோதும் பிறந்ததில்லை. வருங்காலத்திலும் கூட இப்படி ஒன்று வருமா? என்பது பற்றி அதிக நம்பிக்கை இல்லை. எனவே, உங்கள் அனைவருக்கும் எனது அறிவுரை என்னவெனில், அவரை நீங்கள் நண்பராகவோ, வழிகாட்டியாகவோ, எப்படி எடுத்துக்கொண்டாலும், வயதில் பெரியவர், சிறியவர் என்பது பற்றிய எந்த சிந்தனையும் இல்லாமல், நீங்கள் எல்லோரும் ராம்சந்த்ராவிடமிருந்து நன்மை பெறுங்கள். ஆன்மீகத்தின் பாதையில் தீர்வுக்கு அப்பாற்பட்டதாக இன்னமும் நீடிக்கின்ற சிக்கலான பிரச்னைகள் தீர்க்கப்பெறுங்கள். இந்தக் காலம் மீண்டும் மீண்டும் திரும்பிவராது. இப்படி ஒரு மகாபுருஷர் மீண்டும் வருவார் என்று எதிர்பார்க்கவும் முடியாது. இலவசமாகக் கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இவ்விஷயத்தில் பரமாத்மாவின் (பரம்பொருள் தன்மையின்) ஏதோ ஒரு விசேஷமான திட்டம் இருக்கிறது என்பதையும் நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன். எனவே அந்தப் பரமாத்மா, ராம்சந்த்ராவின் மூலமாக உதவியளிக்க முடியும் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறது. இந்த வார்த்தைகளை பரமாத்மாவின் தகுதி நிலையில் நான் சொல்கிறேன். ராம்சந்த்ராவின் மனத்தை தெய்வீக மனமாகக் கருதி ஏற்றுக் கொள்ளுங்கள். தன்னுடையது என்பதாக அவரிடத்தில் எதுவுமே மீதமில்லை. அதனால் தான் எவ்வளவுதான் கஷ்டமான கேள்வியாக இருந்தாலும்,

கேள்வியைக் கேட்டவுடன் பதில் வருகிறது. அவரது சிந்தனை சிறிதளவும் நேரம் எடுத்துக்கொள்வதில்லை. சற்று முன்பு நான் மிக முக்கியமான மற்றும் கஷ்டமான ஒரு கேள்வி கேட்டேன். கேள்வி வந்த உடனே பதில் தயாராக இருந்தது. தங்கத்தில் நறுமணமும் சேர்ந்தது போல அவர் கூறிய வழிமுறை அவருடைய எண்ணத்தில் மிகச்சிறந்த வழியில் வந்திறங்கியது. அது அந்தக் கேள்வியின் நோக்கமாக இருக்கவில்லை. ஆனால் அந்தக் கேள்விக்கான பதிலுடன் அந்த வழிமுறையும் அத்தியாவசியமாகவே இருந்தது. அவர் வெளிப்படுத்திய வழிமுறை கீழ்க்கண்டவாறு :-

‘‘பிராணாஹுதிக்காக ஒரு பிரிசெப்டர் முன் யாராவது உட்கார்ந்திருக்கும் போது, பிரிசெப்டர் முதலில் சாதகரின் இதயத்தை சுத்திகரிக்க வேண்டும். அதன்பிறகு எல்லாப் புள்ளிகளையும், சாதகரது பயிற்சிக்குத் தடையாக இருக்கின்ற உலகியல் சார்பான குறைபாடுகள் நீக்கப்படும் அளவுக்கு சுத்திகரிப்பு செய்யவேண்டும். அந்த எல்லாப் புள்ளிகளும் முழுதும் மலர்ச்சி அடைந்து விடும் அளவுக்கு சுத்திகரிப்பு செய்வது என் நோக்கம் அல்ல. ஆனால் ஆன்மீகப் பாதையில் வரும் குப்பைகளையும், அசுத்தங்களையும் நீக்குவது மட்டுமே என் எண்ணம். அதன்பிறகு சாதகருடைய மூளையின் லேசான ஒரு ஆற்றல், அவருடைய இதயத்துக்குத் திருப்பிவிடப்படுகிறது. இந்த ஆற்றல் ஓரளவுக்கு சுத்திகரிக்கப்பட்ட பிறகு சாதகரின் காரண சரீரத்துடன் இணைக்கப்படுகிறது. அதற்குப் பிறகு சாதகருக்குள் எது ஊடுருவிச் செல்ல வேண்டுமென விரும்பப்படுகிறதோ, அதை விதை வடிவத்தில் அந்த சாதகரின் காரண சரீரத்தினுள் அவர் (பயிற்சியளிக்கும் பிரிசெப்டர்) அறிமுகப்படுத்த வேண்டும். மேலும் காரண சரீரத்தில் இருக்கும் காலி இடங்கள் (விதை வடிவில் அதற்குள் புகுத்தப்பட்டுள்ள தன்மையை உள்ளடக்கிக் கொள்ளும் அளவுக்கு) ஆழமாக்கப்படுகின்றன. இந்தக் காரணத்திலிருந்து விளைவு உண்டாகிறது. இவ்வாறாக, காரண சரீரத்தில் எது விதை வடிவில் இருக்கிறதோ, அது அனுபவிக்கப்படுவதற்காக பலன் தரும் வடிவத்தல் இறங்கி

வருகின்றது. ஆனால் இதெல்லாம் ஒரு சாதாரண மனிதர் செய்யக்கூடிய காரியம் அல்ல என்பதை நான் மீண்டும் சொல்ல வேண்டியிருக்கிறது.''

''இந்த வழிமுறைக்கு மாற்று வழிமுறையும் இருக்கிறது. மேலே கூறப்பட்ட வழிமுறையை (இப்படித் தவறாகப் பயன்படுத்துகிறோமே என்ற) வெட்கமில்லாமல் அல்லது புலன் உணர்வுகளின் பேராசையால் அல்லது தன்னை மற்றவர்கள் வணங்கி வழிபட வேண்டுமென்ற நோக்கத்தினால் யாராவது செயல்படுத்தினால், யாரிடமாவது இந்தப் பயிற்சியின் விளைவு நீக்கப்படவேண்டும் என்று விரும்பினால் (அதாவது பேராசையும், தன்னல எண்ணமும் உடைய அம்மனிதர் யாரிடமாவது இந்த வழிமுறையைப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட விளைவு நீக்கப்பட வேண்டுமானால்) அதற்காக மாற்றுமுறை கீழ்க்கண்டவாறு (இப்படிக் கெடுக்கப்பட்டுள்ள) சாதகரின் காரண சரீரம் பிரம்மாண்ட மண்டலத்தின் காரண சரீரத்துடன் அல்லது அதற்கும் மேலான (பிரம்மாண்ட மண்டலம்) உலகத்துடன், பிரம்மாண்ட மண்டலத்துக்கு உரிய பாதையை சுத்திகரிப்பு செய்தபிறகு, அதனுடன் இணைக்கப்படவேண்டும். அதன்பிறகு அந்தக் குறையை நீக்கிவிடுவதற்கான திட்டம் சூட்சுமமான பிரம்மாண்ட உலகிற்குக் கொண்டு வரப்படவேண்டும். சம்மந்தப்பட்ட மனிதர் பிரம்மாண்ட மண்டலத்தின் நிலை வரையில் ஒரு அண்மையைப் பெற்றிருந்தால், அதற்கான மாற்று வழிமுறைக்கு அதைவிட இன்னும் உயர்ந்த நிலைக்குச் செல்ல வேண்டும். அந்த நிலை வரையில் ஒரு அண்மையைப் பெறுவது எல்லோருக்கும் முடியாது.''

சுவாமி விவேகானந்தா கூறியது :- "இங்கே பாருங்கள், ஏசு கிறிஸ்து இங்கே எங்களுடன் இருக்கிறார். மிக உயரிய ஒரு ஆன்மா அவர்! ஏசுகிறிஸ்துவின் விருப்பத்தின்படி பிறகு உங்களுக்கு ஏதாவது வேலை கொடுக்கலாம் என்று நாங்கள் ஒன்று சேர்ந்து முடிவெடுத்திருக்கிறோம். ஐரோப்பாவின் அழிவு முடியட்டும், பிறகு பார்க்கலாம்.

ஏசு கிறிஸ்து கூறியது :- "ஐரோப்பா அழிய வேண்டும் என்பது கடவுளின் விருப்பம். இனி மிக விரைவில் ஐரோப்பாவின் அழிவுகளின் மீது புதிய ராஜ்யங்கள் முளைக்கும். நாகரீகம் அதன் உச்சத்தில் தானாகவே அதன் அழிவின் வடிவத்தை எடுத்துக்கொண்டிருக்கிறது. கிறிஸ்தவ மதம் மறைந்து போகும். நான், சுவாமி விவேகானந்தா மற்றும் உங்கள் வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஆகிய எங்களின் கீழ் வேறு ஒரு வடிவத்தை அது பெறும். இந்தியா எழுந்து கொண்டிருக்கிறது. ஆனால் அது மெதுவாக நிகழ்கிறது. உலகில் வேறு எந்தப் பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும் ஐரோப்பாவில் பதவி மற்றும் அதிகாரத்தின் மீதான மோகம் மிகப்பெரிய அளவில் இருக்கிறது.''

சுவாமி விவேகானந்தா கூறியது :- "தற்போதைக்கு உங்களுக்கு எந்த வேலையும் அளிக்கப்படாது.''

## 11-2-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - க்காகக் கூறியது :- "இப்போது நான் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். இது அவருடைய முதல் தீட்சையாக (R2 - வுக்கு அளித்தது) இருந்தாலும் கூட, பிரியமான ராம்சந்த்ரா தீட்சை அளிக்கும் வழிமுறையையும் கூட மாற்றியமைத்திருக்கிறார். அதில் நிச்சயமாக தயக்கம் இருந்தது. மாற்றியமைக்கப்பட்டுள்ள இந்த தீட்சை முறை நடைமுறைக்கு வர நான் அனுமதிக்கிறேன். இப்போது என் சீடர்களாக, என் வழி வந்தவர்களாக இருப்பவர்கள் அல்லது வருங்காலத்தில் வர இருப்பவர்கள் யாராயினும் இந்த வழிமுறையைப் பின்பற்ற வேண்டும். இது வரையில் யாருடைய மனதிற்கும் தோன்றாத இந்த வழிமுறைதான் மிகச்சிறந்தது. இது மிகவும் சாதாரணமாகவும், எளிமையாகவும் தோன்றினாலும் கூட, இதனால் எண்ணற்ற நன்மைகள் உள்ளன. அதன் நன்மைகளை விவரிக்க என் சொற்களால் இயலாது. அனுபவம் மட்டுமே அதைச் சொல்ல முடியும். பயிற்சியளிப்பதற்கு M1 - யாருக்கு அனுமதியளிக்கிறாரோ அவர்களுக்கு இந்த வழிமுறையை, தேவைப்படும்போது சொல்லலாம். தீட்சையளிப்பதில்

மாற்றியமைக்கப்பட்ட வழிமுறையாக, பிரியமான ராம்சந்த்ரா கண்டுபிடித்துள்ள வழிமுறை கீழ்க்கண்டவாறு :-

“முதலில் தன் சொந்த மாஸ்டருடன் மற்றும் அவருக்கு முந்திய முதல் மாஸ்டருடன் சீடனுடைய இணைப்பை நிலை நிறுத்த வேண்டும். அதன் பிறகு சீடனுடைய இதயத்திலிருந்து அவனுடைய மூளைக்கு இணைப்பை ஏற்படுத்தி, அதன் இணைப்புச் சங்கிலி, முதலில் ஏற்படுத்தப்பட்ட இணைப்புடன் இணைக்கப்பட வேண்டும். அதன் பிறகு இதயத்திலிருந்து மனத்தின் வழியாக, அந்த முதல் மாஸ்டருடன் (ஆதிகுருவுடன்) இணைப்பு உண்டாக்கப்பட்டிருப்பதாக சிந்திக்கவேண்டும். மேலும் இது லேசான ஆற்றலுடன் தூண்டப்பட வேண்டும்.’’

‘‘வருங்காலத்தில் இது மட்டுமே ஒரே வழிமுறையாக இருக்கும். இந்தக் கண்டுபிடிப்பு பிரியமான ராம்சந்த்ராவின் பெயருக்கு உரியதாக இருக்கும். இம்மாதிரி விஷயங்கள் அவரிடமிருந்து வெளிப்படுவது வருங்கால நலத்துக்கானது.’’

‘‘M1 – இனால் அளிக்கப்பட்டுள்ள தீட்சைகள் எதுவாயினும், அவை இந்த வழிமுறைக்குத் தகுந்தவாறு திருத்தம் செய்யப்பட வேண்டும். என்னுடன் தொடர்புடையவர்களாக நீடிக்கின்ற என் சகாக்கள் அனைவரும் இந்த வழிமுறையைப் பயன்படுத்த வேண்டும். இதை ஒரு கண்டிப்பான உத்தரவாக எடுத்துக் கொள்ள வேண்டும்.’’

‘‘ராம்சந்த்ரா மற்றும் ஒரு நிபுணத்துவம் மிக்க காரியமும் செய்திருக்கிறார். அதாவது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து நேரடியாக அனுமதி பெற்று இந்த தீட்சையை அளித்திருக்கிறார்.’’

<u>12-2-1945</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “இங்கே பார் M1, உனக்கான தேவையையும், எனக்கான தேவையையும் கூட பிரியமான ராம்சந்த்ரா தானே செய்து முடித்துவிட்டார். அவர் இன்னும் ஒரு கண்டுபிடிப்பையும் செய்திருக்கிறார். மிகவும் சிரமமாக இருந்த ஒரு விஷயத்தை அவர் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு

சுலபமாக ஆக்கியிருக்கிறார். அந்த வழிமுறையே சிரமமானதாக இருக்கிறது என்றாலும் கூட, இந்தக் காலத்தில் அது எல்லோரும் செய்யக்கூடிய காரியம் அல்ல. எப்படியிருந்தாலும், அவர் எப்படி அதைச் சரியாகத் தெரிந்து கொண்டார் என்பதற்காகவே இந்தப் பாராட்டு.''

''அந்த முதல் வழிமுறை, ஒரு குரு, ஒரு சாதகரை ஆரம்ப நிலை ஆன்மீக மட்டங்களை (ஆரம்ப ஆன்மீக நிலைகளை) ஓரளவுக்குக் கடக்கச் செய்த பிறகு, புள்ளிகள் மற்றும் சக்கரங்களுக்கிடையே உள்ள நிலைகளை ஒரு நிழலான வழியில் பயணம் செய்ய வைத்தபிறகு, சாதகர் தன் சொந்த முயற்சிகளின் வாயிலாக தனது புள்ளிகளையும் சக்கரங்களையும் திறக்கச் செய்வதற்கான, சாத்தியமான சாதனம் சம்பந்தப்பட்டது ஆகும். இந்த நோக்கத்திற்கு இரண்டு சாதனங்கள் உண்டு. ராம்சந்த்ரா இரண்டாவது சாதனத்திற்கு முக்கியத்துவம் தந்திருக்கிறார். நானும் அதற்கே முன்னிலையளிக்கிறேன். முதலாவது சாதனம் ஒருவருடைய மூளையிலிருந்து அவரது (சாதகரின்) சொந்த இதயத்துக்கு லேசான அளவில் பிராணாஹூதி அளித்துக்கொண்டே இருப்பதாகும். இந்தச் செயல் நுட்பத்தை ராம்சந்த்ராவும் சரி, நானும் சரி, ஆதரிக்கவில்லை. ஏனெனில் உண்மையில் தேவைப்படுவதை விட அதிக அளவில் பிராணாஹூதி அவருக்குள் பாய்ந்து கொண்டே இருக்கும் சாத்தியம் அதில் உண்டு. எப்படியிருந்தாலும், இந்த ஒரு சாதனம் நிச்சயமாக இருக்கிறது, மற்றும் அது சரியானதாகவும் இருக்கிறது.''

''இரண்டாவது சாதனம் அந்த சாதகர் தனக்கு முன்னே தனது சொந்த சூட்சும சரீரம் இருப்பதாகக் கருதி, அதன் பிறகு அந்த சூட்சும சரீரத்தின் இதயத்திற்கு பிராணாஹூதி அளிக்கும் வழிமுறையாகும். ஒருவர் இப்படிச் செய்து கொண்டே இருந்தால் தொடர்ந்து முன்னேற்றம் மிக நன்றாக உறுதியாக்கப்படும். இதே சாதனத்தின் (வழிமுறையின்) இரண்டாவது கிளை. அது எல்லோரும் செய்யக்கூடிய காரியம் அல்ல என்றாலும், கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. இதைச் செய்வதற்கு மிகவும்

உயர்பண்புகள் உடைய கூருணர்வுத்திறன் உடைய மனிதர் தேவை. தனது சொந்த சூட்சும சரீரம் ஐக்கியநிலை (ஃபானா) என்ற உள்நிலையை அடையும் வரை மற்றும் அதன்பிறகு அதே நிலையில் நிரந்தரமாக வாழும் (பக்வா) உள் நிலை வெளிப்படும் (துவங்கும்) வரை, தனது சூட்சும சரீரத்தின் இதயத்துக்கு முதலில் தொடர்ந்து பிராணாஹூதி அளித்துக்கொண்டே இருப்பது இந்த செயல்நுட்பத்தில் அடங்கியுள்ளது. இந்தக் கட்டத்தில், அடுத்த புள்ளி அதாவது ஆன்மாவை (ரூஹ்) பிராணாஹூதிக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தப் புள்ளியில் ஐக்கியநிலையை எய்தி, அதன் பிறகு அதில் நிரந்தரமாக வாழும் தன்மை துவங்கியிருக்கும் போது, மூன்றாவது புள்ளியை அதாவது அக்னி (ஸிர்ரா) ஸ்தானத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். இதேபோல அடுத்தடுத்து வரும் புள்ளிகளிலும் கஃபி மற்றும் அக்ஃபா (சூஃபி முறைப்படி) இதே மாதிரி செயல் முறையை பின்பற்ற வேண்டும். அந்தந்தப் புள்ளிகளில் விரிவாகப் பயணம் செய்து மேலே செல்வது இந்த செயல் முறையின் நன்மையாக இருக்கும். உடல் சார்ந்த (சரீர) மண்டலம் முழுவதிலும் இப்படி விழிப்புத் தன்மை அடைந்திருக்கும்போது இந்த நிலை முழுவதும் பிரம்மாண்ட மண்டலம் என்று சொல்லப்படுகின்ற மூளையுடன் வலுக்கட்டாயமாக இணைக்கப்படவேண்டும். அதன்பிறகு தனது உள் நிலையை விரிவுபடுத்திக் கொள்வதற்கு இதே செயல் நுட்பத்தைப் பயன்படுத்தி இங்கிருந்தே தனது சொந்த சூட்சும சரீரத்துக்கு பிராணாஹூதி அளிக்க வேண்டும். இங்கேயும் கூட ஐக்கியநிலையும் அதன்பிறகு அதில் நிரந்தரமாக வாழும் தன்மையும் உருவாக்கப்பட்ட பிறகு, அடுத்த உயர் நிலையாகிய பரப்பிரம்மாண்ட மண்டலத்துக்கு முன்னேற வேண்டும். அங்கிருந்து தனது சொந்த சூட்சும சரீரத்துக்கு பிராணாஹூதி அளிக்கும் அதே சாதனத்தைப் பயன்படுத்த வேண்டும். அங்கேயும் ஐக்கிய நிலையில் ஐக்கியமடைவது (ஃபானா - இ – ஃபானா) உண்டாகியிருக்கும் போது, அங்கே நிரந்தரமாக வாழும் (பக்வா) நிலைக்கு வந்தபிறகு இன்னும் உயர்ந்த மண்டலத்துக்கு முன்னேறி இதே வழிமுறையை அங்கே தொடங்கவேண்டும். அதற்கு அப்பால் எண்ணம் வேலை செய்யாது. அங்கே ஆற்றல்

மிகுந்த ஒரு வழிகாட்டியின் (குருவின்) தேவை வருகிறது. இந்த வழிமுறை நம் சகாக்களிடம் நடைமுறையில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.''

''பிராணாஹூதி பெறுவதற்கு உட்காராமல், ஆயினும் ஆன்மீக ஈடேற்றத்தை நாடியிருக்கின்ற ஒரு மனிதர் வந்தால், அம்மாதிரி மனிதருக்கும் ஒரு வழியைக் கூற முடியும். துறவு நெறியில் இருப்பவர்கள் இந்த வழிமுறையை மேலும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அந்த வழிமுறை கீழ்க்கண்டவாறு :- மூன்று நாட்களுக்கு திட, திரவ உணவு எதுவும் சாப்பிடாமல் பட்டினியாக இருக்க வேண்டும். தண்ணீர் மட்டும் குடிக்கலாம். தேவைக்கு ஏற்றபடி உப்பு, சோடா ஆகியவையும் ஓரளவுக்கு உபயோகிக்கலாம். முடிந்தவரை வாசனைகளையும், நறுமணத் தைலங்களையும் தவிர்ப்பதில் கவனத்துடன் இருக்க வேண்டும். இந்த மூன்று நாட்களில், காலைக் கடன்கள் போன்ற அவசியமான கடமைகளை முடித்தபிறகு இறந்தவர் போல (சவாசனம்) படுத்துக் கிடக்க வேண்டும். அப்போது தனது மூளையுடன் தொடர்பைப் பெற்றுள்ள பரமாத்மாவின் (பரம்பொருள் தன்மையின்) உள் நிலை ஒரு அமைதியான தன்மையில் தன் இதயத்தில் வந்திறங்குவதாக ஒரு உறுதியான எண்ணத்துடன் இருக்க வேண்டும். எவ்வளவு முடியுமோ அந்த அளவு இந்த தியானம் மூன்று நாட்களுக்கு (பட்டினியுடன்) தொடர்ந்து செய்யப்பட வேண்டும். அதற்குப் பிறகு இந்த பயிற்சியை காலையிலும், மாலையிலும் மற்றும் பகலிலும், இரவிலும் பல முறை மூன்று மாதங்கள் எண்ணங்களில் தூய்மையை நீடித்து நிலைக்கச் செய்ய முயற்சி செய்து கொண்டு, தொடர வேண்டும். மூன்று மாதங்களுக்குப் பிறகு மீண்டும் மூன்று நாட்கள் - முடிந்தால் ஒரு வாரத்துக்கு - உபவாசம் (பட்டினி) இருக்க வேண்டும். முன்பு போல அதே மாதிரி படுத்துக்கொண்டு (சவாசனம்) இதயம் ஏற்கனவே நிரம்பி விட்டது என்ற உறுதியான எண்ணத்துடன் இருக்க வேண்டும். பிறகு அந்தப் பரம்பொருளின் ஒளி ஆன்மாவிற்குள் ஊடுருவிச் செல்கிறது. (சரீர மண்டலத்தின் 2வது

புள்ளிக்குள் செல்கிறது என்று உறுதியாக நினைக்க வேண்டும். இதயம், ஆன்மா ஆகிய இந்த இரண்டும் சரியான நிலைக்குக் கொண்டுவரப்பட்ட பிறகு, மூன்று மாதங்களுக்குப் பின் மீண்டும் உபவாசம் இருக்க வேண்டும். குறைந்தபட்சம் மூன்று நாட்கள், அதிகபட்சம் ஒரு வாரம் பட்டினி இருக்கலாம். அம்மனிதர் உடலில் உறுதியும் பலமும் உடையவராக இருந்தால், பதினைந்து நாள் வரை கூட அதிகரிக்கப்படலாம். சரீர மண்டலத்தின் மூன்றாவது புள்ளியாகிய அக்னி சக்கரத்தில் (ஸிர்ரா) இந்த உறுதியான எண்ணத்தைப் பின்பற்றலாம். அதன்பிறகு 4வது 5வது புள்ளிகளிலும் இதேமாதிரி செய்ய வேண்டும். 5வது புள்ளியில் உபவாசம் இருக்கும் காலம் இருபது நாட்கள் வரையில் இருக்கலாம். ஆயினும் ஒவ்வொரு நாளும் இதயத்தில் மட்டுமே தியானம் செய்ய வேண்டும். அப்படி பட்டினியாக இருந்து பயிற்சி செய்ததனால் என்னென்ன புள்ளிகளை ஆன்மீக சக்தியால் நிரப்பியிருந்தாலும், இந்தக் குறிப்பிட்ட நாள்வரை எவ்வளவு நிரம்பியிருந்தாலும், இதயத்தில் தெய்வீக ஒளி நிறையப் பொழிகிறது என்ற உறுதியான எண்ணத்தடன் தியானம் செய்ய வேண்டும்.''

''இந்த வழிமுறையின் மூலமாக சரீர மண்டலம் பரிசுத்தமாக்கப்பட்ட பிறகு பிரம்மாண்ட மண்டலத்தின் மீது ஒருவர் நாட்டம் கொள்ளலாம். ஆனால் அங்கே அதற்கு வேறு வழிமுறை இருக்கிறது. சரீர மண்டலத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள சக்தி முழுவதையும் மேலே இழுத்துக்கொண்டு தனது சரீரத்தின் மனம், பிரம்மாண்டத்தின் மனதில் கரைந்து கொண்டிருக்கிறது என்ற உறுதியான எண்ணத்தோடு இருந்து பிரம்மாண்டத்திலிருந்து நேரடியாக சக்தியைப் பெறுவது அந்த வழிமுறையில் அடங்கியுள்ளது. அதன் பிறகு இந்த வழிமுறையை பிரம்மாண்ட மண்டலத்துக்கு அப்பாலும் அதற்கு மேலேயும் கொண்டு செல்ல முடியும்.''

அதன் பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - க்காக கூறியது :- "சற்று முன்பு ஒரு மிகவும் சிரமமான பிரச்சனையை தீர்வு காண்பதற்காக ராம்சந்த்ராவிடம் கூறினேன். உடனடியாக அதற்கு

சாத்தியமான மிகச் சிறந்த வழியில் முற்றிலும் மிகச் சரியான தீர்வைச் சொல்லி விட்டார். அதுவே தன்னளவில் ஒரு தனியான செயல் நுட்பமாக இருக்கிறது. சரீர மண்டலத்தை பரிசுத்தமாக்கியபிறகு மேலே கூறப்பட்ட வழிமுறையில் இதை சேர்த்துக்கொள்ளலாம். பிரம்மாண்ட மண்டலத்தின் மனதில் நிரந்தரமாக விளங்கும் ஒலியின் அதிர்வை (துடிப்பலையை) உறுதியாக மனதில் நினைத்து, அதனுடைய அதிர்ச்சியை இதயத்தை நோக்கித் திருப்பி விடுவது அந்த வழிமுறையில் அடங்கியுள்ளது. எனினும் இந்த மானசீக எண்ணத்தை ஒன்றன்பின் ஒன்றாக குறுகிய இடைவெளிகள் விட்டுத் தான் தியானம் செய்ய வேண்டும். இதனால் உருவாக்கப்பட்ட ஆற்றலின் விகிதத்துக்கு ஏற்றபடி அந்த மானசீக எண்ணத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் அதிர்ச்சியை எந்த ஒரு புள்ளியில் அல்லது சக்கரத்தில் செலுத்தினாலும், அங்கே உடனடியாக நிரந்தர ஒலி விழிப்பு அடைவது துவங்கிவிடும். எனினும், பொதுவாக (நிரந்தர ஒலியின் அதிர்வு சம்மந்தப்பட்ட) இந்த வழிமுறையை, அம்மனிதரிடம் பிரம்மச்சரியம் முறையாக நிலை நிறுத்தப்படும்வரை, அவர் பயன்படுத்துவதை நான் தடை செய்கிறேன்.''

## <u>13-2-1945</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "இன்று உனது வாழ்க்கையின் திசையில் புதிய அம்சம் என்னவெனில், பரமாத்மாவிடமிருந்து நேரடியாக நீ நன்மை பெற்றிருக்கிறாய் என்பதேயாகும். பரமாத்மாவுடன் (பரம்பொருள் தன்மையுடன்) மிக ஆழமான, பிரிக்க முடியாத தொடர்பை நீ எய்தியிருக்கிறாய் என்பது இதன் பொருள். கிட்டத்தட்ட எல்லோருமே பழம்பெரும் முனிவர்களிடமிருந்து, அவரவரது தகுதிக்கு ஏற்ப நன்மை பெறுகிறார்கள். எல்லோரும் என்றால் நல்ல நம்பிக்கையுடைய மற்றும் மாஸ்டரை வணங்கி வழிபடுகின்ற மனிதர்களைத் தான் குறிப்பிடுகிறேன். ஆனால் நீ ஒருவன் மட்டுமே பரமாத்மாவிடமிருந்து நேரடியாக நன்மையைப் பெற்றிருக்கிறாய். M1 - இங்கே பார். இந்த நன்மையைப் பெறுவதற்கு

ஏங்கிக்கொண்டு தான், கடவுளை நெருங்கும் மிக உயர்ந்த நிலைகளை எய்திய மாபெரும் முனிவர்களும், உலகைவிட்டுப் போய்விட்டார்கள்.”

வணக்கத்திற்குரிய ராதா அவர்கள் கூறியது :- “பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை நீ மிகவும் நேசிக்கிறாய். அவருக்கும் உன் மீது பெருமளவு அன்பு இருக்கிறது. எனவே என்னை உன் தாயாக எண்ணிக்கொள்.’’

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறியது :- “பக்தர்களிடையே நீ மிகவும் முன்னணியில், முக்கியமான இடம் பெற்றிருக்கிறாய். உனக்கே கூட இன்னமும் தெரியாமலிருக்கின்ற அதிசயங்களை நீ செய்து காட்டியிருக்கிறாய். ராதா உன் மீது மட்டுமே அன்பு கொண்டிருக்கிறாள். நீ எவ்வளவு அதிர்ஷ்டம் செய்திருக்கிறாய்! தன் மகன் மீது ஒரு தாய் கொண்டிருக்கும் ஒரு அன்பு மனப்பான்மையை அவள் உன்னிடம் கொண்டிருக்கிறாள். நீயும் அவளை உன் தாயாகவே எண்ணி அவள்மீது அன்புடன் இரு’’.

சுவாமி விவேகானந்தா :- “பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்தே இந்த வார்த்தைகளைக் கேட்டு நாங்கள் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்துக் கொண்டிருக்கிறோம். ராதா தேவியிடமிருந்தும் நீங்கள் அன்பைப் பெற்றிருக்கிறீர்கள். உங்களிடம் ஆன்மீகப் பயிற்சிக்கு வராமல் இருப்பவனை குருடன் என்றே நான் சொல்வேன்.’’

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- “என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. உனக்குப் பாராட்டுக்கள்! கடவுளின் நல்லாசிகள் உன்மீது எந்நாளும் பொழிவதாக.’’

வணக்கத்திற்குரிய ராதா தேவி :- “எப்பொழுதெல்லாம் உனக்கு அன்பு தேவைப்படுகிறதோ அப்பொழுது என்னை நோக்கி மனதைச் செலுத்து, எனக்கு இந்த அன்பைத் தவிர எதுவும் தெரியாது, என் வாழ்க்கை முழுவதிலும் அதில் மட்டுமே எனக்கு அக்கறை இருந்தது.’’

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- “இந்தப் புதிய உறவுமுறை (நிஸ்பத்) இந்த மார்க்கத்தில் (ஸில்ஸிலா) வந்திருக்கிறது.’’

## 14-2-1945

சுவாமி விவேகானந்தா கூறியது :- “உங்கள் வேலையைச் செய்து கொண்டு நாங்கள் எப்போதும் முனைப்போடு இருந்தோம். இப்போது வேறு தன்மையை உடைய ஒரு வேலை வருகிறது. உங்கள் ஆன்மீக சகோதரர்கள் N1 - சொல்லும் உத்தரவுகளுக்கு ஒலிபரப்பாளர்களாக ஆகிவிட்டார்கள். அவருக்காகவும் அவருடைய மகன் B1 - க்காகவும் பிரசாரம் செய்யும் வேலையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இச்சமயத்தில் உங்களுக்கு நான் கொடுக்கும் தகவல் இது. நீங்கள் பண்டாராவுக்குப் (வருடாந்திர விழாவுக்குப்) போகும் பொழுது அந்த வளாகத்தின் ஒவ்வொரு இடத்திலும் கவனமாக விழிப்புணர்வுடன் இருங்கள். ரகசியமான வேலை உங்களுக்காக வந்து கொண்டிருக்கிறது. மற்ற முக்கியமான கடமைகளுடன் கூடவே உங்கள் பெரும்பாலான நேரத்தை அதில் ஈடுபடுத்துங்கள். அந்த ரகசியமான வேலை உங்களைத் தான் – உங்களை மட்டும் தான் நம்பிச் சார்ந்திருக்கிறது. இப்போதைய விவகாரங்களை தோல்வியடையச் செய்வதே கடவுளின் சித்தமாக இருக்கிறது. இம்மாதிரி கடமைகளுக்கு ஒரே மாஸ்டர் நீங்கள் தான். அதற்கான தேவை வரும்போது அதற்கான சரியான மனிதர்களுக்கு நீங்கள் கட்டளைகள் இடமுடியும். வேறு சில முகமைகளும், முற்றிலும் உங்களையே சார்ந்தவையாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆன்மீகத்தில் உங்களைப்போல முழுமையாக வளர்ச்சி பெற்ற வேறு யாரையும் நாங்கள் காண முடியவில்லை என்பது மிகப்பெரிய பிரச்னையாக இருக்கிறது. அதனால் தான் உங்களுக்கு இவ்வளவு வேலைகள் அடுத்தடுத்து வந்து கொண்டே இருக்கின்றன.’’

## 17-2-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “செயலாளராக நான் நியமித்திருக்கின்ற M1 - உடைய கையெழுத்துடன் ஒவ்வொரு அறிவிப்பும் அதன் துணை அம்சங்களும் இருக்கும். நமது மிஷன் முத்திரை அதில் முறைப்படி இடப்படும். இப்போது முதல் இது செய்யப்படும். தனது உதவிச் செயலாளர் R2 - வுக்கு அவரால் நியமிக்கப்படும் எந்த ஒரு கடமையையும் செய்வதற்கு, M1 - தானாகவே அனுமதியளிக்கலாம். மற்ற அனைவரும் உதவியாளர்கள் எனப்படுவார்கள். மிக அவசரமாகச் செயல்பட வேண்டிய ஒரு தேவை ஏற்படுமானால், அங்கே அப்போது M1 - இல்லையென்றால், உதவிச்செயலாளரே, அந்த வேலையைச் செய்யலாம். ஆனால் நான் மட்டுமே தலைமை நிர்வாகியாக இருப்பேன் என்பதை நினைவில் வைத்திருக்கவேண்டும். அதாவது என் உத்தரவு இல்லாமல் எந்த வேலையும் ஒரு போதும் செய்யக்கூடாது. என் உத்தரவு ராம்சந்த்ராவின் மூலமாக வரும். R2 - தனக்கான உதவியாளர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. அவர் அதை M1 - க்குத் தெரிவிக்க வேண்டும். அந்த உதவியாளர்கள் முழுவதும் நமக்கே சொந்தமானவர்களாக அல்லது என்னைத் தங்களுக்குச் சொந்தமென்று கருதுகிறவர்களாக இருக்க வேண்டும். கடிதப்போக்குவரத்து மற்றும் எழுதிவைத்தல் சம்மந்தமான மற்ற முக்கியமான விஷயங்களை நவீனமாக்க வேண்டுமென விரும்புகிறேன். ஏதோ ஒரு வேலைக்காக M1 – ஐ வெளியூர் போவதற்கு நான் அனுமதிக்கிறேன் என்றால், என் உத்தரவுகளை கடிதம் மூலமாகத் தெரிவித்து, அதற்கான அனுமதியை முறைப்படி அவர் பெற வேண்டியிருக்கும். ஏதாவது விசேஷ காரியமாக இருந்தால் இதற்கு விதிவிலக்கு அளிக்கலாம். ஆனால் அப்படி நிகழும் சமயத்திலும், அந்தக் காரியத்தைப் பற்றி அவருக்குத் தெரிவிக்கப்படவேண்டும். இதற்காக செயலாளர் ஒரு பதிவேட்டை வைத்திருக்க வேண்டும். அதில் சரிபார்த்துக் கொள்வதற்காக சிறு குறிப்புகள் எழுதி வைக்கப்பட வேண்டும். இதனுடைய ஒரு நகல் உதவிச் செயலாளரிடம் இருக்க வேண்டும். அலுவலக வேலை

(நிர்வாக வேலை) சம்பந்தமான நிர்வாக ஏற்பாடுகளிலிருந்து ராம்சந்த்ராவை விடுவிக்க நான் விரும்புகிறேன். அவருடைய மனத்தை இம்மாதிரி அம்சங்களில் சிக்க வைப்பதற்கு நான் விரும்பவில்லை. பிராணாஹூதிக்கு மட்டுமே அவருடைய மனம் ஊற்றுக் கண்ணாக விளங்கும். உத்தரவுகள் அதன் மூலமாகவே பெறப்படுவது தொடரும். யாருக்கு நான் இந்தக் கடமைகளைக் கொடுத்திருக்கிறேனோ, அவர்கள் இதைத் தங்கள் சொந்தக் கடமையாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தக் கடிதப் போக்குவரத்து சம்பந்தமான செலவுக்கு நான் ஒரு விதிமுறையை உண்டாக்குவேன். இந்தக் கடமைகளை யாரிடம் நான் ஒப்படைத்திருக்கிறேனோ அவர்கள் இதை என் சொந்த வேலையாக நினைத்துச் செய்ய வேண்டும். ஆயினும், இதனால், நான் எதற்காக அவர்களை உருவாக்கியிருக்கிறேனோ, அந்த வேலையை அவர்கள் கைவிட வேண்டும் என்று அர்த்தமில்லை. அதுவே அவர்களுடைய முக்கியமான கடமையாக இருக்கும்.’’

காலஞ்சென்ற மரியாதைக்குரிய, M1 உடைய தந்தை கூறியது :- “மரியாதைக்குரிய ஸ்ரீபத்ரி ப்ரஸாத்ஜியின் (பாபுஜியின் தந்தை) அதிர்ஷ்டத்தை எண்ணி நான் வியப்படைகிறேன். எத்தனையோ பேருக்குக் கிடைக்காமற் போன, வருங்காலத்திலும் எதிர்பார்க்க முடியாத அப்படி ஒரு நிலையை, எந்தக் கஷ்டமும் இல்லாமல் அவர் அடைந்திருக்கிறார். அவருக்கு உணர்வு நிலை இருந்திருந்தால் இப்போது அவரையும் என்னுடன் அழைத்து வந்திருப்பேன். பிரியமான ராம்சந்த்ராவுடன் (பாபுஜீயுடன்) நான் ஐக்கியம் அடைந்து விடுவதற்கு ஆசையுடன் இருந்தேன். ஆனால் ராம்சந்த்ரா கேட்டுக்கொண்டதால் வணக்கத்திற்குரிய லாலாஜி, அது புட்டானின் (M1 – ன்) தனி உரிமை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லி என்னைத் தடுத்துவிட்டார். இதனால் என் விருப்பம் ஈடேறுவதிலிருந்து நான் பின் தங்க வேண்டியதாயிற்று. நான் உங்கள் இருவரையும் (ராம்சந்த்ரா மற்றும் M1) மற்றும் R2 - யையும் கூட என் பிள்ளைகளாகவே எண்ணி, ஒரே விதமாகப் பார்த்தேன். L1 - இனால் புட்டான் ஏராளமான கஷ்டங்களுக்கு, அதிகபட்ச அளவுக்கு ஆட்படுத்தப்பட்டான்.

M1 - னுடைய இந்த சகிப்புத்தன்மை நிச்சயம் பலன் தரும். அன்புள்ள புட்டான், நீ ஒரு காரியம் செய். அதாவது நான் சேர்த்து வைத்திருக்கும் ஏராளமான புத்தகங்களை, வணக்கத்திற்குரிய லாலாஜி அவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிடு. இந்தப் புத்தகங்களுக்குத் தேவை இருக்கும். லாலாஜி அவர்களின் பிள்ளைகள், இதனால் நன்மை பெறும் சாத்தியம் இருக்கிறது. இல்லையென்றால், இந்தப் புத்தகங்கள் எல்லாம் அழிந்து போகும். சமஸ்கிருத புத்தகங்களாகிய புதையலைப் பற்றி நான் குறிப்பிடுகிறேன். அது சம்பந்தமான வேலை மிகவும் அதிகரிக்கும். அங்கே இந்தப் புத்தகங்களுக்கு தேவை ஏற்படும். என் பிரியமான புட்டான் என்னுடைய முக்திக்கு ஒரு கருவியாக முன்னேறியது குறித்து, என் சொந்த அதிர்ஷ்டத்தையும் கூட நான் வியக்கிறேன். தேவை ஏற்படும் போது என்னை மீண்டும் அழைக்கலாம்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "சமஸ்கிருத மொழி நூல்களாகிய இந்தப் புதையலை தேவைப்படும் போது நான் எடுத்துக்கொள்வேன். விலை மதிப்பற்ற இந்த புத்தகத் தொகுப்புக்களை எனக்கு பரிசளித்தார் என்பதில் அவர் திருப்தி அடையட்டும், அது மிகவும் பாராட்டுக்குரியது.''

M1 – தன் தந்தையிடம் கேட்ட கேள்வி :- "பௌதீக உடம்பிலிருந்து விடுபட்டவர்களாக இருக்கும் போதும், ஒவ்வொரு விஷயத்தையும் எப்படிப் பெரியோர்கள் தெரிந்து கொள்கிறார்கள்?

பதில் :- "அவர்களுடைய காட்சித்திறனின் ஆற்றல், விழிப்புநிலைக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுக்கிறது. விழிப்புநிலை மிகவும் கூருணர்வுத்திறன் உடையதாக இருப்பதால் சம்பந்தப்பட்ட விஷயத்தைப் பதிவு செய்கிறது.''

இது பற்றி வணக்கத்திற்குரிய மாஸ்டரின் (பாபுஜியின்) விரிவான விளக்கம் :- தெய்வீகமான ஒரு பெரியவர் அல்லது முனிவர் பௌதீக உடம்பிலிருந்து விடுபட்டவர்களாக இருக்கும்

போது (உயிர் நீத்த பிறகு) பௌதீக உடம்புடன் கூட்டுறவாக, ஒத்துழைத்து இயங்கி வந்த ஆற்றல்கள், மறைமுகமான ஒரு நிலையில் தங்களுடைய மூலசக்தியுடன் இணைந்திருக்கின்றன. அந்த மனிதரின் புலன் உறுப்புக்கள் செயலற்ற அல்லது உறைந்த நிலையை அடைகின்றன. வேறு வார்த்தைகளில் சொன்னால் அந்தப் புலன் உறுப்புக்கள் தங்கள் மூலசக்தியோடு அனுசரித்து இயங்கும் தன்மையை அடையப்பெறுகின்றன என்றும் சொல்லலாம். அதாவது பரம்பொருளில் விளங்குகின்ற பரமாணுக்கள் அந்த மனிதனின் ஜீவனுக்குள் நிரம்புகின்றன என்று சொல்லலாம். (பரமாணு என்ற வார்த்தை புரிந்து கொள்வதற்காக மட்டுமே இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது.) பரம்பொருள் தன்மையின் குணம் என்று குறிப்பிடுவது மேலும் சிறந்ததாக இருக்கும். ஒரு மனிதரின் ஆயுட்காலத்தில் இம்மாதிரி விரிவாக்கம் எந்த அளவுக்கு பரந்தநிலை எய்தியிருக்கிறதோ அதே அளவு விரிவாக்கம் பெற்ற நிலை அவர் உடலை நீத்துச் சென்ற பிறகும் நிலைத்திருக்கிறது. அதை எல்லையற்ற தன்மை என்று சொல்லலாம். ஆகவே அந்த மனிதரின் பிரசன்னம் வெட்டவெளியைப்போல, அல்லது காற்றைப் போல மூலை முடுக்குகள் உள்பட எங்கும் பரவியிருக்கின்றன. இவ்விதமாக யாராவது ஒலியின் மூலமாக அல்லது எண்ணத்தின் மூலமாக எதையாவது செய்தால், அந்தச் செயல் அங்கே ஒரு விதமான அலையை உண்டாக்குகிறது. ஒலி அல்லது எண்ணத்தின் அதிர்வை அந்தப் பிரசன்னத்தில் உண்டாக்குகிறது. உதாரணமாகச் சொன்னால், ஒருவர் எதையாவது பார்த்தால், பார்வைத்திறன் அதில் ஒரு அதிர்ச்சியைக் கொடுக்கிறது. அது போதுமான அளவுக்கு கூருணர்வுத்திறன் உடையதாக இருப்பதால், அவர் அதைத் தெரிந்துகொள்கிறார். (ஒரு பொருளை கண் பார்க்கும்போது, பார்வைத்திறன் அதன் மீது படிந்து, அது பற்றிய தகவலை மூளைக்கு அனுப்புகிறது. மூளை அது என்ன பொருள் என்பதைத் தெரிந்து கொள்கிறது.) முக்தி பெற்ற ஆன்மாக்கள் இந்தவிதமாகத் தான் தங்களுக்கு சம்மந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் அறிந்து கொள்கிறார்கள்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறிய கருத்து :- “பிரியமான ராம்சந்த்ரா இப்போது கூறியவை அனைத்தும் அவரே சொந்தமாகச் சொன்னவையாகும். அது சரியானதாக இருக்கிறது. இயற்கையின் ரகசியம் அவர் நாவிலிருந்து வெளிப்பட்டிருக்கிறது. ஆயினும், அதை விளக்குவதற்குப் போதுமான அளவு, அவரால் வார்த்தைகளைத் தேட முடியவில்லை. இது முக்தியடைந்த ஆன்மாக்கள் சம்பந்தப்பட்ட விஷயம். இந்த ஞானம் அவர் (ராம்சந்த்ரா) எப்போதும் என்னுடன் அல்லது பரமாத்மாவுடன் தொடர்புடன் இருந்து கொண்டிருப்பதன் பலனாகும்.’’

விளக்கம் தொடர்கிறது :- “பிரபஞ்ச சிருஷ்டி துவங்குவதற்கு முன் பரமாத்மாவின் (பரம்பொருள் தன்மையின்) நிலையை, புரிந்து கொள்வதற்கு வசதியாக ஒரு கவிழ்ந்த அரைக்கோள வடிவமாகக் கருதலாம். பிரபஞ்ச சிருஷ்டிக்கான நேரம் வந்தபோது, ஒருவிதமான சங்கல்பத்துடன் சேர்ந்த இயக்கம் தொடங்கப்பட்டது. இந்த இயக்கம் ஆரம்பித்தவுடன் பரமாணுக்களும் சக்தியின் அணுக்கூறுகளும் துகள்கள் மற்றும் அணுக்கள் என்ற வடிவத்தில் உருத்தோற்றம் பெறத் துவங்கின. தாதுப் பொருட்கள், (மூலகங்கள்) தாவரங்கள், பிராணிகள் ஆகிய அனைத்தும், ஜபமாலையின் மணிகள் போல தொகுக்கப்பட்டிருந்தன. அதாவது சிருஷ்டியின் நோக்கம் தோன்றிய அச்சமயத்தில பரமாத்மாவுக்கு நெருக்கமாக இருந்த மூலத்திலிருந்து அனைத்தும் வெளி வந்தன என்று சொல்லலாம். அப்படி உருத்தோற்றம் அடைந்த அனைத்தும் தங்களுடன் சக்தியைக் கொண்டு வந்தன. அந்த சிருஷ்டி வேகத்தில் ஒரு முடிச்சு போலத் தோன்றிய இயற்கை, சக்தி நிறைந்ததாக இருந்தது. இந்த வேக விசைகளும் சக்தியை உள்ளடக்கியவையாக இருந்தன. அதாவது அவை பரமாத்மாவுடன் எவ்வளவு நெருங்கியிருந்ததோ அவ்வளவு புனிதத் தன்மை பெற்றிருந்தன. இந்த விசைகள் யாருக்குள் ஊடுருவியிருந்தனவோ, யார் அவற்றினால் சுற்றிலும் சூழப்பட்டிருந்தானோ அந்த மனிதன் அந்த விசைகள் எவ்வளவு அவனுக்குள் இறங்கியிருந்தனவோ அந்த அளவுக்கு சக்தியை

தன்னோடு கொண்டு வந்தான். அதே விசைகள் தான் சூட்சுமம், அதைவிட சூட்சுமம், மிகமிக சூட்சுமம் என்ற வடிவங்களில் பிரிக்கப்பட்டன. அதை விவரிக்கும் வசதிக்காக இவ்வாறு சொல்லப்பட்டது. மனிதன் தன் மூலத்திற்கு (பரமாத்மாவை நோக்கி) திரும்பிச் செல்லும் பயணம் என்பது அப்படிக் கீழ் நோக்கி இறங்கி வந்துள்ள விசையின் வழியே எதிராக மேலேறிச் செல்கின்ற செயல் முறையின் மூலமாகப் போவதே ஆகும். இவ்வாறு மிக மிக சூட்சுமமான நிலையில் பரமாத்மாவுக்கு மிக நெருக்கமாகச் சென்றடைவதாகும். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாட்டிற்குத் தக்கபடி, அவன் அதில் முன்னேற்றமடைந்து மேலே ஏறி போகப்போக, அவனுடைய சக்தியும் அதிகரித்துக்கொண்டே போகும்.

இந்த விளக்கம் சம்மந்தமான ஒரு தீர்வைத் தேடும் கேள்விகள்:

1) ஆன்மீகநிலைகள் எப்படி நிலைநிறுத்தப் படுகின்றன? மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் (அகன்றதாக இருப்பவை) எப்படி நிர்ணயிக்கப் படுகின்றன? இம்மாதிரியாக இன்னும் அதிகமான மற்றும் வேறு பிரிவுகளை நிர்ணயிப்பது சாத்தியம் ஆகாதா?

2) ஹடயோகத்திற்கான அடித்தளம் எப்படி அமைக்கப்பட்டது? அதன் பிறகு ராஜயோகம் எப்படி பிரபலம் ஆயிற்று? மனிதனின் மனோதத்துவத்துக்கும் இயற்கைக்கும் என்ன விதமான தொடர்பு இருக்கிறது? அதன் விதிமுறைகள் யாவை?

3) மனிதனுக்கு உயிர் எங்கிருந்து பெறப்பட்டது? அல்லது வேறு வார்த்தைகளில் சொன்னால் அவன் தன் வாழ்க்கையை எதைக்கொண்டு தொடர முடிகிறதோ (அதாவது உயிருடன் வாழ முடிகிறதோ) அந்த சக்தி (ஆற்றல்) அவனிடத்தில் எப்படி உருவாக்கப்பட்டது?

4) மூளையின் உயிரணுக்கள் எந்த மண்டலத்துடன் இணைக்கப்பட்டுள்ளன? அந்த மண்டலத்தின் தன்மை (இயல்பு) என்ன?

5) மனிதனின் இயல்பு மாற்றம் பெற முடிவது எப்படி?

6) இயற்கையான பாதிப்புகளினால் குண நலன்களை உருவாக்கிக் கொள்வதற்கு ஆதரவாகவும் எதிராகவும் அளிக்கப்படும் உதவி என்ன?

7) மனிதர்களுடைய அயனிகள் (பரமாணுக்கள்) எங்கே இணைக்கப்பட்டுள்ளன? அந்தப் பரமாணுக்களை மாற்றியமைப்பது எப்படி?

‘‘பிரியமான ராம்சந்த்ரா தீர்வு காண்பதற்காக நான் இந்தப் பிரச்னைகளைக் கொடுக்கிறேன். வருடாந்திர விழா முடிந்தபிறகு அவர் இதில் கவனம் செலுத்துவார். அவருடைய சிந்தனையில் சில கருத்தக்கள் தோன்றினால் அவர் அதைக் குறித்து வைத்துக் கொள்ளலாம். இந்த விஷயங்களுக்கு அதிக கவனம் கொடுக்கத் தேவையில்லை. இப்போது (இரவு 9.30 மணி) தனது வலது மற்றும் இடது பக்கங்களில் அவர் ஏதோ ஒரு இயக்கத்தை உணர்ந்தார், அதைப் பற்றிக் கொஞ்சம் அவர் எழுத இருக்கிறார்’’

நாங்கள் சேர்ந்து உரையாடிக் கொண்டிருந்தோம். அந்த விவாதங்களில் சின்னம் பற்றிய பேச்சும் வந்தது. வணக்கத்திற்குரிய மாஸ்டர் பாரசீக மொழியில் இரண்டு வரிச் செய்யுள் ஒன்றை மேற்கோளாகச் சொன்னார். ‘‘நேசிக்கப்படும் நாயகனின் முகத்தினுடைய பிரகாசத்தில் இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரை மனம் லயித்து ஆழ்ந்திருங்கள். அந்த நாயகனோடு நீங்கள் நல்ல பழக்கம் உடையவராக ஆகியிருக்கும்போது உங்களுக்கே நீங்கள் அந்நியராக மாறிவிடுங்கள்.’’

18-2-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் ரகசியமாகத் தெரிவித்தது :- “உன் அம்மா (லாலாஜி அவர்களின் மனைவி) மிகப் பெரிய ஏமாற்றத்தை அடைந்திருக்கிறாள். அவளுக்கு வியக்கத் தக்க வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன, பேராசை ஒரு பயங்கரமான பிசாசு.’’

பகல் 1 மணிக்கு மீண்டும் கூறியது :- “நீண்ட நேர சிந்தனைக்குப் பிறகு B1 - முற்றிலும் ஆன்மீகத் தன்மை இழந்து விட்டார் என்ற தீர்மானத்திற்கு வந்திருக்கிறேன். அவருடைய சக்கரங்கள் அனைத்தும் செயலற்ற நிலைக்குக் கொண்டு வரப்படவேண்டும். அவரை முற்றிலும் மந்தமாக ஆக்கிவிடு.’’ அவருடைய கட்டளை நிறை வேற்றப்பட்டது.

சுவாமி விவேகானந்தா கூறியது :- “நாங்களும், புகழ் பெற்ற முனிவர்களும் உங்களுடைய மேலான தன்மையை ஒப்புக்கொண்டிருக்கும் போது, உனது ஆன்மீக சகோதரர்கள் தங்கள் கடமையைச் செய்யத் தயங்குவதற்குக் காரணமே இல்லை. வழியில் குறுக்கிடும் இம்மாதிரி விஷயங்களையெல்லாம் நாங்கள் நீக்கி விடுவோம். இந்த நாடோடிகள் ஒட்டுமொத்தமாக மறைந்து போகட்டும்.’’

சகாக்களின் கூட்டத்தை (சத்சங்க உறுப்பினர்களை) சீர்திருத்துவதற்காக பிரார்த்தனை செய்ததற்கு பதிலாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது :- “உன்னுடைய சத்சங்கம் ஒரு மோசமான விதத்தில் இருக்கிறது. மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தத் தீய விளைவை மாற்றுவதற்கு நான் உத்தரவு கொடுப்பேன். வணக்கத்திற்குரிய லாலாஜியைப் போன்ற ஒரு மகாபுருஷரை அவமதிப்பது அனுமதிக்கப்பட முடியாது. (சற்று இடைவெளி) வணக்கத்திற்குரிய உனது குரு உனது பலவீனத்தை ஒழித்துவிட்டார் என்பதை உனக்குத் தெரிவிக்கிறேன். உன்னுடைய தைரியத்தை உறுதிப்படுத்தவது மற்றும் உனக்கு ஆன்மீக ஒளியை அளிப்பது ஆகியவை

சம்பந்தமாக எதையும் அவர் குறையாக விடவில்லை. குதிரை மீது ஏறி வீரமாகச் செயல்படுவதா? வேண்டாமா? என்பது உங்கள் கையில் தான் இருக்கிறது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் விளக்கம் :- "பிரியமான ராம்சந்த்ரா பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம், அவருடைய இல்லத்தில் (அதாவது சகஜ மார்க்கம் அல்லது ஸத்பத பந்த்தா என்ற பயிற்சி முறை மார்க்கத்தில்) தற்போது உள்ள நிலைமைகளைத் தெரிவித்தார். மற்றும் வணக்கத்திற்குரிய தனது மாஸ்டரினால் (லாலாஜியால்) தீட்சையளிக்கப்பட்ட, மற்றும் வணக்கத்திற்குரிய மாஸ்டருடன் இணைந்தவர்களாக தங்களைக் கருதுகின்ற தனது சகோதரர்கள் சீர்திருத்தம் பெறவேண்டும் என்று ஸ்ரீ கிருஷ்ணரிடம் பிரார்த்தனை செய்தார். மேலும் இந்த சகோதரர்கள், வேறு ஒரு, வயதில் மூத்த முனிவரிடம் சென்று தங்கள் உள் நிலையை அவரிடம் வெளிப்படுத்தி, தனது வணக்கத்திற்குரிய மாஸ்டரின் நற்பெயருக்கு அவமானம் ஏற்படுவது நிகழக்கூடாது என்றும் வேண்டிக் கொண்டார். அதற்கு வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், அம்மாதிரி ஒரு உயர்ந்த மகாபுருஷரை அவமதிப்பது நிகழ்வதற்கு அனுமதிக்கக்கூடாது என்று பதில் கூறினார். பிறகு தானாகவே முன் வந்து இறுதியாகச் செய்யப்பட வேண்டிய பொது அறிவிப்பைக் கூறினார். இப்போது அதைக் கடவுளின் கட்டளையாக ஏற்றுக்கொள்.''

இறுதி அறிவிப்பு :- (பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியவாறு) "நமது வணக்கத்திற்குரிய மாஸ்டர் உங்களை ஆதரித்துத் தாங்கவும், சீர்திருத்தவும் சாத்தியமான அனைத்தையும் செய்திருக்கிறார். அதற்காக கடும் சிரமங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பது மகிழ்ச்சியான செய்தி. ஆனால் நீங்கள் எல்லாம் அதனால் தூண்டப்படவில்லை; குறிப்பான உத்தரவுகளுக்கு ஏற்ற விளைவைத் தரவும் இல்லை. (இந்த அறிவிப்பைச் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படாமல் கடவுள் தடுப்பாராக.) நீங்கள் தற்பெருமையோடு உட்கார்ந்திருக்கும் தன்மையில், நமது வணக்கத்திற்குரிய

வழிகாட்டியாகிய குருவின் நற்பெயரை களங்கப்படுத்தும் எண்ணத்துடன் நீங்கள் எல்லோரும் இருக்கிறீர்கள் என்பது தான் இதன் பொருள் என்று நான் நினைக்கிறேன். இப்படி நடப்பதை நான் அனுமதிக்க மாட்டேன். (அவ்வாறு நடக்க விடமாட்டேன்) என்பதை நம்புங்கள். அந்த மாதிரி அது நடப்பதற்கு அனுமதிக்கப் படமாட்டாது என்று கடவுளின் பெயரால் நான் அறிவிக்கிறேன். அந்தோ பாவம்! என் பிரபுவின் அளவற்ற கருணையின் நன்மையை நீங்கள் யாவரும் பெறத் தவறிவிட்டீர்கள். இப்போது அந்தக் கருணையின் எதிர் நிலையாகிய இன்னொரு பக்கத்தை நோக்கி உங்கள் எண்ணத்தைத் திருப்புங்கள், அவ்வளவு தான்.''

<u>19-2-1945 (இரவு 7 மணி மற்றும் அதன்பிறகு)</u>

சுவாமி விவேகானந்தா கூறியது :- "இப்போதைக்குத் தேவைப்படுவதால் உங்கள் முன் அமர்ந்திருக்கும் A3 - என்பவரை நம்பலாம். ரகசியம் வெளியாகி விட்டாலும் பரவாயில்லை. என்றாவது ஒரு நாள் அதை வெளிப்படுத்தித் தான் ஆகவேண்டும், இது என் கருத்து. தலைமை நிர்வாகியாகிய உங்கள் குருவிடம் இதுபற்றி ஆலோசிக்கவும்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- "என் கருத்தும் ரகசியம் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது தான்."

கேள்வி :- அது எந்த விதத்தில்?

சுவாமி விவேகானந்தா :- "உங்கள் மாஸ்டர் தன்னுடைய பணியும், சத்சங்கமும் (ஆன்மீக சகாக்களின் சமுதாயம்) தொடர்ந்து நடப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறார். நீங்கள் தான் (ராம்சந்த்ரா) அதன் தலைவராக இருக்கிறீர்கள் என்று A3 - இடம் தெளிவாகச் சொல்லிவிடுங்கள்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- "வெளிப்படுத்திச் சொல்லிவிடு, இனிமேலும் தாமதம் தேவையில்லை.''

சுவாமி விவேகானந்தா :- "உயர்மதிப்புடைய லாலாஜியிடமிருந்தும், அதேபோல என்னிடமிருந்தும் நீங்கள்

நேரடியாக உத்தரவுகளைப் பெறுகிறீர்கள் என்று A3 - இடம் சொல்லுங்கள். உங்கள் நேர்மையை அவர் சந்தேகித்தால் அவர் உங்களை சோதிக்கலாம். பண்டாராவில் (வருடாந்திர விழாவில்) அறிவிக்கப்படும் வரையில் இது ரகசியமாகவே இருக்கும் என்பதையும் சொல்லுங்கள்."

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- "பிரியமான ராம்சந்த்ராவும் M1 – உம் மார்ச் 29, 1945 அன்று ஃபடேகர் சென்றடைய வேண்டும். M1 - 28ஆம் தேதியே அங்கே போய்விட வேண்டும். இன்ஸ்பெக்டர் சாஹிப் (11) அவரோடு சென்றால் நலமாக இருக்கும். இல்லையென்றால் பண்டாராவில் அவர் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். என் சார்பில் அவருக்கு ஒரு அழைப்பு இருக்கிறது."

<u>20–2–1945</u>

சுவாமி விவேகானந்தா கூறியது :- "நான் இப்போது தான் ஃபடேகர் சென்று வந்தேன். உனது சிற்றன்னை (வணக்கத்திற்குரிய லாலாஜியின் மனைவி) J1 - ன் இழப்பைக் குறித்து வருந்திக்கொண்டிருக்கிறார். அங்கு உங்களுக்கு எதிராக சில குழுக்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றன, உங்கள் எல்லோருக்கும் எதிராக, அதாவது ஷாஜஹான்பூரிலிருந்து வருபவர்களுக்கு வரவேற்பில்லாத ஒரு நிலையை அவர்கள் உண்டாக்கியிருக்கிறார்கள். இப்படி நடப்பதற்கு அனுமதிக்கப்படாது என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். பரம்பொருளின் அலை (சக்தி) ஒட்டுமொத்த அழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. அப்படிச் செய்வதிலிருந்து எங்களைத் தடுக்கின்ற உங்களுக்காக ஓரளவுக்கு நாங்கள் தயங்க வேண்டியிருக்கிறது. நம்முள்ளே இருக்கும் நிலைமையைக் கருத்தில் கொண்டு உங்கள் குரு கொஞ்சம் குழப்பம் அடைந்திருக்கிறார். உங்களுக்குத் தெரிவிப்பதற்காக நான் கொண்டு வந்த செய்தி இது. என்ன செய்யப்பட வேண்டுமோ, அதை விரைவில் செய்யுங்கள். நேரத்தை வீணாக்கவேண்டாம். வருடாந்திர விழாவுக்குப் பிறகு அழிவுத் திட்டத்தை செயல்

படுத்துவதற்கு எதிராக ஒரு வார்த்தையைக்கூட நாங்கள் கவனிக்கமாட்டோம். அப்போது, நாங்கள் என்ன கட்டளை இட்டாலும் நீங்களும் உங்கள் உதவியாளர்களும் தயக்கமில்லாமல் நிறைவேற்ற வேண்டியது உங்கள் கடமையாக இருக்கும். இன்ஸ்பெக்டர் சாஹிப் (11) ஐ எச்சரிக்கையாக இருக்கும்படி சொல்லுங்கள். அவருடைய வேலைக்காக அவருக்கு பரிசளிக்கப்படும். நமது பிரபுவாகிய உயர் நிலைத் தலைமையுடன் அவர் இணைக்கப்பட்டிருப்பதால் அவரை நான் மிகவும் நம்புகிறேன். இந்த நிலையைக் கையாள்வது பற்றி இரவு முழுவதும் நாங்கள் முனைப்போடு இருந்தோம். அவர்கள் வேறு ஒரு வழியில் போகிறார்கள். அவர்கள் மீது உங்கள் கருணைகொண்ட தன்மையின் காரணமாக, இதில் பிரச்னை உண்டாகிறது. இந்த ஒரு காரணத்துக்காகவே, நாங்கள் சலுகை அளிக்கிறோம். நான் சீறி வெடித்துவிடும் உணர்வு உடையவன். இம்மாதிரி விஷயங்களையும் விவகாரங்களையும் என்னால் சகித்துக்கொள்ள முடியாது. அதனால் தான் உங்கள் மாஸ்டர் அவரது இந்த வேலையை என் பொறுப்பில் ஒப்படைத்திருக்கிறார். நான் உங்களிடம் உண்மையைச் சொல்கிறேன். <u>**இதெல்லாம் என்னுடையதாக மட்டுமே இருந்திருந்தால் இந்தத் தவறான மனிதர்களை நான் ஒட்டு மொத்தமாக அழித்திருப்பேன்.**</u> நான் உங்களை ஊடகமாக எடுத்துக்கொண்டிருக்கிறேன். இந்த விஷயத்தில் உங்கள் கனிவான உள்ளம் கொண்ட குருவின் காலடிகளை ஓரளவுக்கு நீங்கள் பின்பற்றி நடக்கிறீர்கள். உங்களை நான் சரிப்படுத்துவேன். அதாவது அதற்கான சந்தர்ப்பம் தானாகவே வந்தால், நான் பின்பற்றுகின்ற பாதைக்கு உங்களைக்கொண்டு வருவேன். நாம் செய்ய வேண்டாம் என்று அலட்சியமாக விட்டிருக்கின்ற இம்மாதிரி விஷயங்கள் நிகழாமல் இருக்கட்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். பண்டாராவின் விளைவுக்காக நாம் காத்திருப்போம். அழிவு மூடிவைக்கப்பட்டுள்ளது.’’

## 22-2-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "புண்படாமல் எச்செயல்களையும் செய்து வெளிவர இயலாது என்னும் வகையில் எல்லா செயல்களும் நம்மிடம் வந்து செல்கின்றன. மக்கள் அனைவருக்கும் இடையே தனிச்சிறப்புடன் வாழக்கூடிய ஒருவனே உண்மையான மனிதன். மனிதர்களின் எண்ணப் பதிவுகளால் (சம்ஸ்காரங்களால்) பாதிக்கப்பட்ட சூழ்நிலைகளுக்கிடையே அவைகளின் தாக்கங்களிலிருந்து தப்பி வாழ எவருக்கும் இயலாது. (சுற்றுப்புறச் சூழ்நிலை மக்களின் சம்ஸ்காரங்களின் விளைவினால், மக்களை பாதிக்கும்படியாக ஆகியிருக்கிறது.) இது நமது சொந்தக் குறைபாட்டினால் தான் வருகிறது. அப்படி பாதிக்கப்பட்ட சூழ்நிலைகளின் தாக்கத்தால் உண்டான பதிவுகளை வெளிப்படுத்தாதிருக்கும் மனவலிமை இல்லாத அளவிற்கு பலகீனமடைந்துள்ளோம். இது ஏனென்றால் தங்கள், எண்ணங்களின் ஒழுங்கற்ற தன்மையிலிருந்து அவர்கள் இன்பத்தைப் பெறுவதால் தான். தன் கையில் உள்ள வேலையை முடித்து அந்த வேலையின் பளுவிலிருந்து விடுபட்ட பின்னர் அடுத்த வேலையை எடுத்துக் கொள்ளக் கூடியவர்களாக எவரும் இல்லை. (ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட வேலையின் பதிவாகிய சுமையிலிருந்து விடுபட்டிருக்க முடியவில்லை). பொதுவாக இதயத்தின் குழப்பத்திற்குக் காரணம் என்னவென்றால், ஒரே சமயத்தில் அளவுக்கு மீறிய எண்ணங்கள் அதில் கவனிக்கப்படுகின்றன; அல்லது இதயத்தை பாதிக்கும் அளவுக்கு ஏதோ ஒரு எண்ணம் காரணமின்றி அதில் அழுத்தப்படுகிறது. இந்த சோக நிலையிலிருந்து விடுபடுவதற்கு கடவுள் சம்பந்தமான ஏதாவது ஒரு காரியத்தை ஆழ்ந்த ஈடுபாட்டுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுவே அவரது மோட்சத்திற்கு ஒரு கருவியாக மாறும்படி, வளர்ச்சி பெறச்செய்ய வேண்டும். நமது கூட்டத்தார் அனைவருக்கும் இந்த போதனையைக் கற்பிக்க வேண்டும். இந்தப் பரிந்துரையின்படி நடந்து கொள்கிறவர் பெருமளவுக்கு வெற்றியடைகிறார். எந்த வடிவத்திலும் இதைப் பின்பற்றலாம். இந்த விஷயத்தில் எந்த

தீங்கும் இல்லை. இதில் முக்கியமானது நம் பார்வையில் இருக்கும் நோக்கத்தில் அக்கறையுடன் இருப்பது தான். எல்லோரும் பின்பற்ற வேண்டிய இன்றியமையாத மற்றொரு விஷயம், அதுவே முக்கியமானது என்று ஏற்றுக் கொள்ள வேண்டியதாக, அன்பையும் பக்தியையும் நாடியிருப்பதே ஆகும். இதை எப்படி தன்னிடம் ஏற்படுத்திக் கொள்வது என்ற கேள்வி இப்போது வருகிறது. பரிசுத்தமானவராக (பூரணமானவராக) தன்னால் கருதப்படும் ஒரு மனிதரை கடவுளின் வடிவமாகக் கருதவேண்டும் என்பதே இதற்கு விடையாகும். அந்தக் குறிப்பிட்ட மனிதரை இவர் நேசிக்கத் துவங்கவேண்டும். இன்னும் கூட ஒரு விஷயம் மீதி இருக்கிறது. இந்த உணர்வு எப்படி வரும்? சரியான நடத்தையால் வரும் என்பதே இதற்கு விடை. நன்னடத்தையை எப்படி நாம் வளர்த்துக்கொள்வது என்ற எண்ணத்திற்கு இது இடமளிப்பதால், இந்தப் பிரச்னை இன்னமும் தீர்க்கப்படவில்லை. பிரார்த்தனை மற்றும் மற்றவர்கள் மீது மரியாதையும், மதிப்பும் கொண்டிருக்கும் பழக்கம் ஆகியவற்றினால் அது முடியும் என்பது இதற்கு விடை. மேலும் ஒரு கேள்வி எழுகிறது. அந்த நிலைக்கு நாம் எப்படி வருவது? நல்ல மனிதர்களின் நட்பும், பக்தர்கள் மற்றும் மூத்த மெய்ஞ்ஞானிகளின் வரலாறுகளைப் படிப்பதும், கேட்பதும் அதற்கு வழியாகும் என்பது இதற்கு விடை.''

''எந்த தியானப் பயிற்சியும் செய்யாமல் ஒருவர் தனது சங்கல்ப சக்தியை எப்படி வலிமையாக்கிக் கொள்வது?'' ஏதாவது ஒரு வேலையை முக்கியமானதாக எடுத்துக் கொள்வது, மற்ற வேலைகளை இரண்டாவது, மூன்றாவது என்று அதனதன் முக்கியத்துவத்தைப் பொறுத்து எடுத்துக் கொள்வது என்பதில் இதற்கான பதில் உள்ளது. எனினும் இந்தப் பிரச்னை இன்னும் தீரவில்லை. இது நிகழ ஆரம்பிக்கும் விதத்தில் மற்றும் இதுவே ஒரு பழக்கமாக வளர்ச்சியடையும் விதத்தில் ஒருவர் தன்னை உருவாக்கிக் கொள்வது எப்படி? தன்னிடம் உறுதியான சங்கல்ப சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதியான தீர்மானத்தை முதலில் ஒருவர் எடுத்துக் கொள்ள வேண்டும். அதன்பிறகு அவர் அந்த வேலையை எடுத்துக் கொள்ளலாம்

என்பதே இதற்கான பதில். சிறிது காலத்துக்கு முன்பு பிரியமுள்ள ராம்சந்த்ரா கோடியிட்டுக் காட்டியுள்ள, காரண சரீரத்தில் ஜீவிதம் சம்பந்தமான தத்துவத்தின்படி, அந்த காரண சரீரத்தில் இதனால் ஒரு பதிவு செதுக்கப்படும் என்ற இந்தக் கண்ணோட்டத்தில் அந்த வேலையை எடுத்துக்கொண்டால், அது உதவியாக இருக்கும். காரண சரீரத்தில் அதன் பதிவை எப்படி செதுக்குவது என்ற கேள்வி இப்போது தோன்றுகிறது. நமது நாட்டத்தில் ஒரே முனைப்பான தன்மையினால் அந்தப் பதிவை ஏற்படுத்த வேண்டும் என்பது இதற்கு விடையாகும். இந்தப் பிரச்னை இன்னும் தீர்க்கப்படாமலே இருக்கிறது. அதாவது நாட்டத்தில் ஒரே முனைப்பான தன்மையை எப்படி உருவாக்கிக்கொள்வது? முதலில் ஒரே முனைப்பான நோக்கமுடன் தான் இருப்பதாக தன்னைக் கருதியிருக்க வேண்டும் என்பது இதற்கு பதிலாகும். இது உத்தேசமான எண்ணம் (அல்லது அப்படி இருப்பதாக பாவித்துக்கொள்ளும் தன்மை) என்று கூறப்படுகிறது. பிரியமான ராம்சந்த்ரா மாஸ்டரின் உருவத்தை தியானம் செய்வதில் பெரும்பாலும் பின்பற்றும் வழிமுறை இது. இது அவரே கண்டறிந்த வழியாகும். எது செய்யப்பட வேண்டுமோ மற்றும் வெற்றி பெறச் செய்யப்பட வேண்டுமோ அதைப்பற்றிய உறுதியான எண்ணத்தை மட்டுமே மனதில் வைத்திருப்பதையும், அதற்கு எதிராக எந்த எண்ணத்தையும் உருவாக்காமல் இருப்பதையும் இந்த உத்தேசமாக எண்ணும் வழிமுறை உள்ளடக்கியுள்ளது. அது சரியான செயலாக இருக்கும் பட்சத்தில் எந்த ஒரு லௌகீக காரியத்துக்கும் இந்த முறையைப் பயன்படுத்தலாம்.

மாலை 5.25 மணிக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “இன்றைய தினத்திலிருந்து தெய்வீக வெளிப்பாடுகள் (ஸ்ருதி) என்ற வடிவத்தில் அங்கிருந்து நேரடியாக கட்டளைகள் வந்திறங்க ஆரம்பமாகும்படியாக ஆழ்ந்த இணைப்பை பரமாத்மாவுடன் (பரம்பொருள் தன்மையுடன்) அவர் (பாபுஜி) ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். பிரியமான ராம்சந்த்ராவுக்கு என்னால் அளிக்கப்பட்டிருக்கின்ற

பயிற்சி மற்றும் அதன் செயல்நுட்பத்திற்கு இணையாக வேறு உதாரணம் எங்கும் இல்லை. முனிவர்களில் மிகப்பெரிய, மற்றும் அதைவிட மிகப்பெரியவர்களின் சிந்தனையிலும், கற்பனையிலும் இது நிகழ முடியாது. உண்மையைச் சொன்னால், முற்றிலும் புதிய ஒரு விதமான, அந்தப் பயிற்சிக்கு ராம்சந்த்ராவும் தகுதியான பாத்திரமாக இருந்தார். நான் அவருக்கு அளித்த பிராணாஹூதியை அவர் தனக்குள் உறிஞ்சிக்கொண்டார். மற்றவர்களிடத்தில் அந்தப் பிராணாஹூதி அவர்களுடைய சொந்த உள் நிலையைத் தொடுவதற்கு வந்தபோது அவர்கள் அதை வெளியே வீசியெறிந்து விட்டார்கள். அது எப்படியிருந்தாலும், ஒரு விசேஷ உள்நிலையினால் பிரியமான ராம்சந்த்ராவை நிரப்புகின்ற இந்தக்காரியத்தை சிறிதுகாலத்திற்குப் பிறகு, அவர் அதற்குத் தகுதியுடையவர் மற்றும் எனது ஆன்மீகப் பிரதிநிதியாகவும் என்னையடுத்து என் பதவிக்கு உரியவராகவும் இருப்பதற்கு ஏற்றவர் என்பதில் நான் முழு நிச்சயமாக இருந்த போது செய்தேன். மற்றவர்களால் அளிக்கப்பட்ட பிராணாஹூதியின் ஒரு விளைவு பிரியமான ராம்சந்த்ராவின் ஜீவனின் வெளிப்புற திரையில் இருந்தது. ஆனால் அவருடைய ஜீவனின் உள்ளார்ந்த திரையை யாராவது தன் எண்ணத்தில் எடுத்துக்கொண்டபோது (மனதில் நினைத்த போது) பிராணாஹூதி அளிக்கும் அந்த மனிதரே அதனால் வசீகரிக்கப்படத் துவங்குவார். மிகவும் ரகசியமான ஒரு விஷயத்தை நான் இங்கு வெளிப்படுத்துகிறேன். அவருக்கு (பாபுஜி) யார் பிராணாஹூதி அளித்தாலும், அவரே அதிலிருந்து நன்மையைப் பெறத் துவங்கினர்; அது என்னிடமிருந்து வருகின்ற நன்மையாகவே கருதப்பட்டது. இங்கே பார் M1 - இம்மாதிரியான பயிற்சியை ஒரே ஒரு சீடருக்கு மட்டுமே கொடுக்க முடியும். மேலும் இது குருவுக்கும் சீடனுக்கும் இடையே போதுமான அளவு நெருக்கம் வளர்ச்சியடைந்திருக்கும் போது மட்டுமே சாத்தியமாகிறது. இது கடவுளின் பரிசு. இது ஒருவரின் சொந்த சக்தியைச் சார்ந்த விஷயமல்ல. ராம்சந்த்ராவுக்கு வேறு யாரும் உண்மையான வழியில் சரியான வழிகாட்டுதலைக் கொடுக்கவில்லை. ஆனால் சிலர் அவரை திசைமாறிப் போக

வைப்பதற்கும் கூட முயற்சி செய்தார்கள். மாஸ்டரின் உருவத்தை தியானம் செய்வது பற்றிய விஷயத்தில், அது இந்த பரிதாபமான மனிதனுக்கு (ராம்சந்த்ராவுக்கு) குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை; அது தடையும் செய்யப்பட்டிருந்தது. அவர் தனது இந்தப் பணிவான கண்டுபிடிப்பையே நம்பிச் சார்ந்திருக்க வேண்டியிருந்தது; அது சரியான வழியாக அமைந்துவிட்டது. அவருடைய இப்போதைய நிலைக்கு கடவுள் அவரைக் கொண்டுவர வேண்டியிருந்ததால் மாஸ்டரின் உருவத்தை தியானம் செய்கின்ற இந்தப் பயிற்சி தானாகவே சரியான வழியில் ஆரம்பமாகியது. அன்புள்ள M1, பொதுவாக மக்கள் - அதாவது சீடர்கள் - செய்து கொண்டிருக்கின்ற சற்றும் சம்பந்தமில்லாத (பொருந்தாத) ஒரு விஷயம் இருக்கிறது. மாஸ்டரின் உருவத்தை தியானம் செய்யும்போது அவர்கள், மாஸ்டரின் உடம்பின் ஒரு பகுதியை மட்டும் அதாவது தலையை மட்டும் நினைக்கிறார்கள். ஆனால் மாஸ்டரின் முழு உருவத்தையும் நினைத்து தியானம் செய்யவேண்டும். பிரியமான ராம்சந்த்ரா அப்படித்தான் மிகச் சரியாகச் செய்தார். இதில் வேடிக்கை என்னவெனில் இதை அவர் முழுமையான தனிச்சிறப்புடன் செய்தும் கூட ஷகல் ரப்தாவை (குருவின் உருவ தியானத்தை) தன்னால் சரியாகச் செய்ய முடியவில்லையே என்ற குற்றவுணர்வுடன் இருந்தார். இந்த எண்ணத்தின் அழுத்தத்தினால் (குற்ற உணர்வினால்) தன்னால் அதைப் பயிற்சி செய்ய முடியவில்லை என்றும், அது ஏன் என்றும் என்னிடம் கேட்டார். (இதைவிட அதிகமாகச் சொல்வதற்கு இது சமயமல்ல என்று கருதி) அவரிடம் ஐக்கியநிலை இருப்பதால் இதை அவரால் பயிற்சி செய்ய இயலாது, என்று மட்டும் அவருக்கு பதில் கூறினேன். ஆயினும் அப்போதும் கூட அவரால் அமைதியடைய முடியவில்லை. தொடர்ந்து சூட்சுமமான வடிவங்களில் என்னைப் பற்றிய நினைவில் இருந்தார். அந்த ஞாபகமும் கூட மறக்கப்பட ஆரம்பித்த போது, அவர் அதற்கு முன்பு கண்டுபிடித்த, அவருடைய கொள்கைக்கு ஏற்றவாறு தன் மாஸ்டரின் ஞாபகத்திலேயே அவர் இருப்பதாக மனோபாவனை (உத்தேச எண்ணம்) மேற்கொண்டார். அதற்குப் பிறகும் கூட

இந்தப் பயிற்சியை பல வடிவங்களில் மாற்றினார். மாஸ்டரின் உருவத்தை தியானம் செய்யும் இந்தப் பயிற்சி ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்து நீடித்திருப்பதற்காக ஏதாவது ஒரு செயல் நுட்பத்தைக் கண்டுபிடித்தார். நான் அவருடைய கட்டுப்பாடுகளை உடைத்தெறியும் அந்த நாள் வரையில் இதை அவர் பின் பற்றி வந்தார். அதன் பிறகும் கூட அந்தக் கட்டுப்பாடுகளின் ஆற்றலின் மூலமாக அதே விஷயத்தை அவர் புதுப்பித்துக்கொண்டிருந்தார். இதன் விளைவாக அவர் அப்படிச் செய்வதை நிறுத்தும் எண்ணத்தை M1 – உடைய இதயத்தில் உண்டாக்க வேண்டியதாயிற்று. இதன் காரணம் என்னவென்றால், அவரது (ராம்சந்த்ராவின்) பந்தங்கள் உடைக்கப்பட்டதால் அவருடைய அனுபவத்திற்கு வந்த முழு ஆற்றலுடன் அவர் அதில் கவனம் கொண்டிருந்தார் என்பதேயாகும். ஷகல் ரப்தாவின் (Shaghal Rabta) கடைசி நிலையாகவே அதுவும் இருந்தது. அதை அவர் அப்படியே நீடித்துக்கொண்டிருந்தார். இந்தப் பழக்கத்தை அவர் நீண்டகாலமாகத் தக்க வைத்திருந்தார். அதனால் அதே பழக்கத்தை வலிமையாக்க இந்த சக்தியை அவர் பயன்படுத்திக்கொண்டார்.''

''இன்று நானாகவே ஒரு செயல் நுட்பத்தைக் கண்டுபிடித்தேன். அதாவது கவிதை போன்ற இரண்டு வரிக் கருத்து, – அது அன்பைத் தூண்டக் கூடிய தன்மையில் இருக்க வேண்டும் – அது மீண்டும் மீண்டும் கூறப்பட வேண்டும். அந்தச் செய்யுளைக் கூறுகின்ற அம்மனிதர் கேட்பவர்களை அன்பினால் நிரப்பிக்கொண்டே இருக்க வேண்டும். மனதில் மிகவும் வலிமையோடு இருக்கும் இன்னொரு மனிதர் அந்த அன்பின் விளைவை மெதுவாகவும், லேசாகவும் தன்னை நோக்கி இழுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அந்த அன்பின் அலைகள் கூட்டத்தாரிடம் நன்கு பரவத் துவங்கியிருக்கும் போது அந்த அன்பின் விளைவை திரும்ப எடுத்துக்கொள்ளும் செயல்முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அதாவது கூட்டத்தாரிடம் நிரப்பப்பட்டுக் கொண்டிருக்கும் அன்பு அவர்களை நிரப்பிய பிறகு அதைத் திரும்ப இழுத்துக் கொள்கின்ற செயல்

நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் மனிதரை நோக்கி மெதுவாக வந்து கொண்டிருக்கிறது என்ற எண்ணத்துடன் இப்படிச் செய்யப்பட வேண்டும். இதற்கு மிக அதிகமான வலிமையுடன் சங்கல்பத்தைப் பயன்படுத்த வேண்டிய தேவை இல்லை. ஏனென்றால் கூட்டத்தினரை அன்பினால் நிரப்புகின்ற அம்மனிதர் அத்தனை அதிக அளவுக்கு நிரப்புவதில்லை, நிரப்புவதும் கூடாது. இப்படிச் செய்வதன் நன்மை என்னவெனில் அக்கூட்டத்தார் உயர்ந்த புனிதத் தன்மையின் சுவையைப் பெறச் செய்வதே ஆகும். இதனால் அவர்களின் சக்கரங்களுக்கு லேசாக ஒத்தடம் (தூண்டுதல்) கொடுக்கப்படும். ஆயினும் இந்த வழிமுறையை யார் வேண்டுமானாலும் செய்வது கூடாது. M1 - இதைச் செய்யலாம். ஆனால் அப்போது பிரியமான ராம்சந்த்ரா அங்கே உட்கார்ந்து, அதைத் திரும்ப எடுத்துக் கொள்ளும் செயல் முறையைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். அதேபோல பிரியமான ராம்சந்த்ரா அன்பை நிரப்பும் வேலையைச் செய்யும் போது M1 - அங்கே இருந்து அதைத் திரும்ப எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த செயல் நுட்பத்தைப் பயன்படுத்தும் இரண்டுபேருமே போதுமான அளவுக்கு மனவலிமை உடையவர்களாக இருக்க வேண்டும். எல்லோரும் இப்படிச் செய்வதற்கு அனுமதிக்கக்கூடாது. இந்தப் பரிந்துரை நன்கு சோதிக்கப் பட்டிருக்கிறது. இதற்குத் தேவையான தகுதிபெற்ற இரண்டு பேர் (கிடைக்காவிட்டால்) ஒன்று சேர்ந்து இருக்க முடியாமல் போனால், ஒருவரே தனியாக நின்று நிரப்பும் வேலையையும், திரும்ப எடுத்துக்கொள்ளும் வேலையையும் செய்யலாம். இது சம்பந்தமாக பிரியமான ராம்சந்த்ராவின் வழிமுறையை நான் விரும்பினேன். அதாவது ஒரு வட்டம் துவங்கி அது பயிற்சி செய்பவர்களின் (அப்யாசிகளின்) வழியாகப் புகுந்து கடந்து தன்னிடமே வந்து சேரும் முறை அது. தேவையான தகுதி உடைய இரண்டாவது மனிதர் ஒருவர் அங்கு இல்லாத சூழ்நிலையில் இது மிகச்சிறந்த வழிமுறையாகும்.''

## 23-2-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "இந்தக் குறுகிய காலத்தில் எனக்கு உதவிகரமாக இருந்தவர்களை, வேறு யாருக்கும் அப்படிச் செய்வது சிரமமானதாக இருந்த ஒரு நுட்பமான கட்டத்தில் எனக்கு உதவமுடியும் என்று நிரூபித்தவர்களை நான் கொண்டு வந்திருக்கிறேன். நான் ஏன் அப்படிச்செய்தேன் என்ற கேள்வி இப்போது வருகிறது. இதை என் சுயநலம் என்று குறிப்பிடுவதா அல்லது அது கடவுளின் கட்டளை என்று கருதவேண்டுமா? தங்கள் சொந்த வழியில் இரண்டு காரணங்களுமே சரியாக இருக்கமுடியும். உண்மையில் அவர்களை உருவாக்கியதன் நோக்கம் வேறு ஒன்றாக இருந்தது. கடவுளின் பணியில் அவர்கள் உதவி செய்ய வேண்டும் (செய்கிறார்கள்). இங்கே முதல் காரணம் முடிந்து போகிறது. இப்போது இரண்டாவது காரணம் துவங்குகிறது. அதாவது எனது சத்சங்கத்தின் (மார்க்க உறுப்பினர்களின்) நிலை மோசமான நிலைமையில் இருக்கிறது, இதெல்லாம் உனக்குத் தெரியும். நானும் தொடர்ந்து அதைச் சுட்டிக்காட்டிக் கொண்டே இருந்திருக்கிறேன். அதைச் சரிப்படுத்துவது உன் கடமை என்றே நீ நினைக்கவேண்டும். அதற்கான வழிமுறைகளை என்னிடமிருந்து நீ எடுத்துக்கொண்டே இருக்கலாம். ஆனால் இந்த நோக்கத்திற்காக ஒரு வழிகாட்டியும் தேவைப்படுகிறார். அவர் என்னுடன் நேரடியாக இணைக்கப்பட்டவராக இருக்க வேண்டும். என்னால் உருவாக்கப்பட்டவர்கள் என்னுடைய கட்டளைகளைப் பின்பற்றுவதற்கு ஏதுவாக அந்த கட்டளைகள் அவர்களைச் சென்றடைவதற்காக அவர் என்னுடன் இணைந்தவராக இருக்க வேண்டும். இப்போது இந்த நோக்கத்திற்காக செய்யப்பட வேண்டியது எதுவாயினும் அது பற்றி என்னிடம் கேட்டறிய வேண்டும் என்பது இதன் உள்ளடங்கிய கடமையாகிறது. இதற்காக எனது கருவியாக இருப்பவர் அங்கே இருக்கிறார். அதை மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டிய தேவை இல்லை.''

‘‘நான் சிந்தித்து வைத்துள்ள ஏற்பாட்டினை இப்போது நான் தெரிவிக்கிறேன். அதாவது M1, B - என்ற இடத்திலேயே இருக்க வேண்டும். இந்த மாவட்டத்தில் (ஷாஜஹான்பூர்) இருக்கும் வேலையை R2 - கவனிக்க வேண்டும். ஆயினும் இந்த இருவருமே மற்றவருடைய வட்டத்திற்குள் வேலை செய்ய முடியும் (செய்யலாம்) என்பது நினைவில் வைக்கப்பட வேண்டும். உண்மையில் வட்டங்கள் என்பதாக ஏதுமில்லை. இவை மக்களின் வசதிக்கான நிர்வாக ஏற்பாடுகள் தான். அதாவது மக்கள் என்றால் பயிற்சி பெறுகின்ற, பயிற்சி பெற இருக்கின்ற மனிதர்களைச் சொல்கிறேன். அவர்களின் குணாதிசயத்தை சீர்திருத்துவது M1 - மற்றும் R2 - இவர்களின் கடமை. அதனுடன் கூடவே ஆன்மீகப் பயிற்சியும் அளிக்கப்படும். என்ன விதமான குணாதிசயம் அங்கே இருக்க வேண்டும் என்ற கேள்வி இப்போது தோன்றும். பயிற்சியளிக்கும் பிரிசெப்டர்கள் என் வாழ்க்கை வழிமுறையைப் பின்பற்றி நடக்கவேண்டும். அதற்கு ஏற்ற விதமாகவே மற்றவர்களுக்கும் பயிற்சியளிக்க வேண்டும்.

கேள்வி :- இது எப்படி சாத்தியமாகும்?

பதில் :- என்னுடைய குணாதிசயத்தைப் போல அதற்கு உதாரணமானவர்களாக அவர்கள் (பயிற்சி தருகிறவர்கள்) தாங்களாகவே மாறவேண்டும். இந்த விஷயம் மிகவும் வற்புறுத்தப்பட வேண்டும். இதை நடைமுறையில் கொண்டு வருவதற்கு பிரார்த்தனை வழிமுறைகள் பயன்படுத்தப்பட வேண்டும். இதை நான் எல்லோருக்கும் சொல்கிறேன். R2 - இந்த ஷாஜஹான்பூர் மாவட்டம் முழுவதும் மற்றும் நான் அவரை அனுப்பும் இடங்களுக்கெல்லாம் பயணம் செய்ய வேண்டும். அவர் K2 - வுக்கு உதவியாக இருக்க வேண்டியிருக்கும். M1 – உம் கூட R2 – ஐயும் K2 – ஐயும் எங்கெல்லாம் அனுப்புவது முறையோ அங்கு அனுப்பலாம். இந்த வேலைகள் அனைத்தும் என்னுடையதாகவே நீடித்து இருக்கும். இதற்கு அடுத்ததாக, எப்போதெல்லாம் மற்றும் எங்கேயெல்லாம் அது சரியானது

என்று நான் கருதுகிறேனோ அதற்குத் தக்கபடி உத்தரவுகள் கொடுப்பேன்.''

## 25-2-1945

K2 – வுக்கு அனுப்புவதற்காக ஒரு கடிதத்தின் வாசகங்களை சுவாமி விவேகானந்தா கூறினார் :- “தன் தாயாரைக் கவனிப்பதில் ஈடுபட்டிருக்கின்ற R2 – க்குப் பதிலாக இதே புகைவண்டியில் உங்களை வந்தடைய நான் எண்ணம் கொண்டிருந்தேன். உங்களுக்கு உதவி தேவைப்படும் போது என்னையோ, எங்களில் யாரையாவதோ நீங்கள் அழைக்கலாம். ஒரு முக்கியமான தன்மை உடைய வேலையில் நாங்கள் அனைவரும் மும்முரமாக இருக்கிறோம். ஆகையால் இந்த இடத்தை விட்டு நாங்கள் செல்ல முடியாது.'' இந்தக் கடிதத்தை உடனே அனுப்பிவிடும்படி சுவாமிஜி கூறினார்.

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்தரவு :- “என் சத்சங்கத்தில் பாடல்களைப் பாடத் துவங்குங்கள். ஆனால் இதற்காக இசைக்கலைஞர்களை அல்லது மத்தளம் வாசிப்பவர்களை, அல்லது தொழில்முறை கவ்வாலி (Gawali) பாடகர்களை அழைக்க வேண்டிய தேவையில்லை. பிராணாஹூதி அளித்துக்கொண்டிருக்கின்ற அந்த மனிதர் மட்டுமே பாடலாம். பொதுவாக சத்சங்கத்தில் கலந்து கொள்கின்ற எல்லோரும் அங்கே பாடக்கூடாது. பிராணாஹூதி அளிக்கும் அந்த மனிதர் அது தேவையென்று கருதினால், அந்தக் கூட்டத்தில் இருக்கும் மக்களின் மனங்களில் ஒருமுகப்படுதல் இல்லையென்றால், அன்பில் சிறப்பாக மனம் தோய்ந்திருக்கின்ற ஒன்று அல்லது இரண்டு பேரை பாடும்படி கூறலாம். அதுவும் ஒவ்வொரு சமயத்திலும் அப்படிச் செய்யக்கூடாது. இந்த விஷயத்தில் பிராணாஹூதி அளிக்கும் தகுதி பெற்றிருப்பவர்கள் மட்டுமே முன்னிலை பெறவேண்டும். இந்தக் கூட்டத்திலும் மற்றும் என் சமாதியிலும் அது என்னுடையதாக இருந்தாலும், உன்னுடையதாக இருந்தாலும் ஒரு போதும் விலைமாதர்கள் பாடுவதற்கு

அழைக்கப் படக்கூடாது. இந்த முன்னெச்சரிக்கையை கண்டிப்பாக அனுசரிக்க வேண்டும்.”

26-2-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- ‘‘நான் ஃபடேகரிலிருந்து வருகிறேன். அங்கு இருக்கும் நிலைமையை கவனித்து அறிந்தேன். அது பற்றி உனக்கு அவ்வப்போது தெரிவிக்கிறேன். இந்த முக்கியமான வேலையைக் கவனித்துக் கொள்வதற்காக ஒரு விசேஷ மகாபுருஷராகிய சுவாமி விவேகானந்தாவை நியமித்திருக்கிறேன். அவர் இன்னும் திரும்பிவரவில்லை. அந்த வேலை முடிவடையும் வரையில் சக்தியின் உண்மையான சேமிப்புக் கிடங்கிற்கு அவர் திரும்பிவர விரும்பவும் இல்லை. ஒரு மூத்த முனிவராகிய சுவாமி விவேகானந்தாவின் ஆளுமைக்கு இணையாக வேறு ஒன்றும் இல்லை. நான் இப்போது எனது முக்கியமான நோக்கத்திற்கு வருகிறேன். அவர் மட்டுமே செய்ய வேண்டிய ஒரு வேலையை II (2) என்பவருக்கு (லல்லு அல்லது இன்ஸ்பெக்டர் சாஹிப்புக்கு) ஒப்படைக்கிறேன். அதற்காக நான் நஷ்ட ஈடு கொடுப்பேன். அவர் ஃபடேகர் போகும்போது தன் சிற்றன்னையுடன் (அல்லது அத்தையுடன்) (வணக்கத்திற்குரிய லாலாஜி அவர்களின் மனைவி) அவர் பேசி, நமக்கு எதிரானவர்கள் அவளுக்குச் சொல்லிக்கொடுத்துள்ள பொய்யான விஷயங்களுக்கு எதிராக அவளைத் திசை திருப்ப வேண்டும். ஷாஜஹான்பூரைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட மனிதர் அல்லது மனிதர்களுக்கு எதிராக அவள் மனதில் பதியச் செய்திருக்கின்ற மற்றும் அவளுக்குச் சொல்லப்பட்டிருக்கின்ற விஷயத்தின் நோக்கமும் அர்த்தமும் வேறு ஏதோ ஒரு மறை முகமான காரியத்துக்காகத் தான் என்றும் விரைவில் அது அவளுக்குத் தெளிவாகப் புரிந்துவிடும் என்றும் சொல்ல வேண்டும். எனவே இப்போதைக்கு அவள் மனத்தில் செலுத்தப்பட்டுள்ள விஷத்திலிருந்து அவள் விடுபட வேண்டும். மற்றும் ஷாஜஹான்பூர் மக்களுக்கு எதிராக அவளிடம் வளர்ந்திருக்கும் வெறுப்பை நீக்கிவிட வேண்டும் என்று சொல்ல வேண்டும். இது சம்பந்தமாக முக்கியமான எல்லா

விஷயங்களையும் கூட அவளுடன் அவர் (II) பேச வேண்டும். அதாவது உண்மையான பிரதிநிதித்துவம் பற்றிய வெளிப்பாடு அவளுக்குத் தெரியவருவதற்கு முன்பாக, அவள் சரியான பாதைக்கு வந்து சேர்ந்துவிடும் அளவுக்கு, அவளை சமாதானப்படுத்த வேண்டும் என்று சொல்கிறேன். அந்த அறிவிப்பு யாரைப் பற்றியதோ அது வெளியிடப்படும் போது அவள் அந்த மனிதரை நன்றாக சீர்தூக்கிப் பார்த்து, அந்த மனிதர் ஒரு மகன், தன் தாயின் மீது எவ்வளவு பாசத்துடன் இருக்க வேண்டுமோ, அதே மாதிரி தன்னிடம் அவர் இருக்கிறாரா? என்று கண்டறிய வேண்டும். இதில் ஒரு முன்னெச்சரிக்கையை அனுசரிக்க வேண்டும். அதாவது அங்கு செய்யப்பட இருக்கும் பொது அறிவிப்பின் சாராம்சத்தைப் பற்றிய விஷயத்தை அவர் (II) ரகசியமாக வைத்திருக்க வேண்டும். ராம்சந்த்ரா அங்கே போய்ச் சேரும் வரையில் மற்றும் பொது அறிவிப்பைச் செய்யலாம் என்று நான் உத்திரவிடும் வரையில் அவளுக்கோ, மற்றவர்களுக்கோ இதைத் தெரிவிக்கக்கூடாது. இந்த அறிவிப்பு செய்யப்படும் போது II அங்கே இருப்பது மிக அவசியம். அந்தப் பொது அறிவிப்பின் போது அவர் அங்கு இருக்க வேண்டும். மேலும் இந்த நல்ல காரியத்தை அவரே செய்து, பொது அறிவிப்பைச் செய்வது இன்னும் சிறப்பாக இருக்கும். அவர் இந்தக் காரியத்தைச் செய்ய முடிந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன். அவருடைய பெயர் ராம்சந்த்ரா பௌதீக உடலை நீத்த பிறகு எழுதப்படும் சரித்திரத்தில், பெரிய எழுத்துக்களால் (முக்கியத்துவம் கொடுத்து) எழுதப்படும். நான் தயார் செய்யும் இந்தக் குறிப்புக்கள் ராம்சந்த்ராவின் சுயசரிதத்தில் சேர்க்கப்படும். அவருடைய சுயசரிதம் எழுதப்பட வேண்டும் என்று மூத்த முனிவர்கள் அனைவரும் விரும்புகிறார்கள். அதனோடு கூடவே என் வாழ்க்கைச் சரித்திரமும் இருக்கும். ஏனெனில் அவரைவிடச் சிறப்பாக என்னை வேறு யாரும் புரிந்து கொள்ள முடியாது. மீண்டும் பதேகருக்கு நான் செல்கிறேன். தன்னுடைய வேலை செய்து முடிக்கப்படும் வரை, சக்தியின் உண்மையான சேமிப்புக் கிடங்குக்குத் திரும்பிவருவதில்லை என்று சுவாமி விவேகானந்தா சபதம் செய்திருக்கிறார்.’’

இரவு 7.30 மணிக்கு சுவாமி விவேகானந்தா கூறியது :- “இதோ உங்கள் முன்னால் ஒரு மிக உயரிய ஆன்மா வந்திருக்கிறார். குருநானக் தான் அவர். அவர் உங்களுக்கு ஒரு சிட்டிங் கொடுக்க விரும்புகிறார். (சற்று இடைவெளி) அவர் உங்களிடத்தில் ஐக்கியம் அடையப் போகிறார். இதோ, அவர் உங்களிடத்தில் ஐக்கியமாகி விட்டார். (சற்று இடைவெளி) அவர் உங்களுக்காக ஒரு பெரும் வேலையைக் கொண்டு வந்திருக்கிறார், அதை அவரே உங்களிடம் சொல்வார்.’’

குருநானக் தேவர் கூறியது :- ‘‘நான் மிகவும் விரும்பிப் போற்றி வந்த எதிர்பார்ப்பு இன்று நிறைவேறியது. மூத்த முனிவர்கள் அனைவருடைய கண்களும் இப்போது உங்கள் மீது இருக்கும் விதத்தில், தன்னை நோக்கிக் கவரும் மையமாக உங்களை உருவாக்கியிருக்கும் உங்கள் குருவுக்கு நன்றி தெரிவிக்கிறேன். என்னுடைய பணியும் இப்போது மிகவும் சீர்கெட்ட நிலையை அடைந்து விட்டது. அறியாமை வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆன்மீகத்தோடு அதற்கு சம்பந்தமே இல்லை. (அல்லது ஆன்மீகத்தில் அவர்களுக்கு அக்கறை இல்லை) சீக்கியர்கள் ஒரு அரசியல் இனத்தவராக மாறிவிட்டனர். மிக உயர்ந்த வீரத்தை, எடுத்துக்காட்டுவதற்கு இனிமேல் அவர்களுக்கு நேரமில்லை. இந்த நாடு முன்பு முஸ்லீம்களின் ஊடுருவலுக்கு, ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருந்த போது அல்லது ஊடுருவலை எதிர் நோக்கி இருந்தபோது, அது சரியாக இருந்தது.

சுவாமி விவேகானந்தா :- “அவரது சீடர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு அவர் சார்பாக உங்களுக்கு நான் அதிகாரம் அளிக்கிறேன்.’’

குருநானக் தேவர் :- இப்போது நான் மேலும் சொல்வதற்கு ஏதுமில்லை. இச்சமயத்தில் உங்கள் வேலையில் நீங்கள் மிக மும்மரமாக இருக்கிறீர்கள். என் வேலையைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். ஒரு விஷயத்தை நான் உறுதியாகச் சொல்வேன். அதாவது உங்கள் ஆயுட்காலத்தில் அவர்களை (சீக்கியர்களை) உங்களால் சீர்திருத்த முடியாது. உங்கள் வாழ்க்கைக்குப் பிறகு

உங்கள் வேலை ஆரம்பமாகும். ஆயினும் இதனால் உங்கள் ஆயுட்காலத்தில் அதை நீங்கள் கைவிட்டுவிட வேண்டும் என்று அர்த்தமில்லை.

சுவாமி விவேகானந்தா :- “இப்போது நீங்கள் குருநானக் தேவரிடமிருந்தும் நேரடியாக உத்தரவுகளைப் பெறுவீர்கள். நான் இல்லாத சமயத்தில் உங்கள் குரு கவனித்துக்கொண்டிருந்த என் வேலைக்கு நான் திரும்பிச் செல்கிறேன். அவருக்கு இனிமேலும் சிரமம் கொடுக்க நான் விரும்பவில்லை.’’

சிறிது நேரத்திற்குப் பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “M1 - இங்கே பார், இந்தச் சமயத்தில் ராம்சந்த்ரா எவ்வளவு சிறந்த மரியாதைப் பண்பை அனுசரித்திருக்கிறார் என்பதைப் பார்! குருநானக் தேவர் அவருக்கு தன் பணியைக் கவனிக்கும் அனுமதியை அளித்த போது நான் இங்கே இல்லை. குருநானக் தேவர் சொல்வதை, சுவாமி விவேகானந்தாவின் முன்னிலையில் என்னுடைய ஒப்புதலுக்காக எனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அவர் (ராம்சந்த்ரா) சொல்லியிருந்தால், அது சுவாமி விவேகானந்தாவுக்கு எவ்வளவு பயங்கரமான அவமதிப்பாக இருந்திருக்கும்? ராம்சந்த்ரா அப்போது சுவாமிஜியை என் இடத்தில் வைத்து மதித்து நடந்தார். இது அவருக்கு உரிய மரியாதையாகவும், முறையான நாகரிகப் பண்பாகவும் இருந்தது. நாங்கள் இருவரும் (லாலாஜியும், சுவாமி விவேகானந்தாவும்) அவரிடத்தில் சமமான உரிமை உடையவர்கள். அவர் இப்படித் தான் செய்திருக்க வேண்டும். இதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். குருநானக் தேவருக்கு முன்னால் அவர் தியானத்தில் உட்கார்ந்த போது, எண்ணத்தில் என்னை வைத்திருந்தார். அந்தச் சமயத்தில் அவரது நடத்தை மிக சிறப்பாக இருந்தது. என் மார்கத்தில் இம்மாதிரி மனிதர்கள் தான் வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆனால் அந்தோ! எனது தீவிரமான ஆவல் ஆவலாகவே இருக்கிறது. அவரைப் போல இருப்பது சிரமமானது என்பது போலத் தோன்றினாலும், அது அவ்வளவு சிரமமானது அல்ல. குருவின் மீது கொஞ்சம் பற்றுதலுடன் தன்னை இணைத்துக்கொள்வதுதான் தேவை.

அப்படி இணைத்துக்கொள்வது ஒருபோதும் அதிலிருந்து பிரிக்க முடியாதபடி இருக்க வேண்டும். இன்று நான் சொல்கின்ற இந்த உருவகம் (உதாரணம்) மிகச் சிறந்தது. அது எல்லோருக்கும் பயன் தருவது. தன் சீடர்கள் அம்மாதிரி வளர்ச்சியடைவதற்கு முயற்சி செய்யும்படி M1 - கூற வேண்டும். எல்லோரும் இதே மாதிரி நடந்து கொள்ள முடிந்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். அப்போது என்னுடைய குறிக்கோள் நிறைவேற்றப்பட்டதாக ஆகும். இதற்கு மேல் செய்ய வேண்டியது எதுவும் பாக்கி இருக்காது.

<u>1-3-1945</u>

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறியது :- ‘‘சக்தியின் பிரதான சேமிப்புக் கிடங்குக்கு சுவாமி விவேகானந்தா இன்னும் திரும்பி வரவில்லை. வேலையை முடித்து விட்டுத் தான் – அது ஊழிக்காலம் அல்லது இறுதித்தீர்ப்புநாள் (Qayamat) வரையில் இருக்க வேண்டும் என்பதாக இருந்தாலும் கூட - அது முடிந்த பிறகு தான் அங்கு திரும்புவேன் என்று சபதம் செய்திருக்கிறார். அது அப்படியிருக்காது என்பதென்னவோ உண்மை தான். இன்னும் ஒரு விஷயம் இருக்கிறது. என்னுடைய சக்தி முழுவதையும் உன் பார்வைக்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதை உன்னுடையதாகவே கருதியிரு. உடலை விட்டு உயிர் நீத்த போது உனது வணக்கத்திற்குரிய மாஸ்டர் இதே முறையைத் தான் பின்பற்றினார். அவர் அந்த உள்முக அனுபவத்தைப் பெற்றார். நானும் அப்படியே தான் செய்தேன். அதை உன்னுடையதாகவும் கருதியிரு. அதற்கான இணைப்பு ஏற்கனவே நேரடியாக நிலை நிறுத்தப்பட்டுள்ளது. அது உனக்கு மாற்றப்பட்டிருப்பதாகக் கருது.’’

சுவாமி விவேகானந்தா கூறியது :- “இன்றைய தினத்திலிருந்து நீங்கள் அப்படி ஒரு மிகப் பெரிய சக்தியுடைய மாஸ்டர் என்பதை அறிந்து நான் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கிறேன். அதை வருடாந்திர விழாவில் பயன்படுத்துங்கள். அதைப் பயன்படுத்தும் வழிமுறையையும், அதற்கான இடத்தையும் (புள்ளியையும்) நான் உங்களுக்குச் சொல்வேன். அம்மாதிரி ஒரு

மிகப் பெரிய சக்திக்கு முன்னால் யாரும் எதிரில் நிற்க முடியாது. அதை ஒரு நாசகர ஆயுதமாக நீங்கள் மாற்ற முடியும்.''

## 2-3-1945

சுவாமி விவேகானந்தா கூறியது :- "உங்கள் பாதையை சுலபமாகவும், தடை இல்லாமலும் ஆக்குவதற்கு நான் இரவும் பகலுமாக வேலை செய்து கொண்டிருந்தேன். இன்று காலை முதல் நடைமுறையில் அந்த வேலையை எடுத்துக்கொண்டு (அல்லது அந்த வேலையை நடை முறைக்குக் கொண்டு வந்து) சில மனிதர்களை அழிப்பதற்காகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். இதில் ஒரு விஷயம் என்னைப் பெருமளவுக்கு உறுத்திக் கொண்டிருக்கிறது. அதாவது நமது பிரபு தன்னுடையவர்கள் (தனக்கே சொந்தமானவர்கள்) என்று யாரை நினைத்தாரோ அந்த மனிதர்களால் தான், மிகப் பெரிய தீமை (பெரும் குழப்பமும் ஒழுங்கின்மையும்) உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஒருவரை மட்டும் விட்டுவிட்டு, மற்றவர்களை உங்கள் (அழிவு வேலைக்கு) இலக்காக ஆக்கியிருக்கிறீர்கள். M10 – இன் அழிவையும் மற்றும் B1 – ஐயும் கூட அழிப்பதை தற்காலிகமாக ஒத்திவைக்கிறேன். உங்கள் கூட்டத்தில் R7 - என்ற ஒரு மிகப் பெரிய முட்டாள் இருக்கிறார். அவரிடமிருந்து எதுவும் எதிர்பார்க்காதீர்கள். அவர், தன் சொந்த வழியில் போகிறார். யாரையும் பின்பற்றவில்லை. நீங்கள் அங்கே சென்றவுடன் நமது பிரவுவின் (லாலாஜியின்) சமாதியை முழு சக்தியுடன் சக்தியூட்டுங்கள். உலகில் வேறு எதையும் விட மேலாக ''உதிக்கும் சூரியன்'' ஆகிய சமாதியை விரும்புகிறேன். எனது ஒட்டுமொத்தமான அழிக்கும் சக்தியோடு நான் அங்கே இருப்பேன். தேவைப்படும் போது அதை இயங்கச் செய்யுங்கள். அதை எந்த விநாடியும் நீங்கள் இடித்துத் தள்ளலாம். இப்போது நான் எடுத்துக்கொண்டிருக்கின்ற ஒரே வேலை அது தான். கருணையின் சக்தி (தயாள சக்தி) உங்கள் பிரபுவிடமிருந்து (லாலாஜியிடமிருந்து) பெருகி வரும். அது தேவைப்படுமானால் நீங்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தக் குறிப்பை உங்களோடு வைத்துக்கொள்ளுங்கள். நமக்குத் தேவை இல்லாத

மனிதர்களை அழித்துவிடும்படி இப்போது பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் எனக்கு உத்திரவிட்டிருக்கிறார்.''

M1 - க்காக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “கடவுளின் கட்டளையின் முன்பு ஒருவர் வேறு எதுவும் செய்ய இயலாது. அவர் என்ன ஆணையிடுகிறாரோ அது நடந்தாக வேண்டும். ஒரு முனிவருக்கு உறவுகளில் ஒரு சம்பந்தமும் இல்லை. உங்களுக்கெல்லாம் இதை ஒரு கட்டளையாகச் சொல்கிறேன். இந்த வாழ்க்கையிலும் இதற்குப் பிறகும் இந்தக் கோட்பாட்டினை மதித்திருங்கள்.''

சுவாமி விவேகானந்தா தொடர்ந்து கூறியது :- “M10 – ஐ அழிவுக்கு ஒரு இலக்காக எடுத்துக்கொண்டிருந்தேன். உங்கள் குரு அவருக்கு ஒரு வாய்ப்பு அளித்தார். நமது பிரபுவின் கடிதத்தையும் அதன் வாசகங்களையும் நான் நினைவுவைத்திருக்கிறேன். அவர் உங்கள் காலடியில் விழுந்து வணங்கி தனது கடிதத்துக்காக மன்னிப்பு கோரி இறைஞ்சினால், அப்போது அவருக்கு குறைவான தண்டனை அளிக்கப்படும் என்ற ஒரு விமோசனம் அவருக்கு (M10) உண்டு. எனினும் அவர் தண்டனை பெறுவார் என்ற இவை தான் அக்கடிதத்தில் நமது பிரபு எழுதிய வாசகங்கள் ஆகும். என்னால் எதையும் தாங்கிக்கொள்ள முடியும். ஆனால் நமது பிரபுவின், உங்கள் குருவின் இதயத்தைத் தொட்ட (புண்படுத்திய) வார்த்தைகளை தாங்கிக்கொள்ள முடியாது. இது எப்படி நிகழ்கிறது? எதுவாவது உங்களைப் புண்படுத்தும் போது இது நிகழ்கின்றது. ''அவர் மண்டியிட்டு வணங்கினாலன்றி, அவரை நான் மன்னிக்க மாட்டேன்.'' என்ற வார்த்தைகள் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து நேரடியாக எனக்கு வந்தவை.

<u>3.3.1945 (பகல் 2.45 மணி)</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் வெளிப்படுத்திக்கூறியது :- “இப்போதும் கூட N1 - தனது முயற்சியை நிறுத்தவில்லை.

இந்தப்பிரச்னை ராம்சந்த்ராவுக்கு மாற்றப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.''

4-3-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "முழுமையான தன்மை மாற்றம் என்று சொல்லப்படுகின்ற விஷயம் சம்பந்தப்பட்ட பிரச்னையை ராம்சந்த்ரா மிக நன்றாகத் தீர்த்து வைத்திருக்கிறார். தங்கள் வாழ்வின் மிகவும் மதிக்கத் தகுந்த காலத்தை இதற்காகச் செலவிட்டுள்ள தத்துவ ஞானிகளாலும்கூட இந்த வழியில் அதைத் தீர்ப்பது சிரமமாக இருந்திருக்கும். ராம்சந்த்ராவின் உள்ளுணர்வுத் திறன் எப்போதுமே அதன் மையப்புள்ளிக்கே சென்று, எங்கே அதைத் தாக்க வேண்டுமோ, அங்கே மிகச்சரியாக அதையே தாக்குகிறது.''

பிறகு மாலை 5 மணிக்கு S1 – இடமிருந்து வந்த கடிதம் பற்றிக் கேள்விப்பட்டு சுவாமி விவேகானந்தா கூறியது :- "உங்கள் வணக்கத்திற்குரிய குரு, S - என்ற இடத்துக்குப் போயிருக்கிறார். அங்கே பேரழிவைச் செய்து கொண்டிருக்கிறார். அவரைத் தடுங்கள், விரைவில் அவரைத் தடுங்கள்''.

உடனே வணக்கத்திற்குரிய மாஸ்டரிடம் பிரார்த்தனை செய்யப்பட்டது. எனவே அவர் செய்யத் துவங்கியிருந்ததை அத்துடன் நிறுத்திக்கொண்டார்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மாலை 5.25 மணிக்குக் குறிப்பிட்ட கருத்து :- " அந்தக் கடிதம் சம்பந்தமாக எனக்கும் செய்தி வந்தது.

சுவாமி விவேகானந்தா கூறியது :- "இதுவரையில் நான் இந்த நிலைமையை கவனித்து ஆராய்ந்து கொண்டு, அதே சமயத்தில் என் வேலையையும் செய்து கொண்டிருந்தேன். நமது பிரவுவின் வேலைக்கு இடையூறு செய்து கொண்டிருக்கும் சில மனிதர்கள், தங்கள் முடிவைக் கண்டாக வேண்டும். பண்டாராவுக்குப் பிறகு எனது முயற்சிகள் கண்டிப்பானவையாக இருக்கும். நமது பிரபுவுக்கு சிரமங்களைத் தந்தவர்களுக்கு

எதிராகப் பழி தீர்க்கும் விதமாக என் இயல்பை நான் மாற்றிக்கொள்வேன். உங்களிடையே சில பண்புமிக்க மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஓரளவுக்கு உங்களுக்கு இசைந்து நடக்கிறார்கள். மற்றவர்கள் S1 - போல அந்த வழியில் போகிறார்கள். அவர் (S1) திறமையில்லாத சாதாரண மனிதர் (அல்லது சுயநலமுடைய மோசமான மனிதர்) சமுதாயத்திற்குப் பொருந்தாதவர். (அல்லது தகுதியற்றவர்) பண்பில் மெருகூட்டப்பட்ட மனிதர் என்ற நிலைக்கு அவரை (S1 - ஐ) உயர்வடைய வைத்தது நமது பிரபுவின் திறமைதான். உங்கள் மீது பாய்ந்து விடக்கூடிய (ஆபத்தான) ஒரே மனிதர் இவர் தான். நமது பிரபுவின் அழிவுண்டாக்கும் கோபத்திலிருந்து அவரைப் பாதுகாக்க உங்கள் கடமையை நீங்கள் செய்தீர்கள். பயம் வேண்டாம். அவர் பண்டாராவிற்கு வந்தால் விழிப்புடன் (ஜாக்கிரதையாக) இருங்கள். நீங்கள் எல்லா விதத்திலும் பாதுகாக்கப்பட வேண்டும். உங்கள் உயிருக்கே அபாயம் இருக்கிறது. ஆனால் அப்படி எதுவும் நிகழாது. உங்கள் குரு போதுமான அளவு வழிமுறைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறார். நான் மேலும் ஒரு ஆலோசனை தருகிறேன். நீங்கள் இரவில் தூங்கச்செல்லும் போது உங்கள் சகாக்களில் ஒருவர், நீங்கள் தூங்கிக் கொண்டிருக்கும் காலம் வரை விழித்திருக்க வேண்டும். இந்த வேலைக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் மனிதர் நல்ல உடல் நலமும், வலிமையும் உடையவராக இருக்க வேண்டும். நீங்கள் எல்லோரும் ஒரே அறையில் அல்லது ஒரே சுற்றுச் சுவருக்குள் ஒருவருக்கொருவர் அருகில் சேர்ந்து இருக்க வேண்டும். நீங்கள் வேறு எங்கும் போவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "மதிப்புக்குரிய சுவாமிஜி எதைக் குறிப்பிட்டுச் சொன்னாரோ அதன் படி, – என் முன்னிலையில் அந்த மாதிரி எதையாவது செய்யும் சக்தி யாருக்குமே கிடையாது என்றாலும் கூட - இந்த விஷயம் சம்பந்தமாக முன்னெச்சரிக்கைகள் மிக அவசியம். இந்த முக்கியமான வேலைகளைச் செய்கிறவர்களும், பிரியமான

ராம்சந்த்ராவின் பாதுகாப்புக்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறவர்களும் சாந்தி பாடத்தில் (பிரபஞ்சம் முழுவதும் அமைதி பரவுவதற்காக ‘ஓம் சாந்தி’ என்ற வார்த்தைகளை மௌனமாக ஜபித்தல்) பங்கேற்கக் கூடாது. இது M1 மற்றும் R2 இருவருக்கும் சேர்த்துத் தான்.

## 5-3-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “வருங் காலத்தில் என் முன்னிலையில் அல்லது பிரியமான ராம்சந்த்ராவின் முன்னிலையில் அல்லாமல் முற்றிலும் தன்மை மாற்றம் பெறச்செய்யும் இந்த முறை கையாளப்படுவதை நான் தடை செய்கிறேன். தனது சீடர்களுக்கு ஒருவர் இந்த முறையைப் பயன்படுத்தவே கூடாது. அதற்கான ஒரு தேவை ஏற்பட்டால் அவரை ராம்சந்த்ராவிடம் அனுப்பவேண்டும். இந்த முறையில் கடந்த காலப் பதிவுகள் ஒரு கொத்தாக உருவாகுமாறு ஒரு இடத்தில் வந்திறங்கி உடனடியாகப் பலனளிக்கும் வடிவத்தைப் பெற்று (துன்பத்திற்குக் காரணமாகும்) சாத்தியம் இருக்கிறது. அதிலுள்ள அபாயகரமான அம்சம் இது தான்.

## 6-3-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “(சில கையெழுத்துப் பிரதிகளிலிருந்து உருவாக்கப்பட்ட அவருடைய வாழ்க்கை வரலாற்றை அச்சிட்டு வெளியிடுவது பற்றிச் சொன்னது :- “என் வாழ்க்கை வரலாற்றில், N1 - உடைய பெயர், ஒரு போதும் இடம் பெறக் கூடாது. (சற்று இடைவெளி) இந்தப் புத்தகம் எத்தனை பிரதிகள் அச்சிடப்பட்டது? அவற்றில் விற்பனை செய்யப்பட்டவை எத்தனை? இது வரையில் அச்சிடப்பட்ட அனைத்து புத்தகங்களும் உன்னிடம் கொண்டு வந்து கொடுக்கப்பட வேண்டும் என்பது என் விருப்பம். இந்தப் புத்தகங்களை வாங்கியவர்கள் கூட அவற்றை உன்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டால் அது இன்னும் சிறந்ததாக இருக்கும். அவர்கள் விரும்பினால் அதன் விலையை அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிடலாம். இந்தப் புத்தகங்கள்

மிக மோசமான மற்றும் ஆட்சேபிக்கத் தகுந்த விதத்தில் வெளியிடப்பட்டுள்ளன. கையெழுத்துப் பிரதிகளாக இருக்கின்ற புத்தகங்கள் அனைத்தும் ஒரு இடத்தில் சேகரிக்கப்பட்டு, என்னிடம் படித்துக் காட்டப்படுவதை நான் விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட சம்பவம் அச்சிடுவதற்குத் தகுந்ததா? இல்லையா? என்பதை நான் சொல்வேன். இந்த விஷயமாக பிரியமான ராம்சந்த்ராவிடமிருந்து 500 ரூபாய் நான் எடுத்துக் கொள்வேன். அது முழுவதும் இந்த விஷயத்துக்காகவே செலவிடப்படும். அதிலிருந்து கிடைக்கும் வருமானம் எவ்வளவாயினும் நமது சத்சங்கத்தின் (ஆன்மீக சகாக்களின் சங்கத்தின் அல்லது மிஷனின்) வங்கிக் கணக்கில் இருப்பு வைக்கப்பட வேண்டும். அந்த வேலையில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இது சம்மந்தமாக ஒவ்வொரு படியிலும் நான் ஆலோசனைக் குறிப்புக்கள் கொடுத்துக்கொண்டிருப்பேன். மேலும் புத்தகத்தின் உள்ளடக்கத்தில் - அதாவது அதில் இடம் பெற்றுள்ள விஷயங்களில் நான் எழுதிய அசல் வாசகங்கள், எங்கே இடம் பெற வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுவேன். நான் சுருக்கமாகக் கூறியிருக்கின்ற கடினமான தலைப்புக்கான பற்றி விளக்கங்கள் கூட அளிக்கப்படலாம். அவை அனைத்தும் இங்கே (ஷாஜஹான்பூருக்குக்) கொண்டுவரப்பட்டால், புத்தகங்களின் வடிவில் அவை சுலபமாகத் தொகுக்கப்படும். இந்த நோக்கத்திற்காக தினமும் இரண்டு மணி நேரத்தைக் கொடுப்பேன். உன் தாயிடம் (லாலாஜி அவர்களின் மனைவியிடம்) இந்தப் புத்தகங்கள் உன்னிடம் தான் இருக்கும், வேறு யாரிடமும் போகாது, (அவையனைத்தையும் தன்னிடம் வைத்திருப்பதும் மற்றும் தேவையானதைச் செய்வதும்) உன்னுடைய தனி உரிமையும், கடமையும் ஆகும் என்று வாக்குறுதி கொடு. ஆன்மீகப் பிரதிநிதியாகவும் மற்றும் பதவியின் வாரிசாகவும் இருப்பவரின் மூலமாக மட்டுமே இந்த விஷயங்கள் முழுமைக்கு வருகின்றன, சரித்திரமே அதற்கு சாட்சியாக இருக்கிறது.’’

M1 - இன் கேள்வி :- ஒருவரின் மனதில் தோன்றும் எண்ணம் உடனடியாக மாஸ்டரைச் சென்றடையும்படி செய்வதற்கான வழிமுறை என்ன?

பதில் :- மாஸ்டருடன் அதிகபட்சமான நெருக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதன் மூலமாக இதைச் செய்ய முடியும். இதற்கான வழி ஏற்றமும் இறக்கமும் (மனதின் உணர்ச்சிகளின் மிகையும், குறைவும்) மொத்தமும் இல்லாமல் போகும்படியாக ஒருவர் தன்னை அமைதிப்படுத்திக்கொண்டே போவதில் உள்ளடங்கி யிருக்கிறது. இது பயிற்சி சம்மந்தப்பட்ட விஷயம். பயிற்சியின் மூலமாக மட்டுமே அதைப் புரிந்து கொள்ள முடியும். இது ‘இறந்துவிட்ட நிலையின்‘ (Living Dead) தன்மை என்று அறியப்படுகிறது. இறந்துவிட்ட மனிதன் போல ஒருவரது உள் நிலை மாறியிருந்தால் அது தான் (அது மட்டுமே) உண்மையான அர்த்தத்தில் ‘ஜீவன் முக்தி’ (வாழ்வில் விடுதலை பெற்ற நிலை) யாகும். இந்த உள் நிலை யாரிடத்திலும் வளர்ச்சியடையவில்லை. யாரிடமாவது இதைக் காண முடியுமா? என்ற ஏக்கத்துடனே நான் உலகிலிருந்து சென்றுவிட்டேன். அந்த நிலைக்கு (ஜீவன் முக்தி நிலைக்கு) வந்து சேருவதற்கு முன்பாகவே ஆன்மீகத்தின் பேரின்பம் பெருமளவுக்கு அனுபவிக்கப்படுகிறது என்றாலும், உண்மையில் அது அதற்குப் பிறகு தான் இருக்கிறது. பிறந்ததில் இருந்தே நான் அந்த நிலையில் இருந்தேன். பிரியமான ராம்சந்த்ராவும் அதே விதத்தில் தான் இருந்தார். அந்த நிலையை எப்படி எய்துவது என்ற கேள்வி இப்போது தோன்றுகிறது. அதற்கான சுருக்கமான பயிற்சி இது தான். பொதுவாக அங்கே காணப்படுகின்ற வெளிப்புறமாகத் தெரிவிக்கப்படும் சுயத்திலிருந்து தன்னை சுத்திகரித்துக் கொள்வதை ஒருவர் தொடர்ந்து செய்ய வேண்டும். இது அந்த முடிவை எட்டுவதற்கு உதவியாக இருக்கும். அன்புள்ள M1 , இது மிகவும் உயரியதான ஒரு விஷயம். இதை முழுமையான ஐக்கியநிலை என்றும் கூடச் சொல்லலாம். அதன்பிறகு செய்யவோ, பயிற்சி செய்யவோ ஏதுமில்லை. அவருடையவராக நீடித்து இருப்பது ஒரு கடமை என்பதில் சந்தேகமில்லை. என் வாழ்க்கை முழுவதும் எனது வழி

அதுவாகவே இருந்தது. நீங்கள் எல்லோரும் கூட ஒருபோதும் அதை கைவிடக்கூடாது. உங்கள் நிலைமை, தகுதி எவ்வளவு தான் உயர்ந்ததாக மாறியிருந்தாலும், எப்போதும் உங்களை அவருடையவராகவே - அவருக்கு உரிமையானவராகவே கருதியிருங்கள். பிரியமான ராம்சந்த்ராவின் பயிற்சி இந்த உள் நிலையிலிருந்து தான் ஆரம்பித்தது. இந்த அளவுக்கு பிறவியிலிருந்தே (ஒரு முந்தைய பிறவியின் சித்தியாக) அவர் தன்னோடு கொண்டு வந்திருந்தார். இந்த மதிப்பீட்டை கருத்தில் கொண்டு அவருக்குப் பயிற்சி அளிக்க வசதியாக, அதைப்பார்க்கும் திறமை யாருக்கும் இருக்கவில்லை. என்னுடைய சிந்தனைக்கே கூட இது காலப்போக்கில் தான் தெரியவந்தது.

## 7-3-1945

M1 - க்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "பேசும் விதம் என்னுடையதைப் போல இருக்க வேண்டும். அதாவது, தொனியில் ஏற்றமும் இறக்கமும் இல்லாமல் இருக்க வேண்டும். இன்னும் சரியாகச் சொன்னால் பிரபஞ்ச சிருஷ்டியின் துவக்கத்திலிருந்து தெய்வீக ஆற்றல் சமமான முறையில் பெருகிக்கொண்டிருப்பது போல அந்த வடிவில் இருக்க வேண்டும். நான் அதைத் தான் அப்படியே செய்தேன். அந்த விஷயத்தை விளக்கிச் சொல்வது என்பதற்கும் அப்பால் அதனுடைய நன்மைகள் எண்ணற்றவை. இது ஒரு தத்துவமாகும். அதாவது பேச்சின் ஓட்டம் (பேச்சின் பாணி) சத்திய நிலையுடன் இசைந்து தொடரும் போது, சத்தியத்திற்கும், பேச்சுக்கும் இடையே ஒரு நெருக்கம் வளர்கிறது. அந்த நெருக்கத்தின் வழியாக தெய்வீகப் பாதை தானாகவே வளரத் துவங்குகிறது. இது அதன் (பேச்சின்) பயனுறுதியுடைய தன்மையைப் பலனாகத் தருகிறது. பேசப்படுகிற விஷயம் எதுவாயினும் அது கேட்பவர்களின் இதயத்தில் ஒரு பாதிப்பை உண்டாக்கிக் கொண்டே போகிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால் சத்தியத்தின் ஆற்றலுடன் ஒரு வித உறவு உண்டாக்கப்படுகிறது. மற்றும் ஒரு உறவுமுறை உருவாக்கப்பட்டுள்ள போது பயனுறுதியுடைய தன்மை இருந்தாக வேண்டியிருக்கிறது. யாராவது அதை அப்படியே பின் பற்றினால்

சொல்ல விரும்பியவை மற்றும் சரியானவையாகிய வார்த்தைகள் மட்டுமே பேச்சில் வெளிப்படும். இந்த விஷயம் என் வாழ்க்கை வரலாற்றிலும் குறிப்பிடப்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் முதலில் பேசும் போது குரலில் ஏற்ற இறக்கத்தைக் குறைக்க முயற்சிப்பது (இதைப் பேச்சில் கூர்மை என்றும் சொல்வார்கள்). அதை அடைவதற்கான (அதாவது சத்தியத்துடன் உறவு கொண்டிருக்கும் நிலையைப் பேச்சில் கொண்டு வருவதற்கான) செயல் நுட்பத்தில் அடங்கியுள்ளது. பேசுவதில் குரலின் ஏற்ற இறக்கத்தை படிப்படியாகக் குறைப்பது எவ்வளவு அடையப் பட்டிருக்கிறதோ, அந்த அளவுக்கு சத்தியத்தின் ஆற்றலுடன் பேச்சின் பாணி நெருக்கம் அடைவதும் இருக்கும். ‘பேச்சின் கூர்மை’ என்று சொல்வதில் நான் கோபத்தை மட்டுமே குறிப்பிட்டுச் சொல்லவில்லை. கோபம் என்பது மிகமிக கடினத்தன்மை உடைய ஒன்றாகும். பேச்சு பற்றிய இந்த விஷயத்தில் அதற்கு சிறிதும் இடமளிக்கவே கூடாது. நான் சொல்ல வந்தது என்னவென்றால் பேச்சின் பாணியில் எந்த விதமான சுமையும் ஏறியிருக்கக்கூடாது என்பது தான். இதற்கு அசையாமல் நிற்கும் காற்றின் சுழற்சியை உதாரணம் கூறலாம். இது மிகவும் சிரமமானது தான். ஆனால் மாஸ்டரின் அருள் அதனுடன் சேர்ந்து இருந்தால், நீடித்த முயற்சி மற்றும் துணிவின் மூலமாக எதையும் அடைவது சாத்தியம் தான். பாரசீக மொழியில் இரண்டு வரிச் செய்யுள் ஒன்று. ‘‘சுலபமாக மாற இயலாத கஷ்டம் எதுவுமில்லை. அது மனிதனை ஒரு போதும் நம்பிக்கையிழக்காமல் இருப்பதை அவசியமாக்குகிறது’’ என்று சொல்கிறது.

சுவாமி விவேகானந்தா கூறியது :- “M10 - க்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கையை நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். நமது பிரபுவுக்கு விசுவாசமாக இருக்கின்ற அனைவருடைய மூளைகளிலும் அவர் விஷத்தை ஊட்டிக்கொண்டிருக்கிறார். அவர்களை சரியாக்குவதற்கு நான் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். எங்களால் முடிந்த அளவுக்கு அதிகபட்ச முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.’’

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “வருடாந்திர விழாவுக்கு S1 – ம் கூட வர இருக்கிறார். அந்தத் துரதிருஷ்டசாலி N1 – உம் கூட வருவார். அவதூறுகளைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டு, மௌனமாக வேலை செய்து கொண்டு இருங்கள். உங்கள் சக்திகளைப் பயன்படுத்துங்கள். ஆனால் சரியாக அல்லது அதற்கான உத்தரவு எந்தக் காரியத்துக்காக கூறப்படுகிறதோ அதற்குப் பயன்படுத்துங்கள். மிகவும் நன்மையளிக்கப் போகின்ற ஒரு விஷயத்தை உங்களுக்குச் (M1 மற்றும் R2வுக்கு) சொல்கிறேன். பொது அறிவிப்பு செய்யப்படும் அந்த நேரம் வரை மற்றும் தேவைப்பட்டால் அதற்குப் பிறகும் கூட பிரியமான ராம்சந்த்ராவின் சக்தியுடன் (அவருக்கு எது அளிக்கப்பட்டுள்ளதோ அந்த சக்தியுடன்) இணைந்திருக்க வேண்டும். ஆனால் கவனியுங்கள், வருடாந்திர விழாவுக்குப் பிறகு அதை நான் அனுமதிக்க மாட்டேன். அதன் பிறகு என் சொந்த சக்தி உங்கள் அனைவரின் மூலமாகவும் பாயத்துவங்கும். ஆயினும் நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் நாவைக் கட்டுப்படுத்த வேண்டும். வெளிப்புற மரியாதை மற்றும் நாகரிகப் பண்புகளைப் பின்பற்றுவது தடை செய்யப்படவில்லை. நமது நடத்தை நம்மிடம் இருக்கிறது. மற்றவர் தன் நடத்தைக்கு அவரே பொறுப்பாக இருக்கிறார். ‘மரியாதைப் பண்புகளை வெளிக்காட்டுவது’ என்று நான் சொல்வதற்கு யாருக்கும் – அது துரதிருஷ்டவசமான அந்த N1 - ஆகவே இருந்தாலும் – அவருக்கு எதிராக நான் – (நீங்களும்) இருக்கிறேன் என்று ஒரு குறிப்பு கொடுப்பது என்பது பொருளல்ல. ஆனால் அவரை உங்கள் கடமையைச் செய்யும் விதமாக நீங்களே சந்திக்க முயற்சி செய்வது இன்னும் சிறந்த பண்பு என்கிறேன். அது சரியானதும் ஆகும். (சற்று இடைவெளி).

இரவு 9.40 மணிக்கு :- “பிரியமான ராம்சந்த்ராவுக்கு அக்னியாகிய மூலசக்தியின் மீது கட்டுப்பாடு கொடுத்திருக்கிறேன். அவருடைய குணம் மிக அதிக அளவு குளிர்ச்சியாக இருக்கிறது. அதனால் இந்தப் பரிசை அவருக்கு அளிக்கவேண்டிய தேவை உருவாக்கப்பட்டிருக்கிறது. நான் அதைக் கவனித்து அறிந்தபடி,

இந்த மூலசக்தியின் மீது ஒருவருக்கு கட்டுப்படுத்தும் அதிகாரம் அளிப்பது தடைசெய்யப் பட்டிருக்கிறது. நீயும் (ராம்சந்த்ரா) கூட அதன் கட்டுப்பாட்டு அதிகாரத்தை யாருக்கும் கொடுக்கக்கூடாது. அதைத் தாங்கும் திறன் பெரும்பாலான மக்களுக்குக் கிடையாது. இன்னும் சரியாகச் சொன்னால் பெரும்பாலும் மக்கள் (தாங்கும் திறனை) அதை அடைந்திருப்பதில்லை.

சுவாமி விவேகானந்தா கூறியது :- “பாராட்டுக்கள். ஒதுக்கிவைக்கப்பட்டுக் கிடந்த, இன்னும் அதிக சக்திகள் உங்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன. இவை தென்னிந்தியாவில் நீங்கள் சென்று நிறைவேற்றிய கடமைகளுக்காக பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் விசேஷப் பரிசுகளாகும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உங்களுக்காக ஒருபோதும் காலியாக்கப்பட இயலாத அளவு சக்திகளை சேர்த்து வைத்திருக்கிறார். உலக இன்பத்தைத் தேடுகிறவர்கள் உங்களையும், உங்கள் உதவியையும் தேவையானதாக உணர்வதில்லை. உங்களுடைய பதவியை நிச்சயம் இந்த உலகம் அடையாளம் தெரிந்து கொள்ளும்; ஆனால் அது நீங்கள் உடலை நீத்துச் சென்ற பிறகு தான். மாலை 5 மணி முதல் J - யிடம் நான் வேலை செய்துகொண்டிருக்கிறேன். இப்போது மணி 10 ஆகிறது.

## 8-3-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் வெளிப்படுத்திக் கூறியது :- “பிரியமான ராம்சந்த்ராவுடன் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் முழுமையாக ஐக்கியமடைந்துவிடும் விருப்பத்துடன் இருந்தார். ஆனால் (ராம்சந்த்ராவின்) பௌதீக சரீரம் விட்டுச்செல்லப்படும் (அவர் உடலை நீத்துச் சென்றுவிடுவார்) என்பதை அறிந்துகொண்டதன் காரணமாக அப்படிச் செய்ய வேண்டாம் என்று பகவானிடம் நான் பிரார்த்தனை செய்தேன். சுவாமி விவேகானந்தாவும் அதற்கு ஒப்புக்கொண்டு எனது இந்த எண்ணத்தை ஆதரித்தார். அப்போதும் கூட சக்திகளின் ஒரு பெரிய சேமிப்பை அவருக்காக என்னிடம் கொடுத்து

வைத்திருக்கிறார். தென்னிந்தியாவில் செய்த பணிக்கான பரிசு இது.''

## 9-3-1945

ஸ்ரீ சைதன்யா மகாபிரபு கூறியது :- "நானும் உங்களுடைய சத்சங்கத்தை ஆய்வு செய்தேன். எல்லாமே ஒரு மோசமான நிலையில் இருப்பதைக் கண்டறிந்தேன். உங்கள் சத்சங்கத்தில் உங்களுடைய ஆன்மீக வழிகாட்டி (குருவின்) யின் மறைவுக்குப் பிறகு, சத்தியமான விஷயத்தைக் கண்டறிவதற்கான (புரிந்துகொள்வதற்கு) வேண்டிய திறன் இழக்கப்பட்டுவிட்டது போல ஒரு நிலைமை பரவியிருக்கிறது. இது ஏன் நிகழ்ந்தது என்றால் அவருடைய ஆயுட்காலத்தில் இருந்தது போல (கிடைக்கக் கூடியதாக இருந்தது போல) அம்மாதிரி பிராணாஹுதி அதற்குப் பிறகு செலுத்தப்படவில்லை என்பதால் தான். இப்போது பிராணாஹுதியோடு சுயநலத்தன்மை சேர்ந்திருக்கிறது. இம்மாதிரி ஒரு நிலைமை எங்கே பரவியிருக்கிறதோ அங்கே சத்தியம் தொலைந்து போகும். காணாமற்போகும். உங்களுடைய சொந்த மார்கத்தை சரிப்படுத்திய பிறகு, என்னுடைய சங்கத்தின் மீதும் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்ற விருப்பம் எனக்கு உண்டு. இந்த ஆலோசனையை உங்கள் மாஸ்டரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார். என்னுடைய நிலையை (பதவியை) ஏற்கனவே உங்களுக்கு நான் கொடுத்திருக்கிறேன். என் வாழ்க்கை சம்பந்தமான ஒரு விஷயத்தை உங்களுக்கு நான் சொல்கிறேன். என் ஆயுட்காலத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடன் மிக ஆழ்ந்த ஒரு உறவு முறையை ஏற்படுத்திக் கொண்டிருந்தேன். அவருடைய உருவமே என் காட்சியில் எப்போதும் இருந்தது. இப்போது அதே தொடர்பு வேறு ஒரு உருவத்தில் ஏற்படுவதற்கு வந்திருக்கிறது. இந்தப் பயிற்சி முறை முன்னேற்றத்தை அடையும். உங்களுடைய வேலை, உதாரணம் கூறமுடியாத அளவு உயர்ந்த ஒரு மாபெரும் ஆன்மாவினால் நடத்தி வைக்கப்படுகிறது. இதுவரையில் குறைந்தபட்சத் தீமையுடன் தேவையான பலனைப் பெறுவதற்காக முயற்சி செய்யப்பட்டது. வருங்காலத்தில்

தேவைக்கு ஏற்றபடியே அனைத்தும் செய்யப்படும். பண்டாரா நடைபெறும் சமயத்தில், தேவை ஏற்பட்டால் என்னையும் நீங்கள் அழைக்க வேண்டும். அது பற்றிய விழிப்புணர்வு அங்கு இல்லையென்றாலும் என் சக்தி உங்களோடு வேலை செய்து கொண்டிருக்கிறது. பழங்காலத்து மிகப்பெரிய மூத்த முனிவர்களில் கிட்டத்தட்ட அனைவரும் உங்களை பாராட்டுதலுடன் பார்க்கின்றார்கள். அந்த எல்லோருமே பண்டாராவிற்காக காத்திருக்கிறார்கள்.''

சுவாமி விவேகானந்தா கூறியது :- "சைதன்ய மகாபிரபு உங்களிடத்தில் லயமடைந்திருக்கிறார். (ஒன்றியிருக்கிறார்) அவர் உங்களுக்குள் இருப்பதை உணருங்கள். தேவைப்பட்டால் அவரிடம் நீங்கள் எதையும் கேட்கலாம். அவருடைய வேலையை நீங்கள் எடுத்துக்கொள்ளும் போது, அவருடைய உத்தரவுகள் உங்கள் வழியாகச் செல்லும்.

ஸ்ரீ சைதன்ய மகாபிரபு :- "சுவாமி விவேகானந்தா உங்களிடம் சொன்னது முற்றிலும் சரியானது தான். நீங்கள் எப்பொழுதெல்லாம் அதை வேண்டி அழைக்கிறீர்களோ, அப்போது என் சக்தி வேலை செய்யத் துவங்கும். உங்கள் தென்னிந்திய பயணம் மிகச் சிறந்ததாக இருந்தது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "அன்புள்ள M1, இங்கே பார், வேலை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. ஆயினும் என் வெற்றிக்காக எல்லோரும் காத்திருக்கிறீர்கள் என்பதில் சந்தேகமில்லை. பிரியமான ராம்சந்த்ராவின் உடல் நலம் பற்றித்தான் நான் கவலைப்படுகிறேன். என்னால் முடிந்த அளவுக்கு அவருக்கு வேலையை ஒதுக்குவதை நான் தவிர்க்கிறேன். இது மட்டுமல்ல. மூத்த முனிவர்கள் பலர் என்னிடம் வருகிறார்கள். அவர்கள் எல்லோருடைய நோக்கமும் அவருக்கு வேலை கொடுப்பது தான். (சற்று இடைவெளி) S1 - இந்தப் பக்கமாக திசை மாறியிருந்தால் அவரையும் ஏதாவது உருவாக்கியிருப்பேன். என் ஆயுட்காலத்தில் என் மீது அவர் கொண்டிருந்த அன்புக்காக நன்றாக ஈடு செய்திருப்பேன். இது

சரியானது என்று M1 – கருதினால், S1 - இடம் இந்தக் குறிப்புகளின் இந்தப் பகுதியை மட்டும் அவரிடம் காண்பித்து, இங்கு வந்து வெறும் ஒரு சோதனை முயற்சி என்ற அளவில் ஒரு அனுபவத்தைப் பெறும்படி சொல்லிப் பார்க்கலாம். அந்த அனுபவ உள் நிலையை அவர் விரும்பாவிட்டால், அதை நான் மீண்டும் எடுத்துக்கொள்வேன். (சற்று இடைவெளி) நான் மீண்டும் சொல்கிறேன். இம்மாதிரி ஒரு சந்தர்ப்பம், வாய்ப்பு மீண்டும் மீண்டும் வராது, யாராவது எவ்வளவு தான் சிறிய உதவியை அளித்திருந்தாலும் அதற்குப் பதிலாக நூறு மடங்கு பலனை அவருக்கு நான் கொடுக்கும் நேரம் இது. வருங்காலத்திலும் இப்படியே நான் செய்வேன். என் பார்வை வேறு பக்கம் திரும்பி விட்டால், அந்தச் சமயத்திலிருந்து எந்த நன்மையும் இருக்காது. ஆனால் அதற்கு இன்னும் காலம் இருக்கிறது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது :- (மாலை 5.53 மணி) பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து இப்போது தான் வருகிறேன். ஹரித்வாரில் நடைபெறும் கும்ப பர்வா என்ற விழாவிற்கு உன்னை (ராம்சந்த்ராவை) அனுப்பவேண்டும் என்பது அவருடைய கருத்து. (கும்ப பர்வா அல்லது கும்பமேளா என்பது பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை புனித நதியாகிய கங்கையில் குளிப்பதற்காகத் திரண்டு வரும் யாத்ரிகர்களின் விழாவாகும்.) எனவே இதை நாம் தவிர்க்க முடியாது. வருடாந்திர விழாவுக்குச் சென்று விட்டுத் திரும்பும்போது இந்த நிகழ்ச்சிக்காக உன் மனதில் நிர்ணயித்துக் கொள்.

## 10-3-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "ராம்சந்த்ராவை ஹரித்வாராவுக்கு அனுப்புவதைத் தவிர்ப்பதற்கு நான் நிறைய முயற்சி செய்தேன். முடிவில் இந்த முடிவைத் தான் எடுக்க வேண்டி வந்தது. நானும் அதற்கு ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. அதாவது தவறாமல் அவரை அங்கே அனுப்பித் தான் வேண்டும். வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின்

கட்டளை இது தான். (சிறிது இடைவெளி) ராம்சந்த்ரா ரிஷிகேஷ் - இல் தங்குவதற்கு எண்ணம் கொண்டிருந்தார். ஆனால் அது சரியல்ல. அவர் ஹரித்வாராவில் தான் தங்க வேண்டும். அங்கிருந்து கொண்டு எல்லாவற்றையும் கட்டுப்படுத்த வேண்டும். அங்கு முனிவர்கள் அரிதாகவே இருப்பார்கள் என்றாலும், சுற்றித்திரியும் பரதேசிகளின் கூட்டம் பெரிதாக இருக்கும் என்பதால், அவர்களில் சிலர் தங்களின் அதிசயம் நிகழ்த்தும் சக்திகளைப் பயன்படுத்தலாம். அவர்கள் பிரச்சனைகள் செய்வதாகத் தெரிந்தால், அவர்களின் சக்திகளைப் பறித்துவிடு. இதற்கு முந்தைய கும்பமேளாவின் போது, சிறிது காலத்திற்கு முன்பு ஒருவர் அங்கே சென்றடைந்தார். அங்கு மக்களுக்கு ஏராளமான பிரச்னைகளை உண்டாக்கினார். அந்த மனிதர் மீண்டும் அங்கே வந்து இப்படிச் செய்தால் அல்லது செய்வதற்குத் தயார் செய்தால், தவறாமல் அவருடைய சக்திகளைப் பறித்துவிடு.''

''மதுராவில் பொறுப்பில் இருக்கும் முனிவருக்கு (அப்தல் / Abdal) மூன்று மாதங்களுக்கு ஒரு கடமை அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் மேலும் ஒரு மாதம் அந்தக் கடமையில் ஈடுபட்டிருந்தார். நேற்று இரவு அதைப் பற்றி அவர் குறிப்பிட்டுச் சொன்னபோது, அந்தக் கடமையிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார். தனது சேவைகளுக்காக ஏதாவது பலனை அவர் விரும்பினார். அது அந்தச் சமயத்தில் கவனிக்கப்படவில்லை. இன்று மாலையில் அவர் அதற்கான பலனைப் பெற்றார். போதுமான அளவுக்குப் பரிசு பெற்றார். அதாவது அவருடைய சரீர மண்டலத்தின் புள்ளிகளும் பிரம்மாண்ட மண்டலமும் நுட்பமான விழிப்பு அடைந்த ஒரு நிலைக்குக் கொண்டுவரப்பட்டன. அவருடைய சரீர மண்டலம் ஏற்கனவே ஒரு மலர்ந்து கொண்டிருக்கும் திறந்த நிலையில் இருந்தது. தனக்குள்ளே ஊடுருவிப் புகுந்து கொண்டிருந்த அந்த உள் நிலையைப் புரிந்து உணர்ந்து கொண்டு அவர் ஆனந்தக் கண்ணீர் விட்டு அழுதார். இதுவரையில் தன் ஆயுள் முழுவதிலும் இம்மாதிரி ஒரு உள் நிலைக்காக அவர் ஏங்கித் தவமிருந்ததாக

அவர் கூறினார். இந்த மகிழ்ச்சியினால் தனது கடமையின் பணிக்காலத்தை மேலும் ஒரு மாதத்துக்கு அவர் நீடித்துக்கொண்டார். என் பங்குக்கு அதை மேலும் பதினைந்து நாட்களுக்கு நான் அதிகரிப்பேன்.''

சுவாமி விவேகானந்தா கூறியது :- (இரவு 8.00 மணி) இப்போது உங்கள் குருவுடன் நான் ஃபடேகரில் இருக்கிறேன். II நலமாக இருக்கிறார். இந்த பண்டாராவுக்குப் பிறகு நான் குறிப்புகளைக் கொடுப்பேன். சில மனிதர்களை அழிப்பதற்காகக் குறித்திருக்கிறேன்.''

<u>12-3-1945</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- (காலை 11.15 மணி) யாரோ உன்னைத் தாக்குகிறார்கள். விழிப்புடன் இரு. (சற்று இடைவெளி) இப்போது ஒன்றும் ஆபத்தில்லை. இந்தக் காரியத்தில் ஈடுபட்ட மனிதருக்கு, அதற்கான சக்தி இல்லை. பிரம்மாண்ட மண்டலத்தின் சக்தியை செயல்படத் தூண்டி அதை உன் மூளையில் இறங்கும்படி திருப்பிவிடுவதற்கு அவர் விரும்பினார். இந்த வழிமுறையைப் பற்றி B1 எங்கேயோ புத்தகத்தில் படித்திருக்கிறார். இதைச் செய்வதற்கான திறமையை அவர் பெறவில்லை. (சிறிது இடைவெளி) அவர் மீண்டும் அதற்கு முயற்சி செய்தார். ஆனால் இது அவரது திறமைக்கு அப்பாற்பட்டது. அவர் உன்னை விழிப்புடன் (ஜாக்கிரதையாக) இருக்கச் செய்திருக்கிறார்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் காலை 11.30 மணிக்கு, பெர்ஷியாவில் இருக்கும் (கடவுளின் மீது பக்தி மிகுந்த மனிதர்) ஒருவரின் மீது கவனம் செலுத்தும்படி கட்டளையிட்டார். அவர் இந்த பௌதீக உலகிலிருந்து சென்று கொண்டிருக்கிறார். (மரணத்தருவாயில் இருக்கிறார்) இதனால் நான் அவருக்கு ஐந்து நிமிடங்கள் பிராணாஹூதி கொடுத்தேன். அவர் தன் கடைசி மூச்சை நிறுத்திய பொழுது நிறுத்திக்கொண்டேன்.

சுவாமி விவேகானந்தா:- "ஃபடேகரில் என் வேலையைச் செய்து கொண்டிருக்கிறேன். நான் உங்களிடம் வர விரும்புகிறேன். ஆனால் இந்த வேலையை விட்டு விட்டு வரமுடியாது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- "M1 - இதைப் பார். பிரியமுள்ள ராம்சந்த்ரா அற்புதமான ஒரு விஷயத்தைச் செய்திருக்கிறார். என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. வணக்கத்திற்குரிய சுவாமிஜி அவரைப் பார்க்க விரும்புவதாகவும், ஆனால் வேலையை விட்டு விட்டுத் தன்னால் வர முடியாது என்றும் கூறியபோது, அவர் (ராம்சந்த்ரா) (பாபுஜி) உடனே ஃபடேகருக்குச் சென்று, சுவாமிஜியின் பாதங்களில் தன் தலையை வைத்து வணங்கினார். என்ன ஒரு தூய்மையான நன்னடத்தை அவரது உள்ளுணர்வில் தோன்றியிருக்கிறது? இம்மாதிரி ஒரு உதாரண மனிதரைக் காண்பது அரிது.

சுவாமி விவேகானந்தா :- "இம்மாதிரி ஒரு செயலுக்கு உதாரணத்தை நான் எங்கும் கண்டதில்லை. இப்படிக் கூர்மையான புரிந்துகொள்ளும் தன்மை உடைய ஒரு மனிதரைக் கண்டு என் இதயம் மகிழ்ச்சியால் நிரம்பியிருக்கிறது. நீங்கள் (பாபுஜி) அப்படியொரு இயற்கையான உள்ளுணர்வைப் பெற்றிருக்கிறீர்கள். உங்களுக்காக நான் குறிப்புகளைத் தயாரித்திருக்கிறேன். வேலை வந்து கொண்டிருக்கிறது. நான் உங்களிடத்தில் மிகவும் திருப்தியடைந்திருக்கிறேன். எனக்கென்று ஒரு கிளிஞ்சலைக் கூட ஒதுக்கி வைத்துக்கொள்ள மாட்டேன். என்னிடம் இருப்பவை அனைத்தும் உங்களுக்கு மாற்றிக் கொடுக்கப்படும். பகவான் ஶ்ரீகிருஷ்ணர் இங்கே வந்து கொண்டிருக்கிறார்.''

மரியாதைக்குரிய பகவான் ஶ்ரீகிருஷ்ணர் :- "உங்கள் சத்சங்கத்தின் நிலையை நானே கவனித்து அறிந்தேன். அதற்கு இணையாக எதுவும் காணப்படாத அளவுக்கு அது கெடுக்கப்பட்டுள்ளது. மாபெரும் மூத்த முனிவருடைய (வணக்கத்திற்குரிய லாலாஜிசாகேப்) உழைப்பின் மீது மிகவும்

கெட்ட பெயர் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தவறை கடவுளால் கூட மன்னிக்க முடியாது. என்னுடைய சக்ராயுதத்தை இந்த வேலைக்காக ஒதுக்கி வைத்திருக்கிறேன். வேறு வழியில்லையென்றால் கடைசியில் பயன்படுத்தப்படவேண்டிய ஆயுதம் ஆகும். நான் இப்போது போகிறேன். ஸ்ரீ ராதா அவர்களும் என்னுடன் இருக்கிறார். இந்த மிஷனுக்காக (வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களின் ஆன்மீக சமுதாயத்தை சீர்திருத்தும் வேலை சம்பந்தமாக) உன் வேலையில் நீ வெற்றியடைய வேண்டும் என்று ஆசிகள் அளித்தபிறகு அவர் போகிறார்.''

சுவாமி விவேகானந்தா :- “பாருங்கள், ஸ்ரீ ராதா அவர்களைப் போல ஒரு உயர்ந்த ஆன்மாவே உங்கள் முன் வந்திருக்கிறார். அவருடைய வார்த்தைகள் பலனின்றிப் போக முடியாது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- M1 - இதைப் பார், நமது நலவாழ்வு சம்பந்தமாக மிகப் பெரிய விசேஷத் தன்மை உடைய ஒரு விஷயம் இப்போது நிகழ்ந்திருக்கிறது. ராம்சந்த்ராவுடன் ஒன்று கலந்து விடும் எண்ணத்துடன் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இப்போது வந்தார். அவருடைய (ராம்சந்த்ராவின்) நடத்தை மற்றும் எண்ணத்தில் இருக்கும் ஏதோ ஒரு அம்சம், தெய்வீக இணைப்பின் மிக உயர்ந்த தொடர்பு அசைக்கப்படும் விதத்தில் அவ்வளவு சிறப்பானதாக அமைந்திருக்கிறது. ராம்சந்த்ரா மற்றும் சுவாமி விவேகானந்தா இருவரும் சம்மந்தப்பட்ட, சற்று முன்பு நடந்திருப்பதாக நான் குறிப்பிட்ட சம்பவம் (ராம்சந்த்ரா ஃபடேகர் சென்று சுவாமிஜியின் பாதங்களில் தலைவைத்து வணங்கியது) கவனமாகப் பார்த்தால் ஒரு சாதாரண விஷயம் அல்ல. இந்த அறிவுத்திறனை ஆராய்ந்தறியும் அறவுத்திறன் (விவேகம்) அல்லது அதற்கும் மேலான ஒன்று என்று குறிப்பிடவேண்டும். இதன் உண்மை என்னவெனில் அவர் (ராம்சந்த்ரா) அனைத்தையும் தியாகம் செய்து விட்டதால் அவருக்கு உடைமையானது என்பது எதுவுமில்லை. இம்மாதிரி விஷயங்கள் தாமாகவே ஏன் நடக்கின்றன என்பதற்கு அதுவே காரணம். என் வருங்கால ஆன்மீக சந்ததியினர் அதே மாதிரி நடக்குமாறு கடவுள்

அருள்வாராக. ஆயினும் இப்போதைய சந்ததியினர் பற்றி நான் என்ன சொல்வது? நேரம் வரும்போது இப்போது உனக்கு நான் என்ன சொல்கிறேனோ அதையே அவர்களுக்கும் சொல்வேன். ராம்சந்த்ராவுக்குப் பிறகு வருகிறவர்களிடத்தில் இந்தச் சிறப்புத் தகுதி இருக்கும் என்று தோன்றவில்லை. இதனால் அவர் தனது உடலை நீத்துச் செல்வதற்கு முன்பே அவருடைய வேலைகள் அனைத்தையும் செய்து முடித்துவிட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதற்குரிய சரியான காலத்துக்கு மதிப்பளித்து வந்திறங்குகின்ற ஒரு தெய்வீக வரம் (பரிசு) அது. அது அனைவரும் பங்கேற்பதற்கானது அல்ல.

ரகசியமான குறிப்புகளாக சில வரிகள் கூறிய பிறகு வணக்கத்திற்குரிய மாஸ்டர் தொடர்ந்து கூறியது :- ‘‘இந்தச் சக்திக்கு நான் சிறிதளவு இயக்கத்தைக் கொடுத்தால், அனுபவிப்பதற்கு வியப்பு மிகுந்த ஒரு விநியோகம் நிகழ்ந்ததாக வேண்டும். நான் பண்டாராவைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். ராம்சந்த்ராவின் மீது அக்கறை கொண்டு கவனித்துக் கொள்ளாமல் என்னுடைய ஒரு நிமிடம் கூட வீணாகப்போவதில்லை. மற்றும் என்னுடைய அந்த மேற்கூறிய சக்தியை நான் மேலே வரவிடாமல், அடக்கியே வைத்திருக்கிறேன். M1 - நான் உனக்கு மீண்டும் சொல்கிறேன். இந்த சக்தி மீண்டும் வர இயலாது. ’’

## 13-3-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்தரவுகள் :- “அனைவருடைய ஆன்மீக உள் நிலையும் ஒரே சமயத்தில் மொத்தமாகப் பறித்துவிடவேண்டும் என்பது J1 - இன் கருத்து. இதில் M10 - உம் கூட சேர்க்கப்படவேண்டும். I1 - வை நான் ஒருபுறமாக ஒதுக்கிவிடுகிறேன். இன்று இரவு நீங்கள் இருவருமாக (M1 மற்றும் ராம்சந்த்ரா) இந்த வேலையைச் செய்யுங்கள்.’’

சுவாமி விவேகானந்தா :- “இந்த ஆலோசனையை நான் ஒப்புக்கொள்கிறேன்.”

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- “M10 - உன்னை அறிந்து ஏற்றுக்கொள்ளும்போது அவரிடமிருந்து பறிக்கப்பட்ட ஆன்மீக உள் நிலையை அவருக்குத் திருப்பிக் கொடுத்து விடு. யாருமே இதில் விட்டு வைக்கப்படவில்லை. நீ விரும்பினால் இந்த வேலையிலிருந்து ஏதாவது ஒரு வேலையை R2 - க்குப் பிரித்துக் கொடு. உன் தாயையும் (வணக்கத்திற்குரிய லாலாஜியின் மனைவியை) J1 - இன் மனைவியையும் மற்றும் உன்னிடத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களையும் ஒதுக்கி விட்டுவிடு.’’

அன்புள்ள சகோதரர் J1 - கூறியது :- “இது D2 - மற்றும் எனது எல்லா சீடர்களையும் உள்ளடக்கியதாகும். M10 - வை ஒரு விசேஷ காரியமாகக் கருதுங்கள். இதை இருவருக்கும் (M1 மற்றும் ராம்சந்த்ராவுக்கு) நான் சொல்கிறேன்.

## 14-3-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் வெளிப்படுத்திக் கூறியது :- “ராம்சந்த்ராவின் உயிரைப் பாதுகாப்பவர், கடவுள் ஒருவர் மட்டும் தான். என்னால் முடிந்த அதிகபட்ச அளவுக்கு அதைத் தக்க வைப்பதற்கு நான் முயற்சி செய்வேன்.’’

சுவாமி விவேகானந்தா கூறியது :- “இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பரவலாக இருக்கின்ற ஹிந்து மத ரிஷிகளுக்கு சக்தியளிப்பது உங்கள் கடமையாக இருக்கிறது. இதுவரையில் யாருமே உங்களுக்கு சமமாக ஆக முடியவில்லை. உங்களுடைய அன்பு மரத்தினுள் ரகசியமாக மறைந்திருக்கும் நெருப்பு போன்றது. அந்தப் பெண்மணி (வணக்கத்திற்குரிய மாஸ்டரின் மனைவி) அந்த அனுபவத்தைப் பெறவேண்டும். அவரை நீங்கள் இப்போதும் கடந்த காலத்திலும் நேசிப்பது போல வேறு யாரும் நேசிக்க முடியாது என்று நான் துணிவோடு சொல்ல முடியும். சிறிது காலத்திற்குப் பிறகு அவருடைய உறவினர்கள் அவளை விட்டுச் சென்றுவிடுவார்கள். இது எனது அசைக்க முடியாத

அனுபவம். (சற்று இடைவெளி) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உங்கள் முன் உட்கார்ந்திருந்த போது, உங்கள் பங்கை (நீங்கள் செய்ய வேண்டியதை) நன்றாகச் செய்தீர்கள். அந்தச் சமயத்தில் அது அவசியமானதாக இருந்தது. உங்களைக் காப்பாற்றுவதற்கு நாங்கள் அங்கே இருந்தோம். அவர் (பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்) ஒரு மிகப் பெரிய ஆளுமை உடையவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. உங்களுக்குக் கொடுக்கப்பட்டுக் கொண்டு இருந்ததில் ஒரு பகுதியை (நீங்கள் உடலை நீத்துச் சென்ற பிறகு அதற்குப் பொருத்தமான சமயத்தில் நீங்கள் அடைவதற்காக ஒதுக்கி வைத்திருப்பதற்கு) நாங்கள் பறித்துக்கொண்டோம். அப்போது நீங்கள் உங்களைத் திறந்து வைத்து கடவுளுடைய உலகங்களின் ஒவ்வொரு துகளிலும் உங்களை விரிவடையச் செய்திருந்தீர்கள். அதை மிக நன்றாகச் செய்தீர்கள். உங்களது உடல் சார்ந்த ஜீவிதத்தைப் பாதுகாப்பதற்கு அது மட்டுமே ஒரே வழியாக இருந்தது. மிகக் கூர்மையான விவேகம் மற்றும் புரிந்து கொள்ளும் தன்மையாகிய - இந்தக் கூர்மையான விவேக ஆயுதத்தை நீங்கள் பயன்படுத்தியதைப் பார்த்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். ரகசியமான நாட்குறிப்பில் இந்த வழிமுறையை, சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி என்று குறித்து வைக்கவேண்டும்.

M1 - க்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- “பௌதீக உடலைப் பாதுகாப்பதற்கு இதைவிடச் சிறப்பாக வேறு முறை இருந்திருக்க முடியாது. பிரியமான ராம்சந்த்ராவினுடைய உள்ளுணர்வில் அது தோன்றியது எவ்வளவு நல்லதாகப் போயிற்று? ஒரு பெரிய பிரச்னை என்னவெனில், இம்மாதிரி ஆச்சரியப்படும்படியான விஷயங்கள் அவர் மூலமாக நிகழ்வதற்குப் படிப்படியாக வந்து கொண்டிருப்பதை நானே கூட என்னைச் சரியான சம நிலையில் வைத்துக்கொள்ள இயலாதபடி செய்வது தான். இன்று கூட அப்படி ஒன்று நிகழ்ந்தது. நான் சற்று நிலை குலைந்து இருந்தபோது, உடனடியாக அவர் என்னிடம் நெருங்கி வந்தார். அவர் என்னிடம் நெருங்கியிருக்கும் போது நான் மன நிம்மதி பெறுவது ஏன்? என்று என்னால் சொல்ல

முடியவில்லை. எதற்காக நான் ஒரு முழுமையான திறந்த இதயத்துடன் வந்தேனோ அதன் காரணமாகவே இது நடந்தது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் கூட (அவர் விஷயத்தில்) எல்லைக்கும், கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு இருக்க முடியவில்லை.''

சுவாமி விவேகானந்தா தொடர்ந்து கூறியது :- "இந்த விஷயங்கள் எனக்குப் பெருமளவு இனிமையளிப்பதாக உள்ளன. அதனால் நானும் என்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. நான் முன்பே சொன்னவாறு, பண்டாராவுக்குப் பிறகு என்னிடம் என்ன இருக்கிறதோ அதை உங்களுக்கு மாற்றிக்கொடுப்பேன். உங்களுக்குள் நீங்கள் ஆழ்ந்து சென்றால் முழுமையான ஒத்திசைவுடன் (நல்லிணக்கத்தடன்) இருக்கும் ஒருவரை மற்றும் அதே மனிதரைக் காண்பீர்கள். உங்கள் (உலக) வாழ்க்கைக்குப் பிறகு, செய்ய இருக்கும் வேலைக்காக இந்த சக்திகள் உங்களுக்கு அளிக்கப்படுகின்றன. அவர்கள் இப்படிச் செய்வதை உடனே நாங்கள் தடுத்துக் கொண்டு தான் இருக்கிறோம் என்றாலும் மூத்த முனிவர்களும், பழங்கால அவதார புருஷர்களும் ஆகிய அனைவரும் சக்திகளை உங்களுக்கு மாற்றிக் கொடுக்கப்போகிறார்கள். இந்த அளவுக்கு சிறப்புத் தகுதி உடையவராக உங்களை உங்கள் குரு உருவாக்கியிராவிட்டால், நீங்கள் முன்பே உலகை விட்டுப் போயிருப்பீர்கள். இத்தனை அதிகமான சக்திகள் மனித உடலில் தங்கியிருக்க முடியாது. ஆனால் நீங்கள் வேறு ஏதோ ஒன்றாக இருக்கிறீர்கள். அது பற்றி உங்கள் ஆயுட்காலத்தில் வெளிப்படுத்திச் சொல்ல நாங்கள் விரும்பவில்லை. உங்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருக்கின்ற சக்திகளில் ஒரு சிறிதளவை நாங்கள் வளர்ச்சி பெற வைத்தால் உயர்ந்த மட்டத்தில் உள்ள முனிவர்களில் யாருமே, உங்களுடன் ஒப்பிடும்படியாக இருக்கமுடியாது. நீங்கள் அடைந்திருக்கின்ற சக்திகளுக்கு மதிப்பளித்திருப்பதால் எங்கள் முன்னே இருக்கும் பிரச்னை, மிகச் சாதாரண விஷயமாகிறது. அந்த சக்திகள் அழிவை உண்டாக்குகின்றவை. அவற்றை நாங்கள் ஏன் வளர்ச்சியடையச் செய்யவில்லை என்ற கேள்வி தோன்றுகிறது. இதற்கு பதில் என்னவென்றால், நீங்கள் திருமணமான ஒரு

குடும்பத் தலைவர். அந்த அழிவுகரமான சக்திகள் யாவும் உங்கள் உலக வாழ்க்கை முடிந்த பிறகும் இயங்கும் தன்மையில் இருக்கும், (வேலை செய்யக்கூடிய நிலையில் இருக்கும்) என்பது தான். உங்களுடைய வேலை சம்பந்தமாக எங்களுடைய விசேஷ சக்திகளை இன்னும் நாங்கள் பயன்படுத்தாமலிருக்கிறோம். நாங்கள் அதற்கான பாதையை சரிப்படுத்துவதற்குத் தான் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அதற்கான ஆயுதம் (அந்தப் பாதையில் உபயோகிக்க வேண்டிய சக்தி) கடைசியில் தான் வருகிறது. இது உங்கள் குருவின் கட்டளை, இல்லையென்றால் நான் அவர்களை ஒட்டுமொத்தமாக ஏதோ ஒரு இருண்ட குகைக்குள், அதாவது நரகத்தில் வீசி எறிந்திருப்பேன். ஆனால் அப்படியிருந்தும் சிலர் அதை நோக்கித் தான் போவார்கள். உங்கள் தாயாக நீங்கள் மதிப்பவரின் (லாலாஜியின் மனைவி) மூளையில் விஷத்தை ஊட்டியவர்களை அழித்துவிட நான் விரும்பினேன். ஆனால் உங்கள் குரு அம்மாதிரி ஒரு நடவடிக்கையை வேண்டாமென்று மறுத்துவிட்டார். ஃபடேகருக்குப் போகும்போது உங்கள் எல்லோருக்கும் நான் ஒரு விஷயம் சொல்வேன். அதாவது உடல் பலம் மிகுந்த ஒருவரை அங்கு செல்லும் போது உங்களோடு வைத்துக்கொள்ளுங்கள். அங்கும் இருக்கும் நிலைமை வினாடிக்கு வினாடி உங்களுக்குத் தெரியவரும். நமது பிரபுவின் இடத்துக்கு நீங்களே வாரிசு மற்றும் பிரதிநிதி என்று அறிவிக்கப்படுவதற்கு முன்பு, எல்லோரும் தாங்கள் ஆனமீகப் பலனை இழக்கச் செய்யப்படுவார்கள். M1 - மற்றும் R2 - ஆகிய உங்கள் சகோதரர்கள் இங்கே உட்கார்ந்துகொண்டு, தன்னை அசாதாரண விதத்தில் இயற்கையினால் ஆதரிக்கப்படுகிறவராக நினைத்திருக்கும் ஒவ்வொருவரையும் தடுத்து நிறுத்த வேண்டும், அது அவர்களின் கடமை.’’

<u>15-3-1945</u>

சுவாமி விவேகானந்தா கூறியது :- “(காலை 11.40 மணி) உங்களுடைய வெற்றிக்காக பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் காத்திருக்கிறார். தேவை ஏற்பட்டால் அவரைக் கூப்பிடுங்கள்.

ஆனால் மிக விசேஷமான காரியமாக இருந்தால் மட்டுமே அவரை அழைக்கலாம்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஆன்மீகக் கொள்கை மற்றும் பயிற்சியில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற குறிப்பிட்ட சில செயல்நுட்பக் குறியீடுகளை (விசேஷச் சொற்களை) விவரித்து, விளக்கமாகக் கூறியது :-

1) அமைதி (சாந்தி) :- மற்றவர்களிடமிருந்து ஒருவர் அடையும் அவமதிப்புகள், கண்டனங்கள், ஏமாற்றங்கள் (முட்டாளாக்கப்படுதல்), குத்துக்கள் போன்றவை ஒருவரின் மனதில் ஒரு வழுவழுப்பான தரையில் கவிழ்க்கப்பட்ட பாத்திரத்திலிருந்து தண்ணீர் பெருகி ஓடுவது போல, எந்த விளைவையும் ஏற்படுத்தாமல் இருக்கும் தன்மையே முழுமையான அமைதிக்குத் தேவையாகிறது. கட்டாயத்தின் பேரில் சகிப்புத்தன்மை ஏற்படுமானால் அது மேற்கண்ட விளக்கத்தின் கீழ் வராது. ஆரம்ப நிலைகளில் பழக்கத்தை உருவாக்கிக் கொள்வதற்கு சிறிது கட்டாயம் தேவைப்படுகிறது.

2) வசி (ஒன்றாக இணைதல்) Wasi :- எல்லா ஏக்கங்களும், சச்சரவுகளும் (ஊடல் என்று கூறப்படுகின்ற அன்பின் கோபம்) முடிந்த பிறகு இது ஏற்படுகிறது. அங்கே ஒன்றுபட்ட தன்மைக்கான தீவர ஆசையும், பிரிவின் வேதனையும் இருக்கக்கூடாது. எனினும் ஆரம்ப நிலையில் இதை யாராவது பின் பற்றினால் அது முற்றிலும் தவறாகவும், தவறாக வழிகாட்டுவதாகவும் இருக்கும். ஒன்றிணைவதற்காக மட்டுமே தீவிர ஆவல் இருக்க வேண்டும். அது சாதகராகிய பக்தரின் வேலை. பக்தனின் ஏக்கத்தையும் செல்லக் கோபத்தையும் நீக்குவது கடவுளின் அருள். ஆன்மீகம் என்பது பளுவற்ற தன்மைக்குப் பெயராகும். அல்லது பளுவற்ற தன்மையின் பெயர் தான் ஆன்மீகம். இது அதைப் பற்றி ஒரு வார்த்தையில் சுருக்கமாகச் சொல்வதாகும். இல்லையென்றால் ஏற்கனவே நான் எழுதிக்கொள்ளும்படி கூறியுள்ள குறிப்புக்களில் எங்காவது இதற்கு மிகச்சரியான விளக்கத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

3) தீவிர ஆவல் / ஏக்கம் (Jazb) :- இது இரண்டு விதமானது. தாழ்ந்தது மற்றும் உயர்ந்தது. ஏக்கத்தின் தாழ்ந்த நிலையில் மனத்தில் அந்த மனப்பான்மையானது தொடர்ந்து ஒரு தீவிரமடைந்த தன்மையில் இருக்கிறது. ஆரம்ப நிலையில் இது அதிக நன்மையளிப்பதாக இருக்கிறது. ஒருவரின் உயர்ந்த விதமான ஏக்கம் என்பதை சுவாமி விவேகானந்தா ‘‘உங்கள் அன்பு மரத்துண்டில் மறைந்திருக்கின்ற ரகசியமான நெருப்பு போன்றது’’ என்று நேற்று உதாரணமாகக் குறிப்பிட்டாரோ, அந்த மாதிரியானதாகும். அதாவது இதயத்தில் அது பற்றிய தீவிரத் தன்மை எதுவும் இல்லாமல் அன்பில் உள் முகமாகக் கனன்று கொண்டிருக்கும் ஒரு நிலை எனலாம். ஏக்கத்தின் உண்மையான அர்த்தம் பற்று என்பதாகும். ஒன்றிணைந்து இருப்பதற்கான உறவு முறையின் (Nisbat) தீவிரத்தின் விகிதத்துக்கு ஏற்றவாறு பற்றின் அளவு அதிகரிப்பதாகச் சொல்லலாம்.

4) கடவுளை மெய்யுணர்தலுக்கான பாதையில் நன்னடத்தை (Sulook) (ஸூலூக்) :- அதன் முதலாவது (மிகச் சிறப்புடைய) வடிவத்தில் எல்லாமே. அதாவது ஒருவரின் சொந்த உள் நிலை சம்பந்தப்பட்டவையாவும் ஒரு உறக்க நிலையில் இருப்பது போலத் தோன்றுகிறது. அதன் பிறகு அதற்கு இரண்டாவது தரத்திலுள்ள வடிவங்கள் உள்ளன. கடவுளை மெய்யுணரும் பாதையில் முதல் தரமான நடத்தையைக் காண்பது மிக அரிதானது.

5) பற்றுறுதி / திட நம்பிக்கையுடன் இருத்தல் Aitqad / (அய்த்க்வத்) :- கடவுளுடன் ஒருவருடைய தொடர்பு ஒருபோதும் திசைதிருப்ப முடியாதபடி – அப்படி நம்பிக்கையை திசைமாற்றிக்கொள்வது தன் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக (இயலாததாக) உள்ளது என்பதைக் கண்டறியும் அளவுக்கு - இருக்கும் போது பற்றுறுதியில் உறுதித்தன்மை உண்டாகிறது. அம்மாதிரியான ஒரு பற்றுறுதியை / திடநம்பிக்கையை அடைவதற்கு சாதகர் முயற்சிக்கவேண்டும்.

6) சார்ந்திருக்கும் தன்மை / நம்பியிருத்தல் Bharosa / (பரோஸா) :- சுருக்கமாகக் கூறினால் இது எந்த நேரத்திலும் கடவுளைத் தவிர வேறு யாரையும் நினையாதிருப்பது மற்றும்

காணாது (நாடாது) இருத்தல் எனலாம். மற்றும் நம்பிச் சார்ந்திருப்பதற்கு அவரைத் தவிர வேறு உதவியை எதிர்பாராமல், தேடாமல் இருப்பது.

7)நன்றியுடன் இருத்தல் / நன்றியுணர்வு Shukr / (ஷுக்குர்):- எல்லாச் சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியோடு இருப்பதே நன்றியுடன் இருத்தல் என்று கூறப்படுகிறது.

8)நன்றியுணர்வு / கடமைப்பட்டிருத்தல் Ehsaan / (எஸான்) :- கடவுளைப் பற்றிய நினைவில் இருந்து, ஒருவர் ஒரு போதும் விலகாதிருத்தல் மற்றும் தனது ஒவ்வொரு விநாடியும் அவருடையதாகவே கருதியிருத்தல், என்ற உள்நிலை இது. இங்கே அவர் என்பது கடவுள். உலகியல் கடமைப்பாடுகள் இங்கு குறிப்பிடப்படவில்லை.

9)மனநிறைவுடன் இருத்தல் / பொறுமை Sabr / (ஸபர்) :- இதைவிடச் சிறந்தது வேண்டும் என்ற எண்ணம் தன்மனதில் ஏற்படாமல் எல்லாச் சூழ்நிலைகளிலும் மனத்திருப்தியுடன் இருத்தல்.

10) ஏக்கம் Talab / (தலப்) :- கடவுளைத் தவிர வேறு எதற்காகவும் ஏக்கம் கொள்வது கூடாது.

11) ஏங்கியிருத்தல் (மிகவும் விரும்பியிருத்தல்) / தீவிர ஆவலுடன் இருத்தல் :- (தடப் / Tadap) அமைதியற்ற தன்மை என்பது இதன் பொருள். அன்பு மெய்மைப்படும் வரை (அன்பின் உண்மைநிலை வரை) செல்கிறது. இது அதன் வார்த்தைகளின் பொருளாகும். அதன் விளக்கத்தை இப்போது கேளுங்கள். இதயத்தில் அதைத் தவிர வேறு எந்த ஆற்றலும் இல்லாத போது உண்மையான ஏக்க நிலை அங்கு இருக்கிறது.

12) உலகம் (துனியா / Duniya) :- தனது கடன்களுக்கு ஈடு கட்டுவதற்கு ஒவ்வொருவரும் விரும்புகின்ற இடம்.

13) எல்லாம் கடந்த நிலை / மறு உலகம் (உக்பா / Uqba) :- இது யாருடனும் யாரும் எதுவும் செய்ய வேண்டியிராத ஒரு இடம்.

அதாவது மற்றவர்களுடன் பற்று, பாசம் எதுவும் இருக்காது. இந்த உலகம் சம்பந்தமான நமது கடவுளின் கருத்து, ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் நிலை என்பதாக இருக்கிறது. ‘மறு உலகம் (எல்லாம் கடந்த நிலை) என்பது இதற்கு எதிரானதாக உள்ளது. இந்த இரண்டு விஷயங்களும் இல்லாமற் போன உள் நிலை என்பதன்றி சொர்க்கம் என்பது வேறு எதுவுமில்லை. சொர்க்கம் என்றால் இந்த உள் நிலை என்பதே பொருளாகும்.’ என்று சுவாமி விவேகானந்தா விளக்கம் கூறியிருக்கிறார்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- ‘‘அன்புள்ள M1, இப்போது நான் கூறும் பாரசீக மொழி இரண்டு வரிச் செய்யுளை எழுதிக்கொள். ‘‘சொர்க்கம் என்பது எந்த ஒரு துன்பமும் பிரச்னையும் எஞ்சியிராத ஒரு இடம். யாரும் வேறு யாருடனும் எதுவும் செய்யவேண்டியிராத போது அது சொர்க்கம்.’’

14) மாயை :- அது கடவுளின் இருண்ட (ஒளியில்லாத) பக்கம், என்பதன்றி வேறில்லை.

15) புருஷன் :- இது கடவுளின் பிரகாசமான பக்கம்.

‘‘ஒரு விளக்கின் எரியும் திரியை (எரியும் தன்மையை) புருஷன் (கடவுள்) என்றும் அது வெளியிடும் ஒளியை மாயை என்றும் நினைக்க வேண்டும். திரி எரியும் இடத்தை அடைவதற்கு இந்த ஒளியின் வழியாக (ஒளியைக் கடந்து) நீங்கள் நீந்துகிறீர்கள். அந்தப் பிரகாசம் எங்கே முடிகிறதோ, அங்கே நமது தொடுவானத்தை (நமது கடைசி எல்லையை) உண்டாக்கிக் கொண்டு இருள் நிலவுகிறது. அது மாயையின் ஸ்தூல நிலை எனப்படுகிறது. அதாவது ஒளி புள்ளிகளில் சென்றடைகிறது. ஆனால் ஒளிவீசும் விதத்தில் அது இல்லை. அந்தப் பெரிய வட்டத்தின் இந்தப் பகுதியில் தான் பொதுவாக மக்கள் உறை போலச் சூழப்பட்டிருக்கிறார்கள். குரு அந்த எரியும் இடத்திலிருந்து இந்த வட்டத்துக்கு ஒளியைக் கொண்டு வந்து நாளாவட்டத்தில் இதையும் அதே மாதிரி செய்கிறார். அவர் இருள் தன்மையின் மூன்றாவது வட்டத்தில் பிறந்திருக்கும் போது குரு எங்கிருந்து அம்மாதிரி ஒளியைக் கொண்டு வருகிறார் என்ற

கேள்வி இப்போது தோன்றுகிறது. குரு என்ற வார்த்தையே குறிப்பிட்டுச் சொல்வது போல, அவர் எப்போதும் அந்த எரியும் இடத்துக்கு அருகே, இன்னும் அருகே இருக்கிறார். அங்கிருந்து அவர் நேரடியாக ஒளியை எடுத்துக்கொள்கிறார். அந்தத் திரையை (அதை மறைக்கும் உறையை) அதற்குப் பின்னால் முழுமையான இருட்டில் விட்டுவிடுகிறார் என்பதே இதற்குப் பதில்.

(சமஸ்கிருத மொழியில் குரு என்ற வார்த்தைக்கு இருளை நீக்குகிறவர் என்று பொருள். கு - இருள். ரு - நீக்குகிறவர்).

சுவாமி விவேகானந்தா :- ‘‘ராம்சந்த்ராவைப் பற்றி நான் மிகவும் அக மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். அவரைப் பாராட்டுவதற்குத் தகுந்த வார்த்தைகள் எனக்குக் கிடைக்கவில்லை. உண்மையான ஆன்மீகத்தில் நீங்கள் மேலும் மேலும் நீந்திச் செல்லுங்கள். ஆன்மீகம் என்ற சமுத்திரத்தின் குறுக்கே நீந்தி நீந்திக் கடந்து செல்லுங்கள். அதுவே உங்களுக்கான எனது பிரார்த்தனை மற்றும் நல்லாசியும். அது நிச்சயம் உண்மையாகி நிறைவேற வேண்டியதாகும்.

## 16-3-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - க்குச் சொன்னது :- ‘‘இப்போது தான் சற்று முன்பு, ராம்சந்த்ரா மேலும் ஒரு சிறப்பான காரியத்தைச் செய்தார். சுவாமி விவேகானந்தா ராம்சந்த்ராவை தன் அருகே, அவருடைய (ராம்சந்த்ராவுடைய) இப்போதைய மிகச் சரியான உருவத்தில் காண்பதற்கு விரும்பினார் – பிரியமான ராம்சந்த்ரா தன் பங்குக்கு உடனடியாக அதே மாதிரி தானாகவே நிகழச் செய்தார். இம்மாதிரி விஷயங்களை நான் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டுவதன் நோக்கம் என்னவென்றால் மக்கள் அம்மாதிரி முழுமையான நெருக்கத்தை தாங்களும் உதாரணமாகப் பின்பற்ற வேண்டும் என்பதற்காகவே ஆகும். அவர்கள் அது போல சரியான விதத்திலான அன்பு செலுத்தும் தன்மையை தங்களிடம் உருவாக்கிக் கொள்வதற்கு, இந்த உதாரண சம்பவங்கள் (அவை சிறிய சாதாரண விஷயம் போலத் தோன்றினாலும்,) இதயத்தை நெகிழ்விக்கும் மரியாதைப்

பார்வையின் மிகவும் குறிப்பிடத்தக்க (விசேஷமான) செயல்கள் என்பதால் அவ்வப்போது அவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டியவையாகும்.

சுவாமி விவேகானந்தா :- நீங்கள் சமுதாயத்தில் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கும், உங்களுக்குப் பிறகு வருங்காலத்தில் வரப்போகும் மக்களுக்கும் ஒரு உதாரணத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இது மிகச் சரியான புள்ளியை சரியாகத் தாக்குவது (செய்ய வேண்டிய குறிப்பிட்ட காரியத்தை மிகச்சரியான விதத்தில் செய்வது) மிகவும் சிரமமானது. இந்தத் திறமையை எப்படி அடைவது என்பதே கேள்வி. அதற்கு ஒரு வார்த்தையில் பதில் கூறுவது மிகவும் சிரமம். எப்படியிருந்தாலும், அதை சுருக்கமாகச் சொல்ல முயற்சிக்கிறேன். அது ‘மிக அதிசபட்ச அளவுக்கு குருவை நேசிப்பது.’

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- M1 - இங்கே பார், பிரியமான ராம்சந்த்ரா என்னோடு ஏற்கனவே முழுமையான நெருக்கத்தை அடையப் பெற்றிருக்கிறார். இப்போது மதிப்புக்குரிய சுவாமிஜியுடன் அவருடைய உறவுமுறையின் நிலையும் அதேமாதிரி ஆகியிருக்கிறது.

சுவாமி விவேகானந்தா :- ‘‘அதன் காரணம் எங்கள் இருவரையும் ஒரே சுழலில் நீங்கள் (ராம்சந்த்ரா) எடுத்துக்கொண்டது தான்.

<u>17–3–1945</u>

ஸ்ரீ சைதன்ய மகாபிரபு கூறியது :- ‘‘என்னிடமிருந்த சக்தியை ராம்சந்த்ராவுக்கு இப்போது அளித்திருக்கிறேன். உங்கள் குருவும் சுவாமி விவேகானந்தாவும் (வேறு காரியத்தில்) முனைப்பாக இருப்பதால், நீங்கள் தனியாக விடப்பட்டிருப்பதாக நீங்கள் நினைக்காமல் இருப்பதற்கு உங்களிடம் வருவது என் கடமை என்று நான் கருதினேன். நானும் இங்கே உடன் இருக்கிறேன். நீங்கள் நான் இருப்பதை உணரவில்லை. ஏனென்றால் உங்கள் கவனம் அவர்கள் இருவரின் மீது

திரும்பியிருந்தது. நேற்று இரவு நடந்ததை நீங்கள் நினைவில் வைத்திருப்பீர்கள். அந்த மனிதருடைய கட்டுப்பாடற்ற செயலைக் கண்டு உங்களை ஒரு நிமிடம் தூண்டி விட்டது என் வேலை தான். (நேற்று இரவு நான் (ராம்சந்த்ரா) நடத்திய ஒரு கூட்டு தியானத்திலிருந்து அவர் ஒரு நன்மையும் அடையவில்லை என்று B2 - சொன்னார். குருவை கடவுளாக வணங்குவது கடவுளை அவமதிப்பதின் எல்லையைத் தொட்டு விட்டது. கூட்டுதியானத்திற்குப் பிறகு என் வீட்டிலிருந்து வெளியே சென்ற போது அவருடைய (B2) மனம் சுத்தமாகவும் மகிழ்ச்சியாகவும் சிறிது நேரத்துக்கு இருந்தது. ஆனால் மீண்டும் அதில் குழப்பம் தோன்றி விட்டது. எனவே அது ஆன்மீகம் அல்ல, மெஸ்மரிசம் (மனோவசியம் செய்வது) தான், எனவே இதற்குப் பதிலாக வேதம் மற்றும் சாத்திரங்களின் சாரமாகிய ராமாயணத்தைப் படிப்பதில் அவர் அதிக மகிழ்ச்சி அடைகிறார் என்று இப்படியெல்லாம் சொன்னார்.) சைதன்ய மகாப்பிரபு தொடர்ந்து கூறியது :- ‘‘உங்கள் நிலையைப் பற்றி உங்களுக்கு சிறிதும் தெரியாது. நீங்கள் அதைத் தெரிந்து கொண்டால் நிச்சயமாக உங்கள் ஆன்மா உடலை விட்டுப் பறந்துவிடும். இந்த மாதிரி தன்மையை நான் யாரிடமும் கண்டதில்லை. இப்படி ஒரு மிகப் பெரிய புதையலை, தன்னுள் வைத்திருக்கும் சிறப்புத் தகுதியுடைய உங்கள் இதயத்தைப் போல வேறெங்கும் காணவும் முடியாது. இவையனைத்தும் உங்கள் மாஸ்டருடைய அருளினால் தான். அம்மாதிரி ஒரு மரியாதைக்குரிய தகுதி மிக்க மகாபுருஷர் ஒருபோதும் பூமிக்கு வந்ததில்லை. என் அனுபவத்திலிருந்து இதை நான் சொல்கிறேன். அதாவது உண்மையான விதத்தில் இந்த விஞ்ஞானத்துக்கு (யோகமுறைக்கு) தகுதியானவர்களைக் கண்டறிவது மிகவும் அரிதாகவே இருக்கும். மற்றும் உண்மையான திறமையும், தகுதிச் சிறப்பும் உடைய மனிதர்கள் எங்கெல்லாம் கிடைக்கிறார்களோ, அவர்களுடைய உள் நிலை ஆரம்பத்திலிருந்தே சம நிலை உடையதாக இருக்கவேண்டும். அவர்களை அடையாம் காண்பதற்கு (கண்டு தெரிந்து கொள்வதற்கு) அதுவே அறிகுறியாகும். இந்த விஞ்ஞானம் காணாமற்போய்க் கொண்டிருக்கிறது. ஏற்கனவே அது

பெருமளவு காணாமற் போய்விட்டது. இப்போது அதை மீண்டும் துவங்கி நிலை நிறுத்துவதற்கு ஆதரவாக இயற்கை விருப்பம் கொண்டுள்ளது. இதற்குப் பிறகு சுவாமி விவேகானந்தாவின் வேலை ஆரம்பமாகும். அதற்குப் பிறகு என் (சைதன்ய மகாப்பிரபு) முறை வரும். மதிப்புயர்ந்த, தகுதிமிக்க மற்ற மூத்த (முனிவர்களும்) வர்களும் கூட காத்திருக்கிறார்கள். நீங்கள் கன்யாகுமரிக்குச் சென்ற போது அந்த இடம் சிறந்ததாக மனதிற்கு இனிமையானதாக இருந்ததைக் கண்டீர்கள். அந்த இடம் எனக்கும் கூட விருப்பமானதாகத் தோன்றியது. அதை நான் முழுப்பயன் உடையதாக ஆக்கினேன். உண்மையில் கன்யாகுமரியில் செய்ய வேண்டிய வேலை எதுவும் இருக்கவில்லை. என்னுடைய நோக்கம் அங்கே நான் எதை உருவாக்கி நிலை நிறுத்தியிருந்தேனோ அதற்கு நீங்கள் ஒரு மெருகு கொடுக்கவேண்டும் என்பதே ஆகும். அதனால் தான் உங்கள் வணக்கத்திற்குரிய மாஸ்டரும், மேல் உலகின் மற்ற மூத்தோரும் உங்களுக்கு உத்தரவுகள் கொடுத்தார்கள். இப்போது அந்தப் பயன் ஒருபோதும் மறைந்து போக முடியாது.''

சுவாமி விவேகானந்தா :- “அது ஒரு உயர்ந்த ஆன்மா, நல்லாசிகள் எப்போதும் உங்கள் மீது பொழிந்து கொண்டிருக்கின்றன. உங்களோடு கூடவே இருப்பவரை அதிர்ஷ்டசாலியான ஜீவன் என்றே நான் சொல்வேன், இந்தக் காலம் நினைவில் வைத்திருக்கத் தகுந்தது. இதைப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். நாங்களும் J1 - உம் ஃபடேகரில் தொடர்ந்து சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருக்கிறோம். நான் கடமைகளை (அவரவர்க்கு) பிரித்துக் கொடுத்திருக்கிறேன். இந்த ஆண்டு விருந்தினர்கள் (வேறு மையங்களிலிருந்து வரும் சாதகர்கள்) வந்து குவிந்து கொண்டிருப்பார்கள். K - என்ற இடத்தில் நிறைய காரியங்கள் நடக்கின்றன. பண்டாராவில் தங்கள் வெற்றியைப் பற்றி கனவு கண்டு கொண்டிருக்கும் நண்பர்கள் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். பண்டாராவில் தாங்கள் பதவியைப் பெறுவதற்கு முடிந்த அளவுக்கு பெரும் முயற்சி செய்து

கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குப் பின்னால் எத்தனையோ சக்திகள் ஆதரவாக நிற்கின்றன. அவர்களுக்கு அம்மாதிரி ஆதரவு ஏதுமில்லை.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- ''நான் ஃபடேகர் சென்றிருந்தேன். சுவாமி விவேகானந்தா இந்த வேலையை ஏற்றுக்கொண்டதிலிருந்து ஒருபோதும் இந்த இடத்தை விட்டுச் செல்லவில்லை. J1 - உம் கூட சுறுசுறுப்பாக இருக்கிறார். (சிறிது இடைவெளி) ஒரு சாதகர் நம்பிக்கை அடையாமல் இருக்கும் வரை மற்றும் அந்த நம்பிக்கையில் உறுதியுடன் உள்ளவரை, அசுத்தத்தின் (தூய்மையற்ற சூழ்நிலைகளின்) விளைவு ஏற்படமுடியாது. வெளிப்புற கட்டாயத்தின் மூலமாக யாராவது அவரைக் கெடுப்பது (அவர் மனதில் எதையாவது திணிப்பது) வேறு விஷயம். எனினும் சரியான பற்றுறுதி (திட நம்பிக்கை) என்பது, அப்படித் திணிக்கப்பட்டதையும் கூட வெளியேற்றிவிடுவது மற்றும் அது தன்னிடம் ஒரு விளைவை உண்டாக்க அனுமதிக்காமல் இருப்பதாகும். இரண்டு உதாரணங்களும் இங்கே உள்ளன. ஒன்று பிரியமான ராம்சந்த்ரா, இன்னொன்று B2. M1 - வின் சீடர்களாகிய B, M2 - ன் ஒரு நிலையைக் கடக்கச் செய்திருக்கிறேன் என்பதற்காக, M1 - க்கு பாராட்டுக்களைச் சொல்லவும். அவரது சரீர மண்டலத்தை நான் குறை நீக்கி முழுமை பெறச் செய்திருக்கிறேன். பிரம்மாண்ட மண்டலத்தை நோக்கிய மனத்தின் இயற்கையான நாட்டம் அவருக்கு இன்னும் தோன்றவில்லை.

சுவாமி விவேகானந்தா :- ''எங்கள் வேலையின் ஒரு பகுதியை செய்து முடித்திருக்கிறோம். பிரபு கௌரங்கா (ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு) என்னோடு இருக்கிறார். நம்முடைய வேலையில் அவர் ஆர்வம் எடுத்துக்கொண்டிருக்கிறார். இந்த வேலை முடியும் வரை மேல் உலகிற்குப் போவதில்லை என்று அவரும் உறுதி எடுத்துக்கொண்டிருக்கிறார். நாங்கள் எல்லோரும் இப்போது இங்கே இருக்கிறோம். அவருடைய சக்ராயுதத்தை (வேறு வழியில்லையென்றால்) கடைசி நடவடிக்கையாக

பயன்படுத்தும்படி பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து இப்போது எங்களுக்கு உத்தரவு வந்திருக்கிறது. எங்களில் ஒருவர் J....க்குப் போகிறோம். இங்கே ஃபடேகரில் J1 - ஐ விட்டு விட்டு, J...யில் இருக்கும் கடமையை உங்கள்குருவே எடுத்துக்கொண்டிருக்கிறார்."

18-3-1945

M1 - சம்மந்தமாக சுவாமி விவேகானந்தா கூறியது :- (காலை 11.20 மணி) "இந்த முறை நீங்கள் அதிசயங்களைச் செய்திருக்கிறீர்கள். ஆனால் அவருக்கு சக்தியைக் கொடுப்பதற்கு இரண்டு அல்லது அதைவிட அதிகமான சிட்டிங்குகள் தேவையாக இருக்கும். அவர் இதைத் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை என்றால் M1 - அந்த சக்தியை திறந்தே இருப்பதற்கு (செயல்படும் தன்மையிலேயே இருப்பதற்கு) விட வேண்டும் என்று நான் அறிவுரை தருவேன். இதற்கான வழிமுறை அந்த சக்தியின் அடியிலிருக்கும் திரை (மறைப்பு) ஒட்டுமொத்தமாகச் செதுக்கித் தள்ளப்பட்டிருக்கிறது என்ற எண்ணத்துடன் அவர் அதை நினைத்து தியானிக்க வேண்டும் என்பதேயாகும். அது ஒரு சிறு குழந்தை போன்ற நிலையில் தான் இருக்கிறது. அதற்கு வளர்ச்சி தேவையாக இருக்கிறது. சாத்தியமானால், அவருடைய ஜீரண சக்திக்குத் தக்கவாறு அவர் வெண்ணெய் அல்லது நெய்யை மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். எந்த மசாலாப் பொருட்களும் இல்லாத வெந்த உணவுடன் மிளகு சேர்த்து உண்பது இந்தச் சமயத்தில் பயன் தருவதாக இருக்கும். புளி, பூசணிக்காய் மற்றும் பழுத்த தக்காளியும் பயனளிக்கும்."

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "என்னுடைய பிரதிநிதியாக - மற்றும் என்னையடுத்து என் பதவிக்கு உரியவராக மாறுவதற்குத் தகுதியுடைய ஒருவரை எனக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கடவுளிடம் நான் செய்த பிரார்த்தனையின் பயனாக உன்னுடைய (ராம்சந்த்ரா) உருவம் ஒரு முறை என் அகக்காட்சியில் வந்தது. உன்னுடைய முகத்தோற்றத்தின் அந்தக் காட்சியை நான் கண்ட பிறகு என்னை

நோக்கிய வசீகரம் உனக்கு ஏற்படுவதற்கு என் சங்கல்பத்தை ஈடுபடுத்தினேன். நீ உண்மையில் நேரில் என்னிடம் வருவதற்கு மிகவும் முன்பாகவே இது நடந்தது. இன்னும் சற்று அதிகமாக உள் முகக் கனலை நீ அனுபவிப்பதற்காக (ஆன்மீக ஏக்கம் பெருகுவதற்காக) உனக்கு தீட்சையளிப்பதை நான் தாமதப்படுத்தினேன். நீ நிச்சயமாக என்னிடம் வருவாய் என்பதில் நான் முழு உறுதியுடன் நம்பியிருந்தேன். ஆனால் அந்த வேகத்தை அதிகரிப்பதற்காக வேண்டி, என்னை நோக்கி உன்னைக் கவர்வதைச் செய்ய ஆரம்பித்தேன். உன் உள்நிலைகள் அப்போதே அங்கேயே மாறுவதற்கு ஆரம்பித்தன. இதற்கு முன்பு உன்னைப் பற்றி நான் கொடுத்த குறிப்புக்கள், இப்படியெல்லாம் இருந்தும் கூட நான் தொடர்ந்து என் கண்காணிப்பைச் செய்து வந்தேன் என்பதைச் சொல்கின்றன. மேலும் என் சொந்த அனுபவத்தை என் வணக்கத்திற்குரிய மாஸ்டரின் அனுபவத்துடன் அப்போதும் கூட ஒப்பிட்டு சரிபார்த்துக் கொண்டிருந்தேன். இந்த முன்னெச்சரிக்கைகளுக்கு ஒரு காரணம், உன்னுடைய பொருள்வளம் மிகுந்த குடும்பப் பின்னணி பற்றிய என் கவலை தான். இதனால் ஒவ்வொரு படியிலும் ஒவ்வொரு விநாடியும் உன் மீது ஒரு கவனம் வைத்திருந்தேன்.''

பிறகு, M1 மற்றும் R2 வுக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- ''பிரியமான ராம்சந்த்ராவின் மனதில் என்ன தோன்றியிருக்கிறதோ, அது மிக உயர்ந்த தகுதிச் சிறப்பும் திறனும் உடையவர்களுக்கும் நிகழ்வது சிரமமாக இருந்தது. அதாவது இந்தச் செயல் நுட்பம் வேறு யாருடைய (இங்கு சமீப காலத்திய மூத்த முனிவர்களைக் குறிப்பிடுகிறேன்) சிந்தனையிலும் வரவில்லை. மற்றபடி அதில் மொத்தமும் புதியதாக எதுவுமில்லை. இதில் ஏற்பட்டிருந்த கஷ்டம் என்னவெனில், ஏதாவது ஒரு வேலைக்காக தனது ஆவியுருவத்தை (சூட்சும சரீரத்தை) தனக்குப் பதிலாக நியமித்த போது அல்லது உங்கள் இருவரை (M1 மற்றும் R2) அதைச் செய்வதற்கு அனுப்பியபோது, அந்த ஆவியுருவம் (சூட்சும சரீரம்) நன்றாக வேலை செய்யவில்லை. அதற்கு பிராணாஹூதிக்கான தேவை இன்னும் இருந்தது. இப்போது

இந்தக் குறைபாடு சரி செய்யப்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு குறிப்பிடப்பட்ட வேலையைச் செய்வதற்கு நியமிப்பதற்காக ஆவியுருவம் (சூட்சும சரீரம்) வெளியே எடுக்கப்பட்டவுடன் அதற்கு உயிரூட்டப்படுவது செயல் நுட்பமானது. அந்த ஆவியுருவத்தில் (சூட்சும சரீரத்தில்) உயிரின் இயக்கம் உடனடியாக உணரப்படுகிறது. அதற்குப் பிறகு, அந்த ஆவியுருவத்துக்கு (சூட்சும சரீரத்துக்கு) அந்தக் குறிப்பிட்ட காரியத்திற்காகத் தேவைப்படுகின்ற இன்னும் கொஞ்சம் விசேஷ சக்தியைக் கொடுத்து, அது கையில் உள்ள அந்த வேலையுடன் இணைக்கப்படலாம். (சிறிது இடைவெளி) ராம்சந்த்ராவின் சிறப்புத் தகுதிகளை நான் மட்டுமே அறிவேன், என்னைப் பற்றி அவர் மட்டுமே அறிவார். சொல்லப்போனால், அது முக்தி பெற்ற ஆன்மாக்களைப் போலவே செய்வதாகவும் இருக்கிறது.

சுவாமி விவேகானந்தா :- இப்போது உங்களிடமிருந்து (பாபுஜி) வேலையை எடுத்துக்கொள்கிறேன். உங்கள் சக்தி நிறைந்த சரீரம் (பிராணமய கோசம்) என் முன்னால் இருக்கிறது. இந்த உலகம் உங்களை நினைவில் வைத்திருக்கும். நான் உங்களுக்கு ஒரு கடமையை நியமித்திருக்கிறேன்.

ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு :- “இம்மாதிரி ஒருவர் என்னுடைய மார்க்கத்தில் தோன்றவில்லை. அது குறித்து என் ஏக்கம் நிறைவேறாமலே போயிற்று.”

சுவாமி விவேகானந்தா :- “இந்தக் கண்டுபிடிப்பு ஒரு அசாதாரணமான தன்மை கொண்டது அல்ல. நீண்ட காலத்திற்கு முன்பு இந்தியாவில் ஹிந்து முனிவர் ஒருவர் இருந்தார். அவர் தான் இந்த வழிமுறையைக் கண்டறிந்தார். (சிறிது இடைவெளி) நீங்கள் என்னோடு தோளோடு தோள் நின்று வேலை செய்கிறீர்கள். உங்களிடமிருந்து நான் வேலையை எடுத்துக் கொள்கிறேன். இது மற்றுமொரு அதிசயமான கண்டுபிடிப்பு. இப்போது உங்கள் மூளைக்கு எந்த சிரமமும் இல்லாமல் நீங்கள் வேலை செய்கிறீர்கள். எப்போதும் உங்களை இப்படியே வைத்திருக்க நான் விரும்புகிறேன்.”

அகஸ்திய முனிவர் :- "ஆவியுருவத்திற்கு (சூட்சும சரீரத்திற்கு) உயிரளிப்பது என்ற இந்தக் கண்டுபிடிப்பு பற்றிய செய்தி எனக்கும் கிடைத்தது. இது ஒரு நல்ல புதிய அறிமுகமாகும். என்னிடம் ஏராளமான விஷயங்கள் பற்றிய ஞானம் இருக்கிறது. அதற்கான சந்தர்ப்பம் வரட்டும். நான் அந்த அனைத்தையும் வெளிப்படுத்துவேன். இந்த சந்தர்ப்பம் உங்கள் உலக வாழ்வுக்குப் பிறகு, சுதந்திரமாக உங்களால் வேலை செய்ய முடியும் போது வரும். அதை விரைவு படுத்துவதும், தாமதமாக்குவதும் உங்கள் கைகளில் தான் இருக்கிறது. இச்சமயத்தில் எத்தனையோ மெய்ஞ்ஞானிகள் (அதாவது ஹிந்து ரிஷிகளைச் சொல்கிறேன்) உங்களை மெச்சிக் கொண்டிருக்கிறார்கள்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் :- M1 - உடைய கேள்விக்கு நான் விடைசொல்கிறேன். ஒரு குறிப்பிட்ட வேலைக்காக இயற்கையில் இருந்து ஒரு விசேஷமான சக்தி இறங்கி வருகிறது, ஒரு அவதாரம் என்ற வடிவத்தில் இருக்கின்ற, ஒரு விசேஷமான மனிதரிடத்தில் மறைந்திருந்து செயல்படுகிறது. அம்மாதிரி ஒரு விஷயம் நிகழும் போது, அம்மாதிரி மனிதரின் கட்டளைகளுக்கு இசைந்து இயற்கையின் சக்திகள் வேலை செய்யத் துவங்குகின்றன, இந்த சக்திகளால் தாங்களாகவே எதையும் செய்ய இயலாது.

சுவாமி விவேகானந்தா :- பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து அறிவுரைகளைப் பெற்றீர்கள். இப்போது என் முறை வருகின்றது, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் 'ஃபடேகரில் நீங்கள் அதிசயங்களைச் செய்து கொண்டிருக்கிறீர்கள், நீங்கள் அடைந்திருக்கின்ற அதே செயல் திறன், இங்கே உங்கள் ஆவியுருவத்தில் (சூட்சும சரீரத்தில்) என்னோடு வேலை செய்து கொண்டிருக்கிறது. முழு சக்திகளோடு நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். இதில் இன்னொரு அதிசயம் - அது நீங்களே இங்கு இருப்பது போல இருக்கிறது. உங்கள் மூளை இப்போது இந்த ஆவியுருவத்தில் வேலை செய்யத் துவங்குகிறது. நீங்கள் திரும்பிப் போகும் போது

இந்த அனைத்து விஷயங்களையும் உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள்.

இலங்கையின் முனிவர் (இரவு 10.30 மணி) :- "உங்கள் வருடாந்திர விழாவின் தேதிகள் என்ன? (தேதிகள் தெரிவிக்கப்பட்டன) பண்டாராவின்போது உங்களோடு இருக்கும்படி பகவான் ஸ்ரீகிருஷ்ணர் எனக்கு உத்திரவிட்டிருக்கிறார். என் விருப்பத்தின் படி (நானாகவே விரும்பி) அந்தக் கடமையை ஒரு நாள் முன்னதாகவே எடுத்துக்கொள்வேன்.

அகஸ்திய முனிவர் :- (இரவு 11.30மணி) பண்டாராவின் போது உங்களுடன் இருக்கும்படி இப்போது தான் எனக்கு உத்திரவுகள் கிடைத்தன. இதனால் நான் அப்படியே செய்வேன். என்னுடைய பதவியிலிருந்து நான் வெளியே இருக்கவேண்டியதாக ஆகியுள்ள முதல் சந்தர்ப்பம் இது தான்.

## <u>19-3-1945</u>

சுவாமி விவேகானந்தா :- பண்டாராவின் போது பழமையான இந்தியாவின் மதிப்புக்குரிய முனிவர்கள் அனைவரையும் உங்களோடு இருக்க வேண்டுமென்று உத்தரவுகள் அனுப்பியிருக்கிறேன். அகஸ்திய முனிவர் அவர்களில் ஒருவர். மகரிஷி அத்ரிக்கும் இப்போது உத்தரவு அனுப்புகிறேன். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர் உங்களுடன் பேசுவார்.

அத்ரி முனிவர் (அத்ரி மகரிஷி) :- உங்களோடு இருப்பதற்கான உத்திரவு இப்போது வந்து சேர்ந்தது. அதனால் அந்தத் தேதிகளில் நான் அங்கே இருப்பேன். (தேதிகள் தரப்பட்டன)

மதுராவின் பாதுகாவலர் (அப்தல் / Abdal) அவருடைய வேண்டுகோளின்படி பிராணாஹூதி (நான்) அளித்த பிறகு பகல் 12.45 மணிக்கு, ஆஹா! இந்த ஒரு சற்றும் குறையில்லாத முழுமையை நான் வேறு எங்கும் ஒருபோதும் கண்டதில்லை. என்

ஆயுள் முழுவதும் உங்களுக்கு சேவை செய்து கொண்டே இருப்பதற்கு என் இதயம் மிகவும் விரும்புகிறது. மேலான தகுதிச் சிறப்புடைய மூத்த முனிவர்கள் பலரை நான் சந்தித்திருக்கிறேன். ஆனால், சுவாமி தயானந்தாவின் பிறந்த நாள் நூற்றாண்டுவிழா சமயத்தில், மதுராவுக்கு வந்த ஒருவரைத் தவிர (அவர் வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப்) இந்த மாதிரி பிராணாஹுதியை வேறு எவரிடமும் நான் பார்க்க முடியவில்லை. இம்மாதிரி குறையில்லாத முழுமையும் கிடைக்கக்கூடியதாக இல்லை. எனது வணக்கத்திற்குரிய ஆன்மீக வழிகாட்டி (குரு) அந்தச் சமயத்தில் உயிர் வாழ்ந்திருந்தார். அவர் அந்த உயர்ந்த முனிவரை சந்தித்து, தன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருப்பதை உணர்ந்தார். அந்த மிக உயர்ந்த மகாபுருஷர் என் குருநாதர் தான் என்பதைச் சொன்னவுடன் அந்த அப்தல் தொடர்ந்து சொன்னது. ‘‘அந்த உயரிய மகாபுருஷரின் அதே மாதிரி வடிவம் தான் ராம்சந்த்ரா. இது பற்றி முன்பு நான் அறியாமலிருந்தேன். நான் சொல்வதற்கு இன்னும் என்ன இருக்கிறது?”

M1 - க்காக வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- ‘‘பிரியமான ராம்சந்த்ராவைப் புகழ்வதற்கு எவ்வளவு இருக்கிறது! இந்தச் சமயத்தில் என்னை அமைதிப்படுத்த அவர் முயற்சி செய்திருந்தால், அவருக்கு நான் தண்டனை அளித்திருப்பேன். மற்ற சமயங்களில் என்னை அமைதிப்படுத்துவது, சமாதானப்படுத்துவது சரியானது. ஆனால் இந்தச் சமயத்தில் அது அப்படியல்ல. அன்புள்ள M1 - இதைப்பார், அவருடைய நிலைமை எவ்வளவு சங்கடமாக மாறுகிறது. இப்போது நான் ஒரு நோக்கத்துடன் (வேண்டுமென்றே) எரிச்சலை உண்டாக்கினேன். இல்லையெனில் அவருடைய வார்த்தைகளைப் பொருட்படுத்தாமல் மீறிச் செல்வது எப்படி சாத்தியமாகும்? மிகப் பெரிய தண்டனைக்குரியவராக யாரையாவது நாம் கருதினால், அவர்மீது அதிகபட்ச அருளைப்பொழிவதும் நம் கடமை தான். இம்மாதிரி ஒரு உதாரணத்தை நாம் சந்திப்பது சாத்தியமாகுமா? நிச்சயமாக முடியாது. அவரிடத்தில் எந்த எண்ணம் தோன்றினாலும் சரி.

நான் அதை நிச்சயமாக நிறைவேற்றி வைப்பேன். அங்கே அது சரியா, தவறா என்பது பற்றி கேள்வியே இருக்கக்கூடாது என்று நான் வாக்குறுதியளிக்கிறேன். அவருக்காக நான் தேர்ந்தெடுத்த அதிகபட்ச தண்டனை, வேறு யாருக்காகவும் ஒருபோதும் தருவதற்கு நினைக்கப்படவில்லை. அது எப்படி இருந்தாலும் அவர் அந்தப் பரிசோதனையிலிருந்து வெற்றிகரமாக வெளிவந்துவிட்டார். இதனால் மேலே சொல்லப்பட்டது இங்கே இவருக்காகவே கூறப்பட்டதாகும். ஆன்மீகப் பிரதிநிதியாக, அடுத்ததாகப் பதவிக்கு வருவதற்கு உரிய வாரிசாக ஆவது என்பது குழந்தையின் விளையாட்டு அல்ல. அந்த மாதிரி வேறு யாரையும் ஒருபோதும் சோதித்தது இல்லை. ஏனென்றால் வேறு யாரும் அந்த அளவுக்கு சமமாக இருக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். அப்படி ஒரு தண்டனை தரப்பட்டதால் (கடுமையாக சோதனை செய்யப்பட்டதால்) இப்போது, அதைவிட மிக அதிக அளவில் உயர்ந்ததாகிய பரிசும் கிடைத்திருக்கிறது. நான் அப்படிச்செய்யாவிட்டால், நியாயத்தைப் புறக்கணித்து விட்டதாக என் மீது குற்றம் உண்டாகியிருக்கும். எந்த மனிதருடைய சிறிய தவறுக்காக - அது செய்யப்பட்டிருந்தால் கடவுள் அதைப் பலன் தராதபடி தவிர்ப்பாராக - நான் முழு அழிவை ஏற்படுத்த நினைத்திருந்தேனோ, இப்போது அதற்கு மாறான எதிர் திசையில், அதே அளவுக்கு (ஆக்க ரீதியான) பரிசளிக்கப்பட வேண்டும். ஆகையால் என் கருத்து என்னவெனில் குறிப்பாக இம்மாதிரி ஒரு சந்தர்ப்பத்தில் அவர் சுதந்திரமாக - யாரையும் சார்ந்து நில்லாமல், செயல்படவேண்டும் என்பதேயாகும். அவரும் அப்படியே மிகச் சிறப்பாக காரியங்கள் நிகழவைத்தார். ஏதாவது கேட்குமாறு நான் அவரை வற்புறுத்தியபோது, ‘‘இந்த உலகம் உள்ளவரை என் பிரபுவின் (குருவின்) பெயர் சூரியனைப் போல ஒளிவீசிக் கொண்டிருக்கவேண்டும்’’ என்று கெஞ்சினார். வருங்காலத்தில் அவர் எதைக்கேட்டாலும் அல்லது எதை விரும்பினாலும் அது கொடுக்கப்படும் என்று நான் மீண்டும் வாக்குறுதியளித்தேன். நான் நேசிக்கும் ஒருவரின் மீது அப்படி ஒரு பெருந்தீமையை நான் உண்டாக்க துணிந்தபோது, அவர் ஏதாவது ஒரு தவறு செய்திருந்தால் அவருக்கு இந்த வார்த்தைகளை ஏன் நான்

கூறவில்லை என்பதற்கு ஒரு காரணமும் இல்லை. இது அவருக்கு கடைசி சோதனையாக இருந்தது. இப்படியொரு ஒரே மாதிரியான நெருக்கம் இன்றைய நாள் வரையில் வேறு யாரிடத்திலும் ஒருபோதும் வளர்ச்சியடைந்ததில்லை என்றே நான் உறுதியாகச் சொல்கிறேன். என்னிடம் பொறுமையின்மை (கோபத்தின் எரிச்சல்) எப்போது வளர்ந்தாலும், அதை அவர் விரும்புகிற அளவுக்குக் குறைப்பதற்கு இப்போது நான் அவருக்கு அனுமதியளிக்கிறேன். அன்புள்ள M1, இப்போது அவருக்கு நான் என்ன அளித்திருக்கிறேன் என்பது பற்றி உனக்கு எதுவும் தெரியாது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் சுதாமாவுக்கும் (குசேலருக்கும்) இடையே கைமாறிய அவல் பற்றிய கதையை சிந்தித்துப் பார்.''

[சுதாமா (குசேலர்) என்பவர் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் பழைய நண்பர். தனது கஷ்ட நிலையினால் உந்தப்பட்டு, தன் மனைவியின் தூண்டுதலின் காரணமாக, மாணவப் பருவத்தில் தனது பழைய நண்பரின் உதவியை நாடிச் சென்றார். அவருடைய மனைவியால் பக்கத்து வீட்டாரிடமிருந்து கடனாக வாங்கிய சில கைப்பிடி அளவுள்ள அவலை மட்டுமே, இப்போது மிகப்பெரிய மன்னராக இருக்கும் ஸ்ரீகிருஷ்ணருக்கு ஒரு பரிசாகக் கொடுத்து அனுப்ப முடிந்தது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் சுதாமாவை மிகவும் மரியாதையுடனும், பாசத்துடனும் வரவேற்றார். சுதாமாவின் கூச்சத்தையும், தயக்கத்தையும் கண்டு, தன் நண்பரின் மனைவி கொடுத்தனுப்பிய பரிசை விளையாட்டாகப் பிடுங்கி, கைப்பிடி அவலை எடுத்து சாப்பிட ஆரம்பித்தார். கிருஷ்ணர் சாப்பிட்ட ஒவ்வொரு கைப்பிடி அவலுக்கும் மேல் உலகம், மண்ணுலகம், பாதாள உலகம் ஆகிய ஒவ்வொரு உலகம் சுதாமாவுக்கு உரிமையானதாயிற்று. அவர் மூன்று கைப்பிடி அளவு சாப்பிட்டவுடன், பகவான் கிருஷ்ணரின் பட்டத்து ராணியாகிய ருக்மணி மேற்கொண்டு சாப்பிடாமல் தடுத்து அதில் தனக்கும் பங்கு வேண்டும் என்று கூறி எடுத்துக் கொண்டாள். சில நாட்களுக்குப் பிறகு கிருஷ்ணரிடமிருந்து (வெளிப்படையாக) எதையும் எடுத்துச் செல்லாமல், திரும்பிச் சென்ற போது

வருத்தத்துடன், ஏமாற்ற உணர்வுடன், பகவான் கிருஷ்ணர் தனக்கு என்ன கொடுத்தாரோ அதையே அவரும் பெறட்டும் என்று ஆசீர்வதித்தார் (அல்லது சபித்தார்). அதன் பிறகு அந்த மூன்று உலகங்களும் மீண்டும் தங்கள் இடத்தைச் சென்றடைந்தன. சுதாமா தன் வீட்டை அடைந்த போது எல்லாவிதமான உலக வளங்களை மட்டுமே தான் பெற்றிருப்பதை அறிந்து வியப்புற்றார்.]

''என் அன்புள்ள M1, அவர் (ராம்சந்த்ரா) சூட்சுமத்தன்மையைக் கைவிடவில்லை. நான் என்ன ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேனோ அதைத்தான் செய்யச் சொல்லி எனக்குக் கட்டளையிட்டார். இது அவருக்கு ஒரு சோதனையாக இருக்கவில்லை. அந்த விதத்தில் (அது சம்பந்தமாக) நான் ஏற்கனவே வாக்குறுதி கொடுத்திருந்தேன். பிரியமான ராம்சந்த்ரா, உன் வாழ்க்கை முழுவதும் மற்றும் அதற்குப் பிறகும் கூட இம்மாதிரி ஒரு கடுமையான வழியில் ஒருபோதும் யாரையும் நீ சோதிக்கக்கூடாது என்று நான் அறிவுறுத்துகிறேன். M1 , உனக்கும் கூட அதையே சொல்கிறேன்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- ''இங்கே பார் M1, ராம்சந்த்ரா மீண்டும் மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறார். சுவாமி விவேகானந்தா தன் மகிழ்ச்சியின் காரணமாக இந்த சம்பவம் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்குத் தெரிவிக்கப்படும் என்று அவரிடம் சொன்னார். இந்தக் கடுமையான பரீட்சையில் ராம்சந்த்ரா வெற்றிப் பெற்றுள்ள மகிழ்ச்சியான செய்தியை பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்குத் தெரிவிக்க வேண்டும் என்பது அவருடைய நோக்கம். அதற்கு ராம்சந்த்ரா மிகவும் பணிவோடு இந்தச் சம்பவத்தை பகவான் கிருஷ்ணருக்குத் தெரிவிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். ஏனென்றால் எந்தச் சோதனையில் தோல்வியுற்றால் அது தனக்கு அழிவையே ஏற்படுத்தியிருக்குமோ, அம்மாதிரி ஒரு கடுமையான சோதனைக்கு அவர்களுக்குப் பிரியமான ஒருவர் (ராம்சந்த்ரா) உள்ளாக்கப்பட்டது பற்றித் தெரிவிப்பது நன்றாக இருக்காது

என்பதால் அப்படிக் கேட்டுக்கொண்டார். இந்தச் சமயத்தில் என் இதயத்தின் உள் நிலையை வெளிப்படுத்த இயலாதவனாக (சக்தியற்றவனாக) நான் உணர்கிறேன். ஒருவருடைய வழிகாட்டிக்கு (குருவுக்கு) இதைவிடச் சிறந்த மரியாதை இருக்கமுடியாது. இனி என்னிடம் என்ன கேட்கப்படுகிறதோ அல்லது தெரிவிக்கப்படுகிறதோ அதை அலட்சியம் செய்வதற்கு அல்லது ஒதுக்குவதற்கு எனக்கு இடமளிக்கக்கூடிய இதயத்தை இப்போது எங்கிருந்து நான் பெறமுடியும்? (அதாவது அவர் கூறுவது எதையும் என்னால் மறுக்க முடியாது) சோதனைகள் முடிந்து விட்டன. இப்போதைக்கு இனிமேல் கிடையாது. இன்றைய தினத்திலிருந்து என்னையே நான் அவரிடம் அடமானம் வைத்துவிட்டேன். இன்னும் என்ன சொல்வது? அன்புள்ள M1, கடவுள் மீது ஆணையாகச் சொல்கிறேன், இன்று முதல் என்னிடம் எதையும் நான் வைத்திருக்கவில்லை, என்னை முற்றிலும் காலியாக்கிக் கொண்டு, எல்லாவற்றையும் அவருக்கு மாற்றிக் கொடுத்துவிட்டேன். அங்கே என்னவெல்லாம் செல்வங்கள் கிடைக்கக்கூடுமோ, அவற்றையெல்லாம் அவருக்கு அளித்துவிட்டேன். (சற்று இடைவெளி) அவர் மீண்டும் ஒரு அதிசயத்தைச் செய்திருக்கிறார். நான் இன்னும் வேறு என்ன தரவேண்டும் என்று அவரிடம் கேட்டேன். அவர் ‘‘உங்களுடைய அருள் நிறைந்த உறவின் நிழல் (பாதுகாப்பு / Saaya – e - Aatifat) எப்போதும் எப்படி இருந்ததோ, அப்படியே தொடர வேண்டும்’’ என்று பதில் கூறினார். இந்த மாதிரி ஒரு உதாரணம் வேறு எங்கும் காணக் கிடைக்காது. வருங்காலத்திலும் கூட அப்படி இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அன்புள்ள M1, உண்மையில் எது இன்னும் கொடுக்கப்பட வேண்டியதாக இருந்ததோ, அதை அவர் கேட்டார். நான் இதை மீண்டும் சொல்லியாக வேண்டும். இதுபோன்ற உதாரணம் மீண்டும் கிடைக்காது, மக்கள் இந்த ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டாக வேண்டும்.’’

சுவாமி விவேகானந்தா :- "நமது பிரபு உங்களை நிர்வகிக்கும் சக்தியாக (அதிகாரியாக) மாற்றி விட்டு, அந்த வேலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டுவிட்டார்."

அகஸ்திய முனிவர் :- "உங்கள் குரு உங்களையே நிர்வகிக்கும் சக்தியாக ஆக்கியிருக்கிறார் என்று தெய்வீகக் குரல் கூறிய செய்தி எனக்கு வரப்பெற்றேன்."

அத்ரி முனிவர் :- "நிர்வாக சக்தியாக நீங்கள் ஆக்கப்பட்டிருக்கிறீர்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்தது."

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- "அன்புள்ள M1, உண்மையாகவே சொல்கிறேன். எனக்காக (எந்த இடத்திலும்) ஒரு தனி இருக்கையைக் கூட நான் வைத்துக் கொள்ளவில்லை."

சுவாமி விவேகானந்தா :- "நான் உங்களிடம் ஒன்றை மட்டும் கேட்கிறேன். நீங்கள் என் வேலையை எடுத்துக்கொள்ளும் பொழுது, என் பிரபுவாக உங்களை எடுத்துக்கொள்ளுங்கள்."

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- "சுவாமிஜி தன் பிரபுவாக (தலைவராக) அவரைக் கருதும்படி கேட்டுக்கொண்ட போது ராம்சந்த்ரா எவ்வளவு சிறப்பான பதில் கூறியிருக்கிறார். 'ஒரு அடிமையை அரசனின் சிம்மாசனத்தில் உட்கார வைத்து அந்த அரசனின் சிறப்புரிமைகள் அவனுக்குக் கிடைக்குமாறு செய்யப்பட்டிருந்தாலும் கூட அவனுடைய நிலை உண்மையில் அடிமை என்பதாகவே நீடித்திருக்கும்' என்று அவர் சொன்னார். இந்த பதில் என்னையும், சுவாமிஜியையும் மிகப் பெரிய மகிழ்ச்சியடையச் செய்தது. குருவுக்கு மரியாதையளித்தல் என்ற உயர் நிலைக்கு உரியதான நாகரீகப் பண்பு அதுவேயல்லவா?"

<u>20-3-1945</u>

M1 - க்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது (நண்பகல் நேரம்) :- ''நான் உயர் உலகை விட்டு வந்து விட்டேன். பிரியமான ராம்சந்த்ரா உலகில் வாழும் காலம் முழுவதும் அங்கே

திரும்பிச்செல்லும் உத்தேசம் எனக்கு இல்லை. அதற்கான தேவை ஏற்படலாம் என்பது வேறு விஷயம். அல்லது அவ்வப்போது குறுகிய காலங்களுக்கு செல்ல வேண்டியதாக இருக்கலாம். நான் தங்கியிருப்பது பெரும்பாலும் இங்கே தான் இருக்கும். இப்போது அதையும் கூட ராம்சந்த்ராவுக்குக் கொடுத்து விட்டதனால், உயர் உலகிற்குச் செல்ல எனக்கு உரிமையில்லை.''

அகஸ்திய முனிவர் :- நேற்றிரவு நான் கூறியது நடைமுறைக்கு வந்திருக்கிறது.

சுவாமி விவேகானந்தா :- நமது பிரபு தனக்கென்று எதுவும் வைத்துக் கொள்ளவில்லை.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- நான் அங்கே (உயர் உலகில்) தங்குவதற்கு ஒரு வழியை பிரியமான ராம்சந்த்ரா எனக்குச் சொல்லியிருக்கிறார். அந்த வழி முறை என்னை அங்கே தங்கியிருக்க வழி செய்கிறது. ஆனால் அது, என் சுய விருப்பத்தைச் சார்ந்திருக்கிறது.

சுவாமி விவேகானந்தா :- உங்களுக்காக உயர் உலகை விட்டு வருவதற்கு நானும் நினைத்திருக்கிறேன்.

ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு :- "உயர் உலகை விட்டு உங்களிடம் வந்துவிடலாம் என்று எனக்கும் கூட அதே கருத்து இருக்கிறது. உங்கள் நிலையைப் பற்றி உங்களுக்கு தெரியவில்லை. ராஜா எங்கே இருக்கிறாரோ அங்கே தான் ராஜசபை மகிழ்ச்சியாக இருக்கும்."

சுவாமி விவேகானந்தா :- இந்த வேலைக்காக உயரிய ஆன்மாக்கள் உங்களை நாடி வந்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் குருவினால் குறிப்பாகச் சொல்லப்பட்ட இந்த நோக்கத்திற்காக உயர் உலகம் அல்லது ஒளி உலகை விட்டு நாங்கள் வந்து கொண்டிருக்கிறோம். உறுதியாகச் சொல்ல முடியாவிட்டாலும், இவ்வுலகில் உங்கள் உயிர் வாழ்க்கை நீடிக்கப்படுவது முழுவதும் சாத்தியம் தான். இவை புதிய

கட்டளைகளாகும். விரைவிலேயே அவை தங்கள் வடிவத்தை எடுத்துக்கொள்ளும் (செயல்வடிவம் பெறும்). சில மணி நேரங்கள் மட்டுமே தூங்கி நீங்கள் இரவும் பகலுமாக வேலை செய்ய வேண்டியிருக்கும். உங்கள் உடல் நலத்தைப் பாதுகாக்க அதுவே போதுமானதாக இருக்கும் என்று உங்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன். உண்மையில் இருபத்து நான்கு மணி நேரத்தில் பத்து நிமிடங்கள் தூக்கமே உங்களுக்குப் போதுமானது. இந்த நிலையில் இருப்பவர்களுக்கு தூக்கம் கிடையாது, தூக்கமின்மை உங்கள் உடல் நலத்தை பாதிக்காது.''

''மனுஸ்ம்ருதியில் (மனுவின் தர்மசாஸ்திரத்தில்) ஒரு பெரிய குழப்பம் இருக்கிறது. முதலில் (மற்றவைகளுக்கு முன்னதாக) அதை நீங்கள் சீர்திருத்த எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். அதன் பிறகு மற்ற சாஸ்திரங்கள் (மத நூல்கள்) வரும். கடைசியாக வேதங்கள் வரும். வெவ்வேறு தத்துவ ஞான மார்க்கங்களின் ஒவ்வொரு விஷயத்துக்கும் நீங்கள் விரிவுரைகள் எழுத வேண்டியிருக்கும். இந்த வேலைகள் அனைத்தையும் நீங்களாகவே செய்ய முடியாது. யாராவது அந்தப் புத்தகங்களை உங்களுக்காகப் படிக்கும்போது நீங்கள் அதைக் கவனமாகக் கேட்கலாம். அப்போது அவற்றில் செய்ய வேண்டிய திருத்தங்கள் சம்பந்தமாக உங்கள் குறிப்புக்களை, சாத்தியமானால் வேறு யாராவது எழுதி வைத்துக் கொண்டு இருக்கலாம். இல்லையென்றால், அதை யார் படித்தச் சொல்கிறாரோ, அவரே திருத்தங்களை எழுதிக் கொள்ளும், இந்த வேலையையும் செய்யலாம். நீங்கள் இவ்வுலகை விட்டுச் சென்ற பிறகு, இப்படிச் செய்த வேலைகளையெல்லாம் அச்சிடுவதற்காக விட்டுச் செல்லலாம். இதற்கெல்லாம் நாங்களே ஏற்பாடுகள் செய்வோம். ஆன்மீக சூத்திரங்களை (aphorisma) எல்லாம் தங்களுக்கும், தங்கள் சுற்றத்தார், வம்சத்தினர் ஒவ்வொருவருக்கும் மேலான ஆட்சி நிலை கொடுப்பதற்காக பூஜாரிகள் கெடுத்து, அசுத்தமாக்கியுள்ளனர். வேதங்களின் விஞ்ஞானப் பகுதி இந்தியாவில் கிடைக்கவில்லை. சம்ஸ்கிருத மொழி இலக்கணமும் கூட இந்தப் பூஜாரிகளின் கைகளில் கெடுதலான சாயலைப்

பெற்றுள்ளன. பூஜாரிகள் மற்றும் அவர்களுடைய குலத்தின் (ஜாதியின்) மேன்மை என்று சொல்லப்படுவதைப் பற்றி பிரம்ம சூத்திரம் பல கதைகளைச் சொல்கிறது. அதன் உண்மையான பகுதி தனியே பிரித்து எடுக்கப்பட்டு எரித்து சாம்பலாக்கப்பட்டு விட்டது. எங்கும் (எல்லா இடங்களிலும்) பூஜாரிகளின் மற்றும் பூஜாரிகளின் குலத்தில் மேன்மை பற்றிய விஷயங்களை மட்டுமே நீங்கள் காண்பீர்கள். அதன் உண்மையான விஷயங்கள் மென்று துப்பப்பட்டு விட்டன. (அழிக்கப்பட்டு விட்டன). இவையனைத்தும் உங்களிடம் திருப்பிக் கொடுக்கப்படுகின்றன. அவற்றை எழுதிய அந்த முனிவர்களே, அதை உங்களுக்குச் சொல்வதற்கும், உங்கள் மூலமாக அதில் திருத்தங்கள் செய்யவும் இறங்கி வருவார்கள். அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன. மேன்மை என்ற கருத்தை ஒரு முன் கணிப்பான வழியில் எடுத்துக்கொண்ட நூலாசிரியர்களைத் தண்டிப்பதற்கு நாங்கள் உத்தேசித்திருக்கிறோம். அவர்கள் மீண்டும் பிறப்பார்கள், அழிக்கப்படுவார்கள். நான் இதற்கு பதஞ்சலியை உதாரணமாக எடுத்துக்கொள்கிறேன். அவர் கற்றறிந்தவர், ஆனால் வாழத் தகுந்த விதத்தில் நடைமுறை வாழ்க்கையை அவர் நடத்தவில்லை. அவரைப் போன்றவர்கள் வெறும் புத்தகப் புழுக்கள் தான். திலகர் (பாலகங்காதர திலகர்) பற்றி நான் உயர்வாகப் பேசுகிறேன். உங்கள் குரு இந்த ஒவ்வொரு விஷயம் பற்றியும் விரிவுரை கொடுப்பார். இது உங்கள் ஆன்மீக வரலாற்றில் திருப்புமுனையாக இருக்கிறது. அதாவது வேறு ஏதோ ஒரு வேலைக்காகவும் கூட நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று சொல்கிறேன். நான் உங்களுக்காக ஒரு முனிவரை நியமிக்கப்போகிறேன். அவருடைய ஒரே வேலை உங்கள் மூளையிலிருந்து களைப்பை வெளியே இழுப்பது தான். உங்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு மணி நேர தூக்கத்துக்கு மேல் நான் அனுமதிக்க மாட்டேன். மிக அரிதாக மூன்று மணி நேரம் தரலாம். உண்மையாகவே சொல்கிறேன். உங்களுக்கு ஓய்வு தேவையில்லை. உங்கள் ஆன்மா ஏற்கனவே வெளியேறி உடலிலிருந்து தன் இணைப்பை அறுத்துக்கொண்டு விட்டது. இப்போது நடந்து கொண்டிருக்கும் வேலையின் போது என்

அனுபவம் நீங்கள் ஒரு புதிய உலகைப் படைக்க வேண்டியிருக்கும் என்பதேயாகும். (சிறிது இடைவெளி) K......மனிதர்கள் மந்தமானவர்கள், அவர்கள் வணங்குகின்ற மனிதர்களிடமிருந்து செயல்பாடுகள் திரும்பி எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டன. அவர்களுடைய மாஸ்டர்கள் என்று சொல்லப்படுபவர்களும், மந்தமாக மாறிவிட்டார்கள். உதாரணமாக S1 - ஐ எடுத்துக் கொள்ளுங்கள். அவரும் N1 - க்கு பலியானவர் தான். நான் உறுதியாகச் சொல்கிறேன். உங்களைத் தவிர இவ்வுலகில் வேறு யாரும் அவர்களை சரிப்படுத்த முடியாது. அவர்கள் (N1 - போன்றவர்கள்) போதுமான அளவுக்கு சங்கல்ப சக்தி உடையவர்களாக இருக்கிறார்கள். எண்ணத்தின் ஆற்றலோடு அவர்கள் அந்த சங்கல்ப சக்தியை மற்றவர்களை ஏமாற்றி திசை திருப்புவதற்கு உபயோகித்து, மற்றவர்களின் மூளை மற்றும் இதயத்தில் ஒரு ஆழ்ந்த பதிவை ஏற்படுத்தி விடுகிறார்கள். இப்போது ஒரே பார்யில் அதை நீக்குவது, குழந்தையின் விளையாட்டு மாதிரி அல்ல. மேலும் ஒரு விஷயம் அவர்களுக்கு செய்யப்பட்டிருக்கிறது. இருள் தன்மையின் ஒரு கனமான திரை அவர்கள் மீது புகுத்தப்பட்டிருக்கிறது. உங்களைத் தவிர வேறு யாரும் (அல்லது எங்கேயாவது விசேஷமாகப் பாதுகாக்கப்பட்டுள்ள அம்மதிரி ஒருவர் இருந்தால், அவரையும் தவிர வேறு யாரும்) அதிலிருந்து தப்பமுடியாது. M1 - ஐ எடுத்துக்கொள்ளுங்கள். இப்போது அழிவின் பிடியில் இருக்கின்ற அதே மனிதரால் அவருடைய சங்கல்பம் பலவீனமாக்கப்பட்டிருந்தது. அதற்கு மேல் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் மேலும் கெடுதல் செய்வதற்கு வழிமுறைகளைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார். அதாவது தனது உள்ளார்ந்த செயல் திறன் அல்லது மூளையில் அவர் வரைந்திருந்த திட்டத்தைச் சொல்கிறேன். நமது வணக்கத்திற்குரிய பிரபுவின் சீடர்களில் எந்த ஒருவருக்கும் உயர்வு கொடுக்க அவர் (N1) விரும்பவில்லை. இதன் பயனாகவே உங்கள் சகோதரர்களின் மூளையில் வெவ்வேறு தன்மைகளை உடைய எத்தனையோ எண்ணங்கள், இன்னும் நீந்திக்

கொண்டிருக்கின்றன. அவர் (N1) எனக்கு ஒரு திறந்த புத்தகமாக இருக்கிறார். (அதாவது அவருடைய எண்ணங்கள் அனைத்தையும் நான் அறிந்து கொள்கிறேன். உதாரணத்தைப் பாருங்கள், எதற்கும் பயன்படாத மரக்கட்டை போன்ற M3 - வை, நான் ஒதுக்கிவிட்டேன். அவர் சாத்தான் (தீயசக்தி) போல இல்லையென்றாலும், தன்னுடைய மேலாண்மையை அவருடைய மற்றும் உங்கள் சகோதரர்களிடையே பரவும்படியான சில வேலைகளை செய்திருக்கிறார்.''

<u>21-3-1945</u>

சுவாமி விவேகானந்தா கூறியது :- "நிலைமை மீண்டும் முன்னேறிக்கொண்டிருக்கிறது. உங்களை எந்தச் சமயத்திலும் விட்டுச் செல்வதில்லை என்று நான் தீர்மானித்திருக்கிறேன். இந்த விஷயத்தில் நமது பிரபுவை நான் பின்பற்ற விரும்புகிறேன்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- "பர்னாய் (ஸ்ரீபாபுஜிக்கு சொந்தமான விளை நிலம் இருக்கும் ஊர்) கிராமத்தில் உள்ள நிலைமையை நானே கவனித்து ஆய்வு செய்தேன். அந்த மனிதர்களுக்கு நீ செய்துள்ள கடமைப் பொறுப்புக்கள் வேறு நில உரிமையாளர்களில் நடத்தையிலிருந்து உதாரணம் கூறமுடியாததாக இருக்கிறது. அவர்களுக்காக நீ பாசமும் கொண்டிருக்கிறாய். ஆனால் காலத்தின் குணாதிசயம் என்னவெனில் அவர்கள் அதற்குப் பிரதியுபகாரமாக எதுவும் செய்ய விரும்பவில்லை என்பது தான். இதற்காக நான் ஒரு ஏற்பாட்டினை யோசித்தேன். L2 - என்பவரை இதற்காக நியமித்துக்கொள். அவர் நல்ல மனிதர், அவர் நேர்மையானவர், உன்னிடம் கடமையுணர்வு உடையவர். உனக்கு நெருக்கமாக இருக்கின்ற ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்த மனிதர்கள் உனக்கே முட்களை விதைத்துக் கொண்டு (தொல்லைகளை உருவாக்கிக் கொண்டு) இருக்கிறார்கள். அதில் ஒரே ஒருவர் தான் (J4 - என்பவர் தான்) இதற்கு ஓரளவுக்கு விதிவிலக்காக இருக்கிறார். பர்னாயில் இருக்கின்ற இந்த மனிதர்கள் முற்றிலும் அழிக்கப்பட வேண்டும் என்று மேலேயிருந்து

(இயற்கையிடமிருந்து) ஒரு கட்டளை வந்திருக்கிறது. இந்த வேலையை, நான் M1 - இடம் ஒப்படைக்கிறேன். ராம்சந்த்ரா இதைச் செய்வவற்கு கொஞ்சம் தயங்கலாம். இதனால் M1 - இடம் இந்த வேலையை ஒப்படைப்பதே மேலானது என்று கருதப்பட்டது. இந்த வேலையை M1 - தனது சுய விருப்பத்தின் படி ஆரம்பிக்கலாம். அவருக்கு அதுவே நிரந்தர வேலையாக இருக்கிறது.''

சுவாமி விவேகானந்தா :- உங்கள் மீதான தன் அன்பைப் பற்றி நமது பிரபு சொன்னதெல்லாம் முற்றிலும் உண்மை. உங்கள் மீதான அன்பினால் அவர் உருகிக் கொண்டிருக்கிறார். என் வாழ்க்கை முழுவதிலும் எங்கேயும் இம்மாதிரி ஒரு அன்பிற்கு உதாரணத்தைக் கண்டதில்லை. கடவுளைத் தேடி மக்கள் தங்கள் வீடுகளை விட்டுச் செல்வார்கள். அவர் தன் வீட்டினை (சக்தியின் உண்மையான சேமிப்புக்கிடங்கு) விட்டு வந்திருக்கிறார். முக்தி பெற்ற ஆன்மாக்களிடமிருந்து ஒருபோதும் எதிர்பார்க்காத மிகப்பெரிய தியாகம் அதுவாகும். இன்னும் சற்று அதிகமாக நான் வெளிப்படுத்திச் சொன்னால், இந்த விஷயத்தில் உலக சாதனைகள் அனைத்தையும் நீங்கள் முறியடித்திருக்கிறீர்கள் என்றே சொல்வேன். ராதையின் அன்பு ......

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- இதை எழுதவேண்டாம்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் :- சுவாமி விவேகானந்தா கூறியது மிகவும் சரியானதே, நேசிக்கும் விஷயத்தில் ராதாவையும் நீங்கள் முந்திவிட்டீர்கள் என்று எழுதுவதில் தவறு ஒன்றும் இல்லை. இதன் காரணங்களை உனது வணக்கத்திற்குரிய மாஸ்டர் ஏற்கனவே விளக்கமாக தனது குறிப்புகளில் தெரிவித்திருக்கிறார். உன் அன்பு வளர்ந்து கொண்டே இருக்கிறது என்பதை நீ அறியாமலிருக்கிறாய். சுவாமி விவேகானந்தா கீழ்க்கண்ட இந்த வாக்கியத்தைத் தான், உனக்கு எழுதுவதற்காகச் சொல்லிக் கொண்டிருந்தார் ''ராதையின் அன்பு கூட இப்போது உங்கள் அன்புக்கு அடுத்து இரண்டாம் இடத்தில் இருக்கிறது.'' அது அப்படித் தான் இருக்கிறது என்னும் போது அதை எழுதுவதில்

தவறு இல்லை என்று நான் அனுமதிக்கிறேன். சுவாமி விவேகானந்தா என்ன சொல்ல முற்பட்டாரோ அந்த ஆங்கில வாசகத்தை நானே உனக்கு எழுதிக் கொள்வதற்குச் சொல்கிறேன்.

‘‘தகுதியுடன் இருத்தல் - தகுதி பெற்ற தன்மை என்பது இரண்டு விதமானது. மிக உயர்ந்தது. (உத்தமம்) மற்றும் நடுத்தரமானது (மத்திமம்). தகுதி பெற்ற தன்மையின் தாழ்ந்த விதமும் (நீசம்) இருக்கிறது. அதில் சுயநலத் தன்மை இருக்கிறது. மிக உயர்ந்த தரமான தகுதி பெற்ற தன்மை, ஒருவரது அன்புக்குரியவரே (அவரால் நேசிக்கப்படுகிறவரே) இவரை (நேசிப்பவரை) நினைத்து அன்பினில் உருகும் போது வருகிறது. நடுத்தரமான தகுதி பெற்ற தன்மையில் நேசிப்பவர், நேசிக்கப்படுகிறவரை நினைத்து அன்பின் நெருப்பில் தன்னை உருக்கிக்கொள்கிறார். பொதுவாக காணப்படுகிற தாழ்ந்த தரமான அன்பைப் பற்றி சொல்வதற்கு ஒன்றுமில்லை. இந்த மூன்று விதங்களிலிருந்தும் விடுபட்டதாக இருக்கும் இன்னொரு விதமான தகுதி பெற்ற தன்மையும் இருக்கிறது. இம்மாதிரி தகுதி பெற்ற தன்மை (அனுத்தரம் / Anuotara) சில சமயங்களில், பல ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, அதுவும் இல்லை, பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, திடீரென்று உண்டாகிறது. அதற்கு ஈடு இணையே கிடையாது. அம்மாதிரி ஒரு தகுதி பெற்ற மனிதர் கடவுளின் கட்டளையால் பிறக்கிறார். நீ அதற்கு உதாரணமாக இருக்கிறாய். இந்தக் கருத்துக்கு நீ தெளிவான ஒரு விளக்கமாக இருக்கிறாய். தகுதி பெற்ற தன்மையில் மிகவும் கீழ் மட்டத்தில் இருப்பது வெறுக்கத்தக்கது (நிக்ரிஷ்டம் / Nikrishta) எனப்படுகிறது. அவர்கள் எந்த ஆன்மீக நன்மையும் பெறுவதில்லை. மிகவும் கீழ்த்தரமான முட்டாள் (மூடம்) தன்மை இங்கே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

சுவாமி விவேகானந்தா :- “மிகச் சிறந்த தகுதி பெற்ற தன்மை பற்றிய அதுவும் இல்லை, அதற்கும் மேம்பட்ட ஒன்றினைப் பற்றிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் விளக்கம் வேறு எங்கும்

கிடைக்காதது, அம்மாதிரி ஒரு மனிதரின் பிறப்பிலிருந்தே காணப்படும் உள் நிலை என்னவாக இருக்கும் என்பது நமது பிரபுவின் குறிப்புக்களில் போதுமான அளவுக்கு நிர்ணயித்துக் கூறப்பட்டுள்ளது. அதற்கு நீங்களே உதாரணமாக இருக்கிறீர்கள். அம்மாதிரி ஒரு தகுதியை உடைய மனிதர், பிறக்கும் போது, தனது மூல அம்சத்திலேயே புனிதராக, உங்கள் குருவைப்போல இருக்கும் ஆன்மாவுடன் இணைந்தவராக இருக்கின்றார்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- "இந்தக் காலம் இனி மிக நீண்ட காலத்திற்குத் திரும்பவும் வராது. இந்த விசேஷ காலகட்டத்துக்கு, 'மஜ்னூன் காட்டையே தன் வீடாக ஆக்கிக் கொண்டான். ஆனால் நான் என் வீட்டையே காடாக மாற்றிக்கொண்டேன்' என்ற பழமொழி பொருந்தும். அன்பின் கடைசி இலக்கு எங்கிருக்கிறது? அந்த மர்மம் எங்கே வெளிப்படுகிறதோ (வெளிப்படுத்தப் படுகிறதோ) அங்கே இருக்கிறது."

சுவாமி விவேகானந்தா :- நிலைமை முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறது.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் M1 - க்குக் கூறியது :- "R2 - வின் தாயாருடைய நோயை நீக்குவது சம்பந்தமாக, தன் குறிப்பின் படி இப்போது ராம்சந்த்ரா எவ்வளவு சிறந்த வழிமுறையைக் கண்டறிந்திருக்கிறார். அதாவது நோயுற்றிருக்கும் மனிதரின் ஸ்தூல உடம்பிலிருந்து சூட்சும உடம்பை (சூட்சும சரீரத்தை) தனியாகப் பிரித்து, நோயை அந்த சூட்சும சரீரத்திற்குச் செலுத்துவது அந்த வழிமுறையில் உள்ளடங்கியிருக்கிறது. நோயாளியை எவ்வளவு காலம் நோயிலிருந்து விடுபட்டு வைத்திருக்க விரும்பப் படுகிறதோ அதுவரையில், அவரது ஸ்தூல உடம்பினுள் சூட்சம சரீரம் புகுவதற்கு அனுமதிக்கக் கூடாது. அந்த நோய், தனியே பிரிக்கப்பட்ட சூட்சும சரீரத்திலேயே வைக்கப்பட்டு, அந்த நோயை சுத்திகரிப்பினால் நீக்கிய பிறகு மீண்டும் அந்த மனிதரின் ஸ்தூல சரீரத்துக்குள் நுழையச்செய்ய வேண்டும். இது யாருக்கு வேண்டுமானாலும் மீண்டும் மீண்டும்

செய்யக்கூடிய வழிமுறையல்ல. ஏதாவது விசேஷத் தேவை ஏற்பட்டால் மட்டுமே இதைப் பயன்படுத்தலாம். நீண்ட காலத்துக்கு இதை யாருக்காவது பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டால், அந்த சூட்சும சரீரத்தை ஒரு எண்ண வளையத்துக்குள் அடைத்து வைக்க வேண்டும். அந்த நோயாளிக்கு மீண்டும் அந்த நோயை திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றால் அந்த எண்ண வளையத்தை உடைத்து விடவேண்டும். அது சரி என்று அவர் கருதினால், தன் தாயின் விஷயத்தில் R2 - இந்த வழிமுறையைப் பயன்படுத்தலாம். நான் உடலை நீத்துச் செல்வதற்கு சில மாதங்களுக்கு முன்பு பிரியமான ராம்சந்த்ரா சிறிது காலம் என்னுடன் வந்து இருந்தபோது அவருக்கு இந்த வழிமுறையை நான் பயன்படுத்தினேன். அவருக்கு அப்போது உடல்நலம் குன்றியிருந்ததால், தொடர்ந்து பல இரவுகள் அவரிடம் நான் இந்த வழிமுறையைப் பயன்படுத்தினேன்.''

## 22-3-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- "இன்று காலை 10.20 மணிக்கு உன்னிடத்தில் ஒரு விசேஷ சக்தியை நன் உட்புகச் செய்தேன். அது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து உனக்குக் கிடைத்த பரிசு. அதை சிறிது காலம் நான் பாதுகாப்பாக வைத்திருந்தேன்."

சுவாமி விவேகானந்தா :- "உங்கள் குரு இன்று காலை உங்களுக்கு ஒரு சக்தியைக் கொடுத்திருக்கிறார். அது பகவான் ஸ்ரீகிருஷ்ணர் உங்களுக்காக, உங்களுக்காக மட்டுமே கொடுத்திருக்கும் ஒரு விசேஷ வரமாகும். இதனை உங்கள் வாழ்நாளில் வேறு ஒருவருக்கு மாற்றிக் கொடுக்க இயலாது. இப்போது நீங்கள் மிகவும் மாறிய மனிதராக இருக்கிறீர்கள். இந்த விதமான சக்தி அவதாரங்களுக்குத் தரப்படுவதாகும். அந்த ஒரு தகுதிச் சிறப்புடன் வருவார்கள் என்று யாருமே எதிர்பார்க்கப் படாததால், அதை யாருக்கும் மாற்றிக்கொடுக்காமல் இருக்கும் கடமை உங்களுக்கு இருக்கிறது. இன்று நீங்கள் யாருக்கும் பிராணாஹுதி அளிக்க வேண்டியதில்லை. வார்த்தைகளில்

செயல்களில் மற்றும் எண்ணங்களிலும் கூட மற்றவர்களின் நன்மை பற்றி மட்டுமே நினைப்பதற்கு கவனமாக இருங்கள். உங்களுக்காக மேலும் பல சக்திகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் மிக உயர்வான அதிகாரியாகிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் பரிசுகளாகும். படிப்படியாக இந்த சக்திகள் உங்களுக்கு அளிக்கப்படும். உங்களுடைய இப்போதைய பதவி சம்பந்தமான கருத்து என்னவெனில், மற்ற அனைத்து இயற்கை சக்திகளையும், செயலாற்றுபவர்களை உங்களின் கீழே பணிசெய்ய வைத்திருப்பதுதான். அவர்களுடைய கடிவாளங்கள் எப்போதும் உங்கள் கைகளில் தான் இருக்கவேண்டும்.

## 23-3-1945 (நேரம் பகல் 12.40 மணி)

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- நான் ஃபடேகரிலிருந்து வருகிறேன். நான் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்.

சுவாமி விவேகானந்தா :- ஃபடேகரில் இருக்கும் நிலைமை பற்றி நமது பிரபு சற்று பரபரப்புடன் இருக்கிறார். நமது குறிக்கோளை அடைவதற்கு நாங்கள் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். உங்கள் தாயைப் போன்றவரின் (வணக்கத்திற்குரிய லாலாஜி அவர்களின் மனைவி) காரணமாக என் வழியில் மிகப்பெரிய சிரமம் ஏற்பட்டுள்ளது. இங்கு அவர் மீது மிகவும் மதிப்பு இருக்கிறது. இங்கே பாருங்கள், நீங்கள் குழப்பம் அடைய வேண்டியதில்லை, கடைசியில் என் பாதையில் வருகின்ற தடைகளையெல்லாம், அது வேறு விதமாகப் போனாலும் கூட, விளைவைப் பற்றிக் கவலைப்படாமல், களைந்து எறிந்து விடுவேன். நமது பிரபுவின் பண்டாராவுக்கு சில நாட்கள் தான் இருக்கின்றன. உங்கள் தலைமையின் கீழ் வருவதற்கு அவர்களுக்கு இன்னும் நேரம் இருக்கிறது. அவருடைய (லாலாஜியின் மனைவியினுடைய) வீட்டில் சில மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களை மூடர்கள் என்றே நான் சொல்வேன், அவர்கள், அவருக்குத் தவறான வழிகாட்டிகள், இடையூறுக்குக் காரணமாகின்றனர். நமது மாஸ்டர், அவர்களுக்கு என்ன தீர்வை

உத்தேசித்திருக்கிறார்? உங்கள் சங்கத்தில் இப்படிச் சில தீய சக்திகள் இருக்கின்றன. அவை அழிக்கப்படத் தக்கவை. பண்டாராவுக்குப் பிறகு அதை நாம் கவனிப்போம்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் :- “உன் வணக்கத்திற்குரிய மாஸ்டர், உனக்கான என் வரங்களிலிருந்து ஒரு சக்தியை உனக்குள் கொடுத்திருக்கிறார். இந்தச் சமயத்தில் எண்ணற்ற சக்திகளின் ஒரு சங்கிலித் தொடர் நேரடியாக உங்களுக்காக வந்திறங்கியுள்ளன.”

சுவாமி விவேகானந்தா :- “இங்கே பாருங்கள். உங்களுக்காக அவற்றை இருப்பில் வைத்திருக்கிறோம்.”

<u>24-3-1945</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- ராம்சந்த்ராவுக்குக் கொடுப்பதற்கு இப்போது என்னிடம் மீதி என்ன இருக்கிறது?

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் :- (உனக்கு மேலும் மேலும் கொடுப்பதற்கு அவர் இன்னும் விரும்பிக் கொண்டிருக்கிறார் என்றாலும்) இப்போது உனக்குக் கொடுக்க தன்னிடம் ஏதும் இல்லையே என்று உங்கள் குரு நேரடியாக உங்களுக்காகவே பிரார்த்திக்கிறார். இப்போது எல்லாம்வல்ல இயற்கை அசைய ஆரம்பித்துள்ளது. அருளின் கடலில் அலை எழுகிறது. ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு விநாடியும் சக்திகள் இறங்கட்டும் என்று உத்திரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. இந்த சக்திகளையெல்லாம் ஒரு நிரந்தர அடிப்படையில் உள்ளடக்கி வைத்திருக்கும்படியாக உன் இதயத்தை அவர் கட்டமைத்து உருவாக்கிக் கொண்டே இருப்பார் என்ற வாக்குறுதியை உன் குரு நிறைவேற்றியிருக்கிறார். எனவே அதுவே (இயற்கையின்) கட்டளையாக இருக்கிறது. ஏனெனில் உன்னைப்போன்ற ஒருவர் நேசிப்பவராகவும், உனது மதிப்புக்குரிய வழிகாட்டி (குரு) பலனை அளிப்பவராகவும் இருப்பது காண்பதற்கு அரிதானது.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- பரமாத்மாவிடமிருந்து அருள் சக்தியின் வெள்ளம் இரவு 8.24 மணிக்கு வந்திறங்கத்

தொடங்கியிருக்கிறது. பரமாத்மாவிடமிருந்து இந்த வாக்குறுதி உன் ஆயுட்காலம் முழுவதும் இருக்கும்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் :- "உன்னுடைய மாஸ்டர் நேரடியாக பரமாத்மாவினால் உனக்கு தீட்சை பெறச் செய்திருப்பது, ஒரு மிகவும் புனிதமான ஒரு நாளேயாகும். பொதுவான வழக்கில் தீட்சை (பியாத் / Beaat அல்லது தீக்ஷா) என்று அறியப்படுவது உண்மையில் இதுவே. சிருஷ்டி தொடங்கிய காலத்திலிருந்து இந்த விதத்தில் தீட்சை அளிப்பதில் இதுவே முதல் உதாரணமாகும்."

ராதா அவர்கள் :- "இதுவரையில் உன்னுடன் என் உறவு தாய்க்கும் மகனுக்கும் உள்ளது போல இருந்தது. இப்போது என்னை உன் சகோதரியாகக் கருது. நானும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடன் திரும்பிச் செல்கிறேன்."

ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு :- "இப்போது உங்களிடமிருந்து வேலை வாங்கிக் கொள்வதற்கு போதுமான தைரியம் எனக்கு வரவில்லை. ஆனால் உங்கள் கருத்தை நீங்கள் பணிவோடு தெரிவித்த முறையினால், நான் உங்களிடம் வேலை வாங்கிக் கொள்வதில் தவறு இல்லை என்பதை உணர்ந்தேன்."

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- "மஹ்மூத் கஜ்நவி (கஜினி முகம்மது என்று புகழ் பெற்றவர்) மற்றும் ஆயாஸ் பற்றிய கதை மிகப் பொருத்தமாக இப்போது உன் மனதில் தோன்றியது. எனவே நானும் இந்தப் பாரசீக மொழியில் உள்ள ஈரடி (இரண்டு வரிச்) செய்யுளை கூறுவது பொருந்தும் என்று நினைத்தேன். "மன்னனாகிய மஹ்மூத் கஜ்நவி ஆயிரக்கணக்கான அடிமைகளுக்கு எஜமானனாக இருந்தான். ஆனால் வறுமையின் பிடியில் சிக்கியபின், அடிமைக்கும் அடிமை என்ற நிலைக்கு இறக்கப்பட்டான்.'' என்னுடைய நிலை இது தான்.

(குறிப்பு பக்கம் 159 Autobiography Part II Vol. 1 Page 159) dt. 14 Aug. 1944.

“நேரடி தீட்சை என் வழிமுறை :- இதற்கு முன்பு இது யாருடைய சிந்தனையிலும் தோன்றியதில்லை. எப்போதும் பயிற்சிக்கு அல்லது நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டதும் இல்லை.’’

சுவாமி விவேகானந்தா :- உங்கள் குருவைப்போல என் பங்கையும் நான் செய்ய விரும்புகிறேன். உங்கள் குருவோடு நான் நேரடித் தொடர்பில் இருக்கிறேன். யாருக்காவது தீட்சையளிப்பதற்கு உங்களுக்கு ஒரு வாய்ப்பு இருப்பதாகக் காணும் போது, அவருக்கு என்னுடனும் கூட இணைப்பை ஏற்படுத்துங்கள். ஆனால் இந்த வழிமுறையை நீங்கள் மட்டுமே பின்பற்ற வேண்டும்.

<u>25-3-1945</u>

வணக்கத்திற்குரிய மாஸ்டர் R2 - க்காகக் கூறியது :- “இப்போது பிரியமான ராம்சந்த்ரா ஒரு மிகச் சிறந்த அதிசயத்தை நிகழ்த்தினார், இது தான் குறித்த இலக்கைச் சரியாகத் தாக்குவது என்று சொல்லப்படுகிறது. சைதன்ய மஹாபிரபுவுக்கு இப்போது அவர் செய்தது, அந்தச் சமயத்தில் மிகச் சரியாக அது தேவைப்படாமல் இருந்திருந்தால், அதிகபட்ச கட்டுப்பாடற்ற செயலாக அனுபவத்தையும் கடவுள் ஆசீர்வதிப்பாராக”.

அவருடைய வழிகாட்டியுடன் S2 - இன் இணைப்பு நள்ளிரவு 12 மணிக்கு துண்டிக்கப்பட்டது மற்றும் அழிவுக்கான உத்திரவும் பிறப்பிக்கப்பட்டது.

சுவாமி விவேகானந்தா :- அவர் தான் (S2) இந்தத் தீமைகளுக்கெல்லாம் மூலகாரணம்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் R2 - க்காகக் கூறுவது தொடர்கிறது :- உங்களுக்கெல்லாம் ஒரு பாடத்தைச் சொல்வதற்கு இப்போது வந்திருக்கிறேன். மிகச் சரியாகப் பற்றிக் கொள்வது அல்லது புரிந்து கொள்வது என்பதற்கு ஒரு தெளிவான விளக்கம் (நடைமுறை விளக்கம்)

அளிக்கப்பட்டிருக்கிறது. (லாலாஜி சாகேப்பின் சீடர்கள் மற்றும் வாரிசுகள் அடங்கிய) சங்கத்தை சீர்திருத்துவதில் பங்கேற்பதற்கு பிரியமுள்ள ராம்சந்த்ராவுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. அதை பழமையான முனிவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் எடுத்துக் கொண்டிருந்தார்கள். அது ஒவ்வொரு சீடரும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டிய ஒரு விஷயமாகும். ஆனால் ராம்சந்தரா அது பற்றி என்னுடைய நிரந்தரமான உத்தரவு இருந்தாலும், அதை மீறி தன் தாயைப் போன்றவரின் சிந்தனையில் (லாலாஜியின் மனைவியின் எண்ணத்தில்) ஒரு தூண்டுதலைக் கொடுத்தார். இம்மாதிரி ஒரு காரியத்தைச் செய்ய யாரும் துணிந்திருக்க மாட்டார்கள். இதில் நான் குறிப்பாகச் சொல்ல வந்த கருத்து என்ன? அவருடைய தாயைப் போன்றவர் சம்மந்தமான விசேஷமான அந்த வேலையில் ராம்சந்த்ராவின் துணையை (உதவியை), என்னையறியாமலே நான் விரும்பியிருந்தேன். நான் இதனால் உங்களுக்குத் தெரிவிக்க வந்தது என்னவெனில் என்னையறியாமல் ஆழ்மனதில் இருந்த என் விருப்பத்துக்கு ஏற்றவாறு மிகச் சரியாக அது அவருடைய இதயத்தில் தோன்றிவிட்டது. இதுவே முழு நிறைவு பெற்ற ஒன்றுபட்ட தன்மை என்று அறியப்படுகிறது.''

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் :- உன்னுடைய வணக்கத்திற்குரிய மாஸ்டர் உன்னைப் பற்றிக் கூறியது மிகச் சரியானது. நீ அதில் ஒரு தவறு செய்திருந்தாலும், குருவின் நிலையான உத்தரவுக்கு எதிராக நடந்து கொண்டதற்கு உனக்கு நான் தண்டனை விதித்திருப்பேன். ஆனால் உன் எண்ணம் மிகச் சரியான புள்ளியைத் தொட்டது. அதுவே உன் வணக்கத்திற்குரிய மாஸ்டரின் குறிப்பான விருப்பமாக இருந்தது. இதனால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருக்கிறேன். உண்மையில் அவர் ஏற்கனவே உன்னை சோதித்துவிட்டார். இது உனது முழுமையான ஒன்றுபட்ட தன்மைக்கு என் சோதனையாக இருந்தது. நீயும் இதில் வெற்றிகரமாகத் தேர்ச்சி பெற்று வந்துவிட்டாய். இதனால், உனக்கு ஒரு பரிசும் இதோ இங்கே இருக்கிறது.

சுவாமி விவேகானந்தா :- பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து உங்களுக்காக அந்தப் பரிசை நாங்கள் பெற்றுக்கொண்டோம்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தொடர்ந்து கூறியது :- இந்தச் சமயத்தில் உன் தாயைப் போன்றவரின் மீது நீங்கள் கவனம் செலுத்தாமல் இருந்திருந்தால், அதே தண்டனை அதாவது உனக்கு அழிவு என்பதும் உனக்காக தயாராக வைக்கப்பட்டிருந்திருக்கும். அந்த சோதனையைக் கடந்து வருவதில் நீ வெற்றியடையாவிட்டால் உன் மாஸ்டர் உனக்கென முன்பே நிர்ணயித்திருந்தது அதுவே. உன்னுடைய தனிச்சிறப்புகள் என்னுடையது போலவே துதிப் பாடல்களுக்கும், போற்றும் கீதங்களுக்கும் உரியதான விஷயமாகட்டும்.

வணக்கத்திற்குரிய ராதா அவர்கள் :- வேறு யாரும் இந்த அளவுக்கு அதற்கு ஆளாயிராதபடி (அனுபவிக்க வேண்டியிராதபடி) அவ்வளவு கடுமையான சோதனைகளை நீங்கள் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அதற்கான பரிசும் கூட இதுவரை வேறு யாரும் ஒருபோதும் அடைந்திராத அளவுக்கு இருக்கிறது. என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது பற்றிய உணர்வு இல்லாமல் நீங்கள் இருக்கிறீர்கள். (அல்லது .... உணர்வு உங்களுக்கு இல்லை), நானும் கூட உங்களை ஒரு சோதனை செய்தேன்.

சுவாமி விவேகானந்தா :- ராதா அவர்கள் இப்போது உங்களை சோதித்தார். அதிலும் நீங்கள் வெற்றிகரமாக வெளிவந்தீர்கள்.

ராதா அவர்கள் :- என் சகோதரா, நான் உங்களை சோதனை செய்தேன். நீங்கள் அதில் தோல்வியடைந்தால் உங்களுடைய இப்போதைய பதவியிலிருந்து நீங்கள் கீழே இறக்கப்படவேண்டும் என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு பரிந்துரை செய்ய நான் நினைத்திருந்தேன். இப்போது இந்த சோதனையில் வெற்றியடைந்ததற்குப் பரிசாக உங்கள் பதவி இன்னும் மேலே உயர்த்தப்பட்டுள்ளது. இப்போது இனிமேலும் உங்களுக்கு சோதனையோ, வேறுவித பரீட்சையோ இருக்காது.

ஒவ்வொரு வேலையிலும், உங்களுக்கு நான் உதவி செய்து கொண்டிருப்பேன் என்பதில் உறுதியுடன் இருங்கள்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் R2 - க்காகக் கூறியது :- மதிப்புயர்ந்த ராதா அவர்கள் ராம்சந்த்ராவுக்கு வைத்த சோதனை மிக விசித்திரமான தன்மை உடையது, அது எந்த ஒருவருடைய சிந்தனைக்கும் மிக அரிதாகவே எட்டியிருக்கும். அவர் மீது ராதா அவர்கள் ஏற்படுத்திய சோதனைக்கு அவர் என்ன பதில் சொல்வார் என்று பார்ப்பதற்காகவே அது செய்யப்பட்டது. அந்த அம்மையார் விரும்பியது போல வார்த்தைக்கு வார்த்தை மிகச் சரியாக அதற்கு பதில் வந்தது. அந்த பதில் இது தான். ‘‘நீங்கள் என்னை உங்கள் சகோதரனாக நியமித்திருப்பதால் (ஏற்றுக்கொண்டிருப்பதால்) உங்கள் சோதனையில் நான் வெற்றி பெறத் தவறினால், உங்கள் சகோதரர் இந்த சோதனையைத் தாண்டிவரத் தவறிவிட்டார் என்று மற்றவர்களிடம் நீங்கள் சொல்வதற்கு நன்றாக இருக்குமா?” இன்றுவரை ராம்சந்த்ராவுக்கு வைக்கப்பட்ட எல்லா சோதனைகளிலும் இதுவே மிகக் கடுமையான சோதனை.

சுவாமி விவேகானந்தா :- உங்கள் பணிவான பிரார்த்தனையினால், இப்போது உங்கள் குரு, இனி யாரும் வருங்காலத்தில் உங்களைப் பரீட்சை செய்யக்கூடாது என்று பொதுவான கட்டளை இட்டிருக்கிறார், அமைதியாக இருங்கள்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் R2 - க்காகச் சொன்னது :- பிரியமான ராம்சந்த்ராவுக்கு அதில் முழு ஆளுமை அளிக்காமல் எதையும் நான் நிறுத்தி வைத்துக் கொள்ளவில்லை. அவருடைய பணிவான பிரார்த்தனையை என்னிடம் அவர் சமர்ப்பித்த விதமானது சாதாரண அறிவுத்திறனால் வருகின்ற ஒரு விஷயம் அல்ல. பணிவின் அந்தப் பாணி எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதற்கு ஒரு பரிசாகத்தான் யாரும் இனிமேலும் அவரை எந்த சோதனைக்கும் ஆளாக்கக் கூடாது என்று தடை செய்து ஒரு அறிவிப்பை வெளியிட்டேன். அவருடைய பிரார்த்தனையை நான் பரமாத்மாவுக்குத் தெரிவித்தேன். அந்தப் பிரார்த்தனையின்

சரியான வார்த்தைகள் இவை தான். ‘‘என்ன தான் இருந்தாலும், நான் ஒரு மனிதன். (என் செயல்களில்) எந்தப் படியிலும், மற்றும் ஒவ்வொரு படியிலும் தவறுகள் ஏற்படலாம். என் பிரபுவாகிய உங்கள் கனிவான அருளினால் தான் சோதனைகளின் ஊடே இந்த அளவுக்கு இவ்வளவு தூரம் வெற்றிகரமாக வந்துகொண்டிருந்தேன். இப்போது சோதனைகளைப் பற்றி நினைத்தாலே என் இதயம் நடுங்குகிறது. சோதனைகளைக் கடந்து வரும் வலிமை எனக்கு இல்லை. ஒரு வேளை - அப்படி நேராமல் கடவுள் தவிர்ப்பாராக - அப்படி ஏதாவது ஒரு சோதனையில் நான் தோற்றுவிட்டால் - இனிமேல் நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை’’.

சுவாமி விவேகானந்தா :- இப்போது தான் உங்களைப் பற்றி மகாத்மா கௌதம புத்தருடன் பேசினேன். இதில் சிரமமான விஷயம் என்னவென்றால், புத்தரின் மதம் இந்தியாவில் கிட்டத்தட்ட இல்லாமல் போயிருக்கிறது. இந்த வினாடியிலிருந்து எல்லா மதங்களும் அதாவது அவற்றிலுள்ள ஆன்மீக வித்துக்களும் உங்களுக்குள் ஈர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். ஆன்மீகத்துக்கு இந்த வகையில் நீங்கள் செய்துவரும் சேவை என் மனதில் மற்றும் மதிப்புக்குரிய மூத்தவர்களிடத்தில் ஆழ்ந்த பதிவை நல்லெண்ணத்தை உண்டாக்குகிறது.

‘‘இதோ ஒரு மகிழ்ச்சியான செய்தி! பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பண்டாராவின் மூன்று நாட்களின் போது ஒளியுலகை விட்டு இங்கு வருகிறார். அந்தச் சமயத்தில் நீங்கள் மிகவும் விழிப்போடு இருக்க வேண்டும். இவ்வுலகின் ஆன்மீக சரித்திரத்தில் இப்படி முதன் முறையாக நிகழ்கிறது. ராதா அம்மையார் அவர்களும் அவருடன் வருகிறார். இதற்கும் மேல், இயற்கையே, அதாவது கடவுளே உங்களுக்கு உதவி செய்கிறார்.’’

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- நீ என் பெயரை உண்மையாகவே உயிரோடு விளங்கச் செய்திருக்கிறாய். இந்த சோதனைகளைக் கடந்து வெற்றிகரமாக யாராலும் வந்திருக்க

முடியாது, என்னுடன் நீ இப்படி முழுமையாக ஒன்றுபட்ட தன்மை அடைந்திருப்பது வணக்கத்திற்குரிய மூத்த முனிவர்களிடையே மிகப்பெரிய மெச்சுதலைப் பெற்ற விஷயமாக இருக்கிறது. அது ஏன் அப்படி இருக்க முடியாமல் போகும்? (அது எப்படி அம்மாதிரி இல்லாமல் போகும்?) உன் உடம்பின் ஒவ்வொரு வேர்க்காலிலும் நான் இருக்கிறேன். இங்கே பார் R2, இரவு 9.50 மணிக்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கொடுத்த பரிசுகளிலிருந்து மேலும் ஒரு சக்தியை அவருக்குள் செலுத்தியிருக்கிறேன்.

சுவாமி விவேகானந்தா :- உங்களுக்கு **‘உலகை உருவாக்குகிறவர்’** என்ற பதவி உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து இப்போது எனக்குக் கிடைத்திருக்கிறது. இங்கே பாருங்கள், அது ஒரு சாதாரண பதவியல்ல. உங்கள் குரு அதைப் பற்றி விளக்கம் சொல்வார். இந்த உலகில் வாழும் யாருமே ஒருபோதும் அதைப் பெற முடியாது. அந்தச் சோதனைகளிலிருந்து வெற்றிகரமாக நீங்கள் தேர்ச்சி பெற்று வந்ததற்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து உங்களுக்குக் கிடைத்த பரிசு அது. அவர் வைத்த பரீட்சையில் தேர்ச்சியடைவதற்காக ராதா அம்மையார் வெகுதூரம் சென்றிருக்கிறார். அதாவது இப்போது, பிரபஞ்ச சிருஷ்டி துவங்கிய போது முதலில் பிறப்பிக்கப்பட்ட சக்திகள் நேரடியாக உங்களின் கீழ் வேலை செய்யும். அதாவது பிரம்மா (படைப்புக் கடவுள்) விஷ்ணு (காக்கும் கடவுள்) மற்றும் மஹேஸ்வரன் (அழிக்கும் கடவுள்) ஆகியோரைச் சொல்கிறேன். பௌதீக உடலில் உங்கள் வாழ்க்கைக்குப் பிறகும் இதே கடமையை நீங்கள் செய்வீர்கள். மேலும் ஒரு பரிசும் ராதா அவர்களிடமிருந்து உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதாவது உடலை நீத்துச் சென்ற பிறகு, இடை நிலைகள் எதற்கும் காத்திராமல் நேரடியாக பரமாத்மாவிடம் அதாவது நீங்கள் சொல்வது போல மேலான சுயத்திடம் செல்வீர்கள். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும், ராதா அவர்களும் உங்களுக்காக சாத்தியமில்லாத ஒன்றை சாத்தியமாக்கியிருக்கிறார்கள். உடலை நீத்த பிறகு நேரடியாக

அங்கு செல்வதற்காக உங்கள் பாதை சுலபமாக்கப்பட்டுள்ளது. உங்கள் குரு தன் குறிப்புக்களில் எங்கேயோ சொல்லியிருப்பது போல உங்களுடைய காரண சரீரம் ஏற்கனவே உடைக்கப்பட்டுள்ளது. உண்மையில் உங்களால் இப்போது அனுபவிக்கப்படுகின்ற இப்போதைய நிலைக்கு உங்கள் குருவினால் அமைக்கப்பட்ட அடித்தளம் அதுதான்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- பிரியமான ராம்சந்த்ரா, உனக்காக என்னவெல்லாம் வரக் காத்திருக்கின்றன (இருப்பில் வைக்கப்பட்டுள்ளன) என்ற இந்த விஷயங்களெல்லாம் என் ஆயுட்காலத்திலேயே நான் அறிந்து கொண்டேன். மற்றும் அதே போல இனிமேலும் என்ன வரும் என்பதும் எனக்குத் தெரியும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் :- உன்னுடைய வழிகாட்டியை கைவிடாதிருக்கும் உனது இந்தப் பண்பாடு குறித்து நான் பெருமளவு மகிழ்ச்சியடைந்திருக்கிறேன். இது ஒரு தவறல்ல. ஆனால் ஒரு விதமான சோதனையும் அல்ல. உனது மனத் தூண்டுதல்களுக்கு ஒரு பரீட்சையாக அது தானாகவே அமைந்திருக்கிறது. இந்த விஷயம் தான் என்னை மிகவும் மகிழ்விக்கிறது. குருவின் மதிப்பை யாராயினும் உன்னிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். உண்மையாகவே நேசிப்பவராகிய ஒருவர், தன் பார்வையில் (உள்ளத்தில்) நேசிக்கப்படுகிறவரைத் தவிர வேறு யாரையும் வைப்பதில்லை. உண்மையாக நேசிக்கும் அவருக்கு நேசிக்கப்படுகிற ஒருவர் மட்டுமே அனைத்துமாக இருக்கிறார் என்பதும் மிகவும் சரியானது. இதற்கு உதாரணமாக இருப்பவரைக் காண்பது அரிது. சரியாகச் சொன்னால் (உன்னைப் போல) அம்மாதிரி ஒரு உதாரணத்தை வேறு எங்கும் காணமுடியாது என்பதைச் சொல்லியாக வேண்டும்.

இந்த உரையாடலில் என் பங்கு - என் கருத்து - இதுவாக இருந்தது: “எனக்காக மிக உயர்ந்த பரிசு என் வணக்கத்திற்குரிய மாஸ்டர் என்னுடன் இருக்கிறார் என்பதாகவே இருக்கிறது. என்னுடைய காட்சியில் (பார்வையில்) அவரைப் பெற்றிருப்பதே எனது நல்லதிர்ஷ்டமாகும். நான் இன்னும் விரும்பி ஏங்குவதற்கு

என்ன இருக்கிறது? ‘அன்பின் வேதனையில் தவித்துக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு நேசிக்கப்படுகிறவரைக் (நாயகரைக்) காண்பதைத் தவிர வேறு மருந்து கிடையாது.’ (ஹஃபீஸ் / Hafiz) என்பவரின் பாரசீக மொழியிலுள்ள இருவரிக் கவிதையின் ஒருபாதி.)

26-3-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அளித்த பரிசுகளில் மேலும் ஒரு சக்தி காலை 10.20 மணிக்கு உனக்குள் புகுத்தப்பட்டது.

சுவாமி விவேகானந்தா :- ஃபடேகரில் நிலையை தீவிரமான ஒரு திருப்பத்தை எட்டியிருக்கிறது (அடைந்திருக்கிறது). தற்காலிகமாக, அவர்களை அழிக்கும் எண்ணத்தைத் தவிர்த்துக் கொண்டிருக்கிறோம். என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய ஒரு சிக்கலில் நான் இருக்கிறேன். மிகவும் பிடிவாதமான மனிதர்கள் இங்கே வந்து சேர்ந்து நமது பிரபுவின் வேலையைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது அவர்களுக்கான இறுதித் தீர்ப்பைப் பற்றிய தீர்க்க தரிசனத்தை அது உருவாக்குகிறது. (அவர்களுக்கான கடும் தண்டனை பற்றி அது முன்னறிவிப்பு தருகிறது). இந்த வேலைக்காகவே எங்களில் பலர், மேல் உலகை விட்டு வந்திருக்கிறோம்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- தன்னை பலவீனமானவனாகக் கருதுவது - இதுவே அதிகபட்ச பலவீனம் தரும் ஒரு விஷயமாகும்.

சுவாமி விவேகானந்தா :- நமது வேலைக்காக ஒரு சக்தி நேரடியாக எங்களை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. நீங்கள் சமர்ப்பித்த ஆலோசனையை பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு நான் தெரிவித்தேன். இந்த யோசனை விரும்பத்தக்க விதத்தில் நல்லதாக இருக்கிறது. நீங்களும் உங்கள் உதவியாளர்களும், முழு சக்திகளோடு பண்டாராவுக்குப் போகிறீர்கள். மேலும் அதிகமான சக்தி தேவைப்பட்டால், எந்த நேரத்திலும் நீங்கள் அதைக் கேட்டுப்

பெறலாம். உங்கள் உபயோகத்துக்காக உடனே அதை நாங்கள் கிடைக்கச்செய்வோம். உங்களிடமும் உங்கள் உதவியாளர்களிடமும் எந்த பலவீனமும் உள்ளே நுழைவதற்கு அனுமதிக்க வேண்டாம். அந்த சக்தி இப்போது வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறது. (மாலை 4.45 மணி)

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- நான் தயாரித்த வரைபடங்கள் அனைத்தையும் B1 - எடுத்துச் சென்றுவிட்டார். அவருடைய கட்டளை பற்றி சுவாமி விவேகானந்தாவுக்கு நீ சமர்ப்பித்த ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. சக்தி வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறது. அந்த மனிதர்கள் இப்போது அழிவின் வட்டத்திற்குள் இருக்கிறார்கள். பண்டாராவுக்கு எதிர்ப்பாக இருப்பவர்களை, அழிப்பதற்கு எடுத்துக் கொள்ளலாம் என்பதைச் செயல் படுத்தவே அந்த ஆலோசனை கூறப்பட்டது. எல்லாச் சூழ்நிலைகளிலும் உன் தாயைப் போன்றவளை (லாலாஜியின் மனைவி) அழிக்காமல் தவிர்க்க வேண்டும் என்று நீ அவளுக்காகப் பரிந்துரை செய்திருக்கிறாய். அது சரியானதாக மற்றும் நன்மை விளைவிப்பதாக இருந்தால் மட்டுமே இந்த ஆலோசனையை (அழிப்பதை) செயல் படுத்த வேண்டும் என்று ஒரு விதிமுறையை நீ நிச்சயமாக அதில் சேர்த்திருக்கிறாய். எனவே இதுவரையில் அழிவின் வட்டத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டிருப்பவர்கள் R7 - மற்றும் M10 - ஆகிய இருவர் தான். (R7 - சம்மந்தப்பட்ட உத்தரவு 3-4-1945 அன்று இரவு 7 மணிக்கு ரத்து செய்யப்பட்டது.) அவர்களுக்கு எதிரான நடவடிக்கை பரமாத்மாவிடமிருந்தே நேரடியாக துவக்கப்பட்டுள்ளது. இந்த மனிதர்களின் அழிவுக்காக நீங்கள் யாரும் வேலை செய்ய வேண்டியதில்லை. இந்த மனிதர்களை அழிப்பதை முடித்தபிறகே இந்த சக்தி திரும்பி வரும். ஏற்கனவே துவங்கி விட்ட இந்த நடவடிக்கையின் வரம்புக்குள் மேலும் சிலரும் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த இரண்டு மனிதர்களின் ஆன்மீக இணைப்பை நானே துண்டித்து விட்டேன். இது சம்பந்தமாக நீ எதுவும் செய்ய வேண்டியதில்லை. வருடாந்திர விழா சமயத்தில் யாரை அழிக்க வேண்டியது

அவசியம் என்று நீ கருதுகிறாயோ அது யாராயினும் சரி. அதைக் குறிப்பிட்டுச் சொல்லும் உரிமையை உனக்கு நான் அளிக்கிறேன் அல்லது அந்த சக்திக்கு நேரடியாகவும் இது பற்றித் தெரிவிக்கலாம். ஆயினும் வேறு (யாராவது) ஒருவரின் அறிவுரையின் படி செயல் படாமல் இருக்க வேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள். எனது விசேஷமான மனிதர்கள், M1, II அதாவது லல்லு மற்றும் R2 உள்பட யாரிடமிருந்தாவது (பிரச்னை) தொந்தரவு ஏற்படுவதை உணர்ந்தால் அவர்களும் பிரார்த்தனை மூலமாக என்னிடம் அது பற்றிச் சொல்லலாம். ஆனால் இந்த ஆயுதத்தை அடுத்தடுத்து விரைவில் பயன்படுத்தக் கூடாது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறுவது தொடர்கிறது :- தன்னுடைய பாவங்களை N1 - நினைத்துப் பார்க்கும்படி செய்யும் வகையில் ஒரு கடுமையான தண்டனையை N1 - க்கு நான் கொடுத்திருக்கிறேன். அதாவது தன் மூளையுடன் – அதன் நுண்ணுணர்வு உடைய பகுதியுடன் அவர் நரகத்துக்குப் போவார் என்பதே அந்த தண்டனை. (அவரால்) என் சத்சங்கத்தில் எவ்வளவு குழப்பம் உண்டாக்கப்பட்டிருக்கிறது, என் தியாகங்களுக்கு இப்படி ஒரு விதி ஏற்பட்டிருக்க வேண்டியதில்லை.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் பிறகு கூறிய விளக்கம்:- “மகாபரிஷத் (கவுஸ் – உல் – ஆஸம் / Ghous – ul - Aazam) என்ற நிலை (ஆன்மீக உயர் நிலை) வரையில் ஒரு சாதகருக்கு வீழ்ச்சி ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு, ஆனால் பொதுவாக இப்படி நிகழ முடியாது. (அந்த நிலையில் இருந்தாலும்) அந்த ஆன்மீகப் பதவியை பறித்துக் கொள்வதும் கூட செய்யப்பட முடியும். ஆயினும் கவுஸ் – உல் – ஆஸாம் (Ghous – ul - Aazam) என்ற பதவியைக் கடந்து மேலே இருப்பவர் மட்டுமே இதைச் செய்ய முடியும். அதிலும் அந்த நிலையிலும் அவர் போதுமான அளவுக்கு நீந்திச் சென்று பரமாத்மாவுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டவராக இருக்க வேண்டும். இந்த நிலையை

எய்தியிருக்கிற (தனதாக்கிக் கொண்டிருக்கின்ற) ஒருவரிடமிருந்து அவரது ஆன்மீக நிலையை பறிப்பதற்கு முயற்சி செய்கின்ற ஒருவர் தான், தன் நிலையிலிருந்து கீழே இறங்கிவிடுவார். இது எப்படியென்றால் அந்த மகாபுருஷரின் ஆன்மீக நிலையைப் பறிக்க முயற்சிக்கின்ற ஒருவர், அந்த மகாபுருஷரிடமிருந்து இதை விரும்புவதற்கான ஒரு அறிகுறி இல்லாமலே - அதாவது அவரையறியாமலே - தன்னுடைய சொந்த உயர் நிலையை இழந்தாக வேண்டியிருக்கிறது மற்றும் அவரது சொந்த உயர் நிலையும் தானாகவே அந்த மகாபுருஷரின் ஆன்மீக நிலைக்குள் சேர்க்கப்படுகிறது. (சற்று இடைவெளி) இந்த வேலைக்காகவே பரமாத்மாவிடமிருந்து வந்திறங்கியுள்ள அழிவு சக்தியிடம் S2 – ஐ, இரவு 7.10 மணிக்கு ஒப்படைத்து விட்டேன். இப்போது உன் சூட்சும சரீரத்தை அங்கிருந்து திரும்ப எடுத்துக்கொள். இந்த விவகாரத்தை நீ தொடவேண்டிய தேவையில்லை. (சற்று இடைவெளி) A1, N1 மற்றும் M3 ஆகியோரும் இரவு 7.20 மணிக்கு அதே சக்தியிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். மற்றவர்களை பண்டாராவுக்குப் பிறகு கவனித்துக் கொள்ளலாம். இப்போது நீங்கள் யாவரும் இந்த வேலையிலிருந்து, சுத்தமான கைகளுடன் ஒதுங்கி நில்லுங்கள். ''

சுவாமி விவேகானந்தா :- உங்கள் அனைவருக்கும் நமது பிரபு செய்து காட்டியிருப்பதைப் போல அன்பிற்கு உதாரணத்தை நான் எங்கும் காணவில்லை. அவர் கூறப்பட்ட மனிதர்களின் அழிவு அவர்களுக்கு மிகக் குறைந்த வலியுடன், அல்லது வலியே இல்லாமல் இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். சில மனிதர்களை அழிப்பதற்காக அந்த சக்தி வந்திறங்கிய போது, அவர்களின் இதயங்கள் எரியத்துவங்கின, தனது மரண காலத்தில் ஒரு மனிதருக்கு வருகின்ற சிரமத்தைத் தவிர்ப்பதற்காக (அப்படி அவர்கள் இதயம் எரிந்த போது) நமது பிரபு, அவர்கள் மீது தண்ணீரின் குளிர்ச்சியைத் தெளித்தார். குறுகிய இடைவெளிகளில் அவர் அதே வழிமுறையை மறுபடியும் செய்து கொண்டிருக்கிறார். R2 - ன் சில உடல் உபாதைகளுக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர், ஒரு மருத்துவக் குறிப்பை பரிந்துரைத்தார். அது மற்றவர்களுக்கும்

அல்லது மற்ற நோய்களுக்கும் விசேஷத் தேவைகளுக்குப் பொருந்தும்படி அதற்குத் தக்க மாறுதல்களுடன் பயன்படுத்தக் கூடாது.

சுவாமி விவேகானந்தா :- மேலும் சில மனிதர்களும் விரைவாக அழிவின் கீழ் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பெயர்களை நான் உங்களுக்குப் பிறகு தெரிவிக்கிறேன். நமது பிரபு பெயரிட்டுச் சொல்ல விரும்பாத ஒருவரை (C1) நான் அழிவின் கீழ் கொண்டு வந்தேன். அந்த வேலை துவங்கிவிட்டது. இன்னொருவரை (S1) தற்போதைக்கு நான் அழிவிலிருந்து விலக்கி வைத்திருக்கிறேன். இப்போது பரமாத்மாவிடமிருந்து இந்த அதிர்வு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இது பற்றிய ஒரு உத்தரவு விரைவில் வரும். இதோ பாருங்கள், N1- உடைய அனைத்து சீடர்களும் (எதைப் பற்றியும் அளவிடாமல்) அழிக்கப்படவேண்டும் என்ற உத்திரவு வந்திருக்கிறது. அவரிடம் நம்பிக்கையில்லாதிருக்கும் அந்த மனிதர்களை நான் விட்டுவிடுகிறேன். இதோ அடுத்த உத்தரவு ‘‘C1 - உடன் தொடர்புடைய மனிதர்கள் அனைவருக்கும் இந்த பண்டாராவில் முதலில் ஒரு எச்சரிக்கை கொடுக்கப்பட வேண்டும். இந்த எச்சரிக்கைக்குப் பணியாவிட்டால், அதே விதியை அவர்களும் சந்திப்பார்கள். (இரவு 9மணி 9 நிமிடம்) உங்கள் தலைமையின் கீழ் அவர்கள் வருவதற்காக நாங்கள் நீண்ட நாட்களாக காத்திருந்தோம். இந்த உத்திரவுகள் வந்தபோது வணக்கத்திற்குரிய மாஸ்டர் இங்கிருக்கும்படி நேர்ந்தது. ‘‘மிகப்பெரிய அழிவு வந்து கொண்டிருக்கிறது.’’ என்று உறுதியாகச் சொல்லிவிட்டு உடனே சென்றுவிட்டார்.

சுவாமிவிவேகானந்தா தெரிவித்த தகவல் :- இரவு 9.14 மணி) ‘‘நமது பிரபு அந்த உத்தரவுகளை சற்று திருத்தச் செய்திருக்கிறார். அதாவது N1 - உடைய சீடர்களுக்கு முதலில் எச்சரிக்கையளிக்க வேண்டும். அதற்கு (வேறு வழி இல்லையென்றால்) கடைசி தீர்வாகத் தான், ஏற்கனவே அதற்காக உத்தரவுகள் பெறப்பட்டுள்ளவாறு அவர்களை அழிவுக்கு

விடவேண்டும் என்ற அளவுக்கு அதை மாற்றி வைத்திருக்கிறார். பரமாத்மாவே இந்த அழிவு செயல் படுத்தப்படுவதை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். இப்போது நீங்கள் தான் நிர்வகிக்கும் அதிகாரியாக இருக்கிறீர்கள். நான் உங்களுக்கு ஒரே ஒரு அறிவுரை தர வேண்டியிருக்கிறது. 'மற்றவர்கள் சொல்வதை அல்ல, நீங்கள் என்ன செய்ய நினைக்கிறீர்களோ அதைச் செய்யுங்கள்.' யாருடைய அழிவையாவது அல்லது வேறு எதையாவது செய்ய விரும்பும் உங்களுடைய எண்ணமே, அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பரமாத்மாவின் சக்தியையே கீழே இறங்கி வரும் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன். அதே தான் இங்கு நடந்து கொண்டிருக்கிறது. நீங்கள் செய்ய நினைப்பது அல்லது செய்ய விரும்புவது எதுவானாலும், அது எங்களையும் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் (நாங்கள் அதைச் செய்ய வேண்டியவர்களாக இருப்போம்) என்று நான் மீண்டும் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். இங்கே பாருங்கள், நீங்கள் தான் நிர்வகிக்கும் முகமையாக இருக்கிறீர்கள். நமது பிரபுவின் நோக்கங்களை, (அவர் செய்ய விரும்புகின்றவைகளை) நீங்கள் அப்படியே பின்பற்ற வேண்டும் என்று உங்கள் குருவிடம் இப்போது பிரார்த்தனை செய்தீர்கள். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்தே இதோ அதற்கான பதில் வருகிறது, சற்று காத்திருங்கள்.''

வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் :- உன் பிரார்த்தனைக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. வருங்காலத்திலும் இப்படித் தான் நடக்கும்.

சுவாமி விவேகானந்தா :- உங்கள் இப்போதைய உயர் நிலையின் ரகசியத்தைச் சொல்கிறேன். பிரார்த்தனை முறையிலோ, வேறு எந்த முறையிலோ, எந்த விதத்தலும் நீங்கள் சொல்வது எதுவாயினும் எல்லாம் வல்ல கடவுள் அதை ஒப்புக்கொள்வார்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் R2 - க்காக கூறியது :- ''பிரியமான ரரம்சந்த்ராவின் அறிவுத்திறமையும்,

புரிந்துகொள்ளும் தன்மையையும் எந்த அளவுக்குப் பாராட்டுவது? நான் எப்படி விரும்பினேனோ அப்படியே சரியாக ஒரு பிரார்த்தனையை அவர் செய்திருக்கிறார்.''

சுவாமி விவேகானந்தா :- உங்கள் பிரார்த்தனை மேலே உச்சத்தைச் சென்றடைந்திருக்கிறது. அதற்கான பதில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து நேரடியாக வருகின்றது.

வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் :- உன்னுடைய இந்த பிரார்த்தனைக்கும் பயன் அளிக்கப்பட்டுள்ளது. உன் வணக்கத்திற்குரிய மாஸ்டருடன் உனது ஒன்றுபட்ட தன்மை, இது வரையில் இருந்தது போலவே, வருங்காலத்திலும் ஒருபோதும் துண்டிக்கப் படாமலிருக்க வேண்டும் என்பதே அந்தப் பிரார்த்தனை.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- இப்போது என் இதயம் ஆனந்தத்தில் துள்ளுகிறது, ராம்சந்த்ராவுக்கு அடுத்து இப்பதவிக்கு வருகிறவர்களும் என்னைப் போலவே அவருடைய பெயரையும் அழியாமல் நிலைக்கச் செய்வதற்கு கடவுள் ஆணையிடுவாராக. மேலும் அவரது சிறப்புத் தகுதிகள் எந்நாளும் துதிப்பாடல்களில் நினைவு கூறப்படுவதாக. இந்த உலகம் உள்ளவரையில் அவருடைய பெயர் பூரணசந்திரன் போல ஒளிவீசட்டும். அவரது வம்சம் நன்றாக இருக்கட்டும். அவருடைய இப்போதைய வம்சத்தினருக்காக, அவர்களின் ஆன்மீக மற்றும் உலகியல் வளத்திற்காக, நான் பிரார்த்திக்கிறேன். ஆன்மீகம் அவரது இல்லத்தை ஒருபோதும் கைவிடாதிருக்கட்டும். எங்கள் பெயர்களை நிலைக்கச் செய்கிறவர்களாக அம்மாதிரி மகாபுருஷர்கள் அதிலிருந்து வருவார்களாக. அவருடைய சிரமங்கள் சுலபமாக்கப்படட்டும். கடவுளின் அருள் நாளுக்கு நாள், நிமிடத்துக்கு நிமிடம், வினாடிக்கு வினாடி (அல்லது ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு வினாடியும், எப்போதும் அவர் மீது வந்திறங்கட்டும். அவருடைய நண்பர்கள் மகிழ்ச்சியடையட்டும். அவரது எதிரிகள் தோல்வியடையட்டும். மேலும் ஒரு விஷயம் சொல்கிறேன், அது அப்படியே நிகழட்டும்.

அவர் நடந்து செல்கின்ற நிலம் எதுவாயினும், இடம் எதுவாயினும், அது முழு நறுமணம் பெறட்டும். அவர் எந்த இடத்திற்குச் சென்றாலும் அதில் அவருடைய ஆட்சி நிலை பெறட்டும். தனது பதிவை அங்கே ஏற்படுத்திய பிறகு அவர் திரும்பி வரலாம். அவருடைய துணையில் இருக்கின்றவர் யாராயினும், செல்வ வளம் பெற்று, ஒருபோதும் வறுமையை சந்திக்காமல் இருக்கட்டும். இந்த அனைத்து விஷயங்களும் நடைமுறைக்கு வந்துள்ளன என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள் மற்றும் வருங்காலம் இப்படியே இருக்கும் என நம்புங்கள். என்னுடைய இந்த நல்லாசிகள் பரமாத்மாவின் நிலையிலிருந்து வருகின்றன, எனவே இவை பலனளிக்காமல் போகமுடியாது.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- “ராம்சந்த்ராவின் நிலையைப் போலவே இருந்த ஒரு விஷயம் (ஒரு சம்பவம்) இப்போது என் ஞாபகத்தில் பளிச்சிடுகிறது. மஜ்னூன் (அரேபிய கதைகளில் கூறப்படும் லைலா - மஜ்னூன் காதல் காவியத்தில் லைலாவின் காதலன்) காபாவுக்குச் (அரேபியாவில் உள்ள மிகப் புனிதமான முஸ்லீம் பேராலயம்) சென்ற போது, தன் காதலி லைலா, தன் மனதிலிருந்து ஒருபோதும் சென்றுவிடக்கூடாது என்று பிரார்த்தனை செய்தான். இந்தக்கதை உண்மையா பொய்யா என்பது முக்கியமில்லை, அந்த உணர்வின் வெளிப்பாடு தான், இது சம்மந்தமான முக்கிய நோக்கமாகும்.''

## <u>27-3-1945</u>

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் பரிசுகளில் மேலும் ஒன்று காலை 11.15 மணிக்கு உள்ளுக்குள் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

சுவாமி விவேகானந்தா :- நேற்று இரவு சுமுகமாகக் கடந்தது. இன்று காலையிலிருந்து மீண்டும் பரபரப்பு திரும்பியிருக்கிறது. நமது பிரபு முழு சுறுசுறுப்புடன் இருந்தார். இந்த நிலைமை பற்றி M1 - க்குக் கட்டாயம் தெரிவிக்கவேண்டும். நமது பிரபு அவரை உங்கள் காரியதரிசியாக (செயலாளராக) நியமித்திருப்பதால் எழுத்து பூர்வமான அனைத்தும் (குரு மற்றும் இதர மூத்த முனிவர்கள் சொல்லச்சொல்ல எழுதிக்கொண்டவை

போன்றவை) அவருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். நாங்கள் உங்களுக்காகக் காத்திருக்கிறோம். மேலும் சிலரை அழிப்பதற்காக எடுத்துக்கொண்டிருக்கிறேன். அவர்களின் பெயர்கள் பிறகு உங்களுக்குத் தெரியவரும். (சிறிது இடைவெளி) நல்லது. உங்கள் வேண்டுகோளுக்கிணங்கி M9 - ஐ நான் விட்டு வைக்கிறேன். ஆனால் இது தற்காலிகமாகத் தான். அவர் சரியாகத் திருந்தி வராவிட்டால் அவர் அதே விதியை சந்திப்பார். நீங்கள் அலட்சியமாக விட்டு வைத்த மனிதர் உங்கள் தாயாரின் (வணக்கத்திற்குரிய லாலாஜியின் மனைவி) மூளையை பெரும் அளவுக்கு விஷமாக்கியிருக்கிறார். அவர் A1 - ன் அடிமைகளில் ஒருவர். அழிவுத்திட்டத்தின் கீழ் அவருக்கு தண்டனை நிச்சயம். என்னுடைய பாதையில் தடைகளை யார் ஏற்படுத்தினாலும், அது நாங்கள் யாவரும் மிகவும் நேசிக்கின்ற நீங்களாகவே இருந்தாலும் அல்லது வேறு யாராக இருந்தாலும் அதே விதியை சந்திப்பார்கள். அது உங்கள் தாயாராக இருந்தாலும் சரி, அத்தையாக (R1 - ன் மனைவியாக) இருந்தாலும் சரி அதைப் பொருட்படுத்தமாட்டோம். நமக்கு மாறாக இருப்பது பற்றி ஒரு சிறு குறிப்பு (ஒரு ஊகம்) கிடைத்தாலும் நம் பிரபுவின் வீட்டின் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டேன். இனி நீங்கள் சொல்வதையும் கேட்கமாட்டேன். மீண்டும் சொல்கிறேன். இந்த உலகையே நான் அழித்துவிடுவேன். இப்போது எனக்கு ஆலோசனை எதுவும் கூறவேண்டாம். நீங்கள் ஃபடேகருக்கு வந்து சேர்ந்தவுடன் உங்கள் தாயாரிடம் வெளிப்படையாக உங்களைப் பற்றிச் சொல்லி, நமது பிரபுவின் விருப்பம் நடந்தாக வேண்டும், என்று அவரிடம் கூறவும், அவரோ அல்லது வேறு யாராவதோ நமது பிரபுவின் கட்டளைகளின் படி நடக்க மறுத்தால் இறுதித் தீர்ப்புக்கு உள்ளாவதே அதன் விளைவாக இருக்கும். இச்சமயத்தில் உங்கள் இதயத்தை உங்கள் குருவினுடைய இதயம் போல இல்லாமல், என் இதயத்தைப் போல மாற்றிக்கொள்ளுங்கள். கடவுளின் வேலையில் நீங்கள் தலையிடுகிறீர்கள். இந்த முறை உங்களை நான் மன்னிக்கிறேன். M9 - ஐ தண்டிக்காமல் விட்டு விடவேண்டும் என்று நீங்கள் ஆலோசனை சொன்னபோது

எனக்குக் கடும் கோபம் வந்தது. எனினும் நீங்கள் மன்னிக்கத் தக்கவராக இருக்கிறீர்கள். ஏனெனில் உங்கள் தாயாரின் (லாலாஜியின் மனைவி) வீட்டின் மீதும், உங்கள் வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உறவினர்கள் மீதும் பெரும் மரியாதை கொண்டிருக்கிறீர்கள். உங்கள் செயல்களில், எண்ணத்தில் சுயநல நோக்கம் இல்லை. ஆலோசனை கூறுவதில் உங்கள் பணிவான பாவனையைக் கண்டு நான் அகமகிழ்ந்திருக்கிறேன். நமது பிரபுவோடு சேர்ந்து உண்மையாகவே முழுமையாக என்னிடத்தில் சரணடைந்திருக்கிறீர்கள். அதை எண்ணிப் பார்த்தால், நான் உங்களுக்கு ஏதாவது தீங்கு செய்தால் அதை நான் எனக்கே செய்துகொள்வதாக ஆகிறது.''

J1 - கூறியது :- அன்புள்ள சகோதரா, M9 - ஐக் காப்பாற்ற இங்கே மிக நன்றாக முயற்சி செய்தீர்கள், எதையும் சொல்வதற்கு எனக்குத் துணிவு இல்லை.

சுவாமி விவேகானந்தரின் உத்தரவுகள் தொடர்கின்றன :- ''நாங்கள் இந்த விஷயத்தை நன்கு சிந்தித்தோம். பிறகு நமது வேலைக்குத் தடை செய்யும் கருவியாக மாறியிருப்பது உங்கள் தாயார் தான் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். (சிறிது இடைவெளி) உங்கள் பொது அறிவிப்பின் மேலே உச்சியில் ஸ்வஸ்திகா சின்னம் போட்டிருப்பது எனக்குப் பிடித்தது. மேலும் கீழ்ப்பகுதியில் உதிக்கும் சூரியன் போட்டிருக்கிறீர்கள். நான் அந்த ஸ்வஸ்திகா சின்னத்தின் நடுவில் ஒரு வட்டத்தில் சிவப்பு மையால் புள்ளி வைத்து, அதன் நான்கு பக்கங்களிலும் சிவப்புப் புள்ளிகள் வைத்திருக்கிறேன். அதன் பொருள் இப்போது உங்களுக்கு விளங்குகிறது. நடுப்பகுதியிலும், முடிவிலும், நான்கு பக்கங்களிலும் அழிவு உண்டாகும் என்பது, அதன் பொருள். உதிக்கும் சூரியன் நமது பிரபு 'சகஜ மார்கா' என்று சொல்லப்படும் 'சத்பத்பந்த்' என்ற புதிய முறையைப் பிறப்பித்திருக்கிறார் என்பதைக் குறிக்கிறது. வருங்காலத்தில் இதுவே உங்கள் சத்சங்கத்தின (மார்க்கத்தின்) சின்னமாக இருக்கும். உதிக்கும் சூரியன் மேலே இருக்கும். சிவப்பு வரிகள்

மற்றும் வட்டத்துடன் ஸ்வஸ்திகா கீழ்ப் பகுதியில் இருக்கும். உங்கள் சத்சங்கத்தின் வரலாறு ரத்தத்தால் புள்ளிகள் இடப்பட்டது (அழிவைக் குறிப்பது) என்பதை அது குறிப்பிடுகிறது. (சிறது இடைவெளி) தன்னை ஒரு மாஸ்டராக தன் இதயத்தில் நினைக்கின்ற, மற்றும் தன் சீடர்களை தனக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்று கருதுகின்ற ஒரு மனிதர், ஒரு பெரிய தவறைச் செய்கிறார். ஏனெனில் அந்த சீடர்களிடத்திலும் ஆன்மா இருக்கிறது. எனவே சீடனும் தன் குருநாதருடன் சமமான தன்மையில் தான் இருக்கிறான். சீடனிடம் காணப்படுகின்ற திரைகள் அல்லது தடைகள் தான் அகற்றப்பட வேண்டியுள்ளன. சீடன் குருநாதரிடம் வரும் நோக்கம் அது தான். ஒரு விதத்தில் அந்த மாஸ்டர் (குருநாதர்) தன் சீடனுக்கு தான் கடமைப்பட்டிருப்பதாகக் கருத வேண்டும். ஏனெனில் அந்த சீடன் தனக்கு சேவை செய்வதற்கு, குருவுக்கு வாய்ப்பைத் தருகிறான். எனவே ஒரு மாஸ்டரின் மூளையிலிருந்து அவர் மாஸ்டராக இருக்கிறார் என்ற கருத்து முற்றிலும் மறைந்துவிட வேண்டும். தேவையான இந்தத் தகுதியின்படி நடந்து கொள்ளாத ஒருவர் தன் கடமைகளைச் சிறப்பாகச் செய்வதில்லை. உதாரணமாக உங்கள் மாஸ்டர் ஃபடேகர் மகாத்மா ராம்சந்த்ரஜி மகராஜ் அவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த விஷயத்தில் அவர் ஒரு உதாரணத்தை உண்டாக்கியிருக்கிறார். நீங்கள் அனைவரும் அவரை இவ்விஷயத்தில் பின்பற்ற வேண்டும். இந்த விஷயத்தில் அவர் மாஸ்டரின் உதாரணத்தைப் பின்பற்றி நடப்பதாக முன்வந்து கூறுபவர் உங்களில் யாராவது இருக்கிறாரா? (சிறிது இடைவெளி) உங்களுக்காக இன்னும் ஒரு செய்தி, மிக முக்கியமான ஒரு மனிதரை அதாவது, B1 - ஐ அழிவுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் நமது பிரபு அதை ஆட்சேபிக்கிறார். எனவே தற்காலிகமாக அவரை நான் விட்டு விடுகிறேன். அவருடைய மனோநிலை எப்படியிருக்கிறது என்றால், ஆதிக்கம் செலுத்துவது தவிர அவர் மனதில் வேறு எந்த எண்ணமும் (சிந்தனையும்) இல்லை. அவர் முற்றிலும் ஆன்மீகத் தன்மை அற்றவராக இருக்கிறார். ஆதிக்கம் செலுத்தும் எண்ணத்தைத் தான் போற்றி வளர்த்து வருகிறார். N1 - நிலை குலைந்த ஒரு

மூளையைப் பெற்றிருந்தும், தன் வழி வந்தவர்களின் மீது மேலாதிக்கத்தை வென்றுவிடலாம் என்ற எதிர்பார்ப்பை போற்றி வளர்த்து வருவது எவ்வளவு வினோதமாக இருக்கிறது? கோயில்களில் இருக்கும் சிலைகளைப் போல தன் மகன்கள் வணங்கப்பட வேண்டும் என்று விரும்புகிற அளவுக்கு அவர் போயிருக்கிறார். அவருடைய இந்த ஆசையில் அவருடைய மனைவியும் கூட அவர் வழியைப் பின் தொடர்கிறார். (இரவு மணி 7.08 நிமிடம்)

சுவாமி விவேகானந்தா தொடர்ந்து கூறியது. (இரவு 8.25 மணி) :- நாம் சந்தித்துக்கொண்டிருக்கும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் உன் தாயார் (வணக்கத்திற்குரிய லாலாஜியின் மனைவி) மட்டுமே காரணமாக இருக்கிறார். இந்த விஷயம் மற்றொரு தீவிரமான திருப்பத்தை அடைந்திருக்கிறது. நெருங்கிய உறவினர்கள், தூரத்து உறவினர்கள், அவர்களின் மனைவிகள், குழந்தைகள் உள்பட அந்த உறவுக்கூட்டம் முழுவதையும் துடைத்தொழிக்க நான் விரும்புகிறேன். அவர்கள் நமது பிரபுவுக்குச் சொந்தமானவர்கள் என்ற ஒரே எண்ணம் தான் என்னை அப்படிச் செய்ய விடாமல் தடுக்கிறது.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் கூறியது :- (இரவு 9.35 மணி) நான் J .....யில் இருக்கிறேன். H4 - அப்படி ஒரு எளிமையான இளைஞன். ஆனால் N1 - உடைய செல்வாக்கு எவ்வளவு பரவியிருக்கிறது! நீ ஃபடேகர் சென்றடையும் போது, குறைந்தபட்சம் H4 - ஐயாவது (அவரது செல்வாக்கிலிருந்து) விடுவிக்கும் படி II - இடம் சொல். வருடாந்திர விழாவில் அவரால் கலந்து கொள்ள முடியாத நிலை வந்தால், ஒரு கடிதத்தினால் கூட இது சாத்தியமாக முடியும்.

சுவாமி விவேகானந்தா :- “ராம்சந்த்ரா, உண்மையைச் சொன்னால், நமது பிரபுவின் வேலை தோல்வியடையப் போகிறது. அதாவது நான் விரும்பிய அந்த வெற்றி நம்மிடம் வந்து சேரப்போவது இல்லை. வெற்றி என்று சொல்லும் போது நான் முழு வெற்றியைச் சொல்கிறேன். அதற்கு

உன் தாயார் தான் (லாலாஜியின் மனைவி) காரணம். இறுதியான தண்டனை கிடைக்கும் நாள் நெருங்குகிறது என்று நினைக்கிறேன். இந்த வேலையை விட்டு நான் போக மாட்டேன். முழு அழிவை அல்லது முழுமையான வெற்றியை நிகழ்த்திக் காட்டிய பிறகு தான் நான் மேல் உலகம் திரும்பிச்செல்வேன், இது விஷயமாக இப்போது நான் முடிவெடுத்துவிட்டேன்.''

J1 - கூறியது :- எவ்வளவு பயங்கரமான நிகழ்வு இங்கே நடந்துகொண்டிருக்கிறது! என் அம்மா ஒரு இம்மியளவு கூட அசைந்துகொடுக்கவில்லை. அவர் என் அம்மாவாக இருந்தாலும் கூட, இதை நான் சொல்லியாக வேண்டும். எப்படியிருந்தாலும் அவர் வயதில் மூத்தவர் என்பதால், நான் அவரைப் பற்றி மோசமாக எதுவும் சொல்லவில்லை. அன்புள்ள சகோதரரே! இது என்ன வினோதமான நிகழ்வு! ஆன்மீக உலகம் முழுவதும் உங்களை ஏற்றுகொள்கிறது, ஆனால் என் அம்மா எதிர்த்து நிற்கிறார்! அழிவுண்டாக்கும் சக்தி இயற்கையிலிருந்து இறங்கி வந்து, வேகம் அடைந்து கொண்டிருக்கிறது. உங்கள் மனிதர்களின் மீது என்ன ஒரு சர்வாதிகாரத்தைப் R1 - பிரயோகித்திருக்கிறார். அதனால் என்ன விளைவு நேர்ந்திருக்கிறது பாருங்கள் !

சுவாமி விவேகானந்தா :- உங்கள் (ராம்சந்த்ராவின்) உயிர், இப்போது பணயம் வைக்கப்பட்டுள்ளது. II - ன் வீட்டைத் தவிர வேறு எங்கும் நீங்கள் சாப்பிடுவதை நான் அனுமதிக்கமாட்டேன். ஒரே கடையில் மீண்டும் மீண்டும் எதுவும் வாங்கக்கூடாது. இந்த வேலையை வேலைக்காரர்கள் யாரிடமும் விட வேண்டாம். நீங்கள் தூங்கும் போது, உங்கள் குரு உத்திரவிட்டது போல, வேறு யாராவது தூங்காமல் விழிப்புடன் இருக்க வேண்டும். (உங்கள் வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உண்மையான பிரதிநிதியும் – அவரது பதவிக்கு உரியவரும் நீங்கள் தான் என்று) உங்களைப் பற்றி இன்னும் உறுதியாக அவர்களுக்குத் தெரியவில்லை என்றாலும், மக்களுக்கு சந்தேகம் இருக்கிறது. நீங்கள் எங்கே தங்கியிருந்தாலும், உங்கள்

பாதுகாப்புக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு மற்றவர்கள் உங்களைச் சூழ்ந்திருக்க வேண்டும். எந்தச் சமயத்திலும் உங்களைத் தனியாக இருக்கவிடக் கூடாது. உங்கள் பாதுகாப்புக்காக எதற்கும் துணிந்த உள்ளம் கொண்ட ஒருவர் அவசியம் உடன் இருக்க வேண்டும். இன்னொரு அவசியமான முன்னெச்சரிக்கையும் எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது நீங்கள் உரை நிகழ்த்தும் போதோ, (சபையில் பேசும் போது) அல்லது கூட்டு தியானம் நடத்தும்போதோ, உங்களுக்குப் பின் பக்கம் யாராவது ஒருவர் மிகவும் விழிப்புடன் நின்றிருக்க வேண்டும். பண்டாராவின் போது கண்களைத் திறந்து வைத்துக்கொண்டு தான் எப்போதும் பிராணாஹூதி அளிக்கவேண்டும். உங்களை நேசிப்பவர்கள் தியானத்திற்காக கூட்டத்தோடு சேர்ந்து உட்கார வேண்டியதில்லை.''

வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீகிருஷ்ணர் :- "எனது சக்ராயுதம் உனக்குப் பின்னால் இருக்கும். வருடாந்திர விழா நடைபெறும் காலம் முழுவதும் அது அங்கேயே இருக்கும். நம்பிக்கையுடன் இரு. நான் ஏற்கனவே கூறியதைப் போல நானே அங்கு வந்து இருப்பேன். உன் முகத்தை நேராகப் பார்க்கும் வலிமை யாருக்கும் இல்லை.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- சுவாமி விவேகானந்தா சுட்டிக் காட்டியுள்ளபடி முன்னெச்சரிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். உன் பாதுகாப்புக்காக - அதை உறுதிப்படுத்துவதற்காக, வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே அங்கே வந்து இருப்பார். உன்னுடைய கண்ஜாடை மற்றும் அழைப்புக்கு இணங்க அவரது சக்ராயுதம் வேலை செய்யும். ஆயினும் என்னிடமிருந்து அதற்குத் தடையில்லை என்ற அனுமதி பெறாமல், அதற்கு வேலை கொடுக்கக் கூடாது. உன் பாதுகாப்புக்காக கடமையைச் செய்கிறவர்கள் தாராளமாகப் பரிசளிக்கப்படுவார்கள். அவர்கள் அதை இப்போத பெற்றுக்கொள்ளலாம். அல்லது வருடாந்திர விழாவுக்குப் பிறகு பெற்றுக்கொள்ளலாம். அது அவர்களின் சொந்த விருப்பத்தைப் பொறுத்தது.

28-3-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டரின் உத்தரவு :- என் வேலையில் உதவியாக இருக்க M9 - விரும்பாவிட்டாலும் குறைந்தபட்சம் நடு நிலையிலாவது நிற்க வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்தும் படி, II - இடம் சொல்லவும். எதிர்த்து நிற்கின்ற ஒருவரை அப்படி எதிர்க்கும் போதும் தண்டிக்கப்படாமல் இருக்கச் செய்வதற்கானது இந்த விஷயம் அல்ல.

சுவாமி விவேகானந்தா :- நிலைமை மீண்டும் சிறிதளவு முன்னேறியிருக்கிறது. (இரவு 9.40 மணி) ஆனால் நாங்கள் இந்த வேலையை எடுத்துக்கொண்டதில் இருந்து ஏதோ ஒரு விஷயம் மேலும் கீழுமாக நிகழ்ந்து கொண்டே இருப்பதால், இது ஒரு உறுதியான நிலை என்று நீங்கள் நினைக்கக் கூடாது. நமது பிரபுவின் வீட்டிலேயே விஷத்தைப் பரப்பும் மூல காரணங்கள் உள்ளன. நமது பிரபுவின் எந்த வேலையிலும் உங்கள் கை ஓங்குவதை அல்லது உங்கள் மேலான தலைமையை விரும்பாதவர்களாக ஃபடேகரிலும் கூட, சில குறிப்பிட்ட மனிதர்கள் இருக்கிறார்கள். (சற்று இடைவெளி) நிலைமை இன்னும் சிறிதளவு பரவாயில்லை. (இரவு 10.45 மணி). நமது பிரபுவின் குடும்பத்தை ஒரு பக்கமாக ஒதுக்கிவிட்டு, சாத்தானின் (N1) குடும்பம் முழுவதையும் ஒழித்துவிட இப்போது நான் விரும்புகிறேன்.''

இதைக் கேட்டவுடன் கோபத்தின் வேகம் சுற்றிலும் ஒரு மழையாக இறங்கி வெள்ளமாகப் பாய்கின்ற நிலையில் நான் இருந்தபோது, சுவாமி விவேகானந்தாவும், வணக்கத்திற்குரிய மாஸ்டரும் கீழ்க்கண்டவாறு எனக்கு அறிவுரை கூறினார்கள்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- மிகவும் மதிப்புக்குரிய சுவாமிஜிக்கு இப்போது நான் என் அனுமதியைக் கொடுத்திருக்கிறேன். நீயும் கூட யாரைப் பற்றியும் அவரிடம் சிபாரிசு செய்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

சுவாமி விவேகானந்தா :- இந்த விஷயம் அதன் உச்சத்தை அடைந்து விட்டது. நீங்கள் எங்கும் எலும்புகளின் குவியலைக் காண்பீர்கள். நான் இப்போது பெரும் கோபத்தில் எரிந்து கொண்டிருக்கிறேன். என் கோபத்தின் வேகத்திலிருந்து உங்களை தனிப்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள். இதன் காரணம் என்னவென்றால், நம்மிடையே மிக உயர்ந்த ஆளுமை (அனைத்தையும்) உள்ளவரே, அழித்துவிடும் நிலையை நோக்கிப் போகும் போது முக்கியமாக நீங்களும், பிறகு நாங்களும் நம்முள்ளே இருக்கும் எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு, அந்த அழிவு வேலையில் மட்டுமே நம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.''

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- "M1 - இடமிருந்து வந்த கடிதத்தைப் படிக்கக் கேட்டவுடன், இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்று பிரியமான ராம்சந்த்ராவைக் கேட்டேன். பண்பின் அதிகபட்ச தூய்மையோடு அவர் கூறியது :- ''என் பிரவுவே, உங்களுக்கு எந்த அறிவுரையும் தரும் அளவுக்கு எனக்கு அறிவுத்திறன் இல்லை. ஆனால் ஏதோ ஒரு புத்தகத்தில், 'முதல் தடவை நீ வெற்றி பெறா விட்டால், மீண்டும் மீண்டும் முயற்சிசெய்' என்று படித்திருக்கிறேன்.'' என்றார்! இதைவிடச் சிறந்த பதில் வேறு எதுவும் ஒருபோதும் இருக்க முடியாது. நான் இதைக் கேட்டு ஆனந்தத்தால் என்னையே மறந்தேன். ஆஹா! என்ன ஒரு கூரிய அறிவுத்திறன்! என்ன ஒரு புரிந்துகொள்ளும் தன்மை! அதை சரியாகப் பாராட்ட யாருமே இல்லையே! இந்த விநாடியே இது பற்றி சுவாமி விவேகானந்தாவிடம் சொல்லப்போகிறேன். உண்மையைச் சொன்னால் இந்த பதில் என் இதயத்தை பல துண்டுகளாகக் கிழித்துவிட்டது. நான் உனக்குக் கொடுக்கின்ற நல்லாசிகளைத் தவிர இப்போது என்னிடம் எதுவும் மீதி இல்லை, நான் இப்போது போகிறேன்.''

சுவாமி விவேகானந்தா :- ''இந்த வார்த்தைகளை பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு அனுப்புகிறேன், அதன் பலனுக்காகக் காத்திருங்கள்.''

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் :- (பகல் 12.17 மணி) உங்கள் பிரார்த்தனைக்கு நான் பலனளித்திருக்கிறேன். இந்த வேலையை நானே என்கையில் எடுத்துக் கொள்கிறேன், இப்போது ஃபடேகருக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்.

சுவாமி விவேகானந்தா :- நாம் ஏற்கனவே செய்து கொண்டிருக்கின்ற வேலையை பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இப்போது பகல் 12.20 மணிக்கு தன் கையில் எடுத்துக் கொண்டிருக்கிறார்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் சுதர்சன சக்ரம் இப்போது சுழல ஆரம்பித்திருக்கிறது, (பகல் 1.48 மணி)

சுவாமி விவேகானந்தா :- (பகல் 1.50 மணி) நிலைமை மீண்டும் ஒரு தீவிரமான திருப்பத்தை அடைந்திருக்கிறது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து உங்களுக்கான உத்திரவு இதோ.

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் :- ‘‘அந்த அளவுக்கு எதிர்பார்க்கப்படவில்லை என்றாலும் கூட வெற்றி இல்லாமல் போகும் பட்சத்தில் (வெற்றி கிடைக்காவிட்டால்), மகாபாரதப் போர் சமயத்தில் நான் பதினெட்டு நாட்கள் திறந்து வைத்திருந்தது போல உங்கள் கண்களைத் திறப்பதற்கு நான் அனுமதிக்கிறேன்.’’

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- அப்படி ஒரு நிலைமை தோன்றும் போது அல்லது தோன்றினால், அதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, என்னிடம் கேட்கும் மரியாதைப் பண்புடன் இரு, இந்த சக்தி மிக விசேஷமாக உனக்காகவே அளிக்கப்பட்டுள்ளது. இது பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உனக்கு அளித்த வரம். அதைப் பற்றிய விவரம் என்னுடைய குறிப்புக்களில் இருக்கிறது. விசேஷமான ஒரு சக்தி ஒரு விசேஷமான சமயத்தில் மட்டுமே பயன்படுத்தப் பட வேண்டும்.

J1 - இடமிருந்து வந்த தகவல் (பகல் 2.05 மணி) :- இப்போது நானும் கட்டுப்பாட்டை (பொறுமையை) இழந்து விட்டேன். D2 - ஐ அழிவுக்கு விட்டுவிடுகிறேன். நான் (அவரைத் திருத்துவதற்கு) நீண்ட காலமாக வேலை செய்துகொண்டிருக்கிறேன். ஆனால் இப்போது எனக்குக் கோபம் வருகிறது. M9 - க்காகவும் கூட நான் சிபாரிசு செய்யமாட்டேன். உண்மையைச் சொன்னால் இது அழிவிற்கான காட்சியாக இருக்கிறது. மிக உயர்ந்த சக்தியே அதற்கு வேலை செய்கிறது. அதைத் தடுப்பதற்கான தைரியம் யாருக்கும் இல்லை. எனினும் மதிப்புக்குரிய சகோதரரே, உங்களுக்கு ஒரே ஒரு அறிவுரை தருகிறேன். அதிகபட்சம் சாத்தியமான அளவுக்கு கோபம் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் நிலை எதுவாயினும் அது எனக்கு நன்றாகத் தெரியும். வணக்கத்திற்குரிய மாஸ்டர் லாலாஜி சாகேப் அமைதியாக இருப்பதற்கான காரணங்களில் ஒன்று, நீங்கள் கோபம் கொள்ளாமல் இருப்பது தான்.

ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு :- நான் ஒரு அமைதியான ஆத்மா, எனக்கு ஒருபோதும் கோபம் வருவதில்லை, மேலும் யாருக்கும் எந்தக் கஷ்டமும் ஏற்படுத்த ஒருபோதும் நான் விரும்பியதில்லை. ஆயினும் நிகழ்ச்சிகள் இப்படி திருப்பம் அடைந்து கொண்டிருக்கும் போது, காரியங்கள் இப்படி ஒரு நிறுத்தத்திற்கு வந்திருக்கும் போது, நானும் கூட ஆயுதங்களை எடுத்துக்கொள்ளும்படியாக நேரலாம்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- “தான் தவறே செய்யாத போதும் கூட, ஒருவர் மன்னிப்புக் கோருகிறார். ஆயினும் அவருக்கு மன்னிப்பு அளிக்கப்படவில்லை என்பது எவ்வளவு சர்வாதிகாரமான குணம். எப்படியிருந்தாலும் நீ செய்தது தவறு இல்லை, அது என்னுடைய கட்டளைதான். என்னுடைய குறிப்பை முன்வைத்தபோதும் கூட (நான் கூறியதை எடுத்துச்சொன்ன போது கூட) அதை யார் நம்பாமல் இருந்தார்களோ, அவர்களுடைய தவறு தான் அது. மீராபாய் பற்றிய சம்பவம் இங்கே குறிப்பிடத்தக்கது அல்லவா? அது பகவான்

ஸ்ரீ கிருஷ்ணரால் அவளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று அவளிடம் சொன்னபோது அதற்காகவே உயிரையே நீக்கும் கடுமையான விஷத்தை அவள் உட்கொள்ளவில்லையா?''

J1 - இடமிருந்து வேண்டுகோள் :- இப்போதே என்னிடமிருந்து D2 - ன் இணைப்பை நீக்கிவிடுங்கள், இந்த உத்திரவு நிறைவேற்றப்பட்டது, (பகல் 2.40 மணி.)

சுவாமி விவேகானந்தா : - "இது அன்பின் ஒரு உதாரணம். ராம்சந்த்ராவை நான் பார்க்க விரும்பினேன். உடனே அவர்அங்கே வந்து சேர்ந்தார். (சிறிது இடைவெளி) விஷயம் மற்றொரு தீவிரமான திருப்பத்தை அடைந்திருக்கிறது. (மாலை 5.58 மணி) அது உங்கள் தாயாரின் (வணக்கத்திற்குரிய லாலாஜியின் மனைவி) பிடிவாத குணத்தின் காரணமாகத்தான்."

J1 - உடைய உணர்ச்சிகரமான கூவல் :- "ராம்சந்த்ரா பெரும் அழிவு நேர்ந்திருக்கிறது. உங்கள் இதயத்தின் இரண்டு திடீர் எழுச்சிகள் காரியத்தை முடித்துவிட்டன. என் அம்மா தெய்வீகத்தின் அதிருப்திக்கு ஆளாகியிருக்கிறார்."

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- "இது உன் தவறு அல்ல. இதயத்தின் அந்த திடீர் எழுச்சிகள் என்னுடையவை. சகிப்புத்தன்மை அதன் எல்லையை எட்டிவிட்டது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இன்னும் இந்தக் களத்தை விட்டுச் செல்லவில்லை. என்னுடைய கோபம் தான் உன்னிடத்தில் இந்த விளைவை ஏற்படுத்தியிருக்கிறது."

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் :- "இங்கே இருக்கும் நிலைமையை நான் கவனமாகப் பார்த்தேன், இங்கு நடக்கின்ற விஷயங்கள் நல்லவை அல்ல."

சுவாமி விவேகானந்தா :- (இரவு 9.15 மணி) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இன்னும் இங்கே தான் இருக்கிறார். (இரவு 9.20 மணி) விஷயம் மோசம் என்ற நிலையிலிருந்து, மிகமிக மோசம் என்பதற்குப் போய்க்கொண்டிருக்கிறது. (இரவு

9.25மணி) நிலைமையில் முன்னேற்றம் எதுவும் இல்லை. அவரால் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை அபகரிக்க முயற்சி செய்யும் மனிதர்களின் முகத்தைப் பார்க்கவும் நமது பிரபு விரும்பவில்லை. (இரவு 9.48மணி) இப்போது அவர் கடும் கோபத்தில் இருக்கிறார்.

29-3-1945

வணக்கத்திற்குரிய மாஸ்டர் R2 - க்குச் சொன்னது :- உதாரணமே சொல்ல முடியாத ஒரு மரியாதைப் பண்பை ராம்சந்த்ரா இப்போது பின் பற்றி நடந்தார். முதல் காரியமாக சுவாமி விவேகானந்தாவின் முன்பு அவர் தலை குனிந்து வணங்கினார். அது அவர் செய்ய வேண்டிய முறை தான். அதன் பிறகு சைதன்ய மஹாபிரபுவின் முன்பு தலை குனிந்து வணங்கினார். என்னை வணங்க வேண்டிய முறை வந்தபோது <u>தன்னையே தலை குனிந்து வணங்கினார். அடிக்கோடிட்ட இந்த வாக்கியத்தை வார்த்தைகளின் சரியானபடி தெரிவிப்பது சாத்தியமில்லை. அப்படிக் குறிப்பிடத் தகுந்த விசேஷ அம்சம் அதில் என்ன இருக்கிறது என்றால் அவர் தனக்கு முன்பாக தன்னையே தலை குனிந்து வணங்கினார்.</u>

சுவாமி விவேகானந்தா :- மிக உயர்ந்த சக்தியை உங்களுக்கு நான் மாற்றிக் கொடுக்கப் போகிறேன். இச்சமயத்தில் அப்படிச் செய்வதை நமது பிரபு தடுக்கிறார். அதை உங்களுக்காகவே ஒதுக்கி வைத்திருக்கிறேன். நீங்கள் அந்த இடத்தைச் சென்றடைந்த பிறகு, உடனே அது உங்களுக்கு மாற்றித்தரப்படும். ஆனால் இங்கே பாருங்கள். மூாலை மட்டுமே இன்று உணவாக எடுத்துக்கொள்ளுங்கள், பழுத்திருக்கும் பழங்களை நீங்கள் சாப்பிடலாம். இது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து உங்களுக்குக் கிடைத்த பரிசு, அது என்னிடம் கொடுத்து வைக்கப்பட்டிருந்தது. உங்களுடைய சங்கல்பத்தின் விசை சம்பந்தமாக உங்கள் வணக்கத்திற்குரிய மாஸ்டருடன் நாங்கள் பேசினோம். நீங்கள் அந்த இடத்திற்குப் போவதற்கு முன்பு அதை (உங்கள் சங்கல்பத்தின் ஆற்றல்

விசையை) இன்னும் கொஞ்சம் அதிகரிக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். இதன் காரணம் என்னவெனில் எரிச்சலடையும் உங்கள் சுபாவத்தை உங்கள் தந்தையிடமிருந்து வாரிசு முறையில் பெற்றிருக்கிறீர்கள். இதை நீக்குவதற்கு நாங்கள் விரும்பவில்லை. அதன் காரணங்கள் ஏற்கனவே நமது பிரபுவின் குறிப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன. (சிறிது இடைவெளி) R2 - ன் மனத்திருப்திக்காக, அந்த மிக உயர்ந்த சக்தி ராம்சந்த்ராவின் தலைக்கு மேல் மிதந்து கொண்டிருக்கிறது. அதற்கான விசையை அழுத்தினால் போதும். உடனடியாக அது பீறிட்டுக் கிளம்பிவரும், அதில் தாமதமே இருக்காது. ஒரு விநாடி நேரம் தான் அதற்குத் தேவைப்படும். நீங்கள் (ராம்சந்த்ரா) அந்த சக்தியின் வீச்சை உணர்கிறீர்கள். உங்கள் வணக்கத்திற்குரிய மாஸ்டர், நீங்கள் அங்கே போய்ச் சேருவதற்கு முன்பு அதை நிறைவடையச் செய்வதற்காக (அதை முழுமைபெறச் செய்வதற்காக) அந்த சக்தி படிப்படியாக உங்களுக்கு வந்திறங்க வேண்டும் என்று நினைக்கிறார். நீங்கள் அதை உடினடியாக உணர்ந்த உங்கள் கூருணர்வுத்திறனை நான் பாராட்டுகிறேன். உண்மையைச் சொன்னால் எங்களுடைய ஒவ்வொரு செயலும் எண்ணமும், முதலில் அதிர்வுகள் என்ற வடிவத்தில், அதாவது 'ஸ்ருதி' என்று சொல்லப்படுகிற விதத்தில் நேரடியாக உங்களுக்குள் செல்கிறது. அதன் பிறகு வார்த்தைகள் வருகின்றன. பழங்காலத்தில் நமது தாய் நாட்டின் மகரிஷிகள் 'ஸ்ருதி'யை மட்டும் அறிவில் பற்றிக்கொண்டனர். ஆனால் நீங்கள் வேறுவிதமானவர். நீங்கள் அதிர்வுகள் மற்றும் வார்த்தை ஆகிய இரண்டையுமே சேர்த்து அறிவில் பற்றிக் கொள்கிறீர்கள். அதாவது இந்த இரண்டுக்கும் இடையே மிகக் குறுகிய இடைவெளி தான் இருக்கிறது, இது காலத்தின் கட்டாயம், இயற்கை அந்த வழியில் செல்கிறது. இது காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப உருவாகிய ஒரு முற்றிலும் புதிய வழிமுறை. பிரம்மச்சரிய ஆசிரமத்தை (வாழ்வில் முதல் இருபத்தைந்து ஆண்டுகள் கல்வி கற்பதில் ஈடுபடுத்திய பிரம்மச்சரிய வாழ்க்கை) கண்டிப்பாக அனுசரிப்பதிலிருந்து தங்களை தனிமைப்படுத்திக்கொண்டு விட்டதால் மக்கள் இப்போது பலவீனர்களாகி விட்டார்கள். இந்த ஏற்பாடு நீண்ட

காலமாகவே மறக்கப்பட்டுவிட்டது. இந்தப் புதிய செயல் நுட்பத்தை ஒருக்கால் உங்கள் உலக வாழ்விற்குப் பிறகு, உங்கள் பதவிக்கு அடுத்து வருகிறவர் மூலமாக நடைமுறைக்குக் கொண்டு வரலாம். இங்கே ஆரம்பித்துள்ள இந்த வேலையை நீங்கள் உலகைவிட்டுச் செல்லும் போது உங்கள் அடுத்த வாரிசாக இருப்பவருடன் சேர்ந்து தொடர்ந்து செய்வீர்கள். (சிறிது இடைவெளி) இப்போது ஃபடேகரில் ஒரு பெரிய அமளி நடந்து கொண்டிருக்கிறது. ஆதிக்கம் செலுத்தும் எண்ணத்தை மனதில் வைத்திருப்பவர்கள் யாரோ, அது B1 - ஆக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும், சந்தேகமில்லாமல் ...... (வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தி, சற்று இடைவெளிக்குப் பிறகு) சில வார்த்தைகளைச் சேர்த்து வாக்கியத்தை முடிக்காதபடி நமது பிரபு என்னைத் தடுக்கிறார். இப்போது அந்த மூலப் பொருளிலிருந்தே எங்களின் மூலமாக நேரடியாக நடந்து கொண்டிருக்கிறது.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- இப்போது உனது அதிர்ஷ்டத்தின் நிலை எப்படிப்பட்டது? அதை இழந்தோமே என்று மக்கள் வருந்தி அழுவார்கள். அதிர்ஷ்டமில்லாத இவர்களுக்குச் சொல்லுங்கள். அவர்களுடைய கண்கள் இன்னும் திறக்கவில்லை. தங்களைப் பற்றியே கூட அவர்களுக்கு நுண்ணறிவு கிடையாது! என்ன நடந்து கொண்டிருக்கிறது, என்ன நடக்கப்போகிறது என்பதொன்றும் தெரியாது! உங்களுக்காக இவ்வுலகம் சிறிது காலம் அழும். நான் சொல்ல வருவது என்னவென்றால், காற்று வீசும் திசையை மக்கள் அறிந்து அதன் இனிமையான தன்மையை கவனித்தால், அந்த இனிமை விரிவடைவதற்கு இடமளித்தால், அப்போது நான் இப்போது சொல்லப்போவது வெளிச்சத்துக்கு வரும் (தெளிவாக விளங்கும்) என்பது தான். இந்த விஷயம் பற்றி என் குறிப்புக்களில் ஒரு இடத்தில் சரியாக விளக்கம் தந்திருக்கிறேன். சக்திகள் அனைத்தும் இறங்கி வந்து கொண்டிருக்கின்றன. பெரியோர்களான மகரிஷிகள் இங்கே தங்கள் வசிப்பிடத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். சுவாமி விவேகானந்தா (நல்ல விஷயத்துக்காக மேலுலகிலிருந்து) தன் இடத்தை விட்டுவிட்டு வந்திருக்கிறார். சைதன்ய மஹா பிரபுவும்

அதே எண்ணத்தில் இருக்கிறார். மகாத்மா கௌதம புத்தர் உன் மீது அதைக் குவிப்பதற்காக தன் பார்வையை உன் பக்கம் திருப்பியிருக்கிறார். நேரடியாக உனக்குக் கிடைத்த கட்டளைகளை, யாராவது மூத்தவராகிய ஒரு மாஸ்டருக்கோ, அல்லது அப்படி யாரோ ஒருவருக்கோ சமர்ப்பிக்க வேண்டியதும் சாத்தியமே.

சுவாமி விவேகானந்தா :- உங்களுக்காகவே நாங்கள் ஒளியுலகைத் துறந்து வந்திருக்கிறோம்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- (காலை 10.05 மணி) உத்திரவு இப்போது அளிக்கப்பட்டிருக்கிறது. இயற்கையிடமிருந்து தாராளமாக சங்கிலித் தொடர் போன்ற (அதாவது அடுத்தடுத்து வருகின்ற) பரிசுகள் உனக்காக வந்து இறங்கியுள்ளன. நேரடியான தீட்சையின் போது உன்னிடம் நான் குறிப்பிட்டவை தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். இப்போது நான் குறிப்பிட்டது அதன் கூடுதலாகும்.

ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு :- (மேலுலகில் இருந்து) நானும் என் பதவியைவிட்டு வந்துவிட்டேன். தேவைப்படும் நேரத்தில் அல்லது அவ்வப்போது அங்கே போய் வருவது வேறு விஷயம். இப்போது தான் அந்த உத்தரவுகள் எனக்குக் கிடைத்தன. பழங்காலத்திய உயர் தரத்திலான மாஸ்டர்கள் இறங்கி வந்து கொண்டிருக்கிறார்கள். பகவான் கௌதம புத்தரும் தனது நிலையை விட்டு வருகிறார்.

வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் :- அந்த வீடு (லாலாஜியின் வீடு) சீரமைக்கப்பட வேண்டும் என்பதற்கான உன் பிரார்த்தனைக்கு பலனளிக்கப்படுகிறது. ஆனால் உன்னுடைய வணக்கத்திற்குரிய மாஸ்டரின் பெயரைக் கெடுத்தவர்கள், (அவரை அவமதித்தவர்கள்) அழிந்து போவார்கள். அந்த வீட்டை சீரமைக்க வேண்டும் என்பதன் பொருள் இதுவாகவும் இருக்கமுடியும்.

சுவாமி விவேகானந்தா :- நல்ல பிரார்த்தனை, நல்ல பதில்.

பகவான் கௌதம புத்தர் :- “எனது பயிற்சியின் வழிமுறையும் உனது வணக்கத்திற்குரிய மாஸ்டரின் வழிமுறையைப் போல அதே மாதிரி தான் இருந்தது. அது மிகப் பழமையான ஒரு வழிமுறை, மக்கள் அதை மறந்துவிட்டார்கள்.”

சுவாமி விவேகானந்தா :- இப்போது மற்றொரு தீவிரமான நிலவரம் உண்டாகியிருக்கிறது. (காலை 10.44 மணி) பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை அழைக்கிறோம். (சற்று இடைவெளி) இங்கே பாருங்கள் ராம்சந்த்ரா நீங்கள் இப்போது எங்களுக்கு நடுவில் இருக்கிறீர்கள். நமது பிரபு ஒரு மிகப் பெரிய சக்தியை உங்களுக்கு மாற்றிக் கொடுக்க வந்து கொண்டிருக்கிறார். இச்சமயத்தில் கொஞ்சம் தயிரை உட்கொள்ளும்படி உங்களுக்கு அவர் உத்திரவு இட்டிருக்கிறார். இரவு தூங்கச் செல்வதற்கு முன்பு கால்சேர் (சேர் என்பது பழைய அளவீடு, சுமார் 200 மில்லி லிட்டர்) பால் மட்டுமே சாப்பிடலாம். அதைத் தவிர வேறு எதுவும் வேண்டாம். நாளையும் கூட, உங்களுக்கு வேறு ஏதாவது சாப்பிடலாம் என்று உத்தரவு வந்தாலன்றி, உணவு எதுவும் சாப்பிட முடியாது. ஆதே போல நமது பிரபு வந்து சேரும் வரையில் காலைச் சிற்றுண்டியும் சாப்பிடக் கூடாது. கழிப்பறைக்குப் போவதற்கு முன்பு சில துளிகள் தண்ணீர் அருந்த நான் அனுமதிக்க முடியும். ஃபருக்காபாதுக்கு தனியார் பேருந்தில் நீங்கள் பயணம் செய்துகொண்டிருந்த போது நான் உங்களுக்குச் சொன்னது போல, இப்போதும் நிலைமை அதே மாதிரி தான் இருக்கிறது. இன்றிரவு பெருமளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அதாவது உங்களுக்கு முழு ஓய்வு அளிக்கப்பட வேண்டும். உங்களுக்குக் கோபம் உண்டாக்கும்படியாக எதையும் பேசக்கூடாது. நமது பிரபுவின் வேலை மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறது. அதாவது சில குறிப்பிட்ட மனிதர்களின் உயிர் வாழ்க்கை இப்போது நிச்சயமாக இறுதிக்கு வர வேண்டியிருக்கிறது. உங்கள் மனிதர்களுக்குள் கடும் பகைமை உடைய அம்சங்கள் எதையும் காண நாங்கள் விரும்பவில்லை. (இரவு 9.15மணி) மற்றொரு அழிவு சக்தி வந்துள்ளது. 31, மார்ச் 1945 வரையில் தான் நேரம் இருக்கிறது. நீங்கள்

இவ்வுலகைவிட்டுச் சென்ற பிறகு, உங்களுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதப்போகிறவர்களுக்காக, நமது இந்த நோக்கத்தில் உதவி செய்த மனிதர்களின் பெயர்களை எழுதிக் கொள்வதற்கு, ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறேன்.

வணக்கத்திற்குரிய மாஸ்டர் (இரவு 10.39 மணி ஃபருக்காபாத்) :- சிறிது காலத்திற்கு முன்பு குறிப்பிடப்பட்ட அந்த சக்தியை நான் உனக்கு மாற்றிக் கொடுத்திருக்கிறேன். நான் வந்து சேர்ந்த பிறகு நாளை காலை சிற்றுண்டி சாப்பிடு. இப்போது நான் ஃபடேகர் போகிறேன்.

(ஃபருக்காபாத் அந்த மாவட்டத்தின் தலைநகர். அது ஃபடேகரில் இருந்து ஆறு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. வணக்கத்திற்குரிய ஸ்ரீபாபுஜி தனது துணைவர்களுடன் ஷாஜஹான்பூரிலிருந்து ஒரு தனியார் பேருந்தில் பயணம் செய்து, மறுநாள் நடைபெற இருக்கும் வருடாந்திர விழாவில் பங்கேற்பதற்காக ஃபடேகர் செல்வதற்கு முன்தினம் இரவு ஃபருக்காபாதில் தங்கினார்).

## <u>30-3-1945</u>

சுவாமி விவேகானந்தா :- “எந்த சவால் வந்தாலும் நீங்கள் குழப்பம் அடையக்கூடாது. தீவிரமான சக்தி உடைய சங்கல்பம் உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. யாராவது ஒரு சவாலுடன் முன் வந்தால், தாமதமின்றி உடனே அதை சந்தியுங்கள். அந்த இடத்திற்கு நீங்கள் வந்து சேரும் போது, சற்று நேரத்திற்குப் பிறகு அந்த தீவிர சங்கல்ப சக்தியை உண்மையாகவே நீங்கள் உணர்வீர்கள். நீங்கள் சாப்பிடவேண்டிய உணவு சம்பந்தமான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு விட்டன. ஆனால் அது இப்போது முதல் சில மணி நேரங்களில் அமல்படுத்தப்படும். நன்கு ஓய்வு எடுத்துக்கொண்ட பிறகு இந்த இடத்தை விட்டு (ஃபருக்காபாத்தை விட்டு) ஃபடேகருக்குப் புறப்படுங்கள்.”

வணக்கத்திற்குரிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் :- "உனக்காக எல்லோரும் காத்திருக்கிறார்கள். நீ அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தவுடன் எனது முழு சக்தியும் அங்கே இருக்கும்."

சுவாமி விவேகானந்தா :- "இங்கே பாருங்கள் ராம்சந்த்ரா, உங்கள் சங்கல்ப சக்தியின் அதிக பட்ச உச்சத்தில் இப்போது நீங்கள் இருக்கிறீர்கள். ஏதாவது சவால் வந்தால் உங்களிடத்தில் எங்களை நாங்கள் வெளிப்படுத்துவோம், நிம்மதியாக இருங்கள்."

வணக்கத்திற்குரிய ராதா அம்மையார் :- "என் சகோதரன் வெற்றியைக் காண்பதற்கு பெரும் உற்சாகம் எனக்குள் நிரம்புகிறது, என்ன இருந்தாலும் நான் ஒரு பலமில்லாத பெண்தானே."

இலங்கையின் முனிவர் :- "வருடாந்திர விழாவுக்கு அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் இங்கு வந்திருக்கிறார்கள்."

சுவாமி விவேகானந்தா :- "இப்போது பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், மொத்தமாக அழித்துவிடுவதற்கு எனக்கு உத்ததவு கொடுத்திருக்கிறார். சக்தி இயங்கிக் கொண்டிருக்கிறது. இச்சமயத்தில் சுற்றிலும் எங்கும் நீங்கள் உணர்கின்ற அதிர்வு, அழிவின் சக்திதான்."

வணக்கத்திற்குரிய மாஸ்டர் R2 - க்காகக் கூறியது :- நான் மனம் சோர்ந்து போனதை ராம்சந்த்ரா உணர்ந்தவுடன், உடனடியாக எனக்கு பிராணாஹூதி அளிப்பதற்கு அவர் பின்பற்றிய வழிமுறை எவ்வளவு சிறப்பாக இருந்தது. அவர் தன்னையே நானாக எடுத்துக்கொண்டு தனக்கே பிராணாஹூதி அளித்தார். என்ன ஒரு சிறந்த பண்பாடு! ஒரு அறிவுரையாக உனக்கு இதைச் சொல்கிறேன். அதாவது, போதுமான அளவுக்கு என்னுடன் ஒன்றுபட்ட தன்மையை நீ ஏற்படுத்திக் கொள்ளாதிருககும் காலம் வரை ராம்சந்த்ராவிடமிருந்து வெளிப்படுகிற இம்மாதிரி காரியங்களை நீ அதேபோலச் செய்யக்கூடாது. இந்த விஷயம் எதிர்மறையாகப் போய்விட்டால்

அல்லது இந்த எண்ணத்தில் ஒரு தவறு நேர்ந்துவிட்டால், அது மிகப் பெரிய தவறான செயலாகிவிடும் என்பதை நினைவில் வைத்துக்கொள். (இம்மாதிரி காரியங்கள் மிகக் கடுமையான தண்டனையைப் பெற்றுத் தரும்.)

வணக்கத்திற்குரிய மாஸ்டர் :- R2 - வுக்காகக் கூறியது :- ராம்சந்த்ரா துன்பப்படுவதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது, அப்படி ஏதாவது அவருக்கு நேர்ந்தால் அதை நீக்க நான் முயற்சி செய்வேன் என்னும் போது, அவரும் கூட நான் மனம் சோர்ந்த நிலையில் இருப்பதைத் தாங்க மாட்டார் என்பது பண்பாட்டின் (குணநலன்களின்) தூய்மை என்ற விதத்தில், அதை மாற்றுவது அவரது கடமையாகிறது என்பது எவ்வளவு சிறப்பான விஷயம். பொறுப்புணர்வு என்பதன் மிகச் சரியான அர்த்தம் அது தான்.

சுவாமி விவேகானந்தா :- “நமது பிரபு இப்போது நல்ல(மகிழ்ச்சியான) நிலையில் இருக்கிறார்.”

வணக்கத்திற்குரிய ராதா அம்மையார் :- “இச்சமயத்தில் நடைபெற்ற உரையாடலுக்குப் பதில் கூறும் விதமாக கடைசியில் நானும் ஆயுதங்களை எடுத்துக்கொள்வேன். நீ சொன்னால் (ராம்சந்த்ரா கூறினால்) இப்போதே ஆயுதம் ஏந்த நான் தயார். உன் பதிலுக்காக நான் காத்திருக்கிறேன்.”

“வணக்கத்திற்குரிய ராதா அம்மையார் அவர்களுக்கு நான் என்ன பதில் கூறவேண்டும்” என்று சுவாமி விவேகானந்தாவிடம் கேட்டேன்.

சுவாமி விவேகானந்தா :- “இச்சமயத்தில் அது அவசியம் இல்லை, என்று அவரிடம் சொல்லுங்கள்.”

<u>31-3-1945</u>

காலை 8.40 மணிக்கு வணக்கத்திற்குரிய மாஸ்டர் உத்திரவின்படி ஷாஜஹான்பூர் ஸ்ரீ ராம்சந்த்ரா, வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களின் ஆன்மீகப் பிரதிநிதி மற்றும் அவரது

பதவிக்கு உரியவர் ஆகியிருக்கிறார் என்ற பொது அறிவிப்பு ஆன்மீக சகோதரர்களின் கூட்டத்தில் R2 - ன் மூலமாக வெளியிடப்பட்டது.

சுவாமி விவேகானந்தா :- (மாலை 5.00 மணி) “இன்று நன்பகல் சமயத்தில R1 - யைச் சுற்றி சில மனிதர்கள் கூடிநின்று உங்களைப்பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.”

(இரவு 11.40 மணி) “மற்றொரு திட்டம் தயாராகி விட்டது! நாளை சத்சங்க பந்தலுக்கு (ஆன்மீக சகோதரர்கள் உட்காருவதற்கான கொட்டகைக்கு) போக உங்களுக்கு அனுமதி இல்லை, இதன் காரணத்தை நான் பிறகு சொல்கிறேன். உங்களுக்கு எதிராக நடவடிக்கைக்காக ஆலோசனைகள் நடக்கின்றன. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உங்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார். ஷாஜஹான்பூரில் உங்கள் குழந்தைகளில் ஒருவருக்கு ஜுரம் (காய்ச்சல்) இருக்கிறது. உங்கள் தாயார் நலமாக இருக்கிறார். அவரது கடமையிலிருந்து நமது பிரபுவை நான் விடுவித்திருக்கிறேன். இரவும் பகலும் ஒவ்வொரு நிமிடமும் அவர் உங்களுடனேயே இருக்கிறார்.’’

(அடுத்த நாள் காலையில் ஸ்ரீபாபுஜி, வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் மற்றும் அவருடைய மகன் ஸ்ரீ ஜக்மோகன் லால்ஜி அவர்களின் புனித சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்திய பிறகு ஷாஜஹான்பூருக்குத் திரும்பிச்சென்றார்.)

தொகுப்பாசிரியரின் குறிப்பு :- அந்த சமாதி ஃபடேகரில் இருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. உயர்மதிப்புடைய லாலாஜியின் மனைவி, மற்றும் பேரன் ஸ்ரீ அகலேஷ் குமார் ஆகியோரின் சாம்பல் அடங்கிய கலசங்களும் அங்கே புதைக்கப்பட்டுள்ளன. அந்தப் பெரிய சமாதிக்குப் பின்புறம் ஒரு சிறிய சமாதியில் லாலாஜியின் முதல் மைத்துனர் ஸ்ரீகிருஷ்ண ஸ்வரூப்ஜி (ஜெய்ப்பூர்) யின் சாம்பல் புதைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீபல்தேவ் ப்ரசா, வைத்யா (B6) என்பவரின் தகனக்கிரியை ஸ்ரீ க்ருஷ்ண ஸ்வரூப் ஜி (K1) - யின்

சமாதியின் அருகில் செய்யப்பட்டது. இப்போது அந்த இடத்திலும் ஒரு சமாதி கட்டப்பட்டுள்ளது. சிறிது காலத்திற்குப் பிறகு ஸ்ரீ பாபுஜி அந்த இடத்தைச் சென்று பார்த்து, “வணக்கத்திற்குரிய லாலாஜியின் புனித சமாதியை மக்கள் ஒரு இடுகாடாகவும், சுடுகாடாகவும் மாற்றிவிட்டார்களே என்று வருத்தத்துடன் குறிப்பிட்டார்.”

வணக்கத்திற்குரிய லாலாஜி சாகேப் அவர்களின் ஆன்மீகப் பிரதிநிதியாக / அடுத்த வாரிசாக ஸ்ரீ பாபுஜியைப் பற்றிய பொது அறிவிப்புடன், ஸ்ரீ பாபுஜியின் சுயசரிதம் இரண்டாம் பாகத்தின் இரண்டாவது தொகுப்பு நிறைவடைகிறது.

‘மூன்றாம் பகுதி - பங்களிப்பு’ என்ற தலைப்பின் கீழ் இதன் மூன்றாம் பாகம் இதன்பிறகு தொடரும். 1.4.1945 தேதியிட்ட முதல் குறிப்புடன் அது தொடங்கும்.

— தொகுப்பாசிரியர்.

# பின் இணைப்பு



*Red Mosque (front view)*



*Backside of the red mosque which was only a big raised mound/platform in 1944 and is now covered under temples, park, etc. The Krishna Janmabhumi temple and the adjoining park built around 1962, roughly pertain to the locations mentioned in Map No. 2 behind the red mosque.*



*Backside of the red mosque which was only a big raised mound/platform in 1944 and is now covered under temples, park, etc. The Krishna Janmabhumi temple and the adjoining park built around 1962, roughly pertain to the locations mentioned in Map No. 2 behind the red mosque.*



*The mound of earth in 'Maha Van' where Lord Krishna with playmates and cows used to play and take rest. View from the river side.*



*The mound of earth in 'Maha Van' where Lord Krishna with playmates and cows used to play and take rest. View from the road side.*



*Beginning of 'Govardhan' Parvat (hillock) where Rev. Babuji sat and transmitted to it.*



*The well at 'Nand-gaon', being the place, where Lord Krishna and Rev. Radhaji met for the first time. The Picture is taken after rainy season from the side of the road from 'Barsana'.*



*While the Picture is taken before rainy season from the side of bathing place on the other side.*



*Railway bridge over river Yamuna. Picture shows the whole bridge from the Southern side. Pier No. 3 is marked X.*



*Picture shows pier No. 3 and the location discovered by Rev. Babuji being the cremation place of Lord Krishna.*

# பின் இணைப்பு

## வரைபடம் எண்.1



வரைபடம் எண்.2


West
Place where
umbilical cord
was buried
Big Rostrum
Lower portion
of Rostrum
South
Lower portion
of Rostrum
North
High Rostrum
Dome
Red Dome of Mosque
Steps leading
up to the mosque
Gateway
to the Mosque
Railway Line for Brindavan
East

வரைபடம் எண்.3


North
Kubja-Well
(Discovered)
Level
Crossing
Unpaved
Road
(68 steps)
Railway line to Brindavan
Paved Road
(186 Steps)
West
East
Gate
Entry
Mounds
Gateway to
prison house of Kamsa
(160 feet)
Old Jamuna
Mounds
Dau ji lane
Doorway
Kali
Dah
South

வரைபடம் எண்.4


North
Radha Kund
Sat here to illuminate bushes
Mile Stone
West
East
Goverdhan hillock
Paved Road
Distance one mile
Police Station
South

வரைபடம் எண்.5



Mahavan
Three culverts
North
Place for Special Seat
of Lord Krishna
Mound
West
River Jamuna
About 1.5 Furlongs
Paved Road
Paved Road to Dau Ji
East
Guest-house
For Pilgrims
(Dharamshala
of Bombay)
South

வரைபடம் எண்.6


Nandagaon
North
Paved Road to Barsana
East
West
Paved Road from Kosi to Kama Vana
Well
Small forest
Place of First Meeting between Radha and Krishna
Pond
Tamarind Tree
Bathing place
(for oblation to dead persons)
South

வரைபடம் எண்.7


North
Railway Bridge
East
West
Piers
1
2
3
4
5
P
Sand of River Jamuna
P-place of the cremation of Lord Krishna
South
North side of the Bridge
Current of River Jamuna (at present)

Front Rapper

# ஸ்ரீராம்சந்த்ரஜீயின் சுயசரிதம்



பாகம் - 2, தொகுப்பு-2

Front Page

# ஸ்ரீராம்சந்த்ரஜீயின் சுயசரிதம்

## பாகம் – 2, தொகுப்பு – 2

## பொது அறிவிப்பு

(அக்டோபர் 1944 முதல் மார்ச் 1945 வரை)

பாகம் – 2, தொகுப்பு – 1

**தகுதியாக்கம் / உருவாக்கம்**

(மே 1944 முதல் செப்டம்பர் 1944 வரை)

பாகம் – 2, தொகுப்பு – 2

**பொது அறிவிப்பு**

(அக்டேபர் 1944 முதல் மார்ச் 1945 வரை)

பாகம் – 2, தொகுப்பு – 3

**பங்களிப்பு**

(ஏப்ரல் 1945 முதல் ஜூன் 1955)